ஸ்ரீ

கடவுள் துணை.

இயற்றமிழாசிரியர்

திருத்தணிகை - விசாகப்பெருமாளையரவர்கள்

இயற்றிய

நன்னூற்காண்டிகையுரை

புதுக்கியபதிப்பு.

இதனுடன் வேப்பேரி எஸ். பி. ஜி. காலேஜிலும்

சென்னை இராயபுரம்

பிரீ சர்ச்மிஷன் போர்டிங் ஹைஸ்கூலிலும்

தமிழ்ப்பண்டிதராயிருந்த

ப. வாசுதேவமுதலியாரால் செய்யப்பட்ட

பரீட்சை வினாவிடையுஞ் சேர்த்து

அச்சிட்டபடி

22088

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1900-ம் ஞு செப்டம்பர்மீ.

விலை அணா - 12.

ஸ்ரீ

கடவுள் துணை.

நன்னூற்காண்டிகையுரை.

சிறப்புப்பாயிரம்.

(நூலாசிரியர் பெயர் முதலியவை.)

மலர்தலை யுலகின் மல்கிரு ளகல
இலகொளி பரப்பி யாவையும் விளக்கும்
பரிதியி னொருதா னாகி முதலீ
றொப்பள வாசை முனிவிகந் துயர்ந்த
அற்புத மூர்த்திதன் னலர்தரு தன்மையின்
மனவிரு ளிரிய மாண்பொருண் முழுவதும்
முனிவற வருளிய மூவறு மொழியுளுங்
குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனுநான் கெல்லையி னிருந்தமிழ்க் கடலுள்
அரும்பொரு ளைந்தையும் யாவரு முணரத்
தொகைவகை விரியிற் றருகெனத் துன்னார்
இகலற நூறி யிருநில முழுவதும்
தனதெனக் கோலித் தன்மத வாரணம்
திசைதொறு நிறுவிய திறலுறு தொல்சீர்க்
கருங்கழல் வெண்குடைக் கார்நிகர் வண்கைத்
திருந்திய செங்கோற் சீய கங்கன்
அருங்கலை விநோத னமரா பரணன்
மொழிந்தன னாக முன்னோர் நூலின்
வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்
பொன்மதிற் சனகைச் சன்மதி முனியருள்
பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி
என்னு நாமத் திருந்தவத் தோனே.

Dr. U.V.S. 220

(இதன்பொருள்.) மலர் தலை உலகில் - பரந்த இடத்தையுடைய உலகத்திலே, மல்கு இருள் அகல - நிறைந்த இருள்கெட, இலகு ஒளி பரப்பி - விளங்கும் கிரணத்தை விரித்து, யாவையும் விளக்கும் - (கண்களுக்குத் தெரியத்தக்க உருவங்கள்) எல்லாவற்றையுங் காட்டு

கின்ற, பரிதியின்-ஸூரியனைப்போல, ஒரு தான் ஆகி - (உலகங்களுக்
கெல்லாம்) தானொரு முதலாகி, முதல் ஈறு ஒப்பு அளவு ஆசைமுனிவு
இகந்து உயர்ந்த - பிறப்பும் இறப்பும் உபமானமும் அளவும்விருப்பும்
வெறுப்பும் (ஆகிய இவைகளிற் சுபாவமாக) நீங்கி நிற்கையினாலே
தலைவனாகிய, அற்புத மூர்த்தி - ஞானமே திருமேனியாக வுடை
வன், தன் அலர் தரு தன்மையின் - தனதுமலர்ந்த குணமாகிய அரு
ளினாலே, மனம் இருள் இரிய - (உயிர்களின்) மனத்திருளாகிய அஞ்
ஞானங் கெட, மாண் பொருள் முழுவதும்-சிறந்த (அறம், பொருள்,
இன்பம், வீடு என்கிற) நான்கு பொருளையும், முனிவு அற அருளிய -
ஆசையுடன் அருளிச்செய்த, மூவறு மொழியுளும் - பதினெட்டு நில
த்து மொழிகளுள்ளும், குணகடல் குமரி குடகம் வேஙகடம் எனும்
நான்கு எல்லையின் - கிழக்கே கடலும் தெற்கே கன்னியாகுமரியா
றும் மேற்கே குடகநாடும் வடக்கே திருவேங்கடமும் ஆகிய நான்
கெல்லையினையுடைய நிலத்து மொழியாகிய, இரு தமிழ் கடலுள் -
(இயல் இசை நாடகம் எனப் பெயர் பெற்ற) பெரிய தமிழென்னும்
கடலுள், அருபொருள் ஐந்தையும் - (அவ்வறம் முதலாகிய நான்கு
பொருளையும் அறிதற்குக் காரணமாகி) அருமையாகிய (இயற்றமி
ழென்னு மிலக்கணத்தின் கூறான எழுத்து சொல் பொருள் யாப்பு
அணி என்னும்) ஐந்து பொருளையும், யாவரும் உணர - இலக்கியப்
பழக்கத்தில் வல்லவர் மாத்திர மல்லாமல்) எளியவருமறிய, தொ
கைவகை விரியின் தருக என - தொகுத்தும் வகுத்தும் விரித்தும்
செய்யப்படும் யாப்பினாலே பாடித் தருகவென, தன்னோர் இகல்
அற நூறி - பகைவரது பகைகெட அவரை யழித்து, இரு நிலம்
முழுவதும் தனது என கோலி - பெரிய பூமி முழுவதையுந் தன்னு
டையதாகப் பற்றிக்கொண்டு, தன் மதம் வாரணம் திசைதொறும்
நிறுவிய - தன் மத யானைகளை எட்டுத் திக்கிலும் (திக்கியானைகளைப்
போல) நிறுத்திய, திறல் உறு தொல் சீர் - (தன்னைப்பற்றி மாத்திர
மல்லாமல் தன்னுடைய தகப்பன் பாட்டன் முதலானவரைப்
பற்றிவரும்) வெற்றிமிகுந்த கீர்த்தியையும், கருங்கழல் - பெருமை
பொருந்திய வீரக்கழலையும், வெள் குடை - வெள்ளைக்குடையையும்,
கார் நிகர் வண் கை-மேகம்போலப் பிரதியுபகாரத்தை நினையாது
கொடுக்குங் கையினையும், திருந்திய செங்கோல் - கோணாத செங்
கோலையும் (உடைய), சீய கங்கன் - சிங்கம்போன்ற கங்கன், அருங்
கலை விநோதன் - அரிய நூல்களை (ஆராய்தலே பொழுது போக்கும்
விளையாட்டாக வுடையவன், அமர் ஆபரணன் - (தன்மேலே பெரிய
காயம்படப்) போர்செய்தலையே ஆபரணமாக வுடையவன், மொழிக்

தனன் ஆக - சொன்னானாக, முன்னோர் நூலின் வழியே - முன்னோரிலக்கண நூலின் வழியே, நன்னூல் பெயரின் வகுத்தனன் - நன்னூலென்னும் பெயரினாற் செய்தனன், பொன் மதில் சனகை - பொன்மதில் சூழ்ந்த சனகாபுரத்துளிருக்கும், சன்மதி முனி அருள் - சன்மதி முனிவன் பெற்ற, பன் அரு சிறப்பின் பவணந்தி என்னும் நாமத்து - சொல்லுதற் கரிய ஞான வொழுக்கச் சிறப்பினையும் பவணந்தி யென்னும் பெயரினையு முடைய, இருதவத்தோன் - பெரிய தவத்தினையுடையோன், எ-று.

பவணந்தி யெனவே நூல்செய்தோன் பெயரும், முன்னோர் நூலின் வழியெனவே நூல்வந்த வழியும், நான்கெல்லை யெனவே நூல்வழங்கு நிலமும், நன்னூலெனவே நூலினது பெயரும், அரும் பொருளைந்தெனவே நூலிற் சொல்லப்பட்ட பொருளும், யாவரு முணரவெனவே நிகண்டு கற்று இலக்கிய ஆராய்ச்சி செய்த பின்பு இந்நூல் கேட்கத் தகுமென்னும் இயைபும், அவை யாராய்ந்தோர் இந்நூல் கேட்டற் குரியாரென்னும் அதிகாரிகளும், அவர் அப்பொருளைந்தையும் அறிந்து சொற்களின் முட்டுப்பாட்டை நீக்குதலாலே மொழித்திறத்தின் முட்டறுத்தலென்னும் பிரயோசனமும், சீயகங்கன் மொழிந்தனனாக நன்னூற் பெயரின் வகுத்தன னெனவே அவன் காலத்திலே பாடப்பட்டு அவனது சபையிலே அரங்கேற்றியதெனச் செய்த காலமும் அரங்கேற்றிய இடமும் சீயகங்கன் சொன்னதினாலும் யாவரிடத்தும் உண்டாகிய இரக்கத்தினாலும் வகுத்தமையால் காரணமும் பெறப்பட்டன.

ஆக்கியோன்பெயர், வழி, எல்லை, நூற்பெயர், யாப்பு, நுதலிய பொருள், கேட்போர், பயன், காலம், களன், காரணம் என்னும் பதினொன்றையு முணர்த்தலால் இது இந்நூற்குச் சிறப்புப்பாயிர மென்றுணர்க.

சிறப்புப்பாயிர முற்றிற்று.

பொதுப்பாயிரத்திலக்கணம்.

[பாயிரத்தின்பெயர்கள்.]

1. முகவுரை பதிக மணிந்துரை நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்.

(இ-ள்) முகவுரை-(பாயிரத்தி னிலக்கணங்களை முன்னே யறியவேண்டி நூலிற்கு முன் சொல்லப்படுதலினாலே) முகவுரை யென்றும், பதிகம் - (ஐந்துபொதுவும் பதினொரு சிறப்பும் ஆகிய பலவகைப் பொருள்களையுந் தொகுத்துச் சொல்லுதலினாலே) பதிகமென்றும், அணிந்துரை - (நூலினதுபெருமை முதலானவைகள் விளங்க அலங்கரித்துச் சொல்லுகையினாலே) அணிந்துரை யென்றும், நூன்முகம் - (முகவுரை யென்றதுபோல) நூன்முகமென்றும், புறவுரை - (நூல் சொல்லிய பொருளல்லாதவைகளைச் சொல்லுதலினாலே) புறவுரை யென்றும், தந்துரை - (நூலிலே சொல்லப்பட்ட பொருளல்லாதவைகளை அதற்குத் தந்து சொல்லுகையினாலே) தந்துரை யென்றும், புனைந்துரை - (அணிந்துரை யென்றதுபோலப்) புனைந்துரை யென்றும், பாயிரம் - பாயிரத்திற்குப் பெயர்களாம். எ-று. (க)

பாயிரம்-வரலாறு.

(பாயிரத்தின்வகை.)

2. பாயிரம் பொதுச்சிறப் பெனவிரு பாற்றே.

(இ-ள்.) பாயிரம் - பாயிரமானது, பொது சிறப்பு என-பொதுப்பாயிரமும் சிறப்புப்பாயிரமும் என, இருபாற்று - இரண்டு பிரிவை யுடைத்தாகும், எ - று. ஏ - ஈற்றசை. (உ)

(பொதுப்பாயிரத்தின் வரலாறு.)

3. நூலே நுவல்வோ னுவலுந் திறனே
கொள்வோன் கோடற் கூற்றா மைந்தும்
எல்லா நூற்கு மிவைபொதுப் பாயிரம்.

(இ - ள்.) நூல் (திறன்) - நூலினது வரலாறும், நுவல்வோன் (திறன்) - ஆசிரியனது வரலாறும், நுவலும் திறன் - பாடஞ் சொல்லுதலினது வரலாறும், கொள்வோன் (திறன்) - மாணாக்கனது வரலாறும், கோடல் கூற்று-பாடங்கேட்கையினது வரலாறும், எல்லா நூற்கும் ஆம் - எல்லா நூலுக்கும் ஆகும், (ஆதலால்), இவை - இவ்வைந்து வரலாற்றையும் (விளங்கக் காட்டுவது), பொதுப்பாயிரம் - பொதுப்பாயிரமாகும், எ - று. (ங)

[நூலின்வரலாறு.]

4. நூலி னியல்பே நுவலி னோரிரு
பாயிரந் தோற்றி மும்மையி னொன்றாய்
நாற்பொருட் பயத்தோ டெழுமதந் தழுவி
ஐயிரு குற்றமு மகற்றியம் மாட்சியோ
டெண்ணான் குத்தியி னோத்துப் படலம்
என்னு முறுப்பினிற் சூத்திரங் காண்டிகை
விருத்தி யாகும் விகற்பநடை பெறுமே.

(இ - ள்.) நூலின் இயல்பு - நூலினது வரலாற்றை, நுவலின் - சொன்னால், ஓர் இரு பாயிரம் தோற்றி - (பொதுவுஞ் சிறப்புமாகிய) இருவகைப்பாயிரத்தையு முன்னுடைத்தாகி, மும்மையின் ஒன்றாய் - (முதனூல்முதலாகிய) மூன்றனுள் ஒன்றாகி, நாற் பொருள் பயத்தோடு - (அறமுதலாகிய) நான்கு பொருளாகிய பிரயோசனத்துட னே, எழு மதம் தழுவி - (உடன்படல் முதலாகிய) எழுவகை மதத் தையும் தழுவி, ஐயிரு குற்றமும்அகற்றி-(குன்றக்கூறல் முதலாகிய) பத்துக் குற்றங்களையும் ஒழித்து, அ மாட்சியோடு - (சுருங்கச்சொ ல்லல்) முதலாகிய பத்தழகுடனே, எண்ணான்கு உத்தியின் - (நுதலிப் புகுதல் முதலாகிய) முப்பத்திரண்டு உத்தியைக்கொண்டு, ஓத்துபட லம் என்னும் உறுப்பினில் - இயல் அதிகாரம் என்னும் அவயவங்க ளுடனே, சூத்திரம் - சூத்திரமும், காண்டிகை - காண்டிகையுரையும், விருத்தி-விருத்தியுரையும், ஆகும் - ஆகின்ற, விகற்ப நடை - (பதின் மூன்று) வேறுபாட்டு நடையையும், பெறும்-பெற்றுவரும், எ-று.

[நூலின்வகை]

5. முதல்வழி சார்பென நூன்மூன் றாகும்.

(இ - ள்.) முதல் வழி சார்பு என - முதனூல் வழிநூல் சார்பு நூல் என்று, நூல் மூன்றாகும் - நூலானது மூன்று பிரிவை யுடைத் தாகும், எ - று. (ரு)

[முதனூல்.]

6. அவற்றுள்—வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்.

(இ ள்.) அவற்றுள் - அம்மூவகைநூலுள், வினையின் நீங்கி - வினையினின்று நீங்கி, விளங்கிய அறிவின்-பிரகாசிக்கின்ற அறிவினை யுடைய, முனைவன் - கடவுள், கண்டது - உயிர்களுக்கு ஆதிகாலத் திலே செய்தது, முதல் நூல் ஆகும் - முதனூலாகும், எ - று. (சு)

7. முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
அழியா மரபினது வழிநூ லாகும்.

(இ - ள்.) முன்னோர் நூலின் முடிபு - கடவுளும் அவனருள் வழிப்பட்டோருஞ் செய்த நூல்களினுடைய (பொருள்) முடிபுகள், ஒருங்கு ஒத்து - முழுவதும் ஒத்து, பின்னோன் - வழிநூல்செய்வோன், வேண்டும் - (முதனூலிருக்கவுந் தான் வழிநூல் வேறே செய்வதற்குக் காரணமாக) வேண்டுகிற, விகற்பம்கூறி - வேறுபாடுகளையும் உடன் சொல்லி, அழியா - அழியாமல் (உலகத்திலே) நிலைபெற்று விளங்குகின்ற, மரபினது - குணத்தை யுடையது, வழிநூல் ஆகும் - வழிநூலாகும், எ - று. (எ)

முதனூலை முழுவதும் ஒத்து, சிறிது வேறுபட்டிருப்பது வழி நூல் என்பது கருத்து.

[சார்புநூல்.]

8. இருவர்நூற் கொருசிறை தொடங்கித்
திரிபுவே றுடையது புடைநூ லாகும்.

(இ-ள்.) இருவர் நூற்கும் - (முதனூல் வழினூல் என்னும்) இருவகை நூல்களுக்கும், ஒரு சிறை தொடங்கி - ஒரு பக்ஷம் (பொருண்முடிபு) ஒத்து, வேறு-மற்றவைகளெல்லாம், திரிபு உடையது - ஒவ்வாமையை உடைத்தாகியது, புடைநூல் ஆகும் சார்புநூலாகும்.

முதனூல் வழிநூல்களுக்குச் சிறுபான்மை யொத்துப் பெரும்பாலும் வேறுபட்டிருப்பது சார்புநூல் என்பது கருத்து. (அ)

[வழிநூலுக்கும் சார்புநூலுக்கும் சிறப்புவிதி.]

9. முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும்
பொன்னேபோற் போற்றுவ மென்பதற்கும்—முன்னோரின்
வேறுநூல் செய்துமெனு மேற்கோளி லென்பதற்கும்
கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்.

(இ-ள்) முன்னோர் மொழி - முதனூலோர் சொன்ன, பொருளே அன்றி- பொருளைமாத்திர மல்லாமல், அவர் மொழியும் - அவரது சொல்லையும், பொன்னேபோல்- பொன்னைப் போலவே- போற்றுவம் என்பதற்கும்- காப்பாற்றிக்கொள்வோ மென்பதற்கு அடையாளமாகவும், முன்னோரின்- முன்னோர் நூலையே சொல்லாமல் அந்நூலினின்றும், வேறுநூல் செய்தும் எனும்- வழிநூல் சார்பு நூல்களைச் செய்தோமாயினும், மேற்கோள்- ஆசிரிய வசனமானது,

இல் என்பதற்கும் - (இந்த நூலினிடத்து) இல்லையென்று சொல்லுங் குற்றம் ஒழிதற்காகவும், பழமை சூத்திரத்தின் கோள்-முன்னோர்சொல்லிய (பொருளையல்லாமலும் அவர்) சூத்திரத்தையும், கூறு-(ஒரோவிடத்திலே) சொல்லு, எ - று.

எனினுமென்பது எனுமென விகாரமாயிற்று. மேற்கோள், பழஞ்சூத்திரக்கோள், ஆசிரியவசனம் என்பவை ஒருபொருட் சொற்கள்.

[நூற்பயன்.]

10. அறம்பொரு ளின்பம்வீ டடைதனூற் பயனே.

(இ - ள்.) அறம் - தருமமும், பொருள்-பொருளும், இன்பம்-காமமும், வீடு அடைதல் - மோக்ஷ மடைதலும், நூல் - நூலிற் சொல்லப்படும், பயன் - பிரயோசனமாம், எ - று. (௧0)

[எழுவகைமதம்.]

11. எழுவகை மதமே யுடன்படன் மறுத்தல்
பிறர்தம் மதமேற் கொண்டு களைவே
தாஅ னாட்டித் தனாது நிறுப்பே
இருவர் மாறுகோ ளொருதலை துணிவே
பிறர்நூற் குற்றங் காட்ட லேனைப்
பிறிதொடு படாஅன் றன்மதங் கொளலே.

(இ - ள்.) எழுவகைமதம்-எழுவகைமதமாவன, உடன்படல்-(பிறர்மதத்திற்குத்தான்) உடன்படுதலும், மறுத்தல்-(பிறர்மதத்தை) மறுத்தலும், பிறர்தம் மதம் மேற்கொண்டு களைவு - பிறர்மதத்திற்கு உடன்பட்டுப் பின்புமறுத்தலும், தானாட்டி தனாது நிறுப்பு-தான் ஒருபொருளை எடுத்துநாட்டி அதனை (வருமிடந்தோறும்) நிறுத்துதலும், இருவர் மாறுகோள் ஒருதலை துணிவு-இருவர் ஒன்றற்கொன்று விரோதமாகக்கொண்ட(இரண்டனுள்) ஒன்றனிடத்துத் துணிதலும், பிறர்நூல் குற்றம் காட்டல் - பிறர் நூல்களிலிருக்கின்ற குற்றத்தைக் காட்டுதலும், பிறிதொடு படான் தன்மதம் கொளல் - பிறர்மதத்திற்கு உடன்படானாகித் தன் மதத்தையே கொள்ளுதலுமாம், எ - று.

[பத்துக்குற்றம்.]

12. குன்றக் கூறன் மிகைபடக் கூறல்
கூறியது கூறன் மாறுகொளக் கூறல்
வழூஉச்சொற் புணர்த்தன் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தன் மற்றொன்று விரித்தல்
சென்றுதேய்ந் திறுத லின்றுபய னின்மை
என்றிவை யீரைங் குற்ற நூற்கே.

(இ-ள்.) குன்றக் கூறல்-(குறித்த பொருளைக் காட்டுதற்குரிய சொற்களில்) குறைவுபடச் சொல்லுதலும், மிகைபடக் கூறல்-அதிகப்படச் சொல்லுதலும், கூறியது கூறல்-(முன்சொன்ன ஒரு பொருளையே) பின்னுஞ் சொல்லுதலும், மாறுகொளக் கூறல்-(முன்சொன்ன பொருளோடு பின் சொல்லும் பொருள்) விரோதப்படச் சொல்லுதலும், வழூஉச்சொல் புணர்த்தல் - குற்றமான சொற்களைச் சேர்த்தலும், மயங்கவைத்தல் - (ஒன்றை மற்றொன்றாக) மயங்கவைத்தலும், வெற்றெனத் தொடுத்தல் - பொருள் வெளிப்படையாகத் தோன்றச் சொற்களைச் சேர்த்தலும், மற்றொன்று விரித்தல்-(சொல்லத் தொடங்கியதை விட்டு) மற்றொரு பொருளை இடையிலே விரித்தலும், சென்று தேய்ந்து இறுதல் - (சொல்லின் முடிபும் பொருளின் முடிபும் முன் சிறப்பாக) நடந்து அந்நடை பின்னே தேய்ந்து முடிதலும், நின்று பயன் இன்மை - சொற்களிருந்தும் ஒரு பிரயோசனமு மில்லாமற்போதலும், என்ற இவை - என்று சொல்லப்பட்ட இவை, நூற்கு - நூலுக்கு, ஈரைங் குற்றம் - பத்துக்குற்றங்களாகும், எ - று. (௧௨)

[பத்துவகை அழகு.]

13. சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை யுடைமை யாழமுடைத் தாதல்
முறையின் வைப்பே யுலகமலை யாமை
விழுமியது பயத்தல் விளங்குதா ரணத்த
தாகுத னூலிற் கழகெனும் பத்தே.

(இ - ள்.) சுருங்கச் சொல்லல் - (சொற்கள் வீணாக விரியாமல்-சுருங்கி நிற்கச் சொல்லுதலும், விளங்க வைத்தல் - சந்தேகத்திற்கு இடமாகாமல் பொருள் விளங்க வைத்தலும், நவின்றோர்க்கு இனிமை - வாசித்தவருக்கு இன்பத்தைத் தருதலும், நன்மொழிபுணர்த்தல்-நல்ல சொற்களைச் சேர்த்தலும், ஓசை உடைமை-சந்தவின்பமுடைத்தாதலும், ஆழம் உடைத்தாதல் - ஆழ்ந்த கருத்தை யுடைத்தாதலும், முறையின் வைப்பு - (அதிகார முதலானவைகளைக் காரணகாரிய) முறையாக வைத்தலும், உலகம் மலையாமை - உயர்ந்தோர் வழக்கத்தோடு மாறுகொள்ளாமையும், விழுமியது பயத்தல்-சிறப்பாகிய பொருளைத் தருதலும், விளங்கு உதாரணத்தது ஆகுதல் - விளங்கிய உதாரணத்தை யுடையதாதலும், நூலிற்கு - நூலினுக்கு, அழகு எனும் - அழகென்று சொல்லப்படும், பத்து-பத்தாம்.

[முப்பத்திரண்டு உத்தி.]

14. நுதலிப் புகுத லோத்துமுறை வைப்பே
தொகுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல்
முடித்துக் காட்டன் முடிவிடங் கூறல்
தானெடுத்து மொழிதல் பிறன்கோட் கூறல்
சொற்பொருள் விரித்த றொடர்ச்சொற் புணர்த்தல்
இரட்டுற மொழித லேதுவின் முடித்தல்
ஒப்பின் முடித்தன் மாட்டெறிந் தொழுகல்
இறந்தது விலக்க லெதிரது போற்றல்
முன்மொழிந்து கோடல் பின்னது நிறுத்தல்
விகற்பத்தின் முடித்தன் முடிந்தது முடித்தல்
உரைத்து மென்ற லுரைத்தா மென்றல்
ஒருதலை துணித லெடுத்துக் காட்டல்
எடுத்த மொழியி னெய்த வைத்தல்
இன்ன தல்ல திதுவென மொழிதல்
எஞ்சிய சொல்லி னெய்தக் கூறல்
பிறநூன் முடிந்தது தானுடன் படுதல்
தன்குறி வழக்க மிகவெடுத் துரைத்தல்
சொல்லின் முடிவி னப்பொருண் முடித்தல்
ஒன்றின் முடித்த றன்னின முடித்தல்
உய்த்துணர வைப்பென வுத்தியெண் ணான்கே.

(இ - ள்.) நுதலிப் புகுதல் - (இதனைச் சொல்லுவேனென்று) கருதிப்புகுதலும், ஓத்து முறை வைப்பு - இயல்களைக் காரண காரிய முறையால் வைத்தலும், தொகுத்துச் சுட்டல் பலவுந் தொகுத்துக்காட்டலும், வகுத்துக்காட்டல் - (அப்படித் தொகுத்துக்காட்டியவைகளை) வேறுவேறு விரித்துக்காட்டுதலும், முடித்துக்காட்டல் - தான் மேலோர் முடித்தவாறு முடித்துக்காட்டுதலும், முடிவு இடங் கூறல்- தான்சொல்லும் இலக்கணத்திற்கு) இலக்கியந் தோன்றுமிடத்தைச் சொல்லுதலும், தான் எடுத்துமொழிதல்-தான் (பழையசூத்திரத்தை) எடுத்துச் சொல்லுதலும், பிறன்கோள் கூறல்-(தன்னூலிற்) பிறனதுகோட்பாட்டைச் சொல்லுதலும், சொற்பொருள் விரித்தல்-சொல்லினதுபொருள்(விளங்குதற்குஉருபுமுதலானவைகளை)விரித்து

ச்சொல்லுதலும், தொடர் சொல் புணர்த்தல்-ஒன்றற்கொன்று சம்பந்தமுடைய சொற்களைச் சேர்த்துவைத்தலும், இரட்டுறமொழிதல்-(ஒருவாக்கியத்தில்) இரண்டுபொருள்படச் சொல்லுதலும், ஏதுவின் முடித்தல் - முன் காரணம் விளங்காததாகச் சொல்லப்பட்ட ஒன்றிற்குப்) பின் காரணம் விளங்கக்காட்டி முடிவுசெய்தலும், ஒப்பின் முடித்தல் -(ஒன்றற்குச் சொல்லப்பட்ட இலக்கணம் வேறொன்றற்கும்) ஒத்து வருமாயின் அதற்கும் அதுவே இலக்கணமாக முடிவு செய்தலும், மாட்டெறிந்து ஒழுகல் - (ஒன்றற்குச் சொல்லப்பட்ட இலக்கணத்தை அதனைப் பெறுதற்குரிய மற்றொன்றற்கு) மாட்டிச் சொல்லி நடத்தலும், இறந்தது விலக்கல் - (முற்காலத்து வழங்கிய இலக்கணங்களுக்குள்ளே பிற்காலத்து) வழங்காமற்போனதை நீக்குதலும், எதிரது போற்றல்-(முற்காலத்துவழங்காமற் பிற்காலத்து) வழங்கிவருகின்ற இலக்கணத்தைத் தழுவிக் கொள்ளுதலும், முன்மொழிந்து கோடல் - முன்னே ஒன்றனைச் சொல்லி (ப்பின்பு அதனை வேண்டு மிடந்தோறும்) எடுத்துக்கொள்ளுதலும், பின்னது நிறுத்தல்-(ஒருபொருளுக்குக் கருவியாக முன் வைத்தற் குரியது அங்கே வைத்தற்கு இடம் பெறாதாயின் அப்பொருளின்) பின்னே அதனை வைத்தலும், விகற்பத்தின் முடித்தல் - விளங்குதற்பொருட்டுப் பல வேறுபாடுகளின் சிறப்பு வாய்பாட்டான் முடித்தலும், முடிந்தது முடித்தல் - சிறப்பு வாய்பாட்டால் முடிந்ததைப் பொதுவாய்பாட்டால் முடித்தலும், உரைத்தும் என்றல் - (பின்னே சொல்லப்படுவதை முன்னே ஒரு நிமித்தத்தினாலே சொல்ல வேண்டின் இதனைப்) பின்னே சொல்லுவோ மென்பது தோன்ற அங்கேசுருக்கிச் சொல்லுதலும், உரைத்தாம் என்றல் - முன்னே ஒரு நிமித்தத்தினாலே சொல்லப்பட்டதைப் பின்னே சொல்ல வேண்டியவிடத்து இதனை) முன்னேதானே சொல்லினோமென்பது தோன்றச் சொல்லாது விடுதலும், ஒருதலை துணிதல் - (ஒன்றற் கொன்று மாறுபாடாகக் கொண்ட இரண்டு பக்ஷத்துள்) ஒருபக்ஷந் துணிதலும், எடுத்துக் காட்டல் - (தான்சொல்லும் இலக்கணத்திற்குத் தானே இலக்கியத்தை) எடுத்துக்காட்டுதலும், எடுத்தமொழியின் எய்தவைத்தல் - (தான்சொல்லும் இலக்கணத்தைத்) தானெடுத்துக்காட்டிய இலக்கியத்தில் இருக்கவைத்தலும், இன்னது அல்லது இது எனமொழிதல் - (சந்தேகிக்க நின்றவிடத்து) இப்படிப்பட்டதல்லாதது இதுவெனச் சொல்லுதலும், எஞ்சிய சொல்லின் எய்தக்கூறல்-(சொல்லாது விடப்பட்டவற்றிற்குஞ் சொல்லப்பட்டதனால் இலக்கணம் பொருந்தச் சொல்லுதலும், பிறநூல் முடிந்தது தான் உடன்

பகுதல-பிறநூலிலே முடிந்தமுடிபைத் தான் அங்கீகரித்தலும், தன் குறிவழக்கம் மிக எடுத்து உரைத்தல் - தான் (நூதனமாகக்) குறித்துவழங்கும் வழக்கத்தையே பலவிடங்களிலும் எடுத்துச் சொல்லுதலும், சொல்லின்முடிவின் அப்பொருள்முடித்தல் - சொல்லின்முடிவிலே அதன் பொருளையு முடித்தலும், ஒன்றினமுடித்தல் - ஒன்றைச் சொல்லுமிடத்தில் அதற்கு இனமாகிய மற்றொன்றையும் விரியாதிருக்கவேண்டி அதனுடன் முடித்தலும், தன்னினமுடித்தல் என்பதற்குப் பொருள் அதுவே, உய்த்து உணரவைப்பு - (சில சூத்திரவிதிகளைக்கொண்டு) ஆராய்ந்தறிய ஒரு பொருளை வைத்தலும், என உத்தி எண்ணான்கு - எனத் தந்திரவுத்திகள் முப்பத்திரண்டாம், எ - று.

ஒன்றின முடித்தல், தன்னின முடித்தல் இரண்டும் ஒருத்தி. முன்சொன்ன மதங்களுக்கும் இவ்வுத்திகளுக்கும் உதாரணம் இந்நூலுள்ளே பின்வருமிடந்தோறும் காட்டப்படும். (கச)

[உத்தி.]

15. நூற்பொருள் வழக்கொடு வாய்ப்பக் காட்டி
ஏற்புழி யறிந்திதற் கிவ்வகை யாமெனத்
தகும்வகை செலுத்துத றந்திர வுத்தி.

(இ-ள்.) நூல்பொருள்-(ஓர் இலக்கண) நூலாலறிவிக்கப்படுகின்ற பொருளை, வழக்கொடு - உலகவழக்கோடுஞ் செய்யுள் வழக்கோடும், வாய்ப்பக்காட்டி-பொருந்தக்காண்பித்து, ஏற்புழி அறிந்து-ஏற்குமிடத்தை மற்றோர் இலக்கிய நூலிலும் அறிந்து, இதற்கு-இவ்விடத்திற்கு, இவ்வகை ஆம் என - இவ்வகை யாகுமென்று நினைத்து, தகும் வகைசெலுத்துதல்-தக்க வகையாக நடத்துவது, தந்திர உத்தி-நூலுத்தியாம், எ - று.

தந்திரம்=நூல். உத்தியா லமைக்கப்படுபொருளை உத்தியென்றது ஆகுபெயர். (கரு)

[ஒத்து.]

16. நேரின மணியை நிரல்பட வைத்தாங்
கோரினப் பொருளை யொருவழி வைப்ப
தோத்தென மொழிப வுயர்மொழிப் புலவர்.

(இ-ள்.) நேர் இனம் மணியை - ஒருசாதியாயுள்ள மணிகளை, நிரல்பட வைத்து ஆங்கு - வரிசையாகப் பதித்தாற்போல, ஓர் இனம் பொருளை - ஒருசாதியாயுள்ள பொருள்களை, ஒருவழிவைப்பது - ஒருவழிபடச் சொல்லுவது, ஒத்து என - இயலுறுப்பென்று, மொழிப - சொல்லுவர், உயர்மொழி புலவர் - (உயிர்க் குறுதியைத் தருகின்ற) உண்மைச் சொற்களையுடைய வித்துவான்கள், எ - று. (கசு)

[படலம்.]

17. ஒருநெறி யின்றி விரவிய பொருளால்
பொதுமொழி தொடரி னதுபடல மாகும்.

(இ-ள்.) ஒருநெறி இன்றி - ஒருவழிப்படாமல், விரவிய பொருளால் - கலந்த பொருள்களோடு (பொருந்தி), பொதுமொழி - (பல பொருள்களைத் தரும்) பொதுச்சொற்கள், தொடரின் - ஒரோவிடத்தன்றித் தொடர்ந்துவந்தால், அது படலம் ஆகும் - அது படலவுறுப்பாகும், எ - று. (சஎ)

[சூத்திரம்]

18. சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வ னாடியிற் செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்.

(இ-ள்.) ஆடியின் - (பெரிய சரீர முதலானவைகளின் சாயையைத் தனக்குள்ளே செவ்வையாக அடக்கி இனிதாகக் காட்டுகின்ற) கண்ணாடியைப்போல, சில்வகை எழுத்தில்-சிலவகை யெழுத்துகளாலாகிய சொற்களில், பல்வகைப்பொருளை - பலவகைப்பட்ட பொருள்களை, செவ்வன் செறித்து-செவ்வையாக அடக்கி, இனிதுவிளக்கி - இனிதாகக் காட்டி, திட்பம் நுட்பம் - (பல பொருளினுடைய) திண்மையும் நுண்மையும், சிறந்தன - சிறந்துவருவன, சூத்திரம் - சூத்திரங்களாகும், எ - று. (கஅ)

[சூத்திரநிலை.]

19. ஆற்றொழுக் கரிமா நோக்கந் தவளைப்
பாய்த்துப் பருந்தின் வீழ் வன்னசூத் திரநிலை.

(இ-ள்.) ஆறு ஒழுக்கு - (இடையறாது செல்லுகின்ற) ஆற்று வெள்ளத்தினது செல்லுகையையும், அரிமா நோக்கம் - (முன்னும் பின்னும் பார்க்கின்ற) சிங்கத்தினது பார்வையையும், தவளைப்பாய்த்து-(நடுவேயிடம் விட்டுக்குதிக்கின்ற) தவளையினது குதித்தலையும்,

பருந்தின்வீழ்வு - (நெடுந்தூரத்திலிருந்து ஒன்றை வௌவிப்போவதற்கு வீழ்கின்ற) பருந்தினது வீழ்ச்சியையும், அன்ன - போலும், சூத்திரநிலை (முன்சொன்ன) சூத்திரங்கள் (ஒன்றோடொன்று தொடர்ந்துநிற்கும்) நிலைகள், எ - று. (கக)

[சூத்திரங்களுக்குக் காரணவகையால் வரும்பெயர் வேறுபாடு.]

20. பிண்டந் தொகைவகை குறியே செய்கை
கொண்டியல் புறனடைக் கூற்றன சூத்திரம்.

(இ - ள்.) பிண்டம்-(பலதிறப் பொருள்களையும் உள்ளடக்கிக் கொண்டு பொதுப்படவரும்)பிண்டச் சூத்திரமும், தொகை-(அப்பல திறப்பொருள்களையும் வேறு வேறாகத் தொகுத்துச்சொல்லும்) தொகைச்சூத்திரமும், வகை - (அத்தொகுத்துச் சொல்லப்பட்டவைகளை வகுத்துச்சொல்லும்) வகைச்சூத்திரமும், குறி - (இவை உயிர் இவை மெய்யென அறியவரும்) குறிச் சூத்திரமும், செய்கை-(புணர்ச்சிவிதியறிந்து புணர்த்தலையும் முடிபுவிதியறிந்து முடித்தலையும் செய்யும்) செய்கைச்சூத்திரமும், கொண்டு இயல் புறன் அடை - (இவைகளை) ஏற்றுக்கொண்டு இவைகளின் புறத்து அடையாக வருகின்ற புறனடைச் சூத்திரமுமாகிய, கூற்றன-(ஆறு)பிரிவையுடையன, சூத்திரம்-சூத்திரங்கள். எ - று.

[உதாரணம்.]

1. பிண்டச்சூத்திரம் - நன்கியம்புவனெழுத்தே (நன்-சூ-56)
2. தொகைச்சூத்திரம் - பன்னிருபாற்றதுவே (நன்-சூ-57)
3. வகைச்சூத்திரம் - மொழிமுதற்காரணமாம் (நன்-சூ-58)
4. குறிச்சூத்திரம் - அம்முதலீராறாவி (நன்-சூ-63)
5. செய்கைச்சூத்திரம் - ணனவல்லினம்வரட்டறவும் (நன்-சூ-209)
6. புறனடைச்சூத்திரம் - மொழியாய்த்தொடரினும் (நன்-சூ-127)

விதி வகையிலே சேர்தலால் வேறு சொல்லவில்லை. ஆறுவிதமாகச் சொன்னாலும் குறிச்சூத்திரமும் செய்கைச் சூத்திரம் என்னுமிரண்டனுள்ளே மற்றை நான்கும் அடங்கும். (உ0)

[உரையினது பொது இலக்கணம்.]

21. பாடங் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை யுதாரணம் வினாவிடை விசேடம்
விரிவதி காரந் துணிவு பயனோ
டாசிரிய வசனமென் றீரே ழுரையே.

(இ - ள்.) பாடம் - மூலமும், கருத்து - கருத்துரையும், சொல்வகை - பதங்களைப் பிரித்துரைத்தலும், சொற்பொருள் - பதவுரையும், தொகுத்து உரை - பொழிப்புரையும், உதாரணம் - உதாரணமும், வினா - வினாவும், விடை - உத்தரமும், விசேடம் - (வேண்டியவைகளைத்) தந்துரைத்தலும், விரிவு - (வேற்றுமைத் தொகை முதலானவைகளை) விரித்துரைத்தலும், அதிகாரம் - அதிகாரத்தோடு பொருந்த உரைத்தலும், துணிவு - இதற்கு இதுவே பொருளென வுரைத்தலும், பயன் - பயனை உரைத்தலும், ஆசிரிய வசனம் - மேற்கோள் காட்டுதலும், என்றீரேழுரை - எனப்பதினான்கு வகைப்படும் நூலுக்கு உரை, எ - று. (உச)

[காண்டிகையுரை.]

22. கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்
அவற்றொடு வினாவிடை யாக்க லானும்
சூத்திரத் துட்பொரு டோற்றுவ காண்டிகை.

(இ - ள்.) கருத்து - கருத்துரையும், பதப்பொருள் - பதவுரையும், காட்டு - உதாரணமும், மூன்றினும் - ஆகிய மூன்றனையுஞ் சொல்லுதலானும், அவற்றொடு - அம்மூன்றனோடு, வினா - வினாவும், விடை - உத்தரமும், ஆக்கலானும் - (ஆகிய விரண்டனையும்) கூட்டிச் சொல்லுதலாலும், சூத்திரத்துள் - சூத்திரத்திலிருக்கின்ற, பொருள்-பொருளை, தோற்றுவ-காட்டுவன, காண்டிகை-காண்டிகையுரைகளாம், எ - று. (உஉ)

[விருத்தியுரை.]

23. சூத்திரத் துட்பொரு ளன்றியு மாண்டைக்
கின்றி யமையா தியாவையும் விளங்கத்
தன்னுரை யானும் பிறநூ லானும்
ஐய மகலவைங் காண்டிகை யுறுப்பொடு
மெய்யினை யெஞ்சா திசைப்பது விருத்தி.

(இ - ள்.) சூத்திரத்துள் - சூத்திரத்திலுள்ள, பொருள் அன்றியும்-பொருளையல்லாமல், ஆண்டைக்கு - அவ்விடங்களுக்கு, இன்றி அமையா யாவையும் - இல்லாது நிறையாத எல்லாப்பொருள்களும், விளங்க - விளங்கும்படியாக, தன் உரையானும் - தானுரைக்கு முரையாலும், பிறநூலானும் - ஆசிரியவசனங்களானும், ஐங்காண்டிகை உறுப்பொடு - (முன்சொன்ன) காண்டிகையுரையின் உறுப்பு ஐந்

ஞானும், ஐயம் அகல-சந்தேகந்தீர, மெய்யினை - உண்மைப்பொருளை, எஞ்சாது - குறையாமல், இசைப்பது - விரித்துரைப்பது, விருத்தி-விருத்தியுரையாகும், எ - று.

சூத்திரத் துட்பொரு ளன்றியு மென்றதனால், முன்சொன்ன பதினான்கு உறுப்புக்களையும் கொண்டுவருவது விருத்தியுரை யென்றதாயிற்று. (உ௩)

[நூலென்னும் பெயர்க்குக்காரணம்.]

24. பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடியு மாறு.

(இ - ள்.) தன் சொல் - தனது சொல், பஞ்சு ஆக - பஞ்சாகவும், பனுவல் - செய்யுள், இழை ஆக - இழையாகவும், செஞ்சொல் புலவன் - செவ்வையாகிய சொற்களை யறிந்த புலவன், சேயிழை ஆக - நூற்கின்ற பெண்ணாகவும், எஞ்சாத - குறையாத, வாய் கை ஆக - வாய் கையாகவும், மதி கதிர் ஆக - அறிவு கதிராகவும், மை இலா - குற்றமில்லாத, நூல் - கல்விநூலானது, முடியுமாறு-முடியும் வழி (இது வாகும்), எ - று. (உ௪)

நூல் உவமையாகு பெயராமாறு அறிக.

[இதுவுமது.]

25. உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா-மரத்தின்
கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோன் மாந்தர்
மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு.

(இ - ள்.) புரத்தின் - உடம்பினுள்ளிருக்கின்ற, உரத்தின் வளம்-அறிவின் வளத்தை, பெருக்கி - வளர்வித்து, உள்ளிய - நினைக்கப்பட்ட, தீமைவளம் - அறியாமையின் மிகுதியை, முருக்கி - கெடுத்து, பொல்லா மரத்தின்-பொல்லாத மரத்தினது, கனம்கோட்டம்-மிகுதியாகிய கோணலை, நூல் - எற்று நூலானது, தீர்க்கும் - நீக்கும், அஃதேபோல் - அதுபோலவே, நூல் மாண்பு - கல்விநூலினது மாட்சிமையானது, மாந்தர் - மனிதரது, மனம்கோட்டம்-மனத்தினது கோணலை, தீர்க்கும் - நீக்கும், எ - று. (உ௫)

[நல்லாசிரியரிலக்கணம்.]

26. குலனரு டெய்வங் கொள்கை மேன்மை
கலைபயி றெளிவு கட்டுரை வன்மை

நிலமலை நிறைகோன் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மினையவும்
அமைபவ னூலுரை யாசிரி யன்னே.

(இ - ள்.) குலன் - நல்ல சாதியும், அருள் - கருணையும், தெய்வம் கொள்கை - கடவுள்வழிபாடும், மேன்மை - மேன்பாடும், கலைபயில் தெளிவு - நூல்களிலே பழகிய தெளிவும், கட்டு உரைவன்மை - தொடுத்துச் சொல்லுகின்ற உரைவலிமையும், நிலம் மலைநிறைகோல் மலர்-நிலத்தையும் மலையையுந் துலாக்கோலையும்மலரையும், நிகர்-நிகர்க்கின்ற, மாட்சியும் - குணங்களும், உலகு இயல் - உலகநடையை, அறிவு - (அறியும்) அறிவும், உயர் குணம் உயர்வாகிய குணங்கள், இனையவும் - இவை போல்வனபிறவும், அமைபவன் - நிறைந்திருப்பவன், நூல்உரை ஆசிரியன்- நூல் கற்பிக்கும் ஆசிரியனாவான், எ - று.

[நிலமாட்சி.]

27. தெரிவரும் பெருமையுந் திண்மையும் பொறையும்
பருவ முயற்சி யளவிற் பயத்தலும்
மருவிய நன்னில மாண்பா கும்மே.

(இ - ள்.) தெரிவுஅருபெருமையும்-பிறரால் அறியப்படாத (உருவத்தின்) பெருமையும், திண்மையும் - (பெரியபாரஞ் செய்து தன்மேலே நெருங்கினவைகளாற் கலங்காத) வலிமையும், பொறையும்- (தன்னையடுத்த மனிதர் தோண்டுத லாதியாகிய குற்றங்களைச் செய்யினும் பொறுக்கின்ற) பொறுமையும், பருவமுயற்சி அளவில் பயத்தலும்-பருவத்திலே (உழவர் செய்கிற) முயற்சி யளவிற்குத்தக்க பயனை அவருக்குத்தருதலும், நல் நிலம் - நல்ல நிலத்தி னிடத்து, மருவிய-பொருந்திய, மாண்பு ஆகும் - குணங்களாகும், எ - று.

பிறராலறியப்படாத கல்வி யறிவின் பெருமையும், பெரியவாதஞ்செய்து தன்மேலே நெருங்கினவரால் கலங்காதவலிமையும், தன்னையடுத்த மாணக்கர் இகழ்தலாதியாகிய குற்றங்களைச் செய்யினும் பொறுக்கின்ற பொறுமையும், பருவத்திலே மாணாக்கர் செய்கிற முயற்சி யளவிற்குத்தக அவர்க்குப் பயனைத்தருதலும், ஆசிரியனிடத்துப் பொருந்திய குணங்களாதலால் நிலம் அவனுக்கு உவமானமாயிற்று. (உஎ)

[மலைமாட்சி.]

28. அளக்க லாகா வளவும் பொருளும்
துளக்க லாகா நிலையுந் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையு மலைக்கே.

(இ - ள்.) அளக்கல் ஆகா அளவும் - அளவுசெய்யப்படாத (தன் வடிவத்தின்) அளவும், (அளக்கல் ஆகாப்) பொருளும் - அளவுசெய் யப்படாத பலவகைப்பொருளும், துளக்கல் ஆகாநிலையும் - (எப்படிப் பட்டவலிமை யுடையவராலும்) அசைக்கப்படாத உருவத்தினிலை யும், தோற்றமும் - (நெடுந்தூரத்திலுள்ளவராலும்) காணப்படும் உயர் ச்சியும், வறப்பினும் வளம் தரும் வண்மையும் - மழை பெய்யாமல் வறந்தகாலத்திலும் தன்னைச்சேர்ந்த உயிர்களுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கிற கொடையும், மலைக்கு-மலைக்குள்ள குணங்களாகும், எ-று.

அளவு செய்யப்படாத தன் கல்வியினளவும், அளவு செய்யப் படாத பலவகை நூற்பொருளும், எப்படிப்பட்ட புலமையை யுடை யோராலும் அசைக்கப்படாத கல்வி யறிவினிலையும், நெடுந்தூரத்தி லுள்ளாராலும் அறியப்படும் உயர்ச்சியும், பொருள்வருவழி வறந்த காலத்திலுந் தன்னைச் சேர்ந்த மாணாக்கருக்குக் கல்விப் பொருளைக் கொடுக்கின்ற கொடையும், ஆசிரியனுக்குள்ள குணங்களாதலால் மலை அவனுக்கு உவமானமாயிற்று. (உஅ)

[நிறைகோல் மாட்சி.]

29. ஐயந் திரப் பொருளை யுணர்த்தலும்
மெய்ந்நடு நிலையு மிகுநிறை கோற்கே.

(இ - ள்.) ஐயம் திரப் பொருளை உணர்த்தலும் - சந்தேகந்தீர (நிறுக்கப்பட்ட) பண்டத்தினளவைக் காட்டலும், மெய் நடு நிலை யும்-உண்மைபெறத் (தான் இரண்டு தட்டுகளுக்கும்) நடுவே நிற்கை யும், நிறை கோற்கு - தராசுக் கோலின்கண், மிகும் - (குணங்களாக) மிகும், எ - று.

சந்தேகந்தீர விறுவப்பட்ட சொற்பொருளி னியல்பைக்காட் டலும், புலவரிருவர் மாறுபட்டா ராயின் உண்மைபெறத் தான் அவ்விருவருக்கும் நடுவாக நிற்கையும் ஆசிரியன்கட் குணங்களாக மிகும் ஆதலால், நிறைகோல் அவனுக்கு உவமான மாயிற்று. (உகூ)

[மலர்மாட்சி.]

30. மங்கல மாகி யின்றி யமையா
தியாவரு மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்
பொழுதின் முகமலர் வுடையது பூவே.

(இ - ள்.) மங்கலம் ஆகி - சுபச்செய்கைக் குரியதாகி, இன்றி அமையாது - (யாதொருசெயலும் அலங்கரிக்குந் தான்) இல்லாது முடியாதாக, யாவரும் மகிழ்ந்து மேற்கொள - கண்டோர் யாவருங் களித்து மேலாகத் தன்னைச் சூடிக்கொள்ள, மெல்கி-மெல்லியகுண முடையதாகி, பொழுதின் முகமலர்வு உடையது-மலர்தற்குரிய கால த்திலே முகம்விரிதலை யுடையதே, பூ - பூவாகும், எ - று.

சுபச்செய்கைக்குரியனாகி யாதொரு செயலுஞ் சிறப்பிக்குந்தா னில்லாது முடியாதாகக் கண்டோர் யாவருங் களித்து மேலாகத் தன்னை வைத்துக்கொள்ள மெல்லியகுணமுடையவனாகிப் பாடஞ் சொல்லுதற்குரிய காலத்திலே முகமலர்தலை யுடையவன் ஆசாரிய னாதலால், பூ அவனுக்கு உவமானமாயிற்று. (௩0)

[ஆசிரியராகாதவர்.]

31. மொழிகுண மின்மையு மிழிகுண வியல்பும்
அழுக்கா றவாவஞ்ச மச்ச மாடலும்
கழற்குட மடற்பனை பருத்திக் குண்டிகை
முடத்தெங் கொப்பன முரண்கொள் சிந்தையும்
உடையோ ரிலரா சிரியரா குதலே.

(இ - ள்.) மொழிகுணம் இன்மையும்-பாடஞ்சொல்லுங் குணமி ல்லாமையையும், இழிகுண இயல்பும் - இழிகுணமாகிய சுபாவத்தை யும், அழுக்காறு-(பிறருக்கு வருங் கல்வியைக்குறித்துக் கொள்ளும்) பொறாமையையும், அவா-பொருளின்மேலதிகமாக வைக்கும் ஆசை யையும், வஞ்சம்-மெய்ப்பொருளை மறைத்துப் பொய்ப்பொருளைக்கா ட்டி) வஞ்சித்தலையும், அச்சம் ஆடலும்- (கேட்போர்க்கு) அச்சமுண் டாகப் பேசுதலையும், கழற்குடம் மடற்பனை பருத்திக்குண்டிகைமுட த்தெங்கு-கழற்குடமும் மடற்பனையும் பருத்திக்குண்டிகையும் முடத் தெங்கும் ஆகிய நான்கனையும், ஒப்பு என-ஒப்பென்று சொல்ல, முர ண்கொள் சிந்தையும்-மாறுபாடுகொண்ட கருத்தையும், உடையோர்- தம்மிடத்திலுடையவர், ஆசிரியர் ஆகுதல் - கற்பிக்கும் ஆசிரியராகு தல், இலர் - இலராவர், எ - று. (௩௧)

இனி, மொழிகுணமின்மை என்பதற்கு மேலே நல்லாசிரியருக் குக் கூறிய நற்குணங்களில்லாமை என்றும், அச்சமாடல் என்பதற் குச் சடைக்கு அஞ்சுதலுடைமை என்றும், பொருள்கூறுவர்.

[கழற்குடத்தின் தன்மை.]

32. பெய்தமுறை யன்றிப் பிறழ வுடன்றரும்
செய்தி கழற்பெய் குடத்தின் சீரே.

(இ - ள்.) பெய்த முறையன்றி - தன்னுள்ளே போட்டமுறை யினா லல்லாமல், பிறழ - (முன் போடப்பட்டவையும் பின் போடப் பட்டவையும் அம்முறை) பிறழ்ந்துபோக, உடன்தரும் - விரைவிலே (தன்னுள்ளேகொண்ட கழற்காய்களைக்) கொடுக்கின்ற, செய்தி-செய்

ணையானது, கழல்பெய் குடத்தின்சீர் - கழற்காய்போட்ட குடத்தினது குற்றமாம், எ-று.

தமக்குக் கற்பித்த முறையினாலல்லாமல் முன் கற்பிக்கப்பட்டவையும், பின் கற்பிக்கப்பட்டவையும் அம்முறை பிறழ்ந்துபோக விரைவிலே தம்முள்ளே கொண்ட நூற்பொருள்களைத் தருகின்ற செய்கையானது ஆசிரிய ராகாதவரது குற்றமாதலால் கழற்குடம் அவருக்கு உவமானமாயிற்று. (௩௨)

[மடற்பனையின் தன்மை]

33. தானே தரக்கொளி னன்றித் தன்பால்
மேவிக் கொளக்கொடா விடத்தது மடற்பனை.

(இ - ள்.) தானே தர-தானே (தன்னிடத்துள்ள பழங்களைத்) தர, கொளின் அன்றி - கொண்டாற்கொள்ளலாமேயல்லாமல், தன்பால் மேவிகொள - (ஒருவர்) தன்னிடத்து நெருங்கி வந்து பறித்துக் கொள்ள, கொடாத இடத்தது-அப்பழங்களைக் கொடாத இடத்தையுடையது, மடல்பனை-(தன்வடிவமுழுது) மடல் விரிந்த பனை, எ-று.

தாமே தம்மிடத்திலுள்ள நூற்பொருள்களைச் சொல்ல அறிந்துகொண்டாற்கொள்ளலாமே அல்லாமல், ஒருவர்தம்மிடத்து நெருங்கி வந்து வினவி அறிந்துகொள்ள அந்நூற் பொருள்களைச் சொல்லாத இடத்தை யுடையவர் ஆசிரியராகாதவ ராதலால் மடற்பனை அவருக்கு உவமானமாயிற்று. (௩௩)

[பருத்திக்குண்டிகையின் தன்மை.]

34. அரிதிற் பெயக்கொண் டப்பொரு டான்பிறர்க்
கெளிதீ வில்லது பருத்திக் குண்டிகை

(இ - ள்.) அரிதின்பெயக்கொண்டு - (பஞ்சைக்கொண்டபோதும்) வருத்தத்தோடு (சிறிதுசிறிதாக) அடைக்கத்தன்னுள்ளே கொண்டு, அப்பொருள் தான்பிறர்க்கு எளிது ஈவு இல்லது-(கொடுக்கும் போதும்) அப்பஞ்சைத் தான் பிறர்க்கு எளிதிற்கொடாத குற்றமுடையது, பருத்தி குண்டிகை - பஞ்சுபோட்ட குடுக்கையாகும், எ-று.

கல்வியைக் கற்றபோதும் வருத்தத்தோடு சிறிது சிறிதாகக்கற்பிக்கத் தம்முள்ளே கொண்டு, பாடஞ்சொல்லும் போதும் அக்கல்வியைத் தாம் பிறர்க்கு எளிதிற்கொடாத குற்றமுடையவர் ஆசிரியராகாதவ ராதலால் பருத்திக் குண்டிகை அவர்க்கு உவமானமாயிற்று

[முடத்தெங்கின் தன்மை.]

35. பல்வகை யுதவி வழிபடு பண்பின்
அல்லோர்க் களிக்கு மதுமுடத் தெங்கே.

(இ - ள்.) பல்வகை உதவி-(நீர்விடுகை முதலாகிய) பலவகை உபகாரங்களையுஞ்செய்து, வழிபடுபண்பின் தனக்கு வழிபாடு செய்யுங் குணத்தினின்றும், அல்லோர்க்கு - அல்லாதபிறருக்கு, அளிக்குமது-தன்னிடத்துள்ள காய்களைத் தருங் குற்றமுடையது, முடத்தெங்கு - வேலிக்கப்புறம் வளைந்த தென்னமரமாம், எ-று.

பொருள் கொடுத்தல்முதலாகிய பலவகை யுபகாரங்களையுஞ் செய்து தமக்கு வழிபாடு செய்யுநகுணத்தினின்றும் அல்லாத மாணுக்கருக்குத் தம்மிடத்துள்ள கல்விப்பொருளைத்தருங் குற்றமுடையவ ராசிரியராகாதவ ராதலால், முடத்தெங்கு அவருக்கு உவமானமாயிற்று. (௩௫)

[பாடஞ்சொல்லும் வகை.]

36. ஈத லியல்பே யியம்புங் காலைக்
காலமு மிடனும் வாலிதி னோக்கிச்
சிறந்துழி யிருந்துதன் றெய்வம வாழ்த்தி
உரைக்கப் படும்பொரு ளுள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை யறிந்தவ னுளங்கொளக்
கோட்டமின் மனத்தினூல் கொடுத்த லென்ப.

(இ - ள்.) ஈதல் - பாடஞ் சொல்லுதலினது, இயல்பு-வரலாற்றை, இயம்புங்காலை - சொல்லும்போது, காலமும்-(உரிய) காலத்தையும், இடனும் - (உரிய) இடத்தையும், வாலிதின் - தூயனவாக, நோக்கி-பார்த்து, சிறந்த உழிஇருந்து-சிறந்த இடத்திருந்து, தன்தெய்வம்-தான்வழிபடுகடவுளை, வாழ்த்தி - வாழ்த்துதல் செய்து, உரைக்கப்படும் பொருள் - பாடஞ்சொல்லப்படும்பொருளை, உள்ளத்து - தன்கருத்தின்கண், அமைத்து-நிறைத்து, விரையான் - விரையாநின்றும், வெகுளான் - கோபஞ்செய்யாநின்றும், விரும்பி - இச்சித்து, முகமலர்ந்து - முகமலர்ச்சியை அடைந்து, கொள்வோன் - கேட்பவனது, கொள்வகை-கேட்குமறிவின்வகையை, அறிந்து-உணர்ந்து, அவன் உளம் - அவனது மனம், கொள - ஏற்றுக்கொள்ள, கோட்டம் இல் - மாறுபாடில்லாத, மனத்தின் - மனத்துடனே, நூல் - நூலை, கொடுத்தல்-கொடுத்தலாகும், என்ப-என்றுசொல்லுவர் (புலவர்), எ - று. (௩௬)

[மாணுக்கராவார்.]

37. தன்மக னாசான் மகனே மன்மகன்
பொருணனி கொடுப்போன் வழிபடு வோனே
உரைகோ ளாளற் குரைப்பது நூலே.

(இ - ள்.) தன்மகன் - தன்புதல்வனுக்கும், ஆசான் மகன் - தன் னாசிரியன் புதல்வனுக்கும், மன்மகன் - அரசன் புதல்வனுக்கும், பொருள் நனி கொடுப்போன் - பொருளை மிகுதியாகக் கொடுப்போ னுக்கும், வழிபடுவோன் - வழிபாடுசெய்வோனுக்கும், உரைகோள் ளாளற்கு - (தன்னாற்சொல்லப்பட்ட) உரையை விரைவிலே கற்கும் அறிவுடையோனுக்கும், உரைப்பது - சொல்லப்படுவது, நூல் - நூலா கும், எ - று. (கஎ)

38. அன்ன மாவே மண்ணொடு கிளியே
இல்லிக் குடமா டெருமை நெய்யரி
அன்னார் தலையிடை கடைமா ணாக்கர்.

(இ - ள்.) அன்னம் - அன்னத்தையும், ஆ - பசுவையும், அன் னார் - போலவார், தலை (மாணாக்கர்) - முதன்மாணாக்கர், மண் - மண் ணையும, கிளி - கிளியையும், அன்னர் - போல்வார், இடை (மாணா க்கர்) - நடுமாணாக்கர், இல்லிக்குடம் - சில்லிக்குடத்தையும், ஆடு - ஆட் டையும், எருமை - எருமையையும், நெய்யரி - பன்னாடையையும், அன் னர் - போல்வார், கடைமாணாக்கர் - கடைமாணாக்கர், எ - று.

முதல்மாணாக்கர்:—அன்னம் பாலையும் நீரையும் வேறுபிரித்துப் பாலைமாத்திரங்குடித்தல்போல, முதன் மாணாக்கர் குணத்தையுங் குற்றத்தையும்வேறுபிரித்துக் குணத்தைமாத்திரங்கொள்ளுதலாலும், பசு மிகுந்த புல்லையுடைய இடத்தைக் கண்டால் அப்புல்லை வயிறு நிறையமேய்ந்து பின்போயிடத்திற் போயிருந்து சிறிது சிறிதாகவா யில் வருவித்துக்கொண்டு மென்றுதின்றல்போல, முதன் மாணாக்கர் மிகுந்த கல்வியுடைய ஆசிரியனைக் கண்டால் அக்கல்வியைத் தன் உள்ள நிறையக் கேட்டுக்கொண்டு பின்போயிடத்துப் போயிருந்து சிறிது சிறிதாக நினைவிற் கொண்டுவந்து சிந்தித்தலாலும், அவருக்கு அவ்விரண்டும் உபமானமாத லறிக.

இடைமாணாக்கர்:—மண் உழவர் வருந்திப் பயிர்செய்முயற் சியளவு விளைவைத் தன்கட் காட்டல்போல, இடைமாணாக்கர் ஆசிரியன் வருந்திக் கற்பிக்கு முயற்சி யளவு கல்வியறிவைத் தன்கண் காட்டுதலாலும், கிளி தனக்குக் கற்பித்த சொல்லையல்லாமல் வே றொன்றையும் சொல்லமாட்டாமைபோல, இடைமாணாக்கர் தமக் குக் கற்பித்த நூற்பொருளை அல்லாமல் வேறொரு நூற்பொருளை யுஞ் சொல்லமாட்டாமையாலும், அவருக்கு அவ்விரண்டும் உபமான மாதலறிக.

கடைமாணுக்கர்:—பொள்ளற்குடம் நீரை வார்க்குந்தோறும் ஒழுகவிடுதல்போலக் கடைமாணுக்கர் நூற்பொருளைக் கற்பிக்குந்தோறும் மறந்து விடுதலாலும், ஆடு ஒரு செடியிலே தழை நிறைந்திருந்தாலும் வயிறு நிறைய மேயாமற் செடிதோறும்போய் மேய்தல் போல, கடைமாணுக்கர் ஓராசிரியனிடத்து மிகுந்த கல்வியிருந்தாலும் புலமை நிறையக் கற்றுக்கொள்ளாமற் பலரிடத்திலும் போய்ப் பாடங் கேட்கையாலும், எருமை குளத்து நீரைக்கலக்கிக் குடித்தல் போல, கடைமாணுக்கர் ஆசிரியனை வருத்திப் பாடங்கேட்கையாலும், பன்னாடை தேன் முதலியவற்றைக் கீழேவிட்டு அவற்றிலுள்ள குற்றங்களைப் பற்றிக்கொள்ளுதல்போல, கடைமாணுக்கர் நல்லபொருளை மறந்துவிட்டுத் தீயபொருளைச் சிந்தித்துப் பற்றிக் கொள்ளுதலாலும், அவருக்கு இந்நான்கும் உபமானமாதலறிக. ()

[மாணுக்கராகாதவர்.]

39. களிமடி மானி காமி கள்வன்
பிணிய னேழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் றொன்னூற் கஞ்சித்
தடுமா றுளத்தன் றறுகணன் பாவி
படிறனின் னோர்க்குப் பகரார் நூலே.

(இ-ள்.) களி - கட்குடியனும், மடி - சோம்பேறியும், மானி - அபிமான முடையவனும், காமி - காமமுடையவனும், கள்வன் - திருடனும், பிணியன் - நோயாளியும், ஏழை - அறிவில்லாதவனும், பிணக்கன் - பிணக்குடையவனும், சினத்தன் - கோபமுடையவனும், துயில்வோன் - (மிகத்) தூங்குவோனும், மந்தன் - புத்திநுட்பமில்லாதவனும், தொல் நூற்கு அஞ்சி தடுமாறு உளத்தன் - பழைய நூல்களைக் கண்டஞ்சித் தடுமாறும் உள்ளத்தை யுடையவனும், தறுகணன் - அஞ்சத்தக்கவைகளை அஞ்சாதவனும், பாவி - பாவஞ்செய்வோனும், படிறன் - பொய்பேசுகிறவனும், இன்னோர்க்கு - ஆகிய இப்படிப்பட்ட குற்றத்தை யுடையவருக்கு, நூல் - நூலை, பகரார் - சொல்லார், எ - று. (௩௯)

[பாடங்கேட்டலின் வரலாறு.]

40. கோடன் மரபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடன் முனியான்
குணத்தொடு பழகி யவன்குறிப் பிற்சார்ந்

திருவென விருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவ னன்ன வார்வத்த னாகிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்
செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் போத லென்மனார் புலவர்.

(இ-ள்.) கோடல் மரபு-பாடங்கேட்கையினது வரலாற்றை, கூறும் காலை - சொல்லும்பொழுது, பொழுதொடு - தகுங்காலத்தில், சென்று - போய், வழிபடல் - வழிபாடு செய்தலில், முனியான் - வெறுப்பில்லாதவனாகி, குணத்தொடு - (ஆசிரியன்) குணத்தோடு (பொருந்தி), பழகி - பயின்று, அவன்குறிப்பின் - அவன் குறிப்பின் (வழியிலே), சார்ந்து - சேர்ந்து, இரு என - இருவென்று சொன்ன பின், இருந்து - இருந்து, சொல் என - படியென்று சொன்ன பின், சொல்லி - படித்து, பருகுவன் அன்ன-(பசித்து) உண்பவன் விருப்பத்தைப்) போன்ற, ஆர்வத்தன் ஆகி - மிக்க விருப்பத்தை யுடையவனாகி, சித்திரப்பாவையின் - சித்திரப்பாவையைப்போல, அத்தகவு அடங்கி - (அவ்வகைவாறு) குணத்தோடடங்கி, செவி - காதானது, வாய் ஆக - வாயாகவும், நெஞ்சு - மனமானது, களன் ஆக - கொள்ளுமிடமாகவும், கேட்டவை - (முன்) கேட்கப்பட்டவற்றை, கேட்டு - (திரும்பக்) கேட்டு, அவை - அப்பொருள்களை, விடாது - மறந்துவிடாமல், உளத்து-உள்ளத்தின் கண், அமைத்து - நிறைத்துக்கொண்டு, போ என - போவென்று சொல்ல, போதல் - போகுதலாகும், என்மனார் - என்று சொல்லுவர், புலவர் - அறிவுடையோர், எ-று. (௪0)

என்மனார் - எதிர்கால வினைமுற்று. எதிர்காலவிடைநிலை-மன்.

41 நூல்பயி லியல்பே நுவலின் வழக்கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை யமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்த லென்றிவை
கடனாக் கொளினே மடநனி யிகக்கும்.

(இ-ள்.) நூல் பயில் இயல்பு - நூலைக்கற்றலினியல்பை, நுவலின் - சொல்லினால், வழக்கு - (உலகவழக்குஞ் செய்யுள் வழக்குமா

கிய இருவகை) நடையையும், அறிதல் - ஆராய்ந்தறிதலும், பாடம் - மூல பாடத்தை, போற்றல் - (பலகால்) சிந்தித்தலும், கேட்டவை - (தான்) கேட்ட பொருள்களை, நினைத்தல் - எண்ணுதலும், ஆசான் - ஆசிரியனை, சார்ந்து - அடுத்து, அவை - அவற்றை, அமைவர-குறைவுதீர, கேட்டல்-மீண்டுங்கேட்டலும், அம்மாண்பு-அக்கல்வி மாட்சிமையை, உடையோர் தம்மொடு - உடையவரோடு, பயிறல் - பழகுதலும், வினுதல் - (தான் ஐயுற்றபொருளை) வினவுதலும், வினு யவை விடுத்தல் - (அவர்) வினவியவைகளுக்கு உத்தரங் கொடுத்தலும், என்ற - என்று சொல்லப்பட்ட, இவை - இச்செயல்களை, கடன் ஆக - முறையாக, கொளின் - மாணக்கன் கொண்டால், மடம் - அறியாமையானது, நனி-மிகவும், இகக்கும் (அவனைவிட்டு) நீங்கும், எ-று. (சக)

42 ஒருகுறி கேட்போ னிருகாற் கேட்பின்
பெருக நூலிற் பிழைபா டிலனே.

(இ - ள்.) ஒரு குறி - ஒருதரம், கேட்போன் - ஒரு நூலைப் பாடங் கேட்பவன், இருகால் - இரண்டுதரம், கேட்பின் - கேட்டானுயின், நூலில்பிழைபாடு - அந்நூலிற் பிழைபடுதல், பெருக - மிகுதியும், இலன் - இலனுவன், எ-று. (சஉ)

43 முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும்.

(இ - ள்.) முக்கால் - மூன்றுதரம், கேட்பின்-கேட்டானுயின், முறை - (ஆசிரியன் கற்பித்த) முறையை, அறிந்து - உணர்ந்து, உரைக்கும் - சொல்லுவான், எ - று (சங.)

44 ஆசா னுரைத்த தமைவரக் கொளினும்
காற்கூ றல்லது பற்றல னாகும்.

(இ - ள்) ஆசான் - ஆசிரியன், உரைத்தது - கற்பித்த பொருளை, அமைவர - (தன்னறிவினிடத்து) நிறைய, கொளினும் - கற்றானுயினும், கால் கூறு அல்லது - (புலமைத் திறத்திற்) காற்பங்கல்லது, பற்றலன் ஆகும் - அதற்கதிகமாகப் பெருதவனுவான், எ - று.

45 அவ்வினை யாளரொடு பயில்வகை யொருகால்
செவ்விதி னுரைப்ப வவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும்.

(இ-ள்.) அவ்வினை யாளரொடு - அக்கல்வித் தொழிலை யாளுதலுடையாரோடு, பயில் வகை - பழகும் வகையால், ஒருகால்-காற்கூறும், செவ்விதின் உரைப்ப - (தன்மாணாக்கருக்குஞ் சபையாருக்கும்) உணர விரித்துரைத்தலால், அவ்விருகாலும் - அரைக்கூறுமாக, மை அறு - குற்ற மற்ற, புலமை - அறிவானது, மாண்பு உடைத்து ஆகும்-நிரம்புதலுடையதாகும், எ-று. (௪௫)

46. அழலி னீங்கா னணுகா னஞ்சி
நிழலி னீங்கா னிறைந்த நெஞ்சமோ
டெத்திறத் தாசா னுவக்கு மத்திறம்
அறத்திற் றிரியாப் படர்ச்சி வழிபாடே.

(இ-ள்.) அழலின் - (குளிர்காய்வோன் விட்டு நீங்காமலும் நெருங்காமலும் இருக்கிற) நெருப்பைப்போல (ஆசிரியனை நினைத்து), அஞ்சி - அச்சமுற்று, நீங்கான் - (விட்டு) நீங்கானாகியும், அணுகான்-நெருங்கானாகியுமிருந்து, நிழலின் - (விடாது பின்செல்லு) நிழலைப் போல, நீங்கான் - தொடர்ந்துசென்று, நிறைந்த நெஞ்சமொடு-(அன்பு) நிறைந்த கருத்துடனே, எத்திறத்து-எத்தன்மையினாலே, ஆசான்-ஆசிரியனானவன், உவக்கும் - மகிழ்வான், அத்திறம் - அத்தன்மையோடு (பொருந்தி), அறத்தின் - அறத்தினின்றும், திரியா - வேறுபடாத, படர்ச்சி - நடத்தலானது, வழிபாடு - (மாணாக்கன் செய்யும்) வழிபாடாகும், எ-று.

அழலி னென்பதற்கு ஆசிரியன் கோபித்தா லெனப்பொருள் கூறினும் பொருந்தும். (௪௬)

பொதுப்பாயிரத்திலக்கணம் முற்றிற்று.

Dr. U. V. S. IYER LIBRARY ★ MADRAS ★ 22088

சிறப்புப்பாயிரத்திலக்கணம்.

[சிறப்புப்பாயிரத்தின் பொதுவிதி.]

47. ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோ டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே.

(இ-ள்.) ஆக்கியோன் பெயர் - நூல்செய்தோன் பெயரும், வழி - (நூல்வந்த) வழியும், எல்லை - (நூல்வழங்கு) நிலமும், நூற்பெயர் - நூலினது பெயரும், யாப்பு - (இந்நூல் முடிந்தபின்பு இந்நூல்கேட்கத் தகுமென்னும்) இயையும், நுதலியபொருள் - நூலிற் சொல்லப்பட்ட பொருளும், கேட்போர் - (இந்நூல்) கேட்டற்குரிய அதிகாரிகளிவரென்பதும், பயன் - (நூல்கேட்டையாற் பெறப்படும்) பயனும், ஆகிய எண் பொருளும்-ஆகிய வெட்டுப்பொருளையும், வாய்ப்பக்காட்டல் - விளங்க வுணர்த்துதல், பாயிரத்து-சிறப்புப் பாயிரத்தினது, இயல்பு - இலக்கணமாம், எ-று.

ஆகிய வென்பது ஆய் என்றாயிற்று. (க)

48. காலங் களனே காரண மென்றிம்
மூவகை யேற்றி மொழிநரு முளரே.

(இ-ள்.) காலம் - (நூல்செய்த) காலமும், களன் - (நூலரங்கேற்றிய) சபையும், காரணம்-(நூல்செய்தற்கு) காரணமும், என்று - என்று, இம்மூவகை - இம்மூன்றனையும், ஏற்றி-(அவ்வெட்டனோடு) கூட்டி, மொழிநரும் - பதினொன்றாகச் சொல்லுவாரும், உளர் - (சிலர்) உளர், எ - று. (உ)

[நூற்பெயருக்குச் சிறப்புவிதி.]

49. முதனூல் கருத்த னளவு மிகுதி
பொருள்செய் வித்தோன் றன்மைமுத னிமித்தினும்
இடுகுறி யானுநூற் கெய்தும் பெயரே.

(இ-ள்.) முதனூல் - முதனூலும், கருத்தன் - (நூல்) செய்தவனும், அளவு-அந்நூலின் அளவும்,மிகுதி-அந்நூலிற் சொல்லப்பட்ட மிகுதியான கூறும், பொருள் - அந்நூலின் பொருளும், செய்வித்தோன் - (நூல்) செய்வித்தவனும், தன்மை - அந்நூலின் குணமும், முதல் - முதலாகிய, நிமித்தினும் - காரணங்களாலும், இடுகுறியானும்-இடுகுறியாலும், நூற்கு - நூலுக்கு, பெயர் - பெயரானது, எய்தும் - வரும், எ-று.

முதனூலாற் பெயர்பெற்றவை பாரதம் முதலியன ; கருத்தனாற் பெயர்பெற்றவை தொல்காப்பியம் முதலியன ; அளவினாற் பெயர்பெற்றவை நாலடி நானூறு முதலியன ; மிகுதியாற் பெயர் பெற்றவை களவியல் முதலியன ; பொருளாற் பெயர்பெற்றவை அகப்

பொருள் முதலியன; செய்வித்தோனாற் பெயர்பெற்றவை சாதவாகனம் முதலியன; தன்மையாற் பெயர்பெற்றவை நன்னூல் முதலியன; இடுகுறியாற் பெயர்பெற்றவை கலைக்கோட்டுத் தண்டு முதலியன.

[நூல்யாப்பினுக்குச் சிறப்புவிதி.]

50. தொகுத்தல் விரித்த றொகைவிரி மொழிபெயர்ப்
பெனத்தகு நூல்யாப் பீரிரண் டென்ப.

(இ-ள்.) தொகுத்தல் - (விரிந்து கிடக்கின்றவைகளைத் தொகுத்துச் சொல்லுதலும், விரித்தல் - சுருங்கிக் கிடக்கின்றவைகளை) விரித்துச் சொல்லுதலும், தொகைவிரி - தொகுத்தும் விரித்துஞ் சொல்லுதலும், மொழிபெயர்ப்பு - (ஒருபாஷையி லிருக்கின்ற பொருளை) மற்றொன்றன்கண் திருப்பிச் சொல்லுதலும், எனத்தகும் - என்று சொல்லத்தகும், ஈரிரண்டு - நான்குபிரிவை யுடைத்தாகும், நூல்யாப்பு - நூல்யாப்பானது, என்ப - என்றுசொல்லுவர் புலவர், எ-று.

[உதாரணம்.]

தொகுத்தலும் மொழிபெயர்த்தலும் கம்பராமாயணம் முதலியன.
விரித்தல்-சிவஞான சித்தியார் முதலியன.
தொகைவிரி-நன்னூல் முதலியன.

'மலர்தலை' என்னுஞ் சூத்திரத்துள்ளே "தொகை வகை விரி" யாப்பென்று சொல்லியது, இந்நான்கு பிரிவினுள் இல்லையே யென்றால், நடுநின்ற வகை பின்னின்ற விரியைக் குறிக்கும்போது தொகையாகவும், முன்னின்றதொகையைக் குறிக்கும்போது விரியாகவும் நிற்கையால் "தொகை வகைவிரி" என்றது தொகைவிரி யென்பதனுள் அடங்குமெனக்கொள்க. (சு)

[சிறப்புப்பாயிரஞ் செய்தற்குரியவர்.]

51. தன்னா சிரியன் றன்னொடு கற்றோன்
தன்மா ணாக்கன் றகுமுரை காரனென்
றின்னோர் பாயிர மியம்புதல் கடனே.

(இ - ள்.) தன் ஆசிரியன் - தன்னுடைய ஆசிரியனும், தன்னொடு கற்றோன் - தன்னோடு பாடங்கேட்டவனும், தன் மாணாக்கன் - தன்னுடைய மாணாக்கனும், தகும் உரைகாரன் - தன்னூலுக்குத் தகும் உரையைச் செய்தவனும், என்ற - என்று சொல்லப்பட்ட, இன்னோர் - இந்நால்வருள் ஒருவர், பாயிரம் - சிறப்புப்பாயிரத்தை, இயம்புதல்-சொல்லுதல், கடன் - முறையாகும், எ - று. ()

[சிறப்புப்பாயிரம் பிறர் செய்தற்குக் காரணம்.]

52. தோன்றாத் தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்றற் புகழ்த றகுதி யன்றே.

(இ-ள்.) தோன்றா - தோன்றாத நுட்பங்களையெல்லாம், தோற்றி - காட்டி, துறை பல - பலதுறைப்பட்டு (விரிந்தநூலை), முடிப்பினும் - செய்து முடித்தாலும், தான்-தானே, தற்புகழ்தல்-தன்னைப்புகழ்ந்து கொள்ளுதல், தகுதி அன்று - தகுதியன்றாம், எ - று. (சு)

[தற்புகழ்ச்சி குற்றமாகா இடங்கள்.]

53. மன்னுடை மன்றத் தோலைத் தூக்கினும்
தன்னுடை யாற்ற லுணரா ரிடையினும்
மன்னிய வவையிடை வெல்லுறு பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலுந் தகும்புல வோற்கே.

(இ-ள்.) மன்னுடைய மன்றத்து - அரசனது சபைக்கு, ஓலை தூக்கினும் - (எழுதும்) சீட்டுக் கவியிலும், தன்னுடைய ஆற்றல் உணரார் இடையினும் - தனது (கல்வி) வலிமையை அறியாதாரிடத்திலும், மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும் - பெரிய சபையில் (வாதஞ்செய்து) வெல்லும் பொழுதும், தன்னை மறுதலை பழித்தகாலையும் - தன்னை எதிரி பழித்த காலத்திலும், தன்னைப்புகழ்தலும் - தன்னைத்தான் புகழ்ந்து கொள்ளலும், புலவோற்கு - புலவனுக்கு, தகும் - தகுதியாம், எ-று.

புகழ்தலும் தகும் என்ற இழிவு சிறப்பும்மையால் இவ்விடங்களிலும் தன்னைப் புகழ்தலாகா தென்பது கருத்து. (எ)

[பாயிரம் நூலுக்கு இன்றியமையாதது.]

54 ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே.

(இ-ள்.) ஆயிரம் முகத்தான்-ஆயிர முறுப்புக்களால், அகன்றதாயினும் - விரிந்ததாயினும், பாயிரம் இல்லது - பாயிரமில்லாதது, பனுவல் அன்று - நூலன்றாகும், எ - று. (அ)

[பாயிரம் நூலுக்கு இனறியமையாதது என்பதற்குக் காரணம்.]

55. மாடக்குச் சித்திரமு மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோ ணல்லார்க் கணியும்போல்—நாடிமுன்
ஐதுரையா நின்ற வணிந்துரையை யெந்நூற்கும்
பெய்துரையா வைத்தார் பெரிது.

(இ-ள்.) மாடக்கு - மாளிகைக்கு, சித்திரமும் - சித்திரமும், மாநகர்க்கு-பெரிய பட்டணத்திற்கு, கோபுரமும்-கோபுரமும், ஆடு-நாட்டியஞ்செய்கின்ற, அமைதோள் நல்லார்க்கு - மூங்கில்போன்ற தோள்களையுடைய மங்கையருக்கு, அணியும் - ஆபரணமும், போல - போல, நாடி - நினைத்து,ஐது - அழகிய பொருளை, உரையாநின்ற - சொல்லுகின்ற அணிந்துரையை - இருவகைப்பாயிரங்களையும், உரையா - உரைத்து, எந்நூற்கும் - எவ்வகைப்பட்ட பெரியநூலுக்கும், முன் - முன்னே, பெரிது பெய்து - மிகவும் சேர்த்து, வைத்தார் - (ஆசிரியர்) வைத்தார், எ-று.

மாடத்துக்கு என்பது மாடக்கு என அத்துச்சாரியை குறைந்து நின்றது. (கூ)

சிறப்புப்பாயிரத் திலக்கணம் முற்றுப்பெற்றது.

எழுத்ததிகாரம்.

எழுத்தின் (அகத்திலக்கணம் புறத்திலக்கணம் என்னும் இரண்டையும் உணர்த்திய) அதிகாரம் எனவிரியும். இந்த அதிகாரமானது எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபுபுணரியல் என்னும் ஐந்து அங்கங்களோடுகூடி நின்றது. அதிகாரம் என்றது இங்கே பெரும்பிரிவு.

எழுத்தியல்.

எழுத்தின் (அகத்திலக்கணத்தை யுணர்த்திய) இயல் என விரியும். இயல் என்றது இங்கே சிறுபிரிவு.

[கடவுள் வணக்கமும் அதிகாரமும்.]

56 பூமலி யசோகின் புனைநிழ லமர்ந்த
நான்முகற் றொழுதுநன் கியம்புவ னெழுத்தே.

(இ-ள்.) பூமலி - மலர்கள் நிறைந்த, அசோகின் - அசோகமரத்தினது, புனை-அலங்கரிக்கும், நிழல்-நிழலின்கண், அமர்ந்த-எழுந்தருளியிருந்த, நான்முகன் தொழுது - நான்கு திருமுகங்களையுடைய கடவுளை வணங்கி, நன்கு எழுத்து இயம்புவன்-நன்றாக எழுத்திலக்கணத்தைச் சொல்லுவன், எ-று.

எழுத்திலக்கணத்தை எழுத்து என்றது ஆகுபெயர். எல்லாம் வல்ல கடவுளை வணங்கலால் இனிது முடியுமென்பது கருதி நன்கியம்புவனென்று புகுந்தமையின் இது நுதலிப் புகுதலென்னு முத்தி.

[எழுத்திலக்கணத்தின் பகுதி.]

57. எண்பெயர் முறைபிறப் புருவ மாத்திரை
முதலீ றிடைநிலை போலி யென்றா
பதம்புணர் பெனப்பன் னிருபாற் றதுவே.

(இ-ள்.) எண் - (எழுத்தின்) எண்ணும், பெயர் - பெயரும், முறை-முறையும், பிறப்பு - பிறப்பும், உருவம் - வடிவமும், மாத்திரை-அளவும், முதல் (நிலை) - முதனிலையும், ஈறு (நிலை) - கடைநிலையும், இடைநிலை - இடைநிலையும், போலி - போலியும், பதம்-பதமும், புணர்பு - புணர்ச்சியும், என ஆ என்று, பன்னிருபாற்று - பன்னிரு பகுதியினை யுடையதாகும், அது-அவ்வெழுத் திலக்கணம், எ-று.

இச்சூத்திரம் தொகுத்துச் சுட்டலென்னும் உத்தி. மேல் வருவனவெல்லாம் வகுத்துக்காட்டல்.

எண்முதலிய பத்தும் எழுத்தின் அகத்திலக்கணம் என்பதும், பதம் புணர்பு என்னும் இரண்டும் புறத்திலக்கணம் என்பதும தோன்ற "என்று" என்னும் எண்ணிடைச்சொற் கொடுத்துப் பிரித்தோதினார். எழுத்தின் அகத்திலக்கணம் பத்தையும் எழுத்தியல் எனவும், புறத்திலக்கணம் இரண்டனுள் அவ்வெழுத்தால் ஆம் பதத்தைப் பதவியல் எனவும், அப்பதம் புணரும் புணர்ப்பை உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் எனவும் வைத்தமையால் இது ஒத்து முறைவைப்பு என்னு முத்தி. (௨)

க - எண்.

[எழுத்தும் அதன்வகையும்.]

58. மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே.

(இ-ள்.) மொழி முதல் காரணம் ஆம் - சொல்லுக்கு ஆதிகாரணமாகி வருகின்ற, அணுதிரள் ஒலி - அணுக்கூட்டத்தின் (காரியமாகிய) ஒலியானது, எழுத்து - எழுத்தாம், அது - அவ்வெழுத்து, முதல் சார்பு என - முதலெழுத்தென்றும் சார்பெழுத்தென்றும், இரு வகைத்து - இரண்டு வகையினை யுடையதாகும், எ-று.

முதற்காரணமாவது காரியத்திற்கு முன்னுள்ளதாய், அக்காரியத்தோடு ஒற்றுமையுடையது. அணுத்திரள்-ஒலிநுட்பம், மொழிமுதற் காரணமா மொலி யெழுத்தென்றால் ஙா ஙீ முதலியவை எழுத்தாகா வென்றும், அணுத்திரளொலி எழுத்தென்றால் தும்மல் இருமல் முதலியவை எழுத்தாமென்றுங் கொள்ளவேண்டுதலால், 'மொழிமுதற் காரணமா மணுத்திரளொலி யெழுத்து' என்றார். மொழிக்கு முதற் காரணம் எழுத்தானாற்போல, எழுத்துக்கு முதற்காரணம் அணுத்திரள் என்றறிக.

59. உயிரு முடம்புமா முப்பது முதலே.

(இ - ள்.) உயிரும் உடம்பும் - உயிரெழுத்துப் பன்னிரண்டும் மெய்யெழுத்துப் பதினெட்டும், ஆம் முப்பதும் - ஆகிய முப்பதெழுத்துகளும், முதல் - முதலெழுத்தாகும், எ-று.

உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் உயிர் மெய் முதலிய சார்பெழுத்துக்களுக்குக் காரணமாதலால் முதலெழுத்தெனப்பட்டது. (௩)

[சார்பெழுத்தின் வகை.]

60. உயிர்மெய் யாய்த முயிரள பொற்றள
பஃகிய இஉ ஐஔ மஃகான்
தனிநிலை பத்துஞ் சார்பெழுத் தாகும்.

(இ - ள்.) உயிர்மெய்-உயிர்மெய்யும், ஆய்தம் - ஆய்தமும், உயிரளபு - உயிரளபெடையும், ஒற்றளபு - ஒற்றளபெடையும், (அஃகிய) இ - குற்றியலிகரமும், (அஃகிய) உ - குற்றியலுகரமும், (அஃகிய) ஐ - ஐகாரக்குறுக்கமும், (அஃகிய) ஔ - ஔகாரக் குறுக்கமும், (அஃகிய) மஃகான் - மகரக்குறுக்கமும், (அஃகிய) தனிநிலை - ஆய்தக்குறுக்கமும், பத்தும் - ஆகியபத்தும், சார்பெழுத்து ஆகும் - சார்பெழுத்து ஆகும், எ-று. அஃகுதல் - சுருங்குதல்.

ஆய்தம்-உயிரோடும் மெய்யோடும் கூடாது தனிநிற்றலால் தனிநிலையெனப்பட்டது. உயிர்மெய் முதலிய பத்தும் முதலெழுத்தைச் சார்ந்து வருதலால் சார்பெழுத்தெனப்பட்டது. ([illegible])

[சார்பெழுத்தின் விரி.]

61. உயிர்மெய் யிரட்டு நூற் றெட்டுய ராய்தம்
எட்டுயி ரளபெழு மூன்றொற் றளபெடை
ஆறே ழஃகு மிமுப் பானேழ்
உகர மாறா றைகான் மூன்றே
ஔகா னொன்றே மஃகான் மூன்றே
ஆய்த மிரண்டொடு சார்பெழுத் துறுவிரி
ஒன்றொழி முந்நூற் றெழுபா னென்ப.

(இ - ள்.) உயிர்மெய் இரட்டு நூற்றெட்டு - உயிர்மெய் இருநூற்றுப் பதினாறு, உயர் ஆய்தம் எட்டு - முற்றாய்தம் எட்டு; உயிரளபு எழுமூன்று - உயிரளபெடை இருபத்தொன்று; ஒற்றளபெடை ஆறேழ் - ஒற்றளபெடை நாற்பத்திரண்டு; (அஃகும்) இ முப்பானேழ் - குற்றியலிகரம் முப்பத்தேழு, (அஃகும்) உகரம் ஆறாறு - குற்றியலுகரம் முப்பத்தாறு, (அஃகும்) ஐகான் மூன்று - ஐகாரக்குறுக்கம் மூன்று, அஃகும் ஔகான் ஒன்று - ஔகாரக்குறுக்கம் ஒன்று, (அஃகும்) மஃகான் மூன்று - மகரக்குறுக்கம் மூன்று, (அஃகும்) ஆய்தம் இரண்டொடு - ஆய்தக்குறுக்கம் இரண்டுடனே, சார்பெழுத்து உறு விரி - சார்பெழுத்தினது மிகுந்தவிரி, ஒன்றொழி முந்நூற்றெழுபான் - முந்நூற்றறுபத் தொன்பது, என்ப - என்றுசொல்லுவர் (புலவர்) எ-று.

இவை இத்தனையாதல் அவ்வவற்றின் பிறப்பிலக்கணத்திற் காண்க. (ரு)

உ - பெயர்.

[பெயரின் பொதுவிலக்கணம்]

62. இடுகுறி காரணப் பெயர்பொதுச் சிறப்பின.

(இ - ள்.) இடுகுறிகாரணப்பெயர் - இடுகுறிப்பெயருங் காரணப் பெயருமாகிய இரண்டும், பொதுச்சிறப்பின - பலபொருளுக்குப் பொதுப்பெயராகியும் ஒருபொருளுக்கே சிறப்புப் பெயராகியும் வருவனவாம். எ - று.

இடுகுறிப்பெயராவது ஒருகாரணமும் பற்றாது வழங்கிவரும் பெயர்.

காரணப் பெயராவது யாதேனும் ஒரு காரணம்பற்றி வழங்கி வரும் பெயர்.

(உதாரணம்.) மரம்—இடுகுறிப் பொதுப்பெயர்.
பனை—இடுகுறிச் சிறப்புப்பெயர்.
அணி—காரணப் பொதுப்பெயர்.
முடி—காரணச் சிறப்புப்பெயர்.

இனி இது விட்டிசைப்பொருளாகவும், இக்கட்டுமுறையும் இடைவிட்டிசைத்தல் முதல் பெயர் வேறு இது தொட்டறமொழிதலென்னு முத்தியால் இச்சூத்திரத்திற்கு வேறொருபொருளும் உரைக்கப்படும். அதாவது—இடுகுறி காரணப் பெயர் - இடுகுறியென்றுங் காரணமென்றுஞ் சொல்லப்படு மிலக்கணங்களையுடைய பெயர்கள், பொது - இடுகுறி காரணமென்னு மிரண்டற்கும் பொதுவாகியும், சிறப்பின - இடுகுறிக்கே சிறப்பாகியுங் காரணத்திற்கே சிறப்பாகியும் வருவனவாம்.

காரண விடுகுறிப்பெயராவது காரணம் கருதியபொழுது அக் காரணங்களையுடைய பல்பொருள்களுக்குஞ் செல்வதாயும், காரணம் கருதாதபொழுது இடுகுறியளவேயாய் நின்று ஒவ்வொரு பொருளுக்கே செல்வதாயும் வரும்பெயராம்.

(உ - ம்.) பொன்—இடுகுறிப்பெயர்.
பொன்னன்—காரணப்பெயர்.
முக்கணன், அந்தணன், முள்ளி—காரணவிடுகுறிப்பெயர்.

முக்கணனென்பது காரணங் கருதியவழி மூன்று கண்ணை யுடைய விநாயகமூர்த்தி முதலாகிய பலர்க்குஞ் செல்லுதலாலும், காரணங் கருதாதவழி இடுகுறி யளவேயாய்ப் பரமசிவனுக்குச் செல்லுதலாலுங் காரண விடுகுறிப் பெயராயிற்று. அந்தணனென்பதும், அப்படியே அழகிய தண்மையையுடைய பலர்க்கும் பார்ப்பாருக்குஞ் செல்லுதலால் காரண விடுகுறிப் பெயராயிற்று.

வடநூலார் இடுகுறியை ரூடி என்றும், காரணத்தை யோக மென்றும், காரண விடுகுறியை யோகரூடி மென்றும் வழங்குவர்.

63. அம்முத லீரா றாவி கம்முதல்
மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்.

(இ - ள்) அம்முதல் ஈராறு - அகரமுதலாகிய பன்னிரண்டனையும், ஆவி (என) - உயிரெழுத்தென்றும், கம்முதல் மூவாறு-ககர முதலாகிய பதினெட்டனையும், மெய் என - மெய்யெழுத்தென்றும், விளம்பினர் புலவர் - அறிவுடையோர் சொன்னார். எ - று.

(உ - ம்.) உயிர் - அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ.
மெய் - க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்.

உயிரும் உடலும்போல இருக்கையால், இவ்விருவகை யெழுத்திற்கும் ஆவி மெய்யென உவமையாகு பெயராய்க் காரணப்பொதுப் பெயராயின. பிறவெழுத்துகளும் இவ்வாறே வருதல் காண்க. (அ)

[குறில்.]

64. அவற்றுள்.
அ இ உ எ ஒக்குறி லைந்தே.

(இ - ள்.) அவற்றுள் - (ஆவியு மெய்யுமென்ற) அவற்றுள், அ இ உ எ ஒ - அ இ உ எ ஒ என்கிற, ஐந்து - ஐந்தும், குறில் - குற்றெழுத்தாம். எ - று. (௯)

[நெடில்.]

65. ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில்.

(இ - ள்.) ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ - ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்கிற ஏழும், நெடில் - நெட்டெழுத்தாம். எ - று. (௧0)

[சுட்டு.]

66. அ இ உம்முதற் றனிவரிற் சுட்டே.

(இ - ள்.) அ இ உ - அ இ உ என்கிற மூன்றும், முதல்-சொல்லுக்கு முதலில், தனிவரின் - தனித்து (சுட்டுப்பொருளைக் காட்ட) வந்தால், சுட்டு - சுட்டெழுத்தாம். எ - று:

முதலெனப் பொதுப்படச் சொன்னதனால் புறத்தும் அகத்தும் வருமெனக்கொள்க.

(உ - ம்.)

அக் கொற்றன்	புறத்து வந்தன	அவன்	அகத்து வந்தன.
இக் கொற்றன்		இவன்	
உக் கொற்றன்		உவன்	

அகரம் தூரத்திலிருக்கிற பொருளையும், இகரம் சமீபத்தி லிருக்கிற பொருளையும், உகரம் எதிர்முகமின்றிப் பின் நிற்கும் பொருளையுஞ் சுட்டுதற்கு வரும். (சக)

[வினா.]

67 எயா முதலும் ஆ ஓ வீற்றும்
ஏயிரு வழியும் வினாவா கும்மே.

(இ - ள்.) எ யா முதலும் - எகரமும் யாவும் சொல்லுக்கு முதலிலும், ஆ ஓ ஈற்றும் - ஆகாரமும் ஓகாரமும் சொல்லுக்கு ஈற்றினும், ஏ இருவழியும் - ஏகாரம் அவ்விரண்டிடத்திலும், (தனிவரின்) வினாவாகும் - தனித்து வினாப்பொருளைக் காட்டவர்தால் வினாவெழுத்தாகும். எ - று.

முன் சூத்திரத்தில் தனிவரினென்றது இதற்குங் கூட்டப்பட்டது. ஒன்றினமுடித்த றன்னின முடித்தலென்னு முத்தியால் உயிர்மெய்யாகிய யா வினாவு முடன் கூறப்பட்டது. இவை புறத்தும் அகத்தும் வருதல் ஏற்றபடி கொள்க.

(உ - ம்.)	எக்கொற்றன் யாங்ஙனம் எவன் யாவன்	எ, யா, முதலிலே புறத்தும் அகத்தும் வந்தன.
	கொற்றனா கொற்றனோ	ஆ, ஓ, ஈற்றிலே புறத்து வந்தன.
	ஏவன் கொற்றனே	ஏ முதலில் அகத்தும் ஈற்றில் புறத்தும் வந்தது. (சஉ)

[வல்லினம்.]

68. வல்லினங் கசட தபறவென வாறே.

(இ - ள்.) க ச ட த ப ற என ஆறு - க ச ட த ப ற என்கிற ஆறும், வல்லினம் - வல்லினமாம். எ - று.

இவை வன்கணமெனவும் பெயர்பெறும். (சங)

[மெல்லினம்.]

69. மெல்லினம் ஙஞண நமனவெனவாறே.

(இ - ள்.) ங ஞ ண ந ம ன என ஆறு - ங ஞ ண ந ம ன என்கிற ஆறும், மெல்லினம் - மெல்லினமாம். எ - று.

இவை மென்கணமெனவும் பெயர்பெறும். (சச)

[இடையினம்.]

70. இடையினம் யரல வழளவெனவாறே.

(இ-ள்.) யரலவழள என ஆறும் - யரலவழள என்கிற ஆறும், இடையினம் - இடையினமாம். எ - று.

இவை இடைக்கணமெனவும் பெயர் பெறும். (௬௫)

[இனவெழுத்து.]

71. ஐ ஔ இ உச் செறிய முதலெழுத்
திவ்விரண் டோரின மாய்வரன் முறையே.

(இ-ள்.) ஐ ஔ - (இனமில்லாத) ஐகார ஔகாரங்கள், இ உ செறிய - (ஏகார ஊகாரங்களுக்கு இனமாகிய) இகர உகாரங்கள் (தமக்கு இனமாகப்) பொருந்த, முதலெழுத்து - முதலெழுத்துக்களானவை, இவ்விரண்டு - இரண்டிரண்டு, ஓர் இனம் ஆய் வரல் - ஓரினமாகி வருதல், முறை - முறையாதலால் (அவை இனவெழுத்தெனப் பெயர்பெறும்). எ - று.

சுருங்கச் சொல்லல் என்னும் அழகுபற்றி முதலெழுத்தெனக் கூறினாரேனும், ஏற்புழிக் கோடல் என்னும் உத்தியால், இவ்விரண்டோரினமாய் வருதல் இடையின மொழிந்த மற்றவைகளுக்கே கொள்க.

(உ-ம்.) அ-ஆ, இ-ஈ, உ-ஊ, எ-ஏ, ஐ-இ, ஒ-ஓ, ஔ-உ எனவும், க-ங, ச-ஞ, ட-ண, த-ந, ப-ம, ற-ன எனவும் இரண்டிரண்டு ஓரினமாய் வந்தமை காண்க. (௬௬)

[இனமென்பதற்குக் காரணம்.]

72 தான முயற்சி யளவு பொருள்வடி
வானவொன் றாதியோர் புடையொப் பினமே.

(இ - ள்.) தானம் - பிறப்பிடமும், முயற்சி - தொழிலும், அளவு - மாத்திரையும், பொருள் - பொருளும், வடிவு - உருவமும், ஆன - ஆகிய இவற்றுள், ஒன்று ஆதி - ஒன்று முதலாக, ஓர்புடை ஒப்பு - ஒருபுடையொத்தலால், இனம் - இனமாம். எ - று.

வடிவு - ஒலிவடிவு வரிவடிவு இரண்டுமெனக்கொள்க. ஆய்தம் தனிநிலையாதலாலும் மற்றைச் சார்பெழுத்துக்களுக்கு அவ்வவற்றின் முதலெழுத்துக்களின் பெயர்களே பெயர்களாயடங்கலாலும், சார்பெழுத்துக்குப் பெயர் சொல்லாது விட்டார். இச்சூத்திரம் ஏதுவின் முடித்தலென்னு முத்தி. (௬௭)

MAHAMAHOPADHYAYA
U.V.S. IYER LIBRARY

௩ - முறை.

73. சிறப்பினு மினத்தினுஞ் செறிந்தீண் டம்முதல்
நடத்த றானே முறையா கும்மே.

(இ - ள்.) சிறப்பினும் இனத்தினும் - சிறப்பினாலும் இனத்தினாலும், செறிந்து - (ஒன்றின்பின் ஒன்று) பொருந்தி, ஈண்டு - இவ்வுலகத்திலே, அம்முதல் நடத்தல்தானே - அகரமுதலாக வழங்குதலே, முறையாகும் - (எழுத்துகளது) முறையாம். எ - று.

குறிலினது விகாரமே நெடிலாதலால் குறில் முன்னிற்றல் பற்றிச் சிறப்பினுமென்றார். அம்முறையை நெடுங்கணக்கில் காண்க.

௪ - பிறப்பின் பொதுவிதி.

74. நிறையுயிர் முயற்சியி னுள்வளி துரப்ப
எழுமணுத் திரளுரங் கண்ட முச்சி
மூக்குற் றிதழ்நாப் பல்லணத் தொழிலின்
வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே.

(இ-ள்.) நிறை உயிர் - (ஒலியெழுத்திற்கு வேண்டுங் காரணங்களிற் குறைவின்றி) நிறைந்த உயிரினது, முயற்சியின்-முயற்சியால், உள் வளி துரப்ப - உள்ளேநின்ற காற்றானது எழுப்ப, எழும் அணுத்திரள் - எழுகின்ற (செவிப்புலனாம்) அணுக்கூட்டம், உரம் கண்டம் உச்சி மூக்கு - மார்பும் கழுத்தும் தலையும் நாசியும், (ஆகிய நான்கிடத்தையும்,) உற்று - பொருந்தி, இதழ் நா பல் அணம்-உதடும் நாக்கும் பல்லும் மேல்வாயும் (ஆகிய நான்கனுடைய), தொழிலின் - முயற்சிகளால், வெவ்வேறு எழுத்து ஒலி ஆய் - வெவ்வேறு எழுத்தாகிய ஓசைகளாய், வரல்-தோன்றுதல், பிறப்பு - (அவற்றின்)-பிறப்பாம்.

[முதலெழுத்துக்களுக்குப் பிறப்பிடம்.]

75. அவ்வழி,
ஆவி யிடைமை யிடமிட றாகும்
மேவு மென்மைமூக் குரம்பெறும் வன்மை.

(இ-ள்.) அவ்வழி - முன்சொன்ன வழியாற் பிறக்குமிடத்து, ஆவி இடைமை இடம்-உயிரெழுத்துக்களுக்கும் இடையினத்திற்கும் இடம், மிடறு ஆகும் - கழுத்தாகும்; மென்மை - மெல்லினம், மூக்குமேவும் - நாசியை இடமாகப் பொருந்தும்; வன்மை உரம் பெறும் [illegible] இடமாகப் பெறும், எ - று. (௨௭)

[illegible]

[முதலெழுத்து பிறத்தற்கு முயற்சி.]

76. அவற்றுள்,

முயற்சியுள் அ ஆ அங்காப் புடைய.

(இ-ள்.) அவற்றுள்-(மேலிடம்வகுத்த) முதலெழுத்துகளுள் அ ஆ அங்காப்பு உடைய - அ ஆ இரண்டும் (அண்ணத்தின் தொழி லாகிய) அங்காத்தலை யுடையனவாய்ப் பிறக்கும், எ-று.

அங்காத்தல் - வாய்திறத்தல். (உக)

77. இ ஈ எ ஏ ஐ அங் காப்போ

டண்பன் முதனா விளிம்புற வருமே.

(இ-ள்.) இ ஈ எ ஏ ஐ - இ ஈ எ ஏ ஐ ஐந்தும், அங்காப்போடு, அங்காப்புடனே, அண் பல் - முன்னம்பல்லை, நாமுதல் விளிம்பு நாக்கடியினது ஓரமானது, உற-பொருந்த, வரும் - பிறக்கும், எ-று.

78. உ ஊ ஒ ஓ ஔவிதழ் குவிவே.

(இ-ள்.) உ ஊ ஒ ஓ ஔ - உ ஊ ஒ ஓ ஔ ஐந்தும் (பிறத்தற் கேதுவாகிய முயற்சி), இதழ் குவிவு - உதடுகளின் குவிதலாம். (உ௩)

79. கஙவுஞ் சஞவும் டணவு முதலிடை

நுனிநா வண்ண முற முறை வருமே.

(இ-ள்.) கஙவும்-கவ்வும் ஙவ்வும், (நா) முதல்-நாக்கினடி, (அண் ண முதல்) - மேல்வாயடியையும், சஞவும் - சவ்வும் ஞவ்வும், (நா) இடை-நாக்கின் நடு, (அண்ண இடை) மேல்வாய் நடுவையும், டண வும் - டவ்வும் ணவ்வும், நா நுனி - நாக்கின் கடை, அண்ண (நுனி) மேல்வாய்க் கடையையும், உற - பொருந்த, முறை - இம்முறையே, வரும் - பிறக்கும், எ-று. (உ௪)

80. அண்பல் லடிநா முடியுறத் தநவரும்.

(இ - ள்.) அண்பல் அடி - மேல்வாய்ப் பல்லினது அடியை, நா முடி உற - நாக்குநுனி பொருந்த, த ந - தவ்வும் நவ்வும், வரும் - பிறக்கும், எ - று. (உ௫)

81. மீகீ ழிதழுறப் பம்மப் பிறக்கும்.

(இ-ள்.) மீ கீழ் இதழ் உற - மேலுதடும் கீழுதடும் பொருந்த, ப ம - பவ்வும் மவ்வும், பிறக்கும் - பிறக்கும், எ - று. (உ௬)

82. அடிநா வடியணை முறயத் தோன்றும்.

(இ-ள்.) நா அடி - நாக்கினடியானது, அண்ணம் அடி உற மேல்வாயடியைப் பொருந்த, ய-யகரமானது, தோன்றும்- பிறக்கும்

83. அண்ண நுனிநா வருட ரழவரும்.

(இ-ள்.) அண்ணம் (நுனி) - மேல்வாய்க் கடையை, நா நுனி வருட - நாக்கு நுனியானது தடவ, ர ழ - ரவ்வும் ழவ் வும், வரும் பிறக்கும், எ - று.

84. அண்பன் முதலு மண்ணமு முறையின்
நாவிளிம்பு வீங்கி யொற்றவும வருடவும்
லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும்.

(இ - ள்.) அண்பல் முதல் - அண்பல்லடியை, நாவிளிம்பு - நாவோரமானது, வீங்கி - தடித்து, ஒற்ற-நெருங்க, லகாரம் (ஆய், லகரமாகியும், அண்ணம் - மேல்வாயை, (நாவிளிம்பு) வருட நா வோரமானது தடவ, ளகரமாய் - ளகரமாகியும், இரண்டும் - இரண் டெழுத்துக்களும், முறையின் - இம்முறையே, பிறக்கும் - பிறக்கும்.

85. மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே.

(இ - ள்.) மேல் பல் - மேற்பல்லானது, இதழ் உற - கீழுதட் டைப் பொருந்த, வ - வகரமானது, மேவிடும் - பிறக்கும், எ - று.

86. அண்ண நுனிநா நனியுறிற் றனவரும்.

(இ - ள்.) அண்ணம்-மேல்வாயை, நா நுனி நனி உறின்-நாக் குநுனி மிகப்பொருந்தின், ற ன-றவ்வும் னவ்வும், வரும் - பிறக்கும்.

[சார்பெழுத்துப்பிறத்தற்கு இடமும்முயற்சியும்.]

87. ஆய்தக் கிடந்தலை யங்கா முயற்சி
சார்பெழுத் தேனவுந் தம்முத லனைய.

(இ - ள்.) ஆய்தக்கு இடம் - ஆய்தம் பிறத்தற்கு இடமானது தலை - தலையாம்; முயற்சி அங்கா - தொழிலானது வாயைத் திறத்தலாம், சார்பெழுத்து ஏனவும் - ஆய்தம் நீங்கலாகிய (மற்றைச் சார்பெழுத்துகளும், தம்முதல் அனைய - தம்முத லெழுத்துக்களோ டொப்பனவாய்ப் பிறக்கும், எ-று.

[பிறப்புக்குப்புறனடை.]

88. எடுத்தல் படுத்த லலித லுழப்பின்
திரிபுந் தத்தமிற் சிறிதுள வாகும்.

(இ-ள்.) (பலவெழுத்திற்கும் பிறப்பு ஒன்றாகச் சொல்லப் பட்டாலும்) எடுத்தல் - உயர்த்திக் கூறுதலும், படுத்தல் - தாழ்த்திக் கூறுதலும், நலிதல் - விருந்திக் கூறுதலும் ஆகிய, உழப்பின் - (எழுத்திற்குரிய) ஒலி முயற்சிவகையால், திரிபும் - (ஒன்றற்கொன்று பிறப்பு) வேறுபாடுகளும், தத்தமில்-அவ்வவற்றின் கண், சிறிது உள ஆகும் - சிறிது சிறிது உள்ளனவாம், எ - று.

[உயிர்மெய்.]

89. புள்ளிவிட் டவ்வொடு முன்னுரு வாகியும்
ஏனை யுயிரோ டுருவு திரிந்தும்
உயிரள வாயதன் வடிவொழித் திருவயின்
பெயரொடு மொற்றுமுன் னாய்வரு முயிர்மெய்.

(இ-ள்.) புள்ளி விட்டு - (மெய்) புள்ளியை விட்டு, அவ்வொடு - அகரத்தோடு கூடியவழி, முன் உரு ஆகியும் - அவ்விட்ட உருவே உருவாகியும், ஏனை உயிரோடு - அது நீங்கலாகிய உயிர்களோடு கூடியவழி, உருவு திரிந்தும் - உருவு வேறுபட்டும், உயிர் அளவு ஆய் - (தன்மாத்திரை தோன்றாது) உயிர்மாத்திரையே மாத்திரையாய், அதன் வடிவு ஒழித்து - (தன்வரி வடிவின் விகாரவடிவேவடிவாய் உயிர்வடிவை யொழித்து, இருவயின் பெயரொடும் - (உயிரும் மெய்யும் ஆகிய) இரண்டிடத்தும் பிறந்த (உயிர்மெய் யென்னும்) பெயருடனே, ஒற்று முன் ஆய் - ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாகி, உயிர் மெய் - உயிர்மெய் யெழுத்து, வரும் - வரும், எ-று.

க்+அ=க, க்+ஆ=கா, க்+இ=கி, க்+ஈ=கீ, க்+உ=கு, க்+ஊ=கூ, க்+எ=கெ, க்+ஏ=கே, க்+ஐ=கை, க்+ஒ=கொ, க்+ஓ=கோ, க்+ஔ=கௌ; இப்படியே மற்றை மெய்களின் மேலும் பன்னிரண்டுயிர்களும் தனித்தனி யேறிவர உயிர்மெய் இருநூற்றுப் பதினாறாதல் காண்க.

[முற்றாய்தம்.]

90. குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே.

(இ-ள்) ஆய்தப் புள்ளி-புள்ளிவடிவினதாகிய ஆய்தம், குறியதன் முன்னர் - குற்றெழுத்தின் முன்னதாய், உயிரொடு புணர்ந்த - உயிரோடு கூடிய, வல் ஆறன் மிசைத்து - வல்லெழுத் தாறனு ளொன்றன்மேலதாய் வரும், எ-று.

(உ-ம்.)

எஃகு, கஃசு, கஃடு, இருபஃது, அஃபு, கஃறு, } வல்லினவகையால் இயல்பாகவரும் ஆய்தம் ஆறு

அவ் + கடிய = அஃகடிய } திரிதல் என்னும் புணர்ச்சிவிகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று.

அ + கான் = அஃகான் } விரித்தல்என்னும் செய்யுள் விகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று.

} ஆக முற்றாய்தம்-௮.

இச்சூத்திரம் மேற்கோளாதலால் 'தானெடுத்து மொழிதல்,' என்னு முத்தி. (௯௰)

[உயிரளபெடை.]

91. இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலைநெடில்
அள பெழு மவற்றவற் றினக்குறில் குறியே.

(இ-ள்.) இசை கெடின்-(பாட்டில்) ஓசை குறையின், மொழி-(அவ்வோசை குறைந்த) சொல்லுக்கு, முதல் இடை கடை - முதலிலாகிலும் நடுவிலாகிலும் இறுதியிலாகிலும், நிலை - நின்ற, நெடில் - நெட்டெழுத்தேழிலொன்று, அளபெழும்-(அவ்வோசையை நிறைக்கத்) தன்மாத்திரையின் மிகுந்தொலிக்கும்; அவற்று-அவற்றின்பின், அவற்று இனக்குறில் - அததற்கு இனமாகிய குற்றெழுத்து, குறி - அளபெடுத்தமையை அறிதற்கு வரிவடிவில் அறிகுறியாய் வரும்.

உயிரளபெடை செய்யுளிசை யளபெடை, இன்னிசை யளபெடை, சொல்லிசை யளபெடை என மூன்று வகைப்படும்.

செய்யுளிசை யளபெடை.

(உ-ம்.) "ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
ஆஅது மென்னு மவர்"
"உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு"
"அனிச்சப்பூக் கால்களையான் பெய்தா ளுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை" எனவரும்.

'ஓதல்'என்பதில் ஓ முதலிலும்,'உறார்'என்பதில் ஆ இடையிலும், 'படா' என்பதில் ஆ இறுதியிலும் அளபெடுத்தன. மற்றைநெட்டெழுத்துகளும் இப்படியே அளபெடுக்கும். 'செறாய்' என்பதில் ஆகாரம் ஈரளபெடுத்து வந்தது.

இன்னிசை யளபெடை.

இன்னிசையளபெடையாவது குற்றெழுத்து நெட்டெழுத்தாக நீண்டு அளபெடுத்து இன்னிசை நிறைத்து வருவதாம்.

(உ-ம்.) கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே

எடுப்பதூஉ மெல்லா மழை.

இதில் கெடுப்பதும், எடுப்பதும் என அளபெடாது நிற்பினும் செய்யுளிலக்கணம் கெடாதாயினும் இன்னிசை நிறைத்தற்பொருட்டுக் குறில் நெடிலாய்,கெடுப்பதூஉம்,எடுப்பதூஉம் என அளபெடுத்த

சொல்லிசையளபெடை.

பெயர்ச்சொல் வினையெச்சத்தன்மை அடைதற் பொருட்டு அளபெடுப்பது.

(உ-ம்.) உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்

வரனசைஇ யின்னுமுளேன்.

இதில் உரனசை, வரனசை என அளபெடாது நிற்பினும் செய்யுளிலக்கணம் கெடாதாயினும், விருப்பம் எனப் பொருள்படும் நசையென்னும் பெயர்ச்சொல் விரும்பி என வினையெச்சப்பொருள்படும் பொருட்டு, வினையெச்சமாதற்கு நசைஇ என அளபெடுத்தமை அறிக. ஔகாரம் சொல்லுக்கு நடுவிலும் கடையிலும் வாராமையால், அவ்வவ்விடங்களில் அது நீங்கலாக நின்று அளபெடுக்கின்ற செய்யுளிசை யளபெடை பத்தொன்பதோடும் இன்னிசையளபெடை சொல்லிசையளபெடை இரண்டும்கூடி உயிரளபெடை இருபத்தொன்றாதல் அறிக.

இனி ஆஉ, மகஉ, குழூஉ, குரீஇ என அளபெடுத்தே நிற்கும் தனிமொழிகளை இயற்கையளபெடையென்றும், இசைநிறைத்தற் பொருட்டுச்செய்யுளில் அளபெடுத்து வரும் மேற்கூறிய அளபெடைகளையெல்லாம் செயற்கையளபெடையென்றும் கூறுவர். (௯௧)

[ஒற்றளபெடை.]

92\. ஙஞண நமன வயலள வாய்தம்
அளபாங் குறிலிணை குறிற்கீ ழிடைகடை
மிகலே யவற்றின் குறியாம் வேறே.

(இ-ள்.) (இசைகெடின்) - பாட்டிலோசைகுறையின், குறிலிணைக் (கீழ்)-குறிலிணையின் கீழாவது, குறில் கீழ் - குறிலின் கீழா

வது, மொழி இடை கடை-மொழிக்கு நடுவிலும் கடையிலும், ங ஞ ண ந ம ன வ ய ல ள ஆய்தம்-ஙம்முதலிய இப்பத்தும் ஆய்தமும் ஆகிய பதினொ ரெழுத்துளொன்று, அளபு மிகல் ஆம் - (அவ்வோசையை நிறைக்கத் தன்மாத்திரையின்) மிகுந் தொலிக்கும்; அவற்றின் வேறு குறி ஆம் - (அப்படி அளபெடுத்தமையை யறிதற்கு) அவற்றின்பின் அவ்வெழுத்துகளே(வரிவடிவில்) அறிகுறியாய் வரும்.

முன் சூத்திரத்தில் 'இசைகெடின்' என்றது இதற்குங் கூட்டப் பட்டது.

(உ-ம்) "இலங்கு வெண்பிறைசூ டீசனடி யார்க்குக்
கலங்கு நெஞ்சமிலை காண்."
"எங் கிறைவனுள னென்பாய் மனனேயா
னெங்ங் கெனத்திரிவா ரின்"
"மடங்ங் கலந்த மனனே களத்து
விடங்ங் கலந்தானை வேண்டு"
"அங்ங் கனிந்த வருளிடத்தார்க் கன்புசெய்து
நங்ங் களங்க றுப்பா நாம்" என வரும்.

'இலங்கு'—குறிலிணைக் கீழிடையிலும், 'எங்கு'—குறிற் கீழிடையிலும், 'மடங்'—குறிலிணைக் கீழ்க்கடையிலும், 'அங்'—குறிற் கீழ்க்கடையிலும் ஙகரம் அளபெடுத்தது.

"விலஃஃகி வீங்கிரு ளோட்டுமே மாதர்
இலஃஃகு முத்தி னினம்."
"எஃஃகி லங்கிய கையரா யின்னுயிர்
வெஃஃகுவார்க் கில்லை வீடு." குறிலிணைக்கீழ் இடையிலும், குறிற்கீழ் இடையிலும் ஆய்த மளபெடுத்தது.

மற்ற மெய்களும் இப்படியே அளபெடுக்கும். ஆய்தம்குறிலிணைக் கீழும் குறிற் கீழும் மொழிக்கிறுதியில் வாராமையால் அதனை அவ்விரண்டிடத்தும் விலக்க, ஒற்றளபெடை நாற்பத்திரண்டாதல் அறிக. ஙகரம் குறிலிணைக்கீழும், குறிற்கீழும் விதியீறாக நின்று அளபெடுக்கும். (௯௨)

[குற்றியலிகரம்.]

93. யகரம் வரக்குற ளுத்திரி யிகரமும்
அசைச்சொன் மியாவி னிகரமுங் குறிய.

(இ-ள்.) யகரம்வர-யகரத்தை முதலிலே யுடைய சொல்வர, குறள் உ திரி இகரமும் - குற்றியலுகரம் திரிந்த இகரமும், அசைச் சொல் - அசைச்சொல்லாகிய, மியாவின் இகரமும் - மியாவென்பதின் (மகரத்தின்மேலிருக்கிற) இகரமும், குறிய - குற்றிய லிகரங்களாம், எ - று.

(உ-ம்.) நாகு + யாது = நாகியாது
எஃகு + யாது = எஃகியாது
வரகு + யாது = வரகியாது
கொக்கு + யாது = கொக்கியாது
குரங்கு + யாது = குரங்கியாது
அல்கு + யாது = அல்கியாது } எனவும்,
கேண்மியா எனவும்,

பொருப்படக்கூறிய குற்றியலுகரம் முப்பத்தாறாலும், அசைச் சொன்மியாவினாலும் குற்றியலிகரம் முப்பத்தேழாய் வருமாறுகாண்க.

[குற்றியலுகரம்.]

94. நெடிலோடாய்த முயிர்வலி மெலியிடை
தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகரம்
அஃகும் பிறமேற் றொடரவும் பெறுமே.

(இ - ள்.) நெடிலோடு - தனிநெடிலெழுத்துடனே, ஆய்தம் - ஆய்த மொன்றும், உயிர் - (சொல்லுக்கு நடுவிலும் கடையிலும் வாராத ஔகாரம் நீங்கிய) உயிர்பதினொன்றும், வலி - வல்லெழுத்தாறும், மெலி - மெல்லெழுத்தாறும், இடை - (வல்லெழுத்துகளோடு தொடாராத வகரம் நீங்கிய) இடையெழுத்தைந்தும் (ஆகிய முப்பத்தாறனு ளொன்றால்), தொடர் - (ஈற்றுக்கயலெழுத்தாகத்) தொடரப்பட்டு, மொழி இறுதி - சொல்லினிறுதியில், வன்மை ஊர் உகரம் - வல்லெழுத்துகள் யாதாயினு மொன்றன்மேல் ஏறிவருகின்ற உகரமானது, அஃகும் - (தன்மாத்திரையிற்) குறுகும், பிற - பிறவெழுத்துகளுள் ஒன்றும் பலவும், மேல் தொடரவும் - (குறுகுதற்கும் மொழி நிறைதற்குங் காரணமாக) மேலே தொடரவும், பெறும் - (தனிநெடிலொழிந்த ஐந்து தொடரும்) பெறும், எ - று.

(உ-ம்.) நாகு, காசு, நீறு—நெடிற்றொடர்;
எஃகு, கஃசு, அஃது—ஆய்தத்தொடர்;
வரகு, பலாசு, கரிது—உயிர்த்தொடர்;
கொக்கு, கச்சு, பற்று—வன்றொடர்;
குரங்கு, மஞ்சு, கன்று—மென்றொடர்;
தெள்கு, சேர்பு, வீழ்து—இடைத்தொடர்.

நெடிலோடு என நெடிலை ஓடு கொடுத்துப் பிரித்தது பிறமேற் றொடர்தல் அந்நெடிற் றொடர்க்கு இல்லை என்பது தோன்றுதற்கு இங்கு உயிர் என்றது குறில் நெடில் இரண்டையும்.

இங்கே ஈற்றயலெழுத்தைக் கொண்டு ஆறுவகையாகச் சொல்லிப் பின்னே புணரியல் முதலான இடங்களிலே எடுத்தாளுதலால் இது 'முன்மொழிந்து கோடல்' என்னு முத்தி.

மொழிந்த பொருளோ டவ்வயின் மொழியாததனையு "முட்டின்று முடித்தல்" என்னு முத்தியால், 'நுந்தை' என்னு முறைப்பெயரின் முன்னின்ற நகரமெய்யி லிருக்கிற உகரமுங் குறுகுமென்று கொள்க.

☞ தனித்தும் தனிக்குறிலைச்சேர்ந்தும் வரும் வல்லின மெய்யின்மேலும், மெல்லின இடையின மெய்களின்மேலும் வரும் உகரம் முற்றியலுகரம் என்னப்படும். (கசு)

[ஐகார ஔகாரக் குறுக்கங்கள்.]

95. தற்சுட் டளபொழி யைம்மூ வழியும்
நையு மௌவு முதலற் றாகும்.

(இ - ள்.) ஐ - ஐகாரம், தற்சுட்டு அளபு - தன்னைக்குறித்துத் தன்பெயர் சொல்லு மளவில் (குறுகாது), ஒழி - ஒழிந்த, மூவழியும் - (சொல்லுக்கு) முதல் இடை கடையிலே எங்கே நின்றாலும், நையும் - (தன்மாத்திரையிற்) குறுகும்; ஔவும் - ஔகாரமும், முதல் - (சொல்லுக்கு) முதலில், அற்று ஆகும் - தன்மாத்திரையிற் குறுகும்.

தற்சுட்டளபு என்றது எழுத்தின் சாரியை தொடர்ந்து ஐகாரம் ஔகாரம் ஐகான் ஔகான் எனவரினும் என்றற்கு.

(உ - ம்.) ஐப்பசி, வலையன், குவளை; மௌவல்.

இடவகையால் ஐகாரக் குறுக்கம் மூன்றும், ஔகாரக் குறுக்கம் ஒன்றும் வருதல் காண்க. (சo)

[மகரக்குறுக்கம்.]

96. ண ன முன்னும் வஃகான் மிசையுமக் குறுகும்.

(இ-ள்.) ண ன முன்னும் - ணகர னகரங்களி லொன்று (நின்று தொடர அதன்) முன்னின்றாலும், வஃகான்மிசையும் - வகரம் வந்து தொடர (அதன்) பின்னின்றாலும், ம குறுகும் - மகரம் (தன் மாத்திரையிற்) குறையும், எ - று.

(உ-ம்.) "வெருளினு மெல்லாம் வெருளு மஃதன்றி
மருளினு மெல்லா மருண்ம்" எ-ம்,
"திசையறி மீகாமனும் போன்ம்" எ-ம்,
"தரும்வளவன்" எ-ம், வரும்.

இவற்றுள் 'மருளும்' மருண்ம், 'போலும்' போன்ம் என்றாகலால் செய்யுமென்னும் வாய்பாட்டு முற்றுச் சொல்லிலே ளகரம் ணகரமாகவும் லகரம் னகரமாகவும் திரிந்து வந்தன என அறிக.

இச்சூத்திரக் கருத்தைப் பின்வருஞ் சில சூத்திரங்களைக் கொண்டு உய்த்துணர வைத்தலால் இது 'உய்த்துணர வைப்பு' என்னுமுத்தி. (௯௬)

[ஆய்தக்குறுக்கம்.]

97 லளவீற் றியைபினு மாய்த மஃகும்.

(இ - ள்.) லள ஈற்று இயைபின் ஆம் - லகார ளகார வீற்றுப் புணர்ச்சியில் வரும், ஆய்தம் - ("குறில்வழி லளத்தவ் வணையினு மாய்த மாகவும் பெறூஉ மல்வழி யானே" என்ற) ஆய்தம், அஃகும் - (தன்மாத்திரையிற்) குறுகும், எ - று.

(உ - ம்.) கல் + தீது = கஃறீது

முள் + தீது = முஃடீது

இது 'முடிவிடங் கூறல்' என்னுமுத்தி.

[உருவம்.]

98. தொல்லை வடிவின வெல்லா வெழுத்துமாண்
டெய்து மெகர மொகரமெய் புள்ளி.

(இ - ள்.) எல்லா எழுத்தும் - எல்லாவெழுத்துகளும், தொல்லை வடிவின - (பல வேறுவகைப்பட எழுதி வழங்கும்) பழையவடிவினை யுடையவாம்; ஆண்டு - அவ்வடிவையுடையவாய் வழங்குமிடத்து, எகரம் ஒகரம் - எகரமும் ஒகரமும், மெய் - மெய்களும், புள்ளி எய்தும் - புள்ளியைப் பெறும், எ - று.

(உ-ம்.) எ ஒ க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்.

[எழுத்தின்மாத்திரை.]

99. மூன்றுயி ரளபிரண் டாநெடி லொன்றே
குறிலோ டையௌக் குறுக்க மொற்றள
பரையொற் றிஉக் குறுக்க மாய்தம்
கால்குறண் மஃகா னாய்த மாத்திரை.

(இ - ள்.) மாத்திரை-ஒலிக்கு மளவு, உயிரளபு மூன்று (ஆம்)- உயிரளபெடைக்கு மூன்றாகும்; நெடில் இரண்டு ஆம் - நெட்டெழுத்திற்கு இரண்டாகும்; குறில் - குற்றெழுத்திற்கும், ஐ (குறுக்கம்)- ஐகாரக் குறுக்கத்திற்கும், ஔ (குறுக்கம்) - ஔகாரக் குறுக்கத்திற்

கும், ஒற்றளபு - ஒற்றளபெடைக்கும், ஒன்று (ஆம்) - (தனித்தனி) ஒன்ருகும்; ஒற்று - மெய்யெழுத்திற்கும், இ (குறுக்கம்) - குற்றிய லிகரத்திற்கும், உ (குறுக்கம்) - குற்றியலுகரத்திற்கும், ஆய்தம் - ஆய்தத்திற்கும், அரை (ஆம்) - (தனித்தனி) அரையாகும்; குறள் மஃகான் - மகரக்குறுக்கத்திற்கும், (குறள்) ஆய்தம் - ஆய்தக்குறுக்கத்திற்கும், கால் (ஆம்) - (தனித்தனி) காலாகும், எ - று.

"செரு அ அய்வாழியநெஞ்சு" என உயிரளபெடை சிறுபான்மை நான்கு மாத்திரையாய் வருதலுமுண்டு. மேல் 'உயிரளவாய்'என்றதனல் இங்கே உயிர்மெய்க்கு மாத்திரை சொல்லவில்லை. இது'உரைத்தாம' என்னுமுத்தி. (சச)

[மாத்திரை இன்னதென்பது]

100. இயல்பெழு மாந்த ரிமைநொடி மாத்திரை.

(இ - ள்.) மாந்தர் - மனிதருடைய, இயல்பு எழும் - இயல்பாக உண்டாகின்ற, இமை நொடி - கண்ணிமைப்பொழுதும் கைந்நொடிப்பொழுதும், மாத்திரை - ஒரு மாத்திரை யென்னும் வரையறைப் பொழுதாம், எ - று.

'பின்னது நிறுத்தல்' என்னு முத்தியால் மாத்திரையினளவைப் பின்னுகச் சொன்னுர். (சரு)

[மாத்திரைக்குப் புறனடை.]

101. ஆவியு மொற்று மளவிறந் திசைத்தலும்
மேவு மிசைவிளி பண்டமாற் ருதியின்.

(இ-ள்.) ஆவியும் ஒற்றும் - (முதலுஞ் சார்புமாகிய) உயிரெழுத்துகளும் மெய்யெழுத்துகளும், அளவு இறந்து - (முன்சொன்ன) அளவைக்கடந்து, இசைத்தலும் - (அதிகமாக) ஒலித்தலையும், மேவும் - பொருந்தும், இசை விளி பண்டமாற்று ஆதியின் - இராகமும் அழைத்தலும் பண்டமாற்றலும்முதலானவைகளிடத்து, எ-று.

'ஆதி' என்றதனல் புலம்பல்முதலானவைகளும் கொள்க. இராகத்தில் அதிகமாக ஒலிக்கும்போது உயிர் பன்னிரண்டு மாத்திரையீருகவும், மெய் பதினொருமாத்திரை யீருகவும் ஒலிக்குமென்பார் இசைநூலார். இது 'பிறநூன் முடிந்தது தானுடன்படுதல்' என்னுமுத்தி. இச்சூத்திரம் தவளைப்பாய்த்து. (சசு)

[மொழிக்கு முதலில்வரும் எழுத்துகள்.]

102. பன்னீ ருயிருங் கசதந பமவய
ஞஙவீ ரைந்துயிர் மெய்யு மொழிமுதல்.

(இ-ள்.) பன்னீருயிரும் - பன்னிரண்டு உயிரெழுத்துகளும், க ச த ந ப ம வ ய ஞ ங - ககரமுதல் ஙகரமீறாகச் சொல்லப்பட்ட, ஈரைந்து உயிர்மெய்யும் - பத்து உயிரேறிய மெய்யெழுத்துக்களும், மொழிமுதல் - சொல்லுக்கு முதலாகும். எ - று.

(உ - ம்.) அடை, ஆடை, இடை, ஈடு, உடை, ஊடல், எடு ஏடு, ஐயம், ஒதி, ஓதி, ஔவியம், எனவும்; களி, சவடி, தளிர், நலம், படை, மலை, வளம், யவனர், ஞமலி, அங்ஙனம் எனவும் வரும்.

உயிர்போலத் தனித்து முதலாக மாட்டாமையால் 'உயிர்மெய் யென்றார்.' இது 'இன்னதல்ல திதுவென மொழிதல்' என்னு முத்தி. (௱௨)

[மொழிக்கு முதலாகும் வகரத்துக்குச் சிறப்புவிதி.]

103. உ ஊ ஒ ஓ வலவொடு வம்முதல்.

(இ-ள்.) உ ஊ ஒ ஓ அலவொடு - உ ஊ ஒ ஓ என்கின்ற நான்குமல்லாத எட்டுயிர்களோடும், வ முதல் - வகரமெய் (சொல்லுக்கு) முதலாகும், எ - று.

(உ-ம்.) வளி, வாளி, விளி, வீறு, வெளி, வேலை, வைகல், வௌவால் எனவரும். (௱௩)

[மொழிக்கு முதலாகும் யகரத்துக்குச் சிறப்புவிதி.]

104. அ ஆ உ ஊ ஓ ஔ யம்முதல்.

(இ-ள்.) அ ஆ உ ஊ ஓ ஔ (ஒடு) - அ ஆ உ ஊ ஓ ஔ என்கிற ஆறுயிரோடும், ய முதல் - யகரமெய் (சொல்லுக்கு) முதலாகும்.

முன் சூத்திரத்தின் 'ஒடு' இங்கே வருவிக்கலாயிற்று.

(உ-ம்.) யவனர், யானை, யுகம், யூகி, யோகி, யௌவனம்.

[மொழிக்கு முதலாகும் ஞகரத்துக்குச் சிறப்புவிதி.]

105. அ ஆ எ ஒவ்வோ டாகு ஞம்முதல்.

(இ-ள்.) அ ஆ எ ஒவ்வோடு - அ ஆ எ ஒ என்கிற நான்குயிரோடும், ஞமுதல்-ஞகரமெய் (சொல்லுக்கு) முதலாகும், எ - று. (௱௪)

(உ-ம்.) ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கிற்று.

மிஞிறு என்பது ஞிமிறு என இலக்கணப்போலியாக வருதலால், ஞகரம் இகரத்தோடும் மொழிக்கு முதலாதலறிக. ஞமலி, நாய், மயில், கள்; ஞாலம்-பூமி; ஞெகிழி-சிலம்பணி, சிலம்பு, தீ; ஞொள்கல்-இளைத்தல்.

[மொழிக்கு முதலாகும் ஙகரத்துக்குச் சிறப்புவிதி.]

106. சுட்டியா வெகர வினாவழி யவ்வை
ஒட்டி ஙவ்வு முதலா குமமே.

(இ-ள்.) சுட்டு - மூன்றுசுட்டும், யா எகர வினா - யாவினாவும் எகரவினாவும் (ஆகிய ஐந்தனுடைய), வழி-பின்னே, அவ்வை ஒட்டி - அகரத்தைச் சேர்ந்து, ஙவ்வும் முதல் ஆகும் - ஙகர மெய்யும் (சொல் லுக்கு) முதலாகும், எ - று.

(உ - ம்) அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ங னம், ஙனம் - இடம், தன்மை.

ஒருவிதத்தினாலே முதலாகையால் 'ஙவ்வும்' என இழிவு சிறப் பும்மை கொடுத்துக் கூறினார். முதலாகா தென்பவர்க்கு உடன்படு தலு மறுத்தலு மாதலால் இது 'பிறர் தம்மதமேற் கொண்டு களைவு' என்னுமதம்.

முதலாமென்ற பத்துயிர் மெய்யுள் வகரமுதலிய நான்கிற்கும் சிறப்புவிதி கூறவே, ஒழிந்த க ச த ந ப ம என்னும் ஆறு மெய் களும் பன்னிரண்டு உயிரோடுங்கூடி மொழிக்கு முதலாமென்பது 'அருத்தாபத்தி' என்னு முத்தியாற் கொள்ளப்படும்.

[மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகளுக்குப் பொதுவிதி]

107. ஆவி ஞணநமன யரலவழளமெய்
சாயு முகர நாலா றீறே.

(இ - ள்.) ஆவி - (தனித்தும் மெய்யோடும் வரும் பன்னிரண்டு) உயிர்களும், ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய்-ஞ-ண நமனமுதலிய பதினொரு மெய்களும், சாயும் உகரம் - குற்றியலுகரமும் (ஆகிய), நாலாறும் - இருபத்துநான் கெழுத்தும், ஈறு-மொழிக்கீறாகும், எ-று.

(உ-ம்.) ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ, எ-ம்; விள, பலா, கரி, தீ, சடு, பூ, சே, தே, தை, நொ, போ, கௌ எ-ம், உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வாள், அஃகு எ - ம், வரும்.

குற்றுகரமும் உயிரீறு யடங்குமாயினும் புணர்ச்சி வேறுபாடு தோன்ற வேறு எடுத்துக் கூறினார். (௫உ)

[ஈறாகும் சில எழுத்துக்களுக்குச் சிறப்புவிதி.]

108. குற்றுயி ரளபி னீறா மெகரம்
மெய்யொடே லாதொந் நவ்வொ டாமௌ
ககர வகரமோ டாகு மென்ப.

(இ-ள்.) குற்றுயிர் - (அ இ உ எ ஒ என்கிற) குற்றுயிர்கள், அளபின் - அளபெடையிலே, ஈறு ஆம் - (வரிவடிவில் அறிகுறியாகத் தனித்து) ஈறாகும்; எகரம்-எகரமானது, மெய்யொடு ஏலாது - மெய்யோடு ஈறாகாது; ஒ - ஒகரமானது, நவ்வொடு ஆம் - நகரமெய் ஒன்றுடன் ஈறாகும்; ஔ-ஔகாரமானது, ககர வகரமோடு ஆகும் - ககர வகரங்களிரண்டு மெய்களுடன் ஈறாகும், என்ப - என்று சொல்லுவர் (புலவர்), எ-று.

(உ-ம்.) பலாஅ, தீஇ, பூஉ, சேஎ, கைஇ, கோஒ, கௌஉ. எ-ம், நொ எ-ம், கௌ, வௌ எ-ம் வரும். (௫௩)

[உயிர் மெய்யெழுத்துக்கு முதலும் ஈறும்.]

109 நின்ற நெறியே யுயிர்மெய் முதலீறே.

(இ-ள்.) நின்ற நெறியே - (மெய்முன்னும் உயிர் பின்னுமாக ஒலித்து) நின்றவழியே, உயிர்மெய் - உயிர்மெய்க்கு, முதல் - (மெய்) முதலாகும், ஈறு - (உயிர்) ஈறாகும், எ-று.

எனவே உயிர், ஒற்று, ஆய்தம் முதலிய ஒன்பது சார்பெழுத்துகளும் ஓரெழுத்தாகையால் அவற்றிற்கு முதலும் ஈறும் அவையேயாமென்பதை அருத்தாபத்தியாற் கூறினார். இது 'எஞ்சிய சொல்லினெய்தக்கூறல்' ; இப்படிச் சொல்லாதவையெல்லாம் "சொல்லின் முடிவி னப் பொருண்முடித்தல்" என்னுமுத்தி. (௫௪)

௯ - இடைநிலைமயக்கம்.

110. கசதப வொழித்தவீ ரேழன் கூட்டம்
மெய்ம்மயக் குடனிலை ரழவொழித் தீரெட்
டாகுமிவ் விருபான் மயக்கு மொழியிடை
மேவு முயிர்மெய் மயக்கள வின்றே.

(இ-ள்.) க ச த ப ஒழித்த - க ச த ப வென்னு நான்கையும் நீக்கிய, ஈரேழன் கூட்டம் - (மற்றைப்) பதினான்கு மெய்களும் (பிற மெய்களோடு கூடுங்) கூட்டம், மெய்ம்மயக்கு (ஆகும்) - (வேற்று நிலை) மெய்ம்மயக்கமாகும்; ர ழ ஒழித்து - ரழ என்னும் இரண்டனையும் நீக்கி, ஈரெட்டு (கூட்டம்) - (மற்றைப்) பதினாறு மெய்களும் (தம்மோடு கூடும்) கூட்டம், உடனிலை (மெய்ம்மயக்கு) ஆகும்-உடனிலை மெய்ம்மயக்க மாகும்; இ இருபால் மயக்கும் - இவ்விருவகை மயக்கமும், மொழி இடைமேவும் - ஒருமொழிக்குந் தொடர்மொழிக்கும் நடுவில் வரும்; உயிர்மெய் மயக்கு - உயிருடன் மெய்யும் மெய்யுடன் உயிரும் மாறி மயங்கு மயக்கத்திற்கு, அளவு இன்று - அளவு இன்று (வேண்டியவாறே மயங்கும் என்றபடி,) எ-று.

உயிரும் மெய்யும் மயங்குதற்கு உதாரணம்-அல், வில். மெய்யும் உயிரும் மயங்குதற்கு உதாரணம் - கா, பூ. மெய்யுடன் மெய்மயங்கு தற்கு உதாரணம் பின் வருஞ் சிறப்புச் சூத்திரங்களுட்காண்க.

இங்கே மொழி என்றது ஒருமொழி தொடர்மொழி இரண்டையும்.

மொழியிடையன்றி ஓரெழுத்தினு மயங்குதலால் உயிரும் மெய்யும் மயங்குதற்கு இடங்கூறு தொழிந்தார். இச்சூத்திரத்தால் மெய்யுடன் மெய் மயங்குங்கால் க ச த ப என்னுநான்குந் தம்மொடுதாமே மயங்கும் எனவும், ர ழ என்னு மிரண்டும் தம்மொடு பிறவே மயங்குமெனவும், ஒழிந்த பன்னிரண்டு மெய்களும் தம்மொடு தாமும் பிறவும் மயங்குமெனவும் பெறப்பட்டன.

'கூட்டம்' என்றாலும் 'மயக்கம்' என்றாலும் 'சையோகம்' என்றாலும் ஒரு பொருள். பின் 'உடனிலை' என்றதனால் முன் 'பிறமெய்' என்பது கொள்ளப்பட்டது. (ருரு)

[வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்குச் சிறப்புவிதி.]

111. ஙம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே.

(இ-ள்.) ஙம்முன் க - ஙகரத்தின்முன் ககரமும், வம்முன் ய - வகரத்தின்முன் யகரமும், ஆம் - மயங்கும், எ-று.

(உ-ம்.) கங்கன்—தெவ்யாது. (ருசு)

112 ஞநமுன் றம்மினம் யகரமொ டாகும்.

(இ-ள்.) ஞ ந முன் - ஞகரநகரங்களின் முன், தம்மினம் - அவற்றிற் கினமாகிய சகர தகரங்களும், யகரம் - யகரமும், ஆகும் - மயங்கும், எ-று.

(உ-ம்.) கஞ்சன், உரிஞ்யாது—கந்தன், பொருந்யாது. (ருஎ)

113. டறமுன் கசப மெய்யுடன் மயங்கும்.

(இ-ள்.) ட ற முன் - டகர றகரங்களின்முன், க ச ப மெய் - க ச ப என்கிற மூன்று மெய்களும், உடன் மயங்கும்-இணங்கி மயங்கும், எ-று.

(உ-ம்.) கட்கம், கட்சி, திட்பம்;—கற்க, கற்சிறார், கற்ப. (ருஅ)

114. ணனமுன் னினங்கச ஞபமய வவ்வரும்.

(இ-ள்.) ண ன முன் - ணகர னகரங்களின் முன், இனம் - (அவற்றிற்கு) இனமாகிய டகர றகரங்களும், க ச ஞ ப ம ய வ - க்கர முதலிய இவ்வேழு மெய்களும், வரும் - மயங்கும், எ-று.

(உ-ம்.) விண்டு, வெண்கலம், வெண்சோறு, வெண்ஞமலி, வெண்பல், வெண்மலர், மண்யாது, மண்வலிது.

புன்றலை, புன்கண், புன்செய், புன்ஞமலி, புன்பயிர், புன்மலர், பொன்யாது, பொன்வலிது.

115. மம்முன் பயவ மயங்கு மென்ப.

(இ-ள்.) மம்முன்-மகரத்தின்முன், ப ய வ - ப ய வ என்னு மூன்று மெய்களும், மயங்கும் என்ப - மயங்குமென்று சொல்லுவர்.

(உ-ம்,) கம்பன், கலம்யாது, கலம்வலிது. (சு0)

116. ய ர ழ முன்னர் மொழிமுதன் மெய்வரும்.

(இ-ள்.) ய ர ழ முன்னர் - ய ர ழ என்னு மூன்று மெய்களின்முன், மொழி முதல் மெய் - மொழிக்கு முதலாக நின்ற பத்து மெய்களும், வரும் - மயங்கும், எ-று.

(உ-ம்.) வேய், வேர், வீழ் } கடிது, சிறிது, தீது, பெரிது, நீண்டது, மாண்டது, ஞான்றது, யாது, வலிது, இவற்றை வேய்முதலிய மூன்றனுடன் கூட்டிப் படிக்க.

வேய்ங்குழல், ஆர்ங்கோடு, பாழ்ங்கிணறு - ஙகரம் மயங்கினது.

சுருங்கச் சொல்லல் என்னும் அழகுபற்றி இவ்வாறு கூறினாராயினும், யகரத்தின்முன் யகரம் மயங்குதல் உடனிலை மயக்கமாதலால் அதனை இங்கே விலக்குக. (சுக)

117. லளமுன் கசப வயவொன் றும்மே.

(இ-ள்.) ல ள முன் - லகர ளகரங்களின் முன், க ச ப வ ய-ககர முதலிய இவ்வைந்தும், ஒன்றும் - மயங்கும், எ-று.

(உ-ம்.) வேல், வாள் } கடிது, சிறிது, பெரிது, வலிது, யாது இவற்றை வேல், வாள் என்பவற்றுடன் கூட்டிப்படிக்க.

[உடனிலை மெய்ம்மயக்கத்துக்குச் சிறப்புவிதி.]

118. ரழவல் லனதம்முற் றுமுட னிலையும்.

(இ-ள்.) ர ழ அல்லன - ரகர ழகரம் அல்லாத மற்றைப் பதினாறு மெய்களும், தம்முன் தாம் - தமக்குமுன் தாம், உடன்நிலையும் - உடனின்று மயங்கும், எ-று.

(உ-ம்.) அக்கம், அங்ஙனம், அச்சம், அஞ்ஞானம், அட்டு, அண்ணம், அத்து, அந்நீர், அப்பு, அம்மை, ஐயம், அல்லி, அவ்வை அள்ளல், அற்றம், அன்னை. (சுஉ)

{ தனிமெய்யுடன் தனிமெய்யாய் மயங்கும் எழுத்துகளும்,
மொழிக்கு உறுப்பாக மயங்காத வெழுத்துகளும்.

119. யரழவொற் றின்முன் கசதப ஙஞநம
ஈரொற் றாம்ரழத் தனிக்குறி லணையா.

(இ-ள்.) யரழ - யரழவென்கிற மூன்று மெய்களும், முன் - இவற்றின்முன் மயங்குமென்ற, ஒற்றில் - பத்துமெய்களுள், கசதபஙஞநம - ககரமுதலாகிய இவவெட்டு மெய்களும், ஈரொற்றும் - தனிமெய்யும் உயிர்மெய்யுமாகி மயங்குத லன்றியும் ஈரொற்றாயுமயங்கும், ரழ - ரகரழகர மெய்கள், தனிககுறில் அணையா - தனிக்குறிலின் கீழ்வந்து மயங்கா, எ-று.

(உ-ம்.) வெய்க்குறை - வேர்க்குறை - வீழ்க்குறை
வெய்ச்சிறை - வேர்ச்சிறை - வீழ்ச்சிறை
வெய்த்தலை - வேர்த்தலை - வீழ்த்தலை
வெய்ப்புறம் - வேர்ப்புறம் - வீழ்ப்புறம்
வெய்ங்குழல் - ஆர்ங்கோடு - பாழ்ங்கிணறு
தேய்ஞ்சது - கூர்ஞ்சிறை - பாழ்ஞ்சுனை
காய்ந்தனம் - நேர்ந்தனம் - வாழ்ந்தனம்
வெய்ம்புறம் - ஈர்ம்பணை - பாழ்ம்பதி.

"அணையா" என்ற ரகர ழகரங்களுக்கு உதாரணம் காட்டலாகாமை அறிக.

இனி உரையிற் கோடல்என்னும்*உத்தியால் ரகரவொற்று தனிக்குறிலைச்சேர்ந்து மொழிக்கு உறுப்பாகி விகுதி இடைச்சொல்லாய் வரும் எனக்கொள்க. உ-ம். வந்தனர், வாழ்ந்தனர். (கூச)

[செய்யுளில் ஈரொற்றாய் நிற்கும் எழுத்துகள்.]

120. லளமெய் திரிந்த னணமுன் மகாரம்
நைந்தீ ரொற்றுஞ் செய்யு ளுள்ளே.

(இ-ள்.) லளமெய்திரிந்த - லகார ளகார வொற்றுத் திரிந்த, னணமுன் - னகார ணகார முன்வரும், மகாரம் - மகரவொற்று, நைந்து - முன் சொன்னபடியே குறுகி, ஈரொற்றும் - அந்தமெய்களுடனே யீரொற்றுடனிலையாம், செய்புளுள்ளே-பாட்டினுள், எ-று.

(உ-ம்.) "திசையறிமீகானும் போன்ம்"—"மயிலியன் மாதர் மருண்ம்".

மேலே "மக்குறுகும்" எனக்கூறி, இதனுள்ளும் "மகரநைந்து" என அநுவதித்தார். அதற்குப்பயன் லகர ளகர மெய்கள் திரிந்த

ணகர ணகரங்க ளென்பதும், மகரக்குறுக்கம் செய்யுளிடத்து வருமென்பதும் தெரிதலாம். அநுவதித்தல்=முன் சொன்னதை வற்புறுத்தும் பொருட்டு மீண்டுங் கூறுதல்.

இனி முன் பின் என்பவை காலம்பற்றியும் இடம்பற்றியும் மாறிவரும். உ-ம். க ங என்றதில் ககரம் முன்னெழுதப் படுதலால், காலம்பற்றி முன்னாயிற்று. அதுவே தனக்கு எதிர் முகமாக ஙகரத்தின் முன்னிருத்தலால் இடம்பற்றி பின்னுமாயிற்று. இச்சூத்திரத்தில் முன் என்றது இடமுன். (ருடு)

[முதனிலை, இறுதிநிலை, இடைநிலைகளுக்குப் புறனடை.]

121. தம்பெயர் மொழியின் முதலு மயக்கமும்
இம்முறை மாறியு மியலு மென்ப.

(இ-ள்.) தம்பெயர் - தம்முடைய பெயர்களை, மொழியின் - சொல்லி நிலைமொழி வருமொழிகளாகப் புணர்க்குமிடத்து, முதலும் - மொழிமுதலுக்கும், மயக்கமும் - இடைநிலைமயக்கத்திற்கும், இம்முறை - இப்படி விதிக்கப் பட்டனவும் விலக்கப் பட்டனவுமாகிய வெல்லா வெழுத்துகளும், மாறியும் இயலும் - முதலாகியும் மயங்கியும் வரும், என்ப - என்று சொல்லுவர் (புலவர்), எ-று.

(இப்படி யெல்லா வெழுத்துகளும் தனித்தனி அதற்கதுவே முதலாமெனவே ஈற்றிற்கு விதிக்கப்பட்டனவும் விலக்கப்பட்டனவுமாகிய வெல்லாவெழுத்துகளும் தனித்தனி அதற்கதுவே ஈறுமெனத் தானே விளங்குதலால் ஈறும் எனமிகைபடக் கூறாமல் விட்டார்.)

(உ-ம்.) "அவற்றுள்-ளஃகான் முன்னர் யவ்வுந்தோன்றும்". இதிலே லகரமானது முதலாகியும் ளகரமெய்யோடு மயங்கியும் வந்தது. 'கெப்பெரிது' இதில் எகரமானது மெய்யோடு ஈறாய் வந்தது. பிறவு மிப்படியே வரும். (ருசு)

௧௦ - போலி.

[மொழியிறுதிப்போலி.]

122. மகர விறுதி யஃறிணைப் பெயரின்
னகரமோ டுறழா நடப்பன வுளவே.

(இ-ள்.) அஃறிணைப்பெயரின் - பால்பகாவஃறிணைப் பெயர்களிடத்து, இறுதி - ஈற்றிலேநின்ற, மகரம் - மகரமெய்யானது னகரமோடு - னகரமெய்யோடு, உறழா - ஒத்து, நடப்பன - நடப்பவை, உள - உண்டு, எ - று.

போலியாவது ஒருமொழியில் ஓர் எழுத்து இருக்கு மிடத்தில் அந்த எழுத்துக்கு ஈடாக மற்றோர் எழுத்து வந்தாலும் பொருள்

வேறுபடாமல் இருப்பது. போலி - ஒத்திருப்பது. அது இடவகையால் முதற்போலி, இடைப்போலி, கடைப்போலி என மூவகைப்படும். இங்கு மகரம் குறிலிணையைச் சேர்ந்து வருவதென்றறிக.

(உ-ம்.) அகம் - அகன், நிலம் - நிலன்.

(இவ்விறுதிப்போலியை முன்னே சொல்லுதலால், சுரும்பு-சுரும்பர், வண்டு - வண்டர், சிறகு-சிறகர், இடக்கு - இடக்கர், எனச் சில குற்றியலுகரப்பெயரிறுதி உகரம் அர் என்பதனோடொத்துவருதலும், பந்தல்-பந்தர், சாம்பல்-சாம்பர் எனச் சில லகர மெய்யீற்றுப் பெயரினிறுதி லகரமெய் ரகரமெய்யோடொத்து வருதலுங்கொள்க.) (௬௭)

[மொழிமுதற்போலியும், இடைப்போலியும்.]

123. அ ஐ முதலிடை யொக்குஞ் சஞய முன்.

(இ-ள்.) அ ஐ - அகரமும் ஐகாரமும், முதல் - சொல்லுக்கு முதலிலும், இடை - நடுவிலும், ஒக்கும் - வேறுபாடில்லாம லொத்து நடக்கும், சஞயமுன் - சகர ஞகர யகரங்களுக்கு முன்வந்தால், எ-று.

(உ-ம்.) பசல் - பைசல், மஞ்சு - மைஞ்சு, மயல்-மையல், அமச்சு - அமைச்சு, இலஞ்சி - இலைஞ்சி, அரயர் - அரையர். (௬௮)

[மொழி இடைப்போலி]

124. ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி
ஞஃகா னுறழு மென்மரு முளரே.

(இ - ள்.) சில்வழி - சொல்லுக்கு நடுவே சிலவிடத்து, ஐகான் (வழி) - ஐகாரத்தின் பின்னும், யவ்வழி - யகரமெய்யின் பின்னும், நவ்வொடு - இயல்பாய்வரும் நகர மெய்யினோடு, ஞஃகான் - ஞகர மெய்யானது, உறழும் - ஒத்து நடக்கும், என்மரும் - என்றுசொல்வாரும், உளர் - சிலருண்டு, எ-று.

(உ-ம்.) "செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்ற தில்லைச் சிற்றம்பலவன், மைஞ்ஞின்ற வொண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்து நிற்க, நெய்ஞ்ஞின்றெரியும் விளக்கொத்த நீல மணிமிடற்றான், கைஞ்ஞின்ற வாடல் கண்டாற் பின்னைக்கண்கொண்டு காண்பதென்னே." ஐந்நூறு - ஐஞ்ஞூறு எனவும் வரும்.

மண்யாத்த - மண்ஞாத்த, பொன்யாத்த - பொன்ஞாத்த என ணகர னகர மெய்களின் முன் யகரத்துக்கு ஞகரம் ஒத்துவரும்.

போலிக்கு ஆசிரியர் தொல்காப்பியர் இலக்கணஞ் சொன்னபடி இந்நூலாசிரியர் சொல்லாமல் விட்டது "இறந்தது விலக்கல்" என்னு முத்தி. (௬௯)

இனி உரையிற்கோடல் என்னு முத்தியால், நண்டு - ஞண்டு, நென்டு - ஞென்டு, நயம் - ஞயம், நாயிறு - ஞாயிறு, நமன் - ஞமன், நேயம் - ஞேயம், எனவும்; ஐந்து - ஐஞ்சு, உய்ந்தனன் - உய்ஞ்சனன், பித்து - பிச்சு, வைத்த - வைச்ச, தைத்த - தைச்ச எனவும் வருவனவும் கொள்க. (சுசு)

[சந்தியக்கரம்.]

125. அம்மு னிகரம் யகர மென்றிவை
எய்தி னையொத் திசைக்கு மவ்வோ
டுவ்வும் வவ்வு மௌவோ ரன்ன.

(இ - ள்.) அம்முன் - அகரத்தின் முன், இகரம் - இகரமும், யகரம் - யகரமெய்யும், என்றஇவை - என்று சொல்லப்பட்ட இவை, ஒத்து - தம்முளொத்து, எய்தின் - பொருந்தினால், ஐ இசைக்கும் - ஐயென்கிற நெட்டெழுத்து ஒலிக்கும், அவ்வோடு - அகரத்தோடு, உவ்வும் - உகரமும், வவ்வும் - வகரமெய்யும், ஒத்து-தம்முளொத்து, ஓரன்ன - ஒருதன்மையனவாக, (எய்தின்) - பொருந்தினால், ஔ (இசைக்கும்) - ஔ வென்கின்ற நெட்டெழுத்து ஒலிக்கும், எ-று.

[யகரவகர மெய்கள் நடுவிலே கலக்குமெனக்கொள்க. "மொழி ந்தபொருளோ டொன்ற அவ்வயின் மொழியாதத‌னையு முட்டின்று முடித்தல்" என்னுமுத்தியால் - அகரக்கூறும் இகரக்கூறும் தம்மு ளொத்து ஐகரமொலிக்கும், அகரக்கூறும் உகரக்கூறும் தம்முளொ த்து ஔகரமொலிக்கும் எனக்கொள்க.] இனி இச்சூத்திரம் எழுத்துப் போலி யுணர்த்துவதாகக் கொண்டு வைத்தியன் - வயித்தியன், ஔவை - அவ்வை என உதாரணங் காட்டுவாருமுளர். (௭௦)

[எழுத்துகளின் சாரியைகள்.]

126. மெய்க ளகரமு நெட்டுயிர் காரமும்
ஐயௌக் கானு மிருமைக் குறிலிவ்
விரண்டொடு கரமுமாஞ் சாரியை பெறும்பிற.

(இ-ள்.) மெய்கள் - ஒற்றுகள், அகரமும் - அகரச்சாரியையும், நெட்டுயிர் - உயிர் நெடில்கள், காரமும் - காரச்சாரியையும், ஐஔ - அவற்றுள் ஐகார ஔகாரங்கள், கானும் - காரச்சாரியையுடனே கான் சாரியையும், இருமைக்குறில் - உயிர்க்குறிலும் உயிர்மெய்க்குறிலும், இவ்விரண்டொடு - காரம் கான் என்கிற விரண்டுடனே, கரமும் - கரச்சாரியையும், ஆம் - ஆகின்ற, சாரியை - சாரியைகளை, பெறும் - பெறும், எ-று.

(உ-ம்.) க - ங;—ஆகாரம் - ஐகாரம் - ஔகாரம்;—ஐகான் - ஔகான்;—அகாரம் - அஃகான் - அகரம்; மகாரம் - மஃகான் - மகரம்.

குற்றெழுத்தோடு கான் சாரியை புணரும்போது இடையே ஆய்தம் தோன்றும். உ-ம். அஃகான், மஃகான்.

மெய்கள் அவ்வும் என்றது அகரமும் என்றதனால் இப்படியே கரம் காரம் கான் வந்தால், சாரியை அகரத்தினது சாரியையென்று கொள்க. மெய்கள் சாரியைபெறுமலும் உயிர்மெய் நெடில்கள் சாரியை பெற்றும் வருதலில்லை. (எக)

["விகற்பத்தின் முடித்தல்" என்னுமுத்தியால் மேல் விரிந்து கிடந்தனவற்றை விளக்கவேண்டி இங்கே தொகுத்து முடித்தலால் இச்சூத்திரம் "முடிந்தது முடித்தல்" என்னுமுத்தி.]

[இவ்வியலுக்குப் புறனடை.]

127. மொழியாய்த் தொடரினு முன்னனைத் தெழுத்தே.

(இ-ள்.) எழுத்து - இவ்வெழுத்துகள், மொழியாய் - பதமாகி, தொடரினும் - அப்பதந் தம்மோடும் உருபோடும் புணர்ந்தாலும், முன்னனைத்து - முன் சொல்லப்பட்ட அப்பதிலக்கணத்தையு முடையனவாகும், எ-று. (எஉ)

எழுத்து என்றது சாதி யொருமையாதலால், அனைத்து என்னும் ஒருமையோடு முடிந்தது.

எழுத்தியல் முற்றுப்பெற்றது.

இரண்டாவது

பதவியல்.

[பதம் இனையதென்பதும் அதன்வகையும்.]

128. எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருடரின்
பதமா மதுபகாப் பதம்பகு பதமென
இருபா லாகி யியலு மென்ப.

(இ-ள்.) எழுத்தே - எழுத்துகள்தாமே, தனித்தும்-ஒவ்வொன்றாகத்தனித்தாகிலும், தொடர்ந்தும் - இரண்டுமுதலாகத் தொடர்ந்தாகிலும், பொருள் - பிறபொருளை, தரின் - காட்டுமேயானால், பதமாம் - பதமாகும், அது - அப்பதமானது, பகாப்பத (மென) - பகாப்பதமெனவும், பகுபதமென - பகுபதமெனவும், இருபாலாகி - இரண்டுவகையினை யுடையதாகி, இயலும் - நடக்கும், என்ப - என்று சொல்லுவர் (புலவர்), எ-று. (க)

[ஓரெழுத்தொருமொழி]

129. உயிர்மவி லாறுந் தபநவி லைந்தும்
கவசவி னாலும் யவ்வி லொன்றும்
ஆகு நெடிநொது வாங்குறி லிரண்டோ
டோரெழுத் தியல்பத மாறேழ் சிறப்பின.

(இ-ள்.) உயிர் மவில் - உயிர்வருக்கத்திலும் மவ்வருக்கத்திலும், ஆறும்-அவ்வாறும், தபநவில்-தவ்வருக்கத்திலும் பவ்வருக்கத்திலும் நவ்வருக்கத்திலும், ஐந்தும் - ஐவ்வைந்தும், கவசவில் - கவ்வருக்கத்திலும் வவ்வருக்கத்திலும் சவ்வருக்கத்திலும், நாலும் - நன்னான்கும், யவ்வில் - யவ்வருக்கத்தில், ஒன்றும் - ஒன்றும், ஆகுநெடில் - ஆகுநெட்டெழுத்தாலாகிய மொழிநாற்பதும், நொ - நொவ்வும், து - துவ்வும், ஆம்குறில் - ஆகுங் குற்றெழுத்தாலாகிய மொழி, இரண்டோடு-இரண்டுடனே, ஓரெழுத்தியல்பதம் - ஓரெழுத்தாலாகிய மொழிகள், ஆறேழ்-நாற்பத்திரண்டும், சிறப்பின - சிறப்பினவாம், எ-று.

(உ-ம்.) ஆ - ஈ - ஊ - ஏ - ஐ - ஓ,—மா - மீ - மூ - மே-மை-மோ;—தா - தீ - தூ - தே - தை;—பா - பூ - பே - பை - போ;—நா - நீ - நே - நை - நோ;—கா - கூ - கை - கோ;—வா - வீ - வை வௌ;—சா-சீ-சே-சோ;—யா;—நொ-து;—இவற்றுள், ஊ=இறைச்சி, ஓ=மதகுநீர்தாங்கும் பலகை, பே=நுரை, நே=அன்பு, சோ=

மதில், நொ=துன்பப்படு, து=உண். [இவை சிறப்பின வெனவே, கு - கௌ - பீ - வே எனச் சிறப்பில்லாதவைகளுஞ் சிலவுள வென்றறிக.] (உ)

[தொடரெழுத்தொருமொழி.]

130. பகாப்பத மேழும் பகுபத மொன்பதும்
எழுத்தீ றாகத் தொடரு மென்ப.

(இ-ள்.) பகாப்பதம் - பகாப்பதங்கள், ஏழெழுத்தீறாகவும் - இரண்டெழுத்து முத லேழெழுத்தீறாகவும், பகுபதம் - பகுபதங்கள், ஒன்பதெழுத்தீறாகவும் - இரண்டெழுத்து முதலொன்பதெழுத்தீறாகவும், தொடரும்-தொடரும், என்ப-என்றுசொல்லுவர்(புலவர்),எ-று.

(உ-ம்.) அணி - அறம் - அருணம் - அருப்பம்-தருப்பணம்-உத்திரட்டாதி ;—கூனி - கூனன் - குழையன் - பொருப்பன் - அம்பலவன் - அரங்கத்தான் - உத்திராடத்தான் - உத்திரட்டாதியான்.

நடத்துவிப்பிக்கிறான் எனப் பகுதி முதலியவுறுப்பு வேறுபட்டு வருகின்றவைகளுக்கு இவ்வரையறை யில்லையென்றறிக. (ங)

[பகாப்பதம்.]

131. பகுப்பாற் பயனற் றிடுகுறி யாகி
முன்னே யொன்றாய் முடிந்தியல் கின்ற
பெயர்வினை யிடையுரி நான்கும் பகாப்பதம்.

(இ-ள்.) பகுப்பால் - பிரிக்கப்படுதலினாலே, பயனற்று - பகுதி விகுதி முதலாகிய பயனில்லாமல், இடுகுறியாகி - காரணமில்லாமல் இடப்பட்ட குறியாகி, முன்னே ஒன்றாய் - படைப்புக்காலந் தொட்டு ஒன்றாகி, முடிந்து - முடிந்து, இயல்கின்ற-நடக்கின்ற, பெயர் - பெயர்ச்சொலலும், வினை - வினைச்சொல்லும், இடை - இடைச்சொல்லும், உரி - உரிச்சொல்லுமாகிய, நான்கும் - நான்கும், பகாப்பதம் - பகாப்பதங்களாகும், எ-று.

(உ-ம்.) நிலம் - நீர் - நெருப்பு - காற்று என்பன பெயர்ப்பகாப்பதம். நட - வா - உண் - தின் என்பன வினைப்பகாப்பதம். மன் - கொல் - போல் மற்று என்பன இடைப்பகாப்பதம். உறு - கழி என்பன உரிப்பகாப்பதம். (ச)

[பகுபதம்.]

132 பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழிலின்
வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே.

(இ-ள்.) பொருள் - பொருளும், இடம் - இடமும், காலம் - காலமும், சினை - உறுப்பும், குணம் - குணமும், தொழிலின்-தொழி

லும் காரணமாக, வரு - வருகின்ற, பெயர் - பெயர்ச்சொற்களும், பொழுது கொள் - தெரிநிலையாகவுங் குறிப்பாகவுங் காலத்தைக் கொள்ளும், வினை - வினைச்சொற்களும், பகுபதம்-பகுபதங்களாகும்.

"பொழுதுகொள்வினைபகுபதம்" எனவே அவ்விருவகைவினை யாலணையும் பெயர்களும் பகுபதமா மென்பது அருத்தாபத்தியாற் சொன்னாரெனவறிக.

(உ-ம்.) பொன்னன் - அகத்தன் - ஆதிரையான் - கண்ணன் - கரியன் - ஊணன் எனப்பெயர்ப்பகுபதம் வந்தன.

நடந்தான் - நடக்கிறான் - நடப்பான் ;—நடந்த - நடக்கின்ற - நடக்கும் ;—நடந்து - நடக்க - நடக்கின ,—நடந்திலன் - நடக்கின்றிலன் - நடவான் - நடவாத—நடவாமல் என உடன்பாட்டிலும் எதிர்மறையிலுங் கூடிய முற்றும் பெயரெச்சமும வினையெச்சமுமாகிய தெரிநிலை வினைப்பகுதம் வந்தன.

பொன்னன் - ஊணன் ,—கரிய - பெரிய ,—அன்றி - இன்றி என முற்றும் பெயரெச்சமும் வினையெச்சமுமாகிய குறிப்புவினைப் பகுபதம் வந்தன.

நடந்தானை - நடந்தவனை ; எனத்தெரிநிலை வினையாலணையும் பெயர்ப் பகுபதம் வநதன.

பொன்னனை - பொன்னவனை எனக் குறிப்பு வினையாலணையும்பெயர்ப்பகுபதம் வந்தன.

தெரிநிலை வினைமுற்றுப் பகுபதமாவது செயலும் காலமும் தெரிய நிற்பது. (உ-ம்) இராமன் நடந்தான்.

தெரிநிலை வினையாலணையும் பெயர்ப்பகுபதமாவது மேற்கூறிய வினைமுற்று வேற்றுமை யுருபு ஏற்று வருவது. (உ-ம்) நடந்தானைக் கண்டேன், இது ஈறு திரிந்து நடந்தவன் எனவும் வரும்.

குறிப்பு வினைமுற்றுப் பகுபதமாவது பொருளாதியாறினடியாகப்பிறந்த பெயர், வினையைக்கொண்டு முடியும் சொற்களுக்குப் பயனிலையாய் நின்று குறிப்பாகக் காலத்தைக் காட்டுவது. (உ-ம்.) இவன் நேற்றுப் பொன்னன். (பொன்னையுடைய னுயினுன்.)

குறிப்பு வினையாலணையும் பெயர்ப் பகுபதமாவது மேற்கூறிய அக்குறிப்பு முற்று வேற்றுமையுருபேற்றுவருவது. (உ-ம்) நேற்றுப் பொன்னனை (நேற்றுப் பொன்னை யுடைத்தா யிருந்தவனை) கண்டேன்.

செம்மை, கருமை, நடத்தல், வருதல் முதலியபண்புப்பெயர்களும் தொழிற்பெயர்களும் பகுதி விகுதியாகப் பகுக்கப்படினும்

விகுதிக்கு வேறுபொருள் இன்றிப் பகுதிப்பொருள் விகுதியாய் நிற்ப, தினாலே சொல் நிலையால் பகுபதமென்றும் பொருள் நிலையால் பகாப்பதமென்றும் கூறுவர்.

[பகுபதவுறுப்புகள்]

133. பகுதி விகுதி யிடைநிலை சாரியை
சந்தி விகார மாறினு மேற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும்.

(இ-ள்.) பகுதி - முதனிலையும், விகுதி - இறுதிநிலையும், இடைநிலை - இடைநிலையும், சாரியை - சாரியையும், சந்தி - சந்தியும், விகாரம் - விகாரமும், ஆறினும் - ஆகியவிவ்வாறு உறுப்பினுள்ளும், ஏற்பவை - பொருளமைதிக்கு ஏற்பவைகளை, முன்னி - நினைத்து, புணர்ப்ப - அறிவுடையோர் கூட்டி முடிக்க, எப்பதங்களும்-எவ்வகைப் பட்ட பகுபதங்களும், முடியும் - முடிவுபெறும், எ-று.

(உ-ம்.) கூனி என்பது கூன் - இ எனப் பகுதி விகுதியான் முடிந்தது. உண்டான் என்பது உண்-ட்-ஆன் என அவ்விரண்டுடன் இடைநிலைபெற்று முடிந்தது. உண்டனன் என்பது உண் - ட் - அன் - அன் என அம்மூன்றுடன் சாரியைபெற்று முடிந்தது. பிடித்தனன் என்பது பிடி - த் - த் - அன் - அன் என அந்நான்குடன் சந்திபெற்று முடிந்தது. நடந்தனன் என்பது நட - த் - த் அன் - அன் என அவ்வைந்தும் பெற்றுச் சந்தியால் வந்த தகரவல்லொற்று மெல்லொற்றாதலாகிய விகாரமும் பெற்று முடிந்தது.

பிரகிருதி, விகிருதி என்னும் வடமொழிகள் பகுதி, விகுதிஎனத் திரிந்து நின்றன.

தன்னியல்பினால் நிற்பதுபற்றிப் பகுதியென்றும், அவ்வாறு நிற்கும் பகுதிப்பொருளைத் தன்னகப்படப் பின்னின்று விகாரப்படுத்தலால் விகுதியென்றும், பகுதி விகுதிகளின் இடையில் நிற்பதால் இடைநிலையென்றும், பகுதி விகுதிகளைச்சார்ந்து இயைந்துநிற்றலால் சாரியை யென்றும், நிலைமொழி வருமொழி சந்தித்தலால் உண்டாகிய தோன்றல், திரிதல், கெடுதல்களைச் சந்தியென்றும், செய்யுள் அடிதொடை முதலிய வற்றால் வலித்தல் மெலித்தல் முதலியவிகாரப்படுதலால் அவற்றை விகாரமென்றும் காரணக் குறியால்கூறினமை காண்க.

பதப்புணர்ச்சிக்கு விதிக்கப்பட்ட தோன்றல் முதலாகியமூன்று புணர்ச்சி விகாரங்களையும், வலித்தல்முதலாகிய ஒன்பதுசெய்யுள் விகாரங்களையும், அதுபெறுமென மாட்டுதலால் இது "மாட்டெறிந்தொழுகல்" என்னு முத்தி. (கூ)

[பகுதி.]

134. தத்தம்—பகாப் பதங்களே பகுதி யாகும்.

(இ-ள்.) தத்தம் பகாப்பதங்களே - பெயர்ப் பகுபதங்களுள்ளும் வினைப்பகுபதங்களுள்ளும் அதனதனுடைய முன்னிற்கின்ற பகாப்பதங்களே, பகுதியாகும் - பகுதிகளாகும், எ-று.

சாரியைசந்தி விகாரம் மூன்றும்புணரியலில் சொல்லப்படுதலால் அவை யொழிந்த பகுதி, விகுதி, இடைநிலை என்னும் மூன்றில் பகுதிகள் இப்படிப்பட்டவைகளென்று இச்சூத்திரம் உணர்த்துகின்றது.

பெயர்ப் பகுபதங்களுக்கும், குறிப்புவினைப் பகுபதங்களுக்கும் பெரும்பான்மை பெயர்ச்சொற்களும் சிறுபான்மை இடைச்சொல் உரிச்சொற்களும் பகுதிகளாம்.

(உ-ம்.) பொன்னன், பிறன், கடியன் எனப் பெயர்ப்பகுபதங்களுக்கு முறையே பொன், பிற, கடி என்னும் பெயர்ச்சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பகுதிகளாயினமை காண்க. ...ன் பொன்னன், அது அற்று, அனைத்து, கடிது என்னும் குறிப்பு வினைப் பகுபதங்களுக்கு பொன், அன், கடி என்னும் பெயர்ச்சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பகுதிகளாயின காண்க.

தெரிநிலை வினைப் பகுபதங்களுக்குப் பெரும்பான்மை வினைச்சொற்களும், சிறுபான்மைபெயர்ச்சொல், இடைச்சொல், உரிச்சொற்களும் பகுதிகளாம்.

(உ-ம்.) நடந்தான், கடைக்கணித்தான், போன்றான், சான்றான் எனமுறையே நட, கடைக்கண், போல், சால் என்னும் வினைச்சொல்லும், பெயர்ச்சொல்லும், இடைச்சொல்லும், உரிச்சொல்லும் பகுதிகளாயினமை காண்க. (எ)

[பண்புப்பெயர்க்குச் சிறப்புவிதி.]

135. செம்மை சிறுமை சேய்மை தீமை
வெம்மை புதுமை மென்மை மேன்மை
திண்மை யுண்மை நுண்மை யிவற்றெதிர்
இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே.

(இ-ள்.) செம்மை ... நுண்மை - செம்மைமுதல் நுண்மை யீறாகச் சொல்லப்பட்ட பதினொன்றும், இவற்றெதிர் - இவைகளுக்கு எதிரான வெண்மை முதலானவைகளும், இன்னவும் - இவைபோல்வன பிறவும், பண்பின் - பண்புப்பொருளின்றும், பகா - வேறு

பொருள் பகுக்கப்படாத, நிலை - நிலையையுடைய, பதம் - பதங்களாகும், எ - று.

இங்கேசொல்லிய பதங்கள் முதலாயினவெல்லாம் சொன்னிலையாற் பகுபதமாயினும் பொருணிலையால் பகாப்பதமென்று சொல்லவந்தவர் பண்பிற் பகா என்றும், இப்பதங்கள் மைவிகுதியின்றி நடக்காததினாலே இந்த விகுதியையும் பகுதியாக வைத்து மேல்வரும் விகுதிகளோடு சேர்க்கப்படும் என்று சொல்லவந்தவர் நிலைப்பதமென றுங் கூறினர். "பண்புப் பகாப்பதம்' என்னாது 'பண்பிற் பகா நிலைப்பதம்' என்றது "சொற்பொருள் விரித்தல்" என்னுமுத்தி. செம்மை-சிறுமை-சேய்மை-தீமை முதலிய வாய்பாடுகள் "எடுத்துக் காட்டல்" என்னுமுத்தி. (அ)

[மையீற்றுப் பண்புப் பெயரின் விகாரம்.]

136 ஈறு போத லிடையுகர மிய்யாதல்
ஆதி நீட லடியகர மையாதல்
தன்னொற் றிரட்டல் முன்னின்ற மெய்திரிதல்
இனமிக லினையவும் பண்பிற் கியல்பே.

(இ-ள்.) ஈறு-இறுதியிலுள்ள மை விகுதியானது, போதல் - கெடுதலும், இடை - நடுநின்ற, உகரம் - உகரமானது, இ ஆதல் இகரமாதலும், ஆதி - முதனின்ற குறிலானது, நீடல் - நெடிலாதலும், அடி அகரம் - முதனின்ற அகரமானது, ஐயாதல்-ஐகார மாதலும், தன்னொற்று - தன்மெய்யானது, இரட்டல் - நடுவேமிகுதலும், முன்னின்ற மெய் - முன்னின்ற மெய்யானது, திரிதல் - வேறொரு மெய்யாதலும், இனம் - வருமெழுத்திற்கு இனவெழுத்து, மிகல - மிகுதலும், இனையவும் - இவைபோல்வனபிறவும், பண்பிற்கு - அப் பண்பினுக்கு, இயல்பு - இயல்பாகும், எ-று.

ிகாரங்கள் பதப்புணர்ச்சிக்குங் கொள்க. இது "ஒப்பின் முடிதல்" என்னு முத்தி.

(உ-ம்.) நல்லன் - நன்மையில் மை விகுதிகெட்டது, கரிபன் - கருமையில் மை விகுதிகெட்டு, நடுநின்ற உகரம் இகரமாயிற்று; பாசி - பசுமையில் மை விகுதிகெட்டு, ஆதி நீண்டது; பைந்தரி-பசுமையில் மை விகுதியும், நடுநின்ற உயிர்மெய்யும் கெட்டு வருமெழுத்திற்கு இனவெழுத்துமிகுந்து முதலிலிருந்த அகரம் ஐகாரமாயிற்று; வெற்றிலை - வெறுமையில் மை விகுதிகெட்டுத் தன்னொற் றிரட்டி

யது; சேதாம்பல் - செம்மையில் மை விகுதிபோய், ஆதிநீண்டு, முன்னின்ற மகரமெய் தகரமெய்யாகத் திரிந்தது.

“உரையிற்கோடல்” என்னும் உத்தியால் சிறுபான்மை இவ்விகாரங்களைப் பெறாமல் செம்மையன், கருமையன் என இயல்பாய்ப் புணர்தலையு மமைத்துக் கொள்க.

பைந்தார் என்பதில் பசுமையில் இடைநின்ற சு கெட்டதற்கும், கார், ஆர்முதலிய சொற்களில் கருமை அருமைகளின் இடைநின்ற உகரம் கெட்டதற்கும் இணையவும் என்று கூறியதை விதியாகக் கொள்க. இவ்விகாரங்கள் அன்பு - அழகு முதலிய வாய்பாடுகளுக்கு அடையாமல் செம்மைமுதலிய வாய்பாடுகளுக்கே அடைய வைத்ததால் “எடுத்த மொழியி னெய்தவைத்தல்” என்னுமுத்தியாம். (௬)

[தெரிநிலை வினைப்பகுதிக்குச் சிறப்புவிதி.]

137. நடவா மடிசீ விடுகூ வேவை
தொப்போ வெளவுரி னுண்பொருந் திருந்தின்
தேய்பார் செல்வவ் வாழ்கே ளஃகென்
றெய்திய விருபான் மூன்று மீற்றவும்
செய்யெ னேவல் வினைப்பகாப் பதமே.

(இ-ள்.) நட...அஃகென்று-நட வா மடி சீ விடு கூ வே வை நொ போ வெள் உரிஞ் உண் பொருந் திரும் தின் தேய் பார் செல் வவ் வாழ் கேள் அஃகு என்று, எய்திய-முதனிலையாகப் பொருந்திய, இருபான் மூன்றும்-இருபத்து மூன்றுகும், ஈற்றவும் - உயிருமெய்யுங் குற்றிய லுகரமுமாகிய ஈற்றையுடைய இவை முதலாகிய வாய்பாடுகளெல்லாம், செய்யென் - செய்யென்கின்ற, ஏவல் - ஏவலினது, பகாப்பதம் - பகாப்பதமாகிய பகுதியும், வினை - முற்றை வினைகளுக்கு, பகாப்பதம்-பகாப்பதங்களாகிய பகுதியும் ஆம், எ-று.

“விகற்பத்தின் முடித்தல்” என்னு முத்தியால் இருபத்து மூன்றீற்றனவாக விகற்பித்து எடுத்துக்காட்டும் வாய்பாடுகளெல்லாம், இப் பொதுவாய்பாட்டில் அடங்குமென்பார் “முடிந்தது முடித்தல்” என்னுமுத்தியால் ‘செய்’ எனவுங் கூறினார். ‘செய்யென் வினைப்பகாப்பதம்’ என்றமையினாலே செய்யுமெனவற் பகாப்பதமும் அடங்கு முதலிய முதனிலைகளே ஏவற்பொரு ளுணர்த்தாமல் ஆய் விகுதியோடு புணர்ந்தின்று உணர்த்துமென் றறிவித்தற்கு வேறு கூறினார்.

(ஏவற்பகுதிக்கு உதாரணம்) நடவாய், வாராய், உண்ணாய், தின்னாய், அஃகாய் எனவும்; நடமின், வம்மின், உண்மின், தின்மின் அஃகுமின், என்வும் வரும். முன்னிலை ஏவலொருமை வினைச்சொற்கள் ஆய் விகுதி குன்றி, நட, வா, உண், தின், அஃகு எனவும் நிற்கும், நிற்கினும் விகுதியோடு புணர்ந்தவைகளே யாம். இப்படி விகுதி புணர்ந்து கெட்டு வருஞ் சொற்கள் பலவுண்டு. அவையெல்லாம் பகுபத முடிக்கும்போது காட்டப்படும்.

மற்றை வினைப்பகுதிகளுக்கு உதாரணம்:—நடந்தான், வந்தான், மடிந்தான், சீத்தான், விட்டான், கூவினான், வெந்தான், வைத்தான், நொந்தான், போயினான், வெளவினான், உரிஞினான், உண்டான், பொருநினான், திருமினான், தின்றான், தேய்ந்தான், பார்த்தான், சென்றான், வவ்வினான், வாழ்ந்தான், கேட்டான், அஃகினான்.

இந்நூலாசிரியர் வடநூன் மேற்கோளாக ஒருமொழிகளை விதந்து பகாப்பதம், பகுபதமெனக் காரணப்பெயர் தாமே இட்டு "எழுத்தே" என்னுஞ் சூத்திரமுதல் இதுவரைக்கும் பகாப்பதம் பகுபதமெனப் பலதரஞ் சொல்லுதல் "தன்குறிவழக்க மிக வெடுத்துரைத்தல்" என்னு முத்தி.

இத்தெரிநிலை வினைப்பகுதிகள் விகுதியோடு புணரும்போது தொழுதான்-உண்டான் எனச்சில இயல்பாதல் அன்றியும், செல் - சேறல் என முதனீண்டும், தா தந்தான் எனத் தனிநெடில் குறுகியும், சா-செத்தான் என முதல் ஆகாரம் எகரமாகியும், கொணா - கொணர்ந்தான் என முதலயலெழுத்துக் குறுகி ரகரமெய் விரிந்தும், விரவு-விராவினான் என நடுக்குறில் நீண்டும், முழுகு - முழுகினான், மூழ்கினான் என இயல்பும் விகாரமுமாக உறழ்ந்தும், வா - வருகிறான் எனத் தனிநெடில் குறுகி ஒருயிர்மெய் விரிந்தும், கல்-கற்றான் என ஈற்றுமெய் வருகிற மெய்யாகத் திரிந்தும், செல் - சென்றான் என ஈற்றுமெய் வருமெழுத்திற்கு இனமாகத்திரிந்தும், இன்னும் பலவாறு விகாரப்பட்டும் வரும்.

சா - தா இவைமுறையே - செத்தான்-தந்தான் எனவும், கல்-நில் - சொல் இவை கற்றான் - நின்றான்-சொன்னான் எனவும், ஒருநிகராகிய பகுதிகள் பலவிதமாகவிகாரப்படுதலாலும் அவையெல்லாம் தனித்தனிச் சொல்லப்புகுந்தால்விரியுமாதலாலும், செய்யுள்வழக்கத்தையும் உலக வழக்கத்தையும்பார்த்து, செய்யுள் விகாரமும் புணர்ச்சி விகாரமுங் கொண்டு அமைத்துக்கொள்க.

இச்சூத்திரத்திற் கூறிய நடவாமுதலிய வாய்பாடுகளெல்லாம் தன்வினைப்பகுதிகள், பிறவினைப்பகுதிகள் வருஞ்சூத்திரத்திற் கூறப் படும்.

தன்வினையாவது தானே நேராகத் தொழிலைச் செய்வது. பிறவினையாவது மற்றொருவனைக் கொண்டு தான்தொழிலைச் செய் விப்பது. (சுo)

[பிறவினை ஏவற்பகுதிகளுக்குச் சிறப்புவிதி.]

138. செய்யென் வினைவழி விப்பி தனிவரின்
செய்வியென் னேவ லிணையி னீரேவல்.

(இ-ள்.) செய்யென்-செய்யென்னும் வாய்பாடு, வினைவழி - முதனிலைத் தனிவினையின்பின், விப்பி-வி்வ்விகுதியாவது பிவ்விகுதி யாவது, தனிவரின் - தனித்துவருமாயின், செய்வியென்னேவல் - செய்யென்று மேவலின்மேல் ஓரேவலாய்ச் செய்வியென்னும் வாய் பாட்டேவற் பகுதியாம், இணையின் - அவ்வினையின்பின் இந்த விகு திகள் தன்னொடும் பிறிதொடும் இணைந்து வருமாயின், ஈரேவல் - செய்விப்பியென்னும் வாய்பாட்டேவற் பகுதியாம், எ-று.

(உ-ம்) நடப்பியாய்-வருவியாய் வி-பி தனித்து வந்தன.
நடப்பிப்பியாய் பி-தன்னோடு இணைந்து வந்தது.
வருவிப்பியாய் வி-பிறிதோடுஇணைந்து வந்தது.

சிறுபான்மை "உரையிற்கோடல்" என்று முத்தியால் கு - சு - டு - து - பு - று என்கிற ஆறுவிகுதிகளுள் ஒன்றுபெற்றும், சில பகுதிகள் இடையிலுள்ள மெல்லினமெய் வல்லினமெய்யாகத் திரிந் தும், நடுவே ஓர்மெய்தோன்றியும் பிறவினையாய் வருமெனக்கொள்க.

[உ-ம்] போ - போக்கு, பாய் - பாய்ச்சு, உருள் - உருட்டு, நட - நடத்து, எழு-எழுப்பு, துயில்-துயிற்று பிறவிகுதிபெற்றன; இயங்கு - இயக்கு, திருந்து-திருத்து, தோன்று-தோற்று மெல்லினம் திரிந்தன; ஆடு-ஆட்டு, தேறு-தேற்று, உருகு-உருக்கு ஓர் மெய் தோன்றின.

இவையன்றி, சில வினைப்பகுதிகள் தன்வினை பிறவினைகளுக் குப்பொதுவாய் வினைமுற்று முதலியவற்றின் விகுதிகளோடு புணரும் போது இடையில் வல்லெழுத்து மிகுந்து பிறவினையாகவும், மெல் லினமெய் மிகுந்தும் இயல்பாயும் தன்வினையாகவும் வரும்.

பிறவினை.	தன்வினை.	
கரைத்தான்	- கரைந்தான்	- கரைவான்
மறைத்தான்	- மறைந்தான்	- மறைவான்
தேய்த்தான்	- தேய்ந்தான்	- தேய்வான்
அலைத்தான்	- அலைந்தான்	- அலைவான்
சேர்த்தான்	- சேர்ந்தான்	- சேர்வான்

[வினைப்பகுதிக்குப் புறனடை.]

139. விளம்பிய பகுதிவே றாதலும் விதியே.

(இ-ள்.) விளம்பியபகுதி - ஏவற்பகுதி வேறாதல்போல அதன் பின்னே சொல்லப்பட்ட மற்றைவினைப்பகுதிகள், வேறாதலும் - வேறுபடுதலும், விதியே - விதியே யாகும், எ - று.

(உ - ம்.) நடத்தினான் - நடப்பித்தான் - நடத்துவிப்பித்தான். இங்கே தன்வினைப்பகுதிகள் பிறவினைப்பகுதிகளானமை காண்க. ()

[விகுதி.]

140. அன் ஆன் அள் ஆள் அர் ஆர் பம்மார்
அ ஆ கு டு து று என் ஏன் அல் அன்
அம் ஆம் எம் ஏம் ஓமொ டும்மூர்
க ட த ற ஐ ஆல் இம் மின் இர் ஈர்
ஈயர் கயவு மென்பவும் பிறவும்
வினையின் விகுதி பெயரினுஞ் சிலவே.

(இ-ள்) அன்...என்பவும் - அன்முதல் முப்பத்தேழாகச் சொல் லப்பட்டவைகளும், பிறவும் - இவைபோல்வன பிறவும், வினையின் விகுதி-வினைப்பகுபதங்களின் விகுதிகளாகும், பெயரினும் - பெயர்ப் பகுபதங்களிலும், சில - சிலவிகுதிகளாகும், எ-று.

அன்விகுதி தன்மைக்கு "எதிரதுபோற்றல்" என்று முத்தியாற் சேர்க்கப்பட்டதாதலின் வலியுறுத்தற்குப் பின்னுங்கூறினார்.

உம் ஊர் க ட த ற - என்பது உம் ஊர்ந்த [ஏறிய] ககர டகர தகர றகர மெய்கள்; அவை - கும், டும், தும், றும், என்பன.

(உதாரணம்.)

அன், ஆன்,	—நடந்தனன், நடந்தான்	— ஆண்பாற்படர்க்கை.
அள், ஆள்,	—நடந்தனள், நடந்தாள்	—பெண்பாற்படர்க்கை.
அர், ஆர்	நடந்தனர், நடந்தார்,	—பலர்பாற்படர்க்கை.
ப, மார்	—நடப்ப, நடமார்	
அ, ஆ	—நடந்தன, நடவா	பலவின்பாற்படர்க்கை.
கு, டு,	உண்கு, உண்டு,	—தன்மை ஒருமை.
து, று,	நடந்து, சேறு,	
என், ஏன்,	நடந்தனென், நடந்தேன்,	
அல், அன்	நடப்பல், நடப்பன்,	

அம், ஆம்,	நடப்பம், நடப்பாம்,	—தன்மைப்பன்மை.
எம், ஏம்,	நடப்பெம், நடப்பேம்,	
ஓம்,	—நடப்போம்,	
கும், டும்,	உண்கும், உண்டும்,	
தும், றும்,	நடந்தும், சேறும்,	
ஐ, ஆய்,	—நடந்தனை, நடந்தாய்,	—முன்னிலையொருமை.
இ	சேறி [=செல்வாய்]	
மின்,	—நடமின்,	—முன்னிலைப் பன்மை.
இர், ஈர்,	நடந்தனிர், நடந்தீர்	
ஈயர், க,	—நிலீயர், நடக்க,	—வியங்கோள்.
ய	வாழிய	
உம்	—நடக்கும்	—செய்யுமென்முற்று.

இவையெல்லாம் தெரிநிலைவினைமுற்றுக்கள்.

வினைக்குறிப்புமுற்றுக்கள் குறிப்பாகக் காலங்காட்டுவனவாதலால், இந்த விகுதிகளுள்ளே தாமே காலங்காட்டும் விகுதிகளொழிந்த அன், ஆன், அள், ஆள், அர், ஆர், டு, து, று; என், ஏன், அம், ஆம், எம், ஏம், ஓம்; ஐ, ஆய், இ, இர், ஈர் என்னும் விகுதிகளோடு வருமெனக் கொள்க.

(உ-ம்.) குழையன், குழையான்; குழையள், குழையாள், குழையர், குழையார்; குறுந்தாட்டு, குழையது, குழையிற்று; குழையினென், குழையினேன்; குழையம், குழையாம்; குழையினெம், குழையினேம், குழையினோம், குழையினை, குழையாய், வில்லி; குழையினிர், குழையீர்.

'பெயரினுஞ் சில' என்றதனால், இவ்விகுதிகளுள் அன், ஆன், அள், ஆள், அர், ஆர், மார், து, அ, இ என்பவைகளுடனே, மன், மான், கள், ஙல், தை, கை, பி, முன், அல், ன், ள், ர், வ் என்பனவும் பிறவும் பெயர் விகுதிகளாம்.

(உ-ம்.) குழையன், வானத்தான்; குழையள், வானத்தாள் குழையர், வானத்தார், தேவிமார்; யாது, குழையன; பொன்னி, வடமன், கோமான், கோக்கள், அவை, எந்தை, எங்கை, எம்பி, எம்முன், தோன்றல், பிறன், பிறள், பிறர், அவ்.

தெரிநிலைப்பெயரெச்ச விகுதிகள்:—அ, உம் என்பன.

(உ-ம்.) நடந்த, நடக்கின்ற, நடவாத; நடக்கும்.

குறிப்புப் பெயரெச்ச விகுதி:—அ. (உ - ம்.) நல்ல, பெரிய.

உம் விகுதி இடைநிலையை ஏற்காமல் தானே எதிர்காலங் காட்டுதலால், குறிப்புப் பெயரெச்சத்திற்கு வாராது.

...கள்:—உ, இ, ய், பு, ஆ, ஊ, என அ, இன், ஆல், கால், கு, இய, இயர், வான், பான், பாக்கு, கடை வழி, இடத்து : உம் : மல், மை, மே, என்பனவும் பிறவுமாம்

இவற்றுள் இறுதியிற் கூறிய மல், மை, மே, என்னும் விகுதிகள எதிர்மறையில் மாத்திரமே வரும்.

(உ-ம்.) நடந்து, ஓடி, போய்; உண்குபு, உண்ணூ, உண்ணா, உண்ணென: உண்ண : உண்ணின், உண்டால், உண்டக்கால், உணற்கு, உண்ணிய, உண்ணியர், வருவான், உண்பான், உண்பாக்கு, செய்தக்கடை, செய்தவழி, செய்தவிடத்து : கண்டும் : உண்ணாமல், உண்ணாமை, உண்ணாமே.

குறிப்பு வினையெச்ச விகுதிகள்:—அ : றி, து, ஆல், மல், கால் கடை, வழி, இடத்து என்பனவும் பிறவுமாம்.

(உ-ம்.) மெல்ல : அன்றி, அல்லது, அல்லால், அல்லாமல், அல்லாக்கால், அல்லாக்கடை, அல்லாவழி, அல்லாவிடத்து.

தொழிற்பெயர் விகுதிகள்:—தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, இல், அரவு, ஆனை, மை, து, ஆல் என்பனவும் பிறவுமாம்.

(உ-ம்.) நடத்தல், ஆடல், வாட்டம், கொலை, நடக்கை, பார்வை, போக்கு, நடப்பு, வரவு, மறதி, புணர்ச்சி, புலவி, விக்குள், சாக்காடு, கட்டில், தோற்றரவு, வாரானை, நடவாமை, பாய்த்து, தழால்.

மை விகுதி - நடந்தமை, நடக்கின்றமை என இறந்தகால நிகழ்கால இடைநிலைகளோடு கூடியும், து விகுதி - நடந்தது, நடக்கின்றது, நடப்பது என முக்கால இடைநிலைகளோடு கூடியும் வரும்.

இனி இவ்விகுதிகளில் ஒன்று புணர்ந்துகெட்டுப் பகுதி மாத்திரையாய் நிற்குந் தொழிற்பெயர்களும், விகுதிபுணர்ந்து கெடும்போது பகுதி விகாரப்பட்டு நிற்குந் தொழிற்பெயர்களும், விகுதிகளைப் பெறுமலும் மற்ற வினைவிகற்பங்கள் பிறவாமலும் தொழிலைக் காட்டும் பெயர்களாகிய முதனிலைபெறுத தொழிற்பெயர்களும் உண்டு; அவைமுறையே முதனிலைத் தொழிற்பெயரென்றும், முதனிலை திரிந்த தொழிற் பெயரென்றும், முதனிலைபெறுத தொழிற்பெயரென்றும் கூறப்படும்.

(உ-ம்.) அடி, சொல், மொழி—முதனிலைத் தொழிற்பெயர். கோள், கேடு, இடையீடு—முதனிலைதிரிந்த தொழிற்பெயர். வேட்டை, சண்டை, கூத்து முதனிலைபெறாத தொழிற்பெயர்.

பண்புப்பெயர் விகுதிகள் : — மை, ஐ, சி, பு, இல், கு, றி, று, அம், ர், பம், என்பனவும் பிறவுமாம்.

(உ-ம்.) நன்மை, தொல்லை, மாட்சி, மாண்பு, குறில், நன்கு, நன்றி, நன்று, நலம், நன்னர், திட்பம்.

இ, ஐ, அம் என்னும் மூன்று விகுதிகளும் வினைமுதற் பொருளையும், செயப்படு பொருளையும், கருவிப்பொருளையும் உணர்த்தும்.

(உ-ம்.) அலரி, பறவை, எச்சம் —வினைமுதற்பொருள்.
ஊருணி, தொடை, நீத்தம் —செயப்படுபொருள்.
மண்வெட்டி, பார்வை, நோக்கம் —கருவிப்பொருள்.

வினைமுதற் பொருளை யுணர்த்தும் விகுதியும், செயப்படு பொருளை யுணர்த்தும் விகுதியும் பகுதியோடு புணர்ந்து பின்கெடுதலும் உண்டு.

(உ-ம்.) காய், தளிர், பூ, கனி, திரை, நரை, அலை என்பவைகளில் வினைமுதற் பொருளுணர்த்தும் விகுதி புணர்ந்துகெட்டது.

ஊண், உரி, துணி, மடை என்பவைகளில் செயப்படு பொருளுணர்த்தும் விகுதி புணர்ந்துகெட்டது.

விடு, ஒழி விகுதிகள் - துணிவுப்பொருளை உணர்த்தும்.

(உ-ம்.) செய்துவிட்டான் - செய்தொழிந்தான்.

கொள் விகுதி - தற்செயலை உணர்த்திவரும்.

(உ-ம்) அடித்துக்கொண்டான்.

படு, உண் விகுதிகள் - செயப்பாட்டு வினைப்பொருளை உணர்த்தும்.

(உ-ம்.) கட்டப்பட்டான், கட்டுண்டான்.

மை விகுதி - தன்மைப்பொருளை உணர்த்தும்.

(உ-ம்.) பொன்மை, ஆண்மை, பெண்மை.

இரு, இடு என்பன-தமக்கென வேறு பொருளின்றிப்பகுதிப்பொருள் விகுதியாய் வரும்; இவற்றைத் துணைவினை யென்பர்.

(உ-ம்.) எழுந்திருக்கின்றான், உரைத்திடுகின்றான்.

விகுதிஒன்றே வினைவிகற்பங்கள் பலவற்றிலும்வருமாறு:—
விதந்தி.

அ.—க. வினையெச்சவிகுதி: செய்ய, வர.
உ. பெயரெச்சவிகுதி: செய்த, வருகின்ற,
ங. பலவின்பாற்படர்க்கைவிகுதி: வந்தன, கொடியன.
ச. வியங்கோள்விகுதி: எழுந்தருள [=எழுந்தருள்க.]

அம்.—க. தன்மைப்பன்மைவிகுதி: நடந்தனம்.
உ. தொழிற்பெயர்விகுதி: ஆட்டம்.
ங. பண்புப்பெயர்விகுதி: நலம்.
ச. வினைமுதற்பொருள்விகுதி: எச்சம்.
ரு. செயப்படுபொருள்விகுதி: தொல்காப்பியம்.
சு. கருவிப்பொருள்விகுதி: நோக்கம்.

அல்—க. தொழிற்பெயர்விகுதி: செயல்.
உ. தன்மைஒருமைவிகுதி: நடப்பல் [=நடப்பேன்]
ங. வியங்கோள்விகுதி: எனல் [=என்க.]
ச. எதிர்மறைவியங்கோள்விகுதி: கொளல் [=கொள்ளற்க.]
ரு. எதிர்மறையேவலொருமைவிகுதி: படியல் [=படியாதே.]

அன்—க. ஆண்பாற்படர்க்கைப்பெயர்விகுதி: அறிஞன்.
உ. ,, வினைவிகுதி: வந்தனன்.
ங. தன்மைஒருமை விகுதி: செய்வன் [=செய்வேன்.]

ஆ—க. பலவின்பாற்படர்க்கை விகுதி: வாரா, நடவா.
உ. வினையெச்சவிகுதி: செய்யா [=செய்து.]

ஆல்—க. தொழிற்பெயர்விகுதி: ஓரால் [=ஒருவுதல்.]
உ. தெரிநிலைவினையெச்சவிகுதி: உண்டால்.
ங. குறிப்புவினையெச்சவிகுதி: அல்லால்.
ச. எதிர்மறைஏவலொருமைவிகுதி: மறால் [=மறக்காதே]

இ—க. ஆண்பாற்படர்க்கைவிகுதி: வில்லி.
உ. பெண்பாற்படர்க்கைவிகுதி: பொன்னி.
ங. ஒன்றன்பாற்படர்க்கைவிகுதி: நாற்காலி.
ச. முன்னிலைஒருமைவிகுதி: சேறி [=செல்வாய்.]
ரு. வினையெச்சவிகுதி: ஓடி, ஆறி.
சு. வினைமுதற்பொருள்விகுதி: அலரி.
எ. செயப்படுபொருள் விகுதி: ஊருணி.
அ. கருவிப்பொருள்விகுதி: மண்வெட்டி.
கூ. ஏவலொருமைவிகுதி: காட்டுதி [=காட்டு.]

விகுதி.

உ.—க. வினையெச்சவிகுதி: நடந்து.
உ. தொழிற்பெயர்விகுதி: வரவு.

உம்—க. ஏவற்பன்மைவிகுதி: வாரும்.
உ. படர்க்கைவினைமுற்றுவிகுதி: செய்யும்.
௩. பெயரெச்சவிகுதி: நடக்கும் (மனிதன்.)
௪. வினையெச்சவிகுதி: செய்தலும் (போனான்.)

ஏல்.—க. எதிர்மறைஏவல்விகுதி: படியேல்.
உ. தெரிநிலைவினையெச்சவிகுதி: உண்டானேல்.

ஐ.—க. முன்னிலைஒருமைவிகுதி: செய்தனை.
உ. தொழிற்பெயர்விகுதி: கொலை.
௩. பண்புப்பெயர்விகுதி: தொல்லை.
௪. வினைமுதற்பொருள்விகுதி: பறவை.
௫. செயப்படுபொருள்விகுதி. தொடை.
௬. கருவிப்பொருள்விகுதி: படை.

கு—க. பண்புப்பெயர்விகுதி: நன்கு.
உ. பிறவினைவிகுதி: போக்கு.
௩. தொழிற்பெயர்விகுதி: போக்கு [=போதல்]
௪. தன்மைஒருமைவிகுதி: உண்கு [=உண்பேன.]

கை—க. தொழிற்பெயர்விகுதி: வருகை.
உ. முறைப்பெயர்விகுதி: தங்கை.

சி—க. பண்புப்பெயர்விகுதி: மாட்சி.
உ. தொழிற்பெயர்விகுதி: காட்சி.

து—க. ஒன்றன்பாற்படர்க்கைவிகுதி: நடந்தது.
உ. பிறவினைவிகுதி: நடத்து.
௩. தொழிற்பெயர்விகுதி: பாய்த்து [=பாய்தல்.]
௪. தன்மைஒருமைவிகுதி: வருது [=வருவேன்.]

பு—க. பண்புப்பெயர்விகுதி: மாண்பு.
உ. தொழிற்பெயர்விகுதி: நட்பு.
௩. வினையெச்சவிகுதி: செய்பு [செய்து.]

மார்.—க. பலர்பாற்படர்க்கைப்பெயர்விகுதி: குருமார், பாட்டன்மார்.
உ. பலர்பாற்படர்க்கைவினைமுற்றுவிகுதி: கொண்மார்.

மை.—க. பண்புப்பெயர்விகுதி: நன்மை.
உ. தொழிற்பெயர்விகுதி: செய்தமை.
௩. வினையெச்சவிகுதி: செய்யாமை [=செய்யாமல்.]
௪. தன்மைப்பொருளுணர்த்தும்விகுதி: பெண்மை, பொன்மை.

வி.—க. தொழிற்பெயர்விகுதி: கேள்வி.
௨. பிறவினைவிகுதி: செய்வி.

று.—க. ஒன்றன்பாற்படர்க்கைவிகுதி: போயிற்று.
௨. பண்புப்பெயர்விகுதி: நன்று.
௩. தன்மையொருமைவிகுதி: சேறு [=செல்வேன்.]
௪. பிறவினைவிகுதி: பயிற்று. (௧௯)

[பெயரிடைநிலை.]

141. இலக்கியங்கண்டதற் கிலக்கண மியம்பலின்
பகுதிவிகுதி பகுத்திடை நின்றதை
வினைப்பெய ரல்பெயர்க் கிடைநிலை யெனலே.

(இ-ள்.) இலக்கியம் - அறிவுடையோராலே நியமிக்கப்பட்ட இலக்கியத்தை, கண்டு - பார்த்து, அதற்கு - அவ்விலக்கியத்திற்கு, இலக்கணம் - அவ்விலக்கியத்தினமைதியே இலக்கணமாக, இயம்பலின் - சொல்லுதலால், பகுதி - முன்சொல்லப்பட்டபகுதியையும், விகுதி - விகுதியையும், பகுத்து - பிரித்து, இடைநின்றதை - நடுநின்றதை, வினைப்பெயரல்பெயர்க்கு-வினையாலணையும் பெயரல்லாத பெயர்களுக்கு, இடைநிலையெனல - இடைநிலையென்று சொல்லுக.

இலக்கியம், இலக்கணம் என்பன லக்ஷியம், லக்ஷணம் என்னும் வடமொழித்திரிபு.

(உ-ம்.) அறிஞன் - ஞகரவிடைநிலை. ஓதுவான் - வகரவிடைநிலை. வலைச்சி - சகரவிடைநிலை. வண்ணத்தி-தகரவிடைநிலை. (௧௪)

[இறந்தகாலவிடைநிலை.]

142. தடறவொற் றின்னே யைம்பான் மூவிடத்
திறந்த காலந் தருந்தொழி லிடைநிலை.

(இ-ள்.) தடறவொற்று - தகர டகர றகர மெய்களும், இன்- இன்னும், ஐம்பால் மூவிடத்து-ஐம்பால் மூவிடங்களிலும், இறந்தகாலம் - இறந்தகாலத்தை, தரும் - காட்டுகின்ற, தொழில் - வினைப்பகுபதங்களினுடைய, இடைநிலை - இடைநிலைகளாகும், எ - று.

(உ-ம்.) நடந்தான் - நடந்தாள் - நடந்தார் - நடந்தது - நடந்தன - நடந்தேன் - நடந்தேம் - நடந்தாய் - நடந்தீர் - உண்டான்—

இன் இடைநிலை 'எஞ்சியது' எனக் கடைக்குறைந்தும், 'போனது' என முதல் குறைந்தும்வரும். (௧௫)

[நிகழ்காலவிடைநிலை.]

143. ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்
ஐம்பா னிகழ்பொழு தறைவினை யிடைநிலை.

(இ-ள்.) ஆநின்று - ஆநின்றென்பதும், கின்று-கின்றென்பதும், கிறு - கிறுவென்பதும், ஐம்பால் மூவிடத்தின் - ஐம்பான் மூவிடங்களிலும், நிகழ்பொழுது - நிகழ்காலத்தை, அறை-காட்டுகின்ற, வினை-வினைப்பகுபதங்களினுடைய, இடைநிலை - இடைநிலைகளாம்.

(உ-ம்.) நடவாநின்றான் - நடக்கின்றான் - நடக்கிறான். (கஅ)

[எதிர்காலவிடைநிலை.]

144. பவ்வ மூவிடத் தைம்பா லெதிர்பொழு
திசைவினை யிடைநிலை யாமிவை சிலவில.

(இ-ள்.) பவ்வ - பகரமெய்யும் வகரமெய்யும், ஐம்பான் மூவிடத்து - ஐம்பான் மூவிடங்களிலும், எதிர்பொழுது - எதிர்காலத்தை, இசை - காட்டுகின்ற, வினை - வினைப்பகுபதங்களினுடைய, இடைநிலையாம்-இடைநிலைகளாகும், இவை-இம்முக்கால விடைநிலைகளும், சில-சில முற்றெச்சங்களுக்கு, இல-இல்லை, எ - று.

(உ-ம்.) நடப்பான் - வருவான்.

'இவை சிலவில' என்றதனால் விகுதியாவது பகுதியாவது வேறிடைநிலையாவது காலங்காட்டுமென்பது பெற்றாம். அவை பின்வருஞ் சூத்திரத்திற் காண்க. (கஎ)

[காலங்காட்டும்விகுதி.]

145 றவ்வொ டுகர வும்மைநிகழ் பல்லவும்
தவ்வொ டிறப்பு மெதிர்வும் டவ்வொடு
கழிவுங் கவ்வோ டெதிர்வு மின்னேவல்
வியங்கோ ளிம்மா รெதிர்வும பாந்தம்
செலவொடு வரவுஞ் செய்யுநிகழ் பெதிர்வும்
எதிர்மறை மும்மையு மேற்கு மீங்கே.

(இ - ள்.) றவ்வொடு - றகரமெய்யோடு கூடிய, உகரவும்மை - உகர விகுதியும் உம்விகுதியும், நிகழ்பல்லவும் - இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும், தவ்வொடு - தகரமெய்யோடுகூடிய, (உகர வும்மை) - உகரவிகுதியும் உம்விகுதியும், இறப்புமெதிர்வும்-இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும், டவ்வொடு - டகரமெய்யோடு கூடிய

(உகரவும்மை) - உகரவிகுதியும் உம்விகுதியும், கழிவும்-இறந்தகாலத்தையும், கவ்வோடு-ககரமெய்யோடு கூடிய, (உகரவும்மை) உகரவிகுதியும் உம் விகுதியும், எதிர்வும் - எதிர்காலத்தையும், மின்-மின்விகுதியும், ஏவல் - (ஏனை) முன்னிலையேவல் விகுதிகளும், வியங்கோள - வியங்கோள் விகுதிகளும், இ-இகரவிகுதியும், மார் - மார்விகுதியும், எதிர்வும் - எதிர்காலத்தையும், பாந்தம்-பகரவிகுதி, செலவொடு வரவும் - இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும், செய்யும் - செய்யுமென்னும் வாய்பாட்டு முற்றுவிகுதி, நிகழ்பெதிர்வும் - நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும், எதிர்மறை - எதிர்மறை ஆகாரவிகுதி, மும்மையும் - மூன்று காலத்தையும், ஏற்கும் - ஏற்றுவரும், ஈங்கு - இவை சிலவில' என்றவைகளுள, எ-று.

இகரவிகுதி தனித்து இயலாமையால் யாதாயினும் ஓர் மெய்யினைச் சார்ந்தே வருமென்பதும், அம்மெய் காலங்காட்டாதென்பதும், அது காலங்காட்டின் இகர விகுதி காலங்காட்டாதென்பதும், செய்யுமென்னும் வாய்பாட்டுப் பெயரெச்சமும் இடைநிலையின்றி மூன்றுகாலங் காட்டுவதாயினும், அது எதிர்காலங் காட்டுமென மேல் வினையியலிற் கூறுதலால், இங்கு 'செய்யும்' என்று எடுத்தோதியது முற்றென்பதும் பெறப்பட்டன.

(உ-ம்)

சென்று [சென்றேன்],	சென்றும்	[சென்றோம்]		இறப்பு
சேறு [செல்வேன்],	சேறும்	[செல்வோம்]	.	எதிர்வு
வந்து [வந்தேன்]	வந்தும்	[வந்தோம்]		இறப்பு
வருது [வருவேன்],	வருதும்	[வருவோம்]	...	எதிர்வு
உண்டு [உண்டேன்],	உண்டும்	[உண்டோம்]		இறப்பு.
உண்கு [உண்பேன்],	உண்கும்	[உண்போம்]		எதிர்வு

உண்மின, உண்ணீர், உண்ணும், உண்ணாய்
வாழ்க, வாழிய, வாழியர்
சேறி [செல்வாய்]
உண்மார் [உண்பார்] } . எதிர்வு

உண்ப [உண்டார்],	என்ப	[என்றார்]	...	செலவு.
உண்ப [உண்பார்],	என்ப	[என்பார்]	...	வரவு

உண்ணும் .. { நிகழ்பு. எதிர்வு.

உண்ணா ... { இறப்பு. நிகழ்பு. எதிர்வு.

சென்றி, செல்லாநின்றி என வருமாயின், இடைநிலை காலங் காட்டுதலால், இசரவிகுதி காலங்காட்டவில்லை என்றறிக.

'இவை சிலவில' என்றவைகளுள்ளே காலங்காட்டும் விகுதிகளை மாத்திரஞ் சொல்லிக் காலங்காட்டும் பகுதிகளையும் பிற இடைநிலைக ளையுஞ் சொல்லாமையால், அவை சிறுபான்மையன; வந்த இடங்க ளிற் கண்டுகொள்க என்றாயிற்று. அவை வருமாறு:—

கு டு று என்னும் மூன்று உயிர் மெய்யீற்றுச் சில குறிவினைப் பகுதிகள் தம்மொற்றிரட்டி இறந்தகாலங் காட்டும்.

(உ-ம்.) புக்கான், நக்கான்; தொட்டான், விட்டான்; உற்றான், பெற்றான்.

யகர இடைநிலை இறந்தகாலமும், ஆகிடந்து, ஆவிருந்து என்னும் இரண்டு இடைநிலைகளும் நிகழ்காலமுங் காட்டும்.

(உ-ம்.) போயது; உண்ணாகிடந்தான், உண்ணாவிருந்தான்.

இசின் என்பது இறந்தகால இடைநிலையாயும்; மகரமெய்யும், மன் என்பதும் எதிர்கால இடைநிலைகளாயுஞ் செய்யுளில் வரும்.

(உ-ம்.) என்றிசினோர், என்மர், என்மனார்.

'ஈங்கே' என்றமிகையால், வருதி (வருகிறாய்) என இகரவிகுதி நிகழ்காலங் காட்டுதலையும், இன்னுஞ் சில வினைமுற்றுகளிலும் பெய ரெச்ச வினையெச்சங்களிலும் இடைநிலையின்றி விகுதி காலங்காட்டு தலையும் அமைத்துக்கொள்க.

"பகுதி விகுதி" என்னுஞ் சூத்திரம் முதல் இச்சூத்திரம் வரை யும் பகுபதங்களை மேலோர் முடித்தவாறு முடித்துக் காட்டினமை யால், 'முடித்துக் காட்டல்' என்னும் உத்தி. முன்னைத் தமிழ்நூல்க ளில் இல்லாதவைகளை இவ்வாசிரியர் தாமே பகாப்பதம் பகுபதமென முன்னேநாட்டி இச்சூத்திரம் வரையும் அவற்றிற்கு இலக்கணங் கூறி நிறுத்தினதனால், இது, 'தாஅனுட்டித் தனது நிறுப்பு' என்னும்மதம்.

[இனிப்பகுதிவிகுதி முதலிய உறுப்புகளாற் பகுபத முடிக்குமாறு.]

பொன்னன் என்கிற உயர்திணை யாண்பாலொருமைப் படர்க் கைப் பொருட்பெயர்ப் பகுபதத்தை முடிக்குமிடத்து "பொருளிடங் காலம்" என்னுஞ் சூத்திரவிகுதியால் பொன்-என்னும் பகுதியைமுத லில் வைத்து, அதன்பின் "அன் ஆன், அள் ஆள்" என்னுஞ் சூத்திர விதியால் உயர்திணை யாண்பாலொருமைப் படர்க்கையைக் காட்டுகிற அன் விகுதியை வருவித்து, பொன் - அன் எனவைத்து, "தனிக்கு றின் முன்னொற்றுயிர்" என்னுஞ் சூத்திர விதியால் அந்த னகரமெய்

யை இரட்டித்து பொன்-ன்-அன் எனவைத்து, "உடன்மேலுயிர்" என்னுஞ் சூத்திரவிதியால் அகரவுயிரை மிகுந்த னகரமெய்யின் மே லேற்றி, பொன்னன் எனமுடிக்க. நடந்தனன் என்கிற உயர்திணை யாண்பா லொருமைப் படர்க்கை யிறந்தகால இயற்றும்வினைமுதற் றெரிநிலை வினைமுற்றுப் பகுபதத்தை முடிக்குமிடத்து "நடவா" என்னுஞ் சூத்திரவிதியால் நடவென்னும் பகுதியை முதலில்வைத்து "அன், ஆன், அள், ஆள்" என்னுஞ் சூத்திரவிதியால் உயர்திணை யாண்பா லொருமைப் படர்க்கையைக் காட்டுகிற அன் விகுதியை அதன்பின் வருவித்து நட-அன் எனவைத்து, "தடறவொற்றின்னே என்னுஞ்" சூத்திரவிதியால் இறந்தகாலங் காட்டுந் தகர விடைநிலை யை அவ்விரண்டிற்கும் நடுவிலே வருவித்து, நட-த்-அன் எனவை த்து, "அன் ஆன் இன் அல்" என்னுஞ் சூத்திரவிதியால் இடைநிலைக் கும் விகுதிக்கு மிடையே அன் சாரியையை வருவித்து, நட-த்-அன்-அன் எனவைத்து, "உடன்மேலுயிர்வந்து" என்னுஞ் சூத்திரவிதி யால் இடைநிலைத் தகர மெய்யின்மேலே சாரியை அகரவுயிரையே ற்றி, நட-தன்-அன் என வைத்து, இன்னும் அச்சூத்திரவிதியால் சாரியை னகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரை யேற்றி, நட-தனன் எனவைத்து, 'இயல்பினும்' என்னுஞ் சூத்திர விதியால் இடைநிலைத் தகரத்தை மிகுவித்து, நடத்தனன் எனவைத்து, 'வலித் தன் மெலித்தல்" என்னுஞ் சூத்திரவிதியால் மிகுந்த தகர வல்லொ ற்றை மெல்லொற்றாக்கி, நடந்தனன் என முடிக்க.

நட - உண் எனவருகிற முன்னிலையேவல் வினைகளிலே ஆய் விகுதியும், நடவான்-நடவேன்-நடவாய் என்கிற எதிர்மறை வினைக ளிலே ஆ என்னு மெதிர்மறை விகுதியும், கொல்களிறு - ஓடா+ குதிரை என்பவைகளிலே கொன்ற-கொல்கின்ற - கொல்லும், ஓடாத எனவருகிற பெயரெச்சவினை விகுதிகளும், 'வரிப்புனைபந்து' இதில் வரிந்து எனவருகிற வினையெச்ச விகுதியும், கொள்வாருங் கள்வரு நேர்" இதில் நேர்வர் என வருகிற முற்று வினைவிகுதியும், முடி - அடி என்பவைகளிலே முடித்தல் - அடித்தல் எனவருகிற தொழிற் பெயர் விகுதியும், காய் - தளிர் இவைகளில் வினைமுதற் பொருளு ணர்த்தும் இகரவிகுதியும், ஊண் - எழுத்து இவைகளிலே செயப் படு பொருளுணர்த்தும் ஐவிகுதியும் புணர்ந்துகுன்றின. அவ்விகுதி கள் புணர்ந்து குன்றினும் புணர்ந்து நின்றாற்போலவே பொருளு ணர்த்தும். (கஅ)

வடமொழி ஆக்கம்.

[ஆரியமொழி தமிழில் வருதல்.]

146. இடையி னான்கு மீற்றி லிரண்டும்
அல்லா அச்சை வருக்க முதலீறு
யவ்வாதி நான்மை ளவ்வாகு மையைம்
பொதுவெழுத் தொழிந்தநா லேழுந் திரியும்.

(இ-ள்) இடையில் நான்கும் - (ஆரியமொழியுள் அச்சு என்று வழங்குகின்ற உயிர்பதினாறனுள்) நடுவிலிருக்கின்ற (𑌋 𑍠 𑌌 𑍡 என்னும்) நாலெழுத்துக்களும், ஈற்றில் - கடையிலிருக்கின்ற, இரண்டும் (𑌅𑌂 𑌅𑌃 என்னும்) இரண்டெழுத்துக்களும், அல்லா-நீங்கலாகிய, அச்சு - (அ ஆ இ ஈ உ ஊ எ ஐ ஒ ஔ என்னும் பத்து) உயிர்களும், வருக்கம் - (ஹல் என்கிற மெய் முப்பத்தேழுள் க ச ட த ப என்னும்) ஐந்து வருக்கங்களின், முதல் - முதலிலிருக்கின்ற (க ச ட த ப என்னும்) ஐந்துமெய்களும், ஈறு-கடையிலுள்ள (ங ஞ ண ந ம என்னும்) ஐந்துமெய்களும், ய-ஆதி யகரமுதலிய, நான்மை-யரலவ என்னும் நான்கு மெய்களும், ள-ளகரமெய்யும், ஆகும்-ஆகிய, ஐயைம் எழுத்து - இருபத்தைந்து எழுத்துக்களும், பொது-தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொது வெழுத்துக்களாகும்; ஒழிந்த-அவையொழிந்த, நாலேழும்-இருபத்தெட்டு எழுத்துக்களும், திரியும்-(ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்களாய்த் தமிழில் தமக்கேற்ற பொது வெழுத்துக்களாய்த்) திரிந்துவரும், எ-று.

மேல் 'ஏழாமுயிர்' என விதந்து கூறுவராதலால், 'இடையினான்கு' என விரவாது கூறினர். ஐயைந்து பொதுவெழுத்து எனவே, ஏலேழ் சிறப்பெழுத்து என்பது பெறப்பட்டது. சிறப்பெழுத்துத் திரியுமெனவே, பொது வெழுத்து இயல்பாயுந் தமக்கேற்ற விகாரமாயும் வருமென்பதாயிற்று.

ஆரிய மொழியுள் உயிரெழுத்துப் பதினாறுவன:—𑌅 𑌆 𑌇 𑌈 𑌉 𑌊 𑌋 𑍠 𑌌 𑍡 𑌏 𑌐 𑌓 𑌔 𑌅𑌂 𑌅𑌃.

இவற்றுள், 𑌋 𑍠 𑌌 𑍡 𑌅𑌂 𑌅𑌃 என்னும் ஆறும் ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்கள். மற்றைப்பத்தும் ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்துக்கள்.

மெய்யெழுத்து முப்பத்தேழாவன:—𑌕 𑌖 𑌗 𑌘 𑌙 𑌚 𑌛 𑌜 𑌝 𑌞 𑌟 𑌠 𑌡 𑌢 𑌣 𑌤 𑌥 𑌦 𑌧 𑌨 𑌪 𑌫 𑌬 𑌭 𑌮 𑌯 𑌰 𑌲 𑌵 𑌶 𑌷 𑌸 𑌹 𑌳 𑌕𑍍𑌷.

இவற்றுள் ఖ గ ఘ ఛ జ ఝ ఠ డ ఢ థ ద ధ ఫ బ భ శ ష స హ క్ష ఙ్క్ష ఞ్జ్ఞ என்னும் இருபத்திரண்டும் ஆரியத்திற்குச்சிறப்பெழுத்துக்கள். மற்றைப் பதினைந்தும் ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்துககள்.

ஐவருக்கமாவன:—

கவர்க்கம்—క ఖ గ ఘ ఙ

சவர்க்கம்—చ ఛ జ ఝ ఞ

டவர்க்கம்—ట ఠ డ ఢ ణ

தவர்க்கம்—త థ ద ధ న

பவர்க்கம்—ప ఫ బ భ మ

ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்தாலாகி விகாரமின்றித் தமிழில்வந்து வழங்கும் வடமொழி தற்சமம் எனப்படும்.

(உ-ம்.) அமலம், கமலம், காரணம், குங்குமம்.

ஆரியத்திற்கே உரிய சிறப்பெழுத்தாலும், பொதுவுஞ் சிறப்புமாகிய ஈரெழுத்தாலுமாகித் திரிதல் முதலிய விகாரம்பெற்றுத் தமிழில்வந்து வழங்கும் வடமொழி தற்பவம் எனப்படும்.

(உ-ம்.) సుఖీ-சுகி, భోగి-போகி, శుద్ధి:-சுததி இவை - சிறப்பெழுத்தாலாகி விகாரம்பெற்றுத் தமிழில்வந்து வழங்குந் தற்பவமொழி.

హరః-அரன், జయః-சயம், జ్ఞానం - ஞானம், హరిః - அரி இவை பொதுவுஞ் சிறப்புமாகிய ஈரெழுத்தாலுமாகி விகாரம்பெற்றுத் தமிழில் வந்து வழங்குந் தற்பவமொழி.

[ஆரியமொழி வடமொழியாதற்குச் சிறப்புவிதி.]

147. அவற்றுள்,—ஏழாமுயி ரிய்யு மிருவுமை வருக்கத்
திடையின் மூன்று மவ்வம் முதலும்
எட்டே யவ்வு முப்பது சயவும்
மேலொன்று சடவு மிரண்டு சதவும்
மூன்றே யகவு மைந்திரு கவ்வும்
ஆவீ றையு மீயீ றிகரமும்.

(இ-ள்.) அவற்றுள் - முன்னே "திரியும்" என்ற எழுத்துகளுள், ஏழாமுயிர் - சிறப்பெழுத்தாகிய வேழாமுயிரானது, இய்யு மிருவும்-இகரமாகவாவது இருவாகவாவது வரும், ஐவருக்கத்து-

ஐந்து வருக்கங்களிலும், இடையின் மூன்றும் - நடுநின்ற மும்மூன் றெழுத்துக்களும், அவ்வம்முதலும் - அவ்வவ்வருக்கங்களின் முதலெழுத்துகளாகும், எட்டு-எட்டாவதாகிய சகரவருக்கத்து மெய்யானது, யவ்வும் - ஓரோவிடத்தில் யகரமுமாகும், முப்பது - முப்பதா மெய்யானது, சயவும் - மொழிக்கு முதலிலே சகரமும் நடுவிலே யகரமுமாகும், மேலொன்று-முப்பத்தொன்று மெய்யானது, சடவும்-மொழிக்கு முதலிலே சகரமும் நடுவிலே டகரமுமாகும், இரண்டு - முப்பத்திரண்டா மெய்யானது, சதவும் - மொழிக்கு முதலிலே சகரமும் நடுவிலே தகரமுமாகும், மூன்று - முப்பத்து மூன்றுமெய்யானது, அகவும் - மொழிக்கு முதலிலே அகரமும் நடுவிலேககரமுமாகும், ஐந்து-முப்பத்தைந்தா மெய்யானது, இருகவ்வும் - இரண்டு ககரமாகும், ஆ ஈறு-பொது வெழுத்துகளிலே மொழியிறுதி ஆகாரமானது, ஐயும் - ஐகாரமாகும், ஈ ஈறு - மொழியிறுதி ஈகாரமானது, இகரமும்-இகரமுமாகும், எ-று.

(உ - ம்.) இடபம்,—மிருகம்:—எழாமுயிர் இகரமும் இருவுமாயிற்று. நகம் - நாகம் - மேகம்:—சலவாதி - விசயம் - சருச்சரை:—டம் - பீடை - திடம்:—தலம் - தினம் - தரை:—பலம் - பந்தம் - பாரம்:— ஐந்து வருக்கங்களிலும் உரப்பியும் எடுத்தும் கனைத்துஞ் சொல்லப்படுகிற மும்மூன்றும் அவ்வவ்வருக்க முதலெழுத் தாயின. பங்கயம் எட்டாமெய் யகரமாயிற்று. சாலை:—மயானம்:—முப்பதா மெய்முதலிற் சகரமும் நடுவில் யகரமுமாயிற்று. சட்டி—இடபம்:—முப்பத்தொன்று மெய் முதலிற் சகரமும் நடுவில் டகரமுமாயிற்று. சித்தி:—வாதனை:—முப்பத்திரண்டாமெய் முதலிற் சகரமும் நடுவில் தகரமுமாயிற்று. அரன்:—மோகம்:—முப்பத்து மூன்றுமெய்முதலில் அகரமும் நடுவிற் ககரமுமாயிற்று. பக்கம் என முப்பத்தைந்தா மெய் இரண்டு ககரமாயிற்று. மாலை என ஆ ஈறு ஐயாயிற்று. புரி என ஈகாரவீறு இகரவீறாயிற்று. (௨0)

148. ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்
லவ்விற் கிம்முத லிரண்டும் யவ்விற்
கிய்யு மொழிமுத லாகிமுன் வருமே.

(இ - ள்.) ரவ்விற்கு-ரகரத்திற்கு, அம்முதலாம் முக்குறிலும் - அகரமுதலாகிய மூன்று குற்றெழுத்துக்களி லொன்றும், லவ்விற்கு - லகரத்திற்கு, இம்முதலிரண்டும்-இகரமுதலாகிய இரண்டிலொன்றும், யவ்விற்கு - யகரத்திற்கு, இய்யும் - இகரமும், மொழி முதலாகி -

'அவ்வெழுத்துகளைமுதலிலுடைய' வடமொழிகளுக்குமுதலாகி,முன் வரும் - அம்மூன்றெழுத்துகளுக்கு முன்னேவரும், எ - று.

(உ - ம்.) அரங்கம் - இராமன் - உரோமம்:—இலாபம்-உலோபம்.—இயக்கன். சிறுபான்மை யகரத்திற்கு உகரமும் வரும். (உ-ம்.) யுத்தம் - உயுத்தம். (உசு)

149. இணைந்தியல் காலை யரலக் கிகரமும்
மவ்வக் குகரமு நகரக் ககரமும்
மிசைவரும் ரவ்வழி யுவ்வு மாம்பிற.

(இ-ள்.) இணைந்து - ஆரியமொழியுள் இரண்டெழுத்து இணைந்து, இயல்காலை - ஒரெழுத்தைப்போல நடக்கும்போது, யரலக்கு - பின்னின்ற யகர ரகர லகரங்களுக்கு, இகரமும் - இகாரமும், மவ்வக்கு - மகர வகரங்களுக்கு, உகரமும் - உகாரமும், நகரக்கு - நகரத்திற்கு, அகரமும் - அகாரமும், மிசை - மேலே, வரும் - வந்து வடமொழிகளாகும், ரவ்வழி - இணைந்து முன்னின்ற ரகத்திற்குப் பின், உவ்வுமாம் - உகாரமும் வரும், எ - று.

வாச்யம் - வாக்கியம்		
வக்ரம் - வக்கிரம்	}	யரலக்கு இகரம்
சுக்லம் - சுக்கிலம்		
பத்மம் - பதுமம்	}	மவ்வக்கு உகரம்.
பக்வம் - பக்குவம்		

ரத்நம் - அரதநம் - நகரத்துக்கு அகரம்.
அர்த்ரம் - அருத்ரம் - ரகாரத்துக்கு உகரம்.

பிறவென்றதனால்:—சத்தி-காட்டு-காப்பியம் - பருப்பதம் இவை முதலாகிய திரிபும், தூலம் - அத்தம் - ஆதித்தன் இவை முதலாகிய கேடும், மற்றும் விகாரத்தால் வருவனவுங் கொள்க. (உ0)

[தமிழெழுத்திற்குச் சிறப்பெழுத்தும் பொதுவெழுத்தும்.]

150. றனழஎ ஒவ்வு முயிர்மெய்யு முயிரள
பல்லாச் சார்புந் தமிழ்பிற பொதுவே.

(இ - ள்.) ற ன ழ எ ஒ வ்வும் - முதலுஞ் சார்புமாகிய தமிழெழுத்து நாற்பதுகளிலே றகர னகர ழகர எகர ஒகரங்களைந்தும், உயிர்மெய்யு முயிரளபல்லாச் சார்பும்-உயிர்மெய்யும் உயிரளபெடையுமல்லாத சார்பெழுத்தெட்டும், தமிழ் - தமிழுக்கே சிறப்பெழுத்துகளாம், பிற - ஒழிந்த இருபத்தேழெழுத்துகளும், பொது - பொதுவெழுத்துகளாம். (உக)

பதவியல் முற்றுப்பெற்றது.

மூன்றாவது
உயிரீற்றுப்புணரியல்.

151. மெய்யுயிர் முதலீ றாமிரு பதங்களும்
தன்னொடும் பிறிதொடு மல்வழி வேற்றுமைப்
பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே.

(இ - ள்.) மெய்யுயிர் - மெய்யாவது உயிராவது, முதலீறும் - முதலு மீறுமாகிய, இருபதங்களும் - பகாப்பதம் பகுபதம் என்கிற விரண்டு பதங்களும், தன்னொடும்பிறிதொடும் - தன்னொடுதானும் பிறிதொடுபிறிதுமாய், அல்வழிவேற்றுமைப் பொருளின் - அல்வழிப்பொருளினாலாவது வேற்றுமைப் பொருளினாலாவது, பொருந்துழி - பொருந்துமிடத்து, நிலைவருமொழிகள் - நிலைமொழியும் வருமொழியும், இயல்பொடு விகாரத்து - இயல்போடாயினும் விகாரத் [illegible] லப்பட்ட புணர்ச்சியாம், எ-று.

'மெய்யுயிர்முதலீறும்' எனவே மெய்ம்முதன்மெய்யீறு - உயிர் முதலுயிரீறு - மெய்ம்முதலுயிரீறு - உயிர்முதன்மெய்யீறு எனநான்கு வகையாம்.

இவ்வியலுள் புணர்ச்சி இன்னதென்பதும் பொதுப்புணர்ச்சியும், உயிரீற்றுப்பதம் புணரும் சிறப்புப்புணர்ச்சியும் கூறுவோர் இவ்வியலை உயிரீற்றுப் புணரியல் என்றது என்னையெனின் அவை சிறுபான்மையாதலால் கமுகந்தோட்ட மென்றாற்போல மிகுதிபற்றிய குறியாய் இந்த இயலுக்கு உயிரீற்றுப் புணரியல் எனப்பெயர் தந்தார் என்க.

[வேற்றுமை அல்வழிப் புணர்ச்சிகள்.]

152. வேற்றுமை யைம்முத லாறுமல்வழி
தொழில்பண் புவமை யும்மை யன்மொழி
எழுவாய் விளியீ ரெச்சமுற் றிடையுரி
தழுவு தொடரடுக் கெனவீ ரேழே.

(இ - ள்.) வேற்றுமை - வேற்றுமைப்புணர்ச்சியாவது, ஐம்முதலாறும் - ஐ ஆல் கு இன் அது கண் என்கின்ற ஆறுருபுகளும் மறை

ந்தாகிலும் வெளிப்பட்டாகிலும் வரப்பதங்கள் பொருந்துந் தொடர்ச்சியாம், அல்வழி - அல்வழிப்புணர்ச்சியாவது, தொழில் - வினைத்தொகையும், பண்பு - பண்புத்தொகையும், உவமை - உவமைத்தொகையும், உம்மை - உம்மைத்தொகையும், அன்மொழி - அன்மொழித்தொகையும், எழுவாய் - எழுவாயும், விளி - விளியும், ஈரெச்சம் - பெயரெச்ச வினையெச்சங்களும், (ஈர்) முற்று - தெரிநிலை வினைமுற்று குறிப்பு வினைமுற்றுகளும், இடை - இடைச்சொல்லும், உரி - உரிச்சொல்லும், அடுக்கு - அடுக்கும், என - என்று, தழுவு தொடர்-பதங்கள்பொருந்துந்தொடர்ச்சி, ஈரேழ் - பதினான்கு வகையாம், எ - று.

[உதாரணம்.]

[வேற்றுமைப் புணர்ச்சி.]

1	ஐ	நிலங்கடந்தான்	நிலத்தைக்கடந்தான்
2	ஆல்	கல்லெறிந்தான்	கல்லாலெறிந்தான்
3	கு	கொற்றன்மகன்	கொற்றனுக்குமகன்
4	இன்	மலைவீழருவி	மலையின்வீழருவி
5	அது	சாத்தன்கை	சாத்தனது கை
6	கண்	குன்றக்கூகை.	குன்றத்தின்கட்கூகை

[அல்வழிப்புணர்ச்சி.]

தொகைநிலைத்தொடர் - 5.

1	வினைத்தொகை	கொல்யானை; அடுகளிறு.
2	பண்புத்தொகை	கருங்குதிரை, செந்தாமரை
	இருபெயரொட்டுப் பண்புத்தொகை	சாரைப்பாம்பு; ஆயன்சாத்தன்.
3	உவமைத்தொகை	மதிமுகம், பவளவாய்.
4	உம்மைத்தொகை	சேரசோழபாண்டியர் ; இராப்பகல்,
5	அன்மொழித்தொகை	பொற்றொடி; தாழ்குழல்.

[தொகாநிலைத்தொடர். - 9.]

6	எழுவாய்த்தொடர்	சாத்தன்வந்தான், கொற்றனைகண்டான்.
7	விளித்தொடர்	சாத்தாவா; கொற்றாகேள்
	பெயரெச்சத்தொடர்	வந்தசாத்தன்; வருகின்றசாத்தன்.
	வினையெச்சத்தொடர்	வந்துபோனான்; வரப்போனான்.
10	தெரிநிலைவினைமுற்று	வந்தான்சாத்தன்; கண்டான்கொற்றன்.
11	குறிப்புவினைமுற்று	குழையன்கொற்றன்; பெரியன்சாத்தன்.
12	இடைச்சொற்றொடர்	மற்றொன்று; கொன்னே கழிந்தன்று.

13 உரிச்சொற்றொடர் நனி பேதை; கடிக்கமலம்.
14 அடுக்குத்தொடர் பாம்புபாம்பு; நெருப்புநெருப்பு.

இவை தழுவுதொடர் எனவே அவ்விருவழியிலுந்தழாத்தொடருஞ் சிலவுண்டென்பதாயிற்று. கைக்களிறு என்பது கையையுடைய களிறு எனவிரிக்கப்படுதலால் கை என்பது களிறு என்பதைத் தழுவாமையால் இப்படி வருகின்றவைகளெல்லாந் தழாத்தொடராகிய வேற்றுமைப் புணர்ச்சியாம். சுரையாழ அம்மிமிதப்ப என்பது சுரைமிதப்ப அம்மியாழ எனக் கூட்டப்படுதலால், சுரை என்பது ஆழ என்பதையும், அம்மி என்பது மிதப்ப என்பதைபுந் தழுவாமையால் இப்படி வருகின்றவைகளெல்லாந் தழாத்தொடராகிய அல்வழிப் புணர்ச்சியாம்.

தழுவு தொடராவது நிலைமொழியானது வருமொழியைப் பொருட் பொருத்தமுறத் தழுவும் தொடராம். தழாத்தொடராவது நிலை மொழியானது வருமொழியைப் பொருட் பொருத்தமுறத்தழுவாத தொடராம்.

எட்டு வேற்றுமைகளில் முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபு பெயரும் பெயரின் விகாரமுமே யன்றித் தமக்கென வேறு உருபு இல்லாமையால், அவ்விரண்டையும் எழுவாய், விளி என்று அல்வழியில் சேர்த்து, அவையொழிந்த ஆறையும் வேற்றுமைப் புணர்ச்சியென்றார், வேற்றுமை யல்லாத வழி அல்வழி என்க.

[இயல்புப்புணர்ச்சி.]

153. விகார மனைத்து மேவல தியல்பே.

(இ - ள்.) விகாரமனைத்தும் - மேல்வரும் விகாரவகை யனைத்தும், மேவலது - அடையாதது, இயல்பு - இயல்புப்புணர்ச்சியாம்

(உ - ம்.) பொன்மலை - புகழுகிது - ஒளிமணி. (ரு)

[விகாரப்புணர்ச்சி.]

154. தோன்ற றிரிதல் கெடுதல் விகாரம்
மூன்று மொழிமூ விடத்து மாகும்.

(இ - ள்.) தோன்றல் - எழுத்தாவது சாரியையாவது தோன்றுதலும், திரிதல் - வேறுபடுதலும், கெடுதல் - கெடுதலும், விகாரம், முன்சொன்ன விகாரமாகும், மூன்றும் - இம்மூவகை விகாரமும், மொழி - நிலைமொழி வருமொழிகளுடைய, மூவிடத்தும்-முதலிடைகடை என்கின்ற மூன்றிடத்தும், ஆகும்-ஏற்றபடிவரும், எ-று.

[உதாரணம்.]

பூ	+ கொடி = பூங்கொடி.	வருமொழி முதலில் மெய்தோன்றிற்று.
பல்	+ தலை = பஃறலை.	வருமொழி முதலிலும், நிலைமொழியீற்றிலுமுள்ள மெய்கள திரிந்தன
நில	+ வலயம் = நிலவலயம்.	நிலைமொழி யீற்றுமெய் கெட்டது
ஆறு	+ பத்து = அறுபது.	நிலைமொழி முதலுயிர்திரிந்து, வருமொழியிடை ஒற்றுக்கெட்டது
பல	+ பொருள் = பல்பொருள்	நிலைமொழி யீற்றுயிர்கெட்டது.
நாழி	+ உரி = நாடுரி.	நிலைமொழியீற்றுயிர் மெய்கெட்டு, டகரமெய் தோன்றிற்று.
பனை	+ காய் = பனங்காய்.	சாரியை தோன்றிற்று.

[செய்யுள்விகாரம்.]

155. வலித்தன் மெலித்த னீட்டல் குறுக்கல்
விரித்த றொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி.

(இ-ள்) வலித்தல் - மெல்லொற்றை வல்லொற்றாக்கலும் மெலித்தல் - வல்லொற்றை மெல்லொற்றாக்கலும், நீட்டல் - குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்கலும், குறுக்கல் - நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்கலும், விரித்தல்-இல்லாதவெழுத்தை வருவித்தலும், தொகுத்தல் - உள்ளவெழுத்தை நீக்கலும், வரும் - வருவனவாம், செய்யுள் - செய்யுளிடத்து, வேண்டுழி - அடி தொடை முதலானவைகளை நோக்கி அமைக்க வேண்டுமிடத்து, எ - று.

(உ-ம்) "குறுத்தாட் பூதஞ்சுமந்த வறக்கதிராழியெம் மண்ணலைத்தொழினே" குறுந்தாளில் - நகரமெல்லொற்று வல்லொற்றாக்கப்பட்டது. "தண்டையின் அக்கிளி கடிவோள் பண்டையளல்லன் மானேக்கினளே" தட்டையில் - டகரவல்லொற்று மெல்லொற்றாக்கப்பட்டது. தீத்தொழிலே கன்றித்திரி தாந்தெருவை போற் போத்தரூர் புல்லறிவினார்" பொத்தில் - குற்றெழுத்து நெட்டெழுத்தாக்கப்பட்டது. "யானை-யெருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன்றிருத்தார் நன்றென்றேன் றியேன்" தீயேனில் - நெட்டெழுத்துக் குற்றெழுத்தாக்கப்பட்டது. சிறியிலை வெதிரி னெல்விளையும்மே" விளையும்மே என்பதில் - மகரமெம் விரிக்கப்பட்டது ; சிறியவிலையில் - அகரவுயிர் தொகுக்கப்பட்டது.

புணர்ச்சி விகாரத்துக்கும் செய்யுள் விகாரத்துக்கும் வேறுபாடு பதவியல் 6-ஆம் சூத்திரத்திற் கூறப்பட்டது. (௫)

156. ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே.

(இ - ள்.) ஒருமொழி - ஒருசொல்லினுடைய, மூவழி - முதலிடைகடையென்கிற மூன்றிலோரிடத்து, குறைதலும் - குறைந்து வருதலும், அனைத்து - அச்செய்யுள் விகாரமாம், எ - று.

(உ-ம்) "மரையிதழ்புரையு மஞ்செஞ்சீறடி" தாமரையில் முதலெழுத்துக் குறைந்தது. "வேதினை வெரிநி னோதி முது போத்து" ஓந்தியில் இடையெழுத்துக் குறைந்தது. "நீலுண் டுகிலிகைகடுப்ப" நீலத்திற் கடையெழுத்துக் குறைந்தது.

இன்னும் "குறைதலும்" என்ற எச்ச வும்மையால் விதியின்றி வருகிற விகாரங்களுஞ் சிலவுண்டு; அவைவருமாறு:—யாது - யாவது எனத்தோன்றலும், மாசி - மாசி எனத்திரிதலும், யார் - ஆர் எனக்கெடுதலும், பொழுது - போழ்து என நீளலும், மிஞிறு - ஞிமிறு, தசை - சதை எனவெழுத்தும், நகர்ப்புறம் - புறநகர், இன்முன் - முன்றில், இல்வாய் - வாயில், கண்மீ - மீகண், எனச்சொல்லும் நிலைமாறுதலும் ஆகிய இவை முதலாயினவாம். (௬)

[புணர்ச்சி விகாரத்தால் வருவதோர் ஐயமொழித்தல்.]

157. ஒருபுணர்க்கிரண்டு மூன்று முறப்பெறும்.

(இ-ள்.) ஒருபுணர்க்கு-ஒருபுணர்ச்சிக்கு, இரண்டும் மூன்றும்- ஒன்றே யல்லாமலிரண்டும்மூன்றும்,உறப்பெறும்-வரப்பெறும், எ-று.

[உதாரணம்.]

யானை + கோடு = யானைக்கோடு. தோன்றல்.
நிலம் + பனை = நிலப்பனை. கெடுதலும் தோன்றலும்.
பனை + காய் = பனங்காய். கெடுதலும்தோன்றலும்திரிதலும்.

[எல்லாவீற்றின்முன்னும் மெல்லினமும் இடையினமும் புணர்தல்.]

158. எண்மூ வெழுத்திற் றெவ்வகை மொழிக்கும்
முன்வரு ஞநமய வக்க ளியல்பும்
குறில்வழி யத்தனி யைந்நொது முன்மெலி
மிகலுமாம் ணளனல வழிநத்திரியும்.

(இ-ள்.) எண்மூவெழுத்து-இருபத்துநான் கெழுத்துகளையும், ஈறு - இயல்பினாலாயினும் விதியினாலாயினும் ஈறாகவுடைய, எவ்வகைமொழிக்கும் - பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல்

உரிச்சொல் திசைச்சொல் வடசொல் என்கிற பலவகைப்பட்ட சொற்களுக்கும், முன் - முன்னே, வரும் - வருகிற, ஞநமயவக்கள்- ஞகர நகர மகர யகர வகரங்கள், இயல்பும் - அல்வழி வேற்றுமை யிரண்டிலு மியல்பாதலும், குறில்வழி ய - குற்றெழுத்தின் பின் நின்றயகரமெய்யும், தனி ஐ - உயிர் உயிர்மெய் என்கிற ஐகாரமும், நொ - நொவ்வும், து - துவ்வும், முன் - என்பவைகளுக்கு முன் வருகிற, மெலி - ஞகர நகர மகரங்கள், மிகலும் - பிறசொற் களுக்கு முன் இயல்பாதலன்றி மிகுந்துமுடிதலும், ஆம்-ஆகும், ணள னல வழி - ணளனலக்களின் முன்வருகிற, ந - நகரமானது, திரி யும் - மற்றையீறுகளுக்கு முன் னியல்பாதலன்றித்திரியும், எ-று.

புணரியலிலெங்கும் அல்வழி வேற்றுமைகளிலொன்றைக் குறி ப்பாக வாலும் வெளிப்படையாக வாலுங் காட்டாமற்போனால் அவ்விரண்டையுங்கொள்க.

(உ-ம்.) விள, பலா, கிளி, தீ, கடு, பூ, சே, பனை, சோ, கௌ, உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், யாழ், வாள், எஃகு-இவற்றின் முன் ஞான்றது-நீண்டது-மாண்டது- யாது - வலிது:—ஞாற்சி - நீட்சி - மாட்சி - யாப்பு - வலிமை இவற் றை வருவித்து:—

(அல்வழி.)	(வேற்றுமை.)
விளஞான்றது	விளஞாற்சி.
விளநீண்டது	விளநீட்சி.
விளமாண்டது	விளமாட்சி.
விளயாது	விளயாப்பு.
விளவலிது	விளவலிமை.

என முறையே கூட்டி எல்லாவீற்றன்முன்னும் ஞ ந ம ய வக்க ளியல்பாதல் காண்க.

உரிஞுஞான்றது. வாண்ஞான்றது.
பொருநுஞான்றது. மரஞான்றது.
வேன்ஞான்றது.

என நிலைமொழியீறுகள் விகாரப்படுதல் அவ்வவ்வீற்றுச் சிறப்பு விதிகளிற் காண்க.

(அல்வழி.)

கைஞ்ஞான்றது.	மெய்ஞ்ஞான்றது.
கைந்நீண்டது.	மெய்ந்நீண்டது.
கைம்மாண்டது.	மெய்ம்மாண்டது.

(வேற்றுமை.)

கைஞ்ஞாற்சி.	மெய்ஞ்ஞாற்சி.
கைந்நீட்சி.	மெய்ந்நீட்சி.
கைம்மாட்சி.	மெய்ம்மாட்சி.

எனக்குறின் முன்னின்ற யகரத்தின் முன்னுந் தனி ஐம் முன்னும் மெலிமிகுதல் காண்க.

"நொது முன்மெலி மிகலுமாம்" என்ற எச்ச வும்மையால் அவ்விரண்டன் முன்னும் இடையெழுத்து மிகலுமா மென்றதாயிற்று.

நொஞ்ஞெள்ளா.	துஞ்ஞெள்ளா.
நொந்நாகா.	துந்நாகா.
நொம்மாடா.	தும்மாடா.
நொய்யவணு.	துய்யவணு.
நொவ்வளவா.	துவ்வளவா.

இவை வினைச்சொற்களாதலால் அல்வழியிலே மிகுந்தன.

"ண ள ன ல வழிநத்திரியும்" என்றது பின்வரும் "னலமுன்றன வும்" என்னுஞ் சூத்திரத்திலே காண்க. இச்சூத்திர முதலாக வொன்றற் கொன்று தொடர்ச்சியாகப் புணர்த்தலால், 'தொடர்ச் சொற்புணர்த்தல்' என்னுமுத்தி. (அ)

[பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்களோடு நாற்கணமும்புணர்தல்.]

159 பொதுப்பெய ருயர்திணைப் பெயர்க ளீற்றுமெய்
வலிவரி னியல்பா மாவி யரமுன்
வன்மை மிகாசில விகாரமா முயர்திணை.

(இ - ள்.) பொதுப்பெயர் - இருதிணைகளுக்கும் பொதுவான பெயர்களுக்கும், உயர்திணைப் பெயர்கள் - உயர்திணைப்பெயர்களுக்கும், ஈற்றுமெய் - ஈற்றிலுள்ள மெய்கள், வலி- வல்லெழுத்து முதன் மொழிகள், வரின் - வந்தால், இயல்பாம் - இயல்பாகும், ஆவி - உயிரையும், யர - யகர ரகர மெய்களையு மீறாகவுடைய அவ்விருவகைப் பெயர்களுக்கும், முன் - முன்வருகிற, வன்மை - வல்லெழுத்துகள், மிகா - மிகாவாம், உயர்திணை-உயிரீறு மெய்யீறுமாகிய உயர்திணைப்பெயர்கள் நாற்கணங்களோடும் புணருமிடத்து, சிலவிகாரமாம் - நிலைமொழி வருமொழிகள் விகாரப்படுவனவுஞ் சிலவுளவாம்.

பொதுப் பெயராவது - உயர்திணை அஃறிணை யிரண்டுக்கும் பொதுவாய் வரும்பெயர். பொதுப்பெயர் விரவுப்பெயர் என்பன ஒருபொருட்சொற்கள். விரவுப்பெயர் - கலத்தலுடைய பெயர்.

வலி என்றது - மொழிக்கு முதலில்வரும் க ச த ப க்களை.

நாற்கணமாவன - வன்கணம், மென்கணம், இடைக்கணம், உயிர்க்கணம்.

(உ-ம்.)

	அல்வழி.	வேற்றுமை
சாத்தன் கொற்றன் ஆண்	சாத்தன் குறிது சாத்தன் சிறிது சாத்தன்றீது சாத்தன் பெரிது சாத்தன்குறியன் சாத்தன் சிறியன் சாத்தன்றீயன் சாத்தன்பெரியன்	சாத்தன் கை சாத்தன்செவி சாத்தன்றலை சாத்தன்புறம்

எனப் பொதுப்பெயரீற்று மெய் வலி வர இயல்பாயின.

	அல்வழி.	வேற்றுமை.
ஊரன் கூனன் அவன்	ஊரன் குறியன் ஊரன் சிறியன் ஊரன் றீயன் ஊரன் பெரியன்	ஊரன் கை. ஊரன் செவி ஊரன் றலை ஊரன் புறம்

என உயர்திணைப் பெயரீற்று மெய் வலி வர இயல்பாயின.

	அல்வழி.	வேற்றுமை.
சாத்தி தாய்	சாத்திகுறிது சாத்திசிறிது சாத்திதீது சாத்திபெரிது	சாத்திகை சாத்திசெவி சாத்திதலை சாத்திபுறம்

		அல்வழி.
சாத்திகுறியள் சாத்திசிறியள் சாத்திதீயள் சாத்திபெரியள்	நீர்	நீர்குறியீர் நீர்சிறியீர் நீர்தீயீர் நீர்பெரியீர்

எனப் பொதுப்பெயரீற்று ஆவியகரமுன் வன்மை மிகாவாயின.

	அல்வழி.	வேற்றுமை.
நம்பி	நம்பிகுறியன் நம்பிசிறியன் நம்பிதீயன் நம்பிபெரியன்	நம்பிகை நம்பிசெவி நம்பிதலை நம்பிபுறம்

அல்வழி. | வேற்றுமை.

	அல்வழி	வேற்றுமை
அவர்	அவர்குறியர்	அவர்கை
	அவர்சிறியர்	அவர்செவி
	அவர்தீயர்	அவர்தலை
	அவர்பெரியர்	அவர்புறம்

என உயர்திணைப் பெயரீற்று ஆவி ரகரமுன் வன்மை மிகாவாயின.

'சிலவிகாரமா முயர்திணை' என்றதற்கு வருமொழி முதலெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுங் கொள்ளப்பட்டது:

(உ-ம்.) கபிலன் + பரணன் = கபிலபரணர்
வடுகன் + நாதன் = வடுகநாதன்
அரசன் + வள்ளல் = அரசவள்ளல் } அல்வழி
ஆசீவகன் + பள்ளி = ஆசீவகப்பள்ளி
குமரன் + கோட்டம் = குமரகோட்டம்
குமரக்கோட்டம் } வேற்றுமை

என இருவழியும் உயர்திணையுள் சில தமக்கு ஏற்றபடி விகாரமாயின.

[வினைப்பெயர் விளிப்பெயர்முன் வல்லினம் இயல்பாதல்.]

160 ஈற்றியா வினாவிளிப் பெயர்முன்வலி யியல்பே.

(இ-ள்) ஈறு யா வினா - இறுதியில் வருகிற (ஆ ஏ ஓ என்னும் மூன்று வினாச்சொற்களும் யா என்னும் வினாச்சொல்லும், விளிப்பெயர் - (உயிரீறும் மெய்யீறுமாகிய) விளிவேற்றுமைப்பெயரும், முன் - ஆகிய இவற்றின் முன்வருகிற, வலி - வல்லெழுத்துகள், இயல்பு - இயல்பாகும், எ - று.

(உ - ம்)

அவனா, கொற்றனே, சாத்தனோ } +
கொண்டான் = அவனாகொண்டான்
சென்றான் = அவனாசென்றான்
தந்தான் = அவனாதந்தான்
போயினான் = அவனாபோயினான்.

யா + குறியன = யாகுறியன + தீயன = யாதீயன
சிறியன = யாசிறியன + பெரியன = யாபெரியன

என ஈற்று வினாமுன்னும், யாவினாமுன்னும் வலி இயல்பாயின.

நம்பீ, விடலாய் } + கொள் = நம்பீகொள் | + தா = நம்பீதா
செல் = நம்பீசெல் | போ = நம்பீபோ

என விளிப்பெயர் முன் வலி இயல்பாயின.

[முன்னிலைமுன்னும், ஏவல்முன்னும் வல்லினம்புணர்தல்]

161 ஆவி யரழ விறுதிமுன் னிலைவினை
ஏவன்முன் வல்லின மியல்பொடு விகற்பே.

(இ-ள்.) ஆவி - உயிரையும், ய ர ழ - ய ர ழ என்னும் மூன்று மெய்களையும், இறுதி - ஈறாகவுடைய, முன்னிலை வினை - முன்னிலை வினைகளும், ஏவல் - ஏவல் வினைகளும், முன் - ஆகிய இவற்றின் முன் வருகிற, வல்லினம் - க ச த பக்கள், இயல்போடு - இயல்புடனே, விகற்பே - விகற்பமுமாம் (இயல்பாயும் மிகுந்தும்வரும்), எ-று.

முன்னிலைவினை - மூன்றுகாலத்துக்கும் உரியதாய் முன் நிற்கும் பொருளினது தொழிலை உணர்த்துவதென்பதும், ஏவல்வினை - எதிர்காலத்துக்கு மாத்திரமே உரியதாய் முன் நிற்கும் பொருளைக் கட்டளையிடுவதென்றும் வேறுபாடு அறிக. ஏவலெல்லாம் முன்னிலையாம்; முன்னிலையெல்லாம் ஏவலாகா.

விகற்பமாவது - ஒருபுணர்ச்சிக்கே ஒருகால் ஒருவகையாயும், மற்றொருகால் வேறு வகையாயும் வருவது; விகற்பம், உறழ்ச்சி, பொருதல் என்பன - ஒருபொருட் சொற்கள்.

(உதாரணம்)

உண்டனை / உண்டாய்	உண்டனைகொற்றா உண்டனைசாத்தா	உண்டனைதேவா உண்டனைபூதா
உண்டனிர்	உண்டனிர்கொற்றரே உண்டனிர்சாத்தரே	உண்டனிர்தேவரே உண்டனிர்பூதரே

என ஆவி ய ர இறுதிமுன்னிலை வினைமுன் வலி இயல்பாயின. ழகரமெய் முன்னிலைவினைக்கு ஈறாகாமையால், உதாரணம் காட்டக்கூடாமை அறிக.

முன்னிலை வினைமுன் விகற்பித்தல் வந்தவிடத்துக் காண்க.

வா + கொற்றா = வாகொற்றா	சேர் + தேவா = சேர்தேவா
பாய் + சாத்தா = பாய்சாத்தா	வாழ் + பூதா = வாழ்பூதா

என ஆவி ய ர ழ இறுதி ஏவல் வினைமுன் வலி இயல்பாயின.

நட + கொற்றா = நடகொற்றா, நடக்கொற்றா } ஏவல் வினைமுன்
எய் + கொற்றா = எய்கொற்றா, எய்க்கொற்றா } விகற்பித்தன.

உயிரீற்றுச் சிறப்புப்புணர்ச்சி.

[உயிர்முன் உயிர்புணர்தல்]

162 இ ஈ ஐவழி யவ்வு மேனை
உயிர்வழி வவ்வும் ஏமுனிவ் விருமையும்
உயிர்வரி னுடம்படு மெய்யென் றாகும்.

(இ-ள்.) இ ஈ ஐவழி - இகர ஈகார ஐகாரங்களின் பின்னே, யவ்வும் - யகரமெய்யும், ஏனை உயிர் வழி - (அ ஆ உ ஊ ஒ ஓ ஔ

என்னும்). இவ்வேழு உயிர்களின் பின்னே, வவ்வும் - வகரமெய்யும் ஏ முன் - ஏகாரத்தின் பின்னே, இ இருமையும் - இவ்விரண்டும் [யகர மெய்யும் வகரமெய்யும்,] உயிர் வரின் - (வருமொழிமுதலில்) உயிர் வந்தால், உடம்படுமெய் என்று ஆகும் - உடம்படு மெய்யாக வரும்.

உடம்படுமெய் - நிலைமொழியீற்றிலும் வருமொழி முதலிலும் நின்ற உயிர்களை உடம்படுத்தும் மெய். உடம்படுத்த லென்றாலும், உடன்படுத்த லென்றாலும் பொருள் ஒக்கும்: "உடம்பாடிலாதவர்" என்றார் திருவள்ளுவரும். உடம்பு ஆடு எனப் பிரித்து, வரும் உயிர் ஏறுதற்கு உடம்பாக ஆடுக்கும் மெய் என்றாலும் பொருந்தும்.

அல்வழி.	(உ-ம்.)	வேற்றுமை
மணி + அழகிது = மணியழகிது		+ அழகு = மணியழகு
தீ + அழகிது = தீயழகிது		+ அழகு = தீயழகு
பனை + அழகிது = பனையழகிது		+ அழகு = பனையழகு.

இ ஈ ஐமுன் யகரம்வந்தது.

விள + அழகிது = விளவழகிது	+ அழகு = விளவழகு
பலா + அழகிது = பலாவழகிது	+ அழகு = பலாவழகு
கடு + அழகிது = கடுவழகிது	+ அழகு = கடுவழகு
பூ + அழகிது = பூவழகிது	+ அழகு = பூவழகு
நொ + அழகிது = நொவ்வழகிது	+ அழகு = நொவ்வழகு
கோ + அழகிது = கோவழகிது	+ அழகு = கோவழகு
கௌ + அழகிது = கௌவழகிது	+ அழகு = கௌவழகு.

மற்ற உயிர்களின் முன் வகரம் வந்தது.

அவனே + அழகன் = அவனேயழகன், என இடைச்சொல் ஏமுன் யகரமும்,

ஏ + எலாம் = ஏவெலாம், சே + உழவு = சேவுழவு என ஓரெழுத்தொருமொழியாகிய உயிர், உயிர்மெய் என்னும் ஏ முன் இருவழியும் வகரமும்,

சே + அடி = சேயடி, சேவடி எனச் செம்மையென்னும் பண்புப்பெயரின் விகாரமாகிய சே என்பதன் முன் யகரமும் வகரமும் உடம்படு மெய்யாக வந்தன.

[வினாச்சுட்டிக்களோடு நாற்கணமும் புணர்தல்]

163. எகர வினாமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமு மெய்தின் வவ்வும்
பிறவரி னவையுந் தூக்கிற் சுட்டு
நீளின் யகரமுந் தோன்றுத னெறியே.

(இ-ள்.) எகரவினா (முன்னர்) - எகரவினாவிடைச் சொல்லின் முன்னும், முச்சுட்டின் முன்னர் - மூன்று சுட்டிடைச் சொல்லின்

முன்னும், உயிரும் - உயிரும், யகரமும் - யகரமும், எஃதின் - வந்தால், வவ்வும் - வகரமும், பிற - யகர மொழிந்த மெய்கள், வரின் - வந்தால், அவையும் - அவ்வந்த மெய்களும், தூக்கில்-செய்யுளிடத்து, சுட்டு - சுட்டுக்கள், நீளின் - நீண்டு வருமிடத்து, யகரம் - யகரமும், தோன்றுதல் - தோன்றுதல், நெறி - முறையாம், எ - று.

எ	+	அணி	= எவ்வணி		எ	+	ஞாலம்	= எஞ்ஞாலம்.
எ	+	யானை	= எவ்யானை		எ	+	நாடு	= எந்நாடு
எ	+	குதிரை	= எக்குதிரை		எ	+	மனை	= எம்மனை
எ	+	சேனை	= எச்சேனை		எ	+	வளை	= எவ்வளை
எ	+	தண்டு	= எத்தண்டு		எ	+	ஙனம்	= எங்ஙனம்
எ	+	படை	= எப்படை.		அ	+	இடை	= அயிடை.

என வகரமும் வந்தமெய்களும் யகரமுந்தோன்றினமை காண்க. அ இ உ இவற்றின் முன்னும் அப்படியே கூட்டுக.

"நெறி" என்றமையால் யாங்ஙனம் எனயா வினா முன்னும், ஆங்ஙனம் - ஈங்ஙனம் - ஊங்ஙனம் - என நீண்டசுட்டின் முன்னும் ஙகரமிகுதலும், ஈது - ஆங்கு - ஈங்கு - ஊங்கு-ஆண்டு-ஈண்டு எனச் சுட்டுப்பெயர்நீளலும், "விண்வத்துக்கொட்கும்" "செல்வழிச்செல்க" என மெய்யீற்றின்முன் உயிர்வர இப்படி உடம்படு மெய்யல்லாத வகரம்பெறுதலுங் கொள்க. இவ்வாறுவரும் உடம்படு மெய்யல்லாத வகரத்தை மெய்யீற்றுடம்படு மெய்யென்பர் நச்சினார்க்கினியார்.

குற்றியலுகரமுற்றிய லுகரங்களோடு உயிரும்யகரமும் புணர்தல்.

164. உயிர்வரி னுக்குறள் மெய்விட் டோடும்
யவ்வரி னியியா முற்று மற் றொரோவழி.

(இ - ள்.) உக்குறள் - குற்றியலுகரமானது, உயிர் - உயிர்முதன்மொழி, வரின்-வந்தால், மெய்விட்டு-தனக்கிடமாகிய மெய்யை விட்டு, ஓடும் - கெடும், ய - யகரமுதன்மொழி, வரின் - வந்தால், இய்யாம்-அது இகரமாகத்திரியும், முற்றும்-முற்றியலுகரமும், அற்று-அவ்விருவிதியும்பெறும், ஒரோவழி - ஒவ்வோரிடத்து, எ - று.

[உதாரணம்]

நாகு	+	அரிது = நாகரிது	இருவழியும் உயிர்வரக் குற்றியலுகரம் கெட்டது.
குரங்கு	+	அருமை = குரங்கருமை	
நாகு	+	யாது = நாகியாது	இருவழியும் யகரம்வரக்குற்றிய லுகரம் இகரமாகத் திரிந்தது.
நாகு	+	யாப்பு = நாகியாப்பு	

கதவு + அழகிது = கதவழகிது
கதவு + யாது = கதவியாது } முற்றியலுகரம் அவ்விருவிதியும் பெற்றது.
அது + ஐ = அதை.

கெடும் என்றது ஓடும் என்றமையால குற்றியலுகரமும் ஒரோவிடத்து "இ ஈ ஐவழி" என்னும் சூத்திரப் பொதுவிதிப்படி வகர வுடம்படுமெய் பெறுதலும் கொள்க.

(உ - ம்.) அழைப்பதுவே, காண்பதுவும்.

{ உயிரீற்றின்முன் வல்லினம் பெரும்பாலும் மிகும் என்னும் பொதுவிதி. }

165. இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன்
கசதப மிகும்விதவா தன மன்னே.

(இ - ள்) இயல்பினும் - இயல்பினாலும், விதியினும் - விதியினாலும், நின்ற - இறுதியாக நின்ற, உயிர்முன் - உயிர்களின்முன், கசதப - வருகிற கசதபக்கள், மன்மிகும் - பெரும்பாலுமிகும், விதவாதன - சிறப்பு விதியிற் சொல்லாதவைகள், எ - று.

(உதாரணம்.)

ஆடூஉக் குறியன், நம்பிக்கொற்றன். ஆடூஉக்கை, நம்பித்தெரு என உயர்திணைப் பெயர் முன் இருவழியும் வல்லினம் மிகுந்தன.

சாத்திப்பெண் - எனப்பொதுப் பெயர்முன் அல்வழியில் வல்லினம் மிகுந்தது.

விளக்குறிது, தாராக்கடிது, தீப்பெரிது, வடுச்சிறிது, கொக்குக் கடிது, கொண்மூக்கரிது, சேச்சிறிது, சோப்பெரிது, ஒற்றைக்கை, வட்டக்கல், தாழக்கோல் - என அஃறிணைப் பெயர்முன் அல்வழியில் வல்லினம் மிகுந்தன. விளக்கோடு, பலாக்காய், கிளிச்சிறை, தீக்கடுமை, கடுக்காய், கொக்குக்கால், குரங்குக்குட்டி, கொண்மூக் குழாம், சேக்கொம்பு, தினைத்தாள், சோப்பெருமை - என அஃறிணைப் பெயர்முன் வேற்றுமையில் வல்லினம் மிகுந்தன.

ஆடிக்கொண்டான், ஆடாக் கொண்டான், ஆடூஉக் கொண்டான், ஆடெனக் கொண்டான், ஆடக்கொண்டான், உண்பாக்குச் சென்றான், பூத்துக் காய்த்தது, பொள்ளெனப் பறந்தது, சாலப் பகைத்தது - எனத் தெரிநிலை வினையெச்சத்தின் முன் வல்லினம் மிக்கன.

இருளின்றிக் கண்டார், பொருளின்றிக் காணார் - எனக் குறிப்பு வினையெச்சத்தின் முன் வல்லினம் மிகுந்தன.

MAHAMAHOPADHYAYA

கூவிற்றுக்கோழி, நால்வாய்த்துக் களிறு - எனத் தெரிநிலை வினைமுற்றின் முன்னும் குறிப்புவினைமுற்றின் முன்னும் வல்லினம் மிகுந்தன.

இனித் தருவேன், மற்றைச்சாதி - என இடைச் சொல்லின் முன் வல்லினம் மிகுந்தன.

கடிக்கமலம், தவப்பெரியன் என உரிச்சொல்லின் முன் வல்லினம் மிகுந்தன.

சொன்றிக் குழிசி - எனத்திசைச்சொன் முன்னும், கங்கைச் சடை- எனவடசொன் முன்னும் வல்லின மிகுந்தன. சொன்றி - சோறு, குழிசி - பானை.

விதவாதன பெரும்பாலும மிகுமெனவே, விதந்தன சிறுபான்மை மிகுமெனவும், விதவாதன சிறுபான்மை மிகா எனவும் கூறிற்றாயிற்று.

(உ - ம்.) தொக்கொற்று, தாக்கொற்று, சாத்தா, தேவா, பூதா என்பன "ஏவன்முன் வல்லினம் இயல்பொடு விகற்பே" என முற்கூறிய சிறப்பு விதிபெறாது வல்லினம் மிகுந்தே வந்தன.

ஏரிகரை, குழவிகை, குழந்தைகை, மூலை கிழவோன் எனவும், கூப்புகரம், ஈட்டுதனம், நாட்டுபுகழ், எனவும் முறையே வேற்றுமையிலும், அல்வழியிலும் பின் விதவாதன மிகவாயின.

வல்லினம் உயிரீற்று உயர்திணைப் பெயர், பொதுப் பெயர்களுக்கு முன் மிகுமென்றது "ஆவியரமுன் வன்மை மிகா" என எய்தியதன்மேற் சிறப்புவிதி. அஃறிணைப் பெயர்களுக்கு முன்னும் வினைமுதலியவைகளுக்கு முன்னும் மிகுமென்றது எய்தாததெய்துவித்தல்.

[உயிரீற்றுச் சிலமரப்பெயர்களோடு வல்லினம் புணர்தல்.]

166. மரப்பெயர் முன்ன ரினமெல் லெழுத்து
வரப்பெறு னவுமுள வேற்றுமை வழியே.

(இ - ள்.) மரப்பெயர்முன்னர் - உயிரீற்றுச்சில மரப்பெயர்களுக்குமுன், இனமெல்லெழுத்துவர - முன்சொன்ன பொதுவிதியால் வருகிறவல்லெழுத்து மிகாமல் அவற்றிற்கினமாகிய மெல்லெழுத்துமிக, பெறுனவும் - பெறுவனவும், உள - சிலவுளவாம், வேற்றுமைவழி - வேற்றுமைவழியில், எ - று.

(உ-ம்.) விள + காய் = விளங்காய், மாந்துளிர்.
மா + கொம்பு = மாங்கொம்பு, காயாம்பு.

இனி "பெறுனவும்" என்ற எதிர்மறை யும்மையால், பலாக் காய், வாழைப்பழம் எனப் பொதுவிதிப்படி வல்லினம் மிகுந்தும் வரும்.

[அகரவீற்றுச் சிறப்புவிதிகள்.]

[இன்னின்ன அகரவீற்றின்முன் வல்லினம் இயல்பாம் என்பது.]

167. செய்பிய வென்னும் வினையெச்சம் பல்வகைப்
பெயரி னெச்சமுற் றுற வுருபே
அஃறிணைப் பன்மை யம்மமுன் னியல்பே.

(இ - ள்.) செய்யியவென்னும் வினையெச்சம் - செய்யியவென்னும் வினையெச்ச வினையும், பல்வகைப் பெயரி னெச்சம் - பலவகைப்பட்ட பெயரெச்ச வினையும், (பல்வகை) முற்று - பலவகைப் பட்ட முற்றுவினையும், ஆறனுருபு - ஆறும் வேற்றுமை அகரவுருபும், அஃறிணைப்பன்மை - அஃறிணைப் பன்மைப் பெயரும், அம்ம - அம்ம வென்கிற உரையசை இடைச் சொல்லும், முன்-ஆகிய அகரவீற்றுச் சொற்களாறன் முன்னும், இயல்பு - வல்லெழுத்துக்க ளியல்பாம்.

(உ - ம்.)

உண்ணிய சென்றான் —செய்யிய என்னும் வினையெச்சம்.

உண்ட குதிரை, உண்கிற குதிரை, பெரியபொருள், உண்ணாத குதிரை. } பல்வகைப் பெயரெச்சம்.

சென்றன குதிரைகள், வாழ்க கொற்றா, பெரியன குதிரைகள் } பல்வகைமுற்று.

தனகைகள், தனதாள்கள் —ஆறனுருபு
பலகுதிரைகள், பலகற்றூர் —இருவழியிலும் அஃறிணைப்பன்மை.
அம்மகொற்றா —அம்ம என்னும் இடைச்சொல்.

உரையிற் கோடலால் அம்ம என்னும் உரையசை இடைச்சொல் "அம்மாபெரிது" என நீண்டு வரினும் வலி இயல்பாதல் காண்க.

இச்சூத்திரத்தின் முதலிலும் ஈற்றிலும் அகர வீற்றுச்சொல் வைத்ததினாலே இடைநின்றனவும் அகரவீறு என்பதும், பல்வகை என்றதனால் வினையடிமுதலிய நான்கினும் பிறந்த பெயரெச்சமென்பதும், அவ்வாறு பிறந்த முற்று வினைகளென்பதும், முற்றெனவேறு கூறினமையால் அஃறிணைப் பன்மை யென்றது பெயரென்பதும் பெறப்படும்.

வினையடி நான்காவன - இயல்பாகிய வினையடி ஒன்றும், பெயர், இடை, உரி அடியாகப் பிறந்த செயற்கை வினையடி மூன்றுமாம்.

முற்றின் முன் இயல்பாமெனவே அருத்தாபத்தியால் உண்ட கண்டன; அமர்முகத்த குதிரைகள், அமர்முகத்த கைக்கின எனவினை முற்று வினையெச்ச மாகியும், குறிப்பு முற்றீரெச்சமாகியும் வந்த விடத்தும் இயல்பா மென்றறிக.

[வாழிய என்னும் வியங்கோளின் ஈற்றுயிர்மெய்கெடுதல்.]

168. வாழிய வென்பத னீற்றி னுயிர்மெய்
ஏகலு முரித்தஃ தேகினு மியல்பே.

(இ - ள்.) வாழிய - என்பதன வாழிய வென்னும் வியங் கோண் முற்றினுடைய, ஈற்றின் - இறுதியிலுள்ள, உயிர்மெய் - யகர வுயிர் மெய்யானது, ஏகலும் - குறைதலும், உரித்து - உரித்தாகும், அஃது - அவ்வுயிர் மெய்யானது, ஏகினும் - குறைந்து இகரவீறாய் நின்றாலும், இயல்பே - வல்லினம் பொதுவிதியினாலே மிகாமற் சிற ப்புவிதியிற்கூறிய இயலபேயாம், எ - று.

(உ - ம்.) ஆவாழி என ஈற்றுயிர் மெய் குறைந்தது. வாழி கொற்றா - சாத்தா - தேவா - பூதா, எனக்குறைந்த விடத்தும் வல்லி னம் இயல்பாயின.

[சாவஎன்னுஞ்செயவெனெச்சம்ஈற்றுயிர்மெய்கெட்டும் வருமென்பது]

169. சாவவென் மொழியீற் றுயிர்மெய் சாதலும்விதி.

(இ - ள்.) சாவ வென்மொழி-சாவ வென்னுஞ் செயவெனெச்ச வினைச் சொல்லினுடைய, ஈறு - இறுதியிலிருக்கின்ற, உயிர்மெய் - வகர வுயிர்மெய்யானது, சாதலும் - கெட்டுப் புணர்தலும், விதி-விதி யாகும், எ - று.

(உ - ம்.) சாவ + குத்தினன் = சாக்குத்தினன்.

இப்புணர்ச்சி சாவக்குத்தினன் என்னும் புணர்ச்சிபோற் சிறந்த தல்லாமையால் 'சாதலும்விதி' யென்றார். (சகூ)

[பலசில என்பவற்றின் புணர்ச்சி.]

170. பலசில வெனுமிவை தம்முன் றாம்வரின்
இயல்பு மிகலு மகர மேக
லகரம் றகர மாகலும் பிறவரின்
அகரம் விகற்ப மாகலு முளபிற.

(இ - ள்.) பலசில வெனுமிவை - பலசில என்கிற இவ்விரு சொல்லும், தம்முன் - தமக்குமுன்னே, தாம்வரின் - தாம்வருமாயின், இயல்பும் - இயல்பாதலும், மிகலும் - மிகுதலும், அகரம் - அகரமா

னது, எக - கெட, லகரம் - லகரமானது, றகரமாகலும்-றகரமாகத் திரிதலும், பிற - இவற்றின்முன் பிறமொழிகளுள் யாதாயினு மொன்று, வரின் - வந்தால், அகரம் - அகரமானது, விகற்பமாதலும் - நிற்றலும் நீங்கலும், உள - உளவாம், எ-று.

(உதாரணம்.)

பலபல, சிலசில —இயல்பு.
பலப்பல, சிலச்சில —மிகுதல்.
பற்பல, சிற்சில —அகரங்கெட லகரம் றகரமாதல்.

பலகலை, பல்கலை, சிலநாள், சின்னாள், சிலவளை, சில்வளை, பலவாயம், பல்லாயம். } பிறசொற்கள் வர அகரம் விகற்பித்தது.

'பிற' என்றமிகையால் பல் பல, சில், சில என அகரங்கெட லகரம் றகரமாகாமல் ஒரோவிடத்து வருதலும் இன்னும் அகரவீற்றுப் புணர்ச்சியுள் அடங்காது வருவனவுங் கொள்க. (உ0)

ஆகாரவீற்றுச் சிறப்புவிதிகள்.

{ ஆ, மா, மியா, எதிர்மறைப் பலவின்பால் வினைமுற்று ஆகிய இவற்றின் புணர்ச்சி. }

171. அல்வழி ஆமா மியாமுற்று முன்மிகா.

(இ - ள்.) அல்வழி-அல்வழியில், ஆமா - ஆவுமாவுமாகிய இருபெயரும், மியா - மியாவென்னு முன்னிலையசை யிடைச்சொல்லும், முற்று - ஆகார வீற்றஃறிணைப் பன்மை யெதிர்மறை முற்றுவினையுமாகிய, முன் - இவற்றின் முன், மிகா - வருகிற வல்லினம் இயல்பாகும், எ-று.

(உ-ம்.) ஆகுறிது, மாசிறிது —ஆ மாமுன்வலி இயல்பு.
கேண்மியாதேவா —மியாமுன்வலி இயல்பு.
உண்ணாகுதிரைகள் —முற்றுமுன்வலி இயல்பு.

இரட்டுறமொழிதலால், காட்டுப்பசு என்னும் பொருளைத் தருகிற ஆமா என்பதன் முன்னும் ஆமா குறிது, ஆமா சிறிது என இயல்பாம் எனக்கொள்க.

'முற்றுமுன் மிகா' எனவே, அருத்தாபத்தியால், அவ்வினையாலணையும் பெயர்முன்னும், அவ்வினைமுற்று வினையெச்ச மானவற்றின் முன்னும் அவ்வாறு மிகாமையுங் கொள்க. [அருத்தாபத்தியாவது - ஒருபொருளைக் கூறிய மாத்திரத்தால் அதன் குறிப்பைக் கொண்டு கூறப்படாத மற்றொரு பொருளையும் அறிவது.]

(உ-ம்.) உண்ணா கிடந்தன, சென்றன, தந்தன, போயின.

இங்கே, உண்ணா என்றது வினையாலணையும் பெயராயின் உண்ணாதனவாகிய குதிரைகள் கிடந்தன எனவும்; வினைமுற்று வினையெச்சமாயதெனின், உண்ணாதனவாய்க் கிடந்தன எனவும் பொருள்படும்.

இவ்வாய்பாட்டுச்சொல் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாயின் 'உண்ணாக்குதிரை' என்றும், ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சமாயின் 'உண்ணாக் கிடந்தான்' என்றும், உடன்பாட்டு இறந்தகால வினையெச்சமாயின் 'உண்ணாக்கிடந்தான்' என்றும் பொது விதியால் வலிமிகுந்து வருமென அறிக. இவற்றிற்கு முறையே உண்ணாத, உண்ணாமல், உண்டு எனப் பொருள்கொள்க. (உக)

[குறிலணைந்த ஆகாரவீற்று அஃறிணைப்பெயரின் புணர்ச்சி.]

172. குறியதன் கீழாக் குறுகலு மதனோ
டுகர மேற்றலு மியல்புமாந் தூக்கின்.

(இ-ள்.) குறியதன் கீழ்ஆ - குற்றெழுத்தின் கீழ்நின்ற ஆகாரம், குறுகலும் - அகரமாதலும், அதனோடு - அவ்வகரமாதலுடனே, உகரமேற்றலும்-உகரம்பெறுதலும், இயல்பும் - அவ்விரண்டுமில்லாமலியல்பாதலும் ஆகிய மூன்று விதியும், தூக்கின்-பாட்டினிடத்து, ஆம் - ஆகும், எ-று.

(உ-ம்) "நிலவிரிகானல்" —குறியதன்கீழ் ஆ குறுகிற்று.
"என்செயுமோநிலவு"—குறுகி உகரமேற்றது.
"நிலாவணங்கு" —இயல்பாயிற்று.

செய்யுளிலே இம்மூன்றுமாமெனவே இரா-இரவு, புறா-புறவு, சுறா - சுறவு என இயல்பும், குறுகி உகரமேற்றலும் வழக்கில வருமெனக்கொள்க. (உஉ)

இகரவீற்றுச்சிறப்புவிதிகள்.

[அன்றி, இன்றி என்னும் வினையெச்சங்களின் புணர்ச்சி.]

173. அன்றி யின்றியென் வினையெஞ் சிகரம்
தொடர்பினு ளுகர மாய்வரி னியல்பே.

(இ-ள்.) அன்றி இன்றி என் - அன்றி இன்றி என்கிற, வினையெஞ்சு இகரம்-வினையெச்சக் குறிப்புச் சொற்களினீற்றிலிருக்கின்ற இகரம், தொடர்பினுள் - செய்யுளில், உகரமாய்வரின் - உகரமாய்த்திரிந்துவரின், இயல்பு - வருகிற கசதபக்கள் இயல்பாகும்.

(உ-ம்.) "நாளன்றுபோகி" அன்றி+போகி.
"உப்பின்றுபுற்கையுண்கமா இன்றி+புற்கை.

உகரமாகத் திரியாதாயின், நாளின்றிப் போகி, உப்பின்றிப் புற்கை எனப் பொதுவிதியால் வல்லெழுத்து மிகும். (உ௩)

[நாழி, உரிஎன்பவைகளின் புணர்ச்சி.]

174. உரிவரி னாழியி னீற்றுயிர் மெய்கெட
மருவும் டகர முரியின் வழியே
யகரவுயிர் மெய்யா மேற்பன வரினே.

(இ-ள்) உரிவரின்-உரியென்னும் அளவுப்பெயர்வந்தால், நாழியின்-நாழியென்னு மளவுப்பெயரினது, ஈற்றுயிர்மெய் - ஈற்றிலுள்ள ழிகரமானது, கெட - நீங்க, டகரம் - டகரமெய்யானது, மருவும் - வரும், உரியின்வழி-உரியென்னும் அளவுப்பெயரின்பின், யகரவுயிர் மெய்யாம் - யகரவுயிர்மெய்வரும், ஏற்பன-அவ்வுயிர்மெய்வருவதற்கு ஏற்றமொழிகள், வரின்-வந்தால், எ-று.

(உ-ம்.) நாழி + உரி = நாடுரி. உரி + மிளகு = உரியமிளகு.
உரி + உப்பு = உரியவுப்பு. உரி + வரகு = உரியவரகு.
உரி + பயறு = உரியபயறு.

"ஏற்பனவரின்" எனவே ஏலாதனவரின் உரியரிசி எனப் பொது விதிபெறுதல் கொள்க. நாடுரி என்பது நாவுரி என இக்காலத்து மருவிற்று. (உ௪)

[புளி என்னும் மொழியின் புணர்ச்சி.]

175. சுவைப்புளி முன்னின மென்மையுந் தோன்றும்.

(இ-ள்.) சுவை - அறுசுவையுளொன்றை உணர்த்துகின்ற, புளிமுன் - புளியென்னும் பெயர்முன், இனமென்மையும் - வருகிற வல்லெழுத்துகள் மிகுதல் அல்லாமல் அவற்றிற்கு இனமாகிய மெல் லெழுத்துகளும், தோன்றும் - ஒரோவிடத்து மிகும், எ-று.

(உ-ம்.) புளிங்கறி - புளிஞ் சோறு - புளிந்தயிர் - புளிம்பா ளிதம் எனவரும்,

புளிப்பாகியகறிஎனவும்; புளிப்பையுடையகறியெனவும்,விரிக்க ப்படுதலால் இருவழிக்கும் இவையே உதாரணமா மென்க. உம்மை யால் புளிக்கறி எனப் பொதுவிதிபெறுதலே சிறப்புடைத்தாகும்.

[இகர ஐகாரங்களோடு வல்லினம் புணர்தல்.]

176. அவ்வழி இ ஐம் முன்ன ராயின்
இயல்பு முறவும் விகற்பமு மாகும்.

(இ-ள்.) இ ஐ முன்னர் - இகர ஐகாரவீற் றஃறிணைப்பெயர்முன், அல்வழி - அல்வழியினிடத்து, ஆயின்-வல்லினம் வருமாயின், இயல்பும் - இயல்பாதலும், மிகறும் - பொதுவிதியால் மிகுதலும், விகற்பமும் - ஒன்றற்கே ஒருகால் மிகாமையும் ஒருகால் மிகுதலும், ஆகும்-ஆகும், எ-று.

ஒப்பின் முடித்தலால் ஐகாரவீறு முடன்கூறினர்.

இயல்பு எழுவாய்த்தொடர்உம்மைத்தொகைகளிலும் மிகுதிபண்புத்தொகைஉவமைத்தொகைகளிலும், விகற்பம் இரண்டுகுறிலாவது குறில்நெடிலாவது இணைந்து வரும் சொற்களை நிலைமொழியாகக் கொண்டசில எழுவாய்த்தொடரிலும் கொள்க.

(உ-ம்.) பருத்திகுறிது, யானைகரிது—எழுவாயில் இயல்பு.
ஆவணி புரட்டாசி, யானை குதிரை—உம்மைத்தொகையில் இயல்பு.

மாசித்திங்கள், சாரைப்பாம்பு } பண்புத் தொகை முன் மிகுதல்.

காவிக்கண், பனைக்கை } உவமைத் தொகை முன் மிகுதல்.

கிளி குறிது, கிளிக்குறிது
தினை குறிது, தினைக்குறிது } எழுவாய்த் தொடரில் விகற்பம்.

ஈகாரவீற்றுச் சிறப்புவிதிகள்.

[ஆப்பீமுன்நாற்கணமும் புணர்தல்.]

177. ஆமுன் பகரவீ யனைத்தும்வரக் குறுகும்
மேலன வல்வழி யியல்பா கும்மே.

(இ-ள்.) ஆமுன்பகரஈ - ஆமுன்னின்றபகர ஈகாரம், அனைத்தும-நாற்கணமும், வர-வந்தால், குறுகும் - குறுகும், அல்வழி - அல்வழியில், மேலன - மேலைச்சூத்திரத்துட்கூறிய விதி மூன்றனுள், இயல்பாகும் - வருகிறவல்லினம் இயல்பைப்பெறும், எ-று.

(உ-ம்.) ஆப்பியரிது-ஆப்பிகுளிரும்-ஆப்பிநன்று-ஆப்பிவலிது:— ஆப்பியருமை - ஆப்பிக்குளிர்ச்சி - ஆப்பிநன்மை - ஆப்பி வன்மை, "அல்வழிஇயல்பாகும்"எனவே வேற்றுமையில் பொதுவிதியால் வலி மிகுந்தது. இச்சூத்திரத்தில் "பகரவீ" என்றதும், வருஞ்சூத்திரத்தில், பவ்வீ, என்றதும் இடக்கரடக்கல். (௨௭)

[பீ, நீ, மீக்களோடுவல்லினம்புணர்தல்.]

178. பவ்வீ நீமீ முன்ன ரல்வழி
இயல்பாம் வலிமெலி மிகலுமா மீக்கே—

(இ-ள்.) பவ்வீ - பகரமெய்யின் மேலேறி நின்ற ஈகாரவீற் றிடக்கர்ப்பெயரும், நீ - நீ என்கிற முன்னிலைப்பெயரும், மீ - மீ என்கிற மேலாகிய பண்பையும் மேலிடத்தையும் உணர்த்தும் பெயரு மாகிய, முன்னர் - இம்மூன்றன் முன்னும், அல்வழி - அல்வழியில், இயல்பாம் - வருகிறவல்லின மியல்பாகும், மீக்கு - இவற்றுள்ளே மீஎன்னுஞ் சொல்லுக்கு, வலி - வல்லெழுத்து, மிகலுமாம் - மிகுதலுமாகும், மெலி - மெல்லெழுத்து, மிகலுமாம் - மிகுதலுமாகும்.

[உதாரணம்.]

பீ + குறிது	= பீகுறிது, சிறிது, தீது, பெரிது.	இயல்பாயின.
நீ + குறியை	= நீகுறியை, சிறியை, தீயை, பெரியை.	
மீ + கண்	= மீகண், செவி, தலை, புறம்.	
மீ + கூற்று	= மீக்கூற்று—	வலிமிக்கது.
மீ + தோல்	= மீந்தோல்—	மெலிமிக்கது.

நீ என்னும் இருதிணைப்பொதுப்பெயர் அல்வழியிலே 'நீ' என்று உயிரீறாகியும், வேற்றுமையிலே 'நின்' என்றுமெய்யீறாகியும் நிற்கையி னாலே "பொதுப்பெயருயர்திணைப்பெயர்" என்னுஞ் சூத்திரத்துள் அடங்கவில்லை. (உஅ)

உகரவீற்றுச் சிறப்பு விதிகள்.

[சில முற்றிய லுகரங்களோடு வல்லினம் புணர்தல்.]

179. மூன்றா றுருபெண் வினைத்தொகை சுட்டீ
றாகு முகர முன்ன ரியல்பாம்.

(இ-ள்.) மூன் (றுருபு) - ஒடுஎன்னும் மூன்றாம் வேற்றுமை யுருபிற்கும், ஆறுருபு-அதுஎன்னும் ஆறாம் வேற்றுமை யுருபிற்கும், எண் - இயல்பாயும் விகாரமாயும் வருகிற எண்ணிற்கும், வினைத்தொ கை - வினைத்தொகைக்கும், சுட்டு - சுட்டுப் பெயருக்கும், ஈறாகும் - ஈறாகிய, உகரமுன்னர் - முற்றியலுகரத்தின் முன்னே, இயல்பாம் - வருகிற வல்லினம் இயல்பாகும், எ - று.

(உ-ம்.)

அவனொடு + கொண்டான் = அவனொடுகொண்டான் — மூன்றனுருபு.
சாத்தனது + செவி = சாத்தனதுசெவி — ஆறனுருபு.
எழு + தலை = எழுதலை — இயல் பெண்ணுப்பெயர்.
ஒரு, இரு, அறு, எழு + புறம் = ஒருபுறம் — விகார எண்ணுப்பெயர்.
விடு + கணை = விடுகணை, விரவு + படை - விரவுபடை: வினைத்தொகை.
அது + கண்டான் = அதுகண்டான் — வேற்றுமை, } சுட்டுப்
இது + குறிது = இதுகுறிது — அல்வழி. } பெயர்.

'சுட்டீறாகும்' என்றதன் உபலக்ஷணத்தால், எதுகண்டான், எதுபெரிது என வினாவீறாகும் முற்றியலுகரத்தின் முன்னும் இயல்பாதல் கொள்க.

உது+காண்=உதுகாண், உதுக்காண்என விகற்பித்துவருவது ''இயல்பின்விகாரமும்'' என்னுஞ் சூத்திரத்தில் 'அன்னபிறவும்' என்பதனால் அமையும். (௨௯)

[அதுஎன்னும் மொழிப்புணர்ச்சி.]

180. அதுமுன் வருமன் றான்றாந் தூக்கின்.

(இ-ள்.) அதுமுன் - அதுவென்னுஞ் சுட்டுப்பெயர் முன், வரும் - வருகிற, அன்று - அன்றென்னும் குறிப்புவினைமுற்றானது, தூக்கின் - பாட்டினிடத்து, ஆன்றாம் - ஆன்று எனமுதல்நீளும், எ-று.

(உ-ம்.) அதான்று. [ஆன்றேயாமென இயல்பை விலக்காமையால், அதன்று - அதுவன்று எனநீளாமலும் வரும்.] (௩0)

[குற்றியலுகரத்தோடு வல்லினம் புணர்தல்.]

181. வன்றொட ரல்லன முன்மிகா அல்வழி.

(இ-ள்.) வன்றொடர் அல்லனமுன்-வன்றொடரொழிந்த ஐந்து குற்றியலுகர வீற்றின் முன்னும், அல்வழி - அல்வழியில், மிகா வருகிற வல்லினம் இயல்பாகும், எ - று.

(உதாரணம்.)

நாகுகடிது, ஆறுதூண்	—நெடிற்றொடர்.
எஃகுசிறிது, அஃகுபிணி	—ஆய்தத்தொடர்.
வரகுதீது, பொருதுசென்றான்	—உயிர்த்தொடர்.
வந்துபோனான், சென்றுகொடுத்தான்	—மென்றொடர்.
எய்துகொன்றான், செய்துகொடுத்தான்	—இடைத்தொடர்.

''வன்றொடர் அல்லனமுன்மிகா'' என்றதனால் வன்றொடர்முன் 'கொக்குப்பெரிது' என அல்வழியில் வலிமிகும்.

ஏழாம்வேற்றுமை இடப்பொருளுணர்த்தும் அங்கு, இங்கு, உங்கு, எங்கு, யாங்கு,ஆண்டு,ஈண்டு,யாண்டுஎன்னும் மென்றொடர்க்குற்றியலுகர வீற்று இடைச்சொற்களின்முன் வரும் வல்லினம் மிகும்.

(உ - ம்.) அங்குக்கண்டான், இங்குச்சென்றான், உங்குத்தந்தான், எங்குப்போயினான், யாங்குக்கண்டான், ஆண்டுச்சென்றான், ஈண்டுத்தந்தான், யாண்டுப்போயினான்.

ஏழாம்வேற்றுமை இடப் பொருளுணர்த்தும் அன்று, இன்று, என்று, பண்டு, முந்து என்னும் மென்றொடர்க்குற்றிய லுகரவீற்று

இடைச் சொற்களின் முன்வரும் வல்லினம் அன்றுகண்டான், இன்று சென்றான், என்றுதந்தான், பண்டுபோயினான், முந்துபெற்றான் என இயல்பாயே முடியும். (௯௧)

182. இடைத்தொட ராய்தத் தொடரொற் றிடையின்
மிகாநெடி லுயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை.

(இ-ள்.) இடைத்தொடர் (முன்) - இடைத்தொடர் முன்னும், ஆய்தத்தொடர் (முன்) - ஆய்தத்தொடர் முன்னும், ஒற்றிடையின் மிகாநெடிற் (றொடர்முன்) - ஒற்றிடையே மிகாதநெடிற் றொடர் முன்னும், உயிர்த்தொடர்முன் - உயிர்த்தொடர்முன்னும், வேற்றுமை - வேற்றுமையில், மிகா - வருகிற வல்லினம் இயல்பாம், எ-று.

(உ-ம்.) தெள்குகால் - இடைத்தொடர்முன் வலியியல்பு.
எஃகுகடுமை - ஆய்தத்தொடர்முன் வலியியல்பு.
நாகுகால் - நெடிற்றொடர்முன் வலியியல்பு.
வரகுகதிர் - உயிர்த்தொடர்முன் வலியியல்பு.

எனவே மென்றொடர் முன்னும், வன்றொடர்முன்னும் வண்டுக்கால், குரக்குக்குட்டி என வேற்றுமையில் வலிமிகுமென்க. (௯௨)

[கெடறுகரவீற்றுக் குற்றியலுகரப் புணர்ச்சி.]

183. நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்று கரங்களுள்
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே.

(இ-ள்.) நெடிற் (றொடர்) - நெடிற்றொடர்களும்; உயிர்த்தொடர் - உயிர்த் தொடர்களுமாகிய, குற்றுகரங்களுள் - குற்றிய லுகரமொழிகளுள், டற ஒற்று - அவ்வுகரமேறிநின்ற டகர றகர மெய்கள், வேற்றுமை - வேற்றுமையில், மிக - பெரும்பாலும், இரட்டும் - இரட்டும், எ - று

வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங்கொள்க.

(உ. - ம்-) ஆடு + கால் = ஆட்டுக்கால், பாறு + கால் = பாற்றுக்கால், முருடு + கால் = முருட்டுக்கால், முயிறு + கால் = முயிற்றுக்கால், எனவரும்; செவி - தலை - புறம் - ஞாற்சி - நிறம் - மயிர் - யாப்பு வலிமை - அடி என்பவற்றையும் ஒட்டிக்காண்க. பாறு = பருந்து. முருடு = ஓர் வாத்தியம். முயிறு = ஓர் எறும்பு.

இவ்விரண்டொற்றும் வேற்றுமையி லிரட்டுமெனவே "நாடு கிழவோனே" எனச் சிறுபான்மை வேற்றுமையி லிரட்டாமையும், காடு + அரண் = காட்டரண், களிறு + யானை = களிற்றி யானை, எனச் சிறுபான்மை அல்வழியி லிரட்டுதலும், வெருகு + கண் = வெருக்

குக்கண் எண் வேற்றுமையிலும், எருது+மாடு=எருத்துமாடு, என அல்வழியினுஞ் சிறுபான்மை பிற வொற்றிரட்டலுங் கொள்க. (௯௯)

184 மென்றொடர் மொழியுட் சில வேற்றுமையில்
தம்மின வன்றொட ராகா மன்னே.

(இ - ள்.) மென்றொடர் மொழியுள் - மென்றொடர்க் குற்றிய லுகரமொழிகளுள், சில - சிலமொழிகள், வேற்றுமையில் - வேற்றுமைக்கண், தம்மினம் - தமக்கினமாகிய, வன்றொடர் - வன்றொடர்க் குற்றிய லுகர மொழிகளாக, ஆகா - ஆதலை யொழிந்தன, மன் - பெரும்பாலன, எ - று.

வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்க.

(உதாரணம்.)

மருந்து+பை	=மருத்துப்பை	வேற்றுமையில் வன்றொடராயின.
சுரும்பு+நாண்	=சுருப்புநாண்	
கரும்பு+வில்	=கருப்புவில்	
கன்று+ஆ	=கற்று	
வண்டு+கால்	=வண்டுக்கால்	வேற்றுமையில் வன்றொடராகாதன.
பந்து+நலம்	=பந்துநலம்	
ஞெண்டு+வளை	=ஞெண்டுவளை	
எறும்பு+ஒழுங்கு	=எறும்பொழுங்கு	

சில வன்றொடரா மெனவே, ஆகாதன பலவென்பது தானே வந்து இயையவும், 'மன்' என்ற மிகையானே, அல்வழியினுஞ் சிறுபான்மை வன்றொடராதலும், இருவழியிலும் விகற்பித்துவருதலுங் கொள்க.

(உதாரணம்.)

நஞ்சு+பகைமை	=நச்சுப்பகைமை	அல்வழியில் வன்றொடராயின.
இரும்பு+மனம்	=இருப்புமனம்	
குரங்கு+குட்டி	=குரங்குக்குட்டி	வேற்றுமையில் விகற்பித்து வந்தன.
	=குரக்குக்குட்டி	
பாம்பு+தோல்	=பாம்புத்தோல்	
	=பாப்புத்தோல	

அன்பு+தளை=அன்புத்தளை, அற்புத்தளை. அல்வழியில் விகற்பம்.

[குற்றியலுகரம் ஐகாரச்சாரியை பெறுவது.]

185 ஐயீற் றுடைக்குற் றுகரமு முளவே.

(இ - ள்.) ஐ - ஐகாரச்சாரியை, ஈறுஉடை - இறுதியிலே பெற்றுவருகிற, குற்றுகரமும் - மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளும், உள - சிலவுண்டு எ - று.

வருமெழுத்தைச் சொலலாமையால் நாற்கணமுங் கொள்க.

(உ-ம்.) பண்டு + காலம் = பண்டைக்காலம். } அல்வழி.
இன்று + நாள் = இற்றைநாள்.
அன்று + கூலி = அற்றைக்கூலி } வேற்றுமை.
இன்று + நலம் = இற்றைநலம்

மேலைச் சூத்திரத்தைச் சாரவைத்தலால் மென்றொடரென்றும், ஆயினும் குற்றுகரம் எனப் பொதுப்படச் சொன்னமையால் நேற்றைப்பொழுது, நேற்றைக்கூலி, என வன்றொடர் ஐகாரச்சாரியை பெறுதலும் "ஐயீற்றுடைக் குற்றுகரமும்" என உடைமையாக்கிக் கூறினமையால் ஒற்றை, இரட்டை, ஏற்றை, வேட்டை, ஏாட்டை, ஈராட்டை என வருமொழி நோக்காது ஐகாரச்சாரியை பெறுதலுங் கொள்க. ஓராட்டை = ஒருவருடம். (கூரு)

[குற்றுகரவீற்றுத் திசைப்பெயர்ப் புணர்ச்சி.]

186. திசையொடு திசையும் பிறவுஞ் சேரின்
நிலையீற் றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
றகரம் னலவாத் திரிதலு மாம்பிற.

(இ - ள்.) திசையொடு - திசைச்சொல்லோடு, திசையும் - திசைச்சொல்லும், பிறவும் - பிறசொல்லும், சேரின் - புணருமிடத்து, நிலையீற்று - நிலைமொழி யீற்றிலே நின்ற, உயிர்மெய் - உயிர்மெய்யும், கவ்வொற்று - அதன் பின்னின்ற ககரமெய்யும். நீங்கலும் - கெடுதலும், றகரம் - அவ்விடத்துநின்ற றகரமெய், னலவா - னகரமெய்யாகவும் லகர மெய்யாகவும், திரிதலும் - திரிதலும், ஆம் - ஆகும்.

(உ-ம்.) வடக்கு + கிழக்கு = வடகிழக்கு: வடமேற்கு-வடதிசை - வடமலை-வடவேங்கடம் என உயிர்மெய்யுங் ககரமெய்யுங் கெட்டன. குடக்கு + திசை = குடதிசை, குணக்கு + கடல் = குணகடல், இவையுமப்படியே. தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு, தென்மேற்கு, தென்மலை, என உயிர்மெய்கெட, றகரமெய் னகரமெய்யாயிற்று. மேற்கு + காற்று = மேல்காற்று, என உயிர்மெய்கெட, றகரமெய் லகரமெய்யாயிற்று.

"பிற" என்றதனால் மேற்கு + சேரி = மேல்சேரி, மேற்சேரி, மேலைச்சேரி; கிழக்கு + திசை = கீழ்திசை, கீழ்த்திசை, கீழைத்திசை எனவும், கீழ்மேற் றென்வடல் எனவும், விகாரப்படும், சிறுபான்மை கிழக்கு மேற்கு, தெற்கு வடக்கு, வடக்கூர், தெற்குமலை என இவ்விகார மில்லாமலும் வரும். (கூசு)

[தெங்கு என்னும்மொழிப் புணர்ச்சி.]

187. தெங்குநீண் டீற்றுயிர் மெய்கெடுங் காய்வரின்.

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY

(இ - ள்) காய் - காயென்னுஞ் சொல், வரின் - வந்தால், தெங்கு-தெங்கென்னும் நிலைமொழி, நீண்டு-முதனீண்டு, ஈற்றுயிர்மெய்-ஈற்றிலுள்ள வுயிர்மெய், கெடும் - நீங்கும், எ - று.

(உ - ம்.) தெங்கு + காய்=தேங்காய் எனவரும். கெட்டே வரு மென்றமையால் தெங்கங்காய் என வருதலுங் கொள்க. (௮௭)

[ஒன்றுமுதல் எட்டீறுமெண்ணுப் பெயர்களின் புணர்ச்சி.]

188. எண்ணிறை யளவும் பிறவு மெய்தின்
ஒன்று முதலெட் டீறா மெண்ணுள்
முதலீ ரெண்முத னீளு மூன்றா
றேழ்குறு குமா றேழல் லவற்றின்
ஈற்றுயிர் மெய்யு மேழ னுயிரும்
ஏகு மேற்புழி யென்மனார் புலவர்.

(இ - ள்.) எண் - எண்ணுப் பெயரும், நிறை - நிறைப்பெயரும், அளவும்-அளவுப்பெயரும், பிறவும் - பிறபெயர்களும், எய்தின்-வந்தால், ஒன்றுமுதல - ஒன்றுமுதல், எட்டீறும் - எட்டீறும், எண்ணுள் - எண்களுள், முதலீரெண் - முதலிலுள்ள இரண்டெண்களும், முதல்நீளும்-முதற்குறில்நீளும், மூன்றாறேழ்-மூன்றும் ஆறும் ஏழும், (முதல்) குறுகும் - முதனெடில் குறுகும், ஆறேழல்லவற்றின் - ஆறுமேழு மல்லாத ஆறெண்களினுடைய, ஈற்றுயிர்மெய்யும் - இறுதியிலுள்ள உயிர் மெய்களும்," ஏழன் - ஏழனுடைய, (ஈற்) றுயிரும் - இறுதியிலுள்ள உயிரும், ஏகும் - கெடும், ஏற்புழி - ஏற்குமிடங்களில், என்மனார்-என்று சொல்லுவர், புலவர் - புலவர், எ-று.

இவ்விகாரம் பண்புத்தொகைக்கே யுரியவாகும். ஏழ் என்பது முற்றியலுகர வீறாயினும் 'ஒன்றினமுடித்த றன்னினமுடித்தல்' என்பதனால் இங்கே சொல்லப்பட்டது.

(உதாரணம்.)

ஆறு	+பத்து	=அறுபது.	ஏழு	+பத்து	=எழுபது.
,,	+கழஞ்சு	=அறுகழஞ்சு.	,,	+கழஞ்சு	=எழுகழஞ்சு.
,,	+நாழி	=அறுநாழி.	,,	+நாழி	=எழுநாழி
,,	+மீன்	=அறுமீன்.	,,	+மீன்	=எழுமீன்

என ஆறும் ஏழும் குறுகின.

ஏழு+கடல்=எழ்கடல், என ஏழனீற்றுயிர்கெட்டது. மற்றவைகளுக்கு உதாரணம் பின்னே காட்டப்படும். 'ஏற்புழி' என்றதனால் பொதுவிதியால் இரண்டாயிரம், ஏழாயிரம், இரண்கெழஞ்சு, மூன்று

படி, நான்குபொருள், ஏழுகடல் என நிற்பனவும் உண்டென்று கொள்க. (௧௮௮)

[ஒன்று, இரண்டு என்பவைகளின் புணர்ச்சி.]

189. ஒன்றன் புள்ளி ரகர மாக
இரண்ட னொற்றுயி ரேகவுவ் வருமே.

(இ-ள்.) ஒன்றன் - ஈற்றுயிர்மெய்கெடநின்ற வொன்றென்னு மெண்ணினது, புள்ளி - னகரமெய்யானது, ரகரமாக - ரகர மெய் யாக, இரண்டன் - இரண்டனுடைய, ஒற்று - ணகர மெய்யும், உயிர் - அகரவுயிரும், ஏக - கெட, உ வரும் - அவ்விரண்டு ரகரமெய் மேலும் உகரம் வரும், எ - று.

(உ-ம்.) ஒன்று+ஆயிரம்=ஒராயிரம், இரண்டு+ஆயிரம்=இரா யிரம், என உயிர்வர முதனீண்டு ஈற்றுயிர்மெய்கெட்டு உகரம் பெற்று "முற்றுமற் றொரோவழி" என்பதனால் அவ்வுகரமுங் கெட்டுநின்றன. ஒன்று+பத்து=ஒருபது, இரண்டு+பத்து=இருபது, என மெய்வர முதனீளாது, ஈற்றுயிர் மெய்கெட்டு உகரம் பெற்று வந்தன. இங்கே சொல்லியபடி மற்றதிரிபு முதலானவை வருதலுங் காண்க. சிறு பான்மை ஒராயிரம், இராயிரம் என வருதலுமுண்டு. (௧௮௯)

[மூன்று என்னும் மொழிப்புணர்ச்சி.]

190. மூன்றனுறுப் பழிவும் வந்தது மாகும்.

(இ-ள்.) மூன்றன் - இறுதியுயிர்மெய்கெடநின்ற மூன்றென்னு மெண்ணினது, உறுப்பு - மெய்யானது, அழிவும் - கெடுதலும், வந்த தும் - வருகிற மெய்யாகத் திரிதலும், ஆகும் - ஆகும், எ - று.

(உ-ம்.) மூன்று+ஒன்று=மூவொன்று என உயிர்வரமுதல்குறு காது ஈற்றெழுத்தும் னகர மெய்யுங் கெட்டன. மூன்று+பத்து= முப்பது என மெய்வர ஈறுகெட்டு னகரமெய் வந்தமெய்யாய்த்திரிந் தது. மற்றவைகளு மிப்படியே. (௧௯0)

[நான்கு என்னும் மொழிப்புணர்ச்சி.]

191. நான்கன் மெய்யே லறவா கும்மே.

(இ-ள்.) நான்கன் - இறுதியுயிர்மெய்கெட நின்ற நான்கென்னு மெண்ணினது, மெய் - னகரமெய், ல ற ஆகும் - லகரமெய்யாகவும் றகர மெய்யாகவுந் திரியும், எ - று.

(உ-ம்.) நான்கு+ஆயிரம்=நாலாயிரம், நான்கு+வழி=நால வழி, என உயிரும் இடையெழுத்தும் வர ஈற்றுயிர் மெய்கெட்டு னகர

மெய் லகரமெய்பாயிற்று, நான்கு + மணி = நான்மணி என லகரமெய் யோடு மயங்காத மெல்லெழுத்து வரின், னகரமெய் இயல்பாமென்க. நான்கு + பத்து = நாற்பது, என வல்லெழுத்துவர ஈற்றுயிர் மெய் கெட்டு னகரமெய் றகரமெய்யாயிற்று. (சச)

[ஐந்து என்னும் மொழிப்புணர்ச்சி.]

192. ஐந்தனொற் றடைவது மினமுங் கேடும்.

(இ-ள்.) ஐந்தன் - இறுதியுயிர் மெய்கெடநின்ற ஐந்தென்னு மெண்ணினது, ஒற்று - நகரமெய்யானது, அடைவதும் - வருகிற மெய்யாகியும், இனமும் - அதற்கினமாகியும், கேடும் - கெட்டும் வரும், எ - று.

(உ-ம்.) ஐந்து + மூன்று = ஐம்மூன்று, என மெல்லெழுத்துவர ஈற்றுயிர் மெய்கெட்டு நகரமெய் வந்த மெய்யாய்த் திரிந்தது. ஐந்து + கழஞ்சு = ஐங்கழஞ்சு, என வல்லெழுத்துவர ஈற்றுயிர் மெய்கெட்டு நகரமெய் வந்தவெழுத்திற்கு இனமாய்த்திரிந்தது. ஐந்து + ஆயிரம் = ஐயாயிரம், ஐந்து + வழி, ஐவழி என உயிரும் இடையெழுத்தும் வர, ஈற்றுயிர் மெய்புடன் நகரமெய்யுங் கெட்டது.

ஒரோவிடத்து ஐவண்ணம் என வரும். 'அடைவது மினனும்' என்றமையால் அருத்தாபத்தியால் ஐந்நூறு, ஐந்நாழி என, நகர மெய் இயல்பாதல் கொள்க. (சஉ)

[எட்டு என்னும் மொழிப்புணர்ச்சி.]

193. எட்ட னுடம்பு ணவ்வாகு மென்ப.

(இ-ள்.) எட்டன் - இறுதியுயிர் மெய்கெட நின்ற எட்டென்னு மெண்ணினது, உடம்பு - டகரமெய்யானது, ணவ்வாகும் - ணகர மெய்யாகும், என்ப - என்று சொல்லுவர் புலவர், எ - று.

(உ-ம்.) எட்டு + ஆயிரம் = எண்ணாயிரம், என ஈற்றுயிர் மெய் கெட்டு, டகரமெய் ணகரமெய் யாயிற்று. மற்றவைகளு மிப்படியே.

{ஒன்பது என்னும் மொழியோடு பத்து, நூறு என்னும் எண்கள் புணர்தல்.}

194. ஒன்பா னொடுபத்து நூறு மொன்றின்
முன்னதி னேனைய முரணி யொவ்வொடு
தகர நிறீஇப் பஃதகற்றி னவ்வை
நிரலே ணளவாத் திரிப்பது நெறியே.

(இ-ள்.) ஒன்பானொடு - ஒன்பஃதுடனே, பத்தும் - பத்தென் பதும், நூறும் - நூறென்பதும், ஒன்றின் - வந்து புணருமாயின்,

முன்னதின் - முன்னதாகிய நிலைமொழியி னின்றும், ஏனைய-மற்றை வருமொழிகளாகிய பத்தையும் நூற்றையும், முரணி - முறையே நூறெனவும் ஆயிரமெனவும் திரித்து, ஒவ்வொடு - நிலைமொழி முதலிலுள்ள ஒகர வுயிரோடு, தகரம் - தகரமெய்யை, நிறீஇ - அதற்கு ஆதாரமாக நிறுத்தி, பஃது அந்நிலைமொழி இறுதியிலுள்ள பஃதை, அகற்றி-கெடுத்து, னவ்வை-அம்மொழிமுதற்கு அயனின்ற னகரமெய்யை, நிரலே - முறையே, ணளவா - ணகர மெய்யாகவும் ளகரமெய்யாகவும், திரிப்பது - திரிப்பது, நெறி-முறையாகும், எ-று.

'நெறியே' என்ற இலேசானே தனிக்குறின் முன்னொற்றிரட்டித் தலுங் கொள்க.

(உ-ம்.) ஒன்பஃது + பத்து=தொண்ணூறு, ஒன்பஃது + நூறு=தொள்ளாயிரம் எனவரும். தொளாயிரமென இக்காலத்தில் வழங்குகின்றது.

'பஃதகற்றி' என்பதனோடு பொருந்த ஒன்பதனோ டென்னாது 'ஒன்பானொடு' என்றமையால் ஒன்பது நின்று புணரினு மிவ் விதியே பெறுமென்றறிக. (௯௪)

[ஒன்றுமுதலிய எட்டு எண்களோடு பத்து என்னும் எண் புணர்தல்.]

195. முதலிரு நான்கா மெண்முனர்ப் பத்தின்
இடையொற் றேக லாய்த மாகல்
எனவிரு விதியு மேற்கு மென்ப.

(இ-ள்.) முதல்-ஒன்று முதலாகிய, இருநான்கா மெண்முனர்-எட்டெண்களின் முன்னும் வருகிற, பத்தின் - பத்தென்னு மெண்ணினது, இடை - நடுநின்ற, ஒற்று - தகர மெய்யானது, ஏகல் - கெடுதலும், ஆய்தமாகல் - தகர நின்றவிடத்து அதுகெட ஆய்தம் வருதலும், என இருவிதியும் - என்னுமிவ்விரண்டு விதியையும், ஏற்கும் - ஏற்கும், எனப-என்று சொல்லுவர் புலவர், எ-று.

(உ - ம்.) ஒன்று + பத்து=ஒருபது, ஒருபஃது; இரண்டு+ பத்து=இருபது, இருபஃது. மற்றவைகளு மிப்படியே. (௯௫)

[பது, பஃது ஈற்று எண்ணுப் பெயர்களின் புணர்ச்சி.]

196. ஒருபஃ தாதிமுன் னொன்றுமுத லொன்பான்
எண்ணு மவையூர் பிறவு மெய்யின்
ஆய்த மழிய வாண்டாகுந் தவ்வே.

(இ-ள்.) ஒருபஃதாதிமுன்-ஒருபஃது முதலாகிய எட்டெண் களின்முன், ஒன்றுமுதல் - ஒன்றுமுதலாகிய, ஒன்பானெண்ணும் -

ஒன்பதெண்களும், அவை-அவ்வெண்களை, ஊர்-ஊர்ந்த, பிறவும் - மற்றவையும், எய்தின் - வந்து புணருமாயின், ஆய்தம்-நிலைமொழி யிடையிலே நின்ற ஆய்தமானது, அழிய - கெட, த - இயல்பாகிய தகரம், ஆண்டு - அவ்வாய்தம் நின்றவிடத்து, ஆகும் - வரும், எ-று.

(உ-ம்.) ஒருபஃது + ஒன்று = ஒருபத்தொன்று, இருபஃது + மூன்றரை = இருபத்து மூன்றரை எனவரும்.

'ஆய்தங்கெடத் தகரம் வரும்' என்றமையால் அருத்தாபத்தி யால் ஆய்தமில்லாத ஒருபது முதலானவைகளும் தகரம் பெறுமென்ற தாயிற்று. (சகூ)

[பத்து, ஒன்பது என்னு மெண்களோடு மற்ற எண்கள் புணர்தல்]

197. ஒன்றுமுத லீரைந் தாயிரங் கோடி
எண்ணிறை யளவும் பிறவரிற் பத்தின்
ஈற்றுயிர் மெய்கெடுத் தின்னு மிற்றும்
ஏற்ப தேற்கு மொன்பது மினைத்தே.

(இ-ள்.) ஒன்று முதலீரைந்து - ஒன்று முதலாகிய பத்தெண் களும், ஆயிரம் - ஆயிரமும், கோடி - கோடியுமாகிய, எண் - எண் ணுப்பெயரும். நிறை - நிறைப்பெயரும், அளவும் - அளவுப் பெய ரும், பிற - பிறபெயரும், வரின் - வந்து புணருமாயின், பத்தின் - நிலைமொழியாகிய பத்தினது, ஈற்றுயிர்மெய் - இறுதியிலுள்ள தகர வுயிர்மெய்யை, கெடுத்து - அழித்து, இன்னும் - இன்சாரியை யாயி னும், இற்றும் - இற்றுச்சாரியை யாயினும், ஏற்பது - அவ்விடத்திற் கேற்பது, ஏற்கும் - ஏற்றுநிற்கும், ஒன்பதும் - ஒன்பதென்னும் நிலை மொழியும், இனைத்து - இப்படியே எண்ணுப்பெயர் முதலானவை வந்து புணருமாயின் இன்னுயினும் இற்றுயினும் அவ்விடத்திற்கு ஏற் பது ஏற்றுநிற்கப் பெறும், எ-று.

(உ-ம்.) பத்து + ஒன்று = பதினொன்று, பதிற்றொன்று. ஒன் பது + ஆயிரம் = ஒன்பதினாயிரம் ஒன்பதிற்றாயிரம் எனவரும்.

பதினொன்று - உம்மைத்தொகை. பதிற்றொன்று - பண்புத் தொகை; ஒன்பதினாயிரம், ஒன்பதிற்றாயிரம் இவ்விரு தொடரும் பண்புத்தொகை. ஏற்ப தேற்கும் என்றதனால் பத்துக்கோடி, ஒன் பதுகோடி எனப் பொதுவிதிப்படியே முடிந்து நிற்றலுங் கொள்க. ()

[பத்து என்பதனோடு இரண்டு வந்து புணர்தல்.]

198. இரண்டு முன்வரிற் பத்தினீற் றுயிர்மெய்
கரந்திட வொற்றுன வ்வாகு மென்ப.

(இ-ள்) இரண்டு - இரண்டென்பது, முன்வரின் - முன்வருமாயின், பத்தின் - பத்தென்னு நிலைமொழியினது, ஈற்றுயிர்மெய் - ஈற்றிலுள்ள துகர வுயிர்மெய்யானது, கரந்திட - கெட, ஒற்று - தகரமெய், னவ்வாகும் - னகரமெய்யாகத் திரியும், என்ப - என்று சொல்லுவர் புலவர், எ-று.

(உ-ம்.) பத்து + இரண்டு = பன்னிரண்டு எனவரும், இவ்விதி உம்மைத் தொகைக்கே கொள்க. (சஅ)

[ஒன்பதொழிந்த மற்ற எண்கள் இரட்டித்துப் புணர்தல்.]

199 ஒன்ப தொழித்தவெண் ணொன்பது மிரட்டின்
முன்னதின் முன்னல வோட வுயிர்வரின்
வவ்வு மெய்வரின் வந்தது மிகனெறி.

(இ-ள்.) ஒன்பது - ஒன்ப தென்கிற எண்ணொன்றனையும், ஒழித்த - ஒழித்துநின்ற, எண் ஒன்பதும் - ஒன்றுமுதற் பத் தீறாகிய ஒன்பதெண்ணினையும், இரட்டின் - இரட்டித்துச் சொன்னால், முன்னதின் - நிலைமொழியினது, முன்னல - முதலெழுத்தல்லாதவைகளெல்லாம், ஓட - கெட, உயிர்வரின் - உயிர்முதலானவெண் வரின், வவ்வும் - வகரமெய்யும், மெய்வரின் - மெய்முதலான எண்வரின், வந்ததும் - வந்தமெய்யும், மிகல் - மிகுதல், நெறி - முறையாம், எ-று.

(உ-ம்) ஒவ்வொன்று, இவ்விரண்டு, மும்மூன்று, நந்நான்கு, ஐவைந்து, அவ்வாறு, எவ்வேழு, எவ்வெட்டு, பப்பத்து.

'நெறி' யென்றமையால், நந்நான்கு என நான்கிற்குக் குறுக்கமும், ஒரோவொன்று - ஒன்றொன்று - கழக்கழஞ்சு என இரட்டித்தலும், இன்னுங் குற்றியலுகரப் புணர்ச்சியுள் அடங்காதனவுங் கொள்க. (சகூ)

ஊகாரவீற்றுச்சிறப்புவிதி.

[பூ என்னும் மொழிப்புணர்ச்சி.]

200. பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும்.

(இ-ள்.) பூப்பெயர்முன் - பூ என்னும் பலபொருளொரு சொன்முன், இனமென்மையும் - வருகிற வல்லினமிகுதலல்லாமல் அவற்றிற் கினமாகிய மெல்லினமும், தோன்றும் - மிகும், எ-று.

(உ-ம்) பூங்கொடி - பூஞ்சோலை - பூந்தடம் - பூம்பணை.

மலராயின் இரண்டாம் வேற்றுமைத்தொகையும், அழகாயின் பண்புத்தொகையுமாம். (ரு0)

ஏகாரஓகாரவீற்றுச்சிறப்புவிதி.

[ஏகார ஓகார இடைச்சொற்களின் புணர்ச்சி.]

201. இடைச்சொல் லேயோ முன்வரி னியல்பே.

(இ-ள்.) இடைச்சொல் - இடைச்சொல்லாகிய, ஏ (முன்) - ஏகாரத்தின்முன்னும், ஓ முன் - ஓகாரத்தின் முன்னும், வரின் - வல்லினம் வந்தால், இயல்பு - பொதுவிதியால் மிகாது இயல்பாகும், எ-று.

(உ-ம்.) அவனே கொண்டான்—இது பிரிநிலையும் வினாவும் ஈற்றசையும் தேற்றமுமாம். அறமே பொருளே காமமே துறவே—எண். ஏயே தனை யென்றே ரிருடிவினவ—என்பது இசை நிறை. அவனோகொண்டான் என்பது ஒழியிசைமுதலிய எட்டுமாம். (௲௪)

ஐகாரவீற்றுச்சிறப்புவிதிகள்.

[ஐகார வீற்றின்முன் நாற்கணமும் புணர்தல்.]

202. வேற்றுமை யாயி னைகா னிறுமொழி
ஈற்றழி வோடும் மேற்பவு முளவே.

(இ-ள்.) ஐகானிறுமொழி - ஐகாரவீற்றுச்சொற்கள், வேற்றுமையாயின் - வேற்றுமைக்கண் வருமாயின், ஈற்றழிவோடும்-ஈற்றைகாரங்கெடுதலுடனே, அம் - அம்முச்சாரியை, ஏற்பவும் - பெற்று முடிவனவும், உள-சிலவுள, எ-று.

அழிவோடு மென்றமையால் அழியாமையோடும் அம் ஏற்பவு முளவெனக் கொள்க. வருமெழுத்துச் சொல்லாமையால் நாற்கண முங்கொள்க.

(உ-ம்.) புன்னை+கானல்=புன்னையங்கானல், முல்லை+புறவம்=முல்லையம்புறவம், வழுதுணை+காய்=வழுதுணங்காய், ஆவிரை+வேர்=ஆவிரம்வேர், தாழை+பூ=தாழம்பூ எனவரும்.

ஏற்பவு முள வென்றதனால் முல்லைப்புறவுஎனவரினுங் கொள்க.

[பனை என்னுமொழிப்புணர்ச்சி.]

203. பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரின்
ஐபோ யம்முந் திரள்வரி னுறழ்வும்
அட்டுறி னைகெட்டந் நீள்வுமாம் வேற்றுமை.

(இ-ள்.) பனைமுன் - பனையென்னும் பெயர்முன், கொடிவரின் - கொடியென்னும் பெயர்வருமாயின், மிகலும் - வந்தது மிகலும், வலிவரின் - க ச த ப க்கள் வருமாயின், ஐபோய் - நிலைமொழி

யீற்றைகாரங் கெட்டு, அம்மும் - அம்முப்பெறுதலும், திரள்வரின் - திரளென்னும் பெயர்வருமாயின், உறழ்வும் - வந்தது மிகுந்தும் ஐபோய் அம்முப்பெற்றும் விகற்பித்தலும்; அட்டுறின் - அட்டென்னும் பெயர்வருமாயின், ஐகெட்டு - ஐகாரங்கெட்டு, அ நீள்வும் - வருமொழி அகரம் ஆகாரமாதலும், ஆம்-ஆகும், வேற்றுமை - வேற்றுமைக்கண், எ-று.

(உ-ம்.)

பனை + கொடி = பனைக்கொடி — மிகுந்தது.

பனை + காய் = பனங்காய்
பனை + செறும்பு = பனஞ்செறும்பு
பனை + தூண் = பனந்தூண்
பனை + பழம் = பனம்பழம்
} ஐ கெட்டு அம் பெற்றது.

பனை + திரள் = பனைத்திரள், பனந்திரள் — உறழ்ந்தது.

பனை + அட்டு = பனாட்டு — ஐ கெட்டு அ நீண்டது.

உயிரீற்றுப் புணரியல் முற்றுப்பெற்றது.

நான்காவது

மெய்யீற்றுப்புணரியல்.

[மெய்யீற்றின்முன் உயிர்புணர்தல்.]

204. உடன்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே.

(இ-ள்.) உடன்மேல் - நிலைமொழி ஈற்றினின்ற மெய்யின்மேல், உயிர் - வருமொழிமுதலுயிர், வந்து - வந்து, ஒன்றுவது-ஒன்றுபட்டிணங்கிநிற்பது, இயல்பே-இயல்புப்புணர்ச்சியேயாம், எ-று.

(உ-ம்) தோன்றல் + அழகன் = தோன்றலழகன் } அல்வழி.
புகழ் + அழகிது = புகழழகிது }

வேல் + எறிந்தான் = வேலெறிந்தான் } வேற்றுமை
வாள் + எடுத்தாள் = வாளெடுத்தாள் }

205. தனிக்குறின் முன்னொற் றுயிர்வரி னிரட்டும்.

(இ-ள்.) தனிக்குறின்முன் - தனிக்குற்றெழுத்தின் முன்னின்ற, ஒற்று-மெய்யானது, உயிர் - உயிரெழுத்து, வரின் - வந்தால், இரட்டும்—இரடித்து நிற்கும், எ-று.

(உ-ம்.) மண் + அழகிது = மண்ணழகிது } அல்வழி.
பொன் + அரிது = பொன்னரிது }

கண் + அழகு = கண்ணழகு } வேற்றுமை
பொன் + அணி = பொன்னணி }

[யகரம் ஒழிந்த மெய்களின்முன் யகரம்புணர்தல்.]

206. தன்னொழி மெய்ம்முன் யவ்வரி னிகரம்
துன்னு மென்று துணிநரு முளரே.

(இ-ள்.) தன்னொழி - தன்னையொழிந்த, மெய்ம்முன் - ஞணநமனரலவழள என்கிற பத்து மெய்களின் முன்னும், ய - யகரமானது, வரின்-வந்தால், இகரம்-இகரச்சாரியையை, துன்னுமென்று - தன்முன் பொருந்துமென்று, துணிநரும் - துணிந்து கொள்வாரும், உளர் - சிலருளர். எ-று.

(உ-ம்.) வேள் + யாவன் = வேளியாவன் — அல்வழி.
மண் + யாப்பு = மண்ணியாப்பு வேற்றுமை.

துணிநருமென்ற எதிர்மறையாகிய இழிவு சிறப்பும்மையால், வேள் யாவன், மண்யாது எனப் பொதுவிதி பெறுமென்பார் பலருளர். (௩)

[முதனிலைத் தொழிற்பெயரும், ஏவலும் உகரம் பெறுதல்.]

207. ஞணநம லவளன வொற்றிறு தொழிற்பெயர்
ஏவல் வினைநனி யவ்வல் மெய்வரின்
உவ்வுறு மேவ லுறாசில சில்வழி.

(இ - ள்.) ஞணநம லவளன - ஞணநம லவளன என்கிற, ஒற்று - எட்டு மெய்களும், இறு - இறுதியாகிய, தொழிற்பெயர் - முதனிலைத் தொழிற் பெயர்களும், ஏவல்வினை - ஏவல் வினைகளும், யஅல் மெய் - யகரமொழிந்த மெய்கள், வரின் - வருமாயின், நனி - பெரும்பாலும், உ, உகரச்சாரியையை, உறும் - இறுதிக்கட் பொருந் தும், சில ஏவல் - சில ஏவல்வினைகள், சில்வழி - சிலவிடங்களிலே, உறா - அவ்வுகரச்சாரியையைப் பொருந்தாவாம், எ - று.

(உ - ம்) உரிஞுக்கடிது, உண்ணுக்கடிது, பொருநுக்கடிது, திருமுக்கடிது, வெல்லுக்கடிது, வவ்வுக்கடிது, துள்ளுக்கடிது, தின் னுக்கடிது; நீண்டது - வலிது எ-ம்; கடுமை-நீட்சி - வன்மை எ-ம்; தொழிற்பெயரிருவழியும் உகரம்பெற்றன. மற்றவையும் இப்படியே.

உரிஞு கொற்றா, உண்ணுகொற்றா, பொருநுகொற்றா, திருமு கொற்றா, தின்னுகொற்றா-நாகா - வளவா - என ஏவல்வினை உகரம் பெற்றன. மற்றவையு மிப்படியே.

உகரச்சாரியை பெற்றும் பெறாமலும் வரும் ஏவல்வினைகள் ண ன ல ள என்னும் நான்கீற்றனவுமாம். (உ - ம்) உண்கொற்றா, தின்சாத்தா, வெல்பூதா, துள்வளவா எனப் பெறாமல் வந்தன. ஞ ந ம வ என்னும் நான்கீறும் உகரம்பெற்றே வரும்.

சிறுபான்மை உண்ணு, தின்னு என வருமொழி நோக்காமல், உகரம் பெறுதலும், வாரு சாத்தா, வாழுவளவா எனப்பிற ஈறுகள் உகரம் பெறுதலும் உண்டு. (௪)

[நகரவீற்று முதனிலைத்தொழிற்பெயர் அகரம் பெறுதல்.]

208. நவ்விறு தொழிற்பெயர்க் கவ்வுமாம் வேற்றுமை.

(இ - ள்.) நவ்விறு - நகரமிறுதியாகிய, தொழிற்பெயர்க்கு முதனிலைத் தொழிற்பெயர்க்கு, அவ்வுமாம் - உகரச்சாரியை அல்லா மலும் அகரச்சாரியையுமாகும், வேற்றுமை-வேற்றுமைக்கண், எ-று.

மைப் பொருட்கு - வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக் கண், ஆகும் ஆகும், எ - று.

(உ - ம்.) எயின் + குடி = எயினக்குடி, சேரி, தோட்டம், பாடி.

பொருட்கேயென்ற மிகையால் எயினமரபு, எயினவாழ்வு, எயினவணி, என மற்றைக்கணம் வரினும் அகரச்சாரியை பெறுதலும் - எயினக்கன்னி என அல்வழியில் அகரச்சாரியை பெறுதலுங்கொள்க.

[மீன் என்னும் மொழிப்புணர்ச்சி.]

213. மீன்றவ் வொடு பொரூஉம் வேற்றுமை வழியே.

(இ - ள்) மீன் - மீனென்னு மொழியிறுதி னகரம், வேற்றுமைவழி - வேற்றுமைக்கண் (வல்லெழுத்துவரின்,) றவ்வொடு றகரத்தோடு, பொரூஉம் - உறழ்ந்துவரும், எ - று.

(உ - ம்) மீன் + கண் = மீற்கண், மீற்செவி, மீற்தலை, மீற்புறம்,

[தேன் என்னும் மொழிப்புணர்ச்சி.]

214. தேன்மொழி மெய்வரி னியல்பு மென்மை
மேவி னிறுதி யழிவும் வலிவரின்
ஈறுபோய் வலிமெலி மிகலுமா மிருவழி.

(இ - ள்.) தேன்மொழி - தேனென்னுஞ்சொல, மெய்வரின் - மூவின மெய்களும் வரின், இயல்பும் - இறுதினகர மெய் இயல்பாதலும், மென்மைமேவின் - மெல்லினம் வரின், இறுதி - அம்மெய், அழிவும் - இயல்பாதலே யன்றிக் கெடுதலும், வலிவரின் - வல்லினம்வரின், ஈறு - அம்மெய், போய் - இயல்பாதலே யன்றிக் கெட, வலிமெலி மிகலும் - வந்த வல்லினமாவது அதற்கினமாவது மிகுதலும், ஆம் - ஆகும், இருவழி - இருவழிக்கண்ணும், எ - று.

அல்வழி.	(உ-ம்.) வேற்றுமை.	
தேன்கடிது	தேன்கடுமை	இயல்பு.
தேன்மாண்டது	தேன்மாட்சி	
தேன்யாது	தேன்யாப்பு	
தேன்மொழி	தேன்மலர்	இயல்பும், அழிவும்.
தேமொழி	தேமலர்	
தேன்குழம்பு	தேன்குடம்	இயல்பும், வலிமிகலும், மெலிமிகலும்.
தேக்குழம்பு	தேக்குடம்	
தேங்குழம்பு	தேங்குடம்	

[எகின் என்னும் மொழிப்புணர்ச்சி.]

215. மரமல்லெகின்மொழி யியல்பு மகரம்
மருவ வலிமெலி மிகலு மாகும்.

(இ - ள்.) மரம்அல்-மரமல்லாத, எகின் மொழி - அன்னத்தை உணர்த்தும் எகின் என்னுஞ்சொல், இயல்பும்-வேற்றுமையிலும் வல்லினம்வர இறுதியியல்பாதலும், அகரம்மருவ - இருவழியிலும் அகரச் சாரியைபொருந்த, வலிமெலிமிகலும் - வல்லெழுத்தாவது அதற்கு இனமாவது மிகுதலும், ஆகும் - ஆகும், எ - று.

(உ - ம்.) எகின்கால், சிறை, தலை, புறம், என வேற்றுமையினு மியல்பாயிற்று. எகினட்புள் - எகினம்புள் எ-ம்; எகினக்கால் - எகினங்கால் எ-ம்; இருவழியிலும் அகரம் வர, வலிமெலி மிகுந்தன.

அகரம் வருவதற்கு வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங்கொள்க. எகினமாட்சி - எகினவாழ்க்கை - எகினவழகு.

[குயின், ஊன் என்னும் மொழிகளின் புணர்ச்சி]

216. குயினூன் வேற்றுமைக் கண்ணு மியல்பே.

(இ - ள்.) குயின் - குயினென்னும் பெயரும், ஊன்-ஊனென்னும் பெயரும், வேற்றுமைக்கண்ணும் - வேற்றுமையினிடத்தும், இயல்பு - இயல்பாகும், எ - று.

(உ - ம்.) குயின்கடுமை - குயின் சிறுமை - ஊன்கடுமை - ஊன் சிறுமை - தீமை - பெருமை எனவரும், குயின்=மேகம். (கரு)

[மின், பின், பன், கன் என்னும் பெயர்களின் புணர்ச்சி.]

217. மின்பின் பன்கன் றொழிற்பெய ரனைய
கன்னவ் வேற்று மென்மையோ டுறழும்.

(இ - ள்.) மின் பின் பன் கன் - மின்முதலிய நான்குசொற்களும், தொழிற்பெயரனைய - தொழிற்பெயர்போல யகர மல்லாத மெய்கள்வரின் உகரச்சாரியை பொருந்தும், கன்-இவற்றுட் கன்னென்னுஞ் சொல், அ ஏற்று - அகரச்சாரியையும் பெற்று, மென்மையோடுஉறழும் - வருகிற வல்லெழுத்தாவது அதற்கு இனமாவது மிகப்பெறும், எ - று.

(உ - ம்.) மின்னுக்கடிது, பின்னுக்கடிது, பன்னுக்கடிது, கன்னுக்கடிது, நன்று, வலிது, எ-ம்; கடுமை, நன்மை, வன்மை எ-ம் கன்னத்தட்டு, கன்னந்தட்டு எ - ம்; கன்னத்தூக்கு, கன்னந்தூக்கு எ-ம்; அல்வழி வேற்றுமைகளில் முறையேவந்தன. மற்றவைகளு மிப்படியே. கன் சிறுதராசுத்தட்டு. (கசு)

[தன், என், நின் என்பவற்றின் புணர்ச்சி.]

218. தன்னென் னென்பவற் றீற்றுனவ் வன்மையோ
டுறழு நின்னீ றியல்பா முறவே.

(இ-ள்.) தன்னென் னென்பவற்று - தன் என் என்பவைகளி னுடைய, ஈறு - இறுதியிலுள்ள, ண - ணகரமெய்யானது, வன்மை யோடுறழும் - வல்லினம்வரிற் பொதுவிதியால் றகரமாகத் திரிதலும் அவ்விதியேலாதியல்பாதலுமாம், நின் - நின்னென்பதின், ஈறு - இறுதியிலுள்ள னகரமெய்யானது, இயல்பாம் - வல்லினம்வரிற் றிரி யாதியல்பேயாகும், எ - று.

(உ-ம்.) தன்+பகை=தன்பகை, தற்பகை } னகரம் உறழ்ந்தது.
என்+பகை=என்பகை, எற்பகை

நின்+பகை=நின்பகை—னகரம் இயல்பாயிற்று.

உறவே யென்ற மிகையால் மின் பின் முதலியவை மின்கடிது, மின் கடுமை, என இருவழியும் சாரியைபெறுதலுந் திரிதலுமில்லா மல் வருதலும், மான்குளம்பு, அழன்கை யென வேற்றுமையிலே சிறப்புவிதிசொல்லப்பெறுதனவைகள் இயல்பாதலும்; வரிற்கொள்ளும் எனச் செயினென்னும் வாய்பாட்டு வினையெச்சம் பொதுச் சூத்திர த்தால் இயல்பாகாது திரிதலும், இன்னும் னகர மெய்யீற்றுள் அட ங்காதவை யிருந்தால் அவையுங் கொள்க.

அழன் - பிணம். (கஙு)

[மகரமெய்யின்முன் நாற்கணமும் புணர்தல்.]

219. மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்
வன்மைக் கினமாத் திரிபவு மாகும்.

(இ-ள்.) மவ்வீறு - மகரவீற்றுச் சொற்கள், ஒற்று - இறுதியி லுள்ள மகரமெய், அழிந்து - கெட, உயிரீறொப்பவும் - விதியுயிரீறாய் நின்று இயல்புயிரீறுபோலப் புணர்வனவும், வன்மைக் கினமாத் திரி பவும் - வல்லினம் வரிற்கெடாது அவற்றிற்கு இனமாகத் திரிவன வும், ஆகும் - ஆகும், எ - று.

உயிரீறொத்தல்-உயிர்வரின் உடம்படு மெய்பெறவும், வல்லினம் வரின் மிகவும், மெல்லினமும் இடையினமும் வரின் இயல் பாகவும் புணர்தல்.

அல்வழி.	(உ-ம்.) வேற்றுமை.
வட்டம்+ஆழி=வட்டவாழி	மரம்+அடி=மரவடி
,, கல்=வட்டக்கல்	,, கால்=மரக்கால்
,, நேமி=வட்டநேமி	,, நார்=மரநார்
,, வாரி=வட்டவாரி	,, வேர்=மரவேர்

இருவழியிலும் மவ்வீறுகெட உயிரீறு ஒத்தது.

நாம்+கடியம்=நாங்கடியம்—நம்+கை=நங்கை—இனமாயிற்று.

'இனமாத்திரிபவும்' என்றமையால், நாம்+பெரியம்=நாம பெரியம் எனப் பகரம் வருமிடத்து மகரம் பகரத்துக்கு இனமாதலின் திரியாது நிற்கும். (கஎ)

[சில மகரமெய்யீற்றுக்குச் சிறப்புவிதி.]

220. வேற்றுமை மப்போய் வலிமெலி யுறழ்வும்
அல்வழி யுயிரிடை வரினியல் பும்முள.

(இ-ள்.) வேற்றுமை - வேற்றுமைக் கண், ம - மகரவிறுதி, போய் - கெட, வலிமெலி உறழ்வும் - வல்லினமாவது அவற்றிற்கு இனமாவது மிகுந்துவிகற்பித்தலும், அல்வழி - அல்வழிக்கண், உயிர் - உயிரும், இடை - இடையினமும், வரின் - வந்தால், இயல்பும் - கெடாதியல்பாதலும், உள - உளவாம், எ-று.

(உ-ம்.) குளம்+கரை=குளக்கரை } வேற்றுமையில் மப்போய்
=குளங்கரை } வலிமெலி உறழ்ந்தது.

குளம் + அழகிது = குளமழகிது } அல்வழியில் உயிர் இடைவர
குளம் + யாது = குளம்யாது } இயல்பாயிற்று.

[நும், தம், எம், நம் என்னும் மொழிகளின் புணர்ச்சி.]

221. நுந்தம், எம்நம் மீறு மவ்வரு ஞநவே.

(இ-ள்.) நும் தம் எம் நம்-நும்முதலிய நான்கு விகாரமொழிகளுக்கும், ஈறும் - இறுதியாகிய, ம - மகர மெய்யானது, வரு ஞ ந - வருகிற ஞகர நகரங்களாகத் திரியும், எ - று.

(உ-ம்.) நும்+ஞாண்=நுஞ்ஞாண், நும் + நூல் = நுந்நூல் எனவரும். தம் முதலிய வற்றோடும் இப்படியே கூட்டுக.

ஞ ந வரின் அவையாகத் திரியுமெனவே, ஒழிந்த மகரம் வரின், நும்மணி என இயல்பாமென்பது பெற்றாம். ஞாண் - கயிறு. (கஅ)

[அகம் என்னும் மொழிப்புணர்ச்சி.]

222. அகமுனர்ச் செவிகை வரினிடை யனகெடும்.

(இ-ள்.) அகமுனர் - அகமென்னு மிடப்பெயர்முன், செவி கை - செவி கை என்கிற சினைப்பெயர்கள், வரின்-வந்தால், இடையன - நிலைமொழி நடுநின்ற ககர மெய்யும் அதன்மேலேறிய அகர வுயிரும், கெடும் - அழியும், எ-று.

(உ-ம்.) அகம்+செவி=அஞ்செவி, அகம்+கை=அங்கை.

கெட்டேவரு மென்றமையால், அகஞ்செவி, அகங்கை என வருவனவுங்கொள்க. (கக)

[ஈம், கம், உரும் என்னும் மொழிகளின் புணர்ச்சி.]

223. ஈமுங் கம்மு முருமுந் தொழிற்பெயர் மானும்
முதலன வேற்றுமைக் கவ்வும் பெறுமே.

(இ-ள்.) ஈமுங் கம்மு முருமும்-ஈம் கம் உரும் என்கிற மூன்றும், தொழிற்பெயர் மானும் - இருவழியிலுந் தொழிற்பெயர் போல யகர மல்லாத மெய்கள் வந்தால் உகரச்சாரியை பெற்று முடியும், முதலன - இவற்றுள்ளே முதற்கணின்ற ஈமும் கம்மும், வேற்றுமைக்கு - வேற்றுமைக்கண், அவ்வும் பெறும்-உகரச்சாரியை யல்லாமலும் அகரச்சாரியையும் பெறும், எ-று.

(உ-ம்.) ஈமுக்கடிது, கம்முக்கடிது, உருமுக்கடிது; நீண்டது, வலிது, எ-ம்; ஈமுக்கடுமை, நீட்சி, வலிமை, எ-ம்; ஈமக்குடம், கம்மக்குடம், எ-ம்; வரும். மற்றவைகளு மிப்படியே.

ஈம்=சுடுகாடு. கம்=கம்மியத் தொழில். உரும்=இடி. (௨௦)

[ய், ர், ழ மெய்யீற்றின்முன் வல்லினம் புணர்தல்.]

224. யரழ முன்னர்க் கசதப வல்வழி
இயல்பு மிகலு மாகும வேற்றுமை
மிகலு மினத்தோ டுறழ்தலும் விதிமேல்.

(இ-ள்.) யரழமுன்னர் - யகர ரகர ழகர மெய்களின் முன், கசதப - ககர சகர தகர பகரங்கள் வரின், அல்வழி - அல்வழியில், இயல்பும் - இயல்பாதலும், மிகலும்-மிகுதலும், வேற்றுமை - வேற்றுமையில், மிகலும் - மிகுதலும், இனத்தோடுறழ்தலும் - வல்லினமாவது மெல்லினமாவது மிகுதலும், விதியாகும் - விதியாகும், எ-று.

(உதாரணம்.)

பேய்+கடிது=பேய்கடிது	மெய்+கீர்த்தி=மெய்க்கீர்த்தி
மோர்+சிறிது=மோர்	கார்+பருவம்=கார்ப்பருவம்
வீழ்+தீது=வீழ்தீது	யாழ்+கருவி=யாழ்க்கருவி

என அல்வழியில் இயல்பும் மிகலும் ஆயின.

நாய்+கால்=நாய்க்கால்
தேர்+தட்டு=தேர்த்தட்டு
ஊழ்+பயன்=ஊழ்ப்பயன்
} வேற்றுமையில் வலிமிக்கது.

வேய்+குழல்=வேய்க்குழல், வேய்ங்குழல்
ஆர்+கோடு=ஆர்க்கோடு, ஆர்ங்கோடு
குமிழ்+கோடு=குமிழ்க்கோடு, குமிழ்ங்கோடு
} வேற்றுமையில் இனத்தோடு உறழ்ந்தன.

'மேல்' என்ற மிகையால் - வாய்+புகுவது=வாய்புகுவது என வேற்றுமையில் இயல்பாதலும்; பாழ்+கிணறு=பாழ்க்கிணறு, பாழ்

ங்கிணறு என அல்வழியில் விகற்பித்தலும்; வேய்+யாது=வேயாது, வேய்+யாப்பு=வேயாப்பு எனத் தனிக்குறிலைச் சாராத யகரவீறு யகரத்தின்முன் இருவழியிலுங் கெடுதலும்; இன்னும் அடங்காதவைகளிருந்தால் அவையுங்கொள்க. (உச)

[தமிழ், தாழ் என்னும் மொழிகளின் புணர்ச்சி.]

225. தமிழவ் வுறவும் பெறும்வேற் றுமைக்கே
தாழுங் கோல்வந் துறுமே லற்றே.

(இ-ள்.) தமிழ் - தமிழென்கிற சொல், வேற்றுமைக்கு - வேற்றுமைக்கண்ணே நாற்கணமும் வந்தால், அவ்வுறவும்-அகரச்சாரியை பொருந்தவும், பெறும் - பெறும், தாழும் - தாழென்னுஞ் சொல்லும், கோல் - கோலென்னுஞ் சொல்லானது, வந்து -வந்து, உறுமேல் - பொருந்துமாயின், அற்று-அந்த அகரச்சாரியை பெறும்.

(உ-ம்) தமிழ்ப்பிள்ளை, தமிழநாகன், தமிழவளவன், தமிழவரசன், எ-ம்; தாழக்கோல், எ-ம்; வரும்.

அவ்வுறவுமென்ற எதிரது தழீஇய வெச்சவும்மையால் தமிழின் சுவையென இன் சாரியை பெறுதலுங் கொள்க. (உ௫)

[கீழ் என்னும் மொழிப்புணர்ச்சி.]

226. கீழின்முன் வன்மை விகற்பமு மாகும்.

(இ-ள்.) கீழின் முன் - கீழென்கிற சொல்லின்முன் வருகிற, வன்மை - வல்லினம், விகற்பமுமாகும் - ஒருகாலியல்பாகியும் ஒருகான் மிக்கும் வருகிற விகற்பத்தையும் பொருந்தும், எ-று.

(உ-ம்.) கீழ்குலம் - கீழ்க்குலம், கீழ்சாதி - கீழ்ச்சாதி.

விகற்பமு மென்னுமிழிவு சிறப்பும்மையால், இவற்று ளியல்பே சிறப்புடைத்தென்றறிக. (உ௬)

{ லகர ளகர மெய்களின்முன் வல்லினமும் மெல்லினமும் இடையினமும் புணர்தல். }

227. லளவேற் றுமையிற் றடவு மல்வழி
அவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி
மேவி னணவு மிடைவரி னியல்பும்
ஆகு மிருவழி யானு மென்ப.

(இ-ள்.) லள - லகர ளகர மாகிய விரண்டு மெய்யீறுகளும், வலிவரின் - வல்லினம் வந்தால், வேற்றுமையில் - வேற்றுமைக்கண், றடவும் - முறையே றகர டகர மெய்களும், அல்வழி - அல்வழிக்

கண், அவற்றோடுறழ்வும் - றகர டகரங்களுடனே யுறழ்வனவும், ஆம் - ஆகும், இருவழியானும் - இருவழிக்கண்ணும், மெலிமேவின் - மெல்லினம் வந்தால், னணவும் - முறைமேய னகர ணகர மெய்களும், இடைவரின் - இடையினம் வந்தால், இயல்பும் - இயல்பும், ஆகும் - ஆகும், என்ப - என்றுசொல்லுவர் புலவர், எ-று.

(உ-ம்.) கல்+குறை=கற்குறை, முள்+குறை=முட்குறை, என வல்லினம்வர வேற்றுமையில் றகர டகரங்களாகத் திரிந்தன.

கல்+குறிது=கல்குறிது, கற்குறிது, முள்+குறிது = முள்குறிது, முட்குறிது என வல்லினம்வர அல்வழியில் ஒருகால் இயல்பாகியும் ஒருகாற்றிரிந்தும் உறழ்ந்தன.

கல்+ஞெரிந்தது=கன்ஞெரிந்தது, முள்+ஞெரிந்தது=முண்ஞெரிந்தது; கல்+ஞெரி=கன்ஞெரி, முள்+ஞெரி=முண் ஞெரி; என மெல்லினம்வர அல்வழியிலும் வேற்றுமையிலும் னகர ணகரங்களாகத் திரிந்தன.

கல்யாது, முள்யாது; கல்யாப்பு, முள்யாப்பு; என இடையினம்வர இருவழியிலும் இயல்பாயின.

அல்வழி யவற்றோ டுறழ்வு மென்றலும் இவற்றோடு மயங்காத தகரம்வரின் ஏற்புழிக்கோடலால் கற்றீது, முட்டீது, எனத்திரிபொன்றுமே கொள்க. (உ௪)

[லகர ளகர மெய்கள் ஆய்தமாகத் திரிதல்.]

228. குறில்வழி லளத்தவ் வணையி னாய்தம்
ஆகவும் பெறூஉ மல்வழி யானே.

(இ-ள்.) குறில் வழி - தனிக்குறிலின் பின்னின்ற, லள - லகர ளகர மெய்களானவை, அல்வழியான் - அல்வழிக்கண், த - தகரமானது, அணையின் - வருமாயின், ஆய்தமாகவும் - றகர டகரங்களாகத் திரிதலல்லாமலும் ஆய்தமாகத் திரிதலையும், பெறூஉம் - பொருந்தும், எ - று.

(உ-ம்.) கல்+தீது=கஃறீது, முள்+தீது=முஃடீது. (உ௫)

[தனிக்குறிலைச் சாராத லகரளகர மெய்கள் கெடுதல் முதலியன.]

229. குறில்செறி யாலள வல்வழி வந்த
தகரந் திரிந்தபிற் கேடு மீரிடத்தும்
வருநத் திரிந்தபின் மாய்வும் வலிவரின்
இயல்புந் திரிபு மாவன வுளபிற.

(இ-ள்.) குறில் செறியா - தனிக்குறி லொன்றனையுஞ் சாராத, லள - லகர ளகர மெய்களானவை, அல்வழி - அல்வழிக்கண், வந்த - வருமொழிக்கு முதலாய்வந்த, தகரம் - தகரமானது, திரிந்தபின் - திரியுமிடத்து, கேடும் - கெடுதலும், ஈரிடத்தும் - இருவழிக்கண்ணும், வரு - வருமொழிக்கு முதலாய்வந்த, ந-நகரமானது, திரிந்த பின்-திரியுமிடத்து, மாய்வும் - கெடுதலும், வலி-வல்லெழுத்துமுதன் மொழி, வரின் - வந்தால், இயல்புந்திரிபும்-அல்வழிக் கண்ணுறழா தியல்பாதலுந் திரிதலும் வேற்றுமைக்கண்ணே திரியாதியல்பாதலும், ஆவன உள - பொருந்துவன உண்டு, எ-று.

(உதாரணம்.)

தோன்றல் + தீயன் = தோன்றறீயன் வேள் + தீயன் = வேடீயன்	அல்வழியில் வந்த தகரந்திரிய ல ள கெட்டன.
தோன்றல் + நல்லன் = தோன்றனல்லன் வேள் + நல்லன் = வேணல்லன்	அல்வழியில் வந்த நகரந் திரிய ல ள கெட்டன.
தோன்றல் + நன்மை = தோன்றனன்மை வேள் + நன்மை = வேணன்மை	வேற்றுமையில் வந்த நகரந் திரிய ல ள கெட்டன.
கால் + கடிது = கால்கடிது மரங்கள் + கடிய = மரங்கள்கடிய வேல் + படை = வேற்படை வாள் + படை = வாட்படை	அல்வழியில் வலிவர ல ள பொதுவிதிப்படி உறழாமல் இயல்புந் திரிபுமாயின.
கால் + குதித்து = கால்குதித்து வாள் + போழ்ந்து = வாள்போழ்ந்து	வேற்றுமையில் வலிவரபொது விதிப்படி திரியாமல் இயல்பாயின.

பிற வென்ற மிகையால் தோன்றறீமை, வேடீமை என வேற்றுமையிலுந் தகரந் திரியுமிடத்துக் கெடுதலும்; காற்றீனை, தாட்டீனை, என அல்வழியில் கெடாமையும்; விற்படை விற்புருவம் எனப் பண்புத்தொகையிலும் உவமத்தொகையிலும் உறழாது திரிதலும்; கொல்களிறு, கொள்பொருள், நில்கொற்றா, கொள்பூதா என வினைத்தொகை, வினைமுற்றுத் தொடர்களில் இயல்பாதலும் இன்னுமிவ்விரண்டற்றுள் அமையாதன பிறவுங்கொள்க.

உயர்திணையிற் காட்டிய உதாரணங்கள் மயக்க விதியில்லாவிடத்து வருதலால் "சிலவிகாரமா முயர்திணை" என்றவற்று ளடங்காவாம். (உகு)

[ளவீற்றுத் தொழிற்பெயர்களின் புணர்ச்சி.]

230. ளவிறு தொழிற்பெய ரீரிடத்து முவ்வுரு
வலிவரி னல்வழி யியல்புமாவன வுள.

(இ-ள்.) ளவிறு தொழிற்பெயர் - லகரத்தை யிறுதியாக வுடைய விகுதிபெற்ற தொழிற்பெயரும் ளகரத்தை யிறுதியாக வுடைய முதனிலைதிரிந்த தொழிற்பெயரும், ஈரிடத்தும் - இருவழியிலும், உவவுறு-யகரமல்லாத மெய்கள்வந்தால் உகரம் பெறுவாம், வலி - வல்லினம், வரின் - வந்தால், அல்வழி - அல்வழிக்கண், இயல்புமாவன - உறழாதியல்பாவனவும், உள - சிலவுள, எ-று.

(உ-ம்.) ஆடல் சிறந்தது; ஆடற்சிறந்தது, ஆடனன்று, ஆடல் வலிது, எ-ம்; ஆடற்சிறப்பு, ஆடனன்மை, ஆடல்வன்மை, எ-ம்; கோள கடிது, கோட்கடிது, கோணன்று, கோள்வலிது, எ-ம்; கோட்கடுமை; கோணன்மை, கோள்வன்மை, எ-ம்; இருவழியும் உகரம்பெறாது பொது விதியான் முடிந்தன. நடத்தல் கடிது, நடப்பித்தல் கடிது எனச்சில உறழாது அல்வழியி லியல்பாயின.

இயல்புமென்ற வும்மையால் பின்னல் கடிது, பின்னற்கடிது, உன்னல் கடிது, உன்னற் கடிது, எனப் பொதுவிதியா னுறழ்வனவே பெரும்பாலன வென்க. (உஎ)

[வல் என்னும் மொழிப்புணர்ச்சி.]

231. வல்லே தொழிற்பெய ரற்றிரு வழியும்
பலகைநாய் வரினும் வேற்றுமைக் கவ்வுமாம்.

(இ-ள்.) வல் - வல்லென்கிற சூதாடு கருவிப்பெயர், இருவழியும் - இருவழிக்கண்ணும், தொழிற்பெயரற்று - யகரமல்லாத மெய்கள் வந்தால் தொழிற்பெயர் போல உகரச்சாரியை பெறும், பலகை நாய் வரினும் - பலகை நாய் என்கிற இருபெயர்வரினும் பிறபெயர்கள் வரினும், வேற்றுமைக்கு - வேற்றுமைக்கண், அவ்வுமாம் - உகரச் சாரியை யல்லாமலும் அகரச்சாரியையும் பெறும், எ-று.

(உ-ம்.) வல்லுக்கடிது, நன்று, வலிது, எ-ம்; வல்லுக்கடுமை, நன்மை, வன்மை எ-ம்; வல்லப்பலகை, நாய், புலி, குதிரை, எ-ம்; வல்லுப்பலகை, நாய், புலி, குதிரை, எ-ம்; வரும்.

வல்லினது அறை வரைந்த பலகை, வல்லினுள் நாய்; என விரியும். (உஅ)

[நெல், செல், கொல், சொல் என்னும் பெயர்களின் புணர்ச்சி.]

232. நெல்லுஞ் செல்லுங் கொல்லுஞ் சொல்லும்
அல்வழி யானும் றகர மாகும்.

(இ - ள்.) நெல்லுஞ் செல்லுங் கொல்லுஞ் சொல்லும் - நென் முதலிய நான்கு சொற்களி னீற்று லகரமெய்யானது, அல்வழியா

னும் - அவ்வழிக் கண்ணும், நகரமாகும் - பொதுவிதியா லுறழாது வேற்றுமைபோல நகரமெய்யாகத் திரியும், எ - று.

(உ - ம்.) நெற்கடிது, செற்கடிது, கொற்கடிது, சொற்கடிது; சிறிது, தீது, பெரிது, எனவரும். செல் = மேகம். கொல் = கொல்லன்.

[இல் என்னும் பண்புப்பெயரின் புணர்ச்சி.]

233. இல்லெ னின்மைச் சொற்கை யடைய
வன்மை விகற்பமு மாகா ரத்தொடு
வன்மை யாகலு மியல்பு மாகும்.

(இ. - ள்.) இன்மை - இன்மைப் பண்மை புணர்த்துகின்ற, இல்லென்சொற்கு - இல் என்கிற சொல்லுக்கு, ஐ - ஐகாரச் சாரியையானது, அடைய - பொருந்த, வன்மை - அவ்விடத்துவருகிற வல்லினம், விகற்பமும் - விகற்பித்தலும், ஆகாரத்தொடு - ஆகாரச்சாரியை பொருந்த, வன்மையாகலும் - அவ்விடத்துவருகிற வல்லின மிகுதலும், இயல்பும்-இவ்விருவிதியும் பெறுதியல்பாதலும், ஆகும்-பொருந்தும், எ - று.

சாரியை பெறுதற்கு வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங்கொள்க.

(உ-ம்.) இல்+பொருள் = இல்லைப்பொருள் } ஐகாரச்சாரியை வர
= இல்லைபொருள் } வன்மை விகற்பித்தது.

இல்லாப்பொருள் — ஆகாரச்சாரியை பெற வலிமிக்கது.

இல்பொருள் — இருவிதியும் பெறுமல் இயல்பாயிற்று.

சாரியைக்கு வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுங் கொள்க.

இல்லைஞானம், இல்லாஞானம் }
இல்லைவன்மை, இல்லாவன்மை } மற்றை மூக்கணமும் வரச் சாரியை பெற்றது.
இல்லையணி, இல்லாவணி }

இல்பொருள் என்பதுபோல இல்லைபொருள், இல்லாப்பொருள் என்பனவும் பண்புத்தொகையேயாம்; இவற்றுள் ஐகாரமும் ஆகாரமுஞ் சாரியை.

இல்லைப்பொருள் என்பது - பண்புத்தொகை நிலைத்தொடராகவும், குறிப்பு வினைமுற்றுத் தொகா நிலைத்தொடராகவும்; இல்லாப்பொருள் என்பது - பண்புத் தொகைநிலைத் தொடராகவும், ஈறுகெட்ட எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சத் தொகா நிலைத்தொடராகவுங் கொள்ளப்படுமாதலால், இவற்றுள் ஒன்றற்கு ஒன்று வேறுபாடு

என்னெனின், தொகை நிலைகள் ஒருமொழிபோல விட்டிசையாம லிருத்தலும், தொகா நிலைகள் தொடர்மொழிபோல விட்டிசைத் தலும் வேறுபாடெனவறிக. (௩0)

[புள், வள் என்னும் பெயர்களின் புணர்ச்சி.]

234. புள்ளும் வள்ளுந் தொழிற்பெயரு மானும்.

(இ - ள்.) புள்ளும் வள்ளும் - இவ்விருசொற்களும், தொழிற் பெயருமானும் - யகரமல்லாத மெய்கள் வந்தாற் பொதுவிதியான் முடிதலல்லாமலுந் தொழிற்பெயர்போல உகரச்சாரியையும் பெற்றுப் புணரும், எ - று.

(உ - ம்.) புள்ளுக்கடிது, வள்ளுக்கடிது, நன்று, வலிது, எ - ம்; புள்ளுக்கடுமை, வள்ளுக்கடுமை, நன்மை, வன்மை எனவும் வரும். ()

[அவ், இவ, உவ என்னும் சுட்டுப் பெயர்களின் புணர்ச்சி.]

235. சுட்டு வகரமூ வினமுற முறையே
ஆய்தமு மென்மையு மியல்பு மாகும்.

(இ - ள்.) சுட்டுவகரம் - அவ இவ உவ என்கிற அஃறிணைப் பன்மைச் சுட்டுப்பெயர்க ளீற்று வகரமெய், மூவினம் - வல்லினமும் மெல்லினமும் இடையினமும், உற - வர, முறை-முறைபாக, ஆய்த மும் - தனிநிலையும், மென்மையும் - மெல்லினமும், இயல்பும் - இயல் பும், ஆகும் - ஆகும், எ - று.

(உ-ம்.) அவ+கடிய=அஃகடிய, அவ்+ஞானம்=அஞ்ஞானம், அவ்+யானை=அவ்யானை, எனவரும். இவ உவ என்பவைகளுடனே யும் இப்படியே கூட்டுக. (௩௨)

[தெவ் என்னும் மொழிப்புணர்ச்சி.]

236. தெவ்வென் மொழியே தொழிற்பெய ரற்றே
மவ்வரின் வஃகான் மவ்வு மாகும்.

(இ - ள்.) தெவ்வென்மொழி - தெவ என்கிற பகையை யுணர் த்தும் பெயரானது, தொழிற் பெயரற்று-யகரமல்லாத மெய்களோடு புணருமிடத்துத் தொழிற்பெயர்போல உகரச்சாரியை பெற்று முடி யும், ம - மகரமெய்யானது, வரின் - வந்தால், வஃகான் - வகரமெய் யானது, மவ்வுமாகும் - உகரச்சாரியை பெறுதலல்லாமலும் ஒரோ விடத்து மக மெய்யாகவுந் திரியும், எ - று.

(உ - ம்.) தெவ்வுக்கடிது, தெவ்வுமாண்டது, தெவ்வுவலிது, எ - ம்; தெவ்வுக்கடுமை, தெவவுமாட்சி; தெவ்வுவலிமை, எ-ம்; தெ

வுமன்னர், தெம்மன்னர், எ-ம்; தெவ்வு முனை, தெம்முனை, எ-ம்; வரும். (ருரு)

[வருமொழிமுதல் தகரநகரங்கள் திரிதல்.]

237. னலமுன் றனவும் ணளமுன் டணவும்
ஆகுந் தநக்க ளாயுங் காலே.

(இ-ள்.) னலமுன் - னகர லகரமெய்களின் முன், தநக்கள் - (வருகிற) தகர நகரங்கள், றனவும் - (முறையே) றகர னகரங்களாகவும், ணளமுன் - ணகர ளகர மெய்களின்முன் (தகர நகரங்கள்), டணவும் - (முறையே) டகர ணகரங்களாகவும், ஆகும்-ஆகும், ஆயுங்கால் - ஆராயுமிடத்து; (எ - று.)

னகர லகரங்களின் முன் வருகிற தகரம் றகரமாகவும், னகர லகரங்களின்முன் வருகிற நகரம் னகரமாகவும், ணகர ளகரங்களின்முன் வருகிற தகரம் டகரமாகவும், ணகர ளகரங்களின் முன் வருகிற நகரம் ணகரமாகவும் திரியு மென்றபடி.

(உ - ம்.)

பொன் + தீது = பொன்றீது — அல்வழி ,, தீமை = பொற்றீமை — வேற்றுமை	னகரத்தின்முன் தகரம் றகரமாயிற்று.
பொன் + நன்று = பொன்னன்று — அல்வழி ,, நன்மை = பொன்னன்மை — வேற்றுமை	னகரத்தின்முன் நகரம் னகரமாயிற்று.
கல் + தீது = கற்றீது — அல்வழி ,, தீமை = கற்றீமை - வேற்றுமை	லகரத்தின்முன் தகரம் றகரமாயிற்று.
கல் + நன்று = கன்னன்று — அல்வழி ,, நன்மை = கன்னன்மை — வேற்றுமை	லகரத்தின்முன் நகரம் னகரமாயிற்று.
மண் + தீது = மண்டீது — அல்வழி ,, தீமை = மட்டீமை — வேற்றுமை	ணகரத்தின் முன் தகரம் டகரமாயிற்று.
மண் + நன்று = மண்ணன்று — அல்வழி ,, நன்மை = மண்ணன்மை — வேற்றுமை	ணகரத்தின்முன் நகரம் ணகரமாயிற்று.
முள் + தீது = முட்டீது — அல்வழி ,, தீமை = முட்டீமை — வேற்றுமை	ளகரத்தின்முன் தகரம் டகரமாயிற்று.
முள் + நன்று = முண்ணன்று - அல்வழி ,, நன்மை = முண்ணன்மை - வேற்	ளகரத்தின்முன் நகரம் ணகரமாயிற்று.

'ஆயுங்காலே' என்றதனால், அல்வழி வேற்றுமைப் பொருள் நோக்கத்தா லல்லாமல் மயக்கவிதி யில்லாமையால் இப்படிப் புணரும் முதல் ஈறு இரண்டனுள் ஒன்றாவது இரண்டுமாவது விகாரப்

பட்டு மயங்குதற்கு உரியனவாகி நின்று புணரு மென்பதும், மயக்க விதி உள்ளனவற்றிற்கு வரும் விகாரம் அல்வழி வேற்றுமைப் பொருள் நோக்கத்தால் வருமென்பதும் பெறப்பட்டன. (௬௪)

{ உயிரீற்று மெய்யீற்று வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்குச் சிறப்புவிதி. }

238. உருபின் முடிபவை யொக்குமப் பொருளினும்.

(இ - ள்.) உருபின் முடிபவை - மேல் உருபு புணர்ச்சியில் முடியும் முடிபுகள், அப்பொருளினும் - அப்பொருட் புணர்ச்சியிலும், ஒக்கும் - ஒத்துமுடியும், எ - று.

(உ - ம்.) எல்லாவற்றதும்—உருபுபுணர்ச்சி.

எல்லாவற்றுக்கோடு—வேற்றுமைப் பொருட்புணர்ச்சி.

உருபு புணர்ச்சியில் அஃறிணையில் அற்றும் உருபின்மேல் உம்மும் பெற்றாற்போல, உருபுதொக்க பொருட் புணர்ச்சியிலும் பெற்

எல்லாநமதும்—உருபுபுணர்ச்சி.

எல்லாநங்கையும்—வேற்றுமைப் பொருட்புணர்ச்சி.

உருபு புணர்ச்சியில் உயர்திணையில் நம்மும் உருபின்மேல் உம்மும் பெற்றாற்போல உருபுதொக்க பொருட் புணர்ச்சியிலும் பெற்றன.

எல்லார் தமதும், எல்லார் தங்கையும்; எல்லீர் நுமதும், எல்லீர் நுங்கையும்; தனது, தன்கை; நமது, நங்கை; ஆனது, ஆன்கோடு; அவற்றது, அவற்றுக்கோடு; அதனது, அதன்கோடு என உருபு புணர்ச்சிபோலப் பொருட் புணர்ச்சியும் சாரியை ஏற்றும், தன் முதலியவாக விகாரப்பட்டும் முடிந்தவாறு காண்க. (௬௫)

[புணரியல்களுக்குப் புறனடை.]

239. இடையுரி வடசொலி னியம்பிய கொளாதவும்
போலியு மரூஉம் பொருந்திய வாற்றிற்
கியையப் புணர்த்தல் யாவர்க்கு நெறியே.

(இ - ள்.) இடை - இடைச் சொற்களுள்ளும், உரி-உரிச்சொற்களுள்ளும், வடசொலின் - வடசொற்களுள்ளும், இயம்பிய - (உயிரீற்றுப் புணரியல் மெய்யீற்றுப் புணரியல்களிலே தோன்றல் திரிதல் கெடுதல் இயல்பாதல் எனச்) சொல்லிய புணர்ச்சி யிலக்கணங்கள், கொளாதவும் - பொருந்தாமல் (வேறுபட்டு) வருவனவும், போலியும் - இலக்கணப்போலி மொழிகளும், மரூஉவும் - மரூஉ மொ

ழிகளும், பொருந்திய ஆற்றிற்கு - உலக வழக்குச் செய்யுள் வழக்குகளில் நடக்கும் முறைமைக்கு, இயைய - பொருந்தும்படி, புணர்த்தல் - கூட்டி முடித்தல், யாவர்க்கும் - (அறிவுடையோர்) எல்லாருக்கும், நெறி - முறையாம், எ - று.

(உதாரணம்.)

ஆன் + கன்று = ஆன்கன்று
வண்டின் + கால் = வண்டின்கால்
} வேற்றுமையில் சாரியை இடைச்சொற்களின் ஈற்று னகரம் இயல்பாயின.

மழ + களிறு = மழகளிறு
தட + தோள் = தடந்தோள்
} உரிச்சொல் லீற்று உயிர் முன் வலி வர இயல்பாயும், மெலி மிகுந்தும் வந்தன.

அளி + குலம் = அளிகுலம்
+ பகவன் = ஆதிபகவன்
} வடசொல்லீற்று உயிர்முன்வலி வர மிகாது இயல்பாயின.

இல் + முன் = முன்றில்
பொது + இல் = பொதியில்
வேட்கை + அவா = வேணவா
} இலக்கணப்போலி மொழிகள் முன் விதிபெறாமல் தமக்கேற்றபடி விகாரம் பெற்றன.

அருமருந்தன்ன = அருமந்த
குணக்கு உள்ளது = குணது
சோழ நாடு = சோணாடு
தஞ்சாவூர் = தஞ்சை
ஆதன் தந்தை = ஆந்தை
} மரூஉமொழிகள் முன்விதி பெறாமல் தமக்கேற்றபடி விகாரம் பெற்றன.

வடமொழிப்புணர்ச்சி

வடமொழித் தொடர்கள், தமிழில்வருமிடத்துப் பெரும்பாலும் அவ்வடநூற் புணர்ச்சியையே பெறும். அது - தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்திசந்தி என மூவகைப் படும்.

[தீர்க்கசந்தி.]

1. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் அவற்றில் ஒன்று வந்தால், அவ்விரண்டுங் கெட ஆகாரம் வரும்.

(உதாரணம்.)

பத + அம்புயம் = பதாம்புயம் | கங்கா + அமிர்தம் = கங்காமிர்தம்.
பரம + ஆநந்தம் = பரமாநந்தம் | சதா + ஆநந்தம் = சதாநந்தம்.

2. இகர ஈகாரங்களில் ஒன்றன்முன் அவற்றில் ஒன்று வந்தால், அவ்விரண்டுங்கெட ஈகாரம் வரும்.

(உதாரணம்.)

கவி + இந்திரன் = கவீந்திரன் மகி + இந்திரன் = மகீந்திரன்.
கிரி + ஈசன் = கிரீசன் நதி + ஈசன் = நதீசன்.

3. உகர ஊகாரங்களில் ஒன்றன்முன் அவற்றில் ஒன்று வந்தால், அவ்விரண்டுங் கெட ஊகாரம் வரும்.

(உதாரணம்.)

குரு + உதயம் = குரூதயம்	சுயம்பூ + உபதேசம் = சுயம்பூபதேசம்.
சிந்து + ஊர்மி = சிந்தூர்மி	சுயம்பூ + ஊர்ச்சிதம் = சுயம்பூர்ச்சிதம்.

[குணசந்தி.]

1. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் இகர ஈகாரங்களில் ஒன்றுவந்தால், அவ்விரண்டுங் கெட ஏகாரந் தோன்றும்.

தேவ + இந்திரன் = தேவேந்திரன்	தரா + இந்திரன் = தரேந்திரன்.
தேவ + ஈசன் = தேவேசன்	ரமா + ஈசன் = ரமேசன்.

2. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் உகர ஊகாரங்களில் ஒன்றுவந்தால், அவ்விரண்டுங் கெட ஓகாரந் தோன்றும்.

(உதாரணம்.)

பாத-உதகம்-பாதோதகம்	கமலா-உத்சவம்-கமலோத்சவம்.
ஞான-ஊர்ச்சிதன்-ஞானோர்ச்சி[தன்]	தயா-ஊர்ச்சிதன்-தயோர்ச்சிதன்.

[விருத்திசந்தி.]

1. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் ஏகார ஐகாரங்களில் ஒன்று வந்தால், அவ்விரண்டுங் கெட ஐகாரந் தோன்றும்.

(உதாரணம்.)

பரம-ஏகாந்தி-பரமைகாந்தி	தேவதா-ஏகத்வம்-தேவதைகத்வம்.
சர்வ-ஐச்வர்யம்-சர்வைச்வர்யம்	தேவதா-ஐக்யம்-தேவதைக்யம்.

2. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் ஓகார ஔகாரங்களில் ஒன்று வந்தால், அவ்விரண்டுங் கெட ஔகாரந் தோன்றும்.

(உதாரணம்.)

வந + ஓடதி = வநௌடதி[ம்]	மகா + ஓடதி = மகௌடதி[யம்.
திவ்ய + ஔடதம் = திவ்யௌடத[ம்]	மகா + ஔதார்யம் = மகௌதார்[யம்]

தத்திதாந்தம்.

சிவனைத்தொழுவோன் = சைவன்.	கோசலன் புத்திரி = கௌசலை.
வீரத்தின் தன்மை = வைரம்.	தசரதன் புத்திரன் = தாசரதி.
கேவலத்தன்மை = கைவல்லியம்.	கிருத்திகையின் புத்திரன் = கார்த்திகேயன்.
புத்தனைத் தொழுவோன் = பௌத்தன்.	இவை தத்திதாந்தம் எனப்படும்.
சூரன்தன்மை = சௌரியம்.	

மெய்யீற்றுப் புணரியல் முற்றிற்று.

ஐந்தாவது

உருபுபுணரியல்.

[எட்டுருபுகளுஞ் சாரும் இடவகையால் இத்தனையாம் என்பது.]

240. ஒருவ னொருத்தி பலரொன்று பலவென
வருபெய ரைந்தொடு பெயர்முத லிருநான்
குருபு முறழ்தர நாற்பதா முருபே.

(இ-ள்.) ஒருவன் - ஒருவனும், ஒருத்தி - ஒருத்தியும், பலர் - பலரும், ஒன்று - ஒன்றும், பல - பலவும், என - என்றுகருத, வரு - வருகின்ற, பெயரைந்தொடு - ஐந்து பெயரோடும், பெயர்முதல் - எழுவாய் வேற்றுமையான பெயர்முதல் விளியீறாகநின்ற, இருநான்குருபும் - எட்டுருபுகளையும், உறழ்தர - பெருக்க, உருபு - வேற்றுமையுருபுகளானவை, நாற்பதாம் - நாற்பதாகும், எ - று.

(வரலாறு) நம்பி, சாத்தி, மக்கள், மரம், மரங்கள், என்கிற இவற்றுள், நம்பி, நம்பியை, நம்பியால், நம்பிக்கு, நம்பியின், நம்பியது, நம்பிகண், நம்பி என, ஒருவனென்னும் வாய்பாட்டுயர்திணையாண்பாற் பெயரோடு எட்டுருபுகளும் வந்தன; மற்றை நான்கு பெயர்களோடும் இப்படியே கூட்டுக. (க)

[வேற்றுமையுருபுகள் வருதற்குக் காரணமும் வருமிடமும்.]

241. பெயர்வழித் தம்பொரு டரவரு முருபே.

(இ-ள்.) உருபு - வேற்றுமையுருபுகளானவை, தம்பொருள் - தம்பொருளை, தர-கொடுக்க, பெயர்வழி - பெயருக்குப்பின், வரும் - வரும், எ - று.

(உ-ம்.) நம்பிபெற்றான், நம்பியைப்பெற்றான். (உ)

[ஐம்முதலிய ஆறுருபும் நிலைமொழி வருமொழிகளோடு புணருமாறு.]

242. ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியின்
ஒக்கு மன்னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே.

(இ-ள்.) ஒற்றுயிர் முதலீறு - நிலைமொழியோடும் வருமொழியோடும் புணருகிற மெய் உயிர்களை முதலுமீறுமாக வுடைய, உருபுகள் - ஐம்முதலிய ஆறுருபுகளும் (இடைச்சொல்லாயினும்), புணர்ச்சியின் - ("இயல்பொடு விகாரத் தியையும்") புணர்ச்சிவகையால், மன் -

பெரும்பாலும், ஒக்கும் - ஒக்கும், வேற்றுமைப் புணர்ப்பு - போன இரண்டிய லுள்ளும் வேற்றுமைப் புணர்ச்சிக்கண், அப்பெயர் - இயல் பொடு விகாரத்தியைந்த மெய்உயிர் முதலீற்றுப் பெயர்களை, எ-று.

மன்னென் றமையால் சிறுபான்மை ஒவ்வா வென்பதாம்.

(உ-ம்.) நம்பிகண் வாழ்வு—இங்கே "ஆவிய முன் வன்மை மிகா" என்றும், "ணனவல்லினம் வரட்டறவும் பிறவரி னியல்பு மாகும் வேற்றுமைக்கு" என்றும், சொல்லியபடியே கண்ணுருபின் முதலுமீறும் இயல்பாயின.

உறிக்கட்டயிர்—இங்கே "இயல்பினும் விதியினுநின்ற வுயிர் முன் கசதப மிகும்" என்றும், "ணன வல்லினம் வரட்ட றவும்" என்றும், சொல்லியபடியே கண்ணுருபின் முதலுமீறும் விகாரமாயின.

பழிக்கஞ்சி—இங்கே "இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன் கசதப மிகும்" என்றும், முற்றுமற் றொரோவழி" என்றும், சொல் லியபடியே குவ்வுருபின் முதலு மீறும் விகாரமாயின.

நம்பிக்குப் பிள்ளை—இங்கே "ஆவிய முன் வன்மை மிகா" என்ற விதி ஒவ்வாமற் குவ்வுருபின் முதல் வல்லொற்று மிக்கது. மற்றவையு மிப்படியே வருதலை ஆராய்ந்தறிக. (ரு)

[சாரியை வருமாறு.]

243. பதமுன் விகுதியும் பதமு முருபும்
புணர்வழி யொன்றும் பலவுஞ் சாரியை
வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும்.

(இ - ள்.) பதமுன் - பதத்தின் முன், விகுதியும் - இறுதி நிலை யாவது, பதமும் - பதமாவது, உருபும் - உருபாவது, புணர்வழி - புணருமிடத்து, சாரியை ஒன்றும் - ஒருசாரியை யாயினும், (சாரியை) பலவும் - பலசாரியை யாயினும், வருதலும் - வருதலும், தவிர்தலும் - வரா தொழிதலும், விகற்பமும் - இவ்விரண்டுமாகிய விகற்பமும், ஆகும் - ஆகும், எ - று.

(உ-ம்.) நடந்தனன், எ-ம்; நடந்தான், எ-ம்; நடந்தன, நடந்த, எ - ம்; விகுதிப்புணர்ச்சியுள் சாரியை வேண்டியும் வேண்டாமலும் விகற்பித்தும் வந்தன.

புளியங்காய், எ-ம்; புளிக்கறி, எ-ம்; நெல்லின் குப்பை, நெற் குப்பை, எ-ம்; பதப்புணர்ச்சியுள் சாரியை அவ்வாறாயின.

அவற்றை, எ-ம்; தன்னை, எ-ம்; ஆனை, ஆவை, எ-ம்; உருபு புணர்ச்சியுள் சாரியை அவ்வாறாயின.

ஆவினுக்கு, மரத்தினுக்கு, இவைகளிலே சாரியை பலவந்தன.

[சாரியைகள் இவையென்பது.]

244 அன் ஆன் இன் அல் அற் றிற் றத்தம்
தம் நம் நும் ஏ அ உ ஐ கு ன
இன்ன பிறவும் பொதுச் சாரியையே.

(இ-ள்.) அன்...ன - அன்முதல் னகர மெய்யீறாகச் சொல்லப் பட்டபதினேழும், இன்னபிறவும் - இவைபோல்வன பிறவும், பொதுச்சாரியை - விகுதிபத முருபென்கிற மூன்று புணர்ச்சிகளிலுந் தனி மொழிகளிலும் வருதலினாலே பொதுச்சாரியையாகும், எ - று.

(உ-ம்.) ஒன்றன்கூட்டம் - அன்; ஒருபாற்கு - ஆன்; வண்டின் கால்-இன்; தொடையல் - அல்; பலவற்றை - அற்று; பதிற்றுப்பத்து - இற்று; மத்திலே - அத்து; மன்றம் - அம்; எல்லார் தம்மையும் - தம்; எல்லார் நம்மையும் - நம்; எல்லீர் நும்மையும் - நும்; கலனே தூணி - ஏ; நடந்தது - அ; சாத்தனுக்கு - உ; எற்றை - ஐ; உய்குவை - கு; ஆன் - ன்; என முறையே காண்க.

இன்னபிறவு மென்றதனால், அவன்றனை - தன்; அவன்றான் - தான்; அவர்தாம் - தாம்; புற்றுஞ்சோறு - ஆம்; இல்லாப்பொருள் - ஆ; என வருகின்றவையும் மற்று மிப்படியே வருபவைகளையுங் கொள்க. (௬)

[எல்லாம் என்பதனோடு உருபுபுணர்தல்.]

245. எல்லா மென்ப திழிதிணை யாயின்
அற்றோ டுருபின் மேலும் முறுமே
அன்றே னம்மிடை யடைந்தற் றுரும்.

(இ-ள்.) எல்லா மென்பது - எல்லாமென்னும் பொதுப் பெயர், இழிதிணை யாயின் - அஃறிணையில் வரும்போது (அதனோடு ஆறுருபுகளும் புணரின்), (இடை) - இடையிலே, அற்று - அற்றுச் சாரியையும், உருபின்மேல் - உருபின்மேல், உம் - முற்றும்மையும், உறும் - பெறும், அன்றேல் - உயர்திணையில் வரும்போது, இடை - இடையிலே, நம் - நம்முச்சாரியை, அடைந்து - அடைந்து, அற்றுரும் - உருபின்மேல் முற்றும்மையும் பெறும், எ - று.

(உ-ம்.) எல்லாவற்றையும், எல்லாநம்மையும் என வரும். மற்றவைகளோடும் இப்படியே ஒட்டுக.

எல்லா நம்மையும் - உயர்திணைத் தன்மைப் பன்மை.

இரட்டுறமொழிதலால் இழிதிணையாய் இன் அற்றோடு எனக் கொண்டு எல்லாவற்றினையும் எனவருமெனினுமாம். (௭)

[எல்லாரும், எல்லீரும், என்பவற்றோடு உருபுபுணர்தல்.]

246. எல்லாரு மெல்லீரு மென்பவற் றும்மை
தள்ளி நிரலே தம்நும் சாரப்
புல்லு முருபின் பின்ன ரும்மே.

(இ-ள்.) எல்லாரு மெல்லீரு மென்பவற்று - (ஆறுருபும் புணருமிடத்து) எல்லாரும் எல்லீரும் என்கிற இருபெயர்களினுடைய (இறுதியிலுள்ள), உம்மை - முற்றும்மைகளை, தள்ளி-தள்ளி, நிரல் முறையாக, தம் - தம்முச் சாரியையும், நும் - நும்முச்சாரியையும், சார - அவையிருந்த விடங்களிலே பொருந்த, உம் - அவற்றினாலே தள்ளுண்ட முற்றும்மைகள், உருபின் பின்னர் - உருபுகளின்பின்னே, புல்லும் - வந்து புணரும், எ-று.

(உ-ம்.) எல்லார் தம்மையும், எல்லாரையும்; எல்லீர் நும்மையும், எல்லீரையும்; என விகற்பித்து வந்தன.

ஈந்தம்மை, நுந்தம்மை, எனப் படர்க்கைக் குரிய தம்முச்சாரியை, தன்மை முன்னிலைகளில் வருதல் "ஒரிடம பிறவிடந் தழுவலு முள வே" என்னும் வழுவமைதி. (எ)

[யான், யாம், நீ, நீர், என்பவற்றோடு உருபுபுணர்தல்.]

247. தான்தாம் நாமுதல் குறுகும் யான்யாம
நீ நீா என் எம் நின்நும் மாம்பிற
குவ்வி னவ்வரு நான்கா றிரட்டல.

(இ-ள்.) தான்தாம் நாம் - தான்முதலிய மூன்று பெயர்களும், முதல்குறுகும் - உருபுகள் புணருமிடத்து நெடின் முதல்குறுகி முறையே தன்னை தம்மை நம்மை எனவரும், யான் யாம் நீ நீர் - யான் முதலிய நான்கு பெயர்களும், என் எம் நின் நும் ஆம் - உருபுகள் புணருமிடத்து முறையே என்னை எம்மை நின்னை நும்மை எனவரும், குவ்வின் - இவையேழு பெயரோடு குவ்வுருபு புணருமிடத்து, அவ்வரும் - நடுவே தனக்கு என அகரச்சாரியை வரும், நான்கு - குவ்வுருபின் அகரச்சாரியை வரினும், ஆறு - ஆறுருபுகள் வரினும், இரட்டல - அவ்வேழு சொற்களினு மிறுதியாகிய தனிக்குறின் முன்னொற்றுக்கள் இரட்டாவாம், எ-று.

ஒழிந்த உருபுகளோடும் இப்படியே ஒட்டுக.

பிறவென்றமையால், நீ - உன்னை எனவும், நீர் - உம்மை எனவும் திரிந்து வருதலுங்கொள்க.

[ஆ, மா, கோ, என்னும் பெயர்களோடு உருபுபுணர்தல்.]

248. ஆமா கோனவ் வணையவும் பெறுமே.

(இ-ள்.) ஆ - ஆவென்கிற பசுவின் பெயரும், மா - மாவென்கிற விலங்கின் பொதுப்பெயரும், கோ - கோவென்கிற இறைவனை யுணர்த்தி நிற்கும் பெயரும், னவ்வணையவும் - உருபுகள் புணருமிடத்து னகரச்சாரியை பொருந்தவும், பெறும் - பெறும், எ-று.

(உ-ம்.) ஆனை, ஆவை; மானை, மாவை; கோனை, கோவை; என விகற்பித்து வருதல் காண்க.

அணையவும் என்ற உம்மையால், குவ்வுருபு புணரும்போது ஆனுக்கு என உகரச்சாரியையு முடன் பெறுதலும், ஆவுக்கு என உகரச் சாரியை யொன்றே பெறுதலும், ஆவினுக்கு என இன்சாரியையுடன் உகரச்சாரியை பெறுதலும், ஆவினை என மற்றை உருபுகள் புணரும் போது இன்சாரியை யொன்றுமே பெறுதலும்; இரட்டுற மொழிதலால் ஆமா என்பது ஒருசொலலாய்க் காட்டுப்பசுவை யுணர்த்தி நின்ற விடத்தும், ஆமானை, ஆமானுக்கு, ஆமாவினுக்கு என இவ்விதி பெறுதலும், அணையுமென் றொழியாது, பெறுமென்றமையால் ஆன், மான், கோன், எனத் தனிமொழிக் கண்ணும் னகரச்சாரியை வருதலுங் கொள்க. (௧)

[பது ஈற்று எண்ணுப் பெயர்களோடு உருபுபுணர்தல்.]

249. ஒன்று முதலெட் டீறு மெண்ணூர்
பத்தின்முன் னான்வரிற் பவ்வொற் றொழியமேல்
எல்லா மோடு மொன்பது மிற்றே.

(இ-ள்.) ஒன்றுமுதல் - ஒன்றுமுதல், எட்டீறும் - எட்டீறாகிய, எண் - எண்களோடு, ஊர் - புணர்ந்த, பத்தின்முன் - பத்தென்கிற எண்முன் (உருபுகள் புணருமிடத்து), ஆன் - ஆன்சாரியை, வரின் - வருமாயின், பவ்வொற்று - பகர மெய், ஒழிய - நிற்க, மேல் - அதன் மேலேநின்ற, எல்லாம் - எல்லாவெழுத்தும், ஓடும் - கெடும், ஒன்பதும் - ஒன்பதென்கிற எண்முன்னும், இற்று - (உருபுகள் புணருமிடத்து) ஆன்சாரியை வரின் அதன் பகரமெய் நிற்க மேலேநின்ற எல்லா வெழுத்துங் கெடும், எ-று.

(உ-ம்) ஒருபானை, ஒருபதை, ஒருபஃதை, எ-ம்; ஒன்பானை, ஒன்பதை, ஒன்பஃதை, எ-ம்; விகற்பித்துவரும்.

ஒருபது, ஒருபஃது என விகாரப்பட்டு வருகிற பத்தென்பார் எண்ணூர் பத்தென்றார்.

ஆன்வருதலைப் பராமுகமாகச் சொன்னமையால் உகரச்சாரியை, இன்சாரியைகளும் வேண்டிய விடத்து வருமெனக் கொள்க.

[அவ், இவ், உவ் என்னும் சுட்டுப் பெயர்களோடு உருபுபுணர்தல்.]

250. வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே.

(இ-ள்.) வவ்இறு சுட்டிற்கு - வகர மெய்யீற்று மூன்று சுட்டுப் பெயர்களுக்கும், அற்றுறல் - உருபுகள் புணருமிடத்து அற்றுச்சாரியை பொருந்தல், வழி - முறைமையாம், எ - று.

(உ-ம்.) அவற்றை, இவற்றை, உவற்றை என அற்றுச்சாரியை வேண்டியே வருதல் காண்க.

வழியே யென்ற மிகையால் அவற்றினை, இவற்றினை, என இன்சாரியை வருதலும்; "தனிக்குறில் முன்னொற்று உயிர்வரின்" இரட்டாமையுங் கொள்க. மற்றவைகளு மிப்படியே. (கக)

[அஃது, இஃது, உஃது என்னும் பெயர்களில் ஆய்தம் கெடுதல்.]

251. சுட்டின்முன் னாய்த மன்வரிற் கெடுமே.

(இ-ள்.) சுட்டின்முன் - அஃது இஃது உஃது என்கிற சுட்டுப் பெயர்களின் மொழிமுதற் சுட்டெழுத்தின் முன்னின்ற, ஆய்தம் - ஆய்தமானது, அன்வரின் - (அச்சுட்டுப் பெயர்களோடு உருபுகள் புணருமிடத்து) அன்சாரியைவரின், கெடும் - கெடும், எ - று.

(உ - ம்.) அஃது + ஐ = அதனை, அஃதை எனச்சாரியை விகற்பித்து வருதலும் வந்தவழி ஆய்தங் கெடுதலுங் காண்க.

அன்சாரியை வருதலைநோக்கி ஆய்தங் கெட்டவழி அது, இது, உது, என ஆய்தமில்லாச் சுட்டுப்பெயர்களாய், பின்பு அன்சாரியை பெறுதலால், ஆய்தமில்லாச் சுட்டுப்பெயர்களுக்கும் இதுவே விதி யெனக் கொள்க.

அன் வருதலைப் பராமுகமாகக் கூறலால், குவவுருபு புணரும்போது, அதற்கு என அன்சாரியை தனித்துவருத லல்லாமலும், அதனுக்கு என உகரச்சாரியை யுடன்வருதலுங் கொள்க. (கஉ)

[அத்துச்சாரியையின் அகரம் கெடுதல்.]

252. அத்தி னகர மகரமுனை யில்லை.

(இ - ள்.) அத்தின் - அத்துச்சாரியையினது, அகரம் - அகர வுயிரானது, அக முனை - "இயல்பினும் விதியினு நின்ற" அகரவுயி ரீற்றின் முன்வரின், இல்லை - வகரவுடம்படு மெய்பெறாது கெடும்.

(உ - ம்.) மக + அத்து + கை = மகத்துக்கை; மர + அத்து + குறை = மரத்துக்குறை; என விரண்டு அகரவீற்றின் முன்னுங் கெட்டது. (கங)

[சாரியைகளை அறியும் வகை.]

253. இதற்கிது சாரியை யெனினள வின்மையின்
விகுதியும் பதமுமுருபும் பகுத்திடை
நின்றவெழுத்தும் பதமு மியற்கையும்
ஒன்ற வுணர்த்த லுரவோர் நெறியே.

(இ-ள்.) இதற்கிது சாரியை யெனின் - விகுதி முதலிய புணர்ச்சிக்கண் இதற்கு இது சாரியையென்று அளவுசெய்து விதித்தன வற்றுள்ளும் ஒழிந்தனவற்றுள்ளும் தனித்தனி சொல்லப்புகின், அளவின்மையின் - அளவுபடாமையால், விகுதியும் - விகுதிப்புணர்ச்சியையும், பதமும் - பதப்புணர்ச்சியையும், உருபும் - உருபுபுணர்ச்சியையும், பகுத்து - கண்டவிடத்துப் பகுத்து, இடைநின்ற - நடுவேநின்ற, எழுத்தும் - ஏகாரம் அகரம் முதலிய எழுத்துச்சாரியையும், பதமும் - அன் ஆன் முதலிய பதச்சாரியையினையும், இயற்கையும் - இவ்விரண்டுசாரியையுந் தோன்றாத இயல்பினையும், ஒன்றவுணர்த்தல்-தெரிய அறிவித்தல், உரவோர் - பெரியோரது, நெறி-கடனாகும், எ - று.

(வரலாறு) ஆனநெய்தெளித்து நான்கேவி—என விதித்த பொருட்புணர்ச்சிக்கண் "உருபின் முடிபவை யென்பதனால் அமைந்த னகரமெய்ச்சாரியை யன்றியும், அகரச்சாரியையு முடன்வந்தது.

இனி விதியாதொழிந்த வற்றின்கண், பாட்டின் பொருள் எனக் குற்றிய லுகரத்திற்கு இன்சாரியை வந்தது.

தன்மை எனச் சாரியையின்றி யியல்பாக வந்தது.

இப்படியே மூவகைப் புணர்ச்சிகளையும் பகுத்துணர்ந்துகொள்க.

{ விகுதி, பதம், சாரியை, உருபு என்னும் நால்வகைப் புணர்ச்சிக்கும் புறனடை. }

254. விகுதி பதஞ்சா ரியையுரு பனைத்தினும்
உரைத்த விதியினோர்ந் தொப்பன கொளலே.

(இ-ள்.) விகுதி - விகுதியும், பதம் - பதமும், சாரியை - சாரியையும், உருபு - உருபும் ஆகிய, அனைத்தினும் - நான்கின் புணர்ச்சிகளிடத்தும், உரைத்த - பொதுப்படச் சொல்லப்பட்ட, விதியின்-விதிகளுள், ஓர்ந்து-இவ்விதி இதற்குப் பொருந்தும் இவ்விதி இதற்குப் பொருந்தாது என உய்த்துணர்ந்து, ஒப்பன - எவ்விதி எதற்குப் பொருந்துமோ அவ்விதியை, கொளல் - அதற்குக் கொள்க, எ-று.

(வரலாறு.) விகுதிப்புணர்ச்சியுள் "றவ்வொடுகர வும்மை நிகழ் பல்லவும்" எனப் பொதுப்பட விதித்தாரேனும், சென்று என்கிறவிடத்து இறந்தகாலமும்; சேறு என்கிறவிடத்து எதிர்காலமும் பொருந்து மென்று கொள்க.

பதப்புணர்ச்சியுள் "அல்வழி இ ஐ முன்னராயி னியல்பு மிகலும் விகற்பமுமாகும்" எனப்பொதுப்பட விதித்தாரேனும், பருத்தி குறிது எனவருகிற எழுவாய்ப்புணர்ச்சிக்கண் இயல்பாமெனவும்; ஆடித்திங்கள் எனவருகிற பண்புத் தொகைக்கண் மிகுமெனவுங் கொள்க.

சாரியைப்புணர்ச்சியுள் "பதமுன்விகுதியும் பதமுமுருபும், புணர்வழியொன்றும் பலவுஞ்சாரியை, வருதலுந் தவிர்தலும் விகற்பமுமாகும்" எனப் பொதுப்பட விதித்தாரேனும், நாட்டின்கணிருந்தான் எனக் கண்ணுருபிற்கு இன்சாரியை வருமென்றும்; நாட்டினீங்கினான் என இன்னுருபிற்கு இன் சாரியை வராதென்றுங் கொள்க.

உருபு புணர்ச்சியுள் "ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியி னொக்கு மன்னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே" எனப் பொதுப்பட விதித்தாரேனும்; நம்பிகண் எனக் கண்ணுருபு மிகாதென்றும், நம்பிக்கு எனக் குவ்வுருபு மன்னென்றமையால் மிகுமென்றுங் கொள்க. மற்றவைகளு மிப்படியே. (கரு)

[இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிக்குப் புறனடை.]

255. இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்
உயர்திணை யிடத்து விரிந்துந் தொக்கும்
விரவுப் பெயரின் விரிந்து நின்றும்
அன்ன பிறவு மாகுமை யுருபே.

(இ-ள்.) இயல்பின் விகாரமும் - பொதுவிதியோடு முடிதலேயன்றி அப்படிவிதித்த இயல்பிலே விகாரமாகியும், விகாரத் தியல்பும் - விகாரத்திலே யியல்பாகியும், உயர்திணையிடத்து - உயர்திணையினிடத்து, விரிந்தும் - வெளிப்பட்டும், தொக்கும் - மறைந்தும், விரவுப்பெயரின் - பொதுப்பெயரின்கண், விரிந்தும் - வெளிப்பட்டும், நின்றும் - மறைந்தும், அன்னபிறவும் - அவைபோல்வன பிறவேறுபாடுகளெனும், ஆகும் - ஆகிவரும், ஐயுருபு - இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி, எ-று.

1.* வழிபடு தெய்வ நிற்புறங்காப்ப. எ-ம். மகட்கொடுத்தான், தலைவற் புகழ்ந்தான், தாய்க்கொலை, ஒன்னலர்ச் செகுத்தான், எ-ம். இயல்பாக வேண்டியவிடத்து விகாரமாயிற்று.

2. கனி தின்றான், வரை பிளந்தான், பந்து தந்தான், எ-ம். மண் சுமந்தான், பொன் கொடுத்தான், எ-ம். காய்தின்றான், தேர் செய்தான், தமிழ் படித்தான், எ-ம். பால்குடித்தான், வாள் பிடித்தான், எ-ம். வரம் பெற்றான், செயமுற்றான், மரம் வெட்டினான், எ-ம். விகாரமாக வேண்டியவிடத்து இயல்பாயிற்று.

3. நம்பியைக் கொணர்ந்தான், அரசனை வணங்கினான், என உயர்திணைப் பெயரிடத்தே விரிந்தது. ஆடூ வறிசொல், மகடூஉ வறிசொல், பல்லோ ரறியுஞ் சொல், நான்முகற்றொழுது என உயர்திணைட்பெயரிடத்தே தொக்கது.

4.. கொற்றனைக் கொணர்ந்தான் எனப் பொதுப்பெயரிடத்தே விரிந்தது. ஆண் பெற்றாள், பெண் பெற்றாள் எனப் பொதுப்பெயரிடத்தே தொக்கது.

5. அன்னபிறவும் என்றதனால், தற்கொண்டான், எற்பணியான் என உறழவேண்டியவிடத்துத் திரிந்தே வருதலும், விளக்குறைத்தான் என இனமெல்லெழுத்து மிகவேண்டியவிடத்து வல்லெழுத்து மிகுதலும், மரங் குறைத்தான் என மவ்வீறுகெட்டு வல்லெழுத்து மிகவேண்டியவிடத்து மகரம் இனமெல்லெழுத்தாகத் திரிதலும், மாடு கொண்டான், பயறு தின்றான் என டற வொற்றிரட்டவேண்டியவிடத்து அங்ஙன மாகாமையும், வேறெட்டான், தாடொழுதான் என லகர ளகரங்கள் தகரம் வரத் திரியவேண்டியவிடத்துக் கெடுதலும், குரிசிற்றடிந்தான், அவட்டொடர்ந்தான் என உயர்திணைக்கட் கெடாது திரிந்து நிற்றலும் பிறவுங்கொள்க.

6. இன்னும் எண்ணின்கணின்ற இறந்தது தழீஇய இழிவு சிறப்பும்மைகளால், வேற்றுமைக்கென விதித்த பொதுவிதியோடொருங்கொத்து, தெள்கு பிடித்தான், எஃகு தொடுத்தான், நாகுகட்டினான், வரகு தந்தான் என இயலபில் இயல்பாகியும், மகப்பெற்றான், பலாக் குறைத்தான், வடுப்பெற்றான், சுக்குத்தின்றான், பூத்தொடுத்தான், சேப்பெற்றான், கோக் கறந்தான் என விகாரத்தில் விகாரமாகியும் வருதலே பெரும்பாலனவென்க. (கசு)

[மூன்றும் வேற்றுமைப் புணர்ச்சிக்குப் புறனடை.]

256. புள்ளியு முயிரு மாயிறு சொன்முன்
தம்மி னாகிய தொழின் மொழி வரினே
வல்லினம் விகற்பமு மியல்பு மாகும்.

(இ-ள்.) புள்ளியு முயிரு மாயிறு சொன்முன் - மூ வேற்றுமைப் புணர்ச்சி யுள்ளே மெய்யும் உயிரும் இறுதியாக சொற்களின்முன், தம்மினாகிய - கருத்தாவாகிய நிலைமொழிப் ெ ள்களாலாகிய, தொழின்மொழி - தொழிற்சொல், வரின் - வந் வல்லினம் - அவ்விடத்து வருகிற வல்லினம், விகற்பமும் - உற யும், இயல்பும் - இயல்பும், ஆகும் - ஆகும், எ-று.

இவ்விதியும் இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிபோல ஒட் கொள்க.

(வரலாறு.) பேய்கோட் பட்டான் - பேய்க் கோட்பட்ட சூர்கோட் பட்டான், சூர்க்கோட்பட்டான், என விகற்பித் பேய்பிடிக்கப்பட்டான், புலி கடிக்கப்பட்டான், என இயல்பாயின உம்மையால் அரசத் தீண்டப்பட்டான், சுருப்பாயப்பட்டா என வேற்றுமைப் பொதுவிதியான் முடிவனவே பெரும்பாலன.(

[எழுத்ததிகாரத்துக்குப் புறனடை.]

257. இதற்கிது முடிபென் றெஞ்சா தியாவும்
விதிப்பள வின்மையின் விதித்தவற் றியலான்
வகுத்துரை யாதவும் வகுத்தனர் கொளலே.

(இ-ள்.) இதற்கிது முடிபென்று - இதற்கு இது முடி பென் யாவும் - இவ்வதிகாரத்துள் விதிக்கத் தகுவனவற்றையெல்லாம், எ சாது-குறையாமல், விதிப்பு-தனித்தனி அளவுசெய்து விதிக்கப்புகி அளவின்மையின் - அதற்கு ஓரளவில்லாமையால், விதித்தவற்று வகுத்து விதித்தவற்றினுடைய, இயலான் - இலக்கணங்களை ஏது கக் கொண்டு, வகுத்துரை யாதவும்-வகுத்து விதியுரையாதனவற்ற யும், வகுத்தனர் கொளல் - கருதலளவையால் வகுத்து விதியுரை துக் கொள்க. எ-று.

(வரலாறு) 1. எழுத்தியலுள் "மொழிமுதற் காரண மாமணு திரளொலி யெழுத்து" என உரைத்தமையால், "கட்புலனில்லா கடவுளைக்காட்டுஞ் சட்டகம்போலச் செவிப்புலவொலியை, யுட்கெ ளற்கிடு முருபாம் வடிவெழுத்தே" எனப் பிறர் கூறியவாறு இவ்வொ லிவடிவைக் காட்டுதற்கு ஓர் கருவியாக எழுதிக்கொள்ளப்பட்டது வரிவடிவெழுத்தெனக் கொள்க.

2. பதவியலுள் "அன், ஆன், அள், ஆள்" என்னுஞ் சூத்திர திலே முறையே அன், ஆன், விகுதி ஆண்பாற்கென வுரைத்தமை

யால் பெருமாள் என்கிறபதம் பெருமையை யுடையா னென்னும் பொருள் தோன்ற நின்றபெருமான் என்கிற பதத்தினது ஆண் விகுதி ஆள்விகுதியாக ஒரோவிடத்து திரிந்து ஆண்பாலையே யுணர்த்தி நின்ற தெனக்கொள்க.

3. உயிரீற்றுப்புணரியலுள் "இயல்பினும் விதியினுநின்றவு யிர்முன் கசதபமிகும்" என்று சொன்னமையால் "ணனவல்லினம் வரட்டறவும்" என்றவிடத்து டகரமும் வல்லினமாதலின் மிகுந்த தெனக்கொள்க.

4. மெய்யீற்றுப்புணரியலுள் "நுந்தம், எம் நம் மீறுமவ்வரு ஞகவே" எனவுரைத்தமையால் அம்மென்கிற சொல்லிறுதி மகரமுங் குற்றொற்றாதலின் தன்னொடு மயங்காத மெல்லினம் வரின், அது வாய்த்திரிந்து அந்நலம் என அழகினது நலமென்னும் பொருளதாய் வருமெனக்கொள்க.

5. உருபுபுணரியலுள் "வல்லிறுசுட்டிற் கற்றுறல்வழியே" என வுரைத்தமையால், அதுபோலுவ்விறுவும், எவற்றை என அற் றுச்சாரியை பெறுமெனவும்; இரண்டாம் வேற்றுமைக்கும், மூன் றாம்வேற்றுமைக்கும் புறனடை உரைத்தமையால் ஏழாம் வேற்று மையும், "மண்புகுந்தும் விண்பறந்தும்" என வேற்றுமைப் பொதுவிதி யேலாது சிறுபான்மை வருமெனவுங் கொள்க.

இன்னும் இவ்வைந்தியலுள்ளும் வகுத்துரையா தனவற்றையெ ல்லாம் இடர்ப்படாமல் இதுவே இடமாக முடித்துக்கொள்க. (கஅ)

ஐந்தாவது உருபுபுணரியல் முற்றுப்பெற்றது.

எழுத்ததிகார முற்றிற்று.

இரண்டாவது

சொல்லதிகாரம்.

முதலாவது

பெயரியல்.

[கடவுள்வணக்கமும் அதிகாரமும்.]

258. முச்சக நிழற்று முழுமதி முக்குடை
அச்சுத னடிதொழு தறைகுவன் சொல்லே.

(இ-ள்.) முச்சகம் - மூன்றுலகத்திற்கும் நிழற்றும் - நிழலைச் செய்கின்ற, முழுமதி - நிறைந்த மதிபோலும், முக்குடை - மூன்று குடையை யுடைய, அச்சுதன்-அழியாத கடவுளுடைய, அடி-அடிகளை, தொழுது-வணங்கி, அறைகுவன்-சொல்லுவேன், சொல்-முன்னதிகாரத்துட் சொல்லிய வெழுத்தினலாகிய சொல்லிலக்கணத்தை எ-று. ஏகாரம் - ஈற்றசை. (க)

[சொல்லின் பொது விலக்கணம்.]

259. ஒருமொழி தொடர்மொழி பொது மொழியென்று
இருதிணை யைம்பாற் பொருளையுந் தன்னையும்
மூவகை யிடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே.

(இ-ள்.) ஒருமொழி-ஒருமொழியும், தொடர்மொழி - தொடர்மொழியும், பொதுமொழி-பொதுமொழியும், என்று-எனமூன்று பிரிவினதாகி, இருதிணை - இருதிணையாகிய, ஐம்பாற்பொருளையும்-ஐம்பாற்பொருளையும், தன்னையும்-அப்பொருளையன்றித் தன்னையும், மூவகையிடத்தும் - மூன்றிடத்திலும், வழக்கொடு - வழக்கினிடத்தும் செய்யுளின் - செய்யுளிடத்தும், வெளிப்படை-வெளிப்படையாலும் குறிப்பின் - குறிப்பினுலும், விரிப்பது - விளக்குவது, சொல் - சொற் சொல்லாகும். எ-று.

பொருளையுந் தன்னையு மென்றதனல், உயிர்க்கு அறிவானது கருவியாய்நின்று, தன்னையும் பொருளையு முணர்த்து மாறுபோல ஒருவருக்குச் சொல்லானது கருவியாய் நின்று, தன்னையும் இருதிணை யைம்பாற் பொருளையு முணர்த்து மென்பது பெற்றும். (உ

[மூவகைமொழிகள்.]

260. ஒருமொழி யொருபொரு ளனவாந் தொடர்மொழி
பலபொரு ளனபொது விருமையு மேற்பன.

(இ - ள்.) ஒருமொழி - ஒருமொழிகளாவன, ஒரு பொருளன வாம் - பகாப்பதமாவது பகுபதமாவது ஒன்றுநின்று தத்தமொருபொருளைத் தருவனவாம், தொடர்மொழி - தொடர்மொழிகளாவன, பல பொருளன - அவ்விருவகைப் பதங்களுந் தன்னேடும் பிறிதோடும் அல்வழி வேற்றுமைப் பொருளேக்கத்தால் இரண்டு முதலியவாகத் தொடர்ந்து நின்று இரண்டுமுதலிய பலபொருளைத் தருவனவாம், பொது (மொழி)-பொது மொழிகளாவன, இருமையுமேற்பன - ஒன்றாய்நின்று ஒருபொருளைத் தந்தும் அதுவே தொடர்ந்து நின்று பல பொருளைத் தந்தும் இவ்விரண்டற்கும் பொதுவாய் நிற்பனவாம்.

(வரலாறு.) 1. நிலம், நிலத்தன்; நட, நடந்தான்; இல், மன்; தவ, நனி என வருவன ஒருமொழிகள்.

2. நிலம்வலிது, அதுகொல், சாலப்பகை, நிலங்கடந்தான், நிலத்தைக்கடந்தான், நிலத்தைக்கடந்த நெடுமால் எனவருவன தொடர் மொழிகள்.

3. எட்டு, தாமரை, வேங்கை, எழுந்திருந்தான் என வருவன பொதுமொழிகள்.

இவை ஒருமொழிகளாய் ஒருபொருளைத் தருதலன்றியும், எள்+து=எள்ளைத்து, தாம்+மரை=தாவுகின்றமரை, வேம்+கை=வேகின்ற கை, எழுந்து+இருந்தான்=எழுந்து பின்னிருந்தான், எனத் தொடர் மொழிகளாய்ப் பலபொருளைத் தருதலுங் காண்க. து - உண்ணென்கிற ஏவல். (௩)

[இருதிணை.]

261. மக்க டேவர் நரக ருயர்திணை
மற்றுயி ருள்ளவு மில்லவு மஃறிணை.

(இ-ள்.) மக்கள் - மக்களும், தேவர் - தேவரும், நரகர் - நரகரும், உயர்திணை - உயர்திணையாகும், மற்றுயிருள்ளவும் - அவரொழிந்த விலங்கு முதலாகிய உயிருள்ளவையும், இல்லவும் - நிலம் நீர்முதலாகிய உயிரில்லாதவையும், அஃறிணை - அஃறிணையாகும். எ - று.

இம்மூவகையோருடைய உடம்பையும் உயிரையும் வேறாகக் குறிக்கும்போது அவையும் அஃறிணையாம். உயர்திணை - உயர்வாகிய குலம். அஃறிணை - அதுவல்லாத குலம்.

இனி-சூரியன் உதித்தான், சூரியன் உதித்தது, சந்திரன் அஸ்தமித்தான், சந்திரன் அஸ்தமித்தது, கலிநீங்கினன், கலிநீங்கிற்று, சுவாமி இருக்கிறார், சுவாமி இருக்கிறது எனச் சூரியன் முதலிய பெயர்களை உயர்திணையாகவும் அஃறிணையாகவும் வழங்குவதுண்டு. (ச)

[உயர்திணைக்குரிய பால்கள்.]

262. ஆண்பெண் பலரென முப்பாற் றுயர்திணை.

(இ-ள்.) ஆண் - ஆண்பாலும், பெண் - பெண்பாலும், பலர் - பலர்பாலும், என-என்று, முப்பாற்று-மூன்றுபாலினை யுடைத்தாகும், உயர்திணை - உயர்திணை. எ - று.

ஆடவர் என்கிறது முதலாகிய ஆண்பன்மையையும், பெண்டிர் என்கிறது முதலாகிய பெண் பன்மையையும், மக்கள் என்கிறது முதலாகிய அவ்விருவர் பன்மையையும், அடக்கிப் பலரென்றார். பின் பல வென்பதும் அது. (ரு)

[அஃறிணைக்குரியபால்கள்.]

263. ஒன்றே பலவென் றிருபாற் றஃறிணை.

(இ-ள்.) ஒன்று - ஒன்றன்பாலும், பல - பலவின்பாலும், என்று - என்று, இருபாற்று - இரண்டுபாலினை யுடைத்தாகும், அஃறிணை - அஃறிணை. எ - று.

அஃறிணையிலே சேவல், களிறுமுதலிய ஆண்பாலும்; பேடை பிடிமுதலிய பெண்பாலும் இருந்தாலும், உயிருள்ளவைகளிலே புழுமுதலிய சிலவற்றிற்கும், கல் முதலிய உயிரில்லாதவைகளுக்கும் ஆண், பெண் என்கிற பகுப்பு இல்லாமையால் அப்பகுப்பொழித்து எல்லாவற்றிற்கும் பொருந்த ஒன்றென்றார். (சு)

[திணைபால்களுக்குப் புறனடை.]

264. பெண்மைவிட் டாணவா வுவபே டாண்பால்
ஆண்மைவிட் டல்ல தவாவுவ பெண்பால்
இருமையு மஃறிணை யன்னவுமாகும்.

(இ-ள்.) பெண்மை-பெண்டன்மையை, விட்டு-விட்டு, ஆண் - ஆண்டன்மையை, அவாவுவ - அவாவுவனவாகிய, பேடு - பேடுகள், ஆண்பால்-உயர்திணை யாண்பாலாகும், ஆண்மை - ஆண்டன்மையை, விட்டு - விட்டு, அல்லது - பெண்டன்மையை, அவாவுவ - அவாவுவனவாகிய, பேடு - பேடுகள், பெண்பால் - உயர்திணைப் பெண்பாலாகும், இருமையும் - இவ்விருவகைப் பேடுகளும், அஃறிணை அன்னவும் - அஃறிணையை யொப்பனவும், ஆகும் - ஆகும். எ - று.

பெண்மைவிட்டு ஆண் அவாவுவ பேடு - சிகண்டி முதலியோர்.
ஆண்மைவிட்டுப் பெண் அவாவுவ பேடு - பிருகந்நளை முதலியோர்.

(உ-ம்.) "அலி வந்தான்" / "சிகண்டி இவன்" } ஆணிலக்கணஞ் சிறந்தமையால் ஆண்பாலாகச் சொல்லப்பட்டன.

"பேடி அணியாளோ" / "தேரூர்ந்தாள் அந்தப்பெய்ப்பேடி" } பெண்ணிலக்கணஞ் சிறந்தமையால் பெண்பாலாகச் சொல்லப்பட்டன.

அலி வந்தது, பேடி வந்தது - அஃறிணையாகச் சொல்லப்பட்டன.

[மூன்றிடத்துஞ் சொல் தன்னையும் பொருளையும் உணர்த்தல்.]

265. படர்க்கை வினைமுற்று நாமங் குறிப்பின்
பெறப்படுந் திணைபா லனைத்து மேனை
இடத்தவற் றொருமைப் பன்மைப் பாலே.

(இ-ள்.) படர்க்கை வினைமுற்று-படர்க்கைவினை முற்றுச் சொல்லையும், (படர்க்கை) நாமம் - படர்க்கைப் பெயர்ச் சொல்லையும், குறிப்பின் - முன்குறித்தால், திணைபாலனைத்தும் - இருதிணை யைம்பாலும், பெறப்படும் - பின் அவ்விருவகைச் சொல்லாலும் பெறப்படும், ஏனையிடத்து - ஒழிந்த தன்மை முன்னிலைகளின், (வினைமுற்று) - வினைமுற்றுச் சொல்லையும், (நாமம்) - பெயர்ச்சொல்லையும், (குறிப்பின்) - முன்குறித்தால், அவற்று - அவ்விருதிணை யைம்பாலுள், ஒருமைப் (பால்) - ஒருமைப்பாலும், பன்மைப்பால் - பன்மைப்பாலும், (பெறப்படும்) - அந்நால்வகைச் சொல்லாலும் பெறப்படும், எ - று.

1. (உ-ம்.) நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன, எ-ம்; அவன், அவள், அவர், அது, அவை, எ-ம்; படர்க்கை வினைமுற்றுச் சொல்லும், படர்க்கைப் பெயர்ச் சொல்லும், முன்பு தம்மை யுணர்த்திப் பின்பு இருதிணையைம்பாற் பொருளையு முணர்த்தின.

2. நடந்தேன், நடந்தேம் எ - ம்; யான், யாம் எ-ம்; தன்மை வினைமுற்றுச் சொல்லும், தன்மைப் பெயர்ச் சொல்லும், நடந்தாய், நடந்தீர், எ-ம்; நீ, நீர், எ-ம்; முன்னிலை வினைமுற்றுச் சொல்லும், முன்னிலைப் பெயர்ச்சொல்லும், முன்னே தம்மை யுணர்த்தி, பின்பு இருதிணை யைம்பாலுள் ஒருமைப் பாலையும் பன்மைப் பாலையு முணர்த்தின.

மூவிடங்களி லொன்றற்குரிய வினைமுற்றும், பெயரும், தம்மை யும் பொருளையும் இப்படி யுணர்த்து மெனவே, இவ்விடங்களுக்குப் பொதுவாகிய வினைமுற்றுகளும் பெயர்களும் பொதுமை நீங்கி, ஓரிடத்திற் குரியவாகியும், எச்சவினை முதலியனவும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயர்வினைகளைச் சார்ந்தும், இப்படியே தம்மையும், பொருளையும் உணர்த்து மெனக்கொள்க. (அ)

[மூவிடம்.]

266. தன்மை முன்னிலை படர்க்கைமூ விடனே.

(இ-ள்.) மூவிடன் - மூவிடமாவன, தன்மை - தன்மையும், முன்னிலை - முன்னிலையும், படர்க்கை - படர்க்கையுமாம், எ - று.

(வரலாறு.) யான், நீ, அவன், எ-ம்; வந்தேன், வந்தாய், வந்தான், எனவும் வரும். (க)

[வழக்கு.]

267. இலக்கண முடைய திலக்கணப் போலி
மரூஉ வென்றாகு மூவகை யியல்பும்
இடக்க ரடக்கன் மங்கலங் குழூஉக்குறி
எனுமுத் தகுதியோ டாறும் வழக்கியல்.

(இ-ள்.) இலக்கணமுடையது - இலக்கணவழியால் வருவதும், இலக்கணப்போலி-இலக்கண மில்லையாயினும் இலக்கண முடையது போலவருவதும், மரூஉ - இலக்கணஞ் சிதைந்து மரீஇயதும், என்றாகும் - என்று வழங்குகிற, மூவகை இயல்பும் - மூவகை இயல்பு வழக்கும், இடக்கரடக்கல் - சொல்லத் தகாததை மறைத்துச் சொல்வதும், மங்கலம் - மங்கலமில்லாததை யொழித்து மங்கலமாகக் கூறுவதும், குழூஉக்குறி - ஒரு கூட்டத்திலுள்ளோர் யாதாயினு மொருகாரணத்தால் ஒரு பொருளினது சொற்குறியை யொழித்து வேறொரு சொற்குறியாற் கூறுவதும், எனும் - என்று வழங்குகின்ற, முத்தகுதியோடு- மூன்று தகுதி வழக்குடனே, ஆறும் - ஆறும், வழக்கியல் - வழக்கிலக்கணம், எ - று.

இலக்கணமுடையது - இலக்கண வழியால் வருவது.

(உ-ம்.) நீ, நீர், நிலம், பொன்னன், நன்னிலம் முதலியன.

இலக்கணப்போலி - இலக்கண மில்லாதாயினும் இலக்கண முடையதுபோலச் சான்றோரால் தொன்றுதொட்டு வழங்கப்படுவது.

(உதாரணம்.)

இல்முன் - முன்றில்	பொதுவில் - பொதியில்	தசை - சதை
நகர்ப்புறம் - புறநகர்	மிஞிறு - ஞிமிறு	கோவில்-கோயில்
இல்வாய் - வாயில்	வைசாகி - வைகாசி	கண்மீ - மீகண்

மரூஉ - தொன்று தொட்டு வருதலின்றி இடையில் எழுத்துக்கள் தோன்றியும் திரிந்தும் கெட்டும் இலக்கணஞ் சிதைந்து தானே மருவி வழங்கி வருவது.

(உதாரணம்.)

அருமருந்தன்ன - அருமந்த
மலையமானாடு - மலாடு
சோழனாடு - சோணாடு
பாண்டியனாடு - பாண்டிநாடு
குணக்குள்ளது - குணாது
தெற்குள்ளது - தெனாது
வடக்குள்ளது - வடாது
ஆதன்தந்தை - ஆந்தை
பூதன்தந்தை - பூந்தை
வடுகன்தந்தை - வடுகந்தை
குளவாம்பல் - குளாம்பல்
பொழுது - போழ்து, போது
மரவடி - மராடி
பெயர் - பேர்
தஞ்சாவூர் - தஞ்சை
ஆற்றூர் - ஆறை
உறையூர் - உறந்தை
;யிற்று - ஆச்சு
யார் - ஆர், எவன் - என்,
அ, இ, உ, அந்த, இந்த, உந்த,
எ - எந்த, யானை - ஆனை,
யாடு - ஆடு, யாக்கை - ஆக்கை,
யாறு - ஆறு, யாமை - ஆமை,
ஏங்குகிறது - ஏங்குது.

இம்மூன்றும் எப்பொருளுக்கு எந்தப்பெயர் ஏற்பட்டதோ அப்பெயராலேயே அப்பொருளைக் கூறுதலால், 'இயல்பு வழக்கு' எனப் பட்டன.

இடக்கரடக்கல் - இடக்கான [சொல்லத்தகாத] வார்த்தைகளை மறைத்துச் சொல்லுதல். (இடக்கர் - இடக்கு என்பதற்குப்போலி.)

(உ - ம்.) மலங்கழுவிவந்தான் - கால்கழுவிவந்தான். பீ - பவ்வீ, பக வீ.

மங்கலம் - மங்கலமில்லாத சொல்லை ஒழித்து மங்கலமுள்ள சொல்லாற் கூறுவது. [மங்கலம் - சுபம்]

(உதாரணம்.)

செத்தான் - துஞ்சினான் | காராடு - வெள்ளாடு
சுடுகாடு - நன்காடு | ...மை - மங்களவாரம்
ஓலை - திருமுகம் | தாலி அறுந்தது - தாலிபெருகிற்று

குழூஉக்குறி - ஒரு கூட்டத்தார் ஒரு காரணத்தால் ஒரு பொருளின் சொற்குறியை ஒழித்து வேறொரு சொல்லால் அப்பொருளைக் கூறுவது.

(உ-ம்.) பொன் - பறி—தட்டார் சொல்வது.
கள் - சொல்விளம்பி—வேடர்சொல்வது.
ஆடை - காரை—யானைப்பாகர் சொல்வது.

இம்மூன்றும் பொருள்களுக்கு இயல்பாய் அமைந்த பெயர்களை ஒழித்துத்தகுதியான வேறுபெயர்களால் அப்பொருளைக் கூறுதலால், 'தகுதிவழக்கு' எனப்பட்டன.

[செய்யுள் இன்னதென்பது.]

268. பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்.

(இ-ள்.) பலவகைத் தாதுவின் - தோல், இரத்தம், இறைச்சி, மேதை, எலும்பு, மச்சை, சுவேதநீர் என்கிற ஏழுவகைத் தாதுக்களினாலே, உயிர்க்கு - உயிர்க்கு இடமாகச் செய்யப்பட்ட, உடல்போல்- உடம்புபோல, பலசொல்லால்-இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்கிற நால்வகைச் சொற்களால், பொருட்கு - பொருளுக்கு, இடனாக - இடமாக, உணர்வினின் - கல்வியறிவினால், வல்லோர் - செய்யுள் செய்யவல்லவர், அணிபெற - அலங்காரம் பெற, செய்வன - உண்டாக்குவன, செய்யுள்-செய்யுளாம், எ-று.

இப்படிசொல்லவே எழுத்தாலானது சொல்லாதலால், எழுத்து சொல், பொருள், அணி நான்கினாலும் உண்டாவது செய்யுளென்பதாயிற்று.

(உதாரணம்)

"வருங்குன்ற மொன்றுரித் தோன்றில்லை யம்பலவன்மலயத்
திருங்குன்றவாண ரிளங்கொடியேயிட ரெய்ததெவ்மூர்ப்
பருங்குன்றமாளிகை நுண்களபத்தொளி பாயநும்மூர்க்
கருங்குன்றம்வெண்ணிறக் கஞ்சுகமேய்க்குங் கனங்குழையே"

இக்கட்டளைக் கலித்துறை இடமணித் தென்கிற பொருளுக்கிடமாகித் தன்மையுவமை யுருவகவணிகளும் பிறவு முடைத்தாய் வருதல் காண்க.

[வெளிப்படைச்சொல்லும் குறிப்புச்சொல்லும்.]

269. ஒன்றொழி பொதுச்சொல் விகாரந்தகுதி
ஆகு பெயரன் மொழிவினைக் குறிப்பே
முதலொருகை குறிப்போ டின்ன பிறவும்
குறிப்பிற் றருமொழி யல்லன வெளிப்படை.

(இ-ள்.) ஒன்றொழி பொதுச்சொல் - இருதிணை யாண்பெண்ணு ளொன்றனை யொழிக்கும் பொதுச்சொல்லும், விகாரம் - வலித்தல் முதலாகிய விகாரச் சொற்களும், தகுதி - மூவகைத் தகுதி வழக்குச் சொற்களும், ஆகுபெயர் - ஆகுபெயர்ச் சொல்லும், அன்மொழி- அன்மொழித் தொகைச்சொல்லும், வினைக்குறிப்பு - வினைக்குறிப்புச் சொல்லும், முதல் - முதற்குறிப்புச் சொல்லும், தொகை - தொகைக் குறிப்புச் சொல்லும், குறிப்பு - இம்முதசொறைகை யல்லாத பலவழி யாலும் வருங் குறிப்புச் சொல்லும், இன்னபிறவும் - இவைபோல்வன பிறவும், குறிப்பின் - குறிப்பினால், தரு - இருதிணை யைம்பாற்பொருள்களைத் தருகிற, மொழி - சொற்களாம், அல்லன - இவை அல்லனவெல்லாம், வெளிப்படை - வெளிப்படையால், (தரு) - அப்பொருளைத் தருகிற, (மொழி) - சொற்களாம், எ - று.

1. (உ-ம்.) ஆயிரமக்கள் பொருதார் - இதில் மக்கள் என்கிற பொதுப்பெயரும், பொருதார் என்கிற பொதுவினையும் உயர்திணைப் பெண்பாலை யொழித்து ஆண்பாலைக் காட்டின.

2. குறத்தாட் பூசம், மரைமலர்-இவ் விகாரச் சொற்கள் குறுந்தாள், தாமரை, என்பவற்றைக் குறிப்பினாற் காட்டின.

3. கால்கழீஇ வருதும், திருமுகம், பறி-இத்தகுதிவழக்குகள் பலங்கழுவி வருதும், ஓலை, பொன், என்பவற்றைக் குறிப்பாலுணர்த்தின.

4. புளிதின்றான் - இவ்வாகுபெயர் அதன் பழத்தைக் குறிப்பாலுணர்த்திற்று.

5. 'பொற்றொடி தந்த புனைமடல்'-இங்கே பொற்றொடி யென்கிற அன்மொழித்தொகை அதனை யுடையவளை யுணர்த்திற்று.

6. இவனிப்போது பொன்னன் - இங்கே பொன்னன் என்பது பெயர்ப்பொருளை யொழித்துக் குறிப்பு வினைப்பொருளைக் குறிப்பா லுணர்த்திற்று.

7. "அறத்தாறிதுவென வேள்ளைக்கிழிபு" - இங்கே இம்முதற்குறிப்பு "அறத்தாறிதுவென வேண்டா சிவிகை, பொறுத்தானோ டூர்ந்தானிடை" என்கிற பாட்டைக் குறிப்பா லுணர்த்திற்று.

8. 'அலங்குளைப்புரவி யைவரொடு சினைஇ'. இங்கே ஐவர் என்கிற தொகைக்குறிப்பு பாண்டவரைக் குறிப்பா லுணர்த்திற்று.

9. கற்கறித்து நன்கட்டாய் (நன்றாய்ச் சமைக்கவில்லை), பாயா வேங்கை (வேங்கைமரம்), உவர்க்கட லன்னசெல்வர் (லோபிகள்), "பல்சான்றீரே பல்சான்றீரே" (மூடரே மூடரே), இவை முதலான வை யெல்லாம் பலவழியாலும் வருங்குறிப்புச் சொற்கள்.

இன்னபிறவு மென்றதனுல் தெரிநிலை வினையாலணையும் பெயர் களும், குறிப்பு வினையாலணையும் பெயர்களும், தெரிநிலை வினைமுற் றுலும், குறிப்பு முற்றுலும் வருமெச்சங்களும், செய்யு மென்முற்றும், கேட்குநபோலமுதலியவாக அஃறிணை யிடத்துச் சொல்லப்படுவன வும், ஆகிய விவை முதலானவை குறிப்பாற் பொருளுணர்த்துமெனக் கொள்க.

இப்படி யல்லாமல், நிலம், நீர், தீ, காற்று, வானம், என வருவன வெளிப்படையாற் பொருளுணர்த்து வனவாம். (கஉ)

[சொல்லின்வகை.]

270. அதுவே, இயற்சொற் றிரிசொ லியல்பிற் பெயர்வினை
எனவிரண் டாகு மிடையுரி யடுத்து
நான்கு மாந்திசை வடசொ லணுகாவழி.

(இ-ள்.) அது - முன்னே காட்டியசொல், இயற்சொல் - இயற் சொல்லும், திரிசொல் - திரிசொல்லு மென்கிற, இயல்பின் - தன்மை யையுடைய, பெயர் (ச்சொல்)-பெயர்ச்சொல்லும், வினை (ச்சொல்) - வினைச்சொல்லும், என - என்று, இரண்டாகும் - இரண்டாகும், இடை (ச்சொல்) - இடைச்சொல்லும், உரி (ச்சொல்) - உரிச்சொல் லும், அடுத்து - அவற்றுடனடுத்து, நான்குமாம் - நான்குமாகும், திசைவடசொல் - திசைச்சொல்லும் வடசொல்லும், அணுகாவழி - அவற்றுடன் சேராத விடத்து, எ - று.

எனவே, அதுவேயெனக் குறித்தசொல், பெயரியற் சொல், பெயர்த் திரிசொல், வினையியற் சொல், வினைத் திரிசொல், இடையி யற்சொல், இடைத்திரிசொல், உரியியற்சொல், உரித்திரிசொல், என எண்வகைப்படுமென்றும், திசைச்சொல்லும், வடசொல்லும் சேர் ந்தவிடத்துப் பத்துவகைப்படு மென்றுமாம்.

உரியியற்சொல் இல்லையெனக் கொள்வாரு முளர். (கரு)

[இயற்சொல்.]

271. செந்தமி ழாகித் திரியா தியார்க்கும்
தம்பொருள் விளக்குந் தன்மைய வியற்சொல்.

(இ-ள்.) செந்தமிழாகி - செந்தமிழ் நிலத்து மொழியாகி, திரியாது - திரிசொற் போலாகாது, யார்க்கும் - கற்றோருக்குங் கல்லாதோருக்கும், தம்பொருள் - தம்பொருளை, விளக்கும் - ஒப்பவிளக்குகின்ற, தன்மைய - தன்மையையுடைய வுலகவழக்கே, இயற்சொல் - இயற்சொல்லாகும், எ-று.

இயற்சொல்லாவது யாவர்க்கும்பொருள் விளங்குஞ்சொல்.

(வரலாறு.) மண், பொன், மரம், இவை முதலானவை பெயரியற்சொல்.

நடந்தான் வந்தான் இவை முதலானவை வினையியற்சொல்.

அவனை, அவனால் - இவைகளிலே வந்த ஐ, ஆல் என்பன இடையியற்சொல்.

அழகு, அன்பு - இவை முதலானவை உரியியற்சொல்.

செந்தமிழ் நாடாவது பாண்டிவள நாடென்றறிக. (கஎ)

[திரிசொல்]

272. ஒருபொருள் குறித்த பலசொல் லாகியும்
பலபொருள் குறித்த வொருசொல் லாகியும்
அரிதுணர் பொருளன திரிசொல் லாகும்.

(இ-ள்.) ஒருபொருள் - ஒருபொருளை, குறித்த - கருதிய, பலசொல்லாகியும் - பலசொற்களாயும், பலபொருள் - பலபொருள்களை, குறித்த - கருதிய, ஒரு சொல்லாகியும் - ஒரு சொல்லாகியும், அரிது அரிதாக, உணர் - கற்றோர் அறிகின்ற, பொருளன - பொருளனவாய் வருவன, திரிசொல்லாகும் - திரிசொல்லாம் எ-று.

திரிசொல்—இயற்சொல்லி னின்று திரிந்த (வேறுபட்ட)சொல். வேறு படுதலாவது இயற்சொல் போலச் சுலபமாகப் பொருளுணரப் படாமை.

அரிதுணர் பொருளன வென்றதனால் ஒருபொருள் குறித்த பலசொற்களிலும், பலபொருள் குறித்த ஒரு சொற்களிலும் இயற்சொல் லொழியக்கொள்க.

(வரலாறு.) கிள்ளை, சுகம், தத்தை—இவை கிளி என்கிற வொரு பொருள் குறித்த பலபெயர்த் திரிசொல்.

வாரணம்—இதுயானையுங் கோழியுஞ் சங்கு முதலிய பலபொருள் குறித்த ஒருபெயர்த் திரிசொல்.

படர்ந்தான், சென்றான்—இவை போயினான் என்கிற ஒரு பொருள் குறித்த பலவினைத் திரிசொல்.

வரைந்தான்—இது நீக்கினான், கொண்டான் என்கிற பலபொருள் குறித்த ஒரு வினைத் திரிசொல்.

சேறும், சாதும்—இந்தத்தன்மைப் பன்மை வினைமுற்றுகளில், றும், தும், விகுதிகள் தன்மைப்பன்மை யெதிர்காலம் என்கிற ஒரு பொருள் குறித்த பல இடைத் திரிசொல்.

கொல்—இது ஐயம், அசைநிலை என்கிற பலபொருள் குறித்த ஓர் இடைத்திரிசொல்.

சால, உறு, தவ, நனி, கூர், கழி—இவை மிகல் என்கிற ஒரு பொருள் குறித்த பல உரித்திரிசொல்.

கடி-என்கிறது காப்பு, கூர்மை, அச்சம், கரிப்பு, விளக்கம், சிறப்பு, மணம், முதலிய பலபொருள் குறித்த ஒர் உரித்திரிசொல். (கரு)

[திசைச்சொல்.]

273. செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரட்டினிற் றமிழொழி நிலத்தினும்
தங்குறிப் பினவே திசைச்சொ லென்ப.

(இ-ள்.) செந்தமிழ் நிலம் - செந்தமிழ் நிலத்தை, சேர்-சேர்ந்த பன்னிரு நிலத்தினும் - பன்னிரண்டு கொடுந்தமிழ் நிலங்களிலும், ஒன்பதிற் றிரண்டினில் - பதினெண் மொழிகளுள், தமிழ் - தமிழ் நிலமானது, ஒழி - ஒழிந்த, நிலத்தினும் - நிலங்களிலு முள்ளோர், தங்குறிப்பின - தங்குறிப்பினவாய் (அத்திசைகளினின்றுஞ் செந்தமிழ் நிலத்துவந்து) வழங்குவன, திசைச்சொலென்ப - திசைச்சொல்லென்று சொல்லுவர் புலவர். எ-று.

(கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டாவன.)

தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி
பன்றி யருவா வதன்வடக்கு—நன்றாய
சீதம்லாடு புனனாடு செந்தமிழ் சேர்
ஏதமில் பன்னிரு நாட் டெண்.

தென்பாண்டி நாட்டார் பசுவைப்பெற்ற மென்பர்; குட்ட நாட்டார் தாயைத் தள்ளையென்பர்; குடநாட்டார் தந்தையை அச்சனென்பர்; கற்காநாட்டார் வஞ்சகரைக் கையரென்பர்; வேணாட்டார் தோட்டத்தைக் கிழாரென்பர்; பூழிநாட்டார் சிறுகுளத்தைப் பாழியென்பர்; அருவாநாட்டார் வயலைச் செய்யென்பர்; அருவாவடதலையார் புளியை எகினென்பர்; சீதநாட்டார் தோழனை எலுவனென்பர்-இவை முதலானவையும் தமிழும் மேற்கூறும் 'ஏ

மொழியும் ஒழிந்த பதினாறு நிலத்து மொழிகளுள் ஏற்பனவுஞ் செந்தமிழோடு கலந்து வருதல் காண்க.

இனி இவற்றைச் சூழ்ந்த தமிழ் ஒருபதினேழ் நிலமாவன.

சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந் துளுக் குடகம்
கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கம் கலிங்கம் வங்கம்
கங்க மகதங் கடாரங் கவுடங் கடுங் குசலம்
தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி னேழ்புவி தாமிவையே.

அந்தோ என்பது சிங்களச்சொல்; எ நத்தைப் பாண்டிலென்பது தெலுங்குச்சொல்; மாமரத்தைக் கொக்கென்பது துளுவச்சொல்; ஒழிந்தன வந்த இடங்களிற் காண்க. (கசு)

[வடசொல்.]

274. பொதுவெழுத் தானுஞ் சிறப்பெழுத் தானும்
ஈரெழுத் தானு மியைவன வடசொல்.

(இ-ள்.) பொது வெழுத்தானும் ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொது வெழுத்தாலும், சிறப்பெழுத்தானும் - ஆரியத்திற்கே யுரிய சிறப்பெழுத்துத் திரிந்த வெழுத்தாலும், ஈரெழுத்தானும் - இவ்விரண்டெழுத்தினாலும், இயைவன - (செந்தமிழ்ச் சொல்லை யொப்பன வாகி வடதிசையி லிருந்து செந்தமிழ் நிலத்துவந்து) வழங்குவன, வடசொல் - வடசொல்லாம். எ-று.

(வரலாறு.) அமலம், கமலம், காரணம், காரியம்-இவை பொது வெழுத்தா லியைந்தன.

சுகி, போகி, சுத்தி-இவை சிறப்பெழுத்தா லியைந்தன.

அரன், அரி, கடினம், சலம்-இவை ஈரெழுத்தாலு மியைந்தன.

[பெயரின் பொதுவிலக்கணம்.]

275. இடுகுறி காரண மரபோ டாக்கம்
தொடர்ந்து தொழிலல காலந் தோற்றா
வேற்றுமைக் கிடனாய்த் திணைபா லிடத்தொன்
றேற்பவும் பொதுவு மாவன பெயரே.

(இ-ள்.) இடுகுறி - இடுகுறியும், காரண (க்குறி) - காரணக்குறியும், மரபு - மரபினையும், ஆக்கம் - ஆக்கப்பாட்டினையும், தொடர்ந்து-தொடர்ந்து, தொழில் அல-வினையாலணையுங் காரணக்குறியல் லாதவை, காலம் - காலத்தை, தோற்றா - காட்டாமல், வேற்றுமை

க்கு - எட்டு வேற்றுமையுஞ் சார்தற்கு இடனாய் - இடமாகி, திணை- இருதிணையிலும், பால் - ஐம்பாலிலும், இடத்து - மூவிடத்திலும், ஒன்று - ஒன்றனை, ஏற்பவும் - ஏற்பனவும், பொதுவும் - பலவற்றினை யேற்பனவும், ஆவன - ஆகிவருவன, பெயர்-பெயர்களாம்.

(வரலாறு.) மரம், விள, பனை - இவைமுதலானவை இடுகுறி மரபு.

அவன், அவள், பறவை, விலங்கு-இவை முதலானவை காரணக் குறிமரபு.

வெண்பா.

பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கியைந்தனளே—மின்போலும்
மானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போம்
கானவேன் முட்டைக்குங் காடு.

இப்பொய்யாமொழிப் புலவன் பாட்டில் வேட்டுக்குமரன் தன் பெயர் முட்டையென்று பாடச் சொல்லுதலால் இது முதலானவை இடுகுறியாக்கம்.

பொன்னன், பூணன், 'மலைமகண் மகனே மாற்றோர் கூற்றே' இவை முதலானவை காரணக் குறியாக்கம்.

நடந்தவனை, நடந்தோனை இவைமுதலாகிய வினையாலணையுங் காரணக்குறி காலங்காட்டும்.

"தொழிலல காலந்தோற்றா" எனப் பொதுவாகச் சொன்னதனால் வினையாலணையும் பெயர்கள் காலங்காட்டுவதுமாத்திரமேயல்லாமல், சில தொழிற் பெயர்களுங் காலங்காட்டு மென்பது பெறப்பட்டது.

நடந்தமை, நடக்கின்றமை; செய்தது, செய்கிறது, செய்வது—தொழிற்பெயர் காலங்காட்டின.

மரம், பனை, முதலாகிய விடுகுறிப் பெயரும்; அவன் அவள் முதலாகிய காரணப்பெயரும்; அவ்விலக்கணங்களோடு தோற்றிய பொருள்களுக்கெல்லாந் தொன்றுதொட்டு மரபுபற்றி வருவன.

முட்டை முதலாகிய விடுகுறிப்பெயரும், பொன்னன் முதலாகிய காரணப்பெயரும், நடுவிலே ஒருவரால் ஆக்கப்பட்டு வருவன.

[உயர்திணை ஆண்பாற்பெயர்.]

276. அவற்றுள், கிளையெண் குழூஉமுதற்பல் பொருடிணை
ஊர்வா னகமபுற முதல நிலன்யாண் [தேம்
டிருது மதிநா ளாதிக் காலந்

தோள்குழன் மார்புகண் காது முதலுறுப்
பளவறி வொப்பு வடிவு நிறங்கதி
சாதி குடிசிறப் பாதிப் பல்குணம்
ஓத லீத லாதிப் பல்வினை
இவையடை சுட்டு வினைப்பிற மற்றோ
டுற்றனவ் வீறு நம்பி யாடூஉ
விடலை கோவேள் குரிசி றோன்றல்
இன்னன வாண்பெய ராகு மென்ப.

(இ-ள்.) அவற்றுள்-மேற்பெய ரென்றவற்றுள், கிளை-சுற்றமும், எண்-எண்ணும், குழூஉ-கூட்டமும், முதல் - முதலாகிய, பல்பொரு (ளோடு) - பல பொருள்களோடும், திணை - ஐந்திணையும், தேம் - தேயமும், ஊர் - ஊரும், வான் - வானும், அகம் - அகமும், புறம் - புறமும், முதல் - முதலியனவாகிய, நில (னோடு) - இடங்களோடும், யாண்டு - வருடமும், இருது - பருவமும், மதி - மாதமும், நாள் - நாண்மீனும், ஆதி - முதலாகிய, கால (மோடு) - காலங்களோடும், தோள் - புயமும், குழல் - மயிரும், மார்பு - மார்பும், கண்-கண்ணும், காது - காதும், முதல் - முதலாகிய, உறுப் (போடு) - அவயவங்களோடும், அளவு - அளவும், அறிவு - அறிவும், ஒப்பு-ஒப்பும், வடிவு - வடிவும், நிறம் - நிறமும், கதி - நாற்கதியும், சாதி - குலமும், குடி - குடியும், சிறப்பு - சிறப்பும், ஆதி - முதலாகிய, பல்குண (மோடு) - பலகுணங்களோடும், ஓதல் - ஓதுதலும், ஈதல் - கொடுத்தலும், ஆதி - முதலாகிய, (பல்வினையோடு) - பலதொழில்களோடும், இவை - இவ் ற்றை, அடை - அடைந்த, சுட்டுவினைப் பிறமற்றோடு - சுட்டும் வினவும் பிறவும் மற்றும் ஆகிய நான்கனோடும், உற்ற - பொருந்திய, ன வீறு - னகர மெய்யீற்றுப் பெயர்களும், நம்பி யாடூஉ விடலை கோ வேள் குரிசில் தோன்றல் - நம்பி முதலாகச் சொல்லப்பட்ட இப்பெ யர்களும், இன்னன - இவைபோல்வன பிறவும், ஆண்பெயராகும் உயர்திணை யாண்பாற் பெயர்களாகும், என்ப - என்று சொல்லுவர் புலவர், எ - று.

(வரலாறு.)

1. (பொருளால்வரு பெயர்களாவன.)

தமன், நமன், நுமன், எமன், தம்மான், நம்மான், நும்மான், எம்மான்—கிளையால் வருபெயர்; ஒருவன்—எண்ணால் வருபெயர்;

அவையத்தான்—குழூஉ வால் வருபெயர்; பொருளன், பொன்னன், முடியன்—இவை முதலானவை முதலென்றதனல் வருபெயர்.

2. (இடத்தால்வரு பெயர்களாவன.)

வெற்பன், பொருப்பன்—குறிஞ்சித்திணையால் வருபெயர்; மறவன், எயினன்—பாலைத்திணையால் வருபெயர்; இடையன், ஆயன்—முல்லைத் திணையால் வருபெயர்; ஊரன், மகிழ்நன்—மருதத் திணையால் வருபெயர்; சேர்ப்பன், துறைவன்—நெய் தற்றிணையால் வருபெயர்; சோழியன், கொங்கன்—தேயத்தால் வருபெயர்; கருவூரான், மதுரையான்—ஊரால்வருபெயர்; வானத்தான், அகத்தான், புறத்தான் என்பன வான் முதலாகிய மூன்றாலும் வருபெயர்; மண்ணகத்தான், பாதலத்தான் இவை முதலானவை முதல வென்றதனால் வருபெயர்.

3. (காலத்தால் வருபெயர்களாவன.)

மூவாட்டையான், பிரபவன்—வருடத்தால் வருபெயர்; வேனிலான், காரான்—பருவத்தால் வருபெயர்; தையான், மாசியான்—மாதத்தால் வருபெயர்; ஆதிரையான், ஓணத்தான்—நாண்மீனால் வருபெயர்; நெருநலான், காலையான், மாலையான் ஆதியென்றதனால் வருபெயர்.

4. (சினையால்வரு பெயர்களாவன.)

திணிதோளான், செங்குஞ்சியான், வரைமார்பான், செங்கண்ணன், குழைக்காதான், என்பன தோள்முதலிய வைந்துறுப்பாலும் வருபெயர். குறுந்தாளன், நெடுங்கையான் முதலென்றதனால் வருபெயர்.

5. (குணத்தால்வரு பெயர்களாவன.)

பெரியன், சிறியன்—அளவினால் வருபெயர்; அறிஞன், புலவன்—அறிவால் வருபெயர்; பொன்னனைப்பான், மணிமனையான்—ஒப்பால் வருபெயர்; கூனன், குறளன்—வடிவால் வருபெயர்; கரியன் செய்யன்—நிறத்தால் வருபெயர்; மானுடன், தேவன்—கதியால் வருபெயர்; அந்தணன், அரசன், வணிகன், வேளாளன்—சாதியால் வருபெயர்; சேரன், சோழன், பாண்டியன்—குடியால் வருபெயர்; ஆசிரியன், படைத்தலைவன்—சிறப்பால் வருபெயர்; நல்லன், தீயன் இவை முதலானவை ஆதியென்றதனால் வருபெயர்.

6. (தொழிலால்வரு பெயர்களாவன.)

ஓதுவான், ஈவான்—ஓதன் முதலாகிய விரண்டாலும் வருபெயர்; கணக்கன், தச்சன் என்பன ஆதியென்றதனால் வருபெயர்.

7. (சுட்டால்வருபெயர் முதலானவை.)

அவன், இவன், உவன் - சுட்டிடைச் சொல்லால் வருபெயர். எவன், ஏவன், யாவன்-வினாவிடைச் சொல்லால் வருபெயர். பிறன்-மற்றையான் - பிற மற்று என்பவற்றால் வருபெயர்.

8. நம்பிமுதலாகிய வேறுபெயர்களும் உரைக்கிடையிற்காண்க.

இன்னன வென்றதனால் வில்லி, வாளி, கிள்ளி, சென்னி ஏந்தல், செம்மல், ஏனாதி, காவிதி, குடுமி, தோன்றல், அண்ணல் என உயர்திணை யாண்பாற் பொருள் குறித்து வருவன வெல்லாங்கொள்க.

சுட்டுமுதலிய நான்கு இடைச்சொற்கும் தமக்கென ஒரு பொருளின்றிப் பொருளாதி யாறனுள் யாதாயினுமொன்றைச் சொல்பவன் குறிப்பின் வழிநின்று உணர்த்தும். (கக)

[உயர்திணைப் பெண்பாற்பெயர்.]

277. கிளைமுத லாகக் கிளந்த பொருள்களுள்
ளவ்வொற் றிகரக் கேற்ற வீற்றவும்
தோழி செவிலி மகடூஉ நங்கை
தையலோ டின்னன பெண்பாற் பெயரே.

(இ-ள்.) கிளைமுதலாக - சுற்றமுதலாக, கிளந்த - முன்சூத்திரத்திலே பகுத்துச் சொல்லப்பட்ட, பொருள்களுள்-அறுவகைப் பொருள்களுள், ளவ்வொற் றிகரக்கு - ளகரமெய்யும் இகரவுயிரும் பொருந்துதற்கு, ஏற்ற-தகுந்த, ஈற்றவும்-ஈற்றுப்பெயர்களும், தோழிசெவிலி மகடூஉ நங்கை தையலோடு-தோழிமுதலாக வெடுத்துச் சொல்லப்பட்ட பெயர்களும் ஆகிய வியற்றுடனே, இன்னன - இவைபோல்வனபிறவும், பெண்பாற் பெயர் - உயர்திணைப் பெண்பாற் பெயர்களாம், எ-று.

(வரலாறு.)

பொருளால் வருபெயர்—தமள், நமள், நுமள், எமள்—ஒருத்தி, அவையத்தாள், அவையத்தி—பொன்னாள், பொன்னி—என்பன.

இடத்தால் வருபெயர்—குறத்தி, எயிற்றி, ஆய்ச்சி, உழத்தி, பரத்தி—சோழிச்சி—கருவூராள், கருவூரி—வானத்தாள், வானத்தி, அகத்தாள், அகத்தி—புறத்தாள், புறத்தி—மண்ணகத்தாள் - மண்ணகத்தி.

காலத்தால் வருபெயர்:—மூவாட்டையாள்—வேனிலாள்—தையாள்—ஆதிரையாள்—நெருநலாள்—என்பன.

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
MADRAS-90

சினையால் வருபெயர்—திணிதோளாள், திணிதோளி—சுரிகுழலாள், சுரிகுழலி—நெடுமொர்பாள், நெடுமொர்பி—தடங்கண்ணாள், தடங்கண்ணி—குழைக்காதாள், குழைக்காதி—குறுந்தாளாள்; குறுந்தாளி.

குணத்தால்வருபெயர்:—பெரியள்—புலமையள்—பொன்னொப்பாள்—கூனள், கூனி—கரியள்—மானுடத்தி—பார்ப்பினி—படைத்தலைவி—நல்லவள்.

தொழிலால் வருபெயர்:—ஓதுவாள்—ஈவாள்—தச்சிச்சி.

சுட்டு முதலியவற்றால் வருபெயர்:—அவள், இவள், உவள்—எவள், ஏவள், யாவள்—பிறள், மற்றையாள்.

தோழிமுதலிய வைந்துபெயரும் உடைக்கிடையிற் காண்க.

இன்னன வென்றதனால் பேதை, பெதும்பை, செவிலி, இருளை, மாது என உயர்திணைப் பெண்பால் குறித்து வருவன வெல்லாங் கொள்க. (உO)

[உயர்திணைப் பலர்பாற்பெயர்.]

278. கிளந்த கிளைமுத லுற்றரவ் வீற்றவும்
கள்ளொ டீற்றி னேற்பவும் பிறவும்
பல்லோர் பெயரின் பகுதி யாகும்.

(இ - ள்.) கிளந்த - முன்னே சொல்லப்பட்ட, கிளைமுதல்-சுற்ற முதலாகிய அறுவகைப்பொருளையும், உற்ற-பொருந்திய, ரவ்வீற்றவும்-ரகர மெய்யீற்றுப் பெயர்களும், கள்ளொடீற்றின் - கள்ளென்னும் விகுதியை யீறாகவுடைய பெயர்களுள், ஏற்பவும்-இவ்விடத்துக்குப் பொருந்தி வருவனவும், பிறவும் - இவைபோல்வன பிறவும், பல்லோர் பெயரின் பகுதியாகும் - பலர்பாலின் பெயர்களாம். எ-று.

கள்விகுதி அஃறிணைப் பன்மைக்கும் வருதலால் ஏற்பவு மென்றார்.

(வரலாறு.) தமர், நமர், நுமர், எமர், ஒருவர், எனப்பொருளாதி யாறனோடும் ஒட்டுக.

கோக்கள், மனுக்கள், எனப் பகுதிப்பொருள் விகுதியாகவும், தமர்கள், நமர்கள், என விகுதிமேல் விகுதியாகவும், கள்விகுதி வருமென்றறிக.

பிறவென்றதனால் மாந்தர், மக்கள், சிறார், மகார், எனப் பலர் பாலைக்குறித்து வருவனவெல்லாங் கொள்க. (உக)

[ஒன்றன்பாற் பெயர்.]

279. வினாச்சுட் டுடனும் வேறு மாம்பொரு
ளாதி யுறுதுச் சுட்டணை யாய்தம்
ஒன்றனெண் ணின்னன வொன்றன் பெயரே.

(இ - ள்.) வினாச்சுட்டுடனும் - வினாவிலுஞ் சுட்டிலும் மறைந்து அவற்றுடனாகியும், வேறுமாம் - வினாவுஞ் சுட்டவும்படாது வேறாகியும் வருகிற, பொருளாதி-பொருளாதி யாறணையும், உறு - பொருந்திய, து - துவ்விகுதி யீற்றுப்பெயரும், சுட்டணை யாய்தம் - சுட்டோடுகூடிய வாய்தத்தைப்பொருந்திய துவ்விகுதி யீற்றுப்பெயரும், ஒன்றனெண் - ஒன்றென்கிற எண்ணுகு பெயரும், இன்னன - இவைபோல்வன பிறவும், ஒன்றன்பெயர் - அஃறிணை யொருமைப்பாற் பெயராகும், எ-று.

(வரலாறு.) எது, ஏது, யாது, எ-ம்; அது, இது, உது, எ-ம்; குழையது, நிலத்தது, மூலத்தது, கோட்டது, குறியது, ஆடலது எ-ம், அஃது, இஃது, உஃது, எ-ம்; ஒன்று எ-ம் வரும்.

இன்னன வென்றமையால் பிறிது, மற்றையது என அஃறிணைப் பொருளைக் குறித்து வருவனவெல்லாங் கொள்க. (உஉ)

[பலவின்பாற் பெயர்.]

280. முன்ன ரவ்வொடு வருவை யவ்வும்
சுட்டிறு வவ்வுங் கள்ளிறு மொழியும்
ஒன்ற லெண்ணு முள்ள வில்ல
பல்ல சில்ல வுளவில பலசில
இன்னவும் பலவின் பெயரா கும்மே.

(இ-ள்.) முன்னர்-முன்னே சொல்லப்பட்ட, அவ்வொடு-வினாச்சுட்டுடனும் வேறுமாம் பொருளாதி யாறனோடும், வரு-ஏற்றபடி வருகிற, வை (யும்) - வை விகுதி யீற்றுப் பெயர்களும், அவ்வும் - அகர வீற்றுப் பெயர்களும், சுட்டிறு வவ்வும்-வகர மெய்யீற்றுச் சுட்டுப்பெயர்களும், கள்ளிறு மொழியும் - கள்ளென்னும் பகுதிப்பொருள் விகுதி யீற்றுப் பெயர்களும், ஒன்றல் எண்ணும்-இரண்டு முதலாகிய எண்ணுகு பெயர்களும், உள்ள இல்ல பல்ல சில்ல உள இல பல சில-உள்ளவென்பது முதலாகிய குறிப்பு வினையாலணைந்த எட்டுப்பெயர்களும், இன்னவும் - இவைபோல்வன பிறவும், பலவின்பெயராகும் - அஃறிணைப் பன்மைப்பாற் பெயர்களாகும், எ - று.

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR MADRAS-90

1. (வரலாறு.) எவை, ஏவை, யாவை, எ-ம்; அவை, இவை, உவை, எ-ம், நெடியவை, கரியவை, எ-ம்; வை விகுதிப்பெயர்கள் வரும்.

2. பொருள, பொருளன, அகத்த, அகத்தன, மூலத்த, மூலத்தன, கோட்ட, கோட்டன, கரிய, கரியன, ஓதுவ, ஓதுவன, என அன்சாரியை பெற்றும் பெறாதும் அகர விகுதிப் பெயர்கள் வரும்.

3. அவ, இவ, உவ, என வகர மெய்யீற்றுச் சுட்டுப்பெயர்கள் வரும்.

4. யானைகள், குதிரைகள்; எனக்கள்விகுதிப்பெயர்கள் வரும்.

5. இரண்டு, மூன்று, பத்து, நூறு, என எண்ணுகு பெயர்கள வரும்.

6. உள்ள முதலாகிய வெட்டும் உரைக்கிடையிற் காண்க.

இன்னவு மென்றமையால், யா, பிற, மற்றைய என அஃறிணைப் பன்மைப் பொருள் குறித்து வருவன வெல்லாங் கொள்க.

இவையம்பாற் பெயர்களுள் ஆண்பாற் பெயர்க்கு "ணவீறு" எனவே அன், ஆன், மன், மான், ன், இவையைந்தும் ஆண்பாற் பெயர்க்கும்; "ளவொற்று" எனவே அள், ஆள், ள், இம்மூன்றும் பெண்பாற் பெயர்க்கும்; ரவீற்றவும், எனவே அர், ஆர், மார், ர், இந்நான்கும் பலர்பாற் பெயர்க்கு மடங்குதலறிக. (உரு)

[பால்பகா வஃறிணைப்பெயர்.]

281. பால்பகா வஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமைய.

(இ-ள்.) அஃறிணை - அஃறிணைப் பெயர்களுள், பால் பகா - பால் பகுக்கப்படாத, பெயர்கள் - பெயர்களனைத்தும், பால் - அத்திணையிருபாலுக்கும், பொதுமைய - பொதுப்பெயர்களாம், எ - று.

(வரலாறு.) பறவைவந்தது, பறவைவந்தன, மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன என வரும். இவை பறவை அலரி எனப் பகுபதமும், மரம் பனை எனப் பகாப்பதமுமாக வரும். (உசு)

[இருதிணைப் பொதுப்பெயர்.]

282. முதற்பெயர் நான்குஞ் சினைப்பெயர் நான்கும்
சினைமுதற் பெயரொரு நான்குமுறை யிரண்டும்
தன்மை நான்கு முன்னிலை யைந்தும்
எல்லாந் தாந்தா னின்னன பொதுப்பெயர்.

(இ-ள்.) முதற்பெயர் நான்கும் - முதற்பெயராகிய நான்கு பெயரும், சினைப்பெயர் நான்கும் - சினைப்பெயராகிய நான்கு பெயரும்,

சினைமுதற்பெயரோரு நான்கும்-சினைமுதற் பெயராகிய நான்கு பெயரும், முறைப் (பெயர்) இரண்டும் - முறைப்பெயராகிய விரண்டுபெயரும், தன்மைப் (பெயர்) நான்கும்-தன்மைப்பெயராகிய நான்கு பெயரும், முன்னிலைப் (பெயர்) ஐந்தும்-முன்னிலைப் பெயராகிய வைந்து பெயரும், எல்லாம் தாம்தான் - எல்லாம் தாம் தான் என்கிற மூன்று பெயரும், இன்னன-இவைபோல்வன பிறவும், பொதுப்பெயர் - இருதிணைக்கும் பொதுப்பெயர்களாம், எ - று.

இன்னன வென்றமையால், சூரியனுதித்தான், சூரியனுதித்தது, என வொருபொருளே இருதிணையிலும் வரும் பொதுப்பெயர் முதலானவையும், ஊமை வந்தான், ஊமை வந்தாள் என உயர்திணையிருபாலிலும் வரும் பொதுப்பெயர் முதலானவையும்; தன்மை முன்னிலை வினையாலணையும் பெயர்களுங் கொள்க. (உகு)

[முதற்பெயர் முதலியவற்றை வகுத்தல்.]

283. ஆண்மை பெண்மை யொருமை பன்மையின்
ஆமந் நான்மைக ளாண்பெண் முறைப்பெயர்.

(இ - ள்.) ஆண்மை பெண்மை ஒருமை பன்மையின் - ஆண்மை முதலாகிய விந்நான்குபாலுங் காரணமாக, அவ் - அம் முதற்பெயருஞ் சினைப்பெயருஞ் சினைமுதற்பெயரும், நான்மைகளாம் - நந்நான்காகும், ஆண்பெண்-ஆண்மை பெண்மை என்கிற விருபாலுங் காரணமாக, முறைப்பெயர்-முறைப்பெயர், (இரண்டாம்)-இரண்டாகும்.

(வரலாறு)

1. சாத்தன் - ஆண்மை முதற்பெயர், சாத்தி - பெண்மை முதற்பெயர், கோதை-ஒருமை முதற்பெயர், கோதைகள் - பன்மைமுதற்பெயர் ஆக ச.

2. முடவன் - ஆண்மைச் சினைப்பெயர், முடத்தி - பெண்மைச் சினைப்பெயர், செவியிலி-ஒருமைச் சினைப்பெயர், செவியிலிகள்-பன்மைச் சினைப்பெயர் ஆக ச.

3. முடக்கொற்றன் - ஆண்மைச் சினைமுதற்பெயர், முடக்கொற்றி-பெண்மைச் சினைமுதற்பெயர், கொம்புற மருதி - ஒருமைச்சினை முதற்பெயர், கொம்புற மருதிகள் - பன்மைச் சினைமுதற் பெயர் ஆக ச.

4. தந்தை - ஆண்மை முறைப்பெயர், தாய்-பெண்மை முறைப் பெயர் ஆக உ.

[திணைப் பொதுப்பெயர்கள் பாற்பொதுவாதல்.]

284. அவற்றுள், ஒன்றே யிருதிணைத் தன்பா லேற்கும.

(இ - ள்.) அவற்றுள்-முதற்பெயர் முதலாகச் சொல்லப்படு மிருபத்தாறும் பிறவுமாகிய பொதுப்பெயர்களுள், ஒன்றே-ஒவ்வொன்றே, இருதிணை - இருதிணையிலும், தன்பால் - தன்றன்பாலே, ஏற்கும் - ஏற்றுவரும், எ - று.

எனவே ஆண்மைப் பொதுப்பெயர் இருதிணை யாண்பாலையும், பெண்மைப் பொதுப்பெயர் இருதிணைப் பெண்பாலையும், ஒருமைப் பொதுப்பெயர் உயர்திணை ஆ ணொருமை பெண் ணொருமைகளையும் அஃறிணை ஒருமையையும், பன்மைப் பொதுப்பெயர் இருதிணைப் பன்மையையும் ஏற்குமென்று ரென்றதாயிற்று.

(உதாரணம்.)

உயர்திணை.	அஃறிணை.
சாத்தன் இவன்	சாத்தன் இவ்வெருது—ஆண்மைப்பொதுப்பெயர்.
சாத்தி இவள்	சாத்தி இப்பசு—பெண்மைப் பொதுப்பெயர்.
கோதை இவன், கோதை இவள்	கோதை இது—ஒருமைப் பொதுப்பெயர்.
கோதைகள் இவர்	கோதைகள் இவை—பன்மைப் பொதுப்பெயர்.
தந்தை இவன்	தந்தை இவ்வெருது—ஆண்மை முறைப்பெயர்.
தாய் இவள்	தாய் இப்பசு—பெண்மை முறைப்பெயர்.
யான் நம்பி, யான் நங்கை	யான்பறவை—தன்மை ஒருமைப் பொதுப்பெயர்.
யாம்மாக்கள்	யாம்பறவைகள்—தன்மைப் பன்மைப் பொதுப் பெயர்.
நீ நம்பி, நீ நங்கை,	நீ பறவை—முன்னிலை ஒருமைப் பொதுப்பெயர்.
நீர் மக்கள்	நீர் பறவைகள்—முன்னிலைப் பன்மைப் பொதுப் பெயர்.
அவரெல்லாம்	அவையெல்லாம்—எல்லாம் என்னும்பெயர்.
அவர்தாம்	அவைதாம்—தாம் என்னும் பெயர்.
அவன்தான், அவள்தான்	அதுதான்—தான் என்னும் பெயர்.

மற்றவைகளையும் இப்படியே இருதிணையிலுங் கூட்டுக. (உஎ)

[தன்மை முன்னிலை படர்க்கைப் பெயர்கள்.]

285. தன்மை யானுன் யாநா முன்னிலை
எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ
அல்லன படர்க்கை யெல்லா மெனல்பொது,

(இ - ள்.) தன்மை - தன்மைப்பெயர் (நான்காவன), யானென் யாநாம்-யான் நான் யாம் நாம் என்பனவாம், முன்னிலை - முன்னிலைப் பெயர் (ஐந்தாவன), எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ - எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ என்பனவாம், அல்லன இவ்வொன்பது மல்லாத பெயர்களெல்லாம், படர்க்கை-படர்க்கையிடத்துக் குரியனவாம், எல்லாம் எனல் - அவற்றுள் எல்லாமென்னும் பெயரொன்றும், பொது - மூவிடத்திற்கு முரித்தாம், எ - று.

எல்லா மென்பது மூவிடத்திலும் வருமாறு:—யாமெல்லாம், நீரெல்லாம், அவரெல்லாம், அவையெல்லாம். (உஅ)

[தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் இடம்வகுத்தல்]

286. வினையின் பெயரே படர்க்கை வினையால்
அணையும் பெயரே யாண்டுமா குமே.

(இ - ள்.) வினையின்பெயரே-தொழிற்பெயர்களே, படர்க்கை - படர்க்கை யிடத்திற் குரியவாகும், வினையா லணையும்பெயர் - வினைமுற்றாலணையும் பெயர்களானவை, யாண்டுமாகும்-தனித்தனி மூவிடத்திற்கு முரியவாகும், எ - று.

வினைப்பெயர் எனினும் தொழிற்பெயரெனினும் ஒக்கும்.

உணல் நன்று, தினல் நன்று, வருகை நன்று - தொழிற்பெயர்கள் படர்க்கை யிடத்திற்கே உரிமையாய் வந்தன.

உண்டேனை, (உண்ட என்னை), உண்டாயை (உண்ட உன்னை), உண்டானை (உண்டவனை) என வினையாலணையும் பெயர் மூன்றிடத்தும் வந்தன.

யானுண்டேன், நீ யுண்டாய், அவனுண்டான் என இடத்தால் ஒன்றுபட நின்ற நிலைமொழி வருமொழிபோல, தொழில் பயனிலையாகி, யானுணல், நீயுணல், அவனுணல் என ஒன்றுபட்டு நிற்பினும், அத்தொழிற் பெயர்கள் எனதுணல், நினதுணல், அவனதுணல் என்றும், உணல் என்றும், வேறுபட்டு நிற்கும் தொழிற் பெயர்கள் போல படர்க்கைக்கே உரியனவென்று கொள்ளவேண்டு மென்பார் எய்திய இடம் பிறழாமற் காத்தற்கு "வினையின்பெயரே படர்க்கை" என்றார்.

தொழிற் பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் தம்முள் வேற்றுமை யென்னெனின், தொழிற்பெயர் தொழிலை யுணர்த்தும் பெயராய்ப் படர்க்கை யிடத்திற்கே உரியதாம். வினையாலணையும் பெயராவது வினைமுற்று தன்தொழிலையுடைய பொருளுக்குப் பெயராய் மூன்றிடங்களிலும் வரக்கூடியதாம். (உகூ)

[தான் முதலிய பொதுப்பெயர்கள்.]

287. தான்யா னானீ யொருமை பன்மைதாம்
யாநா மெலா மெலீர் நீயிர் நீர் நீவிர்.

(இ - ள்.) தான்யானானீ-தான் யான் நான் நீ என்கிற நான்கும், ஒருமை - இருதிணை முக்கூற்றொருமைப் பெயர்களாம், தாம்யாநா மெலா மெலீர் நீயிர் நீர் நீவிர் - தாம் யாம் நாம் எல்லாம் எல்லீர் நீயிர் நீர் நீவிர் என்கிற வெட்டும், பன்மை - இருதிணை யிருகூற்றுப் பன்மைப் பெயர்களாம், எ - று.

இருதிணை முக்கூற்றொருமை என்றது-ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால்களை. இருதிணை இருகூற்றுப் பன்மை என்றது பலர் பால் பலவின் பால்களை. (௯0)

[எண்ணுஞ்வரும் உயர்திணைப் பெயர்க்குப் புறனடை.]

288. ஒருவ னொருத்திப் பெயர்மே லெண்ணில.

(இ - ள்.) ஒருவனொருத்தி - ஒன்றென்னு மெண்ணால் ஒருவன் ஒருத்தி என வருவனவன்றி, மேல் - இவற்றின்மேல், எண் - இரண்டு முதலாகிய வெண்களால், பெயர் - இவ்வாண்பாற் பெயரும் பெண் பாற் பெயரும், இல - வருவனவில்லவாம். (௯க)

289. ஒருவ ரென்ப துயரிரு பாற்றாய்ப்
பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப.

(இ - ள்.) ஒருவரென்பது - ஒருவரென வழங்குஞ்சொல், உயரிரு பாற்றாய் - உயர்திணை யாண் பெண் இவ்விருபாற்கும் பொதுவாய், பன்மைவினை - அத்திணைப்பன்மை வாய்பாட்டு வினையை, கொளும் - கொண்டு முடிகின்ற, பாங்கிற்று - பாங்கினை யுடைத்தாகும், என்ப - என்றுசொல்லுவர் புலவர், எ - று.

(வரலாறு) ஆடவருளொருவ ரறத்தின் வழிநிற்பார்.
பெண்டிருளொருவர் கொழுநன் வழிநிற்பார்.

இங்கே ஒருவர் நிற்பான், ஒருவர் நிற்பாள் என எழுவாயின் பகுதிக்கேற்ப ஒருமைப் பயனிலை கொள்ளாது விகுதிக்கேற்பப் பன்மைப் பயனிலையையே கொண்டு முடிதல்காண்க. (௯உ)

[ஆகுபெயர்.]

290. பொருண்முத லாறோ டளவைசொற் றானி
கருவி காரியங் கருத்த னாதியுள்
ஒன்றன் பெயரா னதற்கியை பிறிதைத்
தொன்முறை யுரைப்பன வாகு பெயரே.

(இ - ள்.) பொருண் முதலாறோடு-பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்னுமாறுடனே, அளவை - இவற்றின் பகுதிய வாகிய நால்வகை யளவையும், சொல் - சொல்லும், தானி - தானியும், கருவி - காரணமும், காரியம் - காரியமும், கருத்தன்-வினைமுதலும், ஆதியுள் - ஆதியாகவரும் பொருள்களுள், ஒன்றன் - ஒருபொருளி னது, பெயரான் - இயற்பெயரால், அதற்கு - அப்பொருளுக்கு, இயை - இயைந்த, பிறிதை - பிறிதொரு பொருளை, தொன்முறை - தொன்றுதொட்டு வருமுறையே, உரைப்பன - சொல்லப்பட்டு வரு வன, ஆகுபெயர் - ஆகுபெயர்களாம், எ - று.

(வரலாறு.)

1. 'தாமரைபுரையுங் காமர்சேவடி' என்கிற விடத்தே தாமரை என்கிற முதற்பொருளின் பெயர் அதன் மலராகிய சினைப்பொருளு க்கு ஆதலாற் பொருளாகு பெயராம்.

2. 'அகனமர்ந்து செய்யாளுறையும்' என்கிற விடத்தே அகம் என்கிற உள்ளிடப்பெயர் அங்கிருக்கிற மனத்திற்கு ஆதலால் இட வாகு பெயராம்.

3. காரறுத்தது என்கிற விடத்தே கார் என்கிற மழைக்காலப் பெயர் அக்காலத்து விளையும் பயிருக்கு ஆதலாற் காலவாகு பெயராம்.

4. வெற்றிலை நட்டான் என்கிறவிடத்தே வெற்றிலை என் கின்ற சினைப்பெயர் அதன் முதலாகிய கொடிக்கு ஆதலாற் சினை யாகு பெயராம்.

5. நீலஞ்சூடினாள் என்கிற விடத்தே நீலம் என்கிற நிறப்பெயர் அதனையுடைய குவளைமலருக்கு ஆதலாற் குணவாகு பெயராம்.

6. வற்றலுட னுண்டான் என்கிற விடத்தே வற்றல் என்கிற தொழிற்பெயர் அதனையுடைய உணவிற்கு ஆதலால் தொழிலாகு பெயராம்.

7. காலாலே நடந்தான் என்கிறவிடத்தே கால் என்கிற எண்ண ளவைப் பெயர் அவ்வளவைக் கொண்ட உறுப்பிற்கு ஆதலால் எண்ணலளவை யாகுபெயராம்.

8. ஒருவீசை கொடுத்தான் என்கிற விடத்தே வீசை என்கிற எடுத்த லளவைப்பெயர் அந்த அளவைக்கொண்ட பொருளுக்கு ஆத லால் எடுத்த லளவையாகு பெயராம்.

9. நாழியுடைந்தது என்கிறவிடத்தே நாழி என்கிற முகத்தலளவைப்பெயர் அவ்வளவைக் கருவிக்கு ஆதலான் முகத்தலளவையாகு பெயராம்.

10. கீழைத்தடி விளைந்தது என்கிற விடத்தே கீழைத்தடி என்கிற நீட்டலளவைப்பெயர் அதனு லளக்கப்பட்ட கழனிக்கு ஆதலால் நீட்டலளவை யாகுபெயராம்.

11. இந்நூலுக் குரைசெய்தான் என்கிற விடத்தே உரையென்கிற சொல்லின் பெயர் நூற்பொருளுக் காதலாற் சொல்லாகு பெயராம்.

12. விளக்கு முரிந்தது என்கிற விடத்தே விளக்கு என்கிற தீபத்தின்பெயர் (தானியின் பெயர்) அதற்கிடமாகிய (தானமாகிய) தண்டினுக்கு ஆதலால் தானியாகு பெயராம்.

13. திருவாசகம் என்கிறவிடத்தே அடையடுத்த வாசகமென்கிற முதற் கருவியின்பெயர் அதன் காரியமாகிய நூலுக்கு ஆதலாற் கருவியாகுபெயர். கருவியாகுபெயர் - காரணவாகுபெயர்.

14. இந்நூலலங்காரம் என்கிறவிடத்தே அலங்கார மென்கிற காரியத்தின் பெயர் அதை யுணர்த்துதற்குக் கருவியாகிய நூலுக்கு ஆதலாற் காரியவாகு பெயராம்.

15. இந்நூல் திருவள்ளுவர் என்கிறவிடத்தே திருவள்ளுவர் என்கிற கருத்தாவின்பெயர் அவராற் செய்யப்பட்ட நூலுக்கு ஆதலாற் கருத்தாவாகு பெயராம்.

ஆதியென்றதனால்:—காளைவந்தான், பாவைவந்தாள் எனவரும் உவமையாகுபெயர் முதலானவையுந் தேவர் முதலியோர் பெயரை மக்களுக்கு இட்டு வழங்குவனவுங் கொள்க.

இன்னும் இவ்வாகு பெயர் இருமடியாகு பெயர், மும்மடியாகு பெயர், அடையடுத்த வாகுபெயர் இருபெய ரொட்டாகு பெயர் எனப் பலவகைப்பட்டு வழங்கும்.

அவை வருமாறு:—கார்என்கிற கருநிறத்தின்பெயர் அதனையுடைய மேகத்தை யுணர்த்தும்போது ஆகுபெயராம். அம்மேகம் பெய்யும் பருவத்தை யுணர்த்தும்போது இருமடியாகு பெயராம், அப்பருவத்தில் விளையும் பயிரை யுணர்த்தும்போது மும்மடியாகு பெயராம். இப்படியே நான் மடியாகுபெயர் முதலானவையும் வருதல்காண்க.

வெற்றிலைநட்டான் - இதில் இலை என்கிற சினைப்பெயர் வெறுமை என்கிற அடையடுத்து முதலாகிய கொடிக்கு ஆகையால் அடையடுத்த வாகுபெயராம். மருக்கொழுந்து நட்டான், அறுபதம் முரலும்

என்பவைகளிலும் கொழுந்து பதம் என்னும் சினையாகு பெயர்களின் முறையே மரு, ஆறு என்னும் அடையடுத்து வந்தமையறிக. அறு பதம் - வண்டு. முரலல் - சத்தித்தல்.

வகரக்கிளவி - இதில், வகரமாகிய அடைமொழியானது கிள வியென்பதன் இயற்பொருளாகிய சொல்லை விசேடித்து நில்லாது எழுத்தாகிய ஆகுபெயர்ப்பொருளை விசேடித்து நிற்கக் கிளவியென் பதே ஆகுபெயர்ப்பொருளை யுணர்த்த அவ்விருபெயரு மொட்டி நிற் கையால் இருபெயரொட்டாகு பெயராம். இது பின் மொழி யாகு பெயர்.

ஆகுபெயரும் அன்மொழித் தொகையுந் தம்பொரு ளுணர்த் தாது பிறிது பொருளுணர்த்துதலால் ஒக்குமாதலின், தம்முள் வேற் றுமை யென்னையென்றால் ஆகுபெயர் பொருள் இடம் காலம் முத லிய சம்பந்தத்தால் வேறு பொருளை உணர்த்தி ஒருசொல்லாய்வரும். அன்மொழித்தொகை வேற்றுமைத் தொகை முதலிய ஐவகைத்தொ கை யாற்றலால் வேறுபொருளை உணர்த்திப் பலசொல்லாய் வரும். ஆகுபெயர் நியதிப்பெயராய்த் தொன்றுதொட்டு வரும், அன்மொழித் தொகை தொன்றுதொட்டு நியதிப்பெய ராய் வராமல் பாடுகிற புல வன் வியப்பு முதலிய காரணத்தால் சொல்ல ஆங்காங்கு வரும். இவையே ஒன்றற்கொன்று வேறுபாடாம். (௬௩)

[வேற்றுமை.]

291. ஏற்கு மெவ்வகைப் பெயர்க்கு மீறாய்ப்பொருள்
வேற்றுமை செய்வன வெட்டே வேற்றுமை.

(இ-ள்.) ஏற்கும் - தம்மை யேற்றுக் கொள்ளுதற்குரிய, எவ்வ கைப் பெயர்க்கும் - எவ்வகைப்பட்ட பெயர்களுக்கும், ஈறாய் - இறுதி யாய், பொருள் - அப்பெயர்ப்பொருளை, வேற்றுமைசெய்வன-வேற் றுமைப் படுத்துவனவாகிய, வேற்றுமை - வேற்றுமைகள், எட்டே - எட்டேயாகும், எ - று.

தன்னையேற்ற பெயர்ப்பொருளை வேற்றுமை செய்கிற உருபை வேற்றுமை யென்றது காரியவாகுபெயர். (௬௪)

[வேற்றுமையின் பெயரும் முறையும்.]

292. பெயரே ஐ ஆல் கு இன் அது கண்
விளியென் றுகு மவற்றின் பெயர்முறை.

(இ-ள்.) அவற்றின் - முன்னே யெட்டுவேற்றுமை யென்னப் பட்டவைகளினுடைய, பெயர் - பெயர்களும், முறை - முறையுமா

வன, பெயர் - பெயரும், ஐ - ஐயும், ஆல் - ஆலும், கு - குவ்வும், இன் - இன்னும், அது - அதுவும், கண் - கண்ணும், விளி - விளியும், என்றுரும்-என்றிப்படிச் சொல்லப்பட்டவையாகும். எ-று. (ருரு)

[எழுவாயுருபு மற்றையுருபுகளையேற்றல்.]

293. ஆற னுருபு மேற்குமவ் வுருபே.

(இ-ள்.) அவ்வுருபே - பெயராய் நிற்கின்ற அவ்வெழுவாயுருபே, ஆறனுருபும் - ஐம்முதலாகிய ஆறு வேற்றுமை யுருபுகளையும், ஏற்கும் - ஏற்கும், எ - று. (ருசு)

[இரண்டாவது முதலிய உருபுகளை யேலாத பெயர்கள்.]

294. நீயிர் நீவிர் நா னெழுவா யலபெறா.

(இ-ள்.) நீயிர் நீவிர் நான் - நீயிர் முதலாகிய இம்மூன்று பெயர்களும், எழுவாயல - எழுவாயல்லாத வேற்றுமைகளை, பெறா - ஏலாவாம். எ - று. (ருஎ)

[எழுவாய் வேற்றுமை.]

295. அவற்றுள், எழுவா யுருபு திரிபில் பெயரே
வினைபெயர் வினாக்கொள லதன்பய னிலையே.

(இ - ள்.) அவற்றுள் - முன் சொல்லப்பட்ட எட்டு வேற்றுமைகளுள், எழுவாய் - முதல்வேற்றுமையினது, உருபு - உருபாவது, திரிபில்-ஐம்முதலாகிய உருபேற்றுத் திரிதலில்லாத, பெயரே - பெயரேயாம், வினை - வினையையும், பெயர் - பெயரையும், வினா-வினாவையும், கொளல் - கொள்ளவருதல், அதன் - அவ்வுருபினது, பயனிலை - பொருணிலையாய் வருதலாம்.

எனவே அத்திரிபில்லாத பெயர் தானே தன்பொருளை வினைமுதற்பொருளாக வேற்றுமை செய்யுமென்பதாயிற்று. வினைமுதல், செய்பவன் என்பன ஒருபொருட் சொற்கள். இதனை வடநூலார் கருத்தா வென்பர்.

(உதாரணம்.)

சாத்தன் வந்தான், கொற்றன் வாழ்க, அவன்பெரியன், ஆ உண்டு,	தெரிநிலையும் குறிப்புமாகிய வினைகொள வந்தன.
ஆவொன்று, அரசனிவன்.	பெயர்கொள வந்தன.
அவன்யார், ஆயாது.	வினாக்கொள வந்தன.

வினைமுதற் பொருளாவது தனது புடைபெயர்ச்சியாகிய தொழிலிற் சுதந்திரமுடைய பொருளாம். சாத்தன் வந்தான் என்கிற

விடத்தே சாத்தனென்ற பெயர்ப் பொருளாகிய ஒருவன் தன் புடை பெயர்ச்சியாகிய வருகைத் தொழிலிலே சுதந்தர முடையனாதல் காண்க.

இவ்வெழுவாய்க்கு ஐம்முதலானவை போன்ற உருபில்லா திருந்தாலும் உரையிற் கோடலென்கிற உத்திபால் ஆனவன், ஆனவள், ஆனவர், ஆனது, ஆனவை என ஐம்பாலிலும் வருகிற சொல்லுருபுக ளுண்டெனக் கொள்க.

அவை :— சாத்தனானவன், சாத்திபானவள், சாத்தரானவர், ஆவானது, ஆக்களானவை எனச் சிலவிடங்களிலே வரும். அல்லாமலும் சிறுபான்மை, சாத்த னென்பவன் என வருவதுங் கொள்க. இன்னும் இவ்வுத்தியைப் பின்வரும் வேற்றுமைகளிலே காட்டப்படுஞ் சொல்லுருபுகளுக் கெல்லாங்கொள்க. (௬அ)

[இரண்டாம் வேற்றுமை.]

296. இரண்டா வதனுரு பையே யதன்பொருள்
ஆக்க லழித்த லடைத னீத்தல்
ஒத்த லுடைமை யாதி யாகும்.

(இ - ள்.) இரண்டாவதன் - இரண்டாம் வேற்றுமையினது, உருபு-உருபாவது, ஐயே - முன்சொல்லப்பட்ட ஐயொன்றுமே யாம், அதன் - அதனுடைய, பொருள் - பொருள்களாவன, ஆக்கல் - ஆக்கப்படு பொருளும், அழித்தல் - அழிக்கப்படு பொருளும், அடைதல் - அடையப்படு பொருளும், நீத்தல் - துறக்கப்படு பொருளும், *ஒத்தல் - ஒக்கப்படு பொருளும், உடைமை - உடைமைப் பொருளும், ஆதியாகும் - முதலியனவாக அவ்வுருபையேற்ற பெயர்ப் பொருள்கள் வேறுபட்ட செயப்படு பொருள்களாம், எ - று.

(உதாரணம்.)

குடத்தை வனைந்தான் மரத்தை வளர்த்தான்	ஆக்கப்படுபொருள்.
கோட்டையை யிடித்தான் வேலியைப் பிரித்தான்	அழிக்கப்படுபொருள்.
ஊரை யடைந்தான் தேரை யூர்ந்தான்	அடையப்படுபொருள்.
மனைவியைத் துறந்தான் பதியை நீத்தான்	நீக்கப்படு பொருள்.
புலியை யொத்தான் வேளை நிகர்த்தான்	ஒக்கப்படுபொருள்.
பொன்னை யுடையான் புலியை யுடையான்	உடைமைப்பொருள்.

செயப்படு பொருளாவது வினைமுதற் றொழிற்பய னுறுவது. செயப்படுபொருள், செய்பொருள், கருமம், காரியம் என்பன ஒரு பொருட் சொற்கள்.

குடத்தை வனைந்தான் என்கிறவிடத்தே - மண்கூட்டுகை திரிகை சுழற்றுகை முதலானவை வினைமுதலின் தொழிலாம்; குடத்தினது தோன்றுதல் அத்தொழிலின் பயனும்; அப்பயனுறுவது குடமாதலால் குடம்செயப்படு பொருளாம்.

கோட்டையை யிடித்தான் என்கிற விடத்தே - கோட்டையை யிடித்தல் செய்பவனது தொழிலாம், அதனது வடிவுகுலைதல் அத்தொழிலின் பயனும், அப்பயனுறுவது கோட்டையாதலால் கோட்டை செயப்படு பொருளாம்.

ஊரையடைந்தான் என்கிற விடத்தே - நடந்துசெல்லுதல் கருத்தாவினது தொழிலாம், ஊரைச்சேர்தல் அத்தொழிலின் பயனும், அப்பயனுறுவது ஊராதலால் ஊர் செயப்படு பொருளாம்.

மனைவியைத் துறந்தான் என்கிற விடத்தே—வெறுத்து விடுதல் வினைமுதலின் றொழிலாம், உரிமைக்கேடு அதன்பலனும், அப்பயனுறுவது மனைவியாதலால் மனைவி செயப்படு பொருளாகும்.

புலியை யொத்தான் என்கிற விடத்தே—அஞ்சாது பாய்ந்து கொல்லுதலாற் புலியை உபமானமாகக் கொள்ளுதல் வினைமுதலினது தொழிலாம். உவமானமாகக் கொள்ளப்படுதல் அத்தொழிலின்பயனும், அப்பயனுறுவது புலியாதலால் புலி செயப்படு பொருளாம்.

பொன்னையுடையான் என்கிறவிடத்தே—சம்பாதித்தல் வினைமுதலின் றொழிலாம், தனதாகுகை அத்தொழிலின் பயனும், அப்பயனுறுவது பொன்னாதலால் பொன் செயப்படு பொருளாம்.

இன்னுஞ் செயப்படு பொருள் குன்றாத முதனிலைகளின் மேல் வி-பி முதலிய விகுதிகள்சேர்ந்து வருவனவாகிய பிறவினைகளிலேசிலவற்றிற்கு இயற்றும் வினைமுதல் இரண்டாம் வேற்றுமையில் வருதலால், அரசன் பகைவரைச் சிறைச்சாலையை யடைவித்தான் என இரண்டு செயப்படு பொருள் வரும். சிலவற்றிற்கு அது மூன்றும் வேற்றுமையிலே வருதலால், சாத்தன் கொற்றனாற் பசுவைப் கறப்பித்தான் எனச் செயப்படு பொருள் ஒன்றேவரும், இரண்டு வாரா. செயப்படு பொருள் குன்றாத தன் வினைகளில் எங்கும் இரண்டு செயப்படு பொருள் வருதலில்லையோ வென்றால், பசுவைப் பாலைக் கறந்தான், யானையைக் கோட்டைக் குறைத்தான், எனச் சில விடங்

களிலே வருதலு முண்டு. ஆனால் இப்பசுவையும் யானையையுஞ் செயப்படு பொருளாகக் குறியாமல், நீக்கப்பொருளாகக் குறித்தால், பசுவினின்றும் பாலைக்கறந்தான், யானையினது கோட்டைக் குறைத்தான் எனவும், சம்பந்தப் பொருளாகக் குறித்தால் பசுவினது பாலைக்கறந்தான், யானையினது கோட்டைக் குறைத்தான் எனவும் வருதலால், முன்னின்ற செயப்படு பொருள் சிறப்பில்லை யென்றறிக.

ஆதி யென்றதனால் வீட்டை விரும்பினான், நூற்பொருளையறிந்தான், என விரும்புதலும் அறிதலுமாகிய வினைமுதற் றொழில்களுக்கு விஷயமாகிய வீடும் நூற்பொருளும் செயப்படு பொருளாகுமை முதலினவையுங் கொள்க. அல்லாமலும் அச்செயப்படு பொருள் கருத்திற் செயப்படுவதும்; கருத்தின்றிச் செயப்படுவதும்; இருமையிற் செயப்படுவதும் என மூன்று வகையாம். அவை முறையே சோற்றை யுண்டான், சோற்றைக் குழைத்தான், பதரையு நெல்லையும் பணத்திற்குக் கொண்டான் என வரும். (௬௬)

[மூன்றும் வேற்றுமை.]

297. மூன்று வதனுரு பாலா னோடொடு
கருவி கருத்தா வுடனிகழ் வதன்பொருள்.

(இ - ள்.) மூன்று வதன் - மூன்றும் வேற்றுமையி னுடைய, உருபு - உருபுகளானவை, ஆலானோடொடு - முன்சொல்லப்பட்ட ஆலே யன்றி ஆனும் ஓடும் ஒடுவும் ஆகும், அதன் - அவ்வுருபுகளுடைய, பொருள் - பொருள்களானவை, கருவி - கருவிப்பொருளும், கருத்தா - வினைமுதற்பொருளும், உடனிகழ்வு - உடனிகழ்ச்சிப் பொருளும் ஆகிய அவ்வுருபுகளை யேற்ற பெயர்ப் பொருள்கள் வேறுபட்ட மூன்றுமாகும், எ - று.

இந்த நான்குருபுகளுக்கும் மூன்று பொருள்களுமாமெனக் கூட்டிச் சொன்னாராயினும், ஏற்புழிக் கோடலென்கிற உத்தியால் அவ்வுருபுகளுள் ஆல் ஆன் உருபுகளுக்குக் கருவியும் கருத்தாவும், ஓடு ஒடு உருபுகளுக்கு உடனிகழ்ச்சியுஞ் சிறந்தன வென்று கொள்க.

(உதாரணம்.)

வாளாற்பகைவனை வெட்டினான் ... வாளான் பகைவனை வெட்டினான். ...	}	கருவி.
அரசனாலாகிய கோயில் ... ... அரசனானாகிய கோயில்.	}	கருத்தா.
மைந்தனோடு தந்தை வந்தான் . மைந்தனொடு தந்தை வந்தான். .	}	உடனிகழ்ச்சி.

பெயரியல்.

கருவியாவது வினைமுதற் றொழிற்பயனைச் செயப்படு பொருளிற் சேர்ப்பது. கருவி, காரணம், ஏது என்பன ஒருபொருட் சொற்கள்.

வாளாற் பகைவனை வெட்டினான் என்கிற விடத்தே வாளைப் பற்றி வீசுதல் வினைமுதலினது தொழிலாய், பகைவனுடம்பு அறுதல் அத்தொழிற்குப் பயனும், வாள் அப்பயனைப் பகைவனாகிய செயப்படு பொருளிலே சேர்க்கையால், அது கருவியாம்.

இன்னும் அக்கருவிப்பொருள் முதற்கருவியும் துணைக்கருவியும் என விருவகைப்படும். அவற்றுள் முதற் கருவியாவது செயப்படு பொருளோ டொற்றுமை யுடையது.

(உ-ம்.) மண்ணாற் குடத்தை வனைந்தான்.

துணைக்கருவியாவது முதற்கருவிக்குத் துணையாய் அதுகாரியப படுமளவு முடனிகழ்வது.

(உ-ம்.) தண்ட சக்கரங்களாற் குடத்தை வனைந்தான்.

கருத்தா என்கிற வினைமுத லிட்டிப்பட்டதென்று முன்னே யெழுவாய்ச் சூத்திரவுரையிற் காட்டப்பட்டது. அவ்வெழுவாய் வேற்றுமையில் வருகிற வினைமுதற்பெயர் தன்விகுதி வினையினாலே முடியும். இம்மூன்றும் வேற்றுமையில் வருகிற வினைமுதற் பெயர் செயப்படு பொருள் விகுதி வினையினாலே முடியும். இதுவே அவ்விரண்டற்கும் வேறுபாடாம்.

(உ-ம்.) குயவன் குடத்தை வனைந்தான் என்கிற விடத்து குயவன் என்கிற எழுவாய்க்கருத்தா தனக்குரிய ஆன்விகுதி வினையினாலே முடிந்தது. குயவனாற்குடம் வனையப்பட்டது என்கிற விடத்து குயவன் என்னும் மூன்றும் வேற்றுமைக் கருத்தா தனக்குரிய ஆன் விகுதி வினையினாலே முடியாமல் செய்ப்படுபொருட்குரிய துவ் விகுதிவினையினால் முடிந்தது.

இன்னும் கர்த்தாவாகிய இவ்வினை முதற்பொருள் இயற்றும் வினைமுதலும் (இயற்றுதற் கருத்தாவும்) ஏவும்வினைமுதலும் (ஏவுதற் கருத்தாவும்) என விருவகைப்படும். அவற்றுள், இயற்றும் வினைமுதலாவது கருவியைத் தொழிற்படுத்துவது.

(உ-ம்.) தச்சனாற் கோவில் கட்டப்பட்டது.

ஏவும் வினைமுதலாவது அவ்வியற்றும் வினைமுதலினது தொழிலை யுண்டாக்குந் தொழிலை யுடையது. அது அரசனாலே கோயில் கட்டுவிக்கப்பட்டது எனவரும். இவ்வியற்றுதற் கருத்தாவையும் ஏவுதற் கருத்தாவையும் நிமித்தகாரண மென்றுங் கூறுவர்.

உடனிகழ்ச்சிப் பொருளாவது வினைகொண்டு முடிகிற பொருளினது தொழில் போன்ற தொழிலைத் தன்னிடத்து முடனிகழ்கிறதாக வுடையுது.

(உ-ம்.) மைந்தனோடு தந்தைவந்தான் என்கிறவிடத்தே தந்தை வினைகொண்டு முடிகிறபொருளாம். வருதல் அப்பொருளின் தொழிலாம். அவ்வருதற் றொழிலைத் தன்னிடத்து முடனிகழ்கிறதாக வுடைய பொருள் மைந்தனாதலால் மைந்தனுடனிகழ்ச்சிப் பொருளாகும். அவ்வுட னிகழ்ச்சிப் பொருள் தலைமைப் பொருளும், தலைமையில் பொருளும் என இருவகைப்படும். அவற்றுள் தலைமைப் பொருளாவது வினைகொண்டு முடிகிற பொருளினுயர்வுடையது; அது மன்னவனோடு மந்திரி வந்தான் எனவரும். தலைமையில் பொருளாவது வினைகொண்டு முடிகிற பொருளி னிழிவுடையது; அது மாணாக்கனோ டாசிரியன் வந்தான் எனவரும்.

சிறுபான்மை, ஆல் ஆன் உருபுகள் - உடனிகழ்ச்சிப்பொருளிலும், ஒடுஓடு உருபுகள்-வினைமுதற் பொருள் கருத்தாப்பொருள்களிலும் வரும.

(உதாரணம்.)

தூங்குகையாலோங்குநடைய," "உறழ்மணியானுயர்மருப்பின"

இவற்றில், ஆல் ஆன் உருபுகள் உடனிகழ்ச்சிப்பொருளில் வந்தன; கையால் - கையோடு, மணியான் - மணியோடு என்பன பொருள்.

'கொடியொடு துவக்குண்டான்' 'ஊசியொடுகுயின்ற தூசும்பட்டும்,

இவற்றில், கொடியொடு என்பதில் ஒடுஉருபு வினைமுதற்பொருளிலும், ஊசியொடு என்பதில் ஒடு உருபு கருவிப்பொருளிலும் வந்தன; கொடியொடு - கொடியால், ஊசியொடு - ஊசியால் என்பன பொருள்.

சிறுபான்மை ஆல், ஆன் உருபுகள் முதற்பொருளின் மேலேற்றிச் சொல்லப்பட்ட விகாரத்தையுடைய சினைப்பொருளிலும்வரும்.

(உ-ம்.) கண்ணாற் குருடன், காலான் முடவன்.

அல்லாமலும் ஒரோ விடத்துத் தோறும் என்கிற பொருளையுந் தரும். ஊரால்ஒருகோயில் என்கிறவிடத்து, ஊர் தோறும் ஒவ்வொரு கோயில் எனப் பொருள்படுதல்காண்க.

சிறுபான்மை ஓடு, ஒடு, உருபுகள் வேறுவினைப் பொருள் முதலாகிய பிற பொருள்களிலும் வரும். தொடியொடுதொல் கவின் வாடிய தோள் - தொடிக்குக் கழலுதலாகிய வேறுவினை யுடனிகழ்தலால் வேறு வினை யுடனிகழ்ச்சிப்பொருளாம். மலையொடு பொருத

மால்யானை-பொருதல் யானைக்கல்லது மலைக்கில்லாமையால் வினையில் உட னிகழ்ச்சிப்பொருளாம். பாலொடு தேன்கலந்தற்றே - தேனைக் கலக்கப்படுதலால் பால் கலப்புறு பொருளாம். எழுத்தொடு புணர்ந்தசொல் - எழுத்தானது சொல்லுக்கு முதற்கருவி யாதலால் ஒற்றுமைப் பொருளாம். கோபத்தோடு வந்தான் - வருதற்கு விசேடணமாதலால் கோபம் அடைமொழிப் பொருளாம், மதியொடு ஒக்குமுகம் - முகத்துக்கு உவமான மாகையால் மதி ஒப்புப் பொருளாம். விலங்கொடு மக்களனையர் - ஒப்பல்லாத விலங்கு ஒப்பாகச் சொல்லப் படுதலால் விலங்கு ஒப்பலொப்புப் பொருளாம்.

இந்நான்குருபுகளும் தனித்தன்றி ஏகாரம்பெற்றும் வரும்; அவற்றுள் ஆல், ஆன் உருபுகளிலொன்று நிற்றற்குரிய விடத்தே கொண்டு என்பதுதனக்கு முன் ஐகாரம் பெற்றும் பெறாமலுஞ் சொல்லுருபாகவரும். ஒடு, ஓடு உருபுகளிலொன்று நிற்றற்குரிய விடத்தே உடன் என்கிறது தனித்தும் ஏகாரம்பெற்றுஞ் சொல்லுருபாகவரும். அவை:—வாளாலே வெட்டினான், வாளைக்கொண்டு வெட்டினான், வாள்கொண்டு வெட்டினான், மகனோடே தந்தைவந்தான், மகனுடன் தந்தைவந்தான், மகனுடனே தந்தைவந்தான் எனவரும். (சுO)

[நான்காம் வேற்றுமை.]

298. நான்கா வதற்குரு பாகுங் குவ்வே
கொடை பகை நேர்ச்சி தகவது வாதல்
பொருட்டு முறையாதியி னிதற்கிதெனல் பொருளே.

(இ-ள்.) நான்காவதற்கு - நான்காம் வேற்றுமைக்கு, உருபு - உருபாவது, குவ்வேயாகும் - முன்சொல்லப்பட்ட குவ்வொன்றுமேயாகும், பொருள் - அவ்வுருபின் பொருள்களாவன, கொடை - கொடையும், பகை - பகையும், நேர்ச்சி-நட்பும், தகவு-தகுதியும், அதுவாதல்-முதற்காரணமும், பொருட்டு-நிமித்தகாரணமும், முறை-முறையும், ஆதியின்-முதலான பொருட்சொற்களின் புணர்ச்சியில், இதற்கிதெனல் - இதற்கு இதுவென்பது பட வருகின்றவையாகிய அவ்வுருபேற்ற பெயர்ப்பொருள் வேறுபட்ட பலவுமாம். எ-று.

கொடை யெனவே கோடற் பொருளும்; பகையெனவே பகைதொடர் பொருளும், நேர்ச்சியெனவே நட்புத்தொடர் பொருளும், தகுதியெனவே தகுதி யுடைப்பொருளும், அதுவாதலெனவே முதற் காரண காரியப்பொருளும்; பொருட்டெனவே நிமித்தகாரண காரியப்பொருளும்; முறையெனவே முறைக்கிளை பொருளும் குவ்வுருபின் பொருள்களா மென்பது பெற்றாம்,

(உதாரணம்.)

இரவலர்க்குப் பொன்னைக்கொடுத்தான் ... கொடை.
பாம்புக்குப் பகை கருடன் ... பகை.
சாத்தனுக்கு நட்பாளன் கொற்றன் ... நேர்ச்சி.
குண்டலத்திற்குப்பொன்.. அதுவாதல். (முதற்காரண காரியம்.)
கூலிக்கு வேலைசெய்தான் .பொருட்டு.(நிமித்தகாரணகாரியம்.)
சாத்தனுக்கு மகன் கொற்றன் முறை.

கோடற் பொருளாவது கொடுத்தற் றொழிலின் செயப்படு பொருளைத் தனக்குரியதாக்கிக் கொள்ளுநிலையுடைய பொருளாம். இரவலர்க்குப் பொன்னைக் கொடுத்தான் என்கிற விடத்தே - கொடுத்தலின் செயப்படு பொருள் பொன்னும், அதனைத் தனக்குரியதாக்கிக் கொள்ளுநிலை யுடைய பொருள் இரவலராதலால் இரவலர் கோடற்பொருளாகும்.

இன்னும் மாணாக்கனுக் கறிவைக் கொடுத்தான் என்கிற விடத்தே-அறிவாகிய செயப்படு பொருள் கொடுப்போன் பொருளாய்க் கொள்வோனிடத்துச் செல்லாமற்போனாலும் அதனைத் தனக்குரியதாக்கிக் கொள்ளுதலால் மாணாக்கன் கோடற் பொருளேயாம். அல்லாமலும், மாணாக்கனுக்கு நூற்பொருளுரைத்தான் என்கிறவிடத்தே- சொல்லுதலின் செயப்படு பொருளாகிய நூற்பொருளை அறிநிலை யுடைய பொருளாகிய மாணாக்கனுங் கோடற் பொருளேயாம். இன்னும் அவர்கொடுத்தற் குடம்பட்டார் என உடம்படுதற்கு விடயமான பொருளும் ஒரு கோடற்பொருளாகவே வரும்.

கோடல் பலவகைப்படும். அவை ஆவிற்கு நீர்விட்டான் எனக் கேளா தேற்றலும், வறியவர்க்கீந்தான் எனக் கேட்டே யேற்றலும், மாணாக்கனுக் கறிவு கொடுத்தான் என ஏலாதேற்றலும், தனக்குச் சோறிட்டான் என ஈவோ னேற்றலும், அரனுக்குக் கண்ணலர் கொடுத்தான் அரி என உயர்ந்தோன் ஏற்றலும், அரிக்குச் சக்கரம் கொடுத்தான் அரன் என இழிந்தோ னேற்றலும், சோழனுக்கு விருந்திட்டான் சேரன் என ஒப்போ னேற்றலும், சோற்றிற்கு நெய்விட்டான் என உணர்வின்றி யேற்றலும், மாணாக்கனுக்குக் கசையடி கொடுத்தானாசிரியன் என விருப்பா யேற்றலும், கள்ளனுக்குக்கசையடி கொடுத்தா னரசன் என வெறுப்பா யேற்றலு முதலியன.

கொடுத்தலும் பலவகைப்படும். அவை:—மருமகனுக்கு மகளைக் கொடுத்தான் என வழக்கத்திற் கொடுத்தலும், மகனுக்கரசு கொடுத்தான் என உரிமையிற் கொடுத்தலும், அரசனுக்குத் திறை கொடுத்

தான் என அச்சத்திற் கொடுத்தலும், தந்தைதாய்க்குத் திதிகொடுத் தான் எனப் பாவனையிற் கொடுத்தலுமாம்.

பகைப்பொருளாவது ஒருபொருளினிடத்துள்ள பகை தொடர் தற்கு இடமாகிய பொருளாம். பாம்பிற்குப் பகை கருடன், என்கிறவி டத்தே-கருடனிடத்துள்ள பகை தொடர்தற்குப் பாம்பு இடமாத லறிக.

நேர்ச்சிப் பொருளாவது ஒருவனிடத்துள்ள நட்பு தொடர்தற்கு இடமாகிய பொருளாம். சாத்தனுக்கு நட்பாளன் கொற்றன் என்கிற விடத்தே - கொற்றனிடத்துள்ள நட்பு தொடர்தற்குச் சாத்தன் இட மாதலறிக. அவனுக்கு தீயவனிவன், அவனுக்கு நல்லவன் இவன் என் கிறவைகளும் அவைபோல்வனவாம். அன்றியும் தீயோர்க்குக் கே டுண்டாகுக என வைவின்தீமை தொடர்பொருளும், நல்லோர்க்குச் செல்வமுண்டாகுக என வாழ்த்தின் நன்மை தொடர் பொருளும் இப்பகைநேர்ச்சிகளில் அடங்குமெனக்கொள்க.

தகுதிப் பொருளாவது ஒருபொருளோடு பொருந்துதற்குத் தகுதியுடைய பொருளாம். அரசர்க்குரியது அருங்கலம் என்கிற விடத்தே - அருங்கலமானது அரசரோடு பொருந்துதற்குத் தகுதி யுடைய பொருளாதல் காண்க.

அதுவாதற் பொருளாவது (முதற்காரணகாரியம்) முதற்காரண த்தாலாகும் பொருளாம். குண்டலத்துக்குப் பொன் என்கிற விட த்தே-பொன்னாகிய முதற்காரணத்தால் குண்டலமாகிய முதற்காரண காரியம் உண்டாதலறிக.

பொருட்டுப் பொருளாவது (நிமித்தகாரணகாரியம்) நிமித்தகார ணத்தால் ஆகும் பொருளாம். கூலிக்கு வேலைசெய்தான் என்கிற விடத்தே - வேலையாகிய நிமித்தகாரணத்தால் கூலியாகிய நிமித்த காரணகாரியம் உண்டாதலறிக.

முறைப்பொருளாவது பிறப்பினாலொருபொருளின் முறைக்குத் தானியைந்து நிற்கும் பொருளாம். சாத்தனுக்கு மகன் கொற்றன் என்கிற விடத்தே, மகனாதலாகிய முறைக்குச் சாத்தனியைதலறிக.

ஆதியென்றதனால், மழைக்கு மின்னல் என உற்பாதத்தாற் குறி க்கப்படுவதும், அவனுக்கிது போதும் எனக் குறைவில்லாமையைக் கொள்வதும், பிறவுங்கொள்க. உற்பாதம் - மேல்வினையும் நன்மை தீமையை அறிவிக்கும் குறி.

இவ்வுருபு நிற்றற்குரிய சிலவிடங்களிலே பொருட்டு, நிமித்தம், என்கிற சொல்லுருபுகள் வரும். அவை:—கூழின் பொருட்டு வேலை

செய்தான்; கூலியினிமித்தம் வேலை செய்தான் எனவரும்; அல்லாமலும், கூலிக்காக வேலை செய்தான் எனக் குவ்வுருபிற்குப் பொருட்டுப் பொருளிலே ஆக வென்கிறதுஞ் சொல்லுருபாக அவ்வுருபின் மேல் வரும். (சக)

[ஐந்தாம் வேற்றுமை.]

299. ஐந்தா வதனுரு பில்லு மின்னும்
நீங்க லொப்பெல்லை யேதுப் பொருளே.

(இ-ள்.) ஐந்தாவதன்-ஐந்தாம் வேற்றுமையினுடைய, உருபு - உருபுகளானவை, இல்லு மின்னும் - இல்லும் முன் சொல்லப்பட்ட இன்னுமாம், பொருள் - அவ்வுருபுகளின் பொருள்களாவன, நீங்கல்- நீக்கப் பொருளும், ஒப்பு-ஒப்புப் பொருளும், எல்லை - எல்லைப் பொருளும், ஏது - ஏதுப்பொருளுமாகிய அவ்வுருபுகளை யேற்ற பெயர்ப் பொருள்கள் வேறுபட்ட இந்நான்குமாம், எ-று.

(உதாரணம்.)

மலையின்வீழருவி . .	நீக்கப்பொருள்.
காக்கையிற்கரிது களம்பழம்	ஒப்புப்பொருள்.
மதுரையின் வடக்குச் சிதம்பரம் ...	எல்லைப்பொருள்.
கல்வியிற் பெரியன் கம்பன்	ஏதுப்பொருள்.

நீக்கப்பொருளாவது பிரிவை யுண்டாக்குந் தொழிலின்றிப் பிரிவைமட்டுந் தன்னிடத்தி லுடைய பொருளாம். மலையின் வீழருவி யென்கிறவிடத்தே - அருவியின்வீழ்ச்சி பிரிவை யுண்டாக்குந் தொழிலாம். அது தன்னிடத் தில்லாமல் அவ்வீழ்ச்சியாலாகிய பிரிவொன்றையே தன்னிடத்துடையது மலையாதலால் மலைநீக்கப் பொருளாமெனக் கொள்க.

ஒப்புப் பொருளாவது உவமேயப்பொருளிலுந் தன்னிலு மிருக்கின்ற பொதுத்தன்மையால் உபமானமாகிற பொருளாம். காக்கையிற் கரிது களம்பழம் என்கிறவிடத்தே - உவமேயப் பொருளிலுந் தன்னிலுமுள்ள பொதுத்தன்மை கருமையாம்; அதனு லுபமானமாகிய பொருள் காக்கையாதலாற் காக்கை யொப்புப் பொருள்.

எல்லைப்பொருளாவது ஒரு பொருளினது திசை யளவைக் குறிப்பித்தற்கு எல்லையாக நிற்கும் பொருளாம். மதுரை யின் வடக்குச் சிதம்பரம் என்கிற விடத்தே-அறியப்படாத பொருளாகிய சிதம்பரத்தினது திசையைக் குறிப்பித்தற்கு அறியப்பட்ட பொருளாகிய மதுரை எல்லைப் பொருளானமை யறிக.

'காக்கையிற் கரிது களம்பழம்' என உபமானமும் உபமேயமு மாக வருமிடத்தில், காக்கையின் - காக்கைபோல எனப் பொருள் கொண்டால் ஒப்புப் பொருள்; காக்கையின் - காக்கையைக் காட்டி லும் எனப் பொருள் கொண்டால் எல்லைப்பொருளாம்; இதனை உறழ் பொருள் என்றுங் கூறுவர்.

இன்னும் கச்சியிற் றிருத்தணிகை முக்காவதம் என வழியளவி லும், அவனிலிவ னிரண்டாண்டு மூத்தவன் எனக் காலவளவிலும் எல்லைப்பொருள் வருமெனக் கொள்க. அல்லாமலும் அ ரசிற் பெரிய ரந்தணர், ஆவினிழிந்ததுமேதி என்றாற் போல உயர்வு தாழ்வுகளைப் பற்றியும் எல்லைப்பொருள் வரும். இவற்றுள் அந்தணரது பெருமை க்கு அரசரும், மேதியினிழிவிற்கு ஆவும் எல்லைகளாதல் காண்க. இவ் வுயர்வு தாழ்வுகளை நீக்கப் பொருளென்பாரு முளர்.

ஏதுப் பொருளாவது ஒரு பொருளின் சிறப்புக்கு ஏதுவாகும் பொருளாம். கல்வியிற் பெரியன் கம்பன் என்கிறவிடத்தே - கம்பன் பெரியனாதற்குக் கல்வி ஏதுவாதலறிக. இன்னும் கடவுளிற் றோன் றிய துலகம், என முதற்காரணப் பொருளாகுதை முதலானவையும் கொள்க.

இன்னும், மண்ணுலகின் வேறு விண்ணுலகம், தீவினையின வெறுக்கின்றான் என விப்படி இதனினிற்றிது என்பதுபட வருவன வெல்லாங் கொள்க. இல், இன்-உருபுகள் சிலவிடங்களிலே உம்மை பெற்றும் வரும். அவை-அவனிலும் பெரியனிவன், இவனினுஞ் சிறிய னவன் என வருதல் காண்க. நீக்கப் பொருளிலே இல், இன் - உருபு களின்மேல் நின்று இருந்து என்னப்பட்டவை தனித்தாவது உம் பெற்றாவது ஒரேவிடத்துச் சொல்லுருபுகளாக வரும்.

(உ-ம்.) ஊரினின்று நீங்கினான், ஊரிலிருந்து போனான், ஊரி னின்றும் வந்தான், ஊரிலிருந்தும் போனான். (சஉ)

300. ஆறனொருமைக் கதுவு மாதுவும்
பன்மைக் கவ்வு முருபாம் பண்புறுப்
பொன்றன் கூட்டம் பலவி னீட்டம்
திரிபி னாக்க மாந்தற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே.

(இ-ள்.) ஆறன் - ஆறாம் வேற்றுமையினது, ஒருமைக்கு - வரு மொழியி னொருமைப் பொருண்மைக்கு, அதுவுமாதுவும் - முன் சொ ல்லப்பட்ட அதுவேயன்றி ஆதுவுமாம், பன்மைக்கு - வருமொழியின்

பன்மைப் பொருண்மைக்கு, அவ்வும் - அகரமும், உருபாம் - உருபுக ளாகும், பொருள் - அவற்றின் பொருள்களாவன, பண்பு-குணமும், உறுப்பு - அவயவமும், ஒன்றன் கூட்டம் - ஒருபொருட் கூட்டமும், பலவினீட்டம் - பலபொருட் கூட்டமும், திரிபினாக்கம் - ஒன்று திரிந் தோன்றுதலும், ஆம் தற்கிழமையும் - ஆகிய வைந்து தற்கிழமைப் பொருள்களையும், பிறிதின் கிழமையும் - அவையல்லாத பிறிதின் கிழ மைப்பொருள்களையும், பேணுதல் - உடையனவாக அவ்வுருபுகளை யேற்ற பெயர்ப்பொருள்கள் வேறுபட்ட இவ்விருவகைச் சம்பந்தப் பொருள்களுமாகும், எ - று.

தற்கிழமைப் பொருளாவது தன்னோ டொற்றுமையுடையது; பிறிதின் கிழமைப் பொருளாவது தன்னின்வேறாயது; தற்கிழமைப் பொருளிவை யெனவே இவையல்லாத பொருளு மிடமுங் காலமுமா கிய மூன்றும் பிறிதின்கிழமைப் பொருளென்றாகும். ஆகவே இப்ப டிப் பல வகையாலும் வருகின்ற சம்பந்தப்பொருளே இவ்வேற்றுமை யுருபுகளின் பொருளென்பதாயிற்று.

(உ - ம்.) 1. தற்கிழமை.

சாத்தனது கருமை	குணப்பண்புத்தற்கிழமை.
சாத்தனது வரவு	தொழிற்பண்புத்தற்கிழமை.
சாத்தனது கை புலியது வால்	உறுப்புத்தற்கிழமை.
மாந்தரது தொகுதி நெல்லது குப்பை	ஒன்றன்கூட்டத்தற்கிழமை.
படைகளது தொகுதி பறவைகளது கூட்டம்	பலவினீட்டத்தற்கிழமை.
நெல்லினது பொரி மஞ்சளது பொடி	திரிபினாக்கத்தற்கிழமை.

2. (பிறிதின்கிழமை.)

சாத்தனது பசு முருகனது வேல்	பொருட்பிறிதின்கிழமை.
சாத்தனது வீடு முருகனது குறிஞ்சி	இடப்பிறிதின்கிழமை.
சாத்தனது நாள் மாறனது வேனில்	காலப்பிறிதின்கிழமை.

இன்னுஞ்சிறுபான்மை எனதுயிர் என உடையதும் உடைமைப் பொருளும் வேறாகாத ஒற்றுமைப்பொருளில் வருதலுங் கொள்க.

ஆது உருபு - எனுதுகை, நினதுசெவி எனவும், அகரவுருபு என கைகள், நினகைகள் எனவும் வருதல் காண்க. அஃறிணை ஒருமை பன்மைகளுக்கு இவ்வுருபுகள் வருமெனவே, உயர்திணைப்பெயர்களு க்கு இவ்வுருபுகள் வரா என்பது பெற்றாம். உயர்திணைப்பெயர் வரும் போது சாத்தனுக்கு மகன் எனக் குவ்வுருபு வருமென் றறிக; சிறு பான்மை அரனது தோழன் என உயர்திணை யொருமைப் பொருண் மைக்கும், நினதடியாரோ டல்லால், எனது கைகள் என இருதிணை ப்பன்மைப் பொருண்மைக்கும் அது உருபும் வரும்.

இவ்வாறனுருபுகளி லொன்று நிற்றற்குரியவிடத்தே உடைய வென்கிறது சொல்லுருபாகவரும்.

உ-ம். என்னுடையவீடு, என்னுடையதம்பி. இவ்வீடு எனது, அத்தோட்டம் அவனது என வருவனவற்றில் எனது, அவனது என்பன துவ்விகுதியும் அகரச்சாரியையும் பெற்றுநின்ற குறிப்பு வினை முற்றுக்கள். எனது போயிற்று, அவனதை வாங்கினேன் என வரு வன வற்றில், எனது, அவனது என்பன மேற்கூறியபடி வந்தகுறிப்பு வினையாலணையும் பெயர்கள். இவற்றை இவ்வாறு கொள்ளாது ஆற னுருபெனக் கொள்ளற்க. (௨௫)

[ஏழாம்வேற்றுமை.]

301. ஏழ னுருபுகண் ணாதி யாகும்
பொருண்முத லாறு மோரிரு கிழமையின்
இடனாய் நிற்ற லிதன்பொரு ளென்ப.

(இ-ள்.) ஏழன் - ஏழாம் வேற்றுமையினுடைய, உருபு - உருபுக ளானவை, கண்ணாதியாகும் - முன்சொல்லப்பட்ட கண்ணே யன்றி அது முதலாகிய பிறவுமாம், இதன் - இவ்வுருபுகளுடைய, பொருள் - பொருளாவது, பொருள்முதல் - பொருளாதியாகிய, ஆறும் - ஆறும், ஓரிருகிழமையின் - ஆறாம்வேற்றுமைச் சூத்திரத்திலே சொல்லப் பட்ட இருகிழமைப் பொருள்களுக்கும், இடனாய் நிற்றல் - இடமாய் நிற்கிற வுருபேற்ற பெயர்ப் பொருள் வேறுபட்ட அவ்விடப் பொரு ளாம், என்ப - என்று சொல்லுவர் புலவர், எ - று.

(உதாரணம்.)

மணியின்கணிருக்கின்றதொளி ...	தற்கிழமை	பொருளிட மாயிற்று.
மனையின்கண் வாழ்கின்றதன்றில் ...	பிறிதின்கிழமை	

ஊரின்க ணிருக்கு மில்லம் ... ...தற்கிழமை ஆகாயத்தின்கட் பறக்கின்றது பருந்து ... பிறிதின்	}	இடமிடமா யிற்று.
நாளின்க ணுழிகையுள்ளது. ... . . தற்கிழமை வேனிற்கட்பாதிரி பூக்கும் ... பிறிதின்கிழமை	}	காலமிடமா யிற்று.
கையின்கணுள்ளது விரல் ... . . தற்கிழமை கையின்கண் விளங்குகின்றது கடகம். பிறிதின்கிழ	}	சினையிட மாயிற்று.
கறுப்பின்கண் மிக்கதழகு ... ... தற்கிழமை இளமையின்கண்வாய்த்ததுசெல்வம் ... பிறிதின்கிழ	}	குணமிடமா யிற்று.
ஆடற்கணுள்ளது சதி . . ... தற்கிழமை ஆடற்கட் பாடப்பட்டது பாட்டு ...பிறிதின்கிழமை	}	தொழிலிட மாயிற்று.

இடப்பொருளாவது - வினைமுதற்றொழிற்காயினுஞ் செயப்படு பொருட்காயினும் இடமாகிய பொருளாம். மணியின்கணிருக்கின்ற தொளி என்கிற விடத்தே ஒளி வினைமுதலாம், இருத்தல் அதன் வினையாம், மணி அத்தொழிலுக் கிடமாம். ஆதலால், அது இடப் பொருளா மென்றறிக. கழுவின்கட் கள்ளனை யேற்றினான் என்கிற விடத்தே, கள்ளன் செயப்படு பொருளாம், அவனுயிர்ப்பிரிவு அதன் பயனும், கழு அப்பயனுக் கிடமாம், ஆதலால் அது இடப்பொருளா மென்றறிக.

அவ்விடப்பொருள் ஊர்க்கணிருந்தான் எனத் தன்னிற் சிறிதிட மாவதும், தீய...கணுள்ளது சூடு எனத் தான் முழுது மிடமாவதும், கல்வியின்கணு...வைத்தான் என விடயமிடமாவதும், ஆக மூன்று வகைப்படும். இன்னு ம...வுருபுகள் "குறிலைந்தனுள் அ இ உ இம் மூன்றுஞ் சுட்டு" "அவர்களு...வன் வல்லவன்" எனக் கூட்டிப்பிரிக்கு மெல்லைப் பொருளிலும், "கல...யறிவில்லாதவனை விலங்கினுள் வைத்தெண்ணுவார்கள்" எனப் பிரித்து...கூட்டுங் கூட்டப் பொருளிலும், பால்கறக்கையில் வந்தான் என ஒரு...ழிற் காலத்தைக்குறிக்கும் பிறிது தொழிலிலும் சிறுபான்மை வரும். (சச)

[கண்முதலிய ஏழனுருபுகள்.]

302. கண்கால் கடையிடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலமிட மேல்கீழ் புடைமுதல்
பின்பா டளைதே முறைவழி யுழியுளி
உள்ளகம் புறமில் லிடப்பொரு ளுருபே.

(இ-ள்.) கண்...இல்-கண்முதலாக இல் ஈறாகச் சொல்லப்பட்ட இவ்விருபத்தெட்டும், இடப்பொருளுருபு-தம்மையேற்ற பெயர்ப்பொருளை இடப்பொருளாக வேற்றுமைசெய்கின்ற வுருபுகளாம், எ-று.

(கண்ணல்லாத வுருபுகளுக்கு உதாரணம்.)

ஊர்க்காணிவந்தபொதும்பர் ... ... கால்.
வேலின்கடைமணிபோற் றிண்ணியான் .. கடை.
நல்லாரிடைப் புக்கு ... ... இடை.
வலைத்தலை மானன்னநோக்கியர் ... ...
குரைகடல் வாயமுதென்கோ ... ... வாய்.
தேர்த்திசையிருந்தான் ... ... திசை.
அவர்வயிற் செல்லாய் ... ... வயின்.
கற்றார் முற்றோன்றாகழிவிரக்கம் ... ... முன்.
காட்டுச் சாரோடுங் குறுமுயால் ... ... சார்.
கைவலத்துள்ளது கொடுக்கும் ... ... வலம்.
இல்லிடப்பரத்தை ... ... இடம்.
தன்மேற்கடுவரை நீரிற்கடுத்து வரக்கண்டும் மேல்.
பிண்டிக்கண்ணார் நிழற்கீழ் ... ...
எயிற்புடை நின்றான் ... ... புடை.
சூரன்முதல்வந்த வுரன்மாய் மாலை ... முதல்.
காதலிபின் சென்ற தம்ம ... ... பின்.
நம்பாடணையாதநாள் ... ... பாடு.
கல்லளைச்சுனைநீர் ... ..
தோழிக்குரியவை கோடாய் தேத்து ... தேம்.
அவனுழைவந்தான் ... ... உழை.
நின்றதோர்நறவேங்கை நிழல்வழி யசைந்தன்ன வழி.
உறையுழியோலை போக ... ... உழி.
குயில்சேர்குளிர் காவுளிசேர்ந்துறையும் ... உளி.
முல்லையங் கவட்டுள்வாழும் ... .. உள்.
பயன்சாராப் பண்பில்சொல் பல்லாரகத்து அகம்.
உலகுமென்னுயிர்ப்புறத் திறுத்தமருண்மாலை புறம்.
நார் ... ... இல்.

இனி கண்-கால் முதலானவை இடவேறுபாடுகளை யுணர்த்தும் போது உருபாகாது பலவகைப்பட்ட இடப்பெயர்களாம். (உ-ம்.) கண்ணகன் ஞாலம்-அகத்திலிருந்தான்-வீட்டுப்புறத்திலிருந்தான்-மேலிடத்திருந்தான்-முன்னிருந்தான்-அயற்கண்ணிருந்தான்-இடை

ச்சுரம்-தென்றிசை என்பவைகளில் கண், அரம் முதலியவை பெயர்ச் சொல்லாதலறிக. (சரு)

[எட்டாம்வேற்றுமை.]

303. எட்ட னுருபே யெய்துபெய ரீற்றின்
திரிபு குன்றன் மிகுத லியல்பயல்
திரிபு மாம்பொருள் படர்க்கையோரைத்
தன்முக மாகத் தானழைப் பதுவே.

(இ-ள்.) எட்டன்-எட்டாம் வேற்றுமையினுடைய, உருபு - உருபுகளானவை, எய்துபெயரீற்றின் - விளிபடைந்த பெயரீற்றினுடைய, திரிபு-திரிதலும், குன்றல்-கெடுதலும், மிகுதல்-மிகுதலும், இயல்பு - இயல்பாதலும், அயற்றிரிபும் - ஈற்று அயலெழுத்துத்திரிதலும், ஆம்-ஆகும், பொருள் - அவற்றின் பொருளாவது, படர்க்கையோரை - படர்க்கைப்பெயர்ப்பொருளை, தன்முகமாக - தனக்கெதிர்முகமாக, அழைப்பது-அழைப்பதாலாகிய விளிக்கப்படுபொருளாம். எ - று.

விளித்தற்குக் கருவியான உருபை விளியென்றது காரிய வாகு பெயர். (சசு)

[விளியேற்கும் பெயர்கள்.]

304. இ உ ஊவோ டையோ னளரல
யவ்வீற் றுயர்திணை யோரவல் லிவற்றொடு
ணஃகா னுவீ றாகும் பொதுப்பெயர்
ஞநவொழி யனைத்தீற் றஃறிணை விளிப்பன.

(இ-ள்.) இ உ ஊவோ டையோ னளரலய - இகரமும் உகரமும் ஊகாரமும் ஐகாரமும் ஓகாரமும் என்கிற உயிர்களும் ன ள ர ல ய என்கிற மெய்களும் ஆகிய பத்தெழுத்துக்களையும், ஈறு-இறுதியிலுலுடைய, உயர்திணைப்பெயர் - (உயர்திணைப்பெயர்களும்) ஓ ர அல் - ஓகாரவுயிரும் ரகரமெய்யும் ஒழிந்த, இவற்றொடு - இவ்வெழுத்துக்களுடனே, ணஃகான் ஆ-ணகரமும் ஆவும் ஆகிய பத்தேழுத்துகளும், ஈறாகும் - இறுதியாகிய, பொதுப்பெயர் - பொதுப்பெயர்களும், ஞநவொழி - ஞகரநகரங்களும் (ஈறாகாத எகரமும்) ஒழிந்த, அனைத்து - இருபத்தொரு எழுத்துக்களையும், ஈறு - ஈற்றிலுடைய, அஃறிணைப் (பெயர்) - அஃறிணைப்பெயர்களும், விளிப்பன - அழைக்கப்படுவன.

[பொதுவாகிய விளியுருபு.]

305. இம்முப் பெயர்க்கண் ணியல்பு மேயும்
இகர நீட்சியு முருபா மன்னே

(இ - ள்.) இம்முப்பெயர்க்கண் - முன் விளிக்கப்படுமென்ற மூவகைப்பெயர்களிடத்தும், இயல்பும்-இயல்பாதலும், ஏயும்-ஏகார மிகுதலும், இகரநீட்சியும்-இகரம் ஈகாரமாதலும், உருபாம் மன்-பெரும்பாலும் விளியுருபுகளாகும். எ - று.

(வரலாறு) முனிகூறாய், வேந்துகூறாய், ஆடூஉக்கூறாய், விடலைகூறாய், கோக்கூறாய், கோன்கூறாய், வேள்கூறாய், மாந்தர்கூறீர், தோன்றல்கூறாய், சேய்கூறாய் எனவும்; முனியேகூறாய், வேந்தேகூறாய் எனவும்; நம்பீகூறாய் எனவும் உயர்திணைப்பெயர்களிலே மூன்றுருபுகளும் வந்தன.

பிதாக்கூறாய், ஆண்கூறாய் எனவும், பிதாவேகூறாய், ஆணேகூறாய் எனவும், சாத்திகூறாய் எனவும் பொதுப்பெயர்களிலே மூன்றுருபுகளும் வந்தன.

விளக்கொடியை, புல்வாய்கொடியை எனவும், விளவேகொடியை, புல்வாயேகொடியை எனவும், மந்திகொடியை எனவும் அஃறிணைப்பெயர்களிலே மூன்றுருபுகளும் வந்தன.

காட்டாதொழிந்த பெயர்களும் இப்படியேவரும். பெரும்பாலுமென்றதனால் இவ்வுருபுகள் சிலவற்றிற்குப் பொருந்தாமை யுளவேற்கொள்க. (உஅ)

{ ஐகாரவீற்றுப் பொதுப்பெயர் உயர்திணைப்பெயர் அஃறிணைப் பொதுப்பெயர்களுக்குச் சிறப்புவிதிகள். }

306. ஐயிறு பொதுப்பெயர்க் காயு மாவும்
உருபா மல்லவற் றாயு மாகும்.

(இ-ள்.) ஐயிறுபொதுப்பெயர்க்கு - பொதுவிதியால் இயல்பும் ஏகாரமிகுதலுமன்றி ஐகாரவீற்றுப் பொதுப்பெயர்க்கு, ஆயும் ஆவும்-ஐகாரம் ஆய் ஆதலும் ஆ ஆதலும், உருபு ஆம்-உருபாகும், அல்லவற்று-உயர்திணை யஃறிணைப்பெயர்களுக்கு, ஆயும்-அவ்விரண்டுமெல்லாமல் ஐகாரம் ஆய் ஆதலும், உருபாகும் - விளியுருபாகும். எ-று.

(வரலாறு.) அன்னை-அன்னாய், அன்னா எனப் பொதுப்பெயர்க்கு ஆயும் ஆவும் வந்தன. விடலை-விடலாய் எனவும், நாரை-நாராய் எனவும் உயர்திணைப்பெயர்க்கும் அஃறிணைப்பெயர்க்கும் ஆய்வந்தது.

அன்னை யென்னும் பொதுப்பெயரினீற்றைகாரம் ஏகாரமாய்த் திரிந்து வருதலுமுண்டு. உ-ம். "அன்னே யுன்னையல்லா லினியாரை நினைக்கேனே." (௯௧)

[னகரவீற்று உயர்திணைப்பெயர்களின் விளியுருபு.]

307. ஒருசார் னவ்வீற் றுயர்திணைப் பெயர்க்கண்
அளபீ றழிவய னீட்சி யதனோ
டீறு போத லவற்றோ டோவுறல்
ஈறழிந் தோவுற லிறுதியவ் வாதல்
அதனோ டயறிரிந் தேயுற லீறழிந்
தயலே யாதலும் விளியுரு பாகும்.

(இ-ள்.) னவ்வீற்றுயர்திணைப்பெயர்க்கண் - பொதுவிதியன்றி னகரமெய்யீற்று உயர்திணைப் பெயர்களுள், ஒருசாரளபு - சில அளபெடுத்தலும், (ஒருசா) ரீறழிவு-சிலவீறு கெடுதலும், (ஒருசா) ரயனீட்சி-சிலவீற்றய னீளுதலும், (ஒருசா) ரதனோடீறுபோதல் - சில ஈற்றயனீண்டு ஈறுகெடுதலும், (ஒருசா) ரவற்றோடோவுறல் - சில ஈறுகெட்டு ஈற்றயல் நீண்டு ஓகாரமிகுதலும், (ஒருசா) ரீறழிந்தோவுறல்-சில ஈறுகெட்டு ஓகாரமிகுதலும், (ஒருசா) ரிறுதியவ்வாதல் - சில இறுதி னகரமெய் யகரமெய்யாதலும், (ஒருசா) ரதனோடய றிரிந்தேயுறல் - சில ஈற்றுனகரமெய் யக மெய்யாகத்திரிந்து அயலில் ஆகாரம் ஓகாரமாய் ஏகாரமிகுதலும், (ஒருசா) ரீறழிந் தயலேயாதலும் - சில ஈறுகெட்டு அயலில் அகரம் ஏகாரமாதலும், விளியுருபாகும்-விளி உருபுகளாகும். எ - று.

(வரலாறு.) அம்பர் கிழான் - அம்பர்கிழாஅன் என அளபாயிற்று. புலவன்-புலவ என ஈறழிந்தது. பெருமன்-பெருமான் என அயனீண்டது. மன்னன்-மன்னா என அயனீண்டு ஈறுகெட்டது. ஐயன் - ஐயாவோ என அயனீண்டு ஈறுகெட்டு ஓகாரமிக்கது. திரையன் - திரையவோ என ஈறுகெட்டு ஓகாரம்மிக்கது. வாயிலான் - வாயிலாய் என இறுதியவ்வாயிற்று. வாயிலான் - வாயிலோயே என இறுதியவ்வாய் ஈற்றயல் ஆகாரம் ஓகாரமாய் ஏகாரமிக்கது. ஐயன் - ஐயே என ஈறழிந்து அயல் அகரம் ஏகாரமாயிற்று.

இவ்வொருசாரென்கிறதை விளியதிகாரமுழுதுங் கூட்டுக (௯0)

[ளகரவீற்று உயர்திணைப்பெயர்களின் விளியுருபு.]

308. ளஃகா னுயர்பெயர்க் களபீ றழிவயல்
நீட்சி யிறுதி யவ்வொற் றாதல்
அயலி லகரமே யாதலும் விளித்தனு.

(இ-ள்.) ளஃகானுயர் பெயர்க்கு - பொது விதியன்றி ளகரமெய்யீற்றுயர்திணைப் பெயர்களுள், (ஒருசா) ரளபு - சில அளபெடுத்தலும், (ஒருசா) ரீறழிவு - சில ஈறுகெடுதலும், (ஒருசா) ரயனீட்சி - சில ஈற்றயனீளுதலும், (ஒருசா) ரிறுதி யவ்வொற்றாதல் - சில இறுதி ளவ்வொற்று யவ்வொற்றாதலும், (ஒருசா) ரயலி லகரமேயாதலும் - சில ஈற்றயல் அகரம் ஏகாரமாதலும், விளித்தனு-விளியுருபுகளாகும்.

(வரலாறு) வேள்-வேஎள், அளபெடுத்தது. எல்லாள் - எல்லா, ஈறுகெட்டது. மக்கள் - மக்காள் ஈற்றயனீண்டது. குழையாள் - குழையாய், ளவ்வொற்று யவ்வொற்றாயிற்று. அடிகள் - அடியேன், ஈற்றயல் அகரம் ஏகாரமாயிற்று. (ருக)

[ரகரவீற்றுயர்திணைப்பெயர்களின் விளிபுருபு.]

309. ரவ்வீற் றுயர்பெயர்க் களபெழ லீற்றயல்
அகரம் இ ஈ யாத லாண்டையா
ஈயாத லதனோ டேயுற லீற்றே
மிக்கயல் யாக்கெட் டதனய னீடல்
ஈற்றி னீருற லிவையுமீண் டுருபே.

(இ-ள்.) ரவ்வீற் றுயர் பெயர்க்கு - (பொதுவிதியன்றி) ரகரமெய்யீற்று உயர்திணைப்பெயர்களுள். (ஒருசா) ரளபெழல் சில அளபெடுத்தலும், (ஒருசா) ரீற்றயலகரம் இ ஈ யாதல் - சில ஈற்றயல் அகரமானது இகரமாதலும் ஈகாரமாதலும், (ஒருசா) ராண்டையா ஈயாதல்-சில அவ்வீற்றயல் ஆகாரம் ஈகாரமாதலும், (ஒருசா) ரதனோடேயுறல் - சில அதனோடு ஏகாரம் ஏற்றலும், (ஒருசா) ரீற்றே மிக்கயல் யாக்கெட்டதனய னீடல் - சில ஈற்றில் ஏகாரமிக்கு அயலில் யாக்கெட்டு அதனயல் இகரம் ஈகாரமாதலும், (ஒருசா) ரீற்றி னீருறல்- சில ஈற்றில் ஈர் ஆதலும், இவையும் - ஆகிய இவையும், ஈண்டு - இவ்விடத்து உருபு - விளியுருபுகளாகும். எ - று.

(வரலாறு.) சிறார் - சிறாஅர், அளபெடுத்தது. தெவ்வர் - தெவ்விர், ஈற்றயல் அகரம் இகரமாயிற்று. நாய்கர் - நாய்கீர், ஈற்றயல் அகரம் ஈகாரமாயிற்று. சான்றார் - சான்றீர், ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாயிற்று. கணியார் - கணியீரே, ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாய் ஏகாரமிக்கது. நம்பியார் - நம்பீரே, ஈற்றில் ஏகாரமிக்கு அயல்யாக்கெட்டு அதனயல் இகரம் ஈகாரமாயிற்று. எமர் - எமரீர்-ஈர் ஏற்றது.

ஈண்டென்றமிகையால் கடலாரே - கடலீரே, சாத்தியாரே-சாத்தியீரே, எ - ம், அஃறிணைப்பெயர் பொதுப்பெயர்களைச் சிறப்பித்து

ரவ்வீற்று உயர்திணைப் பெயர்போலக் கூறினும் இவ்வுருபேற்றல் கொள்க. (ருஉ)

[லகார யகரவீற்று உயர்திணைப் பெயர்களின் விளியுருபு.]

310. லகரவீற் றுயர்பெயர்க் களபய னீட்சியும்
யகார வீற்றிற் களபுமா முருபே.

(இ - ள்.) லகாரவீற்றுயர் பெயர்க்கு - பொதுவிதி யன்றி லகர மெய்யீற்று உயர்திணைப் பெயர்க்கு, (ஒருசா) ரளபு - சில அளபெடுத்தலும், (ஒருசா) ரயனீட்சியும் - சில ஈற்றயனீளுதலும், யகாரவீற்றுயர்பெயர்க்கு - யகரமெய்யீற்று உயர்திணைப்பெயர்க்கு, அளபும் - அளபெடுத்தலும், உருபாம்-விளியுருபுகளாகும். எ - று.

(வரலாறு.) மால்-மாஅல், எ-ம், தோன்றல்-தோன்றால், எ-ம், சேய்-சேஎய், எ-ம், அம்மூன்றுருபுகளும் வந்தன. (ருந)

[னகரவீற்று அஃறிணைப்பெயர் பொதுப்பெயர்களின்விளியுருபு.]

311. னவ்வீற் றுயர்திணை யல்லிரு பெயர்க்கண்
இறுதி யழிவத னோடய னீட்சி.

(இ-ள்.) னவ்வீற்றுயர்திணை அல்லிருபெயர்க்கண் - பொதுவிதியன்றி னகர மெய்யீற்று அஃறிணைப் பெயர் பொதுப்பெயர்களிடத்து, (ஒருசா) ரிறுதி யழிவு - சில ஈறுகெடுதலும், (ஒருசா) ரதனோடயனீட்சி-சில ஈறுகெடுதலுடனே ஈற்றயனீளுதலும் விளியுருபுகளாம். எ - று.

(வரலாறு.) அலவன்-அலவ, எ - ம்; கலுழன்-கலுழா, எ - ம்; சாத்தன்-சாத்த, எ-ம்; கொற்றன்-கொற்றா, எ-ம், முறையே அஃறிணைப் பெயரிலும் பொதுப்பெயரிலும் அவ்விரண்டும் வந்தன. (ருச)

[லகரளகரவீற்று அஃறிணைப்பெயர் பொதுப்பெயர்களின்விளியுருபு.]

312. லளவீற் றஃறிணைப் பெயர்பொதுப் பெயர்க்கண்
ஈற்றய னீட்சியு முருபா கும்மே.

(இ-ள்.) லளவீற் றஃறிணைப் பெயர் பொதுப் பெயர்க்கண் - லகர ளகர மெய்யீற்று அஃறிணைப்பெயர்க்கும் பொதுப்பெயர்க்கும், ஈற்றயனீட்சியும்-பொதுவிதியன்றி ஈற்றயலெழுத்து நீளுதலும், உருபாகும்-விளியுருபாகும். எ-று.

(வரலாறு.) முயல்-முயால், கிளிகள்-கிளிகாள், எ-ம்; தூங்கல் - தூங்கால், மக்கள்-மக்காள், எ-ம்; வரும்.

தூங்கல் என்பது அஃறிணை உயர்திணைகளாகிய யானையையும் சோம்பலுடையவனையும், மக்கள் என்பது இருதிணைப் பன்மையையும் உணர்த்தலால் இவை பொதுப் பெயரென்க. (ருரு)

[விளியுருபுகளுக்குப் புறனடை.]

313. அண்மையி னியல்புமீ றழிவுஞ் சேய்மையின்
அளபும் புலம்பி னோவு மாகும்.

(இ-ள்.) (முன்சொல்லப்பட்ட விளியுருபுகளுள்) அண்மையின்-சமீபவிளிகளுக்கு, இயல்பு மீறழிவும்-இயல்பாதலும் ஈறுகெடுதலும், சேய்மையின்-தூரவிளிகளுக்கு, அளபும்-அளபெடுத்தலும், புலம்பின்-புலம்பல்விளிகளுக்கு, ஒவும்-ஒகாரமிகுதலும், ஆகும்-வரும்.

எனவே மற்றை விளிவேற்றுமை யுருபுகள் இம்மூன்றிடங்களிலுங் கலந்து வருமென்பது பெற்றாம். (ருசு)

[விளி ஏலாதபெயர்கள்.]

314. நுவ்வொடு வினாச்சுட் டுற்ற னளர
வைதுத் தாந்தா னின்னன விளியா.

(இ-ள்.) நுவ்வொடு-நுவ்வுடனே, வினா - மூன்றுமுதல் வினாவையும், சுட்டு-மூன்றுசுட்டையும், உற்ற - முறையே பொருந்திய, ன ள ர - ன, ள, ர மெய்யீற்று உயர்திணைப்பெயர்களும், வை து - வை, து என்கிற இரண்டு ஈற்று அஃறிணைப்பெயர்களும், தாம் தான் இவ்விரண்டு பொதுப்பெயர்களும், இன்னன - இவை போல்கின்ற பிறவும், விளியா-விளிக்கப்படுவன அல்ல. எ-று.

வை, து என்கிற இரண்டும் நுவ்வொடு பொருந்தாதென்பார் ஒடுக்கொடுத்துப் பிரித்தார். தாம் என்பதை இவ்விடத்தும் கூறியது தொடர்பு தோன்றற்கு.

நுமன், நுமள், நுமர் எ-ம்; எவன், எவள், எவர், எது, எவை, யாவன், யாவள், யாவர், யாது, யாவை, ஏவன், ஏவள், ஏவர், ஏது, ஏவை எ-ம்; அவன், அவள், அவர், அது, அவை; இவன், இவள், இவர், இது, இவை; உவன், உவள், உவர், உது, உவை, எ-ம், தான் எ-ம்; தாம் எ-ம் வருகின்ற இப்பெயர்கள் விளியேலாவாம்.

இன்னனவென்றதனால், பிறன், மற்றையான், முதலானவையுங் கொள்க. (ருஎ)

{ முதற்பெயர் சினைப்பெயர்களில் ஐ து கண் என்னும் மூன்றுருபுகளும் வரும் விதம். }

315. முதலை யையுறிற் சினையைக் கண்ணுறும்
அதுமுதற் காயிற் சினைக்கை யாகும்.

(இ-ள்.) முதலை - முதலினை, ஐயுறின்-ஐயுருபுபொருந்தினால், சினையை - சினையினை, கண் - கண்ணுருபு, உறும்-பொருந்தும், அது-அது உருபு, முதற்கு - முதலுக்கு, ஆயின் - ஆரின், சினைக்கு - சினையினுக்கு, ஐ - ஐயுருபு, ஆகும் - வரும். எ - று.

இன்னும் இரட்டுறமொழிதல் என்கிற உத்தியால் - அது முதற் காயிற் சினைக்கையாகும் என்கிற வாக்கியத்தில், அது என்பதற்கு அக் கண்ணுருபு எனவும் பொருளுரைத்துக் கொள்க.

(வரலாறு.) யானையைக் காலின்கண் வெட்டினான், யானையது காலைவெட்டினான், யானையின்கட் காலைவெட்டினான் எனவரும். எனவே முதல் சினையிரண்டினும் ஐயுருபுவருவது சிறப் பன்றென்ப தாயிற்று. (ருஅ)

[ஐயுருபு முதல்சினை இரண்டினும் வராமைக்குக்காரணம்.]

316. முதலிவை சினையிவை யெனவே றுளவில
உரைப்போர் குறிப்பின வற்றே பிண்டமும்.

(இ-ள்.) முதலிவை சினையிவையென - (கடங்களிவை படங் களிவை யென்கிறதுபோல) முதற்பொருள்களிவை சினைப்பொருள் களிவை என்கிறதற்கு, வேறுள இல-இரண்டாகவேறுள்ளன இல வாம், உரைப்போர்-ஒருபொருளையே இரண்டாகப் பகுத்துச்சொல் வோரது, குறிப்பின - குறிப்பின் மாத்திரையனவேயாம், பிண்ட மும் - பிண்டப்பொருளும், அற்று - அத்தன்மைத்தாம். எ-று.

யானையைக் குறித்தபோது யானையுண்டாக அதனுடைய கை கால் கொம்புமுதலியவை வேறில்லையாம், அவ்வவயவத்தைக் குறித்த போது அவையுண்டாக யானை வேறில்லையாம், ஆதலால் இப்படிச் சொல்லப்பட்டன. இனிப் பிண்டப்பொருள் - நெல்லைப்பொலியின் கண் வாரினான், நெல்லினது பொலியை வாரினான் எனவரும். பிண் டப்பொருளாகிய பொலிக்குப்பையும், பிண்டித்தபொருளாகிய நெல் லும் வேறாகாமையால் அவ்விரண்டனிடத்தும் ஐயுருபு வருவது சிறப் பன்றெனவறிக. (ருகூ)

[உருபுமயக்கம்.]

317. யாத னுருபிற் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்.

(இ-ள்.) யாதனுருபின்-மற்றொருவேற்றுமை யுருபால், கூறிற் றாயினும்-ஒரு வேற்றுமைப்பொருள் சொல்லப்பட்டதாயினும், பொருள்செல்மருங்கின் - அப்பொருள்சென்ற வழியே, வேற்றுமை - அவ்வுருபு, சாரும் - சேரும். எ-று.

எனவே வேற்றுமை யுருபுமயங்கிவர்தால் அப்பொருளுக்கேற்கத் திரித்துக்கொள்க வென்றதாயிற்று.

(வரலாறு) "நாகுவேயொடுநக்கு வீங்குதோள்" என்கிறவிடத்தே வேய் உடனிகழ்ச்சிப் பொருளாகாமல் செயப்படுபொருளாய் நிற்றலால் ஒடு உருபை ஐயுருபாகத் திரித்துக்கொள்க.

"மணற்கீன்ற நாணற்கிழங்கின் முளை" என்கிறவிடத்தே மணல் கோடற்பொருளாகாது இடப்பொருளாய் நிற்கையால், குவவுருபைக் கண்ணுருபாகத்திரித்துக்கொள்க.

இனி உரையிற் கோடலென்கிற வுத்தியால் ஒரு வேற்றுமைப் பொருள் மற்றொரு வேற்றுமையுருபோடு தகுதியாய் வருதலும் உண்டெனக்கொள்க. இது பொருண்மயக்கம் எனப்படும்.

1. வினைமுதற்பொருள் எழுவாயுருபு, மூன்றனுருபுகளோடன்றி, சிறுபான்மை நான்கனுருபு ஆறனுருபுகளோடும் வரும்.

சூத்திரம். ஒன்று மூன்று நான்காறெனு முருபொடு
வருமே வினைமுதலென வகுத்தனரே.

2. செயப்படுபொருள் இரண்டனுருபோடன்றி, சிறுபான்மை எழுவாய் வேற்றுமை யுருபுமுதல் ஏழாம்வேற்றுமை யுருபீறாகிய உருபுகள் எல்லாவற்றோடும் வரும்.

சூத்திரம். "எல்லாவுருபொடுஞ் செயப்படு பொருளாம்."

உ-ம். சோறடப்பட்டது - எழுவாய். அரிசியாற்சோறாக்கினன் - மூன்றனுருபு. அவட்குக் கொள்ளுமில் வணிகலம் - நான்கனுருபு. பழியினஞ்சும் - ஐந்தனுருபு. நூலது குற்றங்கூறினன் - ஆறனுருபு. தூணின்கட் சார்ந்தான்-எழனுருபு.

3. கருவிப்பொருள், மூன்றனுருபு ஐந்தனுருபுகளோ டன்றி, சிறுபான்மை எழுவாயுருபு நான்கனுருபு ஆற னுருபுகளோடும் வரும்.

சூத்திரம். ஒன்று மூன்று நான்கைந்தா றுருபொடு
கருவி வருமெனக் கருதினர் பெரியோர்.

உ-ம். கண்காணும் - எழுவாய். கண்ணிற்குக் காணலாம் - நான்கனுருபு. கண்ணதுகாட்சி-ஆறனுருபு.

4. கோடற்பொருள் நான்கனுருபோடன்றிச் சிறுபான்மை எட்டாம் வேற்றுமை யொழிந்த எல்லாவுருபுகளோடும் வரும்.

சூத்திரம். எல்லாவுருபொடுங் கொள்வோனெழுமே.

உ-ம். இரப்பவ ரென்பெறினுங் கொள்வர்—எழுவாய். செய்யவ டவ்வையைக்காட்டிவிடும்-இரண்டனுருபு. நாகராற்பலி - மூன்றனுருபு. நாகரினன்பு செய்தான் ஐந்தனுருபு. நாகரது பலி-ஆறனுருபு நாகர்க ணன்புசெய்தான் - ஏழனுருபு.

5. நீக்கப்பொருள் ஐந்தனுருபோடன்றி, இரண்டனுருபோடும நான்கனுருபோடும் வரும்.

சூத்திரம். இரண்டு நான்கைந்தொடு மெழுமேநீக்கம்.

உ-ம். மதுரையை நீங்கினான் - இரண்டனுருபு. மதுரைக்கு வடக்குச் சிதம்பரம் - நான்கனுருபு.

6. சம்பந்தப்பொருள் ஆறனுருபோடன்றிச் சிறுபான்மை நான்கனுருபு ஐந்தனுருபு ஏழனுருபுகளோடும் வரும்.

சூத்திரம். நான்கைந்தாறே ழொடுசூறை நடக்கும்.

உ-ம். சாத்தனுக்கு மகன் - நான்கனுருபு. மரத்தினீங்கின கொம்பு-ஐந்தனுருபு. உயிரின்கணுணர்வு-ஏழனுருபு.

7. இடப்பொருள் ஏழனுருபோடன்றிச் சிறுபான்மை எழுவாயுருபு இரண்டனுருபு நான்கனுருபுகளோடும் வரும்.

சூத்திரம். ஒன்றிரண்டு நான்கே ழொடிடமெழும்.

உ-ம். தூண் போதிகை தொட்டது - எழுவாய். தூணைச்சார்ந்தான்-இரண்டனுருபு. இன்றைக்கு, நாளைக்கு, பகலைக்கு, அந்திக்கு சந்திக்கு, மாலைக்கு, காலைக்கு, ஊர்க்கு-வீட்டிற்கு-நான்கனுருபு.

[சில வேற்றுமை யுருபுகள் செய்யுளில் திரிந்துவருதல்.]

318. ஐயான்குச் செய்யுட் கவ்வு மாகும்
ஆகா வஃறிணைக் கானல் லாதன.

(இ - ள்.) ஐ யான் கு - ஐயும் ஆனும் குவ்வும் ஆகிய மூன்றுருபு களும், செய்யுட்கு - செய்யுளிடத்து, அவ்வுமாகும் - ஒரோவழி அகர மாகத் திரிந்து வரவும் பெறும், அஃறிணைக்கு - அஃறிணையிடத்து, ஆனல்லாதன - ஆனல்லாத ஐயும் குவ்வும், ஆகா - அகரமாகத் திரி யாவாம், எ - று.

எனவே உயர்திணையிலே மூன்று உருபுந் திரியுமென்றதாயிற்று.

[வ-று.] காவலோனை என்பது - காவலோனக் களிறஞ்சும்மே - எ-ம். புலவரான் என்பது - புலவரான எனவும் - ஆசிரியற்கு என் பது-கடிநிலையின்றேயாசிரியற்க - எனவும் - உயர்திணையிலே மூன்று உருபுகளுந்திரிந்தன. புள்ளினான் என்பது-புள்ளினான என ஆனுருபு ஒன்றும் அஃறிணையிலே திரிந்துவந்தது. அவ்வுமாமென்னும் இழிவு சிறப்பும்மையால் இப்படித்திரிதல் நியமம் அன்றென்க. (நியமம் - நியதி - நிச்சயம் என்பன ஒருபொருள்.) திரியுமென்றதனாலே-ஆனுங் குவ்வுந் திரிந்தபோது, முன்னின்ற ஆனுங் குவ்வுஞ் சாரியை எனப் படும். அல்லாவிடின் - ஐயுருபு அக ரமாகத்திரியவும் ஆனுருபுங் குவ் வுருபும் அகரத்தினைச்சார்ந்து நிற்கவும்பெறுமெனப்பொருள்கொள்க.

[எட்டு வேற்றுமைக்கும் முடிக்குஞ்சொல்.]

319. எல்லை யின்னு மதுவும் பெயர்கொளும்
அல்ல வினைகொளு நான்கே ழிருமையும்
புல்லும் பெரும்பாலு மென்மனார் புலவர்.

(இ - ள்.) எல்லை இன்னும் - எல்லைப் பொருட்டாகிய ஐந்தாம் வேற்றுமையும், அதுவும் - ஆறாம் வேற்றுமையும், பெயர் - பெயரை, கொள்ளும் - கொண்டுமுடியும், அல்ல - ஒழிந்த எழுவாய் முதலிய வேற்றுமைகளெல்லாம், வினை - வினையை, கொள்ளும் - கொண்டு முடியும், நான்கு ஏழ் - நான்காம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமை யும், இருமையும் - வினையையேயன்றிப் பெயரையும், புல்லும் - கொண்டு முடியும், பெரும்பாலும் - மிகவும், என்மனார்-என்று சொல் வர் புலவர், எ - று.

பெரும்பாலுமென்றதனால் வினைகொள்ளுதற் குரியவை சிறு பான்மை தொழிற்பெயரையும் வினையாலணையும் பெயரையும் கொ ண்டு முடிதலும், அவற்றுள் எழுவாய் வேற்றுமை வினைகொண்டு முடிதலேயன்றிச் சிறுபான்மை பெயரைக் கொண்டு முடிதலும் கொள்க.

(வரலாறு.) கருவூரின் கிழக்கு, சாத்தனது கை என எல்லை இன்னும் அதுவும் பெயர்கொண்டன.

சாத்தன் வந்தான், குடத்தை வனைந்தான், வாளால் வெட்டினன், சாத்தனுக்குக் கொடுத்தான், நோயினீங்கினன், அவையின்கணிருந்தான், கொற்றா கொள் என அல்லவை தெரிநிலை வினை கொண்டன.

சாத்தன் நல்லன், பொன்னை யுடையான், வாளால் வலியன், சாத்தனுக்கு நல்லன், நோயிற்கொடியன், அவையின்கட் பெரியன், சாத்தா கொடியை என அல்லவை குறிப்பு வினைகொண்டன.

பிணிக்குமருந்து, மணியின்கணொளி என நான்காம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் வினையேயன்றிப் பெயருங்கொண்டன.

சாத்தன் வருதல், குடத்தை வனைந்தவன் என வினைகொள்ளுதற்குரியவை தொழிற்பெயரும், வினையாலணையும் பெயருங் கொண்டன. மரம் ஒன்று, சாத்தன் அவன், சாத்தன் யாவன் என வினைகொள்ளுதற்குரிய எழுவாய் வேற்றுமை எண்ணுப்பெயரும், சுட்டுப்பெயரும் வினாப்பெயரும் கொண்டது. (௬௨)

பெயரியல் முற்றிற்று.

இரண்டாவது
வினையியல்.

[தெரிநிலை வினையின் பொதுவிலக்கணம்.]

320. செய்பவன் கருவி நிலஞ்செயல் காலம்
செய்பொரு ளாறுந் தருவது வினையே.

(இ - ள்.) செய்பவன் - கருத்தாவும், கருவி - காரணமும், நிலம் - இடமும், செயல்-செயலும், காலம்-காலமும், செய்பொருள் - செயப்படுபொருளும் ஆகிய, ஆறும் - அறுவகைப் பொருளையும், தருவது கொடுப்பது, வினை - தெரிநிலை வினைச்சொல்லாம், எ - று.

நட வா முதலிய வெல்லாந் தழுவுதற்குச் செய் என்றார். செய்பவனென ஆண்பாலிலே சொன்னாரேனும், "ஒருமொழி யொழிதன் னினங்கொளற்குரித்தே" என்பதனால் ஐம்பாலுங் கொள்க.

(வரலாறு.) வனைந்தான் என்கிறவிடத்தே, குயவனாகிய செய்பவனும், மண்ணாகிய முதற் காரணமும், தண்ட சக்கர முதலாகிய துணைக்காரணங்களும், வனைந்த இடமும், வனைதற் செயலும், இறந்த காலமும், குடமுதலிய செயப்படுபொருளுந் தோன்றுதல் காண்க.

ஆறும் என்ற உம்மையை உயர்வு சிறப்பும்மையாக்கி, இழிந்தன சிலவுள, அவை வேண்டுமேற் கொள்க வெனப் பொருளுரைத்து, இன்னதற்கு, இது பயன் என்பவைகளுங் கூட்டிக்கொள்க.

(உ-ம்.) பிறர்க்கு வனைந்தான், பொருள் கருதிவனைந்தான்.

இவவிரண்டும் கருவியில் அடங்கவும் பெறுமாதலால் இழிந்தன வாயின.

இன்னும் ஆறுந் தருவது வினை என்றதற்கு "முற்றும்மை யொரோ வழி யெச்சமுமாகும்" என்கிற சூத்திரத்தால் இத்தொகையிற் சில குறைந்துவரவும் பெறுமெனப் பொருளுரைத்துக்கொள்க.

கொடியாடிற்று - என்கிற விடத்தே, ஆடுதல் வினைக்குச் செயப்படுபொருள் குறைந்து வருதல்காண்க.

முற்று வினைகளிலே பகுதியாற் செயலும், விகுதியாற் செய்பவனும், இடைநிலை முதலியவற்றாற் காலமும், பெயரெச்ச வினையெச்சங்களிலே இம்முறையே செயலுங் காலமும் வெளிப்படையாகத் தோன்றுதலால், மற்றவை குறிப்பாற் றோன்றுமெனக்கொள்க. (க)

[குறிப்பு வினையின் பொதுவிலக்கணம்.]

321. பொருண்முத லாறினுந் தோற்றிமுன் றாறனுள்
வினைமுதன் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே.

(இ - ள்.) பொருண்முதலாறினும் - பொருளாதியாறுங் காரணமாக, தோற்றி - அவ்விடத்தே பிறந்து, முன்றாறனுள் - முன் சொல்லப்பட்ட செய்பவன் முதலாகிய ஆறனுள், வினைமுதல் மாத்திரை - கருத்தாவொன்றையே, விளக்கல் - விளக்குதல், வினைக்குறிப்பு - வினைக்குறிப்புச் சொல்லி னிலக்கணமாம், எ - று.

பொருண்முதலாறும் பதவியலிலே ஐந்தாவது சூத்திரத்திலே சொல்லப்பட்டன.

(உதாரணம்.)

குழையினன் ... பொன்னினன்	பொருள்.	குறுந்தாளன் ... செங்கண்ணன் ...	சினை.
அகத்தினன் .. புறத்தினன் ...	இடம்.	கரியன் .. நல்லன் ...	குணம்.
ஆதிரையான் .. ஓணத்தான் ...	காலம்.	கடுநடையன் ... இன்சொல்லன் ...	தொழில்.

இவற்றுள் விகுதியாற் செய்பவன் விளங்கிற்று. மற்றவைகளை குறிப்பாக உண்டெனக்கொள்க. ஒன்றைக் குழையினன், ஒன்றாற் குழையினன் என வராமையால், குழையினன் என்பதற்குக் கருவியுஞ் செயப்படு பொருளு மில்லை யென்றும், ஒன்றை உடையன், ஒன்றாலுடையன் என வருதலால் உடையன் என்பதற்கு ஆறும் உண்டெனவுங் கொள்க.

இவை பொருளாதியாறு பெயர்களினடியாகப் பிறந்தாலும் ஒரு பொருளைக்காட்டும் பெயராகாமல், குழையையுடையனாயினான், ஆகின்றான், ஆவான் எ-ம், அகத்தின்கணிருந்தான், இருக்கின்றான், இருப்பான் எனவும் வருதலால் குறிப்பு வினை ஆயின. (௨)

[வினைச்சொற்களின் வகை.]

322. அவைதாம், முற்றும் பெயர்வினை யெச்சமு மாகி
ஒன்றற் குரியவும் பொதுவு மாகும்.

(இ-ள்.) அவை தாம் - முன்னிரண்டு சூத்திரங்களாலுந் தெரிநிலையாயும் குறிப்பாயும் வருமென்ற வினைச்சொற்கள், முற்றும் - முற்றுவினைச் சொற்களும், பெய (ரெச்சமும்) - பெயரெச்ச வினைச் சொற்களும், (வினை) யெச்சமும் - வினையெச்ச வினைச்சொற்களும்,

ஆகி - ஆகி, ஒன்றற்குரியவும்-திணைபா'லிடங்களுள் ஒன்றற்குச் சிறப்பாய் வருவனவும், பொதுவும் - பலவற்றிற்குப் பொதுமையினிற்பனவும், ஆகும் - ஆகும், எ - று.

இவற்றிற்கு உதாரணம் தத்தஞ் சிறப்புச் சூத்திரங்களிற் காண்க.

இனி "ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே" என்பதனால், பிறவழியால் ஒன்றற்குரியவும் பொதுவுமாய் நிற்பனவுஞ் சிலவுள வெனக்கொள்க.

அவை வருமாறு:—நடந்தான் - தன்வினை. நடத்தினான் - பிறவினை. வெருத்தான் அவ்விரண்டிற்கும் பொதுவினை.

நடந்தான் - விதிவினை. நடவான் - மறைவினை. சாவான், வேவான்-அவ்விரண்டற்கும் பொதுவினை. விதிவினை-உடன்பாட்டுவினை.

உண்பான் - செய்வினை. உண்ணப்பட்டது செயப்பாட்டு வினை. புலிகொன்ற யானை அவ்விரண்டிற்கும் பொதுவினை.

இன்னும் தேடிய சாத்தன், தேடிய வந்தான் எனச் சொல்லொன்றே ஈரெச்சங்களுக்கும் பொதுவாகுகை முதலானவையுங் கொள்க. (ரு)

[வினைமுற்றின் இலக்கணம்.]

823. பொதுவியல் பாறையுந் தோற்றிப் பொருட்பெயர்
முதலறு பெயரல தேற்பில முற்றே.

(இ - ள்.) பொதுவியல் பாறையும் - பலவகை வினைகளுக்கும் பொதுவிலக்கணமாகிய செய்பவன் முதலாறையும், தோற்றி-தோன்றச்செய்து, பொருட்பெயர் முதல் - பொருட்பெயர் முதலாகிய, அறுபெயரலது-அறுவகைப்பெயரல்லாத மற்றொன்றையும், ஏற்பில-ஏலாதன, முற்று-தெரிநிலை வினைமுற்றும் குறிப்புவினைமுற்றுமாம், எ - று.

(உதாரணம்.)

செய்தான் அவன்	— தெரிநிலை	பொருட்பெயர்	
நல்லன் அவன்	— குறிப்பு	கொண்டன.	
குளிர்ந்தது நிலம்	— தெரிநிலை	இடப்பெயர்	
நல்லது நிலம்	— குறிப்பு	கொண்டன.	
வந்தது கார்	— தெரிநிலை	காலப்பெயர்	
நல்லது கார்	— குறிப்பு	கொண்டன.	
குவிந்தது கை	— தெரிநிலை	சினைப்பெயர்	
நல்லது கை	— குறிப்பு	கொண்டன.	
பரந்தது பசப்பு	— தெரிநிலை	குணப்பெயர்	
நல்லது பசப்பு	— குறிப்பு	கொண்டன.	
ஒழிந்தது பிறப்பு	— தெரிநிலை	தொழிற்பெயர்	
நல்லது பிறப்பு	— குறிப்பு	கொண்டன.	(சு)

[தெரிநிலை வினைமுற்றின் விகற்பம்.]

324. ஒருவன்முத லைந்தையும் படர்க்கை யிடத்தும்
ஒருமைப் பன்மையைத் தன்மை முன்னிலையினும்
முக்கா லத்தினு முரண முறையே
மூவைந் திருமூன் றாறாய் முற்று
வினைப்பத மொன்றே மூவொன் பானும்.

(இ-ள்.) ஒருவன்முதல் ஐந்தையும் - ஆண்பால் முதலாகிய ஐம்பால் வினை முற்றுக்களையும், படர்க்கையிடத்தும் - படர்க்கையிடத்திலும், ஒருமை - ஒருமைவினை முற்றையும், பன்மையை - பன்மை வினை முற்றையும், தன்மை - தன்மையிடத்திலும், முன்னிலையினும் - முன்னிலையிடத்திலும் வைத்து, முக்காலத்தினும் - முக்காலங்களாலும், முரண-மாற, முறையே-சொல்லப்பட்ட முறையே, மூவைந்து-படர்க்கைவினைமுற்றுக்கள் பதினைந்தும், இருமூன்று-தன்மை வினை முற்றுக்கள் ஆறும், ஆறு - முன்னிலை வினைமுற்றுக்கள் ஆறும், ஆய் - ஆகி, முற்றவினைப் பதமொன்று - தெரிநிலை வினைமுற்றுப் பத மொன்றுமே, மூவொன்பானும் - இருபத்தேழாகும், எ - று.

(வருமாறு.)

		இறந்தகாலம்.	நிகழ்காலம்.	எதிர்காலம்.
படர்க்கை.	ஆண்பால்.	நடந்தான்	- நடக்கின்றான்	- நடப்பான்.
	பெண்.	நடந்தாள்	- நடக்கின்றாள்	- நடப்பாள்.
	பலர்.	நடந்தார்	- நடக்கின்றார்	- நடப்பார்.
	ஒன்.	நடந்தது	- நடக்கின்றது	- நடப்பது.
	பல.	நடந்தன	- நடக்கின்றன	- நடப்பன.
தன்மை.	ஒரு.	நடந்தேன்	- நடக்கின்றேன்	- நடப்பேன்.
	பன்.	நடந்தேம்	- நடக்கின்றேம்	- நடப்பேம்.
முன்னிலை.	ஒரு.	நடந்தாய்	- நடக்கின்றாய்	- நடப்பாய்.
	பன்.	நடந்தீர்	- நடக்கின்றீர்	- நடப்பீர்.

எனத் தெரிநிலை வினைமுற்று ஒருபகுதியுமே இருபத்தேழாய வாறு காண்க. (௫)

[ஆண்பாற் படர்க்கை வினைமுற்று.]

325. அன் ஆ னிறுமொழி யாண்பாற் படர்க்கை.

(இ-ள்.) அன் ஆன் இறுமொழி - அன் ஆன் என்கிற இருவிகுதியையும் இறுதியிலுடைய மொழிகள், ஆண்பாற் படர்க்கை - உயர்திணையாண்பாற் படர்க்கை வினைமுற்றுங் குறிப்பு முற்றுமாம், எ - று.

(வரலாறு.)

வி.	தெரி—இற.	நிக.	எதி.	குறி.	
அன்.	நடந்தனன்	நடக்கின்றனன்	நடப்பன்	குழையன்.	} ஆண்.
ஆன்.	நடந்தான்	நடக்கின்றான்	நடப்பான்	குழையான்.	

[பெண்பாற் படர்க்கை வினைமுற்று.]

326. அள்ஆ ளிறுமொழி பெண்பாற் படர்க்கை.

(இ-ள்.) அள் ஆள் இறுமொழி-அள் ஆள் என்கிற இரண்டுவிகுதியையும் இறுதியிலுடைய மொழிகள், பெண்பாற்படர்க்கை-உயாதிணைப் பெண்பாற்படர்க்கை வினைமுற்றுங் குறிப்பு முற்றுமாம், எ - று.

(வரலாறு.)

வி.	தெரி—இ.	நிக.	எதி.	குறி.	
அள்.	நடந்தனள்	நடக்கின்றனள்	நடப்பள்	குழையள்	} பெண்.
ஆள்.	நடந்தாள்	நடக்கின்றாள்	நடப்பாள்	குழையாள்	

[பலர்பாற் படர்க்கை வினைமுற்று.]

327. அர் ஆர் பவ்வூ ரகரமா ரீற்ற
பல்லோர் படக்கைமார் வினையொடு முடிமே.

(இ-ள்.) அர் ஆர் பவ்வூ ரகரம்மார் ஈற்ற-அர் ஆர் ப மார் என்கிற நான்கு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள், பல்லோர் படர்க்கை - உயர்திணைப் பலர்பாற்படர்க்கை வினைமுற்றுங் குறிப்பு முற்றுமாம், மார் - இவற்றுள்ளே மாரீற்று வினைமுற்று, வினையொடு முடியும்-பொதுவிதிபற் பெயருடன் முடிவதன்றி வினையுடனுமுடியும்.

மார்விகுதியும் பவ்விகுதியுந் தாமே காலங்காட்டுமெனப் பதவியலுள் 18 - வது சூத்திரத்தில் கூறுதலால் அவை குறிப்பு வினைக்கு வருதலில்லை.

(வரலாறு.)

வி.	தெரி-இற.	நிக.	எதி.	குறி.	
அர்.	நடந்தனர்	நடக்கின்றனர்	நடப்பர்.	குழையர்	} பலர்.
ஆர்.	நடந்தார்	நடக்கின்றார்	நடப்பார்.	குழையார்	
ப.	——	——	நடப்ப.	——	
மார்.	——	——	கொண்மார்.	——	

"ஆர்த்தார் கொண்மார் வந்தார்" என மார் ஈற்று வினைமுற்று வினையொடு முடிந்தது. கொண்மார்=கொள்வார். இம்மார் விகுதி எதிர்கால வினையொன்றையு மறுத்து எதிர்மறை முற்றிலும் வரும். உ-ம். "பீடின்மன்னரைப் பாடன்மா ரெமரே." (அ)

[ஒன்றன் பாற்படர்க்கை வினைமுற்று.]

328. துறுடுக் குற்றிய லுகர வீற்ற
ஒன்றன் படர்க்கைடுக் குறிப்பி னுகும்

(இ-ள்.) துறுடுக்குற்றிய லுகரவீற்ற - து று டு என்கிற இம்மூன்று குற்றியலுகர விகுதிகளை யிறுதியிலுடையமொழிகள், ஒன்றன் படர்க்கை - அஃறிணை யொன்றன்பாற் படர்க்கை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம், டுக்குறிப்பினுகும் - இவற்றுள் டுவ்விகுதிகுறிப்புவினைமுற்றிற்கல்லது தெரிநிலைவினைமுற்றிற்கு வருவதில்லை. எ-று.

றுவ்விகுதி இறந்தகால விடைநிலையோடு மாத்திரங்கூடி வருமெனக்கொள்க.

(வரலாறு.)

வி.	தெரி-இற.	நிக.	எதி.	குறி.	
து.	நடந்தது -	நடக்கின்றது -	நடப்பது.	குழையது.	
று.	கூயிற்று	———	———	அற்று	
டு.	———	———	———	பொருட்டு	(௯)

[பலவின்பாற் படர்க்கை வினைமுற்று.]

329. அ ஆ ஈற்ற பலவின் படர்க்கை
ஆவே யெதிர்மறைக் கண்ண தாகும்

(இ-ள்.) அ ஆ ஈற்ற - அ ஆ என்கிற விகுதிகளை இறுதியிலுடைய மொழிகள், பலவின்படர்க்கை-பலவின்பாற் படர்க்கைவினைமுற்றுங் குறிப்பு முற்றுமாம், ஆ - அவற்றுள் ஆகாரம், எதிர்மறைக் கண்ணதாகும் - எதிர்மறையினிடத்து வருமேயன்றி உடன்பாட்டினிடத்து வாராது எ-று.

ஆவே யெதிர்மறைக் கண்ணதாகும் என்றமையால், அகரவிகுதி உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வரும் எனக்கொள்க. இந்த அகர விகுதி அன் சாரியைபெற்றும், பெருமலும் வரும். நடப்ப - உண்ப முதலியவற்றைப் பலர்பால் வினைமுற்றாகக் கொள்ளும்போது பகர விகுதியென்றும், பலவின்பால் வினைமுற்றாகக்கொள்ளும்போது பகர விடைநிலையும் அகரவிகுதியும் என்றும் கொள்க.

(வரலாறு.)

வி.	தெரி-இற.	நிக.	எதி.	குறி.
அ.	நடந்தன -	நடக்கின்றன -	நடப்பன.	பெரியன.
	நடந்த -	நடக்கின்ற -	நடப்ப.	பெரிய.
	நடந்ில -	நடவாநின்றில	———	———

நடவா என ஆகாரம் எதிர்மறைக்கண் வந்தது. (௧0)

[இருதிணைப்பொதுவினை.]

330 தன்மை முன்னிலை வியங்கோள் வேறிலை
உண்டெ ரெச்ச மிருதிணைப் பொதுவினை.

(இ-ள்.) தன்மை - தன்மையிடத்துத் தெரிநிலை குறிப்புவினை முற்றுக்களும், முன்னிலை-முன்னிலையிடத்துத் தெரிநிலை குறிப்புவினை முற்றுக்களும், வியங்கோள்-வியங்கோள்வினைமுற்றுக்களும், வேறிலையுண்டு - வேறு இல்லை உண்டு என்கிற மூன்றுவினைக்குறிப்பு முற்றுக்களும், எச்சம்-தெரிநிலையும் குறிப்புமாகிய பெயரெச்ச வினையெச்ச வினைகளும், இருதிணை-உயர்திணை அஃறிணைஎன்கிற இருதிணைக்கும், பொதுவினை- பொதுவினைகளாம். எ-று.

செய்யுமென்னும் பெயரெச்சமே செய்யுமென்னு முற்றாதலால் அம்முற்றும் இருதிணைப் பொதுவினையா மென்பது தானே தோன்றுதல் காண்க. (கக)

[தன்மையொருமை வினைமுற்று.]

331. குடுதுறு வென்னும் குன்றிய லுகரமோ
டல்ல னென்னே னாகு மீற்ற
இருதிணை முக்கூற் றொருமைத் தன்மை.

(இ-ள்.) குடுதுறுவென்னுங் குன்றியலுகரமோடு - கு டு து று என்கிற குற்றியலுகரவிகுதிகளும், அல்ல னென் னேன் - அல் அன் என் ஏன் என்கிற நான்கு மெய்யீற்றுவிகுதிகளும், ஆகும் - ஆகிய, ஈற்ற - இவ்வெட்டு விகுதிகளையும் இறுதியிலேயுடைய மொழிகள், இருதிணை - இருதிணை யிடத்தனவாகிய, முக்கூற்று - ஒருவன் ஒருத்தி ஒன்று என்கிற மூன்றுபால்களுக்கும் பொதுவாகிய, ஒருமைத்தன்மை - தன்மை யொருமையாகிய தெரிநிலை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம் எ - று.

கு டு து று என்கிற நான்குந் தாமே காலங்காட்டுதலாற் குறிப்பு வினைக்கு வாரா.. அல் - எதிர்காலத்தே மாத்திரம் வரும். பதவியல் 18 - வது சூத்திரத்திற்காண்க.

(வரலாறு.)

வி.	தெரி-இற	நிக.	எதி.	குறி.
கு.	———	———	உண்கு	———
டு.	உண்டு	———	———	———
து.	வந்து	———	வருது	———
று.	சென்று	———	சேறு	———
அல்.	———	———	உண்பல்	———
அன்.	உண்டனன்	உண்ணாநின்றனன்	உண்பன்	தாரினன்
என்.	உண்டனென்	உண்ணாநின்றனென்	உண்பென்	தாரினென்
ஏன்.	உண்டேன்	உண்ணாநின்றேன்	உண்பேன்	தாரினேன்

யான்.

உண்டு=உண்டேன், வந்து=வந்தேன், சென்று=சென்றேன், உண்கு=உண்பேன், வருது=வருவேன், சேறு=செல்வேன், உண்பல்=உண்பேன். உண்ணுநிற்பல் எனச் சிறுபான்மை அல்விகுதி நிகழ்காலத்தும் வரும். (கஉ)

[தன்மைப் பன்மை வினைமுற்று.]

332. அம்மா மென்பன முன்னிலை யாரையும்
எம்மே மோமிவை படர்க்கை யாரையும்
உம்மூர் கடதற விருபா லாரையும்
தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை.

(இ-ள்.) அம்மாமென்பன - அம் ஆம் என்கிற விரண்டு விகுதிகளையு மிறுதியிலுடைய மொழிகள், முன்னிலையாரையும் - தன்னிலையினிற்கையன்றி முன்னிலை யிடத்தாரையும், எம்மே மோமிவை - எம் ஏம் ஓம் இம்மூன்று விகுதிகளையு மிறுதியிலுடைய மொழிகள், படர்க்கையாரையும் - தன்னிலையினிற்கையன்றிப் படர்க்கை யிடத்தாரையும், உம்மூர் கடதற-கும் டும் தும் றும் என்கிற நான்கு விகுதிகளையு மிறுதியிலுடைய மொழிகள, இருபாலாரையும் - தன்னிலையினிற்கையன்றி அவ்வீரிடத்தார்களையும், தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை - தன்னுடன் கூட்டுகிற தன்மைப் பன்மை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம் எ-று.

கும் டும் தும் றும் என்கிற நான்குந் தாமே காலங்காட்டுதலாலே குறிப்பு வினைக்கு வருவனவல்ல. பதவியல் 18-வது சூத்திரத்தால் காலமும், மேல் இரண்டு சூத்திரங்களால் இடமும் உணர்க.

வி.	தெரி - இற.	நிக.	எதி	குறி.	
அம்.	உண்டனம்	உண்கின்றனம்	உண்பம்	தாரினம்.	யாம். யானும் நீயும்.
ஆம்.	உண்டாம்	உண்கின்றாம்	உண்பாம்	தாரினாம்	
எம்.	உண்டனெம்	உண்கிறனெம்	உண்பெம்	தாரினெம்	யாம். யானும் அவனும்
ஏம்.	உண்டேம்	உண்கின்றேம்	உண்பேம்	தாரினேம்	
ஓம்.	உண்டோம்	உண்கின்றோம்	உண்போம்	தாரினோம்	
கும.	——	——	உண்கும.	——	யாம். யானும் நீயு மவனும்
டும்.	உண்டும்	——	——	——	
தும்.	வந்தும்	——	வருதும்	——	
றும்.	சென்றும்	——	சேறும்	——	

உண்டும்=உண்டோம். உண்கும்=உண்போம்.
வந்தும்=வந்தோம் வருதும்=வருவோம்.
சென்றும்=சென்றோம். சேறும்=செல்வோம்.

இவை சிறுபான்மை இம்முறையின்றி மயங்கி வருதலுமுண்டு.

[வினையுடனும் முடிகிற தன்மை வினைமுற்றுக்கள்.]

333. செய்கெ னொருமையுஞ் செய்குமென் பன்மையும்
வினையொடு முடியினும் விளம்பிய முற்றே.

(இ-ள்.) செய்கென் - செய்கு என்கிற, ஒருமையும் - தன்மை யொருமை முற்றும், செய்குமென் - செய்கும் என்கிற, பன்மையும் தன்மைப்பன்மை முற்றும், வினையொடு முடியினும் - (பெயருட னேயன்றி) வினையுடனேமுடியினும்,விளம்பிய-முன்சொல்லப்பட்ட, முற்றே - முற்றுக்களேயாம் எ-று.

(வரலாறு.) உண்குவந்தேன், உண்கும்வந்தேம் எனவரும். (க௪)

[உளப்பாட்டுமுன்னிலைப்பன்மை.]

334. முன்னிலை கூடிய படர்க்கையு முன்னிலை.

(இ-ள்) முன்னிலை - முன்னிலையோடு, கூடிய-சேர்ந்த, படர்க்கையும்-படர்க்கையும், முன்னிலை-முன்னிலையாம். எ-று.

தெரி.	குறி.	
உண்டனிர்	குழையினிர்	நீயுமவனும்.
உண்டீர்	குழையீர்	
உண்மின்	———	

இச்சூத்திரம் முன்னிலைப் பன்மை கூறியவழியே கூறாது,"ஒன்றினமுடித்தல் தன்னினமுடித்தல்" என்கிற உத்தியால் இங்கே சொல்லப்பட்டது. (க௫)

[முன்னிலை யொருமை வினைமுற்று.]

335. ஐயா யிகர வீற்ற மூன்றும்
ஏவலின் வரூஉ மெல்லா வீற்றவும்
முப்பா லொருமை முன்னிலை மொழியே.

(இ - ள்.) ஐயா யிகரவீற்ற மூன்றும் - ஐ ஆய் இ என்கிற மூன்று விகுதிகளை இறுதியிலுடைய மொழிகளும், ஏவலின் வரூஉ மெல்லாவீற்றவும்-விகுதி குன்றாதுங் குன்றியு நிற்பனவாகி ஏவலிலே வருகிற இருபத்து மூன்றீற்றுமொழிகளும், முப்பால் - ஒருவன் ஒருத்தி ஒன்று என்கிற மூன்று பால்களுக்கும் பொதுவாகிய, ஒருமை முன்னிலைமொழி - முன்னிலை யொருமைத் தெரிநிலைவினை முற்றுங் குறிப்புமுற்றுமாம். எ-று.

இகரவிகுதி எதிர்காலத்தை யிடைநிலை யில்லாமற் காட்டும் ஏவல்வினை முற்றுக்கள் குறிப்பு வினையில் இல்லை என்று அறிவித் தற்கு உம்மை கொடுத்துப் பிரித்தார்.

(வரலாறு.)

வி.	தெரி. இற.	நிக. எதி.	குறி.	
ஐ.	உண்டனை.	உண்ணாநின்றனை-உண்பை.	வில்லை	நீ.
ஆய்.	உண்டாய்.	உண்ணாநின்றாய் - உண்பாய்.	வில்லாய்	
இ.	உண்டி.	உண்ணாநின்றி - சேறி.	வில்லி	

ஏவல் வினைகள் நடவாய், வாராய், கேளாய், அஃகாய் என விகுதி குன்றாமலும், நட, வா, கேள், அஃகு என விகுதி குன்றியும் வரும். ஏவலெனப் பொதுப்படச் சொல்லியதனால், செய்வி - செய்விப்பி என ஏவன்மேல் ஏவலாக வருவனவும், செய்யல், செய் யேல், மறால், நடவாதே என எதிர்மறையில் வருவனவும்; சொல் லிக்காண், நடந்திடு, எழுந்திரு, அருளு என உடன்பாட்டில் வருவன வுங் கொள்க. (கசு)

[சில ஏவல் வினைமுற்றுக்குச் சிறப்புவிதி.]

336. முன்னிலை முன்ன ரீயு மேயும்
அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே.

(இ-ள்.) முன்னிலை முன்னர் - முன்னிலையேவல் முற்றென முன்சொல்லப்பட்ட வற்றிற்கு முன், ஈயும் - ஈகாரமும், ஏயும்-ஏகார மும், அந்நிலை மரபின் - அவ்விடத்து நிற்றற்குரிய மரபினையுடைய, மெய் - யாதானுமொரு மெய்யை, ஊர்ந்து - ஏறி, வரும் - வரும், எ-று.

(வரலாறு.) "சென்றீ பெரும நிற்றகைக்குநர் யாரே" "அட்டி லோலை தொட்டனை நின்மே" என வரும்.

இங்கே ஈகாரமும ஏகாரமும விகுதிகளல்ல. ஆய வந்த ஏவலில் வரும் முன்னிலை அசையாம். இந்த அசைகள் ஊர்ந்து நின்ற றகரமெய்யும் மகரமெய்யும் எழுத்துப் பேறென்றுணர்க. (கஎ)

[முன்னிலைப்பன்மை வினைமுற்று.]

337. இர்ஈ ரீற்ற விரண்டு மிருதிணைப்
பன்மை முன்னிலை யின்னவற் றேவல்.

(இ-ள்.) இர் ஈர் ஈற்ற இரண்டும்-இர் ஈர் என்கிற இரண்டு விகுதி களையு மிறுதியிலுடைய மொழிகள், இருதிணை-இருதிணைக்கும் பொ

துவாகிய, பன்மைமுன்னிலை - பன்மைமுன்னிலை வினைமுற்றுங் குறிப்பு முற்றுமாம், மின் - மின்விகுதியை யிறுதியிலுடைய மொழிகள், அவற்றேவல் - முன்னிலைப்பன்மை யேவன்முற்றும், எ - று.

மின் விகுதி யன்றி, ஈர் - உம் விகுதிகள் முன்னிலைப்பன்மை யேவலுக்கு வருமெனக் கொள்க.

(வரலாறு.)

வி.	தெரி-இற.	நிக.	எதி.	குறி.	
இர்.	உண்டனிர் -	உண்கின்றனிர் -	உண்பிர்.	குழையிர்.	} நீர்.
ஈர்.	உண்டீர் -	உண்கின்றீர் -	உண்பீர்.	குழையீர்.	
மின்	——	——	உண்மின்	——	}
ஈர்	——	——	உண்ணீர்	——	}
உம்			உண்ணும்		(கஅ)

[வியங்கோள்வினைமுற்று.]

338. கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயலு மிடம்பா லெங்கு மென்ப.

(இ - ள்.) கயவொடு - க ய என்கிற இரண்டுயிர் மெய்யினையும், ரவ்வொற்று - ரகரமெய்யினையும், ஈற்ற-இறுதியிலுடைய மொழிகள், வியங்கோள்-வியங்கோண்முற்றுக்களாம், (அவை) இடமெங்கும்-மூன்றிடங்களிலும், பாலெங்கும் - ஐம்பால்களிலும், இயலும் - செல்லும், என்ப - என்று சொல்லுவர் புலவர், எ-று.

(வரலாறு.)

வாழ்க-
வாழிய-
வாழியர்- } யான், யாம், நீ, நீர், அவன், அவள், அவர், அது, அவை, என இவை வாழ்த்துப் பொருளில் வந்தன.

இவை - அவன் உண்க, நீவருக என உயர்ந்தோ னிழிந்தோனை விதித்தற்பொருளிலும், எம்மைக் காத்தருள்க, ஒருசொற்கேட்க, என வேண்டிக் கோடற்பொருளிலும், அத்தீயன் கெடுக என வைதற்பொருளிலும் வரும். இப்படி சொன்னவர் தாமே "வகுத்துரை யாதவும் வகுத்தனர் கொளலே" என அல்லீறும் உடன்பட்டுப் புணர்த்தமையால் அதனுடன் "நான்மறை யறங்களோங்க" என அகர வீறும் கொள்க. அன்றியுஞ் சிறுபான்மை இக்கால வழக்கத்தில் நடக்கக் கடவன், நடப்பானாக எனப் பாலிடங்களுள் ஒன்றைச்சேர்ந்து வருவனவுங் கொள்க. (கக)

[பால் இடங்களுக்குப் பொதுவான குறிப்பு வினைமுற்றுக்கள்.]

339. வேறில்லை யுண்டைம் பான்மூ விடத்தன.

(இ-ள்.) வேறில்லையுண்டு-வேறு இல்லை உண்டு என்கிற மூன்று வினைக்குறிப்பு முற்றுக்களும், ஐம்பால்-ஐம்பாலுக்கும், மூவிடத்தன - மூவிடத்திற்கு முரியனவாம், எ-று.

வேறு- இல்லை- உண்டு- } அவன், அவள், அவர். அது, அவை, யான், யாம், நீ, நீர்.

"மொழிந்த பொருளோ டொன்ற வவ்வயின் மொழியாத தனையு முட்டின்று முடித்தல்" என்கிற வுத்திபால்-வேண்டும், தகும், படும் என்கிற சொற்களும் ஐம்பான் மூவிடத்திற்கும் பொதுவா மெனக்கொள்க.

(வரலாறு.) அவரோதல் வேண்டும், நீ போகல்வேண்டும், இச் சோறுண்ணத்தகும், இவரா லிக்காரியஞ் செய்யத்தகும், வஞ்சரை யஞ் சப்படும், கற்றறிந்தோரைத் தலைநிலத்து வைக்கப்படும்.

இம்மூன்று மொருபொருட் சொற்களாய்த் தொழிற்பெயராய்த் தேற்றப்பொருள் பட்டே நிற்குமென்றறிக. (உ0)

[பெயரெச்சம்.]

340. செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டில்
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி யறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே

(இ - ள்.) செய்த செய்கின்ற செய்யுமென்- - செய்த என்றும் செய்கின்ற என்றும் செய்யும் என்றும் சொல்லப்படுகிற, பாட்டில் - மூவகைச் சொற்களிலே, காலமும் - முறையே இறப்பு நிகழ்வு எதிர்வு என்கிற மூன்றுகாலங்களும், செயலும் - தொழிலும், தோன்றி - தோன்றி, பாலொடு - பாலுடனே, செய்வதாதி - செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செயப்படுபொருள் என்கிற, அறுபொருட் பெயரும் - அறுவகைப்பொருட்பெயர்களும், எஞ்சநிற்பது - ஒழிய நிற்பன, பெயரெச்சம் - பெயரெச்சவினை வினைக்குறிப்புக்களாம். எ-று.

எற்புழிக்கோடலால், தோன்றி என்பது வரைக்குந் தெரிநிலைக் கும், ஒழிந்தவிதி தெரிநிலை குறிப்பு இரண்டிற்குங் கொள்க. நிற்பது தொகுதி யொருமை. செய்யும் என்னும்பெயரெச்சம் விகுதியால் காலங்காட்டும்.

(வரலாறு.)

இற. நிகழ். எதிர். உண்ட, உண்கின்ற, உண்ணும்.
{ சாத்தன் - செய்பவன்.
கலம் - கருவி.
வீடு - நிலம்.
ஊண் - செயல்.
பகல் - காலம்.
சோறு - செயப்படுபொருள்.

உண்ணுத சிறுவன், உண்கலாத சிறுவன், உண்கிலாத சிறுவன், என எதிர்மறைத் தெரிநிலைப் பெயரெச்சம் வரும்.

கரியகுதிரை, உள்ளபொருள் எனப் பெயரெச்சக் குறிப்பு வரும்; இல்லாதபொருள், அல்லாதபொருள் என எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம் வரும். அறுபொருட் பெயருமென்ற உம்மையால் களைகட்ட பயிர், களைகட்டகூலி என இன்னதற்கு, இதுபயன் என்னும் பெயர்களெஞ்ச நிற்பனவும்; உண்ட இளைப்பு, குடிபோன ஊர், பூத்தகண்ணி, பொன்பெரிய நம்பி எனப் பிறபெயரெஞ்ச நிற்பனவுங் கொள்க. (உக)

[செய்யும் என்னும் பெயரெச்சத்திற்குச்சிறப்புவிதி.]

341. செய்யுமெ னெச்சவீற் றுயிர்மெய் சேறலும்
செய்யுளு ளும்முந் தாகலு முற்றேல்
உயிரு முயிர்மெய்யு மேகலு முளவே.

(இ - ள்.) செய்யுமெனெச்சம் - செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சத்தினுடைய, ஈறு - இறுதியிலுள்ள, உயிர்மெய்-உயிர்மெய்யானது, சேறலும்-கெடுதலும், செய்யுளுள் - செய்யுளிடத்து, உம் - உம் விகுதியானது, உந்தாகலும் - உந்து எனத்திரிதலும், முற்றேல் - அது முற்ருயின், உயிரும் - அதனீறுதியுயிராயினும், உயிர்மெய்யும் - உயிர்மெய்யாயினும், ஏகலும் - கெடுதலும், உள - உளவாம். எ-று.

(வரலாறு.) வாவும்புரவி - வாம்புரவி, ஆகும்பொருள் - ஆம்பொருள், போகும்பொருள் - போம்பொருள், எனச் செய்யுமெனெச்சத்தீற்று உயிர்மெய்கெட்டது.

கூப்பெயர்க்குந்து நீர்த்தோழி - இதில் கூப்பெயர்க்கும் என்பது கூப்பெயர்க்குந்து எனச்செய்யுளில் உம் உந்து ஆயிற்று.

தோழியுங் கலுழ்மே, அவனோடு மொழிமே எனமுற்றுயவிடத்து கலுழும், மொழியும் என்பவைகளில் உயிரும உயிர்மெய்யுங் கெட்டன.

பொதுமையின் முற்றேல் என்றதனால் - கேளும், உரையும், என்னும் ஏவல் முற்றுக்கள் - கேண்மோ, உரைமோ என உயிரும் உயிர்மெய்யும் கெட்டு வருதலுங்கொள்க. இவை இங்ஙனமாதலால் "சொற்றொரு மிற்றிதன்பெற்றி" என்றதனால் ஆடுவாமோ என்னும் தன்மைப் பன்மை வினைமுற்றும், "பொன்னூசலாடாமோ" என எதிர்கால இடைநிலை கெட்டுவருதலுங்கொள்க. (உ)

[வினையெச்சத்தினிலக்கணம்.]

342. தொழிலும் காலமுந் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினையெச் சம்மே.

(இ-ள்.) தொழிலும் - செயலும், காலமும் - பொழுதும், தோன்றி - விளங்கி, பால் - பாலுடனே, வினை - வினையானது, ஒழிய - எஞ்ச, நிற்பது --நிற்பன, வினையெச்சம் - தெரிநிலை வினையெச்சமும் குறிப்பு வினையெச்சமுமாம். எ-று.

வினையெனப் பொதுப்படக் கூறுதலால் - வினைமுற்றும், பெயரெச்சமும், வினையெச்சமும், வினையாலணையும் பெயரும், தொழிற்பெயருமாகிய ஐவகை உடன்பாடும் எதிர்மறையும் பற்றிவரும் தெரிநிலையும் குறிப்புமாகிய வினைச்சொற்களுங் கொள்க.

(உ - ம்.)

தெரிநிலை வினையெச்சம் ஐவகைத் தெரிநிலைவினை விகற்பங்கள் கொள்ளுதற்கு உதாரணம்:—

செய்துவந்தான்—செய்துவாரான்—தெரிநிலைவினைமுற்று.
செய்துவந்த———செய்துவாராத—-தெரிநிலைப்பெயரெச்சம்.
செய்துவந்து———செய்துவாராமல்--தெரிநிலைவினையெச்சம்.
செய்துவந்தவன்-செய்துவராதவன்தெரிநிலைவினையாலணையும்பெயர்
செய்துவருதல்—-செய்துவாராமை—தெரிநிலைத்தொழிற்பெயர்.

தெரிநிலைவினையெச்சம் குறிப்புவினை விகற்பங்கள் கொள்ளுதற்கு உதாரணம்:—

கற்றுவல்லன்———-குறிப்புவினைமுற்று.
கற்றுவல்ல————குறிப்புப்பெயரெச்சம்,
கற்றுஇனிது———குறிப்புவினையெச்சம்.
கற்றுவல்லவன்-———குறிப்புவினையாலணையும்பெயர்.
கற்றுஇன்மை-———குறிப்புத்தொழிற்பெயர்.

குறிப்புவினையெச்சம் தெரிநிலை வினைவிகற்பங்கள் கொள்ளு தற்கு உதாரணம்:—

அறமன்றிச்செய்தான்; அறமன்றிச்செய்யான் - தெரிநிலைவினைமுற்று.
அறமன்றிச்செய்த; அறமன்றிச்செய்யாத-தெரி-பெயரெச்சம்.
அறமன்றிச்செய்து; அறமன்றிச்செய்யாமல்-தெரி-வினையெச்சம்.
அறமன்றிச்செய்தவன்; அறமன்றிச்செய்யாதவன் - தெரி - வினையா [லணையும்பெயர்.
அறமன்றிச்செய்தல்; அறமன்றிச்செய்யாமை-தெரி-தொழிற்பெயர்.

குறிப்புவினையெச்சம் குறிப்புவினை விகற்பங்கள் கொள்ளுதற்கு உதாரணம்:—

அறமன்றியிலன் —குறிப்புவினைமுற்று.
அறமன்றியில்லாத —குறிப்புவினைப்பெயரெச்சம்.
அறமன்றியில்லாமல் —குறிப்புவினையெச்சம்.
அறமன்றியில்லாதவன்—குறிப்புவினையாலணையும்பெயர்.
அறமன்றியின்மை —குறிப்புத்தொழிற்பெயர்.

இங்கே தெரிநிலைவினையெச்சந் தொழிலுங் காலமுந் தோன்ற நிற்றலும், இருவகைவினையெச்சமும் பால் வினை ஒழிய நின்றமை யுங்காண்க.

ஏற்புழிக்கோடலால் - தொழிலுங் காலமுந் தோன்றுதல் தெரி நிலைக்கும், பால் வினை ஒழிய நிற்பது தெரிநிலை குறிப்பு இரண்டிற் குங்கொள்க. (உ௩)

[வினையெச்சவாய்பாடுகள்.]

343. செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கின வினையெச் சம்பிற
ஐந்தொன் றாறுமுக் காலமு முறைதரும்.

(இ-ள்.) செய்து...செய்யியர்-செய்து என்பதுமுதல் செய்யியர் என்பதீறாகிய ஒன்பது வாய்பாட்டால் வருவனவும், வான் பான் பாக்கு-இம்மூன்று விகுதிகளைக்கொண்டு வருவனவும், இன - இவை போல்வன பிறவும், வினையெச்சம்-வினையெச்ச வினைகளாம், ஐந்து - முன்னைய ஐந்தும், ஒன்று - நடு நின்ற ஒன்றும், ஆறு - பின்னைய ஆறும், முக்காலமும் - இறந்தகாலமும் நிகழ்காலமும் எதிர்காலமும், முறை - முறையாக, தரும்-காட்டுவனவாம், எ-று.

இவற்றுள், செய்து என்பது இடைநிலையினாலும் மற்றவை விகுதியினாலுங் காலங்காட்டுவன வென்று அறிக.

(உ-ம்.) இறப்பு.	நிகழ்வு.	எதிர்வு.
க. நடந்துவந்தான்	க. நடக்க வருவான்	க. வரிற்கொள்ளும்.
உ. உண்குபு போனான்		உ. ஆடிய தந்தான்.
ங. பெய்யாக் கொடுக்கும்		ங. உண்ணியர் வருவான்.
ச. காணூ மகிழ்ந்தான்		ச. கொல்வான்சென்றது.
ரு. உண்ணெனப் போனான்		ரு. தின்பான் புகுந்தது.
		சு. செய்பாக்கு வந்தான்.

'இன்ன' என்றதனால்-இறந்தகாலத்திற்கு இ-ப்-உம் என்பனவும், எதிர்காலத்திற்கு-ஆல்-கால்-கு-கடை-வழி-இடத்து என்பனவும், எதிர் மறைக்கு மல்-மை-மே-து என்பனவும், குறிப்பு வினையெச்சத்துக்கு அ-றி-ஆல் முதலியனவும், பிறவும் விகுதிகளாய் வருமெனக் கொள்க.

உரையிற்கோடலால், செயவெனெச்சம் நிகழ்காலமன்றி, இறந்த கால எதிர்காலங்களிலும் வருமெனக்கொள்க. இச்செயவெனெச்சம் காரணகாரியப் பொருளின்றி வரும்போது நிகழ்காலமும், காரணப் பொருளுணர்த்தும்போது இறந்தகாலமும், காரியப் பொருளுணர்த்தும்போது எதிர்காலமும் காட்டுமென்றுணர்க.

உ-ம். சூரியன் உதிக்கவந்தான்.	நிகழ்.
மழைபெய்ய நெல்விளைந்தது.	இற.
நெல்விளைய மழை பெய்தது.	எதி.

இன்னும் வான், பான், பாக்கு என்னும் மூன்றும் சிறுபான்மை தொழிற்பெயர்ப்பொருள் பட்டுவருமென்றும் கொள்க.

உ-ம். நீ வருவான் என்;
யான் உரைப்பான் என்;
ஏதம்படுபாக்கு அறிந்து.

இவைகளில் வினையெச்சங்கள் வருதல், உரைத்தல், படுதல் எனத்தொழிற்பெயர்ப்பொருள் படுதலறிக. (உச)

[வினையெச்சங்களின் முடிபு வேறுபாடு.]

344. அவற்றுள், முதலி னான்கு மீற்றின் மூன்றும்
வினைமுதல் கொள்ளும் பிறவுமேற் கும்பிற.

(இ - ள்.) அவற்றுள் - (முன் சூத்திரத்துட் சொல்லிய) வினையெச்சங்களுள், முதலில் - முதலிலுள்ள, நான்கும் - (செய்து செய்யு செய்யா செய்யூ என்கிற) நான்கும், ஈற்றில் - இறுதியிலுள்ள, மூன்

றும் - (வான் பான் பாக்கு என்கிற விகுதிகளையுடைய) மூன்றும், வினைமுதல் - தன் கர்த்தாவின் வினையை, கொள்ளும்-கொண்டு முடியும், பிற - (நடுவிலுள்ள செய்தென செய்ய செயின் செய்திய செய்யியர் என்கிற ஐந்தும் இவைபோல்வன பிறவு மென்றதனால் வருஞ் செய்தால் முதலியவையும் வினையெச்சக் குறிப்புகளும் ஆகிய) இவைகள், பிறவும் - (தன்கர்த்தாவின் வினையையே யன்றி) பிறகர்த்தாவின் வினையையும், ஏற்கும் - கொண்டுமுடியும், எ - று.

(உதாரணம்.)

உ.	தானடந்து வந்தான்	முதலில் நான்கும் ஈற்றின் மூன்றும் வினைமுதல்கொண்டு முடிந்தன.
பு.	தானுண்குபு போனான்	
ஆ.	தான்கல்லாக் கழித்தான்	
ஊ.	தான்காணூ மகிழ்ந்தான்	
வான்.	தான்கொல்வான் செல்வான்	
பான்.	தானலைப்பான் புகுந்தான்	
பாக்கு.	தான்றருபாக்கு வருவான்	
என	தானுண்டென மகிழ்ந்தான் பிறனுண்டென மகிழ்ந்தான்	இடையிலைந்தும் வினைமுதலும் பிறவுங் கொண்டன.
அ	தானுண்ண வருகிறான் பிறனுண்ணக் காண்கின்றான்	
இன்	தானுண்ணின் மகிழ்வான் பிறனுண்ணிற் கொடுப்பான்	
இய	தானுண்ணிய வருவான் பிறனுண்ணிய கொடுப்பான்	
இயர்	தானுண்ணியர் போவான் பிறனுண்ணியர் வழங்குவான்	

உண்டால் உவக்கும் உண்டால் பசிதீரும் மழையின்றிப் பொய்ப்பின் விருந்தின்றி யுண்டான்	இன என்றதனால் வருகிற செய்தால் முதலியவையும், வினையெச்சக்குறிப்பும், இப்படியே வினைமுதலும் பிறவு மேற்றன. (௨௫)

[வினைமுதல் கொள்ளுமென்றவற்றிற்குப் புறனடை.]

345. சினைவினை சினையொடு முதலொடுஞ் செறியும்.

(இ - ள்.) சினைவினை - (முதலினான்கு மீற்றின்மூன்றுமென்ற வினையெச்சங்கள்) சினைவினையாயின், (அவை) சினையோடும் - (முன் வினைமுதல் கொள்ளு மென்ற விதியினாலே) சினையுடனே யன்றி, முதலொடும் - முதலுடனும், செறியும் - முடியும், எ - று.

(உ - ம்.)

காலொடிந்து விழுந்தான் கண்வருவான் கதிரவனைத்தொழுதான்	ஒடிதல், வருதல் சினைவினை; விழுதல், தொழுதல் முதல்வினை. (௨௬)

[வினையெச்ச வாய்பாடுகளின் திரிபு.]

346. சொற்றிரி யினும்பொரு டிரியா வினைக்குறை.

(இ - ள்.) சொல் - (முதலினான்கு மீற்றின் மூன்று மென்ற) வினையெச்ச வாய்பாடுகளாக, வினைக்குறை - பிற வினையெச்ச வாய் பாடுகள், திரியினும் - வேறுபடினும், பொருள் - (அவற்றின்) பொருள் கள், திரியா - வேறுபடாவாம், எ - று.

(உ-ம்.) கோழி கூவிப் பொழுது புலர்ந்தது.
யான்கொள்வான் பொன்கொடுத்தான்.

இவற்றில் கூவ என்னும் காரண காரியங்களைக் குறிக்காத நிகழ் காலச் செயவெனெச்சம் கூவி என்றும், கொள்ள என்னும் காரி யப் பொருட்டாகிய எதிர்காலச் செயவெனெச்சம் கொள்வான் என்றுந் திரிந்தன.

'முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும்' என்ற வினையெச்ச வாய் பாடுகள் தன் வினைமுதலின் வினையைக்கொண்டு முடியாமல், வேறு வினைமுதலின் வினையைக் கொண்டு முடிந்தால், அவ்விடங்களில் அவற்றை வேறு வினைமுதலின் வினையைக்கொண்டு முடிதற்கு ஏற்ற வினையெச்சங்களின் திரிபாகக் கொள்க.

மழை பெய்து நெல் விளைந்தது, கண்வருவான் கதிரவனை தொழுதான்—இவற்றில் பெய்து, தொழுதான் என்பவை வேறுவினை கொண்டு முடிதற்கு ஏலாமையால், அவற்றை முறையே பெய்ய, தொழ என்னுஞ் செயவெனெச்சத்தின் திரிபாகக்கொள்க.

இனி 'வினைக்குறை' எனப் பொதுப்படக் கூறியதனால் - எவ் வகை வினையெச்சச்சொல்லும் பொருளுக்கு இயையாமல் மாறிவரு மாயின், அதனைப்பொருளுக்கு இயைந்த வினையெச்சச்சொல் திரிந்து வந்ததாகக் கொள்க.

(உ-ம்.) "கொழுநற் றொழுது எழுவாள்" - தொழாநின்று என் னும் நிகழ்கால வினையெச்சம் தொழுது எனத்திரிந்து நின்றது. (உஎ)

[வினைக்குறிப்புக்கு ஆவதோர் சிறப்புவிதி.]

347. ஆக்க வினைக்குறிப் பாக்கமின் றியலா.

(இ-ள்.) ஆக்கம் - (ஆதல் என்னும்) ஆக்கச் சொல்லைக்கொண்ட, வினைக்குறிப்பு - வினைக்குறிப்புச் சொற்கள், ஆக்கம் இன்று - (அந்த ஆக்கச்சொல் இல்லாமல், இயலா - வா ரவாம்.

சில இடங்களில் வேற்றுமை உருபுகள் போல ஆக்க வினைக் குறிப்பிற்கு ஆக்கச்சொல் தொக்கும் வரும்.

(உ-ம்.) சாத்தன் நல்லனாயினான் } ஆக்கச்சொல்
கல்வியிற் பெரியனாயினான் } விரிந்தது.

சாத்தன் நல்லன் } ஆக்கச்சொல்
கல்வியிற் பெரியன் } தொக்கது.

எனவே நல்லன் பெரியன் என்பன இயற்கை வினைக்குறிப்பாயின் ஆக்கச்சொல் தொகுதலும் விரிதலுமின்றிச் சாத்தன் நல்லன், கல்வியிற் பெரியன் என்றே வருமெனக் கொள்க. (உஅ)

[செய்யுமென் முற்றுவினைகளுக்குச் சிறப்புவிதி.]

348. பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்
செல்லா தாகுஞ் செய்யுமென் முற்றே.

(இ-ள்.) செய்யும் என் முற்று - செய்யுமென் முற்றானது, பல்லோர் படர்க்கை (யில்) - உயர்திணைப்பன்மைப் படர்க்கையிலும், முன்னிலை (யில்) - முன்னிலையிலும், தன்மையில் - தன்மையிலும், செல்லாது ஆகும் - செல்லாது, எ - று.

எனவே இச்செய்யுமென்முற்று—பலர்பால் ஒழிந்த மற்ற படர்க்கை நாற்பாலிலுஞ் செல்லுமென்பது பெற்றாம்.

(உ-ம்.) அவனுண்ணும், அவளுண்ணும், அது வுண்ணும், அவை யுண்ணும். (உசு)

[யார் என்னும் குறிப்பு வினைமுற்றுக்குச் சிறப்புவிதி.]

349. யாரென் வினாவினைக் குறிப்புயர் முப்பால்.

(இ-ள்.) வினா - வினாப்பொருளைத் தருகிற, யார் என் - யார் என்னும், வினைக்குறிப்பு - வினைக்குறிப்புமுற்று, உயர் முப்பால் உயர் மூன்று பால்களுக்கும் பொதுவினையாம், எ - று.

(உ-ம்.) அவன்யார், அவள்யார், அவர்யார்.

இது ஆர் எனவும் மருவி வழங்கும். சிறுபான்மை அதுயார், அவையார் என அஃறிணை யிருபால்களிலும், நான்யார், நாம்யார் எ-ம், நீயார், நீர்யார், எ-ம், தன்மை முன்னிலைகளிலும் வருதல் புதியன புகுதலாம். (௩0)

[எவன் என்னும் குறிப்பு வினைமுற்றுக்குச் சிறப்புவிதி.]

350. எவனென் வினாவினைக் குறிப்பிழி யிருபால்.

(இ-ள்.) வினா - வினாப்பொருளைத் தருகிற, எவன் என் - எவன் என்கிற, வினைக்குறிப்பு - வினைக்குறிப்புமுற்று, இழி இருபால் - அஃறிணை இரண்டு பாலுக்கும் பொதுவினையாம், எ - று.

(உ-ம்.) அஃதெவன், அவையெவன்.

இது என், என்னை, என்ன எனவும் மருவி வழங்கும். (ருக)

[இருவகை முற்றுக்களுக்கும் சிறப்புவிதி.]

351. வினைமுற் றேவினை யெச்ச மாகலும்
குறிப்புமுற் றீரெச்ச மாகலு முளவே.

(இ-ள்.) வினைமுற்றே-(தெரிநிலை) வினைமுற்றே, வினையெச்சம் ஆகலும்-வினையெச்சமாகி வருதலும், குறிப்புமுற் (றே) - குறிப்புவினைமுற்றே, ஈர் எச்சம் ஆகலும் - வினையெச்சமாகியும், பெயரெச்சமாகியும் வருதலும், உள - உளவாம், எ - று.

(உ - ம்.)

கண்டனன் வணங்கினான்=கண்டு வணங்கினான். முகந்தனர் கொடுத்தார்=முகந்து கொடுத்தார்.	தெரிநிலை வினைமுற்று வினையெச்சமாயிற்று.
அவன் வில்லினன் வந்தான்=அவன் வில்லினனாகிவந்தான்.	குறிப்புமுற்று வினையெச்சமாயிற்று.
வெந்திறலினன் விறல்வழுதியொடு=வெந்திறலினனாகிய விறல்வழுதியொடு.	குறிப்பு முற்று பெயரெச்சமாயிற்று. (ருஉ)

வினையியல் முற்றிற்று.

மூன்றாவது
பொதுவியல்.

இது முன்வந்த பெயருக்கும் வினைக்கும் பின்வரும் இடைக்கும் உரிக்கும் பொதுவிலக்கணங்களைச் சிங்கநோக்காக அறிவிக்க நடுவே வைக்கப்பட்டது.

[பாற் பொதுமை நீக்கல்.]

352. இருதிணை யாண்பெண் ணுளொன் றனையொழிக்கும்
பெயரும் வினையுங் குறிப்பினானே.

(இ-ள்.) இரு திணை - இருதிணையிலும், பெயரும் - (ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுவாகிய) பெயர்ச்சொற்களும், வினையும் - (அப்படிப்பட்ட) வினைச்சொற்களும், ஆண்பெண்ணுள் - அவ்வாண்பால் பெண்பால்களுள், ஒன்றனை - ஒருபாலை, ஒழிக்கும் - நீக்கும், குறிப்பினான்-குறிப்பினால், எ - று. [ஏ-அசை.]

(உ-ம்.) ஆயிரமக்கள் போர்செய்தற்குப் போயினார்—இதில் மக்கள் என்னும் உயர்திணை இருபாற் பொதுப்பெயரும், போயினார் என்னும் பொதுவினையும், போர்க்கு என்னு குறிப்பினாலே பெண் பாலை ஒழித்தன.

பெருந்தேவி பொறையுயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்கள் உளர்—இதில் மக்கள் என்னும் பொதுப்பெயரும், உளர் என்னும் பொதுவினைக் குறிப்பும், பொறை யுயிர்த்தல் என்னுங் குறிப்பினால் உயர்திணை ஆண்பாலை ஒழித்தன [பொறையுயிர்த்தல்=பிரசவித்தல்.]

இப்பெற்றங்கள்உழவொழிந்தன—இதில் பெற்றங்கள் என்னும் அஃறிணை இருபாற் பொதுப்பெயரும், ஒழிந்தன என்னும் பொது வினையும், உழவு என்னும் குறிப்பினால் பெண்பாலை ஒழித்தன.

இப்பெற்றங்கள் பால்சொரிந்தன—இதில் பெற்றங்கள் என்னும் பொதுப்பெயரும், சொரிந்தன என்னும் பொதுவினையும், பால் என்னுங் குறிப்பினால் ஆண்பாலை ஒழித்தன. (க)

[செய்யுளில் சில பெயர்வினைகளின் ஈற்றயல் ஆ ஓ ஆகத்திரிதல்.]

353. பெயர்வினை யிடத்து னளரய வீற்றயல்
ஆவோ வாகலுஞ் செய்யுளு ளுரித்தே.

(இ-ள்.) பெயர் வினை இடத்து - பெயரிடத்தும் வினையிடத்தும், ன ள ர ய ஈறு-னகர ளகர ரகர யகர ஈற்றிற்கு, அயல் - அயலி லுள்ள, ஆ - (விகுதிமுதல்) ஆகாரம், ஓ ஆகலும் - ஓகாரமாதலும் செய்யுளுள் - செய்யுளிடத்து, உரித்து - உரித்தாம், எ - று.

உ-ம்-வில்லான் —"வில்லோன் காலணகழலே"
தொடியாள்—"தொடியோண்மெல்லடிமேலணிலம்பே"
நல்லார்—"நல்லோர்யார்கொல்"
கொடுத்தாய்—"வரையாதுகொடுத்தோய்" } பெயர்.

படைத்தான்—"படைத்தோன்மன்றவப்பண்பிலாளன்"
பெயர்த்தாள்—"நல்லோண்மன்ற கூட்பெயர்த்தோளே"
சென்றார்—"சென்றோர் அன்பிலர்தோழி"
வந்தாய்—"வந்தோய்மன்றதெண் கடற்சேர்ப்ப" } வினை.

வினையாலணையும் பெயரிடத்தல்லாது வினையிடத்து ஆ ஓ வாய்த் திரிந்துவருதல் சிறுபான்மை எனக்கொள்க. "ஆவோவாகலும்" என்ற உம்மையை ஆக்க உம்மையாகக்கொண்டு "மலைகிழவோனே" என அகரம் ஒரோவிடத்து ஓகாரமாகி வருதலுங்கொள்க. வழக்கிடத்தும் சிறியோர், பெரியோர், நல்லோர், தீயோர் எனச் சிறுபான்மை வரும். (உ)

[உருபும் வினையீறும் எதிர்மறையிலும் திரியா என்பது.]

354. உருபும் வினையு மெதிர்மறுத் துரைப்பினும்
திரியா தத்தமீற் றுருபி னென்ப.

(இ-ள்.) உருபும் - (எட்டுவேற்றுமை) உருபுகளும், வினையும்- (மூவகை) வினைச்சொற்களும், எதிர்மறுத்து - எதிர்மறுத்தல்செய்து, உரைப்பினும் - சொல்லுமிடத்தும், தத்தம் ஈற் (றின்)-தத்தம் ஈற்றினின்றும், உருபின் - அவ்வுருபினின்றும், திரியா-வேறுபடா, என்ப - என்று சொல்லுவர் புலவர். எ - று.

உருபு உருபினின்றும், வினை ஈற்றினின்றும் என எதிர்நிரனிறையாகப் பொருள் கொள்க. உருபின்கண் எதிர்மறுத்தல் அவைகளின் பயனிலைகளை எனக்கொள்க.

(உருபு எதிர்மறுத்தல்.)

(உ-ம்.) சாத்தன்வாரான்	நிலையினீங்கான்
குடத்தைவனையான்	பொருளினதின்மை
வாளாலெறியான்	தீயர்கட்சேரான்
புல்லர்க்குக்கொடான்	சாத்தாபோகேல்

வினையெதிர்மறுத்தல்:—நடவான், நடவாத, நடவாது.

ஓடாக்குதிரை — இதில் ஓடாத என்னும் பெயரெச்ச வீறு கெட்டது.

உரையிற்கோடலால், நடந்து - நடவாமல், நடவாமை, நடவாமே என வினையெச்சமும், நடத்தல் - நடவாமை எனத் தொழிற்

பெயரும், எண்ணும்- எண்ணேல் எண்ணுதே என ஒருமையேவலும் ஈறு திரிந்தும் வருமெனக்கொள்க. (௩)

[உருபும் வினையும் அடுக்கி முடிதல்.]

355. உருபுபல வடுக்கினும் வினைவே றடுக்கினும்
ஒருதம் மெச்ச மீறுற முடியும்.

(இ-ள்.) உருபு - (வேற்றுமை) உருபுகள், பல அடுக்கினும் - விரிந்துந் தொக்குந் தம்முள் விரவிப் பல அடுக்கிவரினும் விரவாமல் பல அடுக்கிவரினும், வினை - (மூவகை) வினைச்சொற்களும், வேறு (பல) அடுக்கினும் - விரவாமற் பல அடுக்கிவரினும், ஒரு தம்மெச்சம்- தத்தமெச்சமொன்று, ஈறு உற- இறுதியில்வர, முடியும் - அதனோடு அவை எல்லாம் முடியும். எ - று.

(உ-ம்.)

அரசனனவன்பகைவனை வாளால்வெட்டினன்	உருபுவிரவிப் பலவடுக்கி,ஒரு வினை கொண்டன.
சாத்தனையுங் கொற்றனையும் வாழ்த்தினன் சாத்தனுக்குங் கொற்றனுக்குந் தந்தை	ஐயுருபுங் குவ்வுருபும் விரவாமல் பலவடுக்கி முறையே ஒருவினையும் ஒருபெயருங் கொண்டன.
பொன்னைக்கொண்டான் அருளறமுடையான்	விரவியும் விரவாமலும் உருபு தொக்கு ஒருவினை கொண்டன.
ஆடினன் பாடினன் சாத்தன் இளையள்மெல்லியள் மடந்தை	வினைமுற்றுங் குறிப்புமுற்றும் விரவாமல் பலவடுக்கி முறையே ஒரு பெயர் கொண்டன.
கற்றகேட்ட பெரியோர் கற்றுக்கேட்டு அறிந்தார்	பெயரெச்சமும் வினையெச்சமும் விரவாமல் பலவடுக்கி முறையே ஒரு பெயரும் ஒரு வினையும் கொண்டன. (௪)

[இடைப்பிறவரல்.]

356. உருபு முற்றீ ரெச்சங் கொள்ளும்
பெயர்வினை யிடைப்பிற வரலுமா மேற்பன.

(இ-ள்.) உருபு - வேற்றுமை உருபுகளும், முற்று - முற்றுக் களும், ஈர் எச்சம் - பெயரெச்ச வினையெச்சங்களும், கொள்ளும்- கொண்டுமுடியும், பெயர் வினை யிடை - பெயர்க்கும் வினைக்கு மிடையே, பிற - பிறசொற்கள், ஏற்பன - பொருந்துவனவாய், வர லும் ஆம் - வருதலுமாம்.எ-று.

(உ-ம்.)

சாத்தன் (வயிறார) உண்டான்.
அறத்தை (அழகுபெறச்) செய்தான்.
வாளான் (மாய) வெட்டினான்.
தேவர்க்குச் (செல்வம் வேண்டிச்) சிறப்பெடுத்தான்.
மலையினின்று (உருண்டு) வீழ்ந்தான்.
சாத்தனது (இத்தடக்கை) யானை.
ஊர்க்கண் (உயர்ந்த வொளி) மாடம்.
சாத்தா (விரைந்தோடி) வா. } வேற்றுமை.

வந்தான் (அவ்வூர்க்குப்போன) சாத்தன். வினைமுற்று.
வந்த (வடகாசி) மன்னன். பெயரெச்சம்.
வந்து (சாத்தன் இன்றைக் கவனூர்க்குப்) போயினான். வினையெச்சம். (௫)

[முடிக்குஞ் சொற்கள் ஈற்றினும் வருமென்பது.]

357. எச்சப் பெயர்வினை யெய்து மீற்றினும்.

(இ-ள்.) எச்சம் - (உருபுகளும்முற்றுக்களும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களுங் கொண்டுமுடியும்) எச்சமாகிய, பெயர் வினை - பெயரும் வினையும், ஈற்றினும் - (அவற்றிற்கு) ஈற்றினும், எய்தும் - வரும். எ - று.

ஈற்றினும் என்ற உம்மையால் முதலினும் வருதல் கொள்க.

(ஈறு.)	(முதல்.)	
சாத்தன்வந்தான்	வந்தான்சாத்தன்	உருபுகளின்எச்சங்கள் ஈரிடத்தும்வந்தன.
மரத்தைக்குறைத்தான்	குறைத்தான்மரத்தை	
சாத்தனால்வந்தான்	வந்தான்சாத்தனால்	
சாத்தனுக்குக்கொடுத்தான்	கொடுத்தான்சாத்தனுக்கு	
சாத்தனினீங்கினான்	நீங்கினான்சாத்தனின்	
சாத்தனதாடை ...	————	
சாத்தன்கட்சென்றான்	சென்றான்சாத்தன்கண்	
மணியின்கணொளி ...	————	
சாத்தாவா	வாசாத்தா	

வந்தான்சாத்தன்	சாத்தன்வந்தான்	முற்றெச்சங்களின் எச்சங்கள் ஈரிடத்தும் வந்தன.
வந்தசாத்தன் ...	————	
வந்துபோயினான்	போயினான்வந்து.	

முதற்கண் வருதலை உம்மையாற் றழுவிக்கொள்ளுதலால் ஆறனுருபி னெச்சமும் ஏழனுருபி னெச்சப்பெயரும் பெயரெச்சத்தி னெச்சமும் முதற்கண் வாரா என்பதும், ஒழிந்தவை முதற்கண் வரினும்

இறுதியில் வருதல்போல் சிறப்பின அல்ல என்பதும் தோன்றுதல் அறிக. (௬)

[ஒருமொழி தன்னினத்தையு முணர்த்து மென்பது.]

358. ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே.

(இ-ள்.) ஒருமொழி - பெயர் வினை இடை உரிகளுள்) ஒரு சொல், ஒழி - ஒழிந்துநின்ற, தன்இனம் - தன்னுடைய இனங்களை, கொளற்கு - கொண்டு முடிதற்கு, உரித்து - உரித்தாகும். எ - று.

(உ-ம்.)

சோற்றை நனியுண்டான் என்பதில் கறியை நனி தின்றான் எனவும், பாக்கை நனி தின்றான் என்பதில் வெற்றிலையை நனி தின்றான், சுண்ணாம்பை நனி தின்றான் எனவும், நஞ்சுண்டவன் சாவான் என்பதில் நஞ்சுண்டவள் சாவாள், நஞ்சுண்டவர் சாவார், நஞ்சுண்டது சாம், நஞ்சுண்டவை சாம் எனவும் கூறாதே அமைதலின் இனங்களாய் எஞ்சி நின்றன.

இவற்றுள், சோற்றை என்கிற பெயர்ச்சொல்லும் உருபிடைச் சொல்லும், கறியை என்கிற பெயர்ச்சொல்லையும் உருபிடைச்சொல்லையும், நனியுண்டான் என்கிற உரிச்சொல்லும்வினைச்சொல்லும்,நனி தின்றான் என்கிற உரிச்சொல்லையும் வினைச்சொல்லையும் கொள்ளுதற்குரியவாய் நிற்றல் காண்க. (௭)

[பொதுப்பெயர் பொதுவினைகளின் பொதுமை நீங்கும்வழி.]

359. பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்
மேல்வருஞ் சிறப்புப் பெயர்வினை தாமே.

(இ-ள்.) பொது - (திணை பால் இடங் காலங்களுக்குப்) பொதுவாகிய, பெயர் வினைகளின் - பெயர் வினைகளுடைய, பொதுமை - பொதுத்தன்மையை, மேல்வரும் - மேலே வருகிற, சிறப்புப்பெயர் வினை தாமே - சிறப்பாகிய பெயர்களும் வினைகளுமே, நீக்கும் - நீக்கி ஒன்றற் குரிமைசெய்யும். எ - று.

(உ-ம்.)

சாத்தன் அவன் சாத்தன் அது	சிறப்புப்பெயர்	பெயரின் திணைப் பொதுமையை நீக்கின.
சாத்தன் வந்தான் சாத்தன் வந்தது	சிறப்புவினை	
ஒருவர் என் தந்தையார் ஒருவர் என் தாயார்	சிறப்புப்பெயர்	பெயரின் பாற் பொதுமையை நீக்கின.
மரம் வளர்ந்தது மரம் வளர்ந்தன	சிறப்புவினை	

யாமெல்லாம் வந்தோம்
நீவிரெல்லாம் போமின்
அவரெல்லாம் வருவார்
} சிறப்புப்பெயர் வினைகள். { பெயரின் இடப் பொதுமையை நீக்கின.

வாழ்க அவன்
வாழ்க அவள்
வாழ்க அவர்
வாழ்க அது
வாழ்க அவை
வாழ்க யான்
வாழ்க யாம்
வாழ்க நீ
வாழ்க நீவிர்
} சிறப்பு ப்பெயர் { வினையின் திணைபா லிடப் பொதுமையை நீக்கின.

உண்டுவந்தான்
உண்டுவந்தாள்
உண்டுவந்தார்
உண்டுவந்தது
உண்டுவந்தன
உண்டுவந்தேன்
உண்டுவந்தோம்
உண்டுவந்தாய்
உண்டுவந்தீர்
} சிறப்பு வினைகள் { வினையின் திணைபா லிடப் பொதுமையை நீக்கின.

(அ)

[எச்சங்களும் அவைகளின் முடிபுகளும்.]

360. பெயர்வினை யும்மைசொற் பிரிப்பென வொழியிசை
எதிர்மறை யிசையெனுஞ் சொல்லொழி பொன்பதுங்
குறிப்புந் தத்த மெச்சங் கொள்ளும்.

(இ-ள்.) பெயர்ச் (சொல்லொழிபு) - பெயரெச்சமும், வினைச் (சொல்லொழிபு) - வினையெச்சமும், உம்மைச் (சொல்லொழிபு)-உம்மையெச்சமும், சொற் (சொல்லொழிபு)-சொல்லெச்சமும், பிரிப்புச் (சொல்லொழிபு) - பிரிநிலையெச்சமும், எனச் (சொல்லொழிபு) - எனவெச்சமும், ஒழிஇசைச் (சொல்லொழிபு)-ஒழியிசையெச்சமும், எதிர்மறைச் (சொல்லொழிபு)-எதிர்மறையெச்சமும், இசைச் (சொல்லொழிபு)-இசையெச்சமும், எனும்-என்கிற, சொல்லொழிபு-சொல்லெச்சங்கள் ஒன்பதும், குறிப் (பொழி) பும் - குறிப்பெச்சமும், தத்தம் - தம் தம்முடைய, எச்சம் - எச்சங்களை, கொள்ளும் - கொண்டு முடியும். எ - று.

எனவே, எச்சங்கள் சொல்லெச்சங் குறிப்பெச்சம் என இருவகைப்படும் என்பதாயிற்று.

இப்பத்தெச்சங்களுள் பெயரெச்சம், வினையெச்சம், எனவெச்சம் என்னு மூன்றற்கும் எச்சச்சொற்கள் அவ்வவ் வாக்கியங்களில் வெளிப்பட்டுநிற்கும். மற்றவைகளில் எச்சச்சொற்கள் வருவித்துரைக்கப்படும்.

(உ-ம்.)

1. செய்த சாத்தன் நல்ல சாத்தன்	பெயரெச்சம் தம் மெச்சங்களாகிய செய்பவனது பெயரைக் கொண்டன.
2. செய்துவந்தான் செய்து நல்லனுயினுன்	வினையெச்சம் தம் மெச்சங்களாகிய தெரிநிலைவினைமுற்றுக் குறிப்புமுற்றுக்களைக் கொண்டன.
3. சாத்தனும் வந்தான் நளனும் போனுன்	உம்மையெச்சம் முறையே முன்னே கொற்றன் வந்தான், மற்றத்தேவர்கள் போனுர்கள் என்னும் தம் மெச்சங்களைக் கொண்டன
4. நல்லவனென்றுன்	சொல்லெச்சம் நல்லவன் என்று சொன்னுன் எனச் சொல் என்னுந் தன் எச்சங் கொண்டது.
5. சாத்தனே கொண்டான் சாத்தனே கொண்டான்	பிரிநிலையெச்சம் பிறர் கொண்டிலரெனத் தம்மெச்சங் கொண்டன.
6. கடலொல்லென ஒலித்தது விண்ணென இசைத்தது	எனவெச்சம் தம் மெச்சமாகிய வினையைக் கொண்டன. மிகவும் ஒலித்தன மிகவும் இசைத்தன என்பன பொருள்.
7. கூரியதோர் வாண்மன் உண்ணுதற்கோ வந்தான்.	ஒழியிசையெச்சம் முறையே கோடிற்று, கலகஞ் செய்ய வந்தான் எனத்தம் மெச்சங்கொண்டன.
8. வரலுமுரியன் யானே செய்தேன் "மறப்பினு மோத்துக் கொளலாகும்"	எதிர்மறையெச்சம் முறையே வராமைக்கு முரியன், யான் செய்திலேன், மறக்கலாகாது எனத் தம் மெச்சங்கொண்டன.

9. "கற்றதனு லாயபய
னென்கொல்"
"அந்தா மரையன்னமே நின்னை
யானகன் ருற்றுபமே"

இசையெச்சம் (நூலை) கற்றதனால் என ஒரு சொல்லும், (என்னுயிரினுஞ் சிறந்த) உன்னை எனப் பல சொற்களும் வருவித்துரைக்கப்படுதல் காண்க.

இசையெச்சமாவது வாக்கியங்களில் அவ்வவ் விடங்களிற் கேற்றபடி ஒரு சொல்லும் பல சொற்களுமாக வருவித் துரைக்கப்படுவது. [இசை=சொல்.]

10. குறிப்பெச்சமாவது பெயரியல் 12-ம் சூத்திரத்திலே "ஒன்றொழி பொதுச்சொல்" முதலாக "இன்னபிறவும்" வரைக்கும் சொல்லப்பட்டவைகளாம். "ஆயிர மக்கள் போர் செய்தார்" என்கிற விடத்தே மக்களென்னும் பொதுப்பெயர் ஆடவர் என்னும் சிறப்புப்பெயர் கொண்டது. (௯)

[தொகைநிலைத் தொடர்மொழிகளின் இலக்கணம்.]

361. பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளி னவற்றி னுருபிடை
ஒழிய விரண்டு முதலாத் தொடர்ந்தொரு
மொழிபோ னடப்பன தொகை நிலைத் தொடர்ச்சொல்

(இ-ள்.) பெயரொடு பெயரும் - பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல்லும், (பெயரொடு) வினையும் - பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும், வேற்றுமைமுதலிய - (பின்சொல்லப்படும்) வேற்றுமை முதலாகிய, பொருளின் - (அறுவகைப் பொருட்) புணர்ச்சிக்கண், அவற்றின் - அவற்றினுடைய, உருபு - உருபுகள், இடை ஒழிய - நடுவிலே தொக்குநிற்ப, இரண்டுமுதலாதொடர்ந்து - இரண்டு சொற்கள் முதலாகப் பல சொற்கள் தொடர்ந்து, ஒருமொழிபோல் - ஒரு சொற்போல, நடப்பன - நடப்பவை, தொகைநிலைத் தொடர்சொல் - தொகைநிலைத் தொடர்ச்சொற்களாம். எ - று.

தொகையென்பது இங்கே உருபுமறைதல். (௧௦)

[தொகைநிலைத் தொடர்.]

362. வேற்றுமை வினைபண் புவமை யும்மை
அன்மொழி யெனவத் தொகையா றாகும்.

(இ-ள்.) வேற்றுமைத் (தொகை) - வேற்றுமைத் தொகையும், வினைத் (தொகை)-வினைத் தொகையும், பண்புத் (தொகை) - பண்புத்தொகையும் - உவமைத் (தொகை) - உவமைத்தொகையும், உம்

மைத் (தொகை)-உம்மைத் தொகையும், அன்மொழித்(தொகை)-அன்மொழித்தொகையும், என - என்று, அத்தொகை-முன்னே சொல்லப்பட்ட தொகைநிலைத் தொடர்மொழிகள், ஆறு ஆகும் - ஆறுவகைப்படும். எ-று. (௧௧)

[வேற்றுமைத்தொகை.]

363. இரண்டு முதலா மிடையா றுருபும்
வெளிப்பட லில்லது வேற்றுமைத் தொகையே.

(இ-ள்.) இடை-(எழுவாய்க்கும் விளிக்கும்) இடையே நிற்கிற, இரண்டு முதல் ஆம் - இரண்டாவது முதலாயிருக்கின்ற, ஆறு உருபும் - ஆறு வேற்றுமையுருபுகளும், வெளிப்படல் இல்லது - தொக்க தொடர்மொழிகள், வேற்றுமைத்தொகை - வேற்றுமைத் தொகைகளாம்-எ - று.

(உ-ம்.)

நிலங்கடந்தான்	—௨ - ம்.	வேற்றுமைத்தொகை.
தலைவணங்கினான்	—௩ - ம்.	வேற்றுமைத்தொகை.
சாத்தன்மைந்தன்	—௪ - ம்.	வேற்றுமைத்தொகை.
ஊர்நீங்கினான்	—௫ - ம்.	வேற்றுமைத்தொகை.
சாத்தன்கை	—௬ - ம்.	வேற்றுமைத்தொகை.
குன்றக்கூகை	—௭ - ம்.	வேற்றுமைத்தொகை.

(இருமொழித் தொடர்.)

யானைக்கோட்டு நுனிக்குறைத்தான்—இது பன்மொழித்தொடர்.

எனவே, கடந்தான் நிலம், இருந்தான் குன்றத்து என இறுதியிலே தொகின், நிலங்கடந்தான், குன்றத்திருந்தான் எனக் கூட்டப்படுதலால் இடையிலே தொக்கவையேயாம். மற்ற வேற்றுமைகள் இறுதியில் தொக்குவரா.

ஆறுருபும் என்கிற முற்றும்மையை எச்சவும்மையாக்கி, கைக்களிறு, பொற்குடம் என்பனபோல உருபுடனே முடிக்குஞ் சொல் தொக்கவையும் தொகைநிலைத் தொடராம் எனக்கொள்க. இவை கையையுடைய களிறு, பொன்னாற் செய்த குடம் என விரியும். இவை உருபும் பயனு முடன்றொக்க தொகை எனப்படும்.

வேற்றுமை யுருபுகள் இடையிலே தொகும் என்றார் ஆயினும் சாத்தனை அடைந்தான், சாத்தனோடு வந்தான், சாத்தனுக்கு நல்கினான், சாத்தனின் நீங்கினான், சாத்தன்கணின்றான் என்பவைகளைச் சாத்தனடைந்தான், சாத்தன் வந்தான், சாத்தன் நல்கினான், சாத்

தன் நீயிஞன், சாத்தன் நின்ருன் எனத்தொகை நிலையாகப் புணர்த்தின் எழுவாயும் பயனிலையுமாகப் பொருள் வேறுபடுதலால், அந்தந்தப் பொருள்களைத் தருதற்குரிய இடங்களில் அன்றித் தொகா எனக்கொள்க. (கஉ)

[வினைத்தொகை.]

364. காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை.

(இ-ள்.) காலம் கரந்த - காலம் பற்றிப் புடைபெயர்கிற வினையுருபுகள் தொக்க, பெயரெச்சம் - பெயரெச்சவினைகள், வினைத்தொகை-வினைத்தொகைகளாம். எ - று.

காலம் - ஆகுபெயர். காலம்பற்றிப் புடைபெயர்வினை யுருபுகள் தொகு மெனவே முதனிலைமாத்திரந் தொகா திருக்கு மென்பது பெற்ரும்.

(உ-ம்.)

நேற்றுக்கொல்களிறு முன்விடுகணை	...	இறந்தகால வினைத்தொகை.
இன்றுகொல்களிறு இப்போதுவிடுகணை	...	நிகழ்கால வினைத்தொகை.
நாளைக்கொல்களிறு பின்விடுகணை	...	எதிர்காலவினைத்தொகை.

இவை முறையே கொன்ற, கொல்கிற, கொல்லும் எனவும், விட்ட, விடுகின்ற, விடும் எனவும் விரியும். இவை முக்காலம்பற்றி வரின் முக்காலவினைத்தொகை எனப்படும்.

வருவழி, தருபுனல், நடந்திடுதிரை எனச் சிலவினைத்தொகை முதனிலை திரிந்தும் வரும். (கரு)

[பண்புத்தொகை.]

365. பண்பை விளக்கு மொழிதொக் கனவும்
ஒருபொருட் கிருபெயர் வந்தவுங் குணத்தொகை.

(இ - ள்.) பண்பை - (பண்போடு பண்பிக்கு உண்டாகிய ஒற்றுமை) நயத்தை, விளக்கும் - விளக்குகிற, மொழி - (ஆகிய என்னும்) பண்புருபு, தொக்கனவும் - தொக்கு நின்றவையும், ஒரு பொருட்கு - ஒரு பொருளுக்கு, இருபெயர் - (பொதுப்பெயருஞ் சிறப்புப்பெயருமாகிய) இருபெயர்கள், வந்தவும் - வந்தவையும், குணத்தொகை - பண்புத்தொகைகளாம். எ-று.

குணத்தொகை என்றதனால் ஒரு பொருளுக்கு வருகிற அவ்விரண்டு பெயர்க்கும் நடுவில் ஆகிய வென்கிற பண்புருபு தொக்கு வருமென்பது பெறப்பட்டது. பண்பெனப் பொதுப்படச் சொன்னதனால் வண்ணம், வடிவு, அளவு, சுவை முதலாயினவை யெல்லாங் கொள்க.

(உ-ம்.)

செந்தாமரை கருங்குவளை	வண்ணப் பண்புத்தொகை.
வட்டக்கல் சதுரப்பலகை	வடிவுப் பண்புத்தொகை.
ஒருபொருள் முக்குணம்	அளவுப் பண்புத்தொகை.
துவர்க்காய் இன்சொல்	சுவைப் பண்புத்தொகை.
சாரைப்பாம்பு ஆயன்சாத்தன்	இருபெயரொட்டுப்பண்புத்தொகை.
செந்நிறக்குவளை கரும்புருவச்சிலை	பன்மொழித்தொடர்.

இவை செம்மையாகிய தாமரை, வட்டமாகிய கல், ஒன்றாகிய பொருள், துவர்ப்பாகிய காய், சாரையாகிய பாம்பு, செம்மையாகிய நிறமாகிய குவளை என விரியும். (௧௯)

[உவமத்தொகை.]

366. உவம வுருபில துவமத் தொகையே.

(இ-ள்.) உவம உருபு - (வினை பயன் மெய் உரு என்பவற்றைப்பற்றி வருகிற) உவம உருபுகள், இலது-தொக்க தொடர்மொழிகள், உவமத்தொகை - உவமத்தொகைகளாம். எ-று.

(உ-ம்.)

புலிக்கொற்றன் குருவிகூப்பிட்டான்	வினையுவமத்தொகை.
மழைக்கை கற்பகவள்ளல்	பயனுவமத்தொகை.
துடியிடை உரற்கால்யானை	மெய்யுவமத்தொகை.

பொற்சுணங்கு . . } உருவுவமத்தொகை.
பவளவாய் . .

மரகதக்கிளிமொழி } பண்மொழித்தொடர்.
திருண்மழைக்கை .

இவை புலிபோலுங்கொற்றன், மழைபோலுங்கை, துடிபோலு மிடை, பொன்போலுஞ் சுணங்கு, மரகதம்போலுங் கிளிபோலு மொழி எனவிரியும். செயப்படுபொருள் குறித்தால் புலியைப்போலு மென ஐயுருபுந் தோன்றும். (கரு)

[உவம உருபுகள்.]

367. போலப் புரைய வொப்ப வுறழ
மானக் கடுப்ப வியைய வேய்ப்ப
நேர நிகர வன்ன வின்ன
என்பவும் பிறவு முவமத் துருபே.

(இ-ள்.) போல ... நிகர - போல முதலாகிய இச்செயவெனெச்சம் பத்தும், அன்ன இன்ன என்பவும் - அன்ன இன்ன என்கிற பெயரெச்சக் குறிப்பிரண்டும், பிறவும் - இவைபோல்வன பிறவும், உவமத்துருபு - உவம உருபுகளாம்.

பிற என்றதனால் போலமுதலானவைகளின் முதனிலையிற் பிறக்கின்ற மற்றை வினையெச்சங்களும், வினைமுற்றுக்களும், பெயரெச்சங்களும், பொருவ, ஏற்ப, அனைய, இகல, எதிர, சிவண, மலைய முதலானவையுங் கொள்க. (கசு)

[உம்மைத்தொகை.]

368. எண்ண லெடுத்தன் முகத்த னீட்டல்
எனுநான் களவையு ளும்மில தத்தொகை.

(இ - ள்.) எண்ணல் - எண்ணலளவையும், எடுத்தல்-எடுத்தலளவையும், முகத்தல் - முகத்தலளவையும், நீட்டல் - நீட்டலளவையும், எனும் நான்கு அளவையுள் - என்கிற நான்களவைப்பெயர்களுள், உம் இலது - உம்மையாகிய உருபுதொக்கு நிற்பவை, அத்தொகை-அவ்வும்மைத்தொகைகளாம். எ-று.

(உ - ம்.)

ஒன்றேகால் . . } எண்ணலும்மைத் தொகை.
கபிலபரணர் . . . .

கழஞ்சேகால் ... ... } எடுத்தலும்மைத் தொகை.
தொடியேகஃகு ... ...

கலனே தூணி ... ... } முகத்தலும்மைத் தொகை.
நாழியாழாக்கு ... ...

சாணங்குலம் ... ... } நீட்டலும்மைத் தொகை.
சாணரை ... ...

சேரசோழபாண்டியர் ... } பன்மொழித்தொடர்.
புலிவிற்கெண்டை ... ...

இவை ஒன்றுங் காலும், கழஞ்சுங் காலும், கலனுந் தூணியும், சாணுமங்குலமும், சேரனுஞ் சோழனும் பாண்டியனும் என விரியும். (கள)

[அன்மொழித்தொகை.]

369. ஐந்தொகை மொழிமேற் பிறதொக லன்மொழி.

(இ - ள்.) ஐந்தொகை மொழிமேல் - (வேற்றுமைத்தொகை முதலிய) ஐவகைத் தொகைநிலைத் தொடர்மொழிகளுக்கும் புறத்தே, பிற - (அவையல்லாத) பிறமொழிகளாகிய உருபுகள், தொகல் - தொக்கு வருவன, அன்மொழி - அன்மொழித் தொகைகளாம். எ-று.

(உ - ம்.)

1.
- பூங்குழல் —உ - ம் வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை; =பூவையுடையகுழலினையுடையாள் எனவிரியும்.
- பொற்றொடி —ங - ம் வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை; =பொன்னலாகியதொடியினையுடையாள் எனவிரியும்.
- கவியிலக்கணம் —ச - ம் வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை; =கவிக்கிலக்கணஞ் சொல்லப்பட்ட நூல் எனவிரியும்.
- பொற்றாலி —ரு-ம் வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை; =பொன்னினாகிய தாலியினை யுடையாள் என விரியும்.

கிள்ளிகுடி —௬-ம் வேற்றுமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; =கிள்ளியினது குடியிருக்குமூர்.

கீழ்வயிற்றுக்கழலை —எ-ம் வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; =கீழ்வயிற்றின்கண் எழுந்த கழலை போல்வான் எனவிரியும்.

2. தாழ்குழல் —வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; =தாழ்ந்த குழலினையுடையாள் என விரியும்.

3. கருங்குழல் —பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; =கருமையாகிய குழலினை யுடையாள் எனவிரியும்.

4. துடியிடை —உவமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; =துடிபோலு மிடை யுடையாள் எனவிரியும்.

5 உயிர்மெய் —உம்மைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; =உயிரு மெய்யுமாகிய இரண்டுங் கூடிப்பிறந்த எழுத்து எனவிரியும்.

தகரஞாழன்மார்பு —பன்மொழித்தொடர்; =தகரமும் ஞாழலும் கூடி யுண்டாகிய சாந்தை யணிந்த மார்பினையுடையாள் எனவிரியும். (௧௮)

தகரம்-வாசனைத்திரவியம், ஞாழல்-குங்குமம்.

{ தொகைநிலைத்தொடர் மொழிகளில் பொருள் சிறந்து நிற்கும் இடங்கள். }

370. முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி
எனுநான் கிடத்துஞ் சிறக்குந் தொகைப்பொருள்.

(இ - ள்.) முன்மொழி - முன்சொல்லும், பின்மொழி - பின்சொல்லும், பன்மொழி - பலசொற்களும், புறமொழி - புறத்துவருகிற சொல்லும், என்னும் நான்கிடத்தும் - என்கிற நான்கிடத்தி லொன்றிலே, தொகைப்பொருள் - தொகைநிலைத் தொடர்ப் பொருள், சிறக்கும்-சிறந்துநிற்கும்.எ-று.

(உ - ம்.)

குடம்வனைந்தான் ... ... }
வேங்கைப்பூ ... ... } குடம் முதலிய முன்மொழிகள் இனம் விலக்கி நிற்கையால் அவைகளிற் பொருள் சிறந்தன.
செந்தாமரை ... ... }

நிலமுழுதான் ... ... }
கண்ணிமை ... ... } நிலம் முதலாகிய முன்மொழிகள் இனம் விலக்குதலின்றி நிற்கையால் உழுதான் முதலாகிய பின்மொழிகளிற் பொருள் சிறந்தன.
செஞ்ஞாயிறு ... ... }

கபிலபரணர் ... ... }
சேரசோழபாண்டியர் ... } எல்லா மொழிகளிலும் பொருள் சிறந்தன.
புலிவிற்கெண்டை ... }

பூங்குழல் ... ... }
கருங்குழல் ... ... } அன்மொழித் தொகைகளில் உடையாள் என்பது முதலாகிய புறமொழிகளிற் பொருள் சிறந்தன.

[இடத்தொகைபெயர்த்தொகைகட்கு வேறுபாடறிகுறி.]

371. வல்லொற்று வரினே யிடத்தொகை யாகும்
மெல்லொற்று வரினே பெயர்த்தொகை யாகும்.

(இ-ள்.) வல்லொற்று-வல்லொற்றானது, வரின் - (இடையே) வந்தால், இடத்தொகை ஆகும் - இடத்தின்கண்ணே தொக்கதொகை ஆகும், மெல்லொற்று - மெல்லொற்றானது, வரின் - (இடையே) வந்தால், பெயர்த்தொகை ஆகும்-பெயரின்கண்ணே தொக்கதொகையாம், எ - று.

(உ - ம்.)

வடுகக்கண்ணன் = வடுகநாட்டிற் பிறந்தகண்ணன்,
வடுகங்கண்ணன் = வடுகனாகிய கண்ணன், (அல்லது) வடுகனுக்கு மகனாகிய கண்ணன்.

துளுவச்சாத்தன் = துளுவநாட்டிற் பிறந்த சாத்தன்.
துளுவஞ்சாத்தன் = துளுவனாகிய சாத்தன், (அல்லது) துளுவனுக்கு மகனாகிய சாத்தன்.

159-ம் சூத்திரத்தில் "சிலவிகாரமாமுயர்திணை" என்றதினாலே வல்லின முதன்மொழிவந்து புணரும்போது ஈறுகெட்டு வல்லொற்றாவது மெல்லொற்றாவது மிகுந்துவந்தபோது வேற்றுமைத்தொகையோ பண்புத்தொகையோ எனச் சந்தேகம் தோன்றியவிடத்து மேலே கூறியபடி வல்லொற்று மிகின் வேற்றுமைத்தொகையென்றும், மெல்லொற்று மிகின் பண்புத்தொகை யென்றும் துணியவே

ண்டும். மெல்லின இடையின முதன்மொழிகளாவது, உயிர் முதன்மொழியாவது வரின் உரைப்போன் குறிப்பாலன்றித் துணியப்படா.

(உ-ம்.) வடுகநாதன், வடுகவணிகன், வடுகவரசன். (உ0)

[உம்மைத்தொகைக்குப் புறனடை.]

372. உயர்திணை யும்மைத் தொகைபல ரீறே.

(இ - ள்.) உயர்திணை - உயர்திணையொருமையில் வருகிற, உம்மைத்தொகை-உம்மைத்தொகைகளானவை, பலர் ஈறே-(ரவ்வொற்றுங் கள்ளீறுமாகிய) பலர்பால் விகுதியை யுடையனவேயாம். எ-று.

(உ-ம்.) சேர சோழ பாண்டியர், கபில பரணர்,
தேவன் றேவிகள்.

பலரீறே என்கிற தேற்றத்தால் அஃறிணை யொருமையிலும் பொதுத்திணை யொருமையிலும் வருகிற உம்மைத்தொகைகள் பன்மை விகுதி பெற்றே வரல்வேண்டு மென்கிற நியதியில்லை என்பதாயிற்று.

(உ-ம்.) நன்மை தீமை - நன்மை தீமைகள.
தந்தை தாய்-தந்தை தாய்கள், தந்தை தாயார்.

இயல்பாகிய ஒருமையீற்றால் வந்தனவாயின் உம்மைத்தொகை யாகாமல், கபிலன் பரணன் இருவரும் வந்தார் என்றாற்போலச் செவ்வெண்ணும் அன்றேவெனின், பலமொழிகளையும் ஒன்றாய்த்திரட்டி ஒரு பிண்டமாக்கிக் கூறியபோது உம்மைத்தொகையாகவும், சேரன் சோழன் பாண்டியன், எனப் பிளவுபடக் கூறியபோது செவ்வெண்ணாகவும் கொள்க. (உக)

[தொகை நிலைத்தொடர் மொழிகள் பலபொருள் படுதல்]

373. தொக்குழி மயங்குந விரண்டு முதலேழ்
எல்லைப் பொருளின் மயங்கு மென்ப.

(இ-ள்.) தொக்குழி - வேற்றுமையுருபு முதலாகிய (வுருபுகள்) தொக்கு நின்றவழி, மயங்குந - (பொருள்களினாலே) மயங்குந் தன்மையனவாகிய தொடர்மொழிகள், இரண்டு முதல் ஏழ் எல்லை - இரண்டுமுதல் ஏழீறாகியவரையறையுடைய, பொருளின் - பொருள்களால், மயங்கும்-மயங்கும், என்ப-என்று சொல்லுவர் புலவர். எ-று.

(உ-ம்.)

தெய்வவணக்கம்—(1) தெய்வத்தை வணங்குகிற வணக்கம், (2) தெய்வத்துக்கு வணக்கம் என இரண்டு பொருள்களினாலே மயங்கியது.

தற்சேர்ந்தார் —(1) தன்னைச்சேர்ந்தார், (2) தன்னொடுசேர்ந்தார், (3) தன்கட் சேர்ந்தார் என மூன்று பொருள்களினாலே மயங்கியது.

சொல்லிலக்கணம்—(1) சொல்லினதிலக்கணம், (2) சொற்கிலக்கணம், (3) சொல்லின்கணிலக்கணம், (4) சொல்லின திலக்கணஞ் சொன்னநூல் என நான்கு பொருள்களினாலே மயங்கியது.

பொன்மணி— (1) பொன்னலாகிய மணி, (2) பொன்னாகியமணி (3) பொன்னின்கண்மணி, (4) பொன்னோடு சேர்ந்தமணி, (5) பொன்னுமணியும் என ஐந்துபொருள்களினாலே மயங்கியது.

மரவேலி —(1) மரத்தைக் காக்கிற வேலி, (2) மரத்துக்கு வேலி, (3) மரத்தினது வேலி, (4) மரத்தின் புறத்து வேலி, (5) மரத்தாலாகிய வேலி, (6) மரமாகியவேலி என ஆறுபொருள்களினாலே மயங்கியது.

சொற்பொருள் —(1) சொல்லா லறியப்படுகிற பொருள், (2) சொல்லினதுபொருள், (3) சொல்லுக்குப்பொருள், (4) சொல்லின்கட்பொருள், (5) சொல்லும் பொருளும், (6) சொல்லாகிய பொருள், (7) சொல்லானது பொருள் என ஏழு பொருள்களினாலே மயங்கியது.

புலிகொல்யானை —பன்மொழித்தொடர். (1) புலியைக்கொன்ற யானை, (2) புலியானது கொன்ற யானை, (3) புலியினாலே கொல்லப்பட்ட யானை, என மூன்று பொருள்களினாலே மயங்கியது.

விரிந்து பொருள் கொள்ளின் ஏழெல்லைகடந்தும் வரும். (உ௨)

[தொகாநிலையின் இலக்கணம்.]

374. முற்றீ ரெச்ச மெழுவாய் விளிப்பொருள்
ஆறுரு பிடைஉரி யடுக்கிவை தொகாநிலை,

(இ-ள்) முற்று - வினைமுற்றும், ஈரெச்சம் - பெயரெச்சமும், வினையெச்சமும், எழுவாய் - எழுவாயும், விளி - விளியும் ஆகிய பொருள் - ஐவகைப் பொருள்களிலே (பெயர் வினைகள் புணருகிற புணர்ச்சியும்), ஆறுருபு - வேற்றுமைப் பொருள்களில் அவற்றினுருபுகளாகிய) இரண்டாவது முதலாகிய ஆறுருபுகளும் விரிந்து நிற்கப் பெயர்வினைகள் புணருகிற புணர்ச்சியும், இடை - இடைச்சொற் புணர்ச்சியும், உரி - உரிச்சொற் புணர்ச்சியும், அடுக்கு - அடுக்குப் புணர்ச்சியுமாகிய, இவை - இவ்வொன்பதும், தொகாநிலை - தொகாநிலைத்தொடர் மொழிகளாம். எ-று.

(உ-ம்.)

உண்டான்சாத்தன் ... (தெரி) கரியன்கொற்றன் ... (குறி)	வினைமுற்றுத்தொடர்.
உண்டசாத்தன் ... ... (தெரி) கரியகொற்றன் ... ... (குறி)	பெயரெச்சத்தொடர்.
உண்டுவந்தான் ... ... (தெரி) இன்றிவந்தான் ... ... (குறி)	வினையெச்சத்தொடர்,
சாத்தன்வந்தான் ... ... நம்பிபோனான்	எழுவாய்த்தொடர்.
சாத்தாவா ... ... கொற்றாகொடு	விளித்தொடர்.
குடத்தைவனைந்தான் ... ... வாளால்வெட்டினான் ... ... இரப்போர்க்கீந்தான் ... ... மலையினிழிந்தான் ... ... சாத்தனதுகை ... ... மணியின்கணொளி	வேற்றுமைத்தொகாநிலைத்தொடர்.
மற்றொன்று ... ... கொன்னேகழிந்தது	இடைச்சொற்றொடர்.
நனிபேதை ... ... கடிக்கமலம்	உரிச்சொற்றொடர்,
பாம்பு பாம்பு.. ... ... நெருப்பு நெருப்பு	அடுக்குத்தொடர்.

வேற்றுமைத் தொகை விரிந்தபோது வேற்றுமைத் தொகாநிலையாம். வினைத்தொகை விரிந்தபோது பெயரெச்சத்தொடராம். பண்

புத்தொகையும் உவமைத்தொகையும் உம்மைத்தொகையும் விரிந்தபோது இடைச்சொற்றொடராம். அன்மொழித் தொகை விரிந்தபோது வேற்றுமைத் தொகாநிலை முதல் ஏற்பனவாம். (உ௩)

[எழுவகை வழுக்கள்.]

375. திணையே பாலிடம் பொழுது வினாவிறை
மரபா மேழு மயங்கினும் வழுவே.

(இ-ள்.) திணை - இருதிணையும், பால் - ஐம்பாலும், இடம் - மூவிடமும், பொழுது - முக்காலமும், வினா - வினாவும், இறை - விடையும், மரபு-(பலவகை) மரபுகளும், ஆம் - ஆகிய, ஏழும் - ஏழும், மயங்கின் - அவ்வவற்றின் நெறி பிறழுமாயின், வழு ஆம் - வழுவாகும். எ-று.

(உ-ம்.)

அவன்வந்தது	திணைவழு
அவன் வந்தாள்	பால்வழு
யான் வந்தான்	இடவழு
நாளை வந்தான்	காலவழு
கறக்கிற வெருமை பாலோசினையோ?	வினாவழு
கடம்பூர்க்கு வழியாதோ வென்றால் இடம் பூணி என் ஆவின் கன்றன்று என்பது	விடைவழு
யானை மேய்ப்பானை இடையன், ஆடுமேய்ப்பானைப்பாகன் என்பன	மரபுவழு (உச)

[திணைபால்களோடு வினாவிடைகள் வழுவாமற் காத்தல்.]

376. ஐயந் திணைபா லவ்வப் பொதுவினும்
மெய்தெரி பொருண்மே லன்மையும் விளம்புப.

(இ-ள்.) திணை (ஐயம்) - திணை ஐயத்தையும், பால் (ஐயம்) - பாலையத்தையும், அவ்வப் பொதுவினும் - அவ்வவற்றின் பொதுச் சொல்லாலும், மெய் தெரி பொருண்மேல் - துணிந்த பொருண்மேல், அன்மையும் - அல்லாத தன்மையை வைத்தும், விளம்புப - சொல்லுவர் புலவர், எ-று.

(உ-ம்.)

வினா. (1) குற்றியோ மகனோ அவ்விடத்துத் தோன்றுகிற
வுரு—திணை ஐயத்தில் உரு எனப் பொதுச்சொல்

லாற் கூறப்பட்டது. இவ்வாறன்றி, தோன்று கின்றது தோன்றுகிறவன் எனச் சிறப்புச் சொற் களாற் கூறின் திணைவழுவும் வினவழுவும் ஆம். [குற்றி=மரக்கட்டை.]

விடை. மேல் வினவில்:—துணிந்தபொருள் குற்றியெனின் மகனன்று (=அக்குற்றி மகனன்று); மகனெனில் குற்றியல்லன் (=அம்மகன் குற்றியல்லன்); எனத்துணிந்த பொருண்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறவேண்டும்.

வினா (2) ஆண்மகனோ பெண்மகளோ அங்கேதோன்றுகிறவர்—உயர்திணைப் பால்ஐயத்தில் தோன்றுகிறவர் எனப்பொதுச்சொல்லாற் கூறப்பட்டது. இவ்வாறன்றித்தோன்றுகின்றவன், தோன்றுகின்றவள் எனச்சிறப்புச்சொற்களாற் கூறின் பால்வழூவும் வினவழூவும் ஆம்.

மேல் வினவில்:—துணிந்த பொருள் ஆண்மகனெனில் பெண்மகளல்லன் (=அம்மகன் பெண்மகள் அல்லன்), பெண்மகளெனின் ஆண் மகனல்லள் (=அப்பெண் ஆண்மகன் அல்லள்) எனத் துணிந்த பொருண்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக்கூறவேண்டும்.

வினா. (3) ஒன்றோ பலவோ இச்செய்புக்கபெற்றம்,—அஃறிணைப்பால் ஐயத்தில் பெற்றம் எனப் பொதுச்சொல்லாற் கூறப்பட்டது. பெற்றம் பால் பகா வஃறிணைப்பெயராதலால் அத்திணை இருபாலுக்கும் பொதுச்சொல்லாயிற்று. இவவாறன்றி புக்கது, புக்கன எனச் சிறப்புச்சொற்களாற்கூறின் பால் வழூவும் வினவழூவும் ஆம். [செய்-கழனி. பெற்றம்-பசு, காளை.]

மேல் வினவில்,—துணிந்த பொருள் ஒன்றாயின் பலவன்று (=அது பலவன்று), பலவெனின் ஒன்றல்ல (=அவை ஒன்றல்ல); எனத் துணிந்த பொருண்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறவேண்டும்.

மகனல்லன் அவ்வுருக் குற்றி-எனக்கூறின் சொற் பல்குதல் என்னும் வினா வழூவாம். (உ௫)

[திணைவழுவமைதி.]

377. உயர்திணை தொடர்ந்த பொருண்முதலாறும்
அதனொடு சார்த்தி னத்திணை முடிபின.

(இ - ள்.) உயர் திணை - உயர் திணையை, தொடர்ந்த - பற்றிய, பொருள்முதல் ஆறும் - பொருளாதியாறும், அதனொடு - அவ்வுயர் திணையோடு, சார்த்தின் - சேர்த்து முடிக்கின், அத்திணை முடிபின - அவ்வுயர்திணை முடிபினவாம். எ - று.

(உ-ம்.) நம்பிபொன்பெரியன்	பொருள்	இங்கு உயர்தி
நம்பிநாடுபெரியன்	இடம்	ணை எழுவாயின்
நம்பிவாழ்நாள்பெரியன்	காலம்	பயனிலையோடு
நம்பிமூக்குக்கூரியன்	சினை	அஃறிணை எழு
நம்பிகுடிமைநல்லன்	குணம்	வாயும் முடிந்
நம்பிநடைகடியன்	தொழில்	தது.

பொன் என்னும் அஃறிணை யெழுவாய் பெரியன் என்னும் உயர் திணையெழுவாயின் பயனிலைகொண்டு முடிதலால் வழுவும், தொடர்புண்டா யிருத்தல் பற்றிச் சார்த்தி முடித்தலால் வழுவமைதியு மாயிற்று.

"சொற்றொறு மிற்றி தன்பெற்றி" என்கிற சூத்திர விதிபால், மாடுகோடு கூரிது, கிணறு நீருரிற்று என அஃறிணையோடு சேர்ப்பின் அஃறிணை முடிபாதலுங் கொள்க.

சார்த்தினெனவே சார்த்தாவிடின் வழாநிலையாக நம்பிக்குப் பொன்பெரிது, மூக்குக் கூரிது எனத் தம்முடிபேற்று வரும். (உ௬)

[திணைபால்களின் மரபு வழுவமைதி.]

378. திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்
மிகவினு மிழிபினு மொருமுடி பினவே.

(இ-ள்.) திணை-திணைகளும், பால்-பால்களும், விரவின-கலந்து நின்றனவாகிய, பொருள் பல - வேறுவினைப் பல பொருள்களும், சிறப்பினும்-சிறப்பினாலும், மிகவினும் - மிகுதியினாலும், இழிபினும்-இழிவினாலும், ஒரு முடிபின - ஒரு முடிபினவாகும். எ - று.

(திணை விரவல்.)

(1) "திங்களுஞ் சான்றோரு மொப்பர்"

இங்கு இருதிணையுங் கலந்து சிறப்பினால் திங்களும் ஒப்பர் என அஃறிணை உயர்திணை முடிபேற்றது.

'தொல்லை நால்வகைத் தோழருந் துணைமணிநெடுந்தேர்
மல்லற்றம்பியுமாமனு மதுவிரிகமழ் தார்ச்
செல்வன்றாதையுஞ் செழுநகரொடுவளநாடும்
வல்லைதொக்கன வளங்கெழுகோயிலு ளொருங்கே.'

இங்கு நகரும் நாடும் சிறத்தலால் முன்னின்ற உயர்திணைப் பெயர் நான்கும், தொக்கன என அஃறிணை முடிபேற்றன.

(2) "பார்ப்பார்தவரே சுமந்தார் பிணிபட்டார்
மூத்தார் குழவியெனு மிவர்கட்கு."

இங்கு இருதிணையுங் கலந்து மிகுதியால் அஃறிணை இவர்கள் என உயர்திணை முடிபேற்றது. "குழவி" ஒன்றே அஃறிணை. பார்ப்பார், தவர், சுமந்தார் முதலிய ஐந்தும் உயர்திணை ஆதலின் மிகுதி என அறிக.

'எச்சிலார் தீண்டார் பசுப்பார்ப்பார்தீத்தெய்வம்
உச்சந்தலையோ டிவையென்ப.'

இங்கு இருதிணையுங் கலந்து மிகுதியால் உயர்திணை இவை என அஃறிணை முடிபேற்றது. எச்சிலார், தீண்டார், பார்ப்பார் மூன்றும் உயர்திணை; பசு, தீ, தெய்வம், உச்சந்தலை என்னும் நான்கும் அஃறிணை; ஆதலின் மிகுதி என அறிக.

(3) மூர்க்கனு முதலையுங் கொண்டது விடா.

இங்கு இருதிணையுங் கலந்து இழிவினால் உயர்திணை விடா என அஃறிணை முடிபேற்றது.

"வடுகருவாளர் வான்கருநாடர்
சுடுகாடுபேயெருமை யென்றிவையாறுங்
குறுகா ரறிவுடையார்."

இங்கு முன்சொன்ன மூன்று உயர்திணைப் பெயரும் இழிவினால் பின்வந்த மூன்று அஃறிணைப் பெயரோடும் கலந்து இவை என அஃறிணை முடிபேற்றன.

(பால் விரவல்.)

"தானுந் தன்றையுந் தாழ்சடையோ னுண்டிலனேல்."
மனைவியும் தானும் வந்தான்.

இங்குச் சிறப்பினால் ஆண்பால் பெண்பாற் பெயர்கள் கலந்து பெண்பால் ஆண்பால் முடிபேற்றது.

"சொற்றொறு மிற்றி தன்பெற்றி" என்கிற விதியினுலே தோழனும் தானும் வந்தான், தோழியுந் தானும் வந்தாள் என விரவாமல் ஒருமை முடி பேற்றலுங் கொள்க.

(பொருள் பல விரவி வரல்.)

கறியுஞ்சோறுமுண்டான் ;
மாலேயுமுடியுங்கவித்தான்.

என வேறுவினைப் பலபொருள்கள் கலந்து சிறப்பினுல் "உண்டான்" "கவித்தான்" என ஒரு பொருளுக்குரிய வினைமுடியைக் கொண்டன. உண்டல் என்னும் வினைக்குரிய சோருனது தின்றல் என்னும் வினைக்குரிய கறியினும் தலைமையுடைத்தா யிருத்தலும், கவித்தல் என்னும் வினைக்குரிய முடியானது சூடுதல் என்னும வினைக்குரிய மாலையினும் தலைமையுடைத்தா யிருத்தலும் இங்கே சிறப்பு என்க. (உஎ)

[திணைபால் வழுவமைதி.]

379. உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும்
இழிப்பினும் பாறிணை யிழுக்கினு மியல்பே.

(இ-ள்.) பால் திணை-பாலும் திணையும், உவப்பினும்-மகிழ்ச்சியினுலும், உயர்வினும் - மேன்மையினுலும், சிறப்பினும் - சிறப்பினுலும், செறலினும்-கோபத்தினுலும், இழிப்பினும் - பழிப்பினுலும், இழுக்கினும் - வழுவினும், இயல்பு - இயல்பாம். எ - று.

(உ - ம்.)

பால். (1) தன்புதல்வனை, 'என்னம்மை வந்தாள்' என்பது உவப்பினுல் ஆண்பால் பெண்பாலாயிற்று.

(2) ஒருவனை, 'அவர்வந்தார்' என்பது உயர்வினு லொருமைப் பால் பன்மைப்பாலாயிற்று.

(3) 'தாதா யுலகுக்கோர் தாயே' என்பது சிறப்பினுல் ஆண் பால் பெண்பாலாயிற்று.

(4) 'எனைத்துணையராயினு மென்னாந் தினைத்துணையுந் - தேரான் பிறனில் புகல்' என்பது செறலினுற் பன்மைப்பா லொருமைப்பாலாயிற்று.

(5) பெண்வழிச் செல்வானைநோக்கி, 'இவன்பெண்' என்பது இழிப்பினு லாண்பால் பெண்பாலாயிற்று.

திணை. (1) ஓராவினை, 'என்னம்மை வந்தாள்' என்பது உவப்பினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

(2) 'செந்தார்ப் பசுங்கிளியார் சென்றார்க்கோ ரின்னுரை - தந்தாரேற் றந்தாரென் னின்னுயிர்' என்பது உயர்வி னால் அஃறிணை உயர்திணையாயிற்று.

(3) 'தம்பொருளென்ப தம்மக்கள்' என்பது சிறப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

(4) 'ஏவவுஞ்செய்கலான் றான்றேரா னவ்வுயிர்-போஒமளவு மோர் நோய்' என்பது செறலினால் உயர்திணை அஃ

(5) 'நாமரனுடைமை' என்பது இழிப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

இனிச் 'சொற்றொறு மிற்றிதன்பெற்றி' என்னும் விதியால் புதல்வனை என்னப்பன் வந்தான் எனவும், புதல்வியை என்னம்மை ந்தாள் எனவும் வழங்கும் வழுமைதியுங் கொள்க. (உ௮)

[பால் இட வழுவமைதி.]

380. ஒருமையிற் பன்மையும் பன்மையி னொருமையும்
ஓரிடம் பிறவிடந் தழுவலு முளவே.

(இ-ள்.) ஒருமையின்-ஒருமைப்பாலில், பன்மையும் - பன்மைப் பாற்சொல்லையும், பன்மையின் - பன்மைப்பாலில், ஒருமையும் - ஒரு மைப்பாற் சொல்லையும், ஓரிடம் - ஓரிடத்தில், பிறவிடம் - பிறவிடச் சொல்லையும், தழுவலும்-தழுவிக்கூறுதல்களும், உள-உளவாம். எ-று.

(உ-ம்.)

(1) வெயிலெல்லா மறைத்தது மேகம் / 'உள்ளியதெல்லா முடனெய்தும்' } அஃறிணை ஒருமையிற் பன்மை.

இங்கு வெயில், உள்ளியது என்னும் ஒருமைச் சொற்களோடு எல்லாம் என்னும் பன்மைச்சொல் சேர்த்துக் கூறப்பட்டது.

(2) இரண்டுகண்ணுஞ் சிவந்தது / 'இருநோக் கிவளுண்க ணுள்ளது' } அஃறிணைப் பன்மையி லொருமை.

இங்கு இருகண், இருநோக்கு என்னும் பன்மைச் சொற்களோடு முறையே சிவந்தது,உள்ளது என ஒருமைச் சொற்கள் சேர்த்துக் கூறப்பட்டன.

(3) 'அஃதை தந்தை யண்ணல்யானை யடுபோர்ச்செழியர்' } உயர்திணை ஒருமையிற் பன்மை.

இங்குத் தந்தை என்னும் ஒருமைச் சொல்லோடு செழியர் என்னும் பன்மைச்சொல் சேர்க்கப்பட்டது. செழியர் ஒவ்வொருவரும் தனித்தனி அஃதைக்குத் தந்தை போல்வாராதலின் வழுவமைதி யாயிற்று. அஃதை=திக்கற்றவன், திக்கற்றவள், திக்கற்றது என உயர்திணையா ணொருமை பெண்ணொருமை அஃறிணை யொருமையிலும் விரவி நிற்பதோர் பொதுச்சொல். செழியர் - பாண்டியர்.

(4) ஏவலிளையர் தாய்வயிறு கரிப்ப } உயர்திணைப் பன்மை யிலொருமை.

இங்கு ஏவலிளையர் என்னும் பன்மைச் சொல்லோடு தாய் என்னும் ஒருமைச்சொல் சேர்த்துக் கூறப்பட்டது. சேனையிலுள்ள இளையர் ஒவ்வொருவருக்கும் தாய் எனத் தனித்தனிச் சென்றியைதலால் வழுவமைதியாயிற்று.

(5) சாத்தன் றாயிவை செய்வலோ } தன்மையிற் படர்க்கை.

இங்கு நான் எனக் கூறவேண்டிய விடத்துச் சாத்தன்றாய் எனப் படர்க்கைச் சொல்லாற் கூறப்பட்டது. சாத்தன் றாயாகிய நான் என்பது பொருள்.

(6) 'எம்பியை யீங்குப் பெற்றேன்
என்னெனக் கரியதென்றான்.' } முன்னிலையிற் படர்க்கை.

இங்குத் தன் தம்பியை முன்னிலைப்படுத்தி அவனையே நோக்கிக் கூறுதலால் நின்னை எனக் கூறவேண்டு மிடத்து எம்பியை எனப் படர்க்கைச்சொற் கூறப்பட்டது.

(7) நீயோவவனோ யாரிதுசெய்தார்
யானோவவனோ யாரிதுசெய்தார்
நீயோயானோ யாரிதுசெய்தார்
நீயோவவனோ யானோ யாரிதுசெய்தார். } இடம் விரவி ஓரிடத்திற் பிறவிடம் வந்தது.

ஒருபாற்பொருளை மற்றொருபாற் சொல்லாலும் ஓரிடப்பொருளை மற்றோரிடச் சொல்லாலுங் கூறுதலால் வழுவாம்; அவை சான்றோர்க்கு ஒப்பமுடிதலால் அமைதியாயிற்று. (உக)

(இடம் வழுவாமற் காத்தல்.)

381. தரல்வரல் கொடை செலல் சாரும் படர்க்கை
எழுவா யிரண்டு மெஞ்சிய வேற்கும்.

(இ-ள்.) தரல் வரல் கொடை செலல் - தரல் என்பது முதலிய இந்நான்கு சொற்களையும், படர்க்கை - படர்க்கையானது, சாரும் -

அடையும், எழுவாய் இரண்டும் - இவற்றுள் முதலிற்சொல்லப்பட்ட தரல் வரல் என்கிற இரண்டு சொற்களையும், எழுவாயிற்றன்மை முன்னிலைகள், ஏற்கும்-ஏற்றுவரும். எ-று.

(உ-ம்.)

அவனுக்குத்தந்தான் .. ... அவனிடத்துவந்தான் .. ... அவனுக்குக் கொடுத்தான் ... அவனிடத்துச்சென்றான்.. ...	படர்க்கை.
எனக்குத் தந்தான் .. ... என்னிடத்துவந்தான்	தன்மை.
உனக்குத் தந்தான் .. ... உன்னிடத்து வந்தான்	முன்னிலை.

தரல், வரல், கொடை, செலல் என்பன அவ்வப்பகுதிகளை யுணர்த்திநின்றன ஆதலால், அவ்வப்பகுதிகளி னின்றும் பிறக்கும் வினை விகற்பங்களனைத்துங்கொள்க.

எனவே தரல், வரல் இரண்டும் தன்மை முன்னிலைக்கும்; கொடை, செலல் இரண்டும் படர்க்கைக்கும் வரின் வழாநிலை யெனவும், தரல், வரல் இரண்டும் படர்க்கைக்கும்; கொடை, செலல் இரண்டும் தன்மை முன்னிலைகளுக்கும் வரின் வழுவமைதி எனவும் கொள்க. (வழுவமைதிக்கு உதாரணம்) "பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த" "வருவிருந்து பார்த்திருப்பான்" எனத் தரலும் வரலும் தன்மை முன்னிலைகளுக்கு உரியவன்றிப் படர்க்கை யிடத்து வந்தன; இன்னுந்தரல் வரல் படர்க்கை யிடத்து வந்த வழுவமைதிக்கு மேற்காட்டிய உதாரணங்களுள்ளுங்காண்க. எனக்குக் கொடுத்தான், என்பாற் சென்றான், நினக்குக் கொடுத்தான், நின்பாற்சென்றான் எனப் படர்க்கைக்குரிய கொடை செலல் தன்மை முன்னிலைகளில் வந்தன. (௩0)

[காலம்.]

382. இறப்பெதிர்வு நிகழ்வெனக் கால மூன்றே.

(இ-ள்.) இறப்பு - இறந்தகாலமும், எதிர்வு-எதிர்காலமும், நிகழ்வு-நிகழ்காலமும், என-என்று, காலம்-காலமானது, மூன்று - மூன்றாம். எ - று. (௩க)

[காலவழுவமைதி.]

383. முக்கா லத்தினு மொத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழுங் காலத் தானே.

(இ-ள்.) முக்காலத்தினும் - மூன்றுகாலங்களிலும், ஒத்து - தமதுதொழி லிடையறுதொத்து, இயல் - நிகழுகின்ற, பொருளை - பொருள்களை, நிகழும் காலத்தான்-நிகழ்காலத்தினுல், செப்புவர்-சொல்லுவர் புலவர். எ - று.

(உ-ம்.) அரசர் பூமியை ஆளுகிறார், எனக்குத் துணை நீ யிருக்கிறாய், தெய்வ மிருக்கிறது, ஆறொழுகுகிறது. (௬உ)

[இதுவுமது.]

384. விரைவினு மிகவினுந் தெளிவினு மியல்பினும்
பிறழவும் பெறூஉமுக் காலமு மேற்புழி.

(இ-ள்.) விரைவினும் - விரைவினுலும், மிகவினும்-மிகுதியினுலும், தெளிவினும்-தெளிவினுலும், இயல்பினும் - (இம்மூன்றுகாரணங்களுமின்றி) இயல்பினுலும், முக்காலமும்-மூன்றுகாலங்களும், பிறழவும் பெறூஉம்-ஒன்று மற்றொன்றாகச் சொல்லப்படவும் பெறும், ஏற்புழி-ஏற்குமிடத்து. எ-று.

(உ-ம்.)

(1) உண்ணும்படியாக இருக்கின்றவனைக் கொண்டுபோகவேண்டிய மற்றொருவன் பார்த்து இன்னும் உண்டிலையோவென்றால், 'உண்டேனுண்டேன்' என்பான.

உண்கின்றவனை அப்படி வினவினுல் 'உண்டே னுண்டேன்' என்பான்.

இவை விரைவினுல் எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்தகாலமாயின.

(2) நீ அவனுடனே பகைத்தாற் செத்தாய்.
நீ இக்காட்டுட்போனுற் கூறை யிழந்தாய்.

இவவிடத்தே மிகுதியால் எதிர்கால மிறந்தகாலமாயிற்று. சாதலுங் கூறை யிழத்தலுந் தப்பினுலுந் தப்புமாதலான் மிகுதியாயின.

(3) அறஞ்செய்தாற் சுவர்க்கம் புக்கான்.
எறும்பு முட்டைகொண்டு திட்டையேறின் மழைபெய்தது.

இவவிடத்தே தெளிவினுல் எதிர்காலம் இறந்தகாலமாயிற்று.
உரையளவையினுற் சுவர்க்கம் புகுதற்கு அறஞ்செய்தலும், காட்சி யளவையினுலே மழை பெய்தற்கு எறும்பு முட்டை கொண்டு திட்டையேறுதலும் காரணமாகத் தெளிந்தமையினுலே தெளிவாயின.

(4) யாம் பண்டு விளையாடுவ திச்சோலை.
யாம் பண்டு விளையாடுகிற திச்சோலை.

இவ்விடத்தே காரணமில்லாமல் இயல்பினால் இறந்தகாலமே எதிர்காலமும் நிகழ்காலமு மாயிற்று. (௩௩)

[அறுவகை வினா.]

385. அறிவறி யாமை யையுறல் கொளல் கொடை
ஏவ றரும் வினா வாறு மிழுக்கார்.

(இ-ள்.) அறிவு - அறிதலும், அறியாமை - அறியாமையும், ஐயுறல் - சந்தேகித்தலும், கொளல்-கொள்ளுதலும், கொடை - கொடுத்தலும், ஏவல் - ஏவுதலும், தரும் வினா - தருதலால் வருகிற வினாக்கள், ஆறும் - ஆறினையும், இழுக்கார் - களையாது கொள்வர் புலவர். எ-று.

(உ-ம்.)

(1) இச்சூத்திரத்திற்குப் பொருள்யாது? — என ஆசிரியன் கேட்டல் அறிவினா.
(2) இச்சூத்திரத்திற்குப் பொருள்யாது? — என மாணாக்கன் கேட்டல் அறியா வினா.
(3) குற்றியோ? மகனோ? — ஐய வினா.
(4) பயறுளதோ வணிகீர்? — கொளல் வினா.
(5) சாத்தனுக் காடையில்லையா? — கொடை வினா.
(6) சாத்தா உண்டாயா? — ஏவல் வினா. (௩௪)

[எண்வகை விடை.]

386. சுட்டு மறைநே ரேவல் வினாதல்
உற்ற துரைத்த லுறுவது கூறல்
இனமொழி யெனுமெண் ணிறையு ளிறுதி
நிலவிய வைந்துமப் பொருண்மையி னேர்ப.

(இ-ள்.) சுட்டு - சுட்டும், மறை - எதிர்மறுத்தலும், நேர்-உடன்படலும், ஏவல் - ஏவுதலும், வினாதல்-எதிர்வினாதலும், உற்றது உரைத்தல்-உற்றதைச்சொல்லுதலும், உறுவது கூறல் - உறுவதைச்சொல்லுதலும், இனமொழி-இனத்தைச்சொல்லுதலும், எனும் எண் இறையுள் என்கிற இவ்வெட்டு விடைகளுள், இறுதி-ஈற்றில், நிலவிய-விளங்கிய,

ஐந்தும்-ஐந்தும், அப்பொருண்மையின் - அவ்விடைப்பொருளைத் தருதலினாலே, நேர்ப-விடைகளாகவே தழுவிக்கொள்வர் புலவர். எ-று.

எனவே முதன்மூன்றும் செவ்வன் இறை எனவும், பின்னைய ஐந்தும் இறை பயப்பனவுமாமெனவுங் கொள்க. செவ்வனிறை - வெளிப்படைவிடை. இறைபயப்பது-குறிப்புவிடை, செவ்வன்-நேர்.

(உ - ம்.)

(1) கருவூர்க்கு வழியாதெனின், 'இது' என்பது சுட்டுவிடை.
சாத்தா இது செய்வாயா என்றபோது

(2) 'செய்யேன்' என்பது மறைவிடை.

(3) 'செய்வேன்' என்பது நேர் விடை.

(4) 'நீசெய்' என்பது ஏவல்விடை.

(5) 'செய்வேனோ' என்பது வினா விடை.

(6) 'உடம்பு நொந்தது' 'நோவாநின்றது' என்பன உற்றதுரைத்தல் விடை.

(7) 'உடம்புநோம்' என்பது உறுவது கூறல் விடை.

(8) 'மற்றையது செய்வேன்'என்பது இனமொழி விடை. (ருரு)

[வினாவிடைகளில் முதல்சினை வழுவாமை.]

387. வினாவினும் செப்பினும் விரவா சினைமுதல்.

(இ-ள்.) வினாவினும் - வினாவுதற்கண்ணும், செப்பினும்-விடைகொடுத்தற் கண்ணும், சினை முதல் - சினையும் முதலும், விரவா - ஒற்றுமை கருதி மயங்கச் சொல்லப்படாவாம். எ-று.

(உ-ம்.) கண்பிறழ்ந்ததோ கயல்பிறழ்ந்ததோ என வினாவினார்க்குக் 'கண்பிறழ்ந்தது' 'கயல்பிறழ்ந்தது' எனல்வேண்டும்.

சாத்தனல்லனோ கொற்றனல்லனோ என வினாவினார்க்குச் 'சாத்தனல்லன்' கொற்றனல்லன்' எனல்வேண்டும்.

இப்படியன்றிக் கண்பிறழ்ந்ததோ என்பதற்கு அதனையுடையாளைக்குறித்து இவள் பிறழ்ந்தாளோ என வினாவுதலும், இவள் பிறழ்ந்தாள் எனச் செப்புதலும் வழுவாம். (ருசு)

[மரபு.]

388. எப்பொரு ளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர்
செப்பின ரப்படிச் செப்புதல் மரபே.

(இ-ள்.) எப்பொருள் - யாதொருபொருளை, எச்சொலின் - யாதொரு சொல்லால், எவ்வாறு-யாதொரு வழியால், உயர்ந்தோர்-அறிவுடையோர்கள், செப்பினர் - சொன்னார்களோ, அப்படி - (அப்பொருளை) அச்சொல்லால் அவ்வழியால், செப்புதல் - சொல்லுதல், மரபு-மரபாம். எ-று.

(உ-ம்.) குதிரைக்குட்டி பசுவின்கன்று
மான் கன்று யானைப்பாகன்
யானை லத்தை கிளிப்பிள்ளை

இப்படியல்லாமல் குதிரைக்கன்று, யானைச் சாணம், பசுவின் குட்டி என்பன மரபு வழுவாம். (௩௭)

[பொதுவினை மரபுவழாநிலை.]

389. வேறுவினைப் பல்பொரு டழுவிய பொதுச்சொலும
வேறவற் றெண்ணுமோர் பொதுவினை வேண்டும்.

(இ-ள்.) வேறு வினை - வெவ்வேறு வினைகளுக்குரிய, பல்பொருள் - பலபொருள்களையும், தழுவிய - ஒருசேரத் தழுவிய, பொதுச்சொலும்-ஒருபொதுச்சொல்லும், வேறு அவற்று - அவற்றின் சிறப்புச் சொற்களாக, எண்ணும்-எண்ணிநிற்கிற (பலசொற்களும்), ஓர் பொது வினை - (எல்லாவற்றிற்கு முரியதோர்) பொதுவினையை, வேண்டும்-கொண்டுமுடியும். எ-று.

உ-ம். (1) அணி அணிந்தார், அடிசிலயின்றார், படைவழங்கினார்.

இங்கு அணி என்பது கவிக்கப்படுவது, கட்டப்படுவது, இடப்படுவது, பூணப்படுவது முதலிய பல வாபரணங்களுக்கும் பொதுப் பெயர் ஆதலால் அணிந்தார் எனப் பொது வினை கொடுத்துக் கூறப்பட்டது.

அடிசில் என்பது உண்பது, தின்பது, நக்குவது, பருகுவது முதலிய பலவித உண்டிகளுக்கும் பொதுப்பெயராதலால் அயின்றார் எனப் பொதுவினை கொடுத்துக்கூறப்பட்டது.

படை என்பது எய்வன, எறிவன, வெட்டுவன,குத்துவனவாகிய பலவித ஆயுதங்களுக்கும் பொதுப்பெய ராதலால் வழங்கினார் எனப் பொதுவினை கொடுத்துக்கூறப்பட்டது.

(2) கிரீடமும் குண்டலமும் வீரக்கழலும் அணிந்தார்.
சிலநாட்சோறும் சிலநாண்மாவும் சிலநாட்பாலும்
சிலநாணீரும் சிலநாட் சருகும் அயின்றார்.
வாளும் வேலும் வரைவின்றி வழங்கினார்.

இங்குக் கவித்தல், இடுதல், கட்டுதலாகிய வெவ்வேறு தொழிலுக்குரிய கிரீடமுதலிய பலவற்றிற்கும் அணிதலாகிய பொதுவினையும்; உண்ணல், தின்னல், பருகலாகிய வெவ்வேறு தொழிலுக்குரிய சோறு முதலியவற்றிற்கு அயிலுதலாகிய பொதுவினையும்; வெட்டல் எய்தலாகிய வெவ்வேறு தொழிலுக்குரிய வாள் வேல் என்னுமாயுதங்கட்கு வழங்கலாகிய பொதுவினையும் கொடுத்துக் கூறப்பட்டன. (௩அ)

[சிறப்புவினை மரபு வழாநிலை.]

390. வினைசார் பினமிட மேவி விளங்காப்
பலபொரு ளொருசொற் பணிப்பர் சிறப்பெடுத்தே.

(இ-ள்.) வினை-வினையும், சார்பு-சார்பும், இனம்-இனமும், இடம்-இடமும், மேவி-பொருந்தி, விளங்கா-விளங்காத, பலபொருள் ஒரு சொல் - பலபொருள்படும் ஒருசொல்லை, சிறப்பு எடுத்து-சிறப்புச் சொல்லோடு கூட்டி, பணிப்பர்-சொல்லுவர் புலவர். எ-று.

எனவே வினை முதலியவற்றுள் ஒன்றைப் பொருந்தி விளங்கிக் கிடந்த பலபொரு ளொருசொல்லை வாளா கூறுவ ரென்பதாயிற்று.

(உ-ம்.) மா என்பது மாமரத்திற்கும், வண்டிற்கும், ஒருசார் விலங்கிற்கும், திருவிற்கும் பொதுவான பலபொரு ளொருசொல். இப்பொருள்களுள்:—

(1)	மாப்பூத்தது	— இங்கு மரமென்பது வினையால் விளங்கிற்று.
(2)	மாவீழ் மலர்	— இங்கு வண்டென்பது சார்பால் விளங்கிற்று.
(3)	தேர்கரிமாக்காலாள்	இங்கு குதிரையென்பது இனத்தால் விளங்கிற்று.
(4)	மாமறுத்த மார்பன்	— இங்கு திருவென்பது இடத்தால் விளங்கிற்று.

இவை அடைமொழியின்றிக் கூறப்பட்டன.

இனி மா எறிஞன், மாவியாது என்றவழிக் குறித்தபொருள் விளங்காமையால் விளங்குதற்பொருட்டு, பாய்மாவெறிஞன், மாமர

மேறினுன், பாய்மா யாது, மாமரம் யாது எனச் சிறப்புச்சொல்லோடு கூட்டிக்கூறுக. (௩௯)

[தொடர்மொழிகளைப் பொருள்விளங்கும்படி இசையறுத்துக்கூறல்.]

391. எழுத்திய றிரியாப் பொருடிரி புணர்மொழி
இசைத்திரி பாற்றெளி வெய்து மென்ப.

(இ-ள்.) எழுத்து இயல் - எழுத்தினதுதன்மை, திரியா - வேறுபடாமல், பொருள் திரி - பொருள் வேறுபட்டு நிற்கிற, புணர்மொழி - தொடர்மொழிகள், இசை திரிபால் - (குறிக்கப்பட்ட சொற்களின் இறுதியும் முதலுந்தோன்ற) இசை யறுத்துச் சொல்லுகிற வேறுபாட்டால், தெளிவு எய்தும் - துணிவுண்டாகும், என்ப - என்று சொல்லுவர் புலவர். எ-று.

உ-ம். செம்பொன்பதின்றொடி, நாகன்றேவன்போத்து, குறும்பரம்பு.

இவற்றை:—

செம்பொன் பதின்றொடி செம் பொன்பதின்றொடி நாகன் றேவன் போத்து நாகன்றே வன்போத்து, குறும் பரம்பு குறும்ப ரம்பு	இங்குபிரித்துக் காட்டியபடி இசையறுத்து உச்சரித்துக் குறித்தபொருளைக் காட்டுக.

செம்பொன்-பதின் றொடி என இசையறுத்துக் கூறின் செம்பொன் பத்துப் பலம் எனவும், செம்-பொன்பதின்றொடி என இசையறுத்துக் கூறின் செம்பு ஒன்பது பலம் எனவும் பொருள் துணியக் கிடந்தமை காண்க. பிறவுமன்ன. (௪௦)

[ஒருபொருண்மேற் பலபெயர்வரின் பயனிலைகொள்ளும் விதம்.]

392. ஒருபொருண் மேற்பல பெயர்வரி னிறுதி
ஒருவினை கொடுப்ப தனியு மோரோவழி.

(இ-ள்.) ஒருபொருள்மேல் - ஒருபொருளின்மேலே, பலபெயர் - பலபெயர்கள், வரின் - வருமாயின், இறுதி-இறுதியில், ஒருவினை - ஒரு முடிக்குஞ் சொல்லை, கொடுப்ப- (பொருளொன்றேயென்பது தோன்றக்) கொடுத்துக் கூறுவர், ஒரோவழி - ஒருபொருளொருகை தவருத விடத்தே, தனியும் - பெயர்தோறும், (கொடுப்ப) - கொடுத்துங் கூறுவர். எ-று.

(உ - ம்.)

"ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தன் வந்தான்"
"குயிலைச்சிலம்படிக்கொம்பினைத் தில்லையெங்கூத்தப்பிரான்
கயிலைச்சிலம்பிற்பைம்பூம்புனங்காக்குங்கருங்கட்செவ்வாய்
மயிலைச்சிலம்பகண்டியான்போய்வருவன்வண்பூங்கொடிகள்
பயிலச்சிலம்பெதிர்கூய்ப்பண்ணைநண்ணும்பளிக்கறைக்கே"

இவை இறுதியிலே முறையேவந்தான் எனவும், கண்டு எனவும் ஒரு சொல்லைக் கொண்டன.

'வேலோன்வருக விடலைசேய் வருக மாலோன்மருகன் வருக வென்றனனே' எனப் பெயர்தோறும் வினைகொண்டன. (சக)

[சிறப்புப்பெயர் முன்னும், இயற்பெயர் பின்னும் வருதல் மரபு.]

393. திணைநிலஞ் சாதி குடியே யுடைமை
குணந்தொழில் கல்வி சிறப்பாம் பெயரோ
டியற்பெய ரேற்றிடிற் பின்வரல் சிறப்பே.

(இ - ள்.) திணை-ஐந்திணையும், நிலம்-தேசமும், சாதி-குலமும், குடி-குடியும், உடைமை-உடைமையும், குணம்-குணமும், தொழில்-தொழிலும், கல்வி - வித்தையும், (ஆகிய இவற்றைப்பற்றி வருகிற) சிறப்பாம் பெயரோடு - சிறப்புப்பெயரோடு, இயற்பெயர்-இயற்பெயரை, ஏற்றிடின் - (ஒருபொருள் ஒருசேர) ஏற்குமாயின், பின்வரல் - (அவ்வியற்பெயர்) பின்வருதல், சிறப்பு-சிறந்தமரபாம். எ-று.

சிறப்பென்றதனால் முன் வருவது வழுவமைதியாம்.

(உ - ம்.)

குன்றவன் கொற்றன்	...	...	திணை.
கொற்றன் குன்றவன்	...	...	
அருவாளனழகன்	...	...	நிலம்.
அழகனருவாளன்	...	...	
பார்ப்பான் பாராயணன்	...	...	சாதி.
பாராயணன் பார்ப்பான்	...	...	
ஊர்கிழானோணன்	...	...	குடி.
ஓணனூர்கிழான்	...	...	
பொன்னன் பொறையன்	...	...	உடைமை.
பொறையன் பொன்னன்	...	...	

கரியன் கம்பன் ... ... கம்பன் கரியன்	}	குணம்.
நாடகி நம்பி ... ... நம்பி நாடகி	}	தொழில்.
ஆசிரியனமிழ்தன் ... ... அமிழ்தனாசிரியன்	}	கல்வி. (சஉ)

[சுட்டுப்பெயர்வரும் இடம்.]

394. படர்க்கை முப்பெயரோ டணையிற் சுட்டுப்
பெயர்பின் வரும்வினை யெனிற்பெயர்க் கெங்கும்
மருவும் வழக்கிடைச் செய்யுட் கேற்புழி.

(இ-ள்.) படர்க்கை - படர்க்கையிடத்தை யுடைய, முப்பெயரோடு - (உயர்திணைப்பெயர் அஃறிணைப்பெயர் பொதுப்பெயர் என்கிற) மூவகைப்பெயர்களோடு, சுட்டுப்பெயர் - சுட்டுப்பெயர், அணையின்-சேரின், வினையெனின் - வினையாகிய முடிக்குஞ் சொல் வருமாயின், பின் வரும் - (அச்சுட்டுப்பெயர்) பின்வரும், பெயர்க்கு - (அம் முடிக்குஞ்சொல் இல்லையாயின்) அப்பெயர்க்கு, எங்கும்-பின்னு முன்னும், மருவும்-வரும், வழக்கிடை - (இம்மரபு) வழக்கின்கண்ணேயாம், செய்யுட்கு-செய்யுளிடத்தே, ஏற்புழி-(நியதியின்றி) வேண்டியவாறே வரப்பெறும். எ-று.

(உ-ம்.)

(1)

நம்பிவந்தான் அவனுக்குச் சோறிடுக.	உயர்திணை.	வினை நிகழ்வழிச் சுட்டுப்பெயர் பின் வந்தன.
எருது வந்தது அதற்குப் புல்லிடுக.	அஃறிணை.	
சாத்தன் றெய்வம் அவனுக்குப் பலியிடுக. சாத்தன் வந்தது அதற்குப் புல்லிடுக.	பொது	

(2) நம்பி அவன்
அவன் நம்பி
குதிரை யது
அது குதிரை
} பெயர்க்குப் பின்னு முன்னுஞ் சுட்டுப்பெயர் வந்தன.

(3) அவனணங்குநோய் செய்தா னாயிழாய் வேலன்
விறன்மிகுதாரச் சேந்தன் பேர்வாழ்த்தி - முருகனார்
தன்னை யலர்கடப்பந் தாரணியி னென்னைகொல்
பின்னை யதன்கண் விளைவு.

இங்கு வினை வருவழியும் சுட்டுமுன் வந்தது.

சுட்டுப்பெயர் செய்யுளிடத்துப் பின்வருதல் வழாநிலை, முன்வருதல் வழுவமைதி. வழக்கிடத்து வினை நிகழ்வழிப் பின்வருதல் வழாநிலை. (௪௩)

[சொல் அடுக்கிவருதல்.]

395. அசைநிலை பொருணிலை யிசைநிறைக் கொருசொல்
இரண்டு மூன்றுநான் கெல்லை முறை யடுக்கும்.

(இ-ள்.) அசைநிலை - அசைநிலைக்கும், பொருணிலை - விரைவு வெகுளி உவகை அச்சம் முதலாகிய பொருணிலைக்கும், இசைநிறைக்கு - இசைநிறைக்கும், ஒருசொல் - ஒருமொழி, இரண்டு-இரண்டும், மூன்று - மூன்றும், நான்கு - நான்குமாகிய, எல்லை-அளவும், முறை-முறையாக, அடுக்கும் - அடுக்கும். எ - று.

எனவே அசைநிலைக்கு இரண்டும், பொருணிலைக்கு இரண்டு மூன்றும், இசைநிறைக்கு இரண்டும் மூன்றும் நான்கும் அடுக்குமென்றதாயிற்று.

(உ - ம்.)

அன்றே யன்றே ... ... மற்றோ மற்றோ	அசைநிலை.	
உண்டேன் உண்டேன் ... ... வந்தேன் வந்தேன் வந்தேன் ...	விரைவு	பொருணிலை.
அடி அடி ... ... கொல் கொல் கொல்	வெகுளி	
வருக வருக ... ... பொலிக பொலிக பொலிக ...	உவகை	
பாம்பு பாம்பு ... ... தீத் தீத் தீ	அச்சம்	
உய்யேன் உய்யேன் ... ... வாழேன் வாழேன் வாழேன் ...	அவலம்	
ஏ ஏ யம்பன் மொழிந்தனன் யாயே நல்குமே நல்குமே நல்குமே நாமகள் பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ	இசைநிறை.	

ஒருசொல்லைப் பலகாற் சொல்லுதல் வழுவாயினும் இவ்விடத்தே ஆமென்றல் வழுவமைதியும் இதற்கு இவையெல்லை கடவாதென்றல் வழுவாமற் காத்தலுமாம். (௪௪)

[இரட்டைக்கிளவி.]

396. இரட்டைக் கிளவி யிரட்டிற்பிரிந் திசையா.

(இ-ள்.) இரட்டைக் கிளவி - இரட்டைச்சொற்கள், இரட்டின்-அவ்விரட்டிப்பின், பிரிந்து - நீங்கி, இசையா - (தனித்து) ஒலியாவாம். எ - று.

எனவே வலிந்து பிரித்துச் சொன்னாற் பொருள்படா தென்பதும் இரட்டித்துச் சொல்லல் மரபென்பதும் ஆயின.

(உ-ம்.) "சலசல மும்மதம்பொழிய"
"குறுகுறு நடந்து"
"துடிதுடித்துத் துள்ளிவரும்" (சரு)

[அடைமொழிகளை இசையத்தொடுக்க வேண்டுமென்பது.]

397. ஒருபொருட் பல்பெயர் பிரிவில வரையார்.

(இ-ள்.) ஒரு பொருள் - ஒரு பொருளின்மேல், பல் பெயர் - பலபெயர் சொல்லும்போது, பிரிவு இல-அப்பொருளினின்றும் பிரிதலில்லாதனவற்றை, வரையார் - நீக்காது கொள்வர் புலவர். எ-று.

(உ-ம்.) ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தன் வந்தான்.
பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி வந்தான்.

இங்குப் பலபெயரும் பிரிவிலவாய் ஒருபொருண்மேற் சென்று கேட்போர்க்குச் சொல்லுவோன் குறித்தபொருளை விளக்கின.

எழுத்துணர்வில்லோன் இலக்கண நிறைகடல் என வரின், எழுத்துணர் வில்லாதவனை இலக்கண நிறைகடல் எனறல் கூடாமையால் பிரிந்து வழுவாம் என்க. (சசு)

[ஒருபொருட் பன்மொழி.]

398. ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழா.

(இ-ள்.) ஒருபொருள் - ஒருபொருளைக்குறித்து வருகிற, பல மொழி - பலசொற்கள், சிறப்பினின் - சிறந்து நிற்கையால், வழா - அவை வழுவென்று நீக்கப்படாவாம். எ - று.

சிறந்துநிற்றல் - செவிக்குச் சொல்லின்பம் தோன்ற நிற்றல்.

(உ-ம்.) 1. மீமிசை ஞாயிறு 3. நாகிளங் கமுகு
2. புனிற்றிளங் கன்று 4. குழிந்தாழ்ந்தகண். (சஎ)

[முற்றும்மை உபயோகிக்கப்படுமிடம்.]

399. இனைத்தென் றறிபொருள் உலகி னிலாப்பொருள்
வினைப்படுத் துரைப்பி னும்மை வேண்டும்.

(இ-ள்.) இனைத்து என்று - இவ்வளவினதென்று, அறி பொருள் - அளவறியப்படுகிற பொருளும், உலகின் இலாப்பொருள் - எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லாத பொருளும், வினைப்படுத்து உரைப்பின் - வினைப்படுத்துச் சொல்லும்போது, உம்மை - முற்றும்மையை, வேண்டும் - வேண்டிநிற்கும். எ-று.

(உ - ம்.)

தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார் வேதநான்கு முணர்ந்தார்	பொருள்.	இனைத்தென்றறிபொருள் முற்றும்மை கொண்டன.
உலகமூன்று மொருங்குணர்ந்தான் திசையொருநான்குஞ் சீர்திகழ்பெம்மான்	இடம்.	
காலமூன்றுங் கண்டோன் சிறுபொழுதாறுஞ் சிறந்ததிம் மருதம்	காலம்.	
கண்ணிரண்டுஞ் சிவந்தன தோளிரண்டும் பூரித்தன	சினை.	
சுவையாறு முடைத்திவ்வடிசில் வண்ணமைந்து முடையதிக்கிள்ளை	குணம்.	
தொழில் மூன்று முடைய முதல்வன் கதியைந்து முடைய திக்குதிரை	தொழில்.	

பவளக்கோட்டு நீலயானை யென்றுமில்லை. முயற்கோடு ஆமையயிர்க்கம்பள மென்றுமில்லை. ஒளிமுன் னிருளெங்கு மில்லை. மண்ணாற் செய்த படமும் நூலாற்செய்த கடமு மென்றுமில்லை.	உலகினிலாப் பொருள் முற்றும்மை கொண்டன.

(சஅ)

[செயப்படுபொருளைக் கருத்தாவாகக் கூறல்.]

400. செயப்படு பொருளைச் செய்ததுபோலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கினு ளுரித்தே.

(இ - ள்.) செயப்படுபொருளை - செயப்படுபொருளை, செய்தது போல - வினைமுதலைப்போல வைத்து, தொழிற்பட - அதன்மேல் அவ்வினைமுதல் வினையேற்றி, கிளத்தலும் - சொல்லுதலும், வழக்கினுள் - வழக்கினிடத்து, உரித்து - உரித்தாம். எ-று.

(உ-ம்.) இம்மாடு யான்கொண்டது
இச்சோறு யான்கொடுத்தது
இவ்வெழுத்து நானெழுதியது } செயப்படுபொருள், கருத்தாவாகக் கூறப்பட்டது.

"கிளத்தலும்" என்ற உம்மையால் செயப்படுபொருளைக் கருத்தாவாகக் கூறுதலேயன்றி, கருவி நிலம் செயல் காலங்களைக் கருத்தாவாகக் கூறுதலு மமையுமென்பது பெற்றும்.

(உ-ம்.) இவ்வெழுத்தாணி யானெழுதியது — கருவி,
இவ்வீடியா னிருந்தது — இடம்.
இத்தொழில் யான்செய்தது — தொழில்
இந்நாள் யான்பிறந்தது — காலம். (சக)

[அடைகள் அடுத்து வரும்மொழிகள்.]

401. பொருண்முத லாறு மடைசேர் மொழியினம்
உள்ளவு மில்லவு மாமிரு வழக்கினும்.

(இ-ள்.) பொருள் முதல் - பொருளாதி, ஆறும் - ஆறுகிய, அடைசேர் - அடைகளடுத்து வருகிற, மொழி - மொழிகள், இனம் உள்ளவும் - இனமுள்ளவையேயா மன்றி, இல்லவும் ஆம் - இனமில்லாதவையுமாம், இரு வழக்கினும் - உலகவழக்கினுள்ளுஞ் செய்யுள் வழக்கினுள்ளும். எ - று.

(உ-ம்.) (இனமுள்ளன)	(இனமில்லன)	
நெய்க்குடம்	உப்பளம்	பொருள்
குளநெல்	ஊர்மன்று	இடம்
கார்த்திகைவிளக்கு	நாளரும்பு	காலம்
பூமரம்	இலைமரம்	சினை
செந்தாமரை	செம்போத்து	குணம்
ஆடுபாம்பு	தோய்தயிர்	தொழில்

என வழக்கிடத்து வந்தன. அளம் எனவே உப்பு என்பதும், மன்று எனவே ஊர் என்பதும், அரும்பு எனவே நாள் என்பதும், மரம் எனவே இலை என்பதும், போத்து எனவே செம்மை என்பதும், தயிர் எனவே தோய்தல் என்பதும், தாமே வந்து இயைதலால் அளம் முதலியன இவ்வடைகளின்றியும் பொருளாதி ஆறையுமுணர்த்தும். உப்பிலாஅளமும், ஊரில்லாமன்றும், நாளில்லாஅரும்பும், இலையில்லா மரமும், செம்மையில்லாப் போத்தும், தோய்தலில்லாத்தயிரும் இல்லையாதலால் உப்பளம் முதலியன இனமில்லனவாயின.

இனி முற்கூறிய இனமுள்ளவற்றை அடைகொடாது கூறின் குறித்தபொருள் விளங்காது பொதுமையின் நிற்குமாதலால் அவற்றை அடைகொடுத்துக் கூறுவதே மரபாயிற்று.

இனிச் செய்யுளிலு மிவ்வாறே வரும்.

(உ - ம்.)

பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் ...	பொருள்	இனமுள்ளன.
கான்யாற்றடைகரை	இடம்	
மூன்னாட்பிறையின் முனியாதுவளர்ந்தது ...	காலம்	
கலவமாமயிலெருத்திற் கடிமலரவிழ்ந்தனகாயா	சினை	
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கியாங்கிவள் ...	குணம்	
ஆடரவாடவாடு மம்பலத்தமிர்தே	தொழில்	
பொற்கோட்டிமயமும் பொதியமும்போன்றே...	பொருள்	இனமில்லன.
வடவேங்கடந் தென்குமரியாயிடை	இடம்	
வேனிற்கோங்கின் பூம்பொகுட்டன்ன ...	காலம்	
சிறகர்வண்டு செவ்வழிபாட	சினை	
செஞ்ஞாயிற்றுநிலவு வேண்டினும்	குணம்	
முழங்குகடலோத மூழ்கிப்போக	தொழில்.	

இனமுள்ளவற்றை அடைகொடுத்துக் கூறுதல் வழாநிலையும், இனமில்லனவற்றை அடைகொடுத்துக் கூறுதல் வழுவமைதியுமாம்.

[அடைசேர்மொழிகள் இனமல்லாதவையும் குறிக்கும்.]

402. அடைமொழி யினமல் லதுந்தரு மாண்டுறின்.

(இ - ள்.) அடைமொழி - (முன்சொல்லப்பட்ட) அடைசேர் மொழி, இனம் அல்லதும் - (இனத்தைத் தருவதன்றி) இனமல்லாதையும், தரும் - கொடுக்கும், ஆண்டு - அவ்விடத்திற்கு, உறின் - பொருந்துமாயின். எ - று.

(உ-ம்.) மேலைச்சேரிச்சேவல் அலைத்தது என்றவிடத்து கீழைச்சேரிச் சேவல் அலைப்புண்டது என இனத்தைத் தருதலேயன்றி, அச்சேவலை யுடையார்க்கு வெற்றியாயிற்று என்கிற இனமல்லாதையுந் தந்தது. (ருக)

[அடைமொழிகள் முதல் சினைகளை யடுத்துவரும் விதம்.]

403. அடைசினை முதன்முறை யடைதலு மீரடை
முதலோ டாதலும் வழக்கிய லீரடை
சினையொடு செறிதலு மயங்கலுஞ் செய்யுட்கே.

(இ - ள்.) அடை - (ஓர்) அடையும், சினை - (ஒரு) சினையும், முதல் - (ஒரு) முதலும், முறை அடைதலும் - ஒன்றை யொன்று விசே

டித்து வருதலும், ஈர் அடை-இரண்டு அடைகள், முதலோடு ஆதலும்-முதலை விசேடித்து வருதலும், வழக்கு இயல் - வழக்கு நடையாம், ஈரடை-இரண்டடைகள், சினையொடு செறிதலும்-சினையை விசேடித்து வருதலும், மயங்கலும்-இவவரம்புகடந்து வருதலும், செய்யுட்கு-செய்யுணடையாகும். எ - று.

(வரலாறு.)

வழக்கு	(1)	வேற்கைமுருகன் செங்காலுரை முழங்குதிரைக்கடல்	ஓரடையும் ஒருசினையும் ஒருமுதலும் ஒன்றை யொன்று விசேடித்து வந்தன.
	(2)	மனைச்சிறுகிணறு சிறுகருங்காக்கை	ஈரடை முதலை விசேடித்து வந்தன.
செய்யுள்	(1)	"சிறுபைந் தூவியிற் செயிரறச்செய்த" "கருநெடுங்கண்டருங் காமநோயே"	சிறுமைபசுமைஇரண்டும் அடை-தூவி-சினை ஈரடை சினையை விசேடித்துவந்தன.
	(2)	"பெருந்தோட் சிறுமருங் குற்பேரமர்க்கட்பேதை" "சிறுநுதற்பேரமர்க்கட் செய்யவா யையநுண்ணிடையாய்"	வரம்பு கடந்தும முறை பிறழ்ந்தும வந்தன.

அடைசினை முதன்முறை யடைதலொன்றும் வழுவாமற் காத்தலும், மற்றை மூன்றும் வழுவமைதியும் ஆம். (ருஉ)

{ இயற்கைப்பொருளை ஆக்கமும் காரணமும் கொடாமல் கூறவேண்டும் என்பது. }

404. இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல்.

(இ-ள்.) இயற்கைப் பொருளை-(இயற்கைப்பொருள் செயற்கைப்பொருள் என்ற இருவகைப் பொருள்களுள்) இயற்கைப்பொருளை, இற்று என - இத்தன்மைத்தென்று, கிளத்தல் - சொல்லுக. எ - று.

இயற்கைப் பொருளாவது தனக்குப்பின் தோன்றாது தான்தோன்றும் போதே உடன் தோன்றிய தன்மையையுடைய பொருள். செயற்கைப் பொருளாவது தனக்குப் பின்தோன்றிய தன்மையை யுடைய பொருள். இயற்கை - விகாரமின்மை. செயற்கை விகாரம்.

(உ - ம்.) மெய்யுள்ளது. நீர் தண்ணிது.
பொய்யில்லது. தீவெய்து.
நிலம் வலிது, மயிர் நுரிது.

இயற்கைப்பொருளை இற்றென்னும் வினைக்குறிப்பாகிய செயற்படுத்துச் செயற்கைப் பொருள்போலக் கூறுதலின் இது வழுவமைதியாயிற்று. (௫௩)

{ செயற்கைப்பொருள் காரணமும் ஆக்கமும் பெற்றும் தொக்கும் வரும் என்பது. }

405. காரண முதலா வாக்கம் பெற்றும்
காரண மின்றி யாக்கம் பெற்றும்
ஆக்க மின்றிக் காரண மடுத்தும்
இருமையு மின்றியு மியலுஞ் செயும்பொருள்.

(இ-ள்.) செயும்பொருள் - செயற்கைப்பொருள், காரணம்-காரணச்சொல், முதல்-முதல் வர, ஆக்கம்-ஆக்கச்சொல், பெற்றும்-(பின்வரப்) பெற்றும், காரணம்-காரணச்சொல், இன்றி-தொக்கு நிற்க, ஆக்கம்-ஆக்கச்சொல், பெற்றும்-(வரப்) பெற்றும், ஆக்கம்-ஆக்கச்சொல், இன்றி - தொக்கு நிற்க, காரணம் - காரணச்சொல், அடுத்தும் - வரப்பெற்றும், இருமையும்-அவ்விரண்டும், இன்றியும்-தொக்கு நிற்கவும், இயலும் - நடக்கும். எ - று.

(உ - ம்.)

கடுவுங்கைபிழி யெண்ணெயும் பெற்றமை யான் மயிர்நல்லவாயின எருப்பெய் திளங்களைகட்டு நீர் கால் யாத்தமையாற் பயிர்நல்லவாயின	முன்காரணச்சொல்லும் பின் ஆக்கச்சொல்லும் பெற்றன.
மயிர் நல்லவாயின ... ... பயிர் நல்லவாயின	காரணச்சொற்றொக்கு ஆக்கம்பெற்றன.
கடுவுங் கைபிழியெண்ணெயும் பெற்றமையான் மயிர்நல்ல எருப்பெய் திளங்களைகட்டு நீர் கால் யாத்தமையாற் பயிர் நல்ல	ஆக்கச்சொற்றொக்கு நிற்க, காரணச் சொல் வந்தன.
மயிர்நல்ல ... ... பயிர்நல்ல	காரணச்சொல் ஆக்கச் சொல் இரண்டுந் தொக்கு நிற்கப்பெற்றன.

காரணமுதலாவாக்கம் பெறுதலொன்றும் வழுவாமற் காத்தல், மற்றை மூன்றும் வழுவமைதிகள். (௫௪)

[விடைகூறும் விதம்.]

406. தம்பா லில்ல தில்லெனி னினனாய்
உள்ளது கூறி மாற்றியு முள்ளது
சுட்டியு முரைப்பர் சொற்சுருங் குதற்கே.

(இ-ள்.) தம்பால் - தம்மிடத்து, இல்லது - இல்லாதபொருளை, இல்லெனின் இல்லையெனின். இனனாய் - (வினவப்பட்டதற்கு) இனமாய், உள்ளது - இருக்கின்ற பொருளை, கூறி - சொல்லி, மாற்றியும் - (அச்சொல்லைக்கொண்டு அதனை) இல்லை யென்றும், உள்ளது - இருக்கிறபொருளாயின், சுட்டியும் - இவ்வளவுண்டென்றும், உரைப்பர் - சொல்லுவர், சொல் சுருங்குதற்கு - (வினவும் விடையுமாகிய) சொற்கள் சுருங்குதற் பொருட்டு. எ - று.

(உ - ம்.) பயறுண்டோ வணிகீரே? என்றவருக்கு அது இல்லை யென்பார், உழுந்துண்டு, உழுந்தும் துவரையு முண்டு என அதனினத்தைச் சொல்லக்கடவர். இங்கு இனமொழிகள் பயறில்லை யென்னும் விடைப்பொருளைத் தருதலேயன்றி, மேலே உழுந்துண்டோ? துவரையுண்டோ? என்னும் வினாக்களும் அவைகளின் விடைகளும் பெருகாமற் காத்தல்காண்க.

பயறுண்டோ வணிகீரே ? என்றவருக்கு அது உண்டென்பார் இருகலமுண்டு, இருதூணியுண்டு, என அதனளவைச் சொல்லக்கடவர். இங்கு அளவைமொழிகள்பயறுண்டு என்னும் விடைப்பொருளைத் தருதலேயன்றி, எவ்வளவுண்டு என்னும் வினவும் அதற்கு விடையும் பெருகாமற் காத்தல்காண்க. (ருரு)

[ஈ, தா, கொடு என்னும் இரப்புரைகள்.]

407. ஈதா கொடுவெனு மூன்று முறையே
இழிந்தோ னொப்போன் மிக்கோ னிரப்புரை.

(இ-ள்.) ஈ தா கொடு என்னும் - ஈ தா கொடு என்கிற, மூன்றும் - மூன்றுசொற்களும், முறையே - முறையாக, இழிந்தோன் - இழிந்தவனும், ஒப்போன் - ஒப்பவனும், மிக்கோன் - உயர்ந்தவனும், இரப்புரை - இரத்தற்குவருகிற சொற்களாகும். எ - று.

எனவே, ஈ என்பது இழிந்தோன் உயர்ந்தோனிடத்து இரக்கும் போதும், தா என்பது ஒப்போன் ஒப்போனிடத்து இரக்கும் போதும், கொடு என்பது உயர்ந்தோன் இழிந்தோனிடத்து இரக்கும் போதும் வருமெனக் கொள்க.

(உ-ம்.)	தந்தாய் ஈ	— இழிந்தோனிரப்பு.
	தோழா தா	— ஒப்போனிரப்பு.
	மைந்தா கொடு	— உயர்ந்தோனிரப்பு. (ருசு)

[குறிப்பாற்பொருளுணர்த்தும் சொற்கள்.]

408. முன்னத்தி னுணருங் கிளவியு முளவே.

(இ-ள்.) முன்னத்தின் - குறிப்பினால், உணரும் - (பொருள்) அறியப்படுகிற, கிளவியும் - சொற்களும், உள - (சில) உளவாம்.

அவையாவன. ஒன்றொழி பொதுச்சொல் முதல் சொல்லுவான் குறிப்பீறாகப் பெயரியலிலே 12-ம் சூத்திரத்திலே சொல்லப்பட்டன.

(உ-ம்.) 'குழைகொண்டு கோழியெறியும் வாழ்க்கையர்' என்றால், பெருஞ்செல்வ வாழ்க்கையர் என்பது குறிப்பினா லுணரப்பட்ட பொருளாம், மற்றவைகளு மிப்படியே.

கேட்பவர்களுக்குப் பொருள்விளங்கச் சொல்லல் மரபாதலால் இது வழுவமைதியாயிற்று. (௬எ)

[அஃறிணையை உயர்திணைபோல வைத்துக்கூறல்.]

409. கேட்குந போலவுங் கிளக்குந போலவும்
இயங்குந போலவு மியற்றுந போலவும்
அஃறிணை மருங்கினு மறையப் படுமே.

(இ-ள்.) கேட்குந போலவும் - (கேளாதவைகளைக்) கேட்பவைகள் போலவும், கிளக்குந போலவும் - (சொல்லாதவைகளைச்) சொல்பவைகள் போலவும், இயங்குந போலவும் - (நடவாதவைகளை) நடப்பவைகள் போலவும், இயற்றுந போலவும் - (செய்யாதவைகளைச்) செய்பவைகள்போலவும், அஃறிணை மருங்கினும் - அஃறிணையிடத்தும், அறையப்படும் - சொல்லப்படும். எ - று.

(உ - ம்.)

"நன்னீரைவாழியனிச்சமே"	கேளாதது கேட்பதுபோலக் கூறப்பட்டது.
"பகையையுங் கேண்மையுங் கண்ணுரைக்கும்"	பேசாதது பேசுவதுபோலக் கூறப்பட்டது.
இவ்வழியவ்வூருக்குப் போகும்	நடவாதது நடப்பதுபோலக் கூறப்பட்டது.
தன்னெஞ்சே தன்னைச்சுடும்,	செய்யாததுசெய்வதுபோலக் கூறப்பட்டது. (௬அ)

[உருவக உவமைகளில் திணை, சினை, முதல்கள் மயங்குதல்.]

410. உருவக உவமையிற் றிணைசினை முதல்கள்
பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே.

(இ-ள்.) உருவகம் உவமையில் - உருவகத்திலும் உவமையிலும், திணை - இருதிணைகளும், சினை - சினைகளும், முதல்கள்-முதல்களும், பிறழ்தலும் - (தம்முள்ளே) மயங்குதலும், பிறவும் - (இவ்வியலுட் சொல்லாது) ஒழிந்தவையும், பேணினர் கொளல் - பாதுகாத்துக் கொள்க. எ - று.

(உ-ம்.)

நம்மரசனாகிய சிங்கத்திற்குப் பகைவர் கூட்டமாகிய யானைக ளஞ்சியோடின.	உயர்திணை அஃறிணையோடு மயங்கிற்று.	உருவகம்.
அவ்வரசனுக்குத் தம்பியரிருவருமிரண்டு தோள்கள்.	உயர்திணை முதல் உயர்திணைச்சினையோடு மயங்கிற்று.	
முகமாகியமதி	உயர்திணைச் சினை அஃறிணை முதலோடு மயங்கிற்று.	
நல்விமங்கையை நல்லோர் விரும்புவார்.	அஃறிணை உயர்திணையோடு மயங்கிற்று.	
மயில்போலுமங்கை ...	உயர்திணை அஃறிணையோடு மயங்கிற்று.	உவமை.
நெற்பயிர்கள் கல்வியுடையார் போலிறைஞ்சிக்காய்த்தன.	அஃறிணை உயர்திணையோடு மயங்கிற்று.	
கயல்போலுங்கண் ...	உயர்திணைச் சினை அஃறிணை முதலோடு மயங்கிற்று.	
தளிர்போலுமேனி ...	உயர்திணை முதல் அஃறிணைச் சினையோடு மயங்கிற்று.	

இனிப் 'பிறவும்' என்றதனால், இவன் சரசுவதிக் கொப்பானவன் எனப் பான்மயங்கக் கூறுதலும் - செங்கோல், வீரக்கழல் என ஒருபொருட்டன்மையை மற்றொரு பொருண்மேல் வைத்துக் கூறுதலும், ஈந்தான் என்பதற்கு அருளினான் என ஒருவினையை மற்றொரு வினையாற் கூறுதலும், அரசு வேந்து என உயர்திணையை அஃறிணையாகக் கூறுதலும், பிறவுங்கொள்க. (ருக)

[பொருள்கோளின் பெயருந் தொகையும்.]

411. யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்
தாப்பிசை யளைமறி பாப்புக் கொண்டுகூட்
டடிமறி மாற்றெனப் பொருள்கோ ளெட்டே.

(இ - ள்.) யாற்றுநீர் - யாற்றுநீர்ப் பொருள்கோளும், மொழி மாற்று - மொழிமாற்றுப் பொருள்கோளும், நிரனிறை - நிரனிறைப் பொருள்கோளும், விற்பூண் - விற்பூட்டுப் பொருள்கோளும், தாப்பிசை - தாப்பிசைப் பொருள்கோளும், அளைமறி பாப்பு - அளைமறி பாப்புப் பொருள்கோளும், கொண்டுகூட்டு-கொண்டுகூட்டுப்பொருள் கோளும், அடிமறி மாற்று - அடிமறிமாற்றுப் பொருள்கோளும், என - என்று, பொருள்கோள் - பொருள்கோள், எட்டு - எட்டுவகையின வாம். எ - று. பொருள்கோள் - அந்வயம். (சுo)

[யாற்றுநீர்ப்பொருள்கோள்.]

412. மற்றைய நோக்கா தடிதொறும் வான்பொருள்
அற்றற் றொழுகுமஃ தியாற்றுப் புனலே.

(இ - ள்.) மற்றையநோக்காது - மொழிமாற்று முதலியவை போலப் பிறழ்ந்து செல்லவேண்டாமல், அடிதொறும் - அடிதோறும், வான்பொருள் - சிறந்தபொருளானது, அற்று அற்று ஒழுகும்-(யாற்று நீ ரொழுக்குப்போல நெறிப்பட்டு) அறுபட்டு அறுபட்டு நடப்பதாகிய, அஃது - அப்பொருள்கோள், யாற்றுப்புனல் - யாற்றுநீர்ப்பொருள் கோளாம். எ - று.

திரும்பாமலே ஒரே முகமாக ஓடுகிற ஆற்று நீரோட்டம் உவமை யாதலால் அற்றற் றொழுகுதலாவது மொழிமாற்று முதலியனபோலத் திரும்பி நடக்கும் நடையற்று, அங்கங்கே அமைந்து நடத்தலே யன்றிப் பொருள்முடிந்து நடத்தல் அன்றென்க.

(உ-ம்.) "சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் றோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே."

இப்பாட்டினுள் சொல்லென்னும் எழுவாயினை முதலெடுத்து அதன்றொழிலாகிய இருந்து, ஈன்று, நிறுவி, இறைஞ்சி என்னும் வினையெச்சங்கள் ஒன்றனை ஒன்றுகொள்ள இடையே முறையாகவைத்து, அவற்றைக் கொண்டுமுடிந்த காய்த்த என்னும் பயனிலையை இறுதியிலே தந்து முடித்தமையால் இப்பொருளொழுகுதல் யாற்று நீரொழுக்குப்போலுதல் காண்க. இப்பொருள்கோள் மொழிமாற்று முதலியவற்றுள்ளும் கலந்து வருமென்றறிக. [சொல் - நெற்பயிர்.] (சுக)

[மொழிமாற்றுப்பொருள்கோள்.]

413. ஏற்ற பொருளுக் கியையு மொழிகளை
மாற்றியோ ரடியுள் வழங்கன்மொழி மாற்றே.

(இ-ள்.) ஏற்ற பொருளுக்கு - ஏற்ற (இரண்டு) பயனிலைகளுக்கு, இயையும் மொழிகளை - பொருந்துமொழிகளை, மாற்றி - (ஏலாத பயனிலைகளுக்குத்) தனித்தனிக்கூட்டி, ஓர் அடியுள் - ஓரடியுள்ளே, வழங்கல் - சொல்லுவது, மொழிமாற்று - மொழிமாற்றுப் பொருள்கோளாம், எ - று.

(உ-ம்.) "சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை."

இதனுள் ஆழ என்னும் பயனிலைக் கியைந்த அம்மியென்னுமொழியினை மிதப்ப என்னும் பயனிலைக்கும், மிதப்ப என்னும் பயனிலைக்கு இயைந்த சுரை என்னு மொழியினை ஆழ என்னும் பயனிலைக்கும், நீத்து என்னும் பயனிலைக் கியைந்த முயல் என்னும் மொழியினை நிலை என்னும் பயனிலைக்கும், நிலை என்னும் பயனிலைக்கியைந்த யானை என்னு மொழியினை நீத்து என்னும் பயனிலைக்குமாக மாற்றிக் கூறியவாறு காண்க. (சுஉ)

[நிரனிறைப்பொருள்கோள்.]

414. பெயரும் வினையுமாஞ் சொல்லையும் பொருளையும்
வேறுநிர னிறீஇ முறையினு மெதிரினும்
நேரும் பொருள்கோ ணிரனிறை நெறியே.

(இ-ள்.) பெயரும் வினையும் ஆம் சொல்லையும் - பெயரும் வினையுமாகிய சொற்களையும், பொருளையும் - (அவைகொள்ளும் பெயரும வினையுமாகிய) பயனிலைகளையும், வேறு-வேறாக, நிரல் நிறீஇ-வரிசையாகநிறுத்தி, முறையினும்-முறையாகவேனும், எதிரினும்-எதிராகவேனும், நேரும்- (இதற்கிது பயனிலையென்பது படக்) கூறும், பொருள்கோள்-பொருள்கோள், நெறி - நெறிப்பட்ட, நிரனிறை-நிரனிறைப் பொருள்கோளாம், எ - று.

(உ-ம்.) 1. "கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி
மதிபவள முத்தமுகம் வாய்முறுவல்
பிடிபிணை மஞ்ஞை நடைநோக்குச் சாயல்
வடிவினளே வஞ்சி மகள்."

இது, கொடி—நுசுப்பு, குவளை—உண்கண், கொட்டை—பேணி, எ-ம்; மதி—முகம், பவளம்—வாய், முத்தம்—முறுவல், எ-ம்; பிடி—நடை, பிணை-நோக்கு, மஞ்ஞை—சாயல், எ-ம்; பெயர்ச் சொற்களும் பெயர்ப் பயனிலைகளுமாய் வந்த முறை நிரனிறை.

2. "காதுசேர் தாழ்குழையாய் கன்னித் துறைச்சேர்ப்ப
போதுசேர் தார்மார்ப போர்ச்செழிய - நீதியான்
மண்ணமிர்த மங்கையர்தோண் மாற்றாரை யேற்றார்க்கு
நுண்ணிய வாய பொருள்."

இது, கா—மண், து—அமிர்தம், சேர்—மங்கையர்தோள், தாழ்-மாற்றாரை, குழை—ஏற்றார்க்கு, ஆய்—நுண்ணியவாயபொருள் என வினைப்பயனிலைகளும் பெயர்களுமாய் வந்த முறை நிரனிறை.

3. "களிறுங் கந்தும்போல நளிகடற்
கூம்புங் கலனுந் தோன்றும்
தோன்றன் மறந்தோர் துறைகெழு நாட்டே."

இது, களிறு—கலன், கந்து—கூம்பு எனப் பெயரும் பெயர்ப் பயனிலைகளுமாய் வந்த எதிர் நிரனிறை.
கந்து - யானைகட்டுந்தறி. கூம்பு-பாய்மரம். கலன்-தோணி.

4. "ஆடவர்க ளெவ்வா றகன்றொழிவார் வெஃகாவும்
பாடகமு மூ ரகமும் பஞ்சரமா - நீடியமால்
நின்றா னிருந்தான் கிடந்தா னிதுவன்றோ
மன்றார் மதிற்கச்சி மாண்பு."

இது, வெஃகா—கிடந்தான், பாடகம்—இருந்தான், ஊரகம்—நின்றான் எனப்பெயரும் வினைப்பயனிலைகளுமாய் வந்த எதிர் நிரனிறை.

[பூட்டுவிற்பொருள்கோள்.]

415. எழுவா யிறுதி நிலைமொழி தம்முள்
பொருணோக் குடையது பூட்டுவில் லாகும்.

(இ-ள்.) எழுவாய் - (செய்யுள்) முதலிலும், இறுதி - இறுதியிலும், நிலை - இருக்கின்ற, மொழி - மொழிகள், தம்முள் - தமக்குள், பொருள் நோக்கு உடையது - பொருளை நோக்குதலுடைய பொருள்கோள், பூட்டுவில் ஆகும்-பூட்டுவிற் பொருள்கோளாம், எ - று.

(உ - ம்.)

"திறந்திடுமின் றீயவை பிற்காண்டு மாதர்
இறந்து படிற்பெரிதா மேத-முறந்தையர்கோன்
தண்ணார மார்பிற் றமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு."

இதில் 'திறந்திடுமின்—கதவு' என நோக்கிற்று. (௬௪)

[தாப்பிசைப்பொருள்கோள்.]

416. இடைநிலை மொழியே யேனையீ ரிடத்தும்
நடந்து பொருளை நண்ணுத றாப்பிசை.

(இ - ள்.) இடைநிலை மொழி - நடுவிலுள்ள மொழி, ஏனை ஈரிடத்தும் - ஒழிந்த முதலிலு மீற்றிலும், நடந்து - சென்று, பொருளை - பொருளை, நண்ணுதல் - கூடும் பொருள்கோள், தாம்பிசை - தாப்பிசைப் பொருள்கோளாம். எ-று.

ஊசல்வடம்போ லிடைநின்று இருமருங்குஞ் செல்லலால் இப் பெயர்பெற்றது. தாம்பு - தாப்பு என விகாரமாயிற்று.

தாம்பு - வடம் (ஊசல்). இசை - சொல்.

(உ-ம்.) 'உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு.'

இதில் ஊன் என இடையிலே நின்றமொழி ஊனுண்ணாமையுள்ளது, என முதலிலும் 'ஊனுண்ண' எனப் பின்னரும் செல்லல்காண்க.

[அளைமறிபாப்புப் பொருள்கோள்.]

417. செய்யு ளிறுதி மொழியிடை முதலினும்
எய்திய பொருள்கோ ளளைமறி பாப்பே.

(இ-ள்.) செய்யுள் - செய்யுளில், இறுதிமொழி - இறுதியிலுள்ள சொல், இடைமுதலினும் - இடையிலும் முதலிலும், எய்திய பொருள்கோள் - சென்ற பொருள்கோள், அளைமறிபாப்பு - அளைமறி பாப்புப் பொருள்கோளாம். எ-று.

புற்றிலே தலைவைத்து மடங்கும் பாம்பு போலுதலால் அப்பெயர் பெற்றது. [அளை=புற்று. மறிதல்=மடங்குதல். பாம்பு பாப்பு எனத் திரிந்தது.]

(உ-ம்.) "தாழ்ந்த வுணர்வினராய்த் தாளுடைந்து தண்டேன்றித்
தளர்வார் தாமும்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து நாற்கதியிற்
சுழல்வார் தாமும்
மூழ்ந்த பிணிநலிய முன்செய்த வினையென்றே
முனிவார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி
முயலாதாரே."

இதில் "வாழ்ந்தபொழுதினே வானெய்து நெறி முன்னி முயலாதார், மூழ்ந்த பிணிநலிய முன்செய்த வினையென்றே முனிவார், சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து நாற்கதியிற்சுழல்வார், தாழ்ந்த வுணர்வினராய்த் தாளுடைந்து தண்டேன்றித் தளர்வார்,, எனத் தலைகீழாய் இடையிலும் முதலிலும் சென்று கூடுதல் காண்க. (௬௬)

[கொண்டு கூட்டுப்பொருள்கோள்.]

418. யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை
ஏற்புழி யிசைப்பது கொண்டு கூட்டே.

(இ - ள்.) யாப்பு அடி - செய்யுளடிகள், பலவினும் - பலவற்றினும், கோப்பு உடை - கோக்கப்படுதலையுடைய, மொழிகளை - சொற்களை, ஏற்புழி - (எடுத்தபொருளுக்கு) ஏற்றவிடத்து, இசைப்பது- கூட்டும் பொருள்கோள், கொண்டு கூட்டு - கொண்டு கூட்டுப் பொருள் கோளாம், எ - று.

(உ - ம்.)

"தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்
வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி
அஞ்சனத் தன்ன பசலை தணிவாமே
வங்கத்துச் சென்றார் வரின்."

இதனுள் 'வங்கத்துச் சென்றார் வரின் அஞ்சனத்தன்ன பைங் கூந்தலையுடையாள் மாமேனிமேல் தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட கோழிவெண்முட்டை யுடைத்தன்ன பசலை தணிவாம்' எனக் கொண்டு கூட்டுக. (௬௭)

[அடிமறிமாற்றுப்பொருள்கோள்.]

419. ஏற்புழி யெடுத்துடன் கூட்டுறு மடியவும்
யாப்பீ றிடைமுத லாக்கினும் பொருளிசை
மாட்சிய மாறா வடியவு மடிமறி.

(இ-ள்.) ஏற்புழி - (பொருளுக்கு) ஏற்குமிடத்து, எடுத்து - எடுத்து, உடன் கூட்டுறும் - நீங்காது கூட்டுகிற, அடியவும் - அடியை யுடையவையும், யாப்பு ஈறு இடை முதல் - (யாதானுமோரடியை) அச்செய்யுளின் இறுதி நடு முதல்களில் (யாதானுமோரிடத்து), ஆக்கினும்-(எடுத்துக்) கூட்டினும், பொருள் இசை மாட்சியும் - பொருளோடு ஓசைச்சிறப்பும் ஓசையொழியப் பொருட்சிறப்பும், மாறா - வேறுபடாத, அடியவும் - அடியையுடையவையும், அடிமறி - அடிமறி மாற்றுப் பொருள்கோளாம், எ-று.

(உ - ம்.)

(1) "நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
கொடுத்துத்தான் றுய்ப்பினு மீண்டுங்கா லீண்டும்
இடுக்குற்றுப் பற்றினு நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்."

'கொடுத்துத்தான் றுய்ப்பினு மீண்டுங்காலீண்டும் விடுக்கும் வினையுலந்தக்கா லிடுக்குற்றுப்பற்றினு நில்லாது செல்வம் (இஃதறியார்) நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந்துடையார்' என அடிகளை ஏற்குமிடத்து எடுத்துக்கூட்டுக.

(2) "மாறாக் காதலர் மலைமறந் தனரே
யாறாக் கட்பனி வரலா னவே
வேறா மென்றோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழி யான்வாழு மாறே"

இதனுள், எவ்வடியை எங்கே கூட்டினும் பொருளும் ஓசையும் வேறுபடாமை காண்க.

(3) "அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலற்பாலுங் குற்றமே யாம்."

இதனுள் கடையடியை யாதேனு மோரிடத்துக் கூட்டும்போது ஓசை வேறுபட்டுப் பொருள் வேறுபடாமை காண்க. (சுஅ)

பொதுவியல் முற்றுப் பெற்றது.

நான்காவது

இடைச்சொல்லியல்

[இடைச்சொல்லின் பொது இலக்கணம்.]

420. வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்
தத்தம் பொருள விசைநிறை யசைநிலை
குறிப்பெனெண் பகுதியிற் றனித்திய லின்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் னோரிடத்
தொன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல்.

(இ-ள்.) வேற்றுமை (உருபுகள்) - ஐ முதலிய வேற்றுமை உருபுகளும், வினை (உருபுகள்) - விகுதி முதலிய வினை உருபுகளும், சாரியை (உருபுகள்) - அன் ஆன்முதலிய சாரியை உருபுகளும், ஒப்பு (உருபுகள்)-போல புரைய முதலிய உவமை உருபுகளும், தத்தம்பொருள - தத்தமக்குரிய பொருளை யுணர்த்தி வருபவையும், இசைநிறை - செய்யுளிசை நிறைத்து வருபவையும், அசைநிலை - அசைத்தலே பொருளாக நிற்பவையும், குறிப்பு - (இவைபோலாது) குறிப்பினால் வருபவையும், என் - என்கிற, எண் பகுதியின் - எட்டுவகையினை யுடையனவாய், தனித்து இயல் இன்றி - தனித்து நடத்தலில்லாமல், பெயரினும் வினையினும் - பெயர்ச்சொல்லினகத்தும் வினைச்சொல்லினகத்தும், பின் முன் - (அவற்றின் புறமாகிய) பின்னும் முன்னும், ஓர் இடத்து - (ஆகிய இவ்வாறிடங்களில்) ஓரிடத்து, ஒன்றும் பலவும் - ஒன்றாயினும் பலவாயினும், வந்து - வந்து, ஒன்றுவது - ஒன்றுபட்டு நடக்குந்தன்மையது, இடைச்சொல் - இடைச்சொல்லாகும். எ - று.

பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் ஆகாது அவற்றின் வேறுமாகாது இடைநிகரத்ததாய் நிற்றலின் இடைச்சொல் என்னப்பட்டது. தனித்து நடத்தலின்றி, பெயர் வினைகளினிடமாக நடத்தலின், இடைச்சொல் என்னப்பட்டதெனினும் அமையும்.

இசைநிறையென்பது வேறு பொருளுணர்த்தாமல் செய்யுளில் ஓசையை நிறைத்து நிற்பது.

அசைநிலை யென்பது வேறு பொருளுணர்த்தாமல் பெயர்ச்சொல்லோடும், வினைச்சொல்லோடும் சார்த்திச் சொல்லப்பட்டு நிற்பது. [அசைத்தல்=சார்த்தல்.]

(உ-ம்.) (1.) நம்பியை, நம்பியால், நம்பிக்கு என்கிற விடத்துப் பெயரின் புறத்துறுப்பாய் ஐ, ஆல், கு என்னும் வேற்றுமை யுருபிடைச்சொற்கள் வந்தன.

(2.) தச்சன், வலைஞன், முடியினன் என்கிற விடத்துப் பெயரின் அகத்துறுப்பாய் விகுதி, இடைநிலை, சாரியை இடைச்சொற்கள் வந்தன.

(3.) நடந்தான், நடந்தனன் என்கிற விடத்து வினையின் அகத்துறுப்பாய் விகுதி, இடைநிலை, சாரியை இடைச்சொற்கள் வந்தன.

(4.) போன்றான், ஒத்தான் என்கிற விடத்து வினையின் அகத்துறுப்பாய்-போல், ஒ என உவம உருபிடைச்சொற்கள் வந்தன.

(5.) அதுமன், அதுமற்றம்ம என்கிறவிடத்துப் பெயரின் புறத்துறுப்பாய், பின்னே இடைச்சொல் ஒன்றும் பலவும் வந்தன.

(6.) மற்றொன்று, ஓ ஓ கொடியன் என்கிறவிடத்துப்பெயரின் புறத்துறுப்பாய் முன்னே இடைச்சொல் ஒன்றும் பலவும் வந்தன.

(7.) வந்தானோ, சொன்றான் கூ கூ என்கிறவிடத்து வினையின் புறத்துறுப்பாய்ப் பின்னே இடைச்சொல் ஒன்றும் பலவும் வந்தன.

(8.) ஐயோ இறந்தான், ஓ ஓ போ என்கிறவிடத்து வினையின் புறத்துறுப்பாய் முன்னே இடைச்சொல் ஒன்றும்பலவும் வந்தன.

தத்தம் பொருள் தருபவையும், இசை நிறைப்பொருள் தருபவையும், அசைநிலைப்பொருள் தருபவையும், குறிப்புப்பொருள் தருபவையுமாகிய இடைச்சொற்களுக்கு உதாரணம் பின்வரும் சூத்திரங்களால் உணர்க. (க)

[தத்தம்பொருளுணர்த்தும் இடைச்சொற்பொருள்கள்.]

421. தெரிநிலை தேற்ற மையமுற் றெண்சிறப்
பெதிர்மறை யெச்சம் வினாவிழை வொழியிசை
பிரிப்புக் கழிவாக்க மின்னின விடைப்பொருள்.

(இ-ள்.) தெரிநிலை - தெரிநிலையும், தேற்றம் - தெளிவும், ஐயம் - சந்தேகமும், முற்று - முற்றும், எண் - எண்ணும், சிறப்பு - சிறப்பும், எதிர்மறை - எதிர்மறையும், எச்சம் - எச்சமும், வினா - வினாவும், விழைவு - விருப்பமும், ஒழியிசை - ஒழிந்தசொல்லும், பிரிப்பு

பிரிநிலையும், கழிவு-கழிவும், ஆக்கம்-ஆக்கமும், இன்னன-இவைபோல்வன பிறவும், இடை - (தத்தம் பொருள் என்ற) இடைச்சொற்களுடைய, பொருள்-பொருள்களாம். எ - று.

இன்னன என்றதனால் சில வருமாறு:—

1. அ, இ, உ என்பன சுட்டுப்பொருளைத் தருவன.
2. எ, யா என்பன வினாப்பொருளைத் தருவன.
3. முன், பின், இனி என்பன இடப்பொருளையுங் காலப்பொரு

4. தொறும், தோறும் இடப்பன்மைப் பொருளைத்தருவன.
5. ஆவது ஆயினும் முதலியவை விகற்பப் பொருளைத்தருவன.
6. ஐயோ, அந்தோ முதலியவை இரக்கப்பொருளைத் தருவன.
7. ஆ, அம்மா, ஓ ஓகோ முதலியவை வியப்புப் பொருளைத் தருவன.
8. கூகூ, ஐயோ முதலியவை அச்சப்பொருளைத் தருவன.
9. சீ, சிச்சீ, சை முதலியவை இகழ்ச்சிப்பொருளைத் தருவன.
10. கடக்கென, துடுமென, ஒல்லென, கோவென, நெறுநெறென, படபடென முதலியவை ஒலிக்குறிப்புப்பொருளைத் தருவன.
11. பொள்ளென, சரேலென, பொருக்கென, கதுமென முதலியவை விரைவுக்குறிப்புப் பொருளைத் தருவன.
12. துண்ணென, துணுக்கென, திடுக்கென முதலியவை அச்சக்குறிப்புப் பொருளைத்தருவன. (௨)

[ஏகார விடைச்சொல்.]

422. பிரிநிலை வினாவெண் ணீற்றசை தேற்றம்
இசைநிறை யெனவா றேகா ரம்மே.

(இ-ள்.) பிரிநிலை-பிரிநிலையும், வினா-வினாவும், எண்-எண்ணும், ஈற்றசை-ஈற்றிலசைத்தலும், தேற்றம்-தெளிவும், இசைநிறை-இசைநிறைத்தலும், என-என்று, ஆறு-ஆறுபொருளைத்தரும், ஏகாரம்-ஏகார விடைச்சொல், எ - று.

(உ-ம்.)

1. அவனேகொண்டான் { ஒரு கூட்டத்திலிருந்து ஒருவனைப் பிரித்தமையாற் பிரிநிலை.

2. நீயேகொண்டாய் — நீயா கொண்டாய் என வினாவி நிற்கையால் வினா.

3. நிலனே நீரே தீயே வளியே — நிலனும் நீரும் தீயும் வளியும்என எண்ணிநிற்கையால் எண்.

4. வருத்தனர்கொளலே — இறுதியிலசைத்து நிற்கையால் ஈற்றசை.

5. நானேகொண்டேன் — துணிவைக் காட்டுதலால் தேற்றம்.

6. என இவளொருத்தி பேடியோவென்றார் — இசை நிறைத்து நிற்கையால் இசைநிறை.

அன்றியும், யானேகொண்டேன் என்பது யான்கொள்கிலன்என்னும் எதிர்மறைப்பொருளைத் தருதலால் எதிர்மறை.

ஏகாரம் எதிர்மறைப்பொருளைத் தருவது புதியன புகுதல். (௩)

[ஓகார விடைச்சொல்.]

423. ஒழியிசை வினாச்சிறப் பெதிர்மறை தெரிநிலை
கழிவசை நிலைபிரிப் பெனவெட் டோவே.

(இ - ள்.) ஒழியிசை - ஒழியிசையும், வினா-வினாவும், சிறப்பு - சிறப்பும், எதிர்மறை-எதிர்மறையும், தெரிநிலை-தெரிநிலையும், கழிவு - கழிவும், அசைநிலை-அசைநிலையும், பிரிப்பு-பிரிநிலையும், என-என்று, எட்டு-எட்டுப்பொருளைத் தரும், ஓ-ஓகார விடைச்சொல், எ-று.

சிறப்பு - உயர்வுசிறப்பும் இழிவுசிறப்புமென இருவகைப்படும்.

(உ-ம்.)

1. கொளலோகொண்டான் — கொண்டுய்யப்போயினானல்லன் என ஒழிந்தசொற்களைத்தருதலால் ஒழியிசை.

2. குற்றியோமகனோ — வினா.

3. ஓ ஓ பெரியன் — உயர்வுசிறப்பு.
ஓ ஓ கொடியன் — இழிவுசிறப்பு.

4. அவனோகொண்டான் — கொண்டிலனெனப்பொருள் படின் எதிர்மறை.

5. ஆணோ அதுவுமன்று, பெண்ணோ அதுவுமன்று. — அத்தன்மை யில்லாமையைத் தெரிவித்து நிற்கையால் தெரிநிலை.

6. உறுதியுணராது கெட்டாரைநோக்கி

ஓஒ தமக்கோருறுதி யுணராரோ என்றல் — கழிவிரக்கப்பொருளை தருத லால் கழிவு. கழிவிரக்கம்-கழிந்த பொருளுக்கிரங்குதல்

7. காணியவும்பிறனோகங்கு லது நிலையே —

8. அவனோகொண்டான் — பலருளிருந்து ஒருவனைப் பிரித்தலாற் பிரிநிலை. (௪)

[என, என்று என்னு மிடைச்சொற்கள்.]

424. வினைபெயர் குறிப்பிசை யெண்பண் பாறினும்
எனவெனு மொழிவரு மென்று மற்றே.

(இ-ள்.) வினை - வினையும், பெயர் - பெயரும், குறிப்பு - குறிப்பும், இசை - இசையும், எண்-எண்ணும், பண்பு - பண்பும், (ஆகிய) ஆறினும் - ஆறுபொருளிலும், என எனும் மொழி - என என்னும் இடைச்சொல், வரும் - சேர்ந்துவரும், என்றும் - என்று என்னும் இடைச்சொல்லும், அற்று - அப்படியே (ஆறுபொருளிலும்) வரும்.

(உ-ம்.) 1. மைந்தன் பிறந்தானெனத் தந்தை உவந்தான்—வினை.

2. அழுக்காறெனவொருபாவி —பெயர்.

3. பொள்ளென வாங்கே புறம்வேரார் —குறிப்பு.

4. குட்டத்துடுமெனப்பாய்ந்தது —இசை.

5. நிலனென நீரெனத் தீயென வளியென வானெனப் பூதங்களைந்து —எண்.

6. காரெனக் கறுத்தது —பண்பு.

என்று என்பதையும் மேற்குறித்த உதாரணங்களில் ஒட்டிக் காண்க. (௫)

[உம்மை இடைச்சொல்.]

425. எதிர்மறை சிறப்பைய மெச்சமுற் றளவை
தெரிநிலை யாக்கமோ டும்மை யெட்டே.

(இ-ள்.) எதிர்மறை-எதிர்மறையும், சிறப்பு-சிறப்பும், ஐயம்-ஐயமும், எச்சம்-எச்சமும், முற்று-முற்றும், அளவை - அளவையும், தெரிநிலை-தெரிநிலையும், ஆக்கம்-ஆக்கமுமாகிய, எட்டு - எட்டுப்பொருளைத் தரும், உம்மை - உம்மை இடைச்சொல். எ - று.

சிறப்பு உயர்வுசிறப்பும் இழிவுசிறப்பும் என இருவகைப்படும்; எச்சவும்மை இறந்ததுதழீஇயதும், எதிரதுதழீஇயதும் என இருவகைப்படும்.

(உ-ம்.)

1. கொற்றன் வருதற்குமுரியன் — எதிர்மறை.

2. குறவரு மருளுங் குன்று — குன்றி னுயர்வைச் சிறப்பித்தலால் உயர்வு சிறப்பு.

புலையனும் விரும்பாப் புன் புலால் யாக்கை — உடம்பினிழிவைச் சிறப்பித்தலால் இழிவு சிறப்பு.

3. பத்தாயினு மெட்டாயினுங் கொடு — ஐயம்.

4. சாத்தனும் வந்தான் — கொற்றன்வந்ததன்றி எனப் பொருள்படின் இறந்ததுதழீஇய எச்சவும்மை.

சாத்தனும் வந்தான் — இனிக் கொற்றனும் வருவானெனப் பொருள்படின் எதிரதுதழீஇய எச்சவும்மை.

5. தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார் — முற்றும்மை.

6. சாத்தனுங் கொற்றனும் வந்தார் — எண்ணும்மை.

7. ஆணுமன்று பெண்ணுமன்று — தெரிநிலையும்மை.

8. பாலுமாயிற்று — அதுவே மருந்துமாயிற்று, எனப் பொருள்படின் ஆக்கவும்மை.

[முற்றும்மைக்குச் சிறப்பு விதி.]

426. முற்றும்மை யொரோவழி யெச்சமு மாகும்.

(இ - ள்.) முற்று உம்மை - முற்றும்மையானது, ஒரோவழி ஒரோவிடத்தே, எச்சமும் ஆகும் - எச்சவும்மையுமாகும். எ-று.

(உ-ம்.) எல்லாரு மிதுசெய்யார், அவர் முழுதும் கொடார், இங்கு சில ரிது செய்வா ரெனவும், அவர் சிறிது கொடுப்பார் எனவும் பொருள் படுதலால் முற்றும்மை எச்சவும்மை யாயிற்று. (எ)

[எச்சவும்மைக்குச் சிறப்பு விதி.]

427. செவ்வெண் ணீற்றதா மெச்ச வும்மை.

(இ-ள்.) எச்ச உம்மை - எச்சவும்மையானது, செவ்வெண் - செவ்வெண்ணிலே வருமாயின், ஈற்றது ஆம் - ஈற்றிலே வரும்.

செவ்வெண்ணாவது எண்ணிடைச்சொல் தொக்கு எண்ணி நிற்பது.

(உ-ம்.) கல்வி செல்வ மொழுக்கங் குடிப்பிறப்பும் பெறுவாருமுளர்—இங்கு இவற்றுள் சில பெறுவாருமுளர் எனப்பொருள் படுதல் காண்க. (அ)

[சில எண்ணிடைச் சொற்களுக்காவதோர் இலக்கணம்.]

428. பெயர்ச்செவ் வெண்ணே யென்றா வெனாவெண்
நான்குந் தொகைபெறு மும்மையென் றெனவோ
டிந்நான் கெண்ணுமஃ தின்றியு மியலும்.

(இ-ள்.) பெயர்ச் செவ்வெண் - பெயர்களிடத்தே எண்ணிடைச்சொல் தொக்குவருகிற செவ்வெண்ணும், ஏ (எண்) - ஏகார வெண்ணும், என்றா (எண்)-என்றாவெண்ணும், எனா எண்-எனா வெண்ணுமாகிய, நான்கும் - நான்கெண்களும், தொகை-தொகையை, பெறும்-பெற்று நடக்கும், உம்மை (எண்) - உம்மை யெண்ணும், என்று (எண்) - என்று எண்ணும், என (எண்)-என எண்ணும், ஒடு (எண்) - ஒடெண்ணும் ஆகிய, இந்நான்கு எண்ணும் - இந்த நான்கெண்களும், அஃது இன்றியும் - தொகை பெறாமலும், இயலும் - நடக்கும். எ - று.

(உ-ம்.)

சாத்தன் கொற்ற னிருவரும் வந்தார்
சாத்தனே கொற்றனே யிருவரும் வந்தார்
சாத்தனென்றா கொற்றனென்றா விருவரும் வந்தார்
சாத்தனெனாக் கொற்றனெனா விருவரும் வந்தார்
} தொகை பெற்று வந்தன.

இவை வழக்கின்கண் ஒரோவிடத்துத் தொகை பெறாதுவரின் இசையெச்சமாகக்கொள்க. செய்யுளின்கண் தொகை பெறாதுவரின் தொகுத்தல் விகாரமாகவாவது, இசையெச்சமாகவாவது கொள்க.

சாத்தனுங்கொற்றனு மிருவரும் வந்தார்
சாத்தனென்று கொற்றனென் றிருவருளா
சாத்தனெனக் கொற்றனென விருவருளர்
சாத்தனோடு கொற்றனோ டிருவருளர்

இவைதொகை பெற்று வந்தன.

சாத்தனுங் கொற்றனும்
நிலனென்று நீரென்று தீயென்று காற்றென் றளவறு காய மென்றாகிய வுலகம்
நிலனென நீரெனத் தீயெனக் காற்றென வளவறு காயமென வாகிய வுலகம்
நிலனோடு நீரோடு தீயோடு காற்றோ டளவறு காயமோடாகிய வுலகம்

இவை தொகைபெறாது வந்தன. (கூ)

[என்று,என,ஒடு என்னும் எண்ணிடைச் சொற்களுக்குச்சிறப்புவிதி.]

429. என்று மெனவு மொடுவு மோரோவழி
நின்றும் பிரிந்தெண் பொருடொறு நேரும்.

(இ-ள்.) என்றும்-என்று என்பதும், எனவும்-என என்பதும், ஒடுவும்-ஒடு என்பதும், ஒரோவழிநின்றும்- (பொருடோறு நிற்றலேயன்றி) ஓரிடத்திலே நின்றும், பிரிந்து-பிரிந்து, எண்-எண்ணப்படுகின்ற, பொருள்தொறும்-பொருள்தோறும், நேரும்-பொருந்தும். எ-று.

(உ-ம்.) (1) வினைபகையென் றிரண்டினெச்சம்
(2) பகைபாவமச்சம் பழியெனநான்கும்
(3) பொருள்கருவிகாலம் வினையிடனொடைந்தும்

இவற்றுள் வினையென்று பகையென்று எனவும்; பகையென, பாவமென, அச்சமென, பழியென எனவும்; பொருளொடு, கருவியொடு,காலமொடு,வினையொடு,இடனொடு எனவுங் கூட்டி எண்ணுக.

[பெயரோடு வரும் எண்ணிடைச்சொற்கள் வினையோடும் வருமாறு.]

430. வினையொடு வரினுமெண் ணினைய வேற்பன.

(இ-ள்.) எண் - எண்ணிடைச்சொற்கள், வினையொடு வரினும்- வினையோடு வந்தாலும், இனைய - (பெயரோடுவரும்போது சொல்லப் பட்ட) இவ்விலக்கணங்களையெல்லாம், ஏற்பன - ஏற்கும். எ - று.

(உ-ம்.)

மயிலாடக் குயில்வாட மாமுகி லெழுந்தது—செவ்வெண்
கற்றுங்கேட்டுங் கற்பனைகடந்தார் —உம்மையெண்
உண்ணவென்றுடுக்கவென்று வந்தான் —என்றெண்
உண்ணவென உடுக்கவென வந்தான் —எனவெண்
உண்ணவுடுக்கவென்று வந்தான் —பிரிந்துகூடுமெண்.(கக)

[தில் என்னும் இடைச்சொல்.]

431. விழைவே கால மொழியிசை தில்லே.

(இ-ள்.) விழைவு - ஆசையும், காலம் - காலமும், ஒழியிசை - ஒழிந்த சொல்லும் (ஆகிய மூன்று பொருளையும் தரும்), தில் - தில் என்னு மிடைச்சொல். எ - று.

1. "வார்ந்திலங்குவையெயிற்றுச் சின்மொழி யரிவையைப் பெறுகதில்லம்மயானே" — அரிவையைப் பெறுதல் வேட்கையை யுணர்த்தலால் விழைவு.

2. "பெற்றாங்கறிகதில்லம்ம விவ்வூரே" — பெற்றகாலத்தறிக எனக்காலத்தை யுணர்த்தலாற் காலம்.

3. "வருகதில்லம்மவெஞ்சேரிசேர" — வந்தாலொன்றுசெய்வேனென்னும் ஒழிந்த சொற்பொருளை யுணர்த்தலால் ஒழியிசை.

[மன் என்னும் இடைச்சொல்.]

432. மன்னே யசைநிலை யொழியிசை யாக்கம்
கழிவு மிகுதி நிலைபே றாகும்.

(இ-ள்.) மன்-மன் என்னுமிடைச்சொல், அசைநிலை - அசைத்து நிற்றற் பொருளிலும், ஒழியிசை - ஒழிந்த சொற்பொருளிலும், ஆக்கம்-ஆக்கப்பொருளிலும், கழிவு-கழிதற்பொருளிலும், மிகுதி-மிகுதிப் பொருளிலும், நிலைபேறு - நிலை பெறுதற்பொருளிலும், ஆகும் - வரும்.

(உ-ம்.)

1. அதுமற்கொண்கன்றேரே — அசைநிலை.

2. "கூரியதோர்வாண்மன்" — அது இரும்பை அறத் துணித்தது என்னுஞ் சொல் ஒழிய நின்றதாகலின் ஒழியிசை.

3. "நெடியன்மன்" — அவனே வலியனுமாகு னெனப் பொருள்படுதலால் ஆக்கம்.

4. "சிறிபகட்பெறினேயெமக்கியு மன்" — இப்பொழுதுஅவன் இற ந்ததனால் எமக்குக்கொடுத் தல் கழிந்ததெனப்பொருள் படுவதனாற் கழிவு.

5. "எந்தையெமக்கருளு மன்" — மிகுதியும்அருளுமெனப் பொருள்படுதலால் மிகுதி.

6. "மன்னாவுலகத்து மன்னியது புரிமோ" — இவ்விடைச்சொல்லடியா கப்பிறந்த வினைகள் நிலை பெறாத உலகத்தில் நிலைத்த நிலைச்செய் எனப் பொருள் படுதலால் நிலைபேறு. (கரு)

[மற்று என்னும் இடைச்சொல்.]

433. வினைமாற் றசைநிலை பிறிதெனு மற்றே.

(இ - ள்.) மற்று - மற்றென்னு மிடைச்சொல், வினைமாற்று - வினைமாற்றுப் பொருளையும், அசைநிலை - அசைத்து நிற்றற்பொருளை யும், பிறிது எனும் - பிறிது என்னும் பொருளையுந் தரும். எ - று.

(உ-ம்.)

1. "மற்றறிவா நல்வினையா மிளைய மென்னாது" — விரைந்தறிவா மென் னும் வினையை யொழித்து விரையா தறிவாமென்னும் வினையைத்தருதலால்வினை மாற்று.

2. "மற்றடிகள் கண்டருள் செய்ய மலரடிக்கீழ்" — அசைநிலை.

3. "ஊழிற்பெருவலி யாவுள மற்றொன்று - சூழினுந் தான் முந்துறும்" — ஊழல்ல தொன்றென்னும் பொருளைத் தருதலால் பி றிது. (கசு)

[மற்று என்னும் இடைச்சொற்குச் சிறப்புவிதி.

434. மற்றைய தென்பது சுட்டிய தற்கினம்.

(இ-ள்.) மற்றைய தென்பது - மற்றைய தென்னும் பொருளாகிய வினைமாற்றும் பிறிதும், சுட்டிப்தற்கு - குறிக்கப்பட்டதற்கு, இனம் - இனமாகிய வினைமாற்றும் பிறிதுமாம். எ - று.

(உ - ம்.) "மற்றறிவாம் நல்வினை,"

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்."

இங்கு நல்வினையை விரைந்தறிவாமெனக் குறிக்கப்பட்டதற்கு இனமாகிய வினைமாற்றாவது விரையாதறிவா மெனவும், ஊழொன் றெனக் குறிக்கப்பட்டதற்கு இனமாகிய பிறிதாவது ஊழல்ல தொன் றெனவும் இனம் வந்தவாறு காண்க. (கரு)

[கொல் என்னுமிடைச்சொல்.]

435. கொல்லே யைய மசைநிலைக் கூற்றே.

(இ-ள்.) கொல்-கொல் என்னு மிடைச்சொல்லானது, ஐயம் - ஐயப்பொருளிலும், அசைநிலை - அசைநிலைப்பொருளிலும் வருகிற, கூற்று - இடைச்சொல்லாம். எ - று.

(உ - ம்.) 1. இவ்வுருக் குற்றிகொல் மகன்கொல், —ஐயம்.
2. கற்றதனாலாய பயனென்கொல் —அசைநிலை.

[ஒடு, தெய்ய என்னு மிடைச்சொற்கள்.]

436. ஒடுவுந் தெய்யவு மிசைநிறை மொழியே.

(இ - ள்.) ஒடுவுந் தெய்யவும் - ஒடு தெய்ய என்கிற இரண்டும், இசைநிறை - இசைநிறைத்தற் பொருளைத் தருகிற, மொழி - இடைச்சொற்களாம். எ - று.

(உ-ம்.) "விதைக்குறு வட்டிற் போதொடு பொதுள."
"சொல்லேன் றெய்ய நின்னொடுபெயர்த்தே." (கஎ)

[அந்தில், ஆங்கு என்னுமிடைச்சொற்கள்.]

437. அந்திலாங் கசைநிலை யிடப்பொரு ளவ்வே.

(இ - ள்.) அந்தில் - அந்தில் என்பதும், ஆங்கு - ஆங்கு என்பதும், அசைநிலை இடப்பொருள் - அசைநிலைப் பொருளையும் இடப் பொருளையுந் தருவனவாம். எ - று.

(உ-ம்.) 1. "அந்திற்கழலினன் கச்சினன்" ...
"ஆங்கத்திறனல்ல யாங்கழற" ... } அசைநிலை.
2. "வருமே-சேயிழையந்திற் கொழுநற்காணிய" ...
"ஆங்காங் காயினுமாக" ... } — (கஅ)

* அந்தில்—அவ்விடம்.

[அம்ம என்னுமிடைச்சொல்.]

438. அம்ம வுரையசை கேண்மினென் றாகும்.

(இ-ள்.) அம்ம-அம்ம என்பது, உரையசை - உரையசைப்பொருளைத் தருதலும், கேண்மின் என்று - (ஒன்றுசொல்லுவேன்) கேண்மின் என்கிற ஏவற்பொருளைத் தருவதும், ஆகும்-ஆகும் எ - று.

(உ-ம்.) 1. அதுமற்றம்ம — உரையசை.

2. அம்ம வாழி தோழி— கேளென்கிற ஏவற்பொருளைத் தந்தது (கக)

[மா என்னு மிடைச்சொல்.]

439. மாவென் கிளவி வியங்கோ ளசைச்சொல்.

(இ-ள்.) மா என் கிளவி - மா என்னுஞ்சொல், வியங்கோள் - வியங்கோளிடத்து வருகிற, அசைச்சொல் - அசைச் சொல்லாகும்.

(உ-ம்.) "உட்பின்று புற்கையுண்கமா கொற்கையோனே" (உ0)

[முன்னிலை அசைச்சொற்கள்.]

440. மியாயிக மோமதி யத்தை யித்தை
வாழிய மாளவீ யாழமுன் னிலையசை.

(இ-ள்.) மியா...யாழ - மியா இக மோ மதி அத்தை இத்தை வாழிய மாள ஈ யாழ என்கிற பத்து இடைச்சொற்களும், முன்னிலை-முன்னிலையிடத்து வருகிற, அசை - அசைச்சொற்களாம். எ - று.

(உ-ம்.)

மியா —சிலையன் செழுந்தழையன் சென்மியா
இக —தண்டுறையூர காணிக.
மோ —கண்டது மொழிமோ.
மதி —சென்மதி பெரும.
அத்தை —சொல்லியரத்தை நின்வெகுளி.
இத்தை —நீயொன்றுபாடித்தை.
வாழிய —காணியவா வாழிய மலைச்சாரல்.
மாள —சிறிது-தவிர்ந்தீக மாளநின்பரிசில ருய்ம்மார்.
ஈ —சென்றீபெரும நிற்றகைக்குநர் யாரே.
யாழ —செய்வினைமருங்கிற் செலவயர்ந்தியாழ.

[எல்லாவிடத்தும் வரும் அசைச்சொற்கள்]

441. யாகாபிறபிறக் கரோபோ மாதிகும்
சின்குரை யோரும் போலு மிருந்திட்
டன்றாந் தாந்தான் கின்றுநின் றசைமொழி.

(இ-ள்.) யா...நின்று - யா கா பிற பிறக்கு அரோ போ மாது இகும் சின் குரை ஒரும் போலும் இருந்து இட்டு அன்று ஆம் தாம தான் கின்று நின்று என்கிற இருபதிடைச் சொற்களும், அசைமொழி-(எல்லாவிடங்களிலும் வருகிற) அசைச்சொற்களாம். எ - று.

(உ-ம்.)

(1) யா —யா பன்னிருவர் மாணுக்க ரகத்தியனூர்க்கு.
(2) கா —புறநிழற்பட்டாளோ இவளிவட் காண்டிகா.
(3) பிற —ஆயனே யல்லேபிற.
(4) பிறக்கு —நசைபிறக்கொழிய.
(5) அரோ —இருங்குயிலாலுமரோ.
(6) போ —பிரியின்வாழாதென்போ.
(7) மாது —விளிந்தன்றுமாதோ.
(8) இகும் —காண்டிகு மல்லமோ கொண்க.
(9) சின் —தீங்காகிய வாலெல்ன்றிசின்.என்றி-என்றாய்என்று
(10) குரை —அது பெறலருங் குரைத்தே. [முன்னிலைவினை
(11) ஒரும் —அஞ்சுவ தோரு மறனே.
(12) போலும்—வடுவென்ற கண்ணாய் வருந்தினைபோலும்.
(13) இருந்து —எழுந்திருந்தேன்.
(14) இட்டு —நெஞ்சம் பிளந்திட்டு.
(15) அன்று —சேவடிசேர்துமன்றே.
(16) ஆம் —பணியுமாமென்றும்.
(17) தாம் —நீர்தாம்.
(18) தான் —நீதான்.
(19) கின்று —வாழ்வான் ஆசைப்பட்டிருக்கின்றேன்.
(20) நின்று —துணையாய்நின்றாய். (உக)

இடைச்சொல்லியல் முற்றுப் பெற்றது.

ஐந்தாவது

உரிச்சொல்லியல்.

[உரிச்சொல்லின் பொது இலக்கணம்.]

442. பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி
ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன வுரிச்சொல்.

(இ-ள்.) பல் வகை - (இசையும் குறிப்பும் பண்பும் ஆகிய) பல வேறு வகைப்பட்ட, பண்பும் - பண்புகளையும், பகர் பெயர் ஆகி - உணர்த்துகிற பெயராகி, ஒருகுணம் - ஒருகுணத்தையும், பலகுணம் - பலகுணங்களையும், தழுவி - உணர்த்துவனவாய், பெயர் வினை - பெயர் வினைகளைவிட்டு, ஒருவா - நீங்காவாய், செய்யுட்கு - செய்யுளுக்கு, உரியன - உரியவையாய்ப் பொருளுக்குரிமைபூண்டு நிற்பவை, உரிச் சொல் - உரிச்சொற்களாம். எ-று.

[இசை = ஓசை, குறிப்பு = மனத்தாற்குறித்து உணரப்படுவது, பண்பு = பொறியாலுணரப்படுவது.] (க)

[பண்பின் இலக்கணம்.]

443. உயிருயி ரல்லதாம் பொருட்குணம் பண்பே.

(இ-ள்.) உயிர் - உயிராகியபொருளும், உயிர் அல்லது - உயிரல்லாதபொருளும், ஆம் - ஆகிய, பொருள் - பொருள்களினுடைய, குணம்-குணங்கள், பண்பு-பண்புகளாகும். எ-று. (உ)

[உயிர்ப்பொருள்.]

444. மெய்ந்நா மூக்கு நாட்டஞ் செவிகளின்
ஒன்றுமுத லாக்கீழ்க் கொண்டுமே லுணர்தலின்
ஓரறி வாதியா வுயிரைந் தாகும்.

(இ-ள்.) மெய்-மெய்யும், நா - நாவும், மூக்கு-நாசியும், நாட்டம்-கண்ணும், செவிகளின் - காதும் ஆகிய ஐம்பொறிகளாலும், ஒன்று முதல் ஆ - (மெய்யாற் பரிசத்தையுணரு முணர்ச்சி) ஒன்று முதலாக, கீழ்க்கொண்டு - கீழ்ப்போனவுணர்ச்சியுங்கொண்டு, மேல் - (இரதம் கந்தம் உருவம் சத்தம் என) மேல்வரும் புலன்களை, உணர்தலின் - (ஒன்

றென்றாக)உணர்தலின், ஓர் அறிவு ஆதி ஆ-ஓரறிவுயிர்முதலாக, ஐந்து ஆகும் - ஐந்துவகையாகும், உயிர் - அவ்வுயிர். எ-று.

[ஓரறி வுயிர்கள்.]

445. புன்மர முதலவுற் றறியுமோ ரறிவுயிர்.

(இ-ள்.) புல் - புல்லும், மரம்-மரமும், முதல - முதலியவை, உற்று அறியும் - (மெய்யாற் பரிசித்துப்) பரிசத்தையறிகிற. ஓர் அறிவு உயிர் - ஓரறிவுயிர்களாம். எ-று. (ஈ)

[ஈரறி வுயிர்கள்.]

446. முரணந் தாதிநா வறிவொடீ ரறிவுயிர்.

(இ-ள்.) முரள் - இப்பியும், நந்து - சங்கும், ஆதி - முதலியவை, நா அறிவொடு - (கீழ்ப்போன மெய்யறிவேயன்றி) நாவாலிரதத்தையும் அறிகிற அறிவோடு, ஈர் அறிவு உயிர்-ஈரறிவுயிர்களாம். (ரு)

[மூவறிவுயிர்கள்.]

447. சிதலெறும் பாதிமூக் கறிவின்மூ வறிவுயிர்.

(இ-ள்.) சிதல்-கறையானும், எறும்பு-எறும்பும், ஆதி முதலியவை, மூக்கு அறிவின் - (கீழ்ப்போன இரண்டறிவுகளேயன்றி) மூக்கால் கந்தத்தையும் அறிகிற அறிவோடு, மூவறிவுஉயிர்-மூவறிவுயிர்களாம்

[நாலறி வுயிர்கள்.]

448. தும்பிவண் டாதிகண் ணறிவினா லறிவுயிர்.

(இ-ள்.) தும்பி - தும்பியும், வண்டு - வண்டும், ஆதி - முதலியவை, கண் அறிவின் - (கீழ்ப்போன மூன்றறிவுகளே யன்றிக்) கண்ணால் உருவத்தையும் அறிகிற அறிவோடு, நால் அறிவு உயிர் - நாலறிவுயிர்களாம். எ-று. (எ)

[ஐயறி வுயிர்கள்.]

449. வானவர் மக்க ணரகர் விலங்குபுள்
ஆதி செவியறிவோ டையறி வுயிரே.

(இ-ள்.) வானவர் - தேவரும், மக்கள் - மனிதரும், நரகர் - நரகரும், விலங்கு - மிருகங்களும், புள் - பறவைகளும், ஆதி - முதலியவை, செவி அறிவோடு - (கீழ்ப்போன நாலறிவுகளே யன்றிச்) செவியாற் சத்தத்தையும் அறிகிற அறிவோடு, ஐயறிவு உயிர் - ஐயறிவுயிர்களாம். எ-று. (அ)

[உயிரல்லாத பொருள்கள்.]

450. உணர்விய லாமுயி ரொன்று மொழித்த
உடன்முத லனைத்து முயிரல் பொருளே.

(இ-ள்.) உணர்வு இயல் ஆம் - அறிவுமயமாகிய, உயிர் ஒன்றும் ஒழித்த - உயிரொன்றுமே யன்றி, உடல் முதல் - உடம்புமுதலாகிய, அனைத்தும் - உலகத்துப்பொருள்க ளெல்லாம், உயிர் அல் பொருள் - உயிரல்லாத பொருள்களாம், எ-று. (௯)

[உடலும் உயிரும் வெவ்வேறு பொருள் என்பது.)

451. ஒற்றுமை நயத்தி னொன்றெனத் தோன்றினும்
வேற்றுமை நயத்தின் வேறே யுடலுயிர்.

(இ-ள்.) ஒற்றுமை நயத்தின் - (எவ்வுயிர் எவ்வுடம்பையெடுத்ததோ அவ்வுடம்பின் மயமாய் நிற்கிற) ஒற்றுமை நயங்கருதியவழி, ஒன்று என - ஒன்றுபோல, தோன்றினும் - தோன்றுமாயினும், வேற்றுமை நயத்தின் - (உயிர் சித்தாயும் உடம்பு சடமாயும் நிற்கிற) வேற்றுமை நயமாகிய உண்மைகருதியவழி, உடல் உயிர் - அவ்வுடலும் உயிரும், வேறு - வேறும், எ-று. (௰)

[உயிர்ப்பொருளின் குணப்பண்பு.]

452. அறிவரு ளாசை யச்ச மானம்
நிறைபொறை யோர்ப்புக் கடைப்பிடி மையல்
நினைவு வெறுப்புவப் பிரக்கநாண் வெகுளி
துணிவழுக் காறன் பெளிமை யெய்த்தல்
துன்ப மின்ப மிளமை மூப்பிகல்
வென்றி பொச்சாப் பூக்க மறமதம்
மறவி யினைய வுடல்கொ ளுயிர்க்குணம்.

(இ-ள்.) அறிவு...மறவி-அறிவு அருள் ஆசை அச்சம் மானம் நிறை பொறை ஓர்ப்பு கடைப்பிடி மையல் நினைவு வெறுப்பு உவப்பு இரக்கம் நாண் வெகுளி துணிவு அழுக்காறு அன்பு எளிமை எய்த்தல் துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல் வென்றி பொச்சாப்பு ஊக்கம் மறம் மதம் மறவி என்கிற முப்பத்திரண்டும், இனைய-இவைபோல்வன பிறவும், உடல் கொள்-உடம்பொடுகூடிய, உயிர்க்குணம்-உயிர்களினுடைய குணங்களாம். எ-று. (௧௧)

[உயிர்ப்பொருளின் தொழிற்பண்பு.]

453. துய்த்த றுஞ்ச றொழுத லணிதல்
உய்த்த லாதி யுட லுயிர்த் தொழிற்குணம்.

(இ-ள்.) துய்த்தல்...உய்த்தல் - துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல் உய்த்தல் என்கிற ஐந்தும், ஆதி - இவைபோல்வனபிறவும், உடல் உயிர் - உடம்போடு கூடிய உயிரினுடைய, தொழிற்குணம் - தொழிற்குணங்களாம், எ-று. (கஉ)

[உயிரல் பொருளின் குணப்பண்பு.]

454. பல்வகை வடிவிரு நாற்றமை வண்ணம்
அறுசுவை யூறெட் டுயிரல் பொருட்குணம்.

(இ-ள்.) பல் வகை வடிவு - (வட்டம் இருகோணம் முக்கோணம் சதுரம் இவை முதலாகிய) பலவகை வடிவுகளும், இருநாற்றம் - (நற்கந்தம் துர்க்கந்தம் என்கிற) இருநாற்றங்களும், ஐவண்ணம்-(வெண்மை செம்மை கருமை பொன்மை பசுமை என்கிற) ஐந்து வண்ணங்களும், அறு சுவை - (கைப்பு புளிப்பு துவர்ப்பு உவர்ப்பு கார்ப்பு இனிப்பு என்கிற) அறுசுவைகளும், ஊறு எட்டு - (வெம்மை தண்மை மென்மை வன்மை நொய்ம்மை சீர்மை இழுமெனல் சருச்சரை என்கிற) எட்டூறுகளும், உயிர் அல் பொருள் - உயிரல்லாத பொருள்களினுடைய, குணம்-குணங்களாம், எ - று. (கரு)

[உயிர்ப்பொருள் உயிரல் பொருள்களின் தொழிற்பண்பு]

455. தோன்றன் மறைதல் வளர்தல் சுருங்கல்
நீங்க லடைத னடுங்க லிசைத்தல்
ஈத லின்னன விருபொருட் டொழிற்குணம்.

(இ-ள்.) தோன்றல்...ஈதல்-தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல் நீங்கல் அடைதல் நடுங்கல் இசைத்தல் ஈதல் என்கிற ஒன்பதும், இன்னன - இவைபோல்வன பிறவும், இருபொருள் - (உயிர்ப்பொருளும் உயிரல்பொருளும் ஆகிய) இரண்டற்கும் பொதுவாகிய, தொழிற் குணம் - தொழிற்குணங்களாம். எ - று.

(உ-ம்.) உயிர்தோன்றி மறைந்தது,
உடல்தோன்றி மறைந்தது.
நெருப்புத்தோன்றி மறைந்தது. (கசு)

[ஒருகுணந்தழுவிய உரிச்சொற்கள்.]

456. சால வுறுதவ நனிகூர் கழிமிகல்.

(இ-ள்.) சால...கழி-சால என்பது முதலாகிய இவ்வாறு உரிச்சொற்களும், மிகல்-மிகுதியாகிய ஒரு குணத்தை யுணர்த்துகிற உரிச்சொற்களாம், எ-று.

(உ-ம்.) பருவந்துசாலப் பலகொலென்றெண்ணி —சால
உறுகளிறு டக்கு முயர்சினைமாவின் —உறு
தவச்சேய்நாட்டாராயினும் —தவ
நனிபேதையேநயனில்கூற்றம் —நனி
பொறைநில்லாநோய்கூரப்புல்லென்றிசினே —கூர்
காமங்கழிகண்ணோட்டம் —கழி.

சால் எனப்பண்படியாகச் சூத்திரஞ் செய்யாது சால எனக்குறிப்பு வினையெச்சமாகச் சூத்திரஞ் செய்தது இந்த உரிப்பெயரடியாக வினைவிகற்பங்களெல்லாம் பிறக்கு மென்பது தோன்ற உடம்படுபுணர்த்தலாமென்க. (கரு)

[பலகுணந்தழுவிய கடி என்னும் ஒரு உரிச்சொல்.]

457. கடியென் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்க மச்சஞ் சிறப்பே
விரைவே மிகுதி புதுமை யார்த்தல்
வரைவே மன்றல் கரிப்பி னாகும்.

(இ-ள்.) கடி என் கிளவி - கடி என்னும் உரிச்சொல், காப்பு - காவலும், கூர்மை - கூர்மையும், விரை - வாசனையும், விளக்கம் - விளக்கமும், அச்சம் - அச்சமும், சிறப்பு - சிறப்பும், விரைவு - விரைவும், மிகுதி - மிகுதியும், புதுமை - புதுமையும், ஆர்த்தல் - ஒலித்தலும், வரைவு-நீக்கலும், மன்றல்-கலியாணமும், கரிப்பின் - கரிப்பும் ஆகிய பதின்மூன்று குணங்களிலும், ஆகும் - வரும், எ-று.

(உ-ம்.) 1. கடிநகரடைந்து ... ...காப்பு
2. கடிநுனைப்பகழி ... ...கூர்மை
3. கடிமாலைசூடி ... ...நாற்றம்
4. கண்ணுடியன்னகடிமார்பன் ... ,. விளக்கம்
5. கடிபரமகளிர்க்கே கைவிளக்காதி . .அச்சம்
6. அம்புதுஞ்சுங்கடியரண் ... ...சிறப்பு

7. எம்மம்புகடிவிடுதும் ... ...விரைவு
8. கடிபுண்கடவுட்கிட்டசெழுங்குரல் . .மிகுதி
9. கடிமணச்சாலை ... ...புதுமை
10. கடிமுரசு ... ... .ஆர்த்தல்
11. கடிமது நுகர்வ ... . .வரைவு
12. கடிவினைமுடிகினி ... . .மன்றல்
13. கடிமிளகுதின்றகல்லாமந்தி . . ...கரிப்பு.

[ஒரு குணந்தழுவிய பல உரிச்சொற்கள்.]

458. மாற்ற நுவற்சிசெப் புரைகரை நொடியிசை
கூற்றுப் புகறன் மொழிகிளவி விளம்பறை
பாட்டுப் பகர்ச்சி யியம்பல் சொல்லே.

(இ - ள்.) மாற்றம் .. இயம்பல் - மாற்றம் முதலாகிய பதினெறும், சொல் - சொல் என்னு மொருகுணத்தை யுணர்த்துகிற உரிச்சொற்களாம், எ-று.

1. கோவலர்வாய் மாற்றமுணர்ந்து . மாற்றம்
2. இருபிறப்பாளர் பொழுதறிந்து நுவல . நுவற்சி
3. தெருண்டாரவை செப்பலுற்றேன் செப்பு
4. உரைப்பா ருரைப்பவையெல்லாம் . உரை
5. அரங்கரை நாவினுண்மறை முற்றிய . கரை
6. அஞ்சொற்பெரும்பணைத்தோ ளாயிழை யாடாநொடியும் ..நொடி
7. நசையுநர்க் கடையா நன்பெருவாயி லிசையெனப்புக்கு ...இசை
8. உற்றது நாங்கள் கூற வுணர்ந்தனை ...கூற்று
9. புகன்ற வன்றியும் ... .புகறல்
10. காமஞ் செப்பாது கண்டது மொழிமோ ...மொழி
11. கிளந்தகிளை முதலுற்ற ... ...கிளவி
12. மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர் ...விளம்பு
13. அச்சுத னடிதொழு தறைகுவன் சொல்லே...அறை

14. ஒருவன் செய்ந்நன்றி கொன்றார்க்-குய்தி யில்லெனவறம்பாடின்றே ...பாட்டு
15. வார்த்தைபகர்குற்றேன் ...பகர்ச்சி
16. இடிபோலியம்பினனே ...இயம்பல் (கஎ)

[ஒருகுணந்தழுவிய பல உரிச்சொற்கள்.]

459. முழக்கிரட் டொலிகலி யிசைதுவை பிளிறிரை
இரக்கழுங் கியம்ப லிமிழ்குளி றதிர்குரை
கனைசிலை சும்மை கௌவை கம்பலை
அரவ மார்ப்போ டின்னன வோசை.

(இ-ள்.) முழக்கு . ஆர்ப்போடு - முழக்கு முதலான இருபத திரண்டும், இன்னன-இவைபோல்வனபிறவும், ஓசை-ஓசையென்னு மொருகுணத்தை யுணர்த்து முரிச்சொற்களாம். எ - று.

(உ-ம்.) 1. முழங்குமுந்நீர் முழுவதும்வளைஇ . . . முழக்கு.
2. குடிஞையிரட்டுங் கோடுயர்நெடுவரை ...இரட்டு.
3. ஒல்லெனவொலிக்கு மொலிபுனலூரற்கு ...ஒலி.
4. கலிகெழுமூதூர் . . ..கலி.
5. பறையிசையருவி ... ...இசை.
6. பல்லியந்துவைப்ப ... ...துவை.
7. பிளிறுவார்முரசம் ... ...பிளிறு.
8. இரைக்குமஞ்சிறைப் பறவைகள் ... ...இரை.
9. இரங்குமுரசினம் . . ..இரங்கு.
10. இரும்பிழிமாரி யழுங்கின மூதூர்... . .அழுங்கு.
11. காலைமுரசம இயம்ப ... ...இயம்பல்.
12. இமிழ்கடல் வளைஇய ... ...இமிழ்.
13. குளிறுமுரசங் குணில்பாய ... ...குளிறு.
14. களிறுகளித்ததிருங்கார் ... . அதிர்.
15. குரைபுனற்கன்னி ... . குரை.
16. கனைகடற்சேர்ப்ப ... . கனை.
17. சிலைத்தார்முரசங்கறங்க ... ...சிலை.
18. தன்னாதசும்மையிரு தக்கிணநாடென்னனி ...சும்மை.
19. கௌவைநீர்வேலி ... ...கௌவை.

20. விளக்கம்பலை மணிச்சிலம்பவும் கம்பலை.
21. அறைகடலரவத்தானை அரவம்.
22. ஆர்த்த பல்லியக்குழாம் ஆர்ப்பு. ()

[இவ்வுரிச்சொல்லியலுக்குப் புறனடை.]

460. இன்ன தின்னுழி யின்னண மியலும்
என்றிசை நூலுட் குணகுணிப் பெயர்கள்
சொல்லாம் பரத்தலிற் பிங்கல முதலா
நல்லோ ருரிச்சொலி னயந்தனர் கொளலே.

(இ-ள்.) இன்னது - (பெயர் வினை இடை உரிகளில்), இன்ன சொல், இன்னுழி-(தன்மை முன்னிலை படர்க்கைகளிலும் வழக்குச் செய்யுள்களிலும்) இவ்விடத்தே, இன்னணம் - இவ்விலக்கணமுள்ளதாய், இயலும் என்று - நடக்குமென்று, இசை - சொல்லக்கடவதாகிய, நூலுள் - இந்நூலுள், குண குணிப்பெயர்கள் - குணப்பெயர்களையும் குணிப்பெயர்களையும், சொல்லாம்-வேண்டியமட்டுஞ்சொல்வதன்றிவிரித்துச் சொல்லக்கடவமல்லம், பரத்தலின்-விரிக்கின்மற்றொன்று விரித்தலென்னுங்குற்றம் வருமாதலின், நல்லோர்- (அவற்றைக் கண்டறியவேண்டிய) நல்லோர், பிங்கலம் முதல் ஆ - பிங்கலந்தை திவாகர முதலியநூல்களில், உரிச்சொலில்-உரிச்சொற்றொகுதியுள், நயந்தனர் கொளல் - விரும்பிக்கொள்க. எ - று.

[எனவே பெயரியலுட் பெயர்ச்சொற் றொகுதியையும், வினையியலுள் வினைச்சொற்றொகுதியையும், இடையியலுள் இடைச்சொற்றொகுதியையும், விரிக்காமைக்கும் இதுவே புறனடையா மென்பதாயிற்று.] (கக)

[சொல்லதிகாரத்துக்குப் புறனடை.]

461. சொற்றொறு மிற்றிதன் பெற்றியென் றனைத்தும்
முற்ற மொழிகுறின் முடிவில வாதலின்
சொற்றவற் றியலான் மற்றைய பிறவும்
தெற்றென வுணர்த றெள்ளியோர் திறனே.

(இ - ள்.) சொற்றொறும் - சொற்றோறும், இற்று - இத்தன்மைத்து, இதன் பெற்றி என்று - இதனிலக்கணமென்று, அனைத்தும் முழுதும், முற்ற - நிறைவுற, மொழிகுறின் - சொல்லப்புகுந்தால், முடிவு அல - முடிவில்லவாம், ஆதலின் - ஆதலால், சொற்றவற்று-

எடுத்துச் சொல்லப்பட்ட சொற்களுடைய, இயலான் - இலக்கணங்களைக்கொண்டு, மற்றைய பிறவும் - சொல்லப்படாதவற்றி னிலக்கணங்களையும், தெற்றென உணர்தல் - ஒப்புமைகருதி இதுவுமதுவென உணர்தல், தெள்ளியோர் - நூலோதித்தெளிதற்குரிய மாணுக்கரது, திறன் - கடனும். எ-று.

இவற்றிற்குதாரணம் முன் வந்தனகாண்க. (உ0)

[இந்நூலுக்குப் புறனடை.]

462. பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே.

(இ-ள்.) பழையன கழிதலும் - முற்காலத்துள்ள இலக்கணங்களுள் சில பிற்காலத் திறத்தலும், புதியன புகுதலும் - முற்காலத் தில்லன சில பிற்காலத் திலக்கணமாதலும், வழுவல-குற்றமல்லவாம், காலவகையினான்-காலவேற்றுமை யது வாகலால், எ-று.

இவற்றிற்கும் உதாரணம் முன்வந்தன காண்க. (உக)

உரிச்சொல்லியல் முற்றிற்று.

சொல்லதிகாரம் முற்றுப்பெற்றது.

நன்னூற் காண்டிகையுரை
முற்றிற்று.

பரீட்சை வினுவிடை.

எழுத்தியல்.

1. முதலெழுத்துக்கள் எவை?

விடை. சூத்திரம் - 59.

2. சார்பெழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

விடை. சூத்திரம் - 60.

3. இடுகுறிப் பொதுப்பெயர்க்கு மூன்றுதாரண மெழுதுக.

விடை. மரம், மீன், புள்.

4. இடுகுறிச் சிறப்புப்பெயர்க்கு மூன்றுதாரணம் எழுதுக.

விடை. பலா, சுறு, கிளி.

5. காரணப் பொதுப்பெயர்க்கு இரண்டுதாரண மெழுதுக.

விடை. அணி - நகை.

6. காரணச் சிறப்புப்பெயருக்கு இரண்டுதாரணமெழுதுக.

விடை. முடி - கழல்.

7. காரண விடுகுறிப்பெயர்க்கு நான்குதாரணமெழுதுக.

விடை. முக்கணன் - அந்தணன் - முள்ளி - பங்கயம்.

8. காரண விடுகுறிப் பெயரென்றுலென்னை?

விடை, 32 ஆம் பக்கம் கடையிற்காண்க.

9. இடுகுறி, காரணம், காரணவிடுகுறி - இம்மூன்றுக்கும் வடமொழிப்பெயர் என்னை?

விடை. பக்கம் - 33.

10. அகச்சுட்டு, புறச்சுட்டு, அகவினு, புறவினு - இவைகளுக்கு உதாரணமெழுதுக.

விடை. பக்கம் - 33-34.

11. அ, இ, உ - இம்மூன்றெழுத்துக்களும் சுட்டெழுத்தாக வருதற்கும், வராமைக்கு முதாரணங்காட்டுக.

விடை. அவன், இவன், உவன். அறம், இரும்பு, உருண்டை.

12. மொழிக்கு முதலிலும் கடையிலும் வரும் வினுவெழுத்து எது?

விடை. ஏ.

13. முதலெழுத்துக்களுக்குப் பிறப்பிடம் எவை?
விடை. (சூ-75.)

14. உயிர்மெய் எத்தனை? அவைகளில் எந்த ஒலி முன்னும் எந்த ஒலி பின்னுமாய் ஒலிக்கும்?
விடை. இருநூற்றுப்பதினாறு. ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாயொலிக்கும்.

15. முற்றாய்தம் எத்தனை?
விடை. (சூ-90.)

16. உயிரளபெடை 21-ஆவது எப்படி?
விடை. (சூ - 91 - பக்கம் - 41.)

17. இன்னிசை, சொல்லிசை யளபெடைகளுக்கு விதியென்னை?
விடை. (சூ-91-பக்கம்-41.)

18. மேற்கூறிய அளபெடைகள் என்ன அளபெடையென்று சொல்லப்படும்?
விடை. செயற்கை யளபெடை.

19. இயற்கை யளபெடைகளெவை?
விடை. ஆஉ, மகஉ, குழூஉ, குரீஇ முதலிய அளபெடுத்தே வரும் தனி மொழிகளாம்.

20. அளபெடுக்கும் மெய்யெழுத்துக்களெவை?
விடை. ங, ஞ, ண, ந, ம, ன, வ, ய, ல, ள.

21. ஆய்தத்தைஒற்றளபெடையோடுகூட்டியதற்குக்காரணமென்னை?
விடை. ஆய்தத்திற்கு ஒற்றாந்தன்மையு முளதாதலால்.

22. ஙகரம் மொழிக்கிறுதியில் அளபெடுக்குமா?
விடை. விதியீறாக நின்று அளபெடுக்கும்.

23. விதி ஈறு என்றால் என்னை?
விடை. புணர்ச்சி விகாரத்தால் தனக்குள்ள முன்னைய ஈறு திரிந்தாயினும், கெட்டாயினும் வேறு ஈறாய்த் தோன்றுவது. (உ-ம்.) மடங்கலந்த, மரக்கொம்பு, இவைகளில் மடம், மரம் என்னும் மகரவீற்றுப் பெயர்கள் மடங் என ஙகரவீறாகவும், மர என அகரவீறாகவும் நின்றனகாண்க.

24. ஒற்றளபெடை நாற்பத்திரண்டாதல் எப்படி?
விடை. (சூ - 92.)

25. குற்றியலுகரம் எப்போது இகரமாகத்திரியும்?
விடை. யகர முதன்மொழி வந்து புணரும்போது. (உ-ம்.) வரகியானை, கொடுப்பதியாது.

26. குற்றியலிகரம் மொழிக்கு முதலில் வருதற்குக் காரணமெழுதுக.
விடை, கேண்மியா.

27. குற்றியலுகரம் 36-ஆவது எப்படி?
விடை. 94-ஆம் சூத்திர வுரையிற்காண்க.

28. எந்தத்தொடர்க் குற்றியலுகரம் இரண்டெழுத்து மொழியாகவே வரும்?
விடை. நெடிற்றொடர் - (உ-ம்) - நாடு - ஆறு.

29. பாலாறு, இடையூறு, காராடு, மலாடு - என்பவைகளை நெடிற்

விடை. குற்றியலுகர விகுதிகளாகிய கு, சு, டு, து, பு, று க்களின்முன் தனிநெடில் ஒன்றையே தொடர்ந்து இரண்டெழுத்து மொழியாய் வருவது நெடிற்றொடர். இவ்வாறன்றி நெடிலாவது, குறிலாவது, அவ்விரண்டுமாவது ஒன்றின்மேல் தொடர்ந்து வருவது உயிர்த்தொடர்.

30. குற்றியலுகரம் மொழிக்குமுதலில் வருவதற்கு உதாரணம் என்னை?
விடை. நுந்தை.

31. முற்றியலுகரத்துக்கு விதி என்னை?
விடை. (பக்கம்-44.)

32. வல்லின மெய்யின்மேல்வரும் முற்றியலுகரம் ஆறு எழுதுக.
விடை. நகு, பசு, அடு, அது, அறு, எது.

33. மெல்லின, இடையின மெய்களின்மேல்வரும் முற்றியலுகரம் மும்மூன்றெழுதுக.
விடை. வேணு, விம்மு, பின்னு, கதவு, இழிவு, சொல்லு.

34. எந்த ஐகாரம் குறுகும்?
விடை. சொல்லின் முதல், இடை, கடைகளில் வரும் ஐகாரம்.

35. (1) ஐகாரக்குறுக்கம் மூன்றிற்கும் உதாரணமெழுதுக.
விடை. ஐயம், மனைவி, கடை.
(2) ஔகாரக்குறுக்கம் ஒன்றாய் வருதற்குக்காரணம் என்னை?
விடை - ஔகாரம் மொழிக்கு இடையிலும், கடையிலும், வாராதாகையால்.

36. எங்குநின்ற மகரம் குறுகும்?
விடை. ணகர, னகரங்களுக்குப்பின்னும் வகரத்துக்கு மேலும் நின்ற மகரம் குறுகும். (உ-ம்.) மருண்ம், போன்ம், நிலம்

37. எந்த ஆய்தம் குறுகும்?
விடை. தனிக்குறிலின் பின்னின்ற லகர ளகரங்கள் திரிந்த ஆய்தம் தன்மாத்திரையிற் குறுகும். (உ-ம்.) அஃறிணை, முஃடீது.

38. உயிரளபெடை, நெடில், குறில், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், ஒற்றளபெடை, மெய்யெழுத்து, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம், உயிர்மெய்நெடில் இவைகளுக்குத் தனித்தனி மாத்திரையென்னை?

விடை. (சூத்திரம்-99.) உயிர்மெய் யெழுத்துக்களில்மெய்யெழுத்துக்கு மாத்திரையின்றாய், உயிர்மாத்திரையே மாத்திரையாய் வரும் என்பதனை 89 ஆம் சூத்திரவுரையிற் கண்டுகொள்க.

39. மொழிக்கு முதலில்வரும் எழுத்துக்களெவை?

விடை. (சூ - 102.)

40. மொழிக்கு முதலாகாத மெய்யெழுத்துக்களெவை?

விடை. ட, ற, ண, ன, ர, ல, ழ, ள.

41. எல்லாவுயிரோடுங்கூடி மொழிக்கு முதலாகாத மெய்யெழுத்துக்களெவை?

விடை. வ, ய, ஞ, ங.

42. வகரம் எந்தெந்த வுயிர்களோடுகூடி மொழிக்கு முதலில்வராது?

விடை. உ - ஊ - ஒ - ஓ.

43. யகரம் எந்தெந்த உயிர்களோடுகூடி மொழிக்கு முதலாகாது.?

விடை. இ - ஈ, எ - ஏ, ஐ, ஒ.

44. ஞகரம் எந்தெந்த உயிர்களோடுகூடி மொழிக்கு முதலில்வரும்?

விடை. அ - ஆ - எ - ஒ.

45. ஙகரம் எவ்வாறு மொழிக்கு முதலாகும்?

விடை. (சூ-106.)

46. மொழிக்கு இறுதியில்வரும் எழுத்துக்களெவை?

விடை. (சூ - 107.)

47. மெய்யோடுசேர்ந்து ஈறாகாத உயிர் எது?

விடை - எ.

48. எந்த மகரத்துக்கு னகரம்போலி யாகவரும்?

விடை. அஃறிணைப் பெயர்களில் இரண்டு குறிலையடுத்த மகரத்துக்கு னகரம் போலியாம்.

(உ-ம்.) மனன், புறன், கடன், இடன்.

49. எவ்வகை மொழிகளுக்கு அர் என்பது போலியாகவரும்?

விடை. சிலகுற்றியலுகரமொழிகளுக்கு (உ-ம்.) வண்டர், சுரும்பர், மாதர், இடக்கர்.

50. சில லகரவீற்று மொழிகள் எந்த வெழுத்தைப் போலியாகப் பெறும்?

விடை. ரகரத்தையும், ளகரத்தையும் (உ-ம்.) பந்தர்—மதிள்.

51. சஞயமுன் உள்ள அகரத்துக்கு எந்த எழுத்துப்போலிட வரும்?
விடை. ஐகாரம் (உ-ம்.) பைசல், மைஞ்சு, மையல்,—அமைசசன் இலஞ்சி, அமையர்.

52. நகர தகரங்களுக்கு எந்த எழுத்துக்கள் போலியாக வரும்?
விடை. ஞகர, சகரங்கள்போலியாகவரும் (உ-ம்.) ஞண்டு, ஞமிற வைச்ச, பிச்சு, ஐஞ்சு.

53. எந்த யகரத்துக்கு ஞகரம் போலியாகவரும்.
விடை. ணகர, னகரங்களுக்குப் பின்னின்ற யகரத்துக்கு ஞகரம் போலியாக வரும். (உ-ம்.) மண்ஞாதத, பொன் ஞாதத.

54. எந்தெந்த எழுத்துக்கள் என்னென்ன சாரியைகளைப் பெறும்?
விடை. (சூ - 126.)

55. சாரியை பெற்றேவரும் எழுத்தெது?
விடை. மெய்யெழுதது.

56. சாரியை பெருத எழுத்துக்களெவை?
விடை - உயிர்மெய்நெடில்.

பதவியல்.

---

57. ஓரெழுத்தொருமொழி எத்தனை?
விடை. (சூ - 129.)

58. பகாப்பதங்கள் என்ன பெயராயிருக்கும்? அது எத்தனைவகைப படும்?
விடை. இடுகுறிப்பெயர். நான்குவகை (சூ - 131.)

59. பகுபதம் எத்தனை வகைப்படும்!
விடை. பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம் என இரண்டு.

60. பெயர்ப்பகுபதம் எவைகளினடியாகப் பிறக்கும்?
விடை. பொருள், இடம், காலம், சினை. குணம், தொழில்.

61. பெயர்ப்பகுபதங்கள் பத்தெழுதுக.
விடை. தாரினன், கண்ணன், சிறமி, வேலினன், ஓணத்தான், நகரத்தான், ஊணன், சேர்ப்பன், கோதையான், விறலி.

62. பெயர்ப்பகுபதங்கள் பயனிலையாக வரும்போது, என்ன சொல் லாகும்? உதாரணமென்னை?
விடை. குறிப்புவினைமுற்றும் (உ-ம்.) அவன் குழையினன், அவள் ஆதிரையாள், அவர் நாட்டுப்புறத்தார், அது நீண்டவாலது, அவை டெரியன, அவன் கடுநடையினன்.

63. வினையாலணையும் பெயர்ப்பகுபதம் சிலகூறுக.
விடை. செய்தவன், பறந்தவை.
64. இடைச்சொற் பகுபதமும், உரிச்சொற்பகுபதமும் உண்டா?
விடை. இல்லை.
65. பெயர்ப்பகுபதமும், வினைப்பகுபதமும் வேறு எவைகளி னடியாகவும் பிறக்கும்.
விடை. இடைச்சொல், உரிச்சொற்களி னடியாகவும் பிறக்கும்.
66. இடைச்சொ லடியாகப்பிறந்த பெயர்ப்பகுபதம் சில கூறுக.
விடை. மன்னன், மற்றையான், பிறன்.
67. உரிச்சொலடியாகப் பிறந்த பெயர்ப்பகுபதம் சிலகூறுக.
விடை. சான்றோர்-உறுவர்-நயவர்.
68. இடைச்சொலடியாகப் பிறந்த வினைப்பகுபதம் சிலகூறுக.
விடை. என்றான், போன்றது, ஒத்தன, அன்னான், இன்னாள்.
69. உரிச்சொலடியாகப் பிறந்த வினைப்பகுபதம் சிலகூறுக.
விடை. கூர்ந்தது, உற்றார், சான்றார்.
70. தொழிற்பெயர்ப்பகுபதம் சில கூறுக.
விடை. அடக்கம், வருகிறது.
71. பகுபதவுறுப்புக்கள் எத்தனை? அவையாவை?
விடை. ஆறு—அவை-பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம்.
72. பகுதி, விகுதி என்பன எந்த வடமொழிகளின் திரிபு.
விடை. பிரகிருதி, விகிருதி.
73. பெயரிடை நிலைக்கும், வினையிடை நிலைக்கும் பேதமென்னை?
விடை. பெயரிடை நிலை காலங்காட்டாது, வினையிடை நிலை காலங்காட்டும்.
74. சாரியை, சந்தி, விகாரம் ஆகிய இவைகள் எக்காரணங்களால் இப்பெயர் பெற்றன?
விடை. 133 ஆம் சூத்திர விசேஷவுரையிற் காண்க.
75. பெயரடியாகப் பிறந்த தெரிநிலை வினைப்பகுபதம் சில எழுதுக.
விடை. கடைக்கணித்தான் - சித்திரித்தான்.
76. மை யீற்றுப்பண்புப்பெயர் ஈறுகெட்டுப் புணர்வதற்கு இரண்டுதாரண மெழுதுக.
விடை. நல்லது, வல்லது.
77. இடை உகரம் இகரமாகத் திரிவதற்கு இரண்டுதாரணமெழுதுக.
விடை. பெரிது-சிறிது.

78. ஆதிநீடலுக்கு இரண்டுதாரணமெழுதுக.
விடை. பாசி, மூதூர்.

79. முதலில் உள்ள அகரம், ஐகாரமாவதற்கு இரண்டுதாரணமெழுதுக.
விடை. பைந்தார்-பைம்புனல்.

80. தன்னொற்றிரட்டலுக்கு இரண்டுதாரணமெழுதுக.
விடை. வெற்றிலை, சிற்றூர்.

81. முன்னின்றமெய் திரிதலுக்கிரண்டுதாரணமெழுதுக.
விடை. சேதாம்பல்-சேதா.

82. இனவெழுத்து மிகுதற்கிரண்டுதாரணமெழுதுக.
விடை. பெருங்குணம், நெடுங்காலம்.

83. இனையவும் என்றதனுல் அடையும் விகாரங்களுக்கி[illegible]ண்டுதாரண மெழுதுக.
விடை. பைந்தார். காராடு-இவற்றுள் பசுமை என்பதில் சக[illegible]ரமும், கருமை என்பதில் உகரமும் கெட்டமை காண்க.

84. மையீற்றுப் பண்புப்பெயர்கள் இவ்விகாரங்களை யடையாமல் இயல்பாய்ப் புணர்வதற்கிரண்டுதாரணமெழுதுக.
விடை. செம்மையான், தீமையோர்.

85. தெரிநிலை வினைப்பகுதிகளுக் கெல்லாம் பொதுவாய்பாடு [illegible]
விடை. செய். நட, வா முதலிய எல்லா வினைப்பகுதிகளும் நட[illegible]தலைச்செய், வருதலைச்செய் முதலியவாகப் பொருள்படல் காண்க.

86. நட, வா முதலிய சொற்களை ஏவல் ஒருமை வினையாகக்கொள்ளும்போது எவ்வாறுகொள்ளல் வேண்டும்?
விடை. ஆய் விகுதி புணர்ந்துகெட்டன என்னல்வேண்டும் - கெடாதபோது நடவாய், வாராய் எனவரும்.

87. விகுதி வந்துபுணர விகாரப்படுகிற சிலபகுதிகூறுக.
விடை. வா, தா, காண், சா, வே, கொணு, முழுகு.

88. பிறவினை விகுதிகள் எவை?
விடை. வி - பி - கு - சு - டு - து - பு - று.
(உ - ம்.) செய்வி, நடப்பி, போக்கு, பாய்ச்சு, உருட்டு, நடத்து, எழுப்பு - பயிற்று.

89. விகுதிபெருமல் வேறு எவ்வகையாலும் பிறவினை வரும்?
விடை. இடையிலுள்ள மெல்லினமெய் வல்லினமெய்யாகத்திரிந்தும், நடுவே ஒருமெய்தோன்றியும் பிறவினையாம்?
(உ - ம்.) இயக்கு - தோற்று, திருத்து - திரிதல்.
ஆட்டு, உருக்கு, தேற்று - தோன்றல்.

90. தன்வினைக்கும் பிறவினைக்கும், பொதுவானசிலபகுதிகள் கூறுக.
விடை. கரை, மறை, தேய், அலை, சேர்.

91. தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவான பகுதிகள் வினைமுற்று முதலிய விகுதிகளைப் பெறும்போது எவ்வாறாகும்?
விடை. பிறவினையில் இடையே வல்லொற்று மிகுந்தும், தன்வினையில் மெல்லொற்று மிகுந்தும், இயல்பாகியும் வரும் (உ-ம்.) கரைத்தான் - (பிற) கரைந்தான், கரைகிறான் - (தன்.)

92. ஆண்பாற் பெயர்விகுதிகள் எவை?
விடை. அன், ஆன், மன், மான், தை, பி, முன், அல், ன், (உ-ம்.) பொன்னன், குழையான், வடமன், கோமான், எந்தை, எம்பி, எம்முன், தோன்றல், பிறன்.

93. பெண்பாற் பெயர்விகுதிகள் எவை?
விடை. அள், ஆள், இ, கை, ள், (உ-ம்.) குழையினள், குழையினாள், பொன்னி, எங்கை, பிறள்.

94. பலர்பாற் பெயர்விகுதிகள் எவை?
விடை. அர்-ஆர்-மார்-கள்-ர் (உ-ம்.) குழையினர், குழையினார், தேவிமார், கோக்கள், பிறர்.

95. ஒன்றன்பாற் பெயர்விகுதிகள் எவை?
விடை. து. இ. (உ-ம்.) அது-பாசி.

96. பலவின்பாற் பெயர்விகுதிகள் எவை?
விடை. அ-வ்-கள்-ஐ. (உ-ம்.) பெரியன-அவ்-மரங்கள்-அவை.

97. தொழிற்பெயர் விகுதிகள் எவை?
விடை. (பக்கம்-68.)

98. பண்புப் பெயர்விகுதிகளெவை?
விடை. (பக்கம் - 69.)

99. காலங்காட்டும் இடைநிலைகளோடு கூடிவரும் தொழிற்பெயர் விகுதிகளெவை?
விடை. து-மை.

100. து-விகுதி எந்தக்கால இடைநிலையோடு கூடிவரும்?
விடை. முக்காலவிடைநிலைகளோடுங்கூடி முக்காலத் தொழிற்பெயர்களாகவரும்—(உ-ம்.) செய்தது-செய்கிறது-செய்வது, இவைகளுக்கு முறையே செய்ததொழில், செய்கிறதொழில், செய்யுந்தொழில் என்பனபொருள்.

101. மை விகுதியீற்றுத் தொழிற்பெயர் என்னென்ன காலங்களில் வரும்?
விடை. இறந்தகால நிகழ்காலங்களில் மாத்திரம் வரும் - எதிர்காலத்தில் வராது. (உ-ம்) செய்தமை, செய்கின்றமை.

102. தும்விகுதி காலவிடை நிலைகளோடு கூடாதுவருமா?

விடை. வருவதுண்டு (உ - ம்.) பாய்த்து - பாய்தல் என்பது பொருள்.

103. உண்மை - இன்மை என்பன என்னசொற்கள்?

விடை - குறிப்புத்தொழிற் பெயர்கள்.

104. விகுதிபெற்றுவரும் இத்தொழிற் பெயர்களன்றி வேறுதொழிற் பெயர்களுமுண்டோ?

விடை. முதனிலைத்தொழிற்பெயர், முதனிலைதிரிந்த தொழிற்பெயர், முதனிலைபெறாத தொழிற்பெயர் என மூவகைத்தொழிற் பெயர்களுண்டு.

105- முதனிலைத் தொழிற்பெயராவ தென்னை?

விடை - விகுதி புணர்ந்துகெட்டுப் பகுதிமாத்திரையாய் நிற்பது. (உ - ம்.) அடி - சொல் - மொழி - பிடி.

106. முதனிலைதிரிந்த தொழிற்பெயராவதென்னை?

விடை. விகுதி புணர்ந்து கெடும்போது பகுதி விகாரப்பட்டு நிற்பது. (உ - ம்.) கோள் - கேடு - பாட்டு - விளையாட்டு.

107. முதனிலைபெறாத தொழிற்பெயராவ தென்னை?

விடை. விகுதிகளைப் பெறாமலும் மற்றவினைவிகற்பங்கள் பிறவாமலும் தொழிலைக் காட்டுவது, (உ - ம்.) வேட்டை, சண்டை, கூத்து, வேலை.

108. இ - ஐ - அம் விகுதிகள் எவ்வெப்பொருள்களை யுணர்த்தும்?

விடை. வினைமுதற்பொருள், செயப்படுபொருள், கருவிப்பொருள்களை உணர்த்தும்.

109. இகரவிகுதி வினைமுதற்பொருள் முதலிய மூன்றனையு முணர்த்துதற் குதாரணங்காட்டுக.

விடை. அலரி - ஊருணி - மண்வெட்டி.

110. ஐகாரவிகுதி வினைமுதற் பொருள்முதலிய மூன்றனையு முணர்த்துதற்குதாரணங் காட்டுக.

விடை. பறவை, தொடை, பார்வை.

111. அம் விகுதி வினைமுதற் பொருள்முதலிய மூன்றனையு முணர்த்துதற்குதாரணங் காட்டுக.

விடை. எச்சம் - நீத்தம் - நோக்கம.

112. காய், தளிர், பூ, கனி, திரை, நுரை, அலை-இவைகளை என்ன பெயர் என்பர்?

விடை. வினைமுதற் பொருளுணர்த்தும் இகரவிகுதிபுணர்ந்து கெட்ட தொழிலடியாகப் பிறந்தபெயர் என்பர்.

113. ஊண் - உரி - துணி - மடி என்றாற்போல்வனவற்றை என்ன பெயர் என்பர்?

விடை - செயப்படு பொருளுணர்த்தும் ஐகார விகுதி புணர்ந்து கெட்ட தொழிலடியாகப் பிறந்தபெயர் என்பர்.

114. விடு, ஒழி, கொள், படு, உண் என்பவை என்னென்ன பொருள்களையுணர்த்தும்?

விடை. (பக்கம் - 69.)

115. **போன்மை - ஆண்மை-பெண்மை** என்பவைகளில் மைவிகுதி என்ன பொருளுணர்த்தும்?

விடை. தன்மைப்பொருளுணர்த்தும்.

116. துணைவினை என்பன எவை?

விடை. பகுதிப்பொருள் விகுதியாய்வரும் இடு, விடு என்றாற்போல்வன, (உ - ம்.) எழுந்திருந்தான் - உடைத்திட்டான்.

117. தொழிற்பெயர் விகுதிகளையும் பண்புப்பெயர் விகுதிகளையும் பகுதிப்பொருள் விகுதி யென்பானேன்?

விடை. தொழிற்பெயர்களிலும், பண்புப் பெயர்களிலும் பகுதியனே தொழிலும், பண்பும் விளங்குதலாலென்க.

118. பலபொருள் குறித்து வரும் விகுதிகள் சிலகூறுக.

விடை. (பக்கம் - 70 - 71 - 72.)

119. (1.) தொழிற்பெயர் - (2) தொழிலடியாகப் பிறந்தபெயர் (3) வினையாலணையும்பெயர் (4) பண்புப்பெயர். (5) பண்படியாகப் பிறந்தபெயர் இவைகளுக்கு இவ்விரண்டுதாரண மெழுதுக.

விடை. (1) அலர்தல் - உணல். (2) அலரி - ஊணன். (3) அலர்ந்தது - உண்டவன். (4) கருமை - பெருமை. (5) கரியன் - பெரியன்.

120. இறந்தகால விடைநிலைகளெவை?

விடை. த் - ட், ற் - இன் - ய் - இசின். (உ-ம்.) செய்தான்-உண்டான், சென்றான் - ஓடினான், போயது - என்றிசினோர்.

121. நிகழ்காலவிடைநிலைகளெவை?

விடை. கிறு, கின்று, ஆநின்று, ஆகிடந்து, ஆவிருந்து (உ-ம்.) உண்கிறான்-உண்கின்றான், உண்ணாநின்றான் - உண்ணாகிடந்தான், உண்ணாவிருந்தான்.

122. எதிர்காலவிடை நிலைகளெவை?

விடை. ப் - வ் - ம் - மன் (உ - ம்.) என்பார் - என்னுமார், என்மார் - என்மனார்.

123. பெயரிடைநிலைக்கும் வினையிடைநிலைக்கும் பேதமென்னை?

விடை, பெயரிடைநிலை காலங்காட்டாமல் பெயர்ப்பகுபதங்களில் பகுதிக்கும் விகுதிக்கு மிடையே நிற்பது. வினையிடை நிலை வினைச்சொல், தொழிற்பெயர், வினையாலணையும் பெயர்களில் காலங்காட்டிக்கொண்டு அவ்வாறு நிற்பது (உ - ம்.)

அறிஞன் - ஞ்-உடம்பாட்டிடைநிலை. அறிந்தான் - ந்-இறந்தகாலங் காட்டும் வினையிடைநிலை.

124. இடைநிலையேயன்றி, வேறுஉறுப்புக் காலங்காட்டுதலுண்டோ?

விடை. பகுதியில் இரட்டித்துவரும் மெய்யெழுத்தும் விகுதியுங் காலங்காட்டும்

125. பகுதியில் இரட்டித்துவரும் மெய்யெழுத்து என்னகாலங் காட்டும்?

விடை. இறந்தகாலமொன்றையே காட்டும், (உ - ம்.) புக்கான், விட்டான், உற்றான்.

126. காலங்காட்டும் வினைமுற்று விகுதிகளெவை?

விடை. (சூ - 145.)

127. இறந்தகாலங்காட்டும் விகுதிகளெவை?

விடை. று-து-டு, றும், தும், டும், (உ-ம்.) சென்று, வந்து, உண்டு. சென்றும், வந்தும், உண்டும் - இத்தன்மை வினைமுற்றுக்கள் இறந்தகாலங்காட்டின.

128. நிகழ்காலங்காட்டும் விகுதி எது?

விடை. உம். (உ - ம்.) உண்ணும்-இந்தச்செய்யுமென் வாய்பாட்டு வினைமுற்றில் உம் நிகழ்காலம் காட்டினது.

129. எதிர்காலங்காட்டும் விகுதிகள் எவை?

விடை. று, து, கு, றும், தும், கும், ஆய், மின், ஈர், உம், க, இய, இயர், இ - மார், (உ-ம்.) சேறு - வருது - உண்கு - சேறும் - வருதும் - உண்கும் இவைதன்மை வினைமுற்றுக்கள். உண்ணாய், உண்மின், உணீர், உண்ணும் - இவை ஏவல் வினைமுற்றுக்கள். உண்க - உண்ணிய, உண்ணியர் - இவை வியங்கோள். சேறி-முன்னிலை வினைமுற்று, உண்மார்-பலர்பால்

130. இறந்தகாலமும் எதிர்காலமும் காட்டும் விகுதி எது?

விடை. பலர்பால் முற்றுவிகுதியாகிய ப, (உ - ம்.) அவர்செய்ப.

131. நிகழ்காலமும் எதிர்காலமும் காட்டும் விகுதி எது?

விடை. செய்யுமென் முற்றுவிகுதியாகிய உம், (உ - ம்.) அவன் வரும்.

132. மூன்றுகாலத்தையும் காட்டும் விகுதி எது?

விடை. எதிர்மறைப்பலவின்பால் முற்றுவிகுதியாகிய ஆ - (உ-ம்.) அவை வரா.

133. ர, ல, ய - இவைகளை முதலிலுடைய வடமொழிகளுக்குத் தமிழில் எந்த உயிர் முதலாகும்?

விடை. (சூ - 248 - பக்கம் - 80.)

134. வாக்யம், வஜ்ரம், சுக்ரன், பத்மம், பக்வம், ரத்நம், அர்த்தம், சக்தி, சக்ஷி, காப்யம், ஸர்ப்பதம், ஸ்தூலம், அஸ்தம், ஆதித்ய என்றாற்போல்வன தமிழில் எவ்வாறு திரியும்?

விடை. (சூ - 149.)

135. தமிழுக்கே உரிய சிறப்பெழுத்துக்களெவை!

விடை. ற - ன, ழ, எ - ஒ-என்னும் முதலெழுத்தைந்தும், ஆய்தம், ஒற்றளபு, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் ஆகிய சார்பெழுத்துக்கள் எட்டுமாம்.

உயிரீற்றுப்புணரியல்.

வேற்றுமைப்புணர்ச்சி எத்தனை? 2. அல்வழிப்புணர்ச்சி பதினான்கில் தொகைநிலைத்தொடர்களெவை? தொகாநிலைத் தொடர்களெவை? அல்வழிப்புணர்ச்சியில் சேர்ந்த வேற்றுமைகளெவை?

விடை. (பக்கம்-82.)

137. தழுவு தொடரென்பது யாது? தழாத்தொடரென்பதியாது?

விடை. (பக்கம்-83.)

138. மரமெது, அரசனவன், காயழுகு - இவை இயல்புப்புணர்ச்சியா? விகாரப்புணர்ச்சியா?

விடை. இயல்புப்புணர்ச்சி - (சூ-153.)

139. தோன்றல், திரிதல், கெடுதல் விகாரங்களுக்கு உதாரணங் கூறுக.

விடை. (பக்கம்-84.)

140. செய்யுள்விகாரங்களெத்தனை?

விடை. (சூ-155-156.)

141. புணர்ச்சி விகாரத்துக்குஞ் செய்யுள் விகாரத்துக்கும் வேறுபாடென்னை?

விடை. நிலைமொழியும் வருமொழியும் சந்தித்தலால் உண்டாகும் தோன்றல், திரிதல், கெடுதல் மூன்றும் புணர்ச்சிவிகாரங்கள் - செய்யுளில் அடி, தொடை முதலியவற்றால் வருகிற வலித்தல் முதலிய ஒன்பதும் செய்யுள் விகாரங்கள்.

142. விதியின்றிவரும் சிலவிகாரங்கள்கூறுக.

விடை. யாவது, மாசு, ஆர், போழ்து, ஞிமிறு, சதை, மீகண்.

113. தோன்றல் முதலிய மூன்றுவிகாரங்களும் ஒருபுணர்ச்சியில் வருதற் குதாரணங்காட்டுக.

விடை - (உ - ம்.) பனங்காய், மாதுளங்காய், எலுமிச்சங்கனி.

114. 1. எல்லா வீற்றின்முன்னும் இயல்பாகும்மெய்களெவை? 2. மெல்லினம் எவற்றின்முன்மிகும்? 3 பொதுநகரம் எந்தமெய்களின்முன் திரியும்?

விடை. (சூ-158.)

115. 1. பொதுப்பெயரென்றுலென்னே? 2. பொதுப்பெயருக்குவேறுபெயரென்னே? 3. நாற்கணங்களெவை? 4. பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்களின் ஈற்றுமெய் வல்லினம்வந்தால் எவ்வாறாகும்? 5. உயிரையும் யகர ரகரங்களையுமுடைய மேற்கூறிய பெயர்களின் முன்வரும் வல்லினம் எவ்வாறாகும்? 6. ஆவிகாரமாமுயர்திணையென்பதற் குதாரணங்காட்டுக.

விடை - (சூ. 159. பக்கம் 88-89.)

116 ஏற்றுவினை, யாவினை, விளிப்பெயர்களின்முன் வல்லினம் எவ்வாறாகும்?

விடை. இயல்பாம் - (சூ-160.)

117. முன்னிலை யொருமை, பன்மை வினைமுற்றுக்களின்முன்னும் ஏவலின்முன்னும் வல்லினம் எவ்வாறாகும்?

விடை. இயல்பாகும் - (சூ-161.)

118. 1. எவலின்முன் வல்லினம் விகற்பித்தற் குதாரணங்காட்டுக. 2 விகற்பமென்றுலென்னே?

விடை. (பக்கம்-90.)

149. 1. எவற்றின்முன் யகரமும் வகரமும் உடம்படுமெய்களாகத் தோன்றும்? 2. இடைச்சொல்லேகாரத்தின்முன் என்ன உடம்படுமெய் தோன்றும்? 3. பெயர்ச்சொல்லேகாரத்தின்முன் என்ன உடம்படுமெய்தோன்றும்? 4. பண்புப்பெயரின்விகாரமாகிய சேவென்பதன்முன் என்ன உடம்படுமெய் தோன்றும்?

விடை, (பக்கம்-91-சூ-162.)

150. 1. எகரவினமுன்னும் சுட்டெழுத்தின்முன்னும் எந்த எழுத்துக்கள்வந்தால் வகரம்தோன்றும்? 2. எந்த எழுத்துக்கள்வந்தால், அந்தந்தவெழுத்துக்கள்தோன்றும்? 3. செய்யுளில் நீண்ட சுட்டின்முன் உயிர்வரின் எவ்வாறு புணரும்?

விடை. (பக்கம் 92. சூ-163.)

151. மெய்யீற்றின்முன் உடம்படு மெய்தோன்றுதற் குதாரணங்கூறுக.

விடை. விண்வத்துக்கொட்கும்-செல்வுழிச்செல்க.

152. குற்றியலுகரம் எப்போதுகெடும்? எப்போது திரியும்?
விடை. (சூ - 164.)
153. முற்றியலுகரமும் அவ்விருவிதியையும்பெறுமா?
விடை. (சூ-164.)
154. குற்றியலுகரம் உயிரின்முன் ஒரோவிடத்துக் கெடாமைக்கு உதாரணங்காட்டுக.
விடை. (பக்கம்-93.)
155. முற்றியலுகரம் உயிரின்முன்கெடாமைக் குதாரணங்காட்டுக.
விடை. பசு + ஐ = பசுவை.
156. குற்றியலுகரம் வடமொழியாயிருந்தால் கெடுமோ?
விடை. கெடாது - (உ-ம்.) சம்புவை. விண்டுவை.
157. உயிரீற்றின்முன் வல்லினம் எவ்வாறாகும்?
விடை. உயர்திணைப்பெயரும், அஃறிணைப்பெயரும், பொதுப்பெயரும், தெரிநிலை வினையெச்சமும்; குறிப்பு வினையெச்சமும், தெரிநிலை வினைமுற்றும், குறிப்புவினைமுற்றும், இடைச்சொல்லும், உரிச்சொல்லும், திசைச்சொல்லும்,வடசொல்லும் ஆகிய சொற்களின் முன் பெரும்பாலும், வல்லினம் மிகும். (உதாரணம். 165 ஆம் சூத்திரத்திற்காண்க.)
158. உயிரீற்றின்முன் வல்லினம்இயல்பாம் எனச்சிறப்புவிதியிற்சொல்லாதவைகள் இயல்பாதற் குதாரணங்காட்டுக.
விடை. குழவிகை, குழந்தைகை, மலைகிழவோன்—இவைவேற்றுமை. கூப்புகரம்,ஈட்டுதனம், நாட்டுபுகழ்,கட்டுசாதம்-இவை அல்வழி; வினைத்தொகை. (பக்கம்-94.)
159. உயிரீற்றுச் சில மரப்பெயர்முன் வல்லினம்வரின் எவ்வாறாகும்?
விடை. மெல்லினமும் வல்லினமும் தோன்றும். (உ-ம்.) மாங்கனி வாழைக்கனி. (சூ - 166.)
160. எந்தெந்த அகரவீற்றுச் சொற்களின்முன் வல்லினம் இயல்பாம்?
விடை. செய்திய என்னும் வினையெச்சம், இறந்தகாலப் பெயரெச்சம், நிகழ்காலப்பெயரெச்சம்,எதிர்மறைப்பெயரெச்சம்,குறிப்புப்பெயரெச்சம், பலவின்பால் வினைமுற்று, வியங்கோள் முற்று, அ - உடைய என்னும் ஆறனுருபுகள், பல - சில என்னும் பலவின்பாற் படர்க்கைப்பெயர், அம்ம என்னுமிடைச்சொல் இவைகளின்பின் வல்லினம் இயல்பாம், (சூ - 167.)
161. அகரவீறுகெட்ட வாழி என்னும் வியங்கோளின்முன்வல்லினம் எவவாறு புணரும்?
விடை. இயல்பாம். (உ-ம்.) வாழி கொற்றா. (சூ - 168.)

162. பல, சில-என்பன தம்முன் தாம் புணரின் எவ்வாறாகும்?
விடை. (சூ-170.)

163. ஆ, மா, மியா என்பவைகளின் பின்னும், எதிர்மறைப் பலவின் பால் வினைமுற்றின் பின்னும்வரும் வல்லினம் எவ்வாறாகும்?
விடை. இயல்பாம் (சூ - 171.)

164. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின்பின் வல்லினம் எவ்வாறாகும்?
விடை. மிகும் (உ-ம்.)படியாப்பாடம். (பக்கம்-98.)

165. ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம், செய்யா என்னும் வாய் பாட்டு வினையெச்சம் ஆகிய இவைகளின்பின் வல்லினம்எவ்வாறாகும்?
விடை. மிகும் - (உ - ம்.) உண்ணாக்கிடந்தான். உண்ணாமல் கிடந்தான், உண்டுகிடந்தான் என்பனபொருள். (பக்கம்-98.)

166. தனிக்குறிலின் கீழ்நின்ற ஆகாரவீற்று அஃறிணைப்பெயர் எவ்வாறு வரும்?
விடை. ஆகாரம் குறுகியும், குறுகி உகரம்பெற்றும், இயல்பாயும் வரும். (உ-ம்.) நில-நிலவு - நிலா, இரா - இரவு, சுறா - சுறவு. (சூ-172.)

167. புளி என்னும் பெயர்முன் வல்லினம் வரின் எவ்வாறாகும்?
விடை. (சூ - 175.)

168. இகர, ஐகார வீற்று அஃறிணைப் பெயர்முன் வல்லினம் எவ்வாறாகும்?
விடை. எழுவாய்த்தொடர் உம்மைத்தொகைகளில் இயல்பும், பண்புத்தொகை உவமைத்தொகைகளில் மிகலும், இருகுறிலாவது, குறிலுநெடிலுமாவது இணைந்துவரும்சொற்களை நிலைமொழியாகவுடைய எழுவாய்த்தொடரில் விகற்பமும்பெறும் (உ - ம்.) பருத்திகுறிது. பரிகரி-இயல்பு. சாரைப்பாம்பு, காவிக்கண் - மிகல். கிளிகுறிது, கிளிக்குறிது, தினைகுறிது, தினைக்குறிது-விகற்பம். (சூ - 176.)

169. ஒடு, அது, என்னும் வேற்றுமை யுருபுகள், ஒரு, இரு, அறு, எழு, எழு முதலிய எண்ணுப்பெயர்கள், அடு, தருமுதலியவினைத்தொகை வினைச்சொல், அது, இது, உது என்னும் சுட்டுப் பெயர், எது என்னும் வினுப்பெயர் இவைகளின்பின்வரும்வல்லினம் எவ்வாறாகும்?
விடை. இயல்பாம் - (உ - ம், சூ - 179.)

170. (1) அல்வழியில் வன்றொடர் முன்வரும் வல்லினம் எவ்வாறாம்?
(2) அல்வழியில் நெடிற்றொடர், உயிர்த்தொடர், மென்றொடர்

இடைத்தொடர், ஆய்தத்தொடர்களின் முன்வரும் வல்லினம் எவ்வாறாம்? (3) அங்கு, இங்கு, உங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு, ஊங்கு, யாங்கு, யாண்டு என்பவைகளின்முன்வரும்வல்லினம் எவ்வாறாம்? (4) அன்று, இன்று, என்று, பண்டு, முந்து என்பவைகளின் முன்வரும் வல்லினம் எவ்வாறாம்?

விடை. (சூ - 181.)

1. வேற்றுமையில் எந்தத்தொடர்க் குற்றியலுகரங்களின்முன் வல்லினம் மிகும்? எந்தத்தொடர்களின் முன் மிகா?

விடை. வன்றொடர் - மென்றொடர்களின்முன்மிகும். மற்றத்தொடர்களின் முன் மிகா. (சூ - 182.)

172. 1. எந்த ஈற்று எந்தத்தொடர்க் குற்றியலுகரங்கள் வேற்றுமையில் ஒற்றிரட்டும்? 2 உகரமேறிய ட, ற மெய்கள் வேற்றுமையில் இரட்டாமைக்கும், அல்வழியில் இரட்டுதற்கும் உதாரணங் காட்டுக. 3 வேற்றுமையிலும், அல்வழியிலும் உகரமேறிய ட, ற அல்லாத பிறமெய்கள் இரட்டுதற்குதாரணங் கூறுக.

விடை. (சூ - 183.)

173. சிலமென்றொடர்க் குற்றியலுகரங்கள் வேற்றுமையில் நாற்கணமும்வந்து புணர என்னதொடராகும்? 2 அல்வழியில் வன்றொடராதற்கும், இருவழியிலும் விகற்பமாதற்கும் உதாரணங் காட்டுக.

விடை.(சூ-184.)

174. குற்றியலுகரம் ஐகாரச்சாரியை பெறுவதற் குதாரணங்காட்டுக.

விடை. பண்டைக்காலம், அற்றைக்கூலி - நேற்றைக்கு, (சூ-185.)

175. தொண்ணூறு, தொள்ளாயிரம், என்பவைகளைப் பிரித்துப்புணர்ச்சிக்கு விதிகூறுக.

விடை. (சூ-194.)

176. (1) பதினொன்று, பதிற்றொன்று இவ்விருதொடருக்கும் பொருளும், புணர்ச்சியிலக்கணமு மெழுதுக. 2 ஒன்பதினாயிரம். ஒன்பதிற்றாயிரம் இவை என்னதொடர்? பொருளில் பேதமுண்டா?

விடை. (சூ-197.)

177. ஒன்பதொழிந்த ஒன்றுமுதல் பத்தீறாகிய எண்கள் இரட்டித்து வரின் எவ்வாறுபுணரும்?

விடை. (சூ - 199.)

178. (1) பூப்பெயர்முன்வரும் வல்லினம் எவ்வாறாம்? (2) பூஞ்சோலை என்னதொடர்?

விடை. (சூ - 200.)

179. ஏகார, ஓகார விடைச்சொற்களின்முன் வரும் வல்லினம் எவ்வாறும்?

விடை. இயல்பாம் (சூ - 201.)

180. பனங்காய், பனைத்திரள், பனந்திரள், பனாட்டு—இவைகளின் புணர்ச்சிக்குவிதி கூறுக.

விடை - (சூ - 203.)

மெய்யீற்றுப்புணரியல்.

181. தனிக்குறிலைச் சார்ந்த மெய்யின்முன் உயிர்வரின் எவ்வாறுகு?

விடை - இரட்டும் (உ - ம்.) கல்லெறிந்தான். (சூ - 205.)

182. யகரம் ஒழிந்த மெய்களின்முன் யகரம் வந்தால் எவ்வாறாகும்?

விடை - இகரந்தோன்றும் - (உ - ம்) கல்லியாது, (சூ - 206.)

183. சில தொழிற்பெயர்களும், ஏவல்வினைகளும் என்ன சாரியை பெறும்?

விடை - உகரச்சாரியை பெறும் - (உ - ம்.) உண்ணுக்கடிமை, உண்ணுகொற்று. (சூ - 207)

184. (1) ண - னக்களின்முன் வேற்றுமையில் வல்லினம் வரின் எவ்வாறும்? 2 மெல்லினமும் இடையினமும் வரின் எவ்வாறும்? 3 அல்வழியில் மூவினமெய்களும் வரின் எவ்வாறும்?

விடை - 1 - ணகர, னகரங்கள், டகர றகரங்களாகத்திரியும். 2-3-இயல்பாம். (சூ - 209.)

185. தனிக்குறிலைச் சேராத ணகர னகரங்கள் எப்போது கெடும்?

விடை. வருமொழிநகரம் திரியும்போது (உ - ம், சூ - 210.)

186. மண்குடம். மட்குடம் என்னும் உறழ்வுக்கு ஆதாரமென்னை?

விடை - (பக்கம் 117,)

187. தேன்மொழி, தேமொழி, தேன்குழம்பு, தேக்குழம்பு, தேங்குழம்பு—இவைகளின் இயல்பு விகாரங்களுக்கு விதிகூறுக.

விடை - (சூ - 214.)

188. ஊன் சிறுமை என வேற்றுமையில் னகரம் இயல்பானதற்கு விதியென்னை?

விடை - (சூ - 216.)

189. தன், என், நின் என்பவைகளின்முன்வரும் வல்லினம் எவ்வாறு புணரும்?

விடை - (சூ - 218.)

190. சிறப்பு விதியில் சொல்லப்படாத னகரம் வேற்றுமையில் பொதுவிதிப்படி, வல்லினத்தின்முன் திரியாமைக்கு உதாரணம் காட்டுக.

விடை - (உ - ம்.) மான்குளம், அழன்கை - (பக்கம் - 120.)

191. செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம் பொதுச் சூத்திரத்தின்படி இயல்பாகுமா ?

விடை - "அல்வழிக்கனைத்துமெய்வரினு மியல்பாகும்மே" என்னும் பொதுவிதிப்படி இயல்பாகாது - வரிற்கொள்ளும், செயிற்றரும் எனத்திரியும் - (பக்கம் - 120.)

192. (1) மகரவீற்றின்முன் நாற்கணமும் வரின் எவ்வாறு புணரும்? (2) உயிரீறு ஒத்தல் என்றுலென்னை? (3) வன்மைக் கினமாத் திரிதற் குதாரணங் காட்டுக. (4) நாம் பெரியம். நம் பொருள் என்பவைகளில் மகரம் திரியாமைக்கு நியாயமென்னை ?

விடை - (சூ - 219.)

193. (1) சிலமகர வீற்றுப்பெயர்கள் வேற்றுமையில் வல்லினத்தின் முன் எவ்வாறாகும்? (2) அல்வழியில் உயிரும் இடையினமும் வந்தால் எவ்வாறும் ?

விடை - (சூ - 220.)

194. அகம் என்னும் சொல்லின்முன் செவி, கை என்னும் சொற்கள் வந்து புணரின் நிலைமொழி எவ்வாறும்?

விடை - (சூ - 222.)

195. "ய - ர - - ழ முன்னர்க் க ச த ப அல்வழி யியல்பும் மிகலுமாகும்" (1) எவ்விடத்தியல்பாகும்? (2) எவ்விடத்து மிகும்?

விடை - (1) எழுவாய்த்தொடர் முன் இயல்பாம். (உ - ம்.) வேய் குறிது, வேர்சிறிது, யாழ்பெரிது.

(2) பண்புத்தொகைமுன் மிகும். (உ - ம்.) மெய்க்கீர்த்தி, கார்ப் பருவம், பூழ்ப்பறவை. (சூ-224.)

196. ய ர ழ ஈற்று அஃறிணைப்பெயரின்முன் வேற்றுமையில் வல்லினம் மிகுதற்குதாரணங் காட்டுக.

விடை - நாய்க்கால், தேர்க்கால், ஊழ்ப்பயன் - (சூ - 224.)

197. யரழ ஈற்று அஃறிணைப்பெயரின்முன் வல்லினம் வேற்றுமையில் இனத்தோடு உறழ்தற் குதாரணங் கூறுக.

விடை. வேய்க்குழல் - வேய்ங்குழல், ஆர்க்கோடு - ஆர்ங்கோடு; குமிழ்க்கோடு - குமிழ்ங்கோடு (சூ - 224.)

198. "ய,ர,ழ முன்னர் கசதப" என்னுஞ் சூத்திரத்தில் "மேல்" என்றமிகையால் அடங்காது வருபவைகளுக்கு உதாரணங் காட்டுக.

விடை. (1) வாய்புகுவதனினும் - நீர்போயும் ஒன்றிரண்டாம் வாணிபமில் என வேற்றுமையில் இயல்பாயின.

(2) பாழ்க்கிணறு, பாழ்ங்கிணறு எனப் பண்புத்தொகையில் உறழ்ந்தன.

(3) வேயாது வேயாப்பு, என இருவழியும் யகரத்தின்முன் நிலைமொழியீற்று யகரமெய் கெட்டது (சூ-224.)

199. கீழ் என்னுஞ் சொல்லின் முன்வரும் வல்லினம் எவ்வாறு புணரும் ?

விடை. (சூ - 226.)

200. லகர ளகரவீற்றின்முன் வல்லினம்வந்து புணரின் வேற்றுமையில் எவ்வாறாகும்? (2) அல்வழியில் எவ்வாறாகும்? (3) மெல்லினம்வந்து புணரின் இருவழியிலும் எவ்வாறாகும்? (4) இடையினம்வரின் எவ்வாறாகும்? (5) கற்றீது, முட்டீது என்பன உறழாமல் திரிதற்கு நியாயம் என்ன?

விடை. (சூ - 227.)

201. எந்த லகர, ளகரங்கள் எப்போது எதின்முன் ஆய்தமாகத் திரியும் ?

விடை. (சூ - 228.)

202. (1) தனிக்குறிலைச் சாராத லகர, ளகரங்கள்எப்போதுகெடும் ? (2) ல - ள அல்வழியில் வல்லினம்வர உறழாமல் இயல்பாவது எப்போது? திரிவது எப்போது? (3) வேற்றுமையில் திரியாது இயல்பாதற்கு உதாரணங்காட்டுக.

விடை. (1) அல்வழியில் வருமொழித்தகரம் திரியுமிடத்தும், இருவழியும் நகரம் திரியுமிடத்தும்கெடும் (உ - ம்.) தோன்றறீயன், வாடீது, தோன்றனல்லன், வேணன்மை.

(2) எழுவாய்த்தொடரில் இயல்பாகும் (உ - ம்.) கால்கடிது, மரங்கள்பெரியன. பண்புத்தொகையில் உறழாது திரியும் (உ - ம்.) வேற்படை, வாட்படை.

(3) கால் குதித்தோடி, வாள்போழ்ந்திட்டு.

203. "குறில்செறியாலள வல்வழிவந்த" என்னும் சூத்திரத்தில் "பிற" என்றமிகையால் அடங்காமல் வருபவைகளுக்கு உதாரணங்காட்டுக.

விடை. (பக்கம் - 125.)

204. இல் என்னும் பண்புப்பெயர் என்ன சாரியைகளைப்பெற்று எவ்வாறு புணரும்?
விடை. (சூ - 233.)
205. வருமொழித் தகர நகரங்கள் எவற்றின்முன் எவ்வாறு திரியும்?
விடை. தகரம் - றகரமாகவும், டகரமாகவும் - நகரம் - னகரமாகவும், ணகரமாகவும் திரியும் (சூ - 237.)
206. இடைச்சொல்லும், உரிச்சொல்லும், வடசொல்லும், முன்சொன்ன விதிகளைப் பொருந்தாமற் புணர்வதற்குதாரணங் காட்டுக.
விடை. (சூ - 239. பக்கம் - 131)
207. வேறு எந்த மொழிகள் மேற்கூறிய விதிபெறுமல் தமக்கேற்ற விகாரங்களைப் பெறும்?
விடை. இலக்கணப்போலி - மரூஉ (சூ - 239.)
208. எந்த வடமொழிச் சந்தியின் இடையே ஆ, ஈ, ஊ க்களில் ஒன்று தோன்றும்?
விடை. தீர்க்கசந்தி.
209. எந்த வடமொழிச்சந்தியின் இடையே ஏ - ஓ க்களில் ஒன்று தோன்றும்?
விடை. குணசந்தி.
210. எந்த வடமொழிச்சந்தியின் இடையே ஐகார, ஔகாரங்களில் ஒன்று தோன்றும்?
விடை - விருத்தசந்தி.
211. தத்திதாந்தத்திற்குச் சில உதாரண மெழுதுக.
விடை. சைவன், வைணவன் - பௌத்தன் (பக்கம்-131-132)

உருபுபுணரியல்.

212. சாரியைகளைக் கூறுக.
 விடை. (சூ - 244.)

213. உருபின்மேல் உம் பெற்றுவரும் சொற்களெவை ?
 விடை. (சூ - 245, 246.)

214. தான், தாம், தாங்கள், யான், யாம், யாங்கள், நீ, நீர், நீங்கள் என்பவை உருபேற்கும்போது எவ்வாறு விகாரப்படும் ? (2) இப் பெயர்கள் எந்தவேற்றுமை ஏற்கையில் அகரச்சாரியை பெறும்? (3) எந்த உருபுகள் புணருமிடத்துத் தனிக்குறின்முன் ஒற்று இரட்டா.
 விடை. (சூ - 247,)

215. ஆ - மா - கோ என்னும் சொற்கள் என்னசாரியை பெறும் ?
 விடை. ன் - சாரியை பெறும் (சூ - 248.)

216. அவ, இவ, உவ என்னும் சுட்டுப்பெயர்கள் என்னசாரியை பெறும் ?
 விடை. அற்று (உ-ம்.) அவற்றை. (சூ - 250.)

217. அஃது, இஃது, உஃது என்னும் சுட்டுப்பெயர்களின் ஆய்தம் எப்போது கெடும் ?
 விடை. அன் - சாரியை வரும்போது கெடும். (சூ-251)

218. அத்துச்சாரியையின் அகரம் எப்போது கெடும்?
 விடை. அகரவீற்று மொழியோடு புணரும்போது (சூ - 252.)

219, (1) இரண்டனுருபு இயல்பாக வேண்டியவிடத்து விகாரமாவதற்குதாரணங் கூறுக.
 விடை. நிற்புறங்காக்க, மகட்கொடுத்தான்.
 (2) விகாரமாக வேண்டியவிடத்து இயல்பாதற்குதாரணங் கூறுக.
 விடை. கனிதின்றான், காய்தின்றான், மரம்வெட்டினான்.
 (3) உயர்திணைப் பெயரினிடத்துத் தொகையாய் வருவதற்குதாரணங் காட்டுக.
 விடை. நான்முகற் றொழுதான்.
 (4) பொதுப் பெயரினிடத்தில் விரிந்து வருவதற்கும் தொகையாய் வருவதற்கும் உதாரணம் காட்டுக.
 விடை. கொற்றனைக் கொணர்ந்தான், ஆண்பெற்றாள்.
 (5) உறழவேண்டிய விடத்துத் திரிந்தே வருதற்குதாரணங் காட்டுக

விடை. தற்கொண்டான், எற்பணியான்.

(6) மெல்லெழுத்து மிகவேண்டியவிடத்து வல்லினம் மிகுதற்குதாரணங் காட்டுக.

விடை. விளக்குரைத்தான்.

(7) மவ்வீறுகெட்டு வல்லினம் மிகவேண்டியவிடத்து அம்மகரம் வருமெழுத்துக்கு இனமாகத் திரிதற்குதாரணங் காட்டுக.

விடை. மரங் குறைத்தான்.

(8) வேற்றுமையில் இரட்டவேண்டிய டகர, றகரமெய்கள இரட்டாமைக்குதாரணங் காட்டுக.

விடை. மாடுகொண்டான், பயறுதின்றான்.

(9) திரியவேண்டிய மெய்கள் கெடுதற்குதாரணங் காட்டுக.

விடை. வேறொட்டான், தாடொழுதான்.

(10) கெடவேண்டிய உயர்திணையீற்று மெய்யெழுத்துக்கள் திரிந்து வருவதற்குதாரணங் காட்டுக.

விடை. குரிசிற்றடிந்தான், அவட்டொடர்ந்தான்.

(11) இயல்பாகும் என்றுகூறிய விதியின்படி இயல்பாய் வருதற்குதாரணங் காட்டுக. (இதனை இயல்பில் இயல்பு என்பர்.)

விடை. வரகுகட்டினான், வரகுதந்தான், எஃகுதொடுத்தான்.

(12) விகாரப்படும் என்றுகூறிய விதியின்படி விகாரப்பட்டு வருதற்குதாரணங் காட்டுக. (இதனை விகாரத்தில் விகாரம் என்பர்.)

விடை. மகப்பெற்றான், பலாக்குறைத்தான், பூத்தொடுத்தான். (சூ - 255.)

220. (1) மூன்றும் வேற்றுமைத் தொகைப்புணர்ச்சி, வேற்றுமைக்கென மேற்கூறிய பொதுவிதிபெறாமல் உறழ்ந்தும், இயல்பாயும் வருதற்குதாரணங் காட்டுக.

(2) அப்புணர்ச்சி வேற்றுமைப் பொதுவிதியின்படி மிகுந்துவருதற்குதாரணங் காட்டுக.

விடை. (சூ - 256.)

221. ஏழாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் பொதுவிதியைக் கொள்ளாமல் சிறுபான்மை இயல்பாய்வருதற்குதாரணங் கூறுக.

விடை. "மண்புகுந்தும் விண்பறந்தும்." (பக்கம் - 143.)

பெயரியல்.

222. சொல் எத்தனை வகைப்படும்?
விடை. (சூ - 259.)
223. பொதுமொழியின் இலக்கண மென்னை?
விடை. (சூ - 260.)
224. பொதுமொழிக்குப் பத்துதாரண மெழுதுக.
விடை. (உ - ம்.) எட்டு, கொட்டு, பலகை, உமையாகின்ருன், மண்டலம், பாரிடம், அரிவை, கோமான், நங்கை, இடுமடை - இவை ஒருமொழிகளாய் ஒருபொருளைத் தருவதன்றி எள் + து, கொள் + து முதலியவாகப் பிரிக்கப் பலபொருள்பட்டு, தொடர் மொழிகளாய்நிற்கையால் பொதுமொழியாயினவாறு காண்க. (சூ - 260.)
225. உயர்திணையாகவும் அஃறிணையாகவும் கொள்ளக்கூடிய சொற்கள் சில கூறுக.
விடை. (பக்கம் - 146.)
226. அஃறிணைக்கு ஆண்பால், பெண்பால் என்னும் பகுப்பொழித்து ஒன்றன்பால் பலவின்பால் எனக் கூறியதற்குக் காரணமென்னை?
விடை. (சூ - 263.)
227. படர்க்கைச் சொற்களுக்கு ஒருமை பன்மை சொல்லாமைக்குங் காரணமென்னை?
விடை. ஒருமையும் பன்மையும் பாலில் அடங்கி நிற்றலாலென்க.
228. இருதிணை ஐம்பாற் பொருள்களை உணர்த்தும் சொற்களெவை?
விடை. படர்க்கைப்பெயர், படர்க்கை வினைமுற்று. (சூ - 265.)
229. தன்மை, முன்னிலைப்பெயர்களும் வினைமுற்றுக்களும் இருதிணை ஐம்பால்களுள் எவற்றை யுணர்த்தும்?
விடை. ஒருமை பன்மைகளை யுணர்த்தும். (சூ - 265.)
230. இடைச்சொல்லுக்கும் உரிச்சொல்லுக்கும் உரிய திணை பால் இடங்களெவை?
விடை. இவை தமக்கெனத் திணையும்பாலும் இடமும் இன்றிப் பெயர் வினைகளைச் சார்ந்துவரும். (பக்கம் - 148.)
231. (1) இயல்புவழக்குகளெவை? (2) தகுதி வழக்குகளெவை?
விடை. (சூ - 267.)
232. இலக்கணமுடையதற்குப் பத்துதாரண மெழுதுக.
விடை. தீ-நீர்-நன்னிலம்-காற்று, வீடு, காடு, வந்தான், வனைந்தான் சென்ருன், உண்டான் - எழுந்தது. (பக்கம் - 148.)

233. இலக்கணப்போலிக்குப் பத்துதாரண மெழுதுக.
விடை. முன்றில், முன்றுனை, வாயில், மீகண், உலாப்புறம்,வாய்க்கால், நுனிக்கொம்பு, கோயில், சதை, வைகாசி. (பக்கம்-149.)
234. மரூஉவுக்குப் பன்னிரண்டுதாரண மெழுதுக.
விடை. அருமந்த, வாணுள், பாண்டிநாடு, போது, பேர், தஞ்சை, ஆர், அந்த, எந்த, ஆடு, ஆறு, ஏங்குது. (பக்கம் - 149.)
235. இடக்கரடக்கலுக்குச் சில உதாரண மெழுதுக.
விடை. கால்கழுவியந்தேன், கண்கழுவி வா, பிறன்கடை நின்றுன், வாய்பூசி வருவான் - பவவீ. (பக்கம் - 149.)
236. மங்கலத்திற்கு எட்டுதாரண மெழுதுக.
விடை. துஞ்சினுன், நன்காடு, திருமுகம், மங்கலவாடம், வெள்ளாடு, தாலிபெருகிற்று, விளக்கைக் குளிரவை, நிரப்பு என்றும் அல்லல். (பக்கம் - 149.)
237. குழூஉக்குறிக்கு ஐந்துதாரண மெழுதுக.
விடை. பறி, சொல்விளம்பி, காரை, மதிவெள்ளை. (பக்கம்-150.)
238. குறிப்பாற் பொருள்தரும் சொற்க ளெவை?
விடை. (சூ - 269.)
239. ஒன்றெழிபொதுச்சொல், முதற்குறிப்பு, தொகைக்குறிப்பு, பிறகுறிப்புகளுக் குதாரண மெழுதுக.
விடை. உழுதமாடுவந்தது, இம்மாடு கன்றைக்காணுமல் கத்துகின்றது, ஆயி மக்கள் பொருதார் - இவைகளில் மாடு, மக்கள் என்பன ஒன்றெழி பொதுச்சொல், கொன்றைவேந்தன் படித்தான், வாக்குண்டாம் எழுதினுன்-இவை முதற்குறிப்பு. ஐவரோடு குந்தியந்தாள், ஐவரோடு கண்ணன்வந்தான், ஐந்தவித்தான் ஆற்றல், மூன்றடக்கிய முனிவன் - இவைதொகைக் குறிப்பு. கல்லைக்கடிக்க நன்றுய்ச் சமைத்தாய், பறவாக்கொக்கு, உவர்க்கடலன்ன செல்வர்-இவை பிறகுறிப்பு. (சூ-269.)
240. வினையாலணையும் பெயர்களும். எச்சவினைகளும், செய்யுமென் முற்றும் குறிப்புச் சொல்லோ? வெளிப்படைச் சொல்லோ?
விடை. (பக்கம் - 152.)
241. இயற்சொல், திரிசொற்களின் இலக்கண மென்னை?
விடை. (சூ - 271 - 272.)
242. பெயரியற்சொல் சில கூறுக.
விடை. மண் - பொன் - இரும்பு - மரம் - கல்.
243. வினை இயற் சொல் சில கூறுக.
விடை. நடந்தான், போனுன்.

244. ஒருபொருள் குறித்த பலபெயர்த் திரிசொல் சில கூறுக.
விடை. இழை, கலன், பணி, பூண் - இவை நகை என்னும் ஒரு பொருள் குறித்தன.

245. பலபொருள் குறித்த ஒருபெயர்த் திரிசொல் கூறுக.
விடை. அரில் - இது குற்றம், சிறுதூறு, பகை, பிணக்கு என்னும் பலபொருள் குறித்தது.

246. ஒருபொருள் குறித்த பலவினைத் திரிசொல் சில எழுதுக.
விடை. ஏகினான், படர்ந்தான், சென்றான்.

247. பலபொருள் குறித்த ஒருவினைத் திரிசொல் எழுதுக.
விடை. ஆர்த்தான் - இது ஒலித்தான், கட்டினான் என்னும் பல பொருள் குறித்தது.

248. ஒருபொருள்குறித்த பலவிடைத் திரிசொல் சில எழுதுக.
விடை, பிறன்கடை, பிறன்வயின், அவன்றலை - இவைகளிலுள்ள வேற்றுமையுருபுகள் ஒருபொருள்குறித்தன.

249. பலபொருள்குறித்த ஓரிடைச்திரிசொல் எழுதுக.
விடை. மற்று - இதுவினைமாற்று, அசைநிலை பிறிது என்று பலபொருள் குறித்தது.

250. ஒருபொருள் குறித்த பலவுரித் திரிசொல் சில எழுதுக.
விடை சால, உறு, தவ, நனி. கூர், கழி - இவை மிகல் என்கிற ஒருபொருள் குறித்தன.

251. பலபொருள்குறித்த ஒருஉரித்திரிசொல் எழுதுக.
விடை. கடி - இது காப்பு, கூர்மை, அச்சம் முதலிய பலபொருள குறித்தது.(சூ - 272.)

252, திசைச்சொல்லுக்குச் சில உதாரணமெழுதுக.
விடை, பெற்றம், தள்ளை, அச்சன், கிழார், பாழி, செய், எங்ஙன எலுவன், செப்பு. (சூ - 273.)

253. வடசொல் சில கூறுக.
விடை. கமலம், சுத்தி, அரி. (சூ - 274.)

254. பெயர்ச்சொல்லுக்குப் பொதுவிலக்கண மென்னை ?
விடை. (சூ - 275.)

255. இடுகுறி மரபுக்குச் சில உதாரணங்கூறுக.
விடை. மரம், விள, பலா, பனை. (பக்கம்-156.)

256. இடுகுறி ஆக்கத்திற்குதாரண மெழுதுக.
விடை. (பக்கம்-156.)

257. காரணக்குறி மரபுக்குச் சில உதாரண மெழுதுக.
விடை. அவன், பறவை, மண்வெட்டி. (பக்கம்-156.)

258. காரணக்குறி ஆக்கத்திற்குச் சில உதாரணங்கூறுக.
விடை. பொன்னன், பூணான். (பக்கம் - 156.)
259. மரபு என்பதென்னை ?
விடை. தொன்றுதொட்டு வழங்கிய வழக்கம். (பக்கம் - 156.)
260. ஆக்கம் என்பதென்னை ?
விடை. மரபுபோலத் தொன்றுதொட்டு வருதலின்றி, நடுவிலே ஒருவரால் ஆக்கப்பட்டு வருவது. (பக்கம் - 156.)
261. பெயர்ச்சொற்களில் காலங்காட்டுவன எவை ?
விடை. தொழிற்பெயரும், வினையாலணையும் பெயருமாம். (ப-156.)
262. விகுதிபெறாத ஆண்பாற்பெயர்க ளெழுதுக.
விடை. நம்பி, ஆடூஉ, விடலை, கோ, வேள், குரிசில், தோன்றல், கிள்ளி, சென்னி, ஏந்தல், செம்மல், ஏறுதி, காவிதி, குமிழி, அண்ணல். (ப - 159.)
263. விகுதிபெறாத பெண்பாற் பெயர்களை யெழுதுக.
விடை. செவிலி, மகடூஉ, நங்கை, தையல், பேதை, பெதும்பை, மடந்தை, இகுளி, மாது. (ப - 160.)
264. விகுதிபெறாத பலர்பாற்கே உரிய சிலபெயர் கூறுக.
விடை. மாந்தர் - மக்கள். (ப - 160.)
265. விகுதிபெறாத ஒன்றன்பாற்பெயர் கூறுக.
விடை. ஒன்று. (சூ - 279.)
266. விகுதிபெறாத பலவின்பாற்பெயர் கூறுக.
விடை. யா, இரண்டு முதலிய எண்கள். (ப - 162.)
267. இருதிணைக்கும் பொதுப்பெயர்களெவை ?
விடை. (சூ - (282.)
268. (1) தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்களெவை ? (2) மூன்றிடத்துக்கும் பொதுவான பெயர் எது ?
விடை. (சூ - 285.)
269. தொழிற்பெயர் எந்த இடத்துக்குரியது ?
விடை. படர்க்கை. (பக்கம் - 165.)
270. வினையாலணையும்பெயர் மூன்றிடத்தும் வருமா ?
விடை. மூன்றிடத்தும்வரும். (உ - ம்.) வந்தேனை, வந்தாயை, வந்தானை. (சூ-286.)
271. பால்பகாவஃறிணைப் பெயரென்பதியாது ? உதாரணங்கூறுக.
விடை. பால்காட்டும் விகுதிபெறாத அஃறிணைப் பெயர்கள் அனைத்தும் பால்பகா வஃறிணைப் பெயர்களாம்? (உ - ம்.) மரம், வீடு, பசு, குதிரை, நாய், தெங்கு. (சூ - 281.)

272. இரண்டு முதலிய எண்ணுப் பெயர்களினின்றும் ஆண்பாற் பெயரும், பெண்பாற் பெயரும் பிறக்குமா?
விடை. பிறவா. (சூ - 288.)

273. ஆகுபெயராவது என்னை?
விடை. ஆகுபெயராவது ஒரு பொருளின் இயற்பெயர் அதற்குச் சம்பந்தமான வேறொரு பொருளை உணர்த்தி, ஒருமொழியிடத்து வருவது. (சூ - 290.)

274. பொருளாகு பெயர்க்குப் பத்துதாரண மெழுதுக.
விடை. 1. தாமரை போன்றபாதம். 2. பலாத்தின்றான். 3. மாத்தின்றான். 4. புளித்தின்றான். 5. துவளைசூடினாள். 6. முல்லை தொடுத்தான். 7. தும்பை சூடினான். 8. கொன்றைசூடி. 3. மோப்பக்குழையு மனிச்சம். 10. ஆத்திசூடி.

275. இடவாகுபெயர்க்குச் சில உதாரண மெழுதுக.
விடை. 1. பட்டணமெலாந் திரண்டுவந்தது. 2. ஊரடங்கிற்று. 3. உலகங்களிக்கப் பிறந்தான். 4. விசும்பிற்றுளிவீழின். 5. தேசத்தோடொத்துவாழ். 6. ஊருடன்பகைக்கின்.

276. காலவாகுபெயர் சிலகூறுக.
விடை. 1 கார் அறுத்தது. 2. கார்த்திகை பூத்தது.

277. சினையாகு பெயர்க்குச் சில உதாரணமெழுதுக.
விடை. 1 வெற்றிலை நட்டான். 2. பூ நட்டுவொழும். 3. தோகை பறந்தது. 4. தலைக்கொரு பணங்கொடு. 5. வேலையில் முழுகினான்.

278. குணவாகுபெயர்க்குச் சில உதாரணமெழுதுக.
விடை. 1. நீலஞ் சூடினான். 2. வெள்ளை வந்தது. 3. வெள்ளையடித்தான். 4. பால் குடித்தான். 5. தையல் உரைத்தாள். 6. அமைச்சு நன்மை செய்தான். 7. அரசு பரிசளிக்க அதை அமைச்சன் தடுத்தான். 8. அவ்வேந்து நல்லன். 9. விருந்து இட்டான். 10. மன் இம்மொழி கூறினான்.

279. தொழிலாகுபெயர் சில கூறுக.
விடை. 1. வற்றலுண்டான். 2. தோன்றல் வந்தான். 3. இச்செய்யுள் ஆழம் உடையது. 4. பூணுக்குப் பூண் வேண்டா. 5. ஆக்கம் பெரியோர்.

280. எண்ணலளவை யாகுபெயர் சில கூறுக.
விடை. 1. காலால் நடந்தான். 2. அரையில் ஆடை உடுத்தினான். 3. அந்த மாடுகளில் இரண்டு வேண்டும். 4. அப்பசுக்

களில் எனக்கு நான்கும் மற்றவனுக்கு மூன்றும் கொடுத்தான்.

281. எடுத்தலளவையாகுபெயர் சில கூறுக.

விடை. 1. பாக்கில் எனக்கு இரண்டு வீசை வாங்கிவா. 2. சர்க்கரையில் அவனுக்கு மூன்று மணங்கு கொடு. 3. எண்ணெயில் நாலு பாரம் விற்றான். 4. கடுகில் ஆறு பலம் குறைகின்றன. 5. அந்தக் காப்பில் இரண்டு வராகனெடை தேய்ந்துவிட்டன.

282. முகத்தலளவை யாகுபெயர் சில கூறுக.

விடை. 1. படி யுடைந்தது. 2. அந்தத் தானியத்தில் நான்கு மரக்கால் பங்கிட்டான். 3. அந்த உப்பில் இரண்டாழாக்கு கொடுத்தான். 4. அந்த அரிசியில் பத்துக் கரிசை ஏற்றுமதி செய்தான். 5. உண்பது நாழி.

283. நீட்டலளவை யாகுபெயர் சில கூறுக.

விடை. 1. அந்தப்பட்டில் எனக்கு நான்கு கெஜம் வாங்கிவா. 2. அந்தச் சரிகையில் அவனுக்கு இரண்டு அடி விற்றான். 3. இரண்டு காதம் நடந்தான். 4. உடுப்பது நான்கு முழம். 5. நான்கு யோசனை சென்றான்.

284. சொல்லாகுபெயர் சில கூறுக.

விடை. 1. இப்பாட்டுக்கு உரை எழுது. 2. சொல் உணர்ந்தவர். 3. அவன் மொழி யுணர்ந்தான்.

285. தானியாகுபெயர் சில கூறுக.

விடை. 1. வரை போன்ற தோள். 2. விளக்கு முறிந்தது. 3. முரசு உயர்த்தோன். 4. அரவு உயர்த்தோன். 5. பனை உயர்த்த வீடுமன்.

286. காரணவாகுபெயர் சில கூறுக.

விடை. 1. திருவாசகம் படித்தான். 2. திருவாய்மொழி படித்தான். 3. வாய் அறியாய். 4. நாப் புரண்டு கோடுதியேல்.

287. காரியவாகுபெயர் சில கூறுக.

விடை. 1. இந்நூல் அலங்காரம். 2. இப்புத்தகம் இலக்கணம். 3. "பொருள்வேற்றுமை செய்வன எட்டேவேற்றுமை." 4. நீதிநெறி விளக்கம். 5. ஆக்கம் பெற்றான்.

288. கருத்தாவாகுபெயர் சில கூறுக.

விடை. 1. திருவள்ளுவர் படித்தான். 2. தாயுமானவர் வாசிக்கிறான் 3. பட்டணத்தார் வாசிக்கின்றான்.

289. உவமை ஆகுபெயர் சில கூறுக.

விடை. 1. பாவை வந்தாள். 2. காளை வந்தான். 3. பூவை சொல்லினாள். 4. சிங்கம் எழுந்தான். 5. பொன்னே கேள்.

290. இருமடி யாகுபெயர், மும்மடி யாகுபெயர், அடையடுத்த ஆகுபெயர், இருபெயரொட்டாகுபெயர்களுக்கு உதாரணமெழுதுக.

விடை. (பக்கம் - 168.)

291. ஆகுபெயர்க்கும் அன்மொழித் தொகைக்கும் பேதமென்னை?

விடை. (பக்கம் - 169.)

292. எழுவாய் வேற்றுமை ஒன்றனையே ஏற்கும் பெயர்களெவை?

விடை. நீயிர் - நீவிர் - நான் (சூ - 294.)

293. எழுவாய் வேற்றுமையின் உருபும் பொருளும் என்னை?

விடை. (சூ - 295.)

294. எழுவாய்க்கு வழங்கும் வேறு பெயர்களெவை?

விடை. வினைமுதல் - செய்பவன், கருத்தா. (சூ - 295.)

295. இரண்டாம் வேற்றுமையின் உருபும் பொருளுமென்னை?

விடை. (சூ - 296.)

296. செயப்படு பொருளாவதென்னை?

விடை. வினைமுதல் செய்யும் தொழிலை ஏற்கும் பெயர் செயப்படு பொருளாம்.

297. குறிப்புவினை செயப்படுபொருள் பெற்றுவருவதற் குதாரணங் காட்டுக.

விடை. பொன்னை உடையான்.

298. ஒருவினைக்கு இரண்டு செயப்படுபொருள் வருதற் குதாரணங் காட்டுக.

விடை. அரசன் பகைவரை சிறைச்சாலையை அடைவித்தான்.

299. மூன்றும் வேற்றுமையின் உருபும் பொருளுமென்னை?

விடை. (சூ - 297.)

300. ஆல் - ஆன் உருபுகளுக்குச் சிறந்த பொருள்களெவை?

விடை. கருவி, கர்த்தா.

301. ஒடு - ஓடு - உடன் உருபுகளுக்குச் சிறந்த பொருள்களெவை?

விடை. உடனிகழ்ச்சி.

302. கருவிக்கு வேறு பெயர்களெவை?

விடை. காரணம் - ஏது - நிமித்தம்.

303. காரணம் எத்தனை வகைப்படும்?

விடை. முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணம் எனமூன்று வகைப்படும்.

304. அவற்றுள் முதற்காரணமும் துணைக்காரணமும் என்ன பெயர் பெறும்?

விடை. கருவி.

305. கருவியின் இலக்கணமென்னை?

விடை. வினைமுதலினது தொழிலின் பயனைச்செயப்படுபொருளிற் சேர்ப்பது.

306. முதற்கருவியாவது என்னை?

விடை. செயப்படு பொருளோடு ஒற்றுமையுடையது.

307. துணைக்கருவி யாவதென்னை?

விடை. முதற்கருவிக்குத் துணையாய், அது காரியப்படுமளவும் உடனிகழ்வது.

308. ஏவுதற்கருத்தாவும், இயற்றுதற் கருத்தாவுமாகிய நிமித்தகாரணம் இரண்டையும் என்னென்று கூறுவர்?

விடை. கருத்தா.

309. எழுவாய் வேற்றுமைக் கருத்தாவுக்கும், மூன்றும் வேற்றுமைக் கருத்தாவுக்கும் பேதமென்னை?

விடை. எழுவாய் வேற்றுமைக் கருத்தா தன் விகுதி வினையால்முடியும். மூன்றும் வேற்றுமைக் கருத்தா செயப்படுபொருள் விகுதி வினையால் முடியும். உதாரணம் 174 - ம் பக்கத்திற் காண்க.

310. ஊரால் ஒருகோவில் - ஆல் உருபுக்குப் பொருளென்னை?

விடை. (பக்கம் - 175.)

311. (1) பாலொடு தேன்கலந்தற்றே. (2) எழுத்தொடு புணர்ந்த சொல். (3) கோபத்தொடு வந்தான். (4) மதியொடு ஒக்கு முகம். (5) விலங்கொடு மக்களனையர் - இவைகளில் ஒடு உருபுக்குப் பொருளென்னை?

விடை. (பக்கம் - 176.)

312. மூன்றனுருபு தனக்குமுன் ஐகாரச்சாரியை பெற்றும், தனக்குப் பின் ஏகாரச்சாரியை பெற்றும் வருவதற்கு உதாரணங்காட்டுக.

விடை. வாளைக்கொண்டு வெட்டினான், வாளாலே வெட்டினான்.

313. நான்காம் வேற்றுமையின் உருபும் பொருளும் என்னை?

விடை. (சூ - 298.)

314. அதுவாதல், பொருட்டு - இவ்விரண்டு பொருள்களுக்கும் பேதமென்னை?

விடை. அதுவாதல் என்பது முதற்காரணத்தாலாகும் பொருளாம். (உ - ம்.) கடுக்கனுக்குப்பொன். பொருட்டு என்பது நிமித்தகார

ணத்தாலாகும் பொருளாம். (உ - ம்.) கூலிக்கு வேலை செய்தான்.

315. நான்காம் வேற்றுமைச் சொல்லுருபுகளெவை ?

விடை. (பக்கம் - 178.)

316. ஐந்தாம் வேற்றுமைக்கு உருபும் பொருளுமென்னை ?

விடை. (சூ - 299.)

317. உயர்வு தாழ்வுகளைப்பற்றிவரும் எல்லைப்பொருளைச் சிலர் என்ன பொருள் என்பர் ?

விடை. நீக்கப்பொருள் என்பர்.

318. ஐந்தனுருபுகளின் பின் என்ன இடைச்சொல் வரும் ?

விடை. அதிலும் இது பெரிது என உம் என்னு மிடைச்சொல் வரும்.

319. ஆறும் வேற்றுமைக்கு உருபும் பொருளும் என்னை ?

விடை. (சூ - 300)

320. தற்கிழமை என்பதியாது ?

விடை. தன்னெடொற்றுமை யுடையது.

321. பிறிதின்கிழமை என்பதியாது ?

விடை. தன்னின் வேருயது.

322. தற்கிழமை எத்தனை வகைப்படும் ?

விடை. பண்பு, உறுப்பு, ஒன்றன்கூட்டம், பலவின்கூட்டம், திரிபி ளுக்கம் என ஐந்து வகைப்படும்.

323. பிறிதின்கிழமை எத்தனை வகைப்படும் ?

விடை. பொருள், இடம், காலம் என மூன்றுவகைப்படும்.

324. ஒற்றுமைப் பொருளென்பதியாது ? உதாரணமுங் கூறுக.

விடை. உடையதும் உடைமையும் வேருகாதது. (உ-ம்.) எனதுயிர்.

325. அது, ஆது, அ-உருபுகள் என்ன பெயர்களைக் கொண்டுமுடியும்?

விடை. பெரும்பாலும் அஃறிணைப்பெயரையும் சிறுபான்மை உயர் திணைப்பெயரையும் கொள்ளும். (உ-ம்.) எனதுகை, அரனது தோழன்.

326. இம்மூன்றுருபுகளில் ஒருமைக்குரியவை எவை ? பன்மைக்குரி யது எது ?

விடை. அது, ஆது, ஒருமைக்கும் - அகரவுருபு பன்மைக்கும் உரி யன. ஒருமை, பன்மை என்றது வருமொழி நோக்கி என் றறிக.

327. கிழமைப்பொருள்கொள்ளும் உயர்திணை ஒருமை பன்மைப் பெயர்களுக்கு எந்த உருபுவரும் ?

விடை. குவ்வுருபு. (உ-ம்.) இராமனுக்கு மகன். பாண்டவர்க்குப் புதல்வர்.

328. அது உருபு அஃறிணைப்பெயர்க்கன்றி, உயர்திணைப்பெயர்க்கும் வருவதுண்டோ?

விடை. அரனதுதோழன், நினதுஅடியார் என உயர்திணை ஒருமை பன்மைகளிலும் வரும்.

329. உயர்திணை அஃறிணை இரண்டிற்கும் வரும் ஆறனுருபு எது?

விடை. உடைய - (உ - ம்.) இராமனுடைய குமாரன், மரத்தினுடைய கிளை.

330. இப்புத்தகம் எனது, இப்பசுநினது, இம்மாடுஅவனது, அக்கத்தி இராமனது - இவ்வாக்கியங்களில் எனது, நினது, அவனது, இராமனது என்பவைகளை ஆறனுருபேற்றுவந்த பெயர் என்னலாமா?

விடை. அவை இங்குப் பெயர்ச்சொல்லன்று, பொருளடியாகப்பிறந்த ஒன்றன்பாற் படர்க்கைக் குறிப்புவினைமுற்றுக்கள் (பக்கம் - 182.)

331. ஏழாம்வேற்றுமைக்கு உருபும் பொருளுமென்னை?

விடை. (சூ - 301.)

332. ஏழனுருபு கூட்டிப்பிரிக்கும் எல்லைப்பொருளிலும், பிரித்துக் கூட்டும் கூட்டப்பொருளிலும், பிறிதுதொழிலிலும் வருதற்கு உதாரணங்காட்டுக.

விடை. (பக்கம் - 183.)

333. பொருள்முதலிய ஆறுபெயர்களும் எவைகளுக்கு இடமாய் நிற்கும்?

விடை. தற்கிழமைக்கும் பிறிதின்கிழமைக்கும் இடமாய் நிற்கும்

334. ஏழாம்வேற்றுமையின் கண்முதலிய உருபுகளையெல்லாங் கூறுக.

விடை. (சூ - 302.)

335. இவ்வேழனுருபுகள் பெயர்ச்சொல்லாகவும் வருமோ?

விடை. இடப்பெயர்களாய் வருதலுமுண்டு. (உ - ம்.) எனக்கு இடம் இல்லை.

336. எட்டாம்வேற்றுமையின் உருபும் பொருளுமென்னை?

விடை. ஈறுதிரிதல், ஈறுகெடுதல், ஈறுமிகுதல், ஈற்றயல்திரிதல், இயல்பு. அழைக்கப்படுபொருள் (சூ - 303.)

337. உயர்திணைப்பெயர், பொதுப்பெயர், அஃறிணைப் பெயர்களின் பொதுவான விளியுருபுகளெவை?

விடை. (சூ - 305.)

338. ஐகாரவீற்று மூன்றுபெயர்களும் ஏற்கும் விளியுருபுகளெவை?
விடை. (சூ - 306.)
339. னகரவீற்று உயர்திணைப்பெயர்க்குச் சிறப்பு வகையாற் கூறிய விளியுருபுகளெவை ?
விடை. (சூ - 307.)
340. ளகரவீற்று உயர்திணைப்பெயர்க்குச் சிறப்பு வகையாற் கூறிய விளியுருபுகளெவை ?
விடை. (சூ - 308.)
341. ரகரவீற்று உயர்திணைப்பெயர்க்குச் சிறப்பு வகையாற் கூறிய விளியுருபுக ளெவை ?
விடை. (சூ - 309.)
342. (1) அண்மைவிளி, சேய்மைவிளி என்றாலென்னை? (2) அண்மை விளி எவ்வாறு வரும் ? (3) சேய்மைவிளி எவ்வாறுவரும்? (4) எவ்விடத்து ஓகாரம் மிக்கு விளியுருபாம் ?
விடை. (சூ - 313.)
343. விளி ஏலாத பெயர்களெவை ?
விடை. (சூ - 314.)
344. முதற்பெயருக்கு ஐ, அது, கண்என்னும் உருபுகள்வரின் சினைப் பெயர்க்கு எந்தெந்த உருபுகள் வரும்?
விடை. முதற்பெயருக்கு ஐ யுருபு வரும்போது, சினைப்பெயருக்கு கண் உருபும், அது, கண் உருபுகள் வரும்போது ஐ உருபும் வரும். (சூ - 315.)
345. உருபு மயக்கம் என்றாலென்னை ?
விடை. (சூ - 317.)
346. உருபு மயக்கத்துக்குச் சிலவுதாரண மெழுதுக.
விடை. 1. நாகுவே யோடு நக்கு வீங்குதோள். 2. மணற்கு ஈன்ற நாணற்கிழங்கின் முளை. 3. காலத்தினாற் செய்த நன்றி. 4. முனைவனுக்கு இறைஞ்சினான்.
347. பொருண்மயக்க மென்றாலென்னை?
விடை. (பக்கம் - 192.)
348. பொருண்மயக்கத்திற்கு ஏழுதாரண மெழுதுக.
விடை. 1. அவர்க்குச் செய்த்தகு'பிக்காரியம்-வினைமுதற்பொருள் நான்கனுருபோடு மயங்கியது.

2. சோறடப்பட்டது - செயப்படுபொருள் எழுவாயோடு மயங்கியது.

3. கண்காணும்-கருவிப்பொருள் முதல் வேற்றுமையோடு

4. நாகரது பலி-கோடற்பொருள் ஆறனுருபோடு மயங்கியது.

5. மதுரைக்கு வடக்குச் சிதம்பரம் - எல்லைப்பொருள் நான்கனுருபோடு மயங்கியது.

6. உயிர்க்கண் உணர்வு-சம்பந்தப்பொருள் ஏழனுருபோடு மயங்கியது.

7. தூணைச்சார்ந்தான்-இடப்பொருள் இரண்டனுருபோடு மயங்கியது.

349. (1) வினைமுதற்பொருள் - (2) செயப்படுபொருள்-(3) கருவிப்பொருள் - (4) கோடற்பொருள் - (5) நீக்கப்பொருள் - (6) சம்பந்தப்பொருள் - (7) இடப்பொருள் ஆகிய இவற்றுள் ஒவ்வொன்றும் எந்தெந்த வேற்றுமைக்குரியது?

விடை. இவை முறையே ஒன்று முதல் ஏழுவேற்றுமைகளுக்குமுரியன.

350. (1) வினைச்சொல்லைக் கொண்டுமுடியும் வேற்றுமை யுருபுகள் எவை? (2) எந்த வேற்றுமையுருபுகள் பெயரைக்கொண்டு முடியும்? (3) வினையேயன்றிப் பெயரையுங்கொண்டு முடியும் உருபுக ளெவை? (4) வினைகொள்ளுதற்குரிய ஏழுவாய் வேற்றுமை வேறு எந்த சொல்லையுங் கொண்டுமுடியும்?

விடை. (சூத்திரம் 319 - பக்கம் 195.)

351. (1) காரக மென்பதென்னை?

விடை. வேற்றுமையுருபு வினைகொண்டுமுடிவது.

(2) அந்தக்காரகம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

விடை. (1) கருத்தாகாரகம், (2) கருமகாரகம், (3) கருவிகாரகம், (4) கோளிக்காரகம், (5) அவதிக்காரகம் (6) இடக்காரகம், என அறுவகைப்படும்.

352. மேற்கூறிய ஆறுவகைக் காரகங்களுக்கு முதாரணங் கூறுக.

விடை. (1) சாத்தன் சேர்ந்தான், (2) சாத்தனைச் சேர்ந்தான், (3) வாளால் வெட்டினான், (4) சாத்தனுக்குக் கொடுத்தான், (5) சாத்தனிற் பிரிந்தான், (6) சாத்தனிடஞ் சென்றான்.

353. ஆறும்வேற்றுமைக் காரகமென்பதென்னை?

விடை. பெயர் கொள்ளுதற்குரிய ஆறனுருபு தொழிற்பெயர் கொள்ளவருவது. (உ-ம்,) சாத்தனது வரவு.

வினையியல்.

354. வினைச்சொல் எத்தனை வகைப்படும்?
விடை. தெரிநிலைவினை, குறிப்புவினை என இரண்டுவகைப்படும்.
355. தெரிநிலைவினையின் பொது இலக்கணமென்னை?
விடை. (சூ - 320.)
356. தெரிநிலை வினையில் எதுகுறைந்து வருதலுமுண்டு? அதற்கு என்னென்று பெயர்?
விடை. செயப்படுபொருள் குறைந்தும் வரும். அதற்குச்செயப்படுபொருள் குன்றிய வினையென்றுபெயர். (உ - ம்.) நடந்தான்.
357. தெரிநிலை வினைமுற்றில் செய்பவன், செயல், காலங்கள் எவற்றால் தோன்றும்?
விடை. விகுதியால் செய்பவனும், பகுதியால்செயலும், இடைநிலையால் காலமும் தோன்றும்.
358. தெரிநிலைப் பெயரெச்ச, வினையெச்சங்களில் எவை வெளிப்படையாகத் தோன்றும்.
விடை. செயலும், காலமும்.
359. குறிப்பு வினைகள் எவைகளினடியாகப் பிறக்கும்?
விடை. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில்களினடியாகப் பிறக்கும்.
360. குறிப்பு வினைக்கும் பெயர்ப்பகுபதத்திற்கும் பேதமென்னை?
விடை. குறிப்புவினைகள் பொருள் முதலிய பெயர்களினடியாகப் பிறந்தாலும், ஒரு பொருளைக்காட்டும் பெயராகாமல், வினையைக் குறிப்பாக வுணர்த்திப் பயனிலையாய் வருவது.
361. செய்பவன், கருவி முதலிய ஆறையும் உணர்த்தும் குறிப்பு வினைமுற்றொன்றெழுதுக.
விடை. (உ-ம்.) இராமன் புகழ் உடையான்.
362 வினைச்சொல் எத்தனை வகைப்படும்.
விடை. (சூ - 322.)
363. பெயரெச்ச, வினையெச்சங்களுக்குப் பொதுவான ஐந்து எச்ச வினைகளெழுதுக.
விடை. (உ - ம்.) தேடிய, ஆடிய, பாடிய, கூடிய, பேசிய.
364. வினைமுற்றுக்கள் எந்தச் சொல்லைக்கொண்டு முடியும்?
விடை. (சூ - 323.)

365. தெரிநிலை வினைமுற்றுப்பதம் ஒன்று, இடம் முதலியவற்றால் எத்தனை வகையாக விகற்பிக்கும்?

விடை. இருபத்தேழு - (சூ - 324.)

366. பலர்பால் வினைமுற்று விகுதிகளெவை?

விடை. அர் - ஆர் - ப - மார்.

367. இவற்றுள் ப-மார் விகுதிகள் குறிப்பு வினைக்கு வருமோ?

விடை. இவ்விகுதிகள் காலங்காட்டுதலால் குறிப்புவினைக்குவரா.

368. ஒன்றன்பால் வினைமுற்று விகுதிகளெவை?

விடை, து - று - டு.

369. இவற்றுள் குறிப்புவினைக்கே வரும் விகுதி எது?

விடை. டு - (உ - ம்.) மூக்கட்டு, அப்பொருட்டு.

370. று - விகுதி எந்தக்காலத்தில் மாத்திரம் வரும்.

விடை. இறந்தகாலத்துக்கு மாத்திரம் வரும்.

371. து - று - விகுதிகள் குறிப்புவினைமுற்று விகுதிகளாய் வருவதற்குச் சில உதாரணங்காட்டுக.

விடை. அது - நால் வாய்த்து, வாலது, அப்பெயரது, பெரிது, சிறிது - அற்று, இற்று, எற்று, இருபாற்று.

372. பலவின்பால் வினைமுற்று விகுதிகளெவை?

விடை. அ - ஆ.

373. பலவின்பாற் குறிப்பு வினைமுற்றுச் சிலகூறுக.

விடை. அவை பெரியன, சிறியன, பெருங்கண்ண, கடு நடையன, நல்ல, தீய.

374. எதிர்மறைக்கே வரும் பலவின்பால்விகுதி எது?

விடை. ஆ - (உ - ம்.) அவை நடவா, உண்ணா தின்னா.

375. இருதிணைக்கும் பொதுவினைகளெவை?

விடை, (சூ - 330.)

376. தன்மை யொருமை வினைமுற்று விகுதிகள் எவை?

விடை. கு, டு, து, று, அல், அன், என், ஏன்.

377. இவைகளுள் காலங்காட்டும் விகுதிகளெவை?

விடை, கு - டு - து - று.

378. கு டு விகுதிகள் என்ன காலம் காட்டும்?

விடை. கு - எதிர்காலமும், டு இறந்தகாலமும் காட்டும் (உ - ம்.) உண்கு - (உண்பேன்) உண்டு - (உண்டேன்.)

379. து - று விகுதிகள் என்ன காலங் காட்டும் ?

விடை. இறந்தகாலமும், எதிர்காலமும் காட்டும் (உ-ம்.) வந்து (வந்தேன்) (வருது) - (வருவேன்) (சென்று) - (சென்றேன்) சேறு - (செல்வேன்)

380. எதிர்காலம் ஒன்றற்கே வரும் விகுதி எது ?

விடை. அல் - (உ - ம்.) உண்பல் - உண்பேன் என்பது பொருள்

381. குறிப்பு வினைக்குவராத விகுதிகள் எவை ?

விடை. கு-டு-து-று-அல்.

382. இவற்றுள் படர்க்கை யாண்பாலிலும் வரும் விகுதி எது ?

விடை. அன் (உ-ம்) உண்டனன். இது தன்மை வினைமுற்றாகக் கொள்ளும்போது உண்டேன் என்றும், படர்க்கை வினைமுற்றாகக் கொள்ளும்போது உண்டான் என்றும் பொருள்படும்.

383. தன்மைப்பன்மை வினைமுற்று விகுதிகள் எவை ?

விடை. அம், ஆம், எம், ஏம், ஓம், கும், டும், தும், றும்.

384. இவ்விகுதிகள் முன்னிலை, படர்க்கையிடங்களைத் தன்னுடன் படுத்திவரும்போது என்ன பெயர் பெறும் ?

விடை. உளப்பாட்டுத்தன்மைப் பன்மை வினைமுற்று எனப்பெயர் பெறும். (உ-ம்) யானும், நீயும் அவனும் போனோம்.

385. மற்ற இடங்களை யுளப்படுத்தாது தனித்து வரும்போது என்ன பெயர் பெறும்.

விடை. தனித்தன்மைப் பன்மை வினைமுற்று எனப் பெயர்பெறும், (உ-ம்) நாம் போனோம்.

386. இவற்றுள் காலங்காட்டும் விகுதிகள் எவை ?

விடை. கும், டும், தும், றும்.

387. இவற்றுள் கும், டும் என்ன காலங் காட்டும்?

விடை. எதிர்காலமும், இறந்தகாலமும் காட்டும். (உ-ம்) உண்கும், உண்டும். உண்போம், உண்டோம் என்பன பொருள்.

388. தும், றும் என்னகாலங் காட்டும் ?

விடை. இறந்தகாலமும், எதிர்காலமும் காட்டும். (உ-ம்.) வந்தும், வருதும், சென்றும், சேறும் இவற்றிற்கு முறையே வந்தோம், வருவோம் சென்றோம், செல்வோம் என்பன பொருள்.

389. பெயர்ச் சொல்லைக்கொண்டு முடிவதன்றி, வினைச்சொல்லையும் கொண்டு முடியும் வினைமுற்றுக்கள் எவை ?

விடை. கு, கும் விகுதிகளைப் பெற்றுவரும் தன்மை வினைமுற்றுக்களும், மார்விகுதியைப் பெற்றுவரும் பலர்பால் வினைமுற்றுமாம். (உ-ம்.) உண்குவந்தேன், உண்கும் வந்தோம். ஆர்த்தார் கொண்மார் வந்தார். (சூ - 333.)

390. உளப்பாட்டு முன்னிலைப் பன்மைக்கு உதாரணங் காட்டுக.

விடை. நீயும் அவனும் சென்றீர். (சூ - 334.)

391. முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகளெவை?

விடை. ஐ - ஆய் - இ. (சூ - 335.)

392. உடன்பாட்டு ஏவலொருமை வினைமுற்று விகுதிகளெவை?

விடை. ஆய் - இ- (உ-ம்.) உண்ணாய் - உண்ணுதி.

393. எதிர்மறை யொருமை ஏவல்வினைமுற்று விகுதிகளெவை?

விடை. அல் - ஏல் - ஆல். (உ - ம்.) உண்ணல் - உண்ணேல் மறால்.

394. இவையன்றி எதிர்மறை யொருமையில்வரும் வேறு ஏவலொருமை விகுதிகளும் உளவோ!

விடை. இகரமும், ஏகாரமும் தகர எழுத்துப்பேற்றை யூர்ந்து வருவதுமுண்டு. (உ-ம்.) உண்ணுதி, உண்ணுதே.

395. ஏவல்வினைமுற்று குறிப்புவினையில் உண்டா?

விடை. ஏவல்வினைமுற்று குறிப்பு வினைமுற்றிற்கு வராது.

396. உடன்பாட்டு ஒருமை ஏவல் விகுதி யின்றியும் வருதலுண்டோ?

விடை. நட, உண் - தின், கொடு எனப்பகுதியே ஏவலொருமையாய் வருதலுமுண்டு. இதனை ஆய் விகுதிபுணர்ந்துகெட்டது என்பர்.

397. முன்னிலை வினைமுற்றிற்கும், ஏவல்வினைமுற்றிற்கும் பேதமென்னை?

விடை. முன்னிலை வினைமுற்று கட்டளைப்பொருள் இலதாய் முக்காலமும் பற்றிவருவது. ஏவல் வினைமுற்று கட்டளைப் பொருளுணர்த்தி, காலங்காட்டும் இடைநிலைபெறாது எதிர்காலம் ஒன்றற்கே வருவதாம், இவையே தம்முள்வேற்றுமை.

398. விகுதி குன்றிவரும் சில ஏவலொருமை வினைமுற்றுக்களில் எந்த அசை இடைச்சொற்கள் வரும்? விடை. (சூ - 336.)

399. முன்னிலைப்பன்மை வினைமுற்று விகுதிகள் எவை?

விடை. இர் - ஈர். (சூ - 337.)

400. ஏவற்பன்மை வினைமுற்று விகுதிகளெவை!

விடை. மின், ஈர், உம். (உ-ம்.) உண்மின், உண்ணீர், உண்ணும்.

401. வியங்கோள் வினைமுற்று விகுதிகளெவை?

விடை. ௪ - இய, இயர், அ, அல் - (சூ - 338.)

402. இவற்றுள் எதிர்மறைக்கண்வரும் விகுதிகளெவை?

விடை. ௪ - அல் இரண்டில், ௪ எதிர்மறை விகுதிபெற்றும், அல் எதிர்மறை விகுதி பெறாதும் எதிர்மறை வியங்கோளாய்வரும் (உ-ம்) உண்ணற்க. மகனெனல், (மகனென்று சொல்லற்க)

403. வியங்கோளுக்கும் ஏவலுக்கும் வேறுபாடென்னை?

விடை. வியங்கோள் ஐம்பால் மூவிடங்களிலும் வரும், ஏவல் முன்னிலை யொன்றிற்கேவரும்.

404. இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவான குறிப்பு வினைமுற்றுக்களெவை?

விடை. வேறு - இல்லை - உண்டு. (சூ - 339.)

405. இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாய்த் தொழிற்பெயர்ப் பொருள்பட்டு நிற்கும் சொற்களெவை?

விடை. வேண்டும் - தகும் - படும். (பக்கம் - 207-)

406. பெயரெச்ச வினைச்சொல் கொண்டு முடியும் பெயர்களெவை?

விடை. செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படு பொருள். (சூ - 340.)

407. பெயரெச்சமாவதென்னை?

விடை. பால்காட்டும் வினைமுற்று விகுதி குறைந்த வினைச்சொல் பெயரைக்கொண்டு முடிவது. (சூ - 340.)

408. இறந்தகாலப் பெயரெச்சவிகுதி எது?

விடை. அ (உ-ம்) நடந்த மனிதன்.

409. இறந்தகாலப் பெயரெச்சம் இடைநிலை பெறாதும் வருதலுண்டோ?

விடை. குறிலிணை மொழிகளாகிய சில கு - டு - று - ஈற்றுப் பகுதிகள் விகாரப்பட்டு இறந்தகாலம் காட்டுவதும் உண்டு. (உ-ம்) புக்க, நட்ட, உற்ற - மனிதன்.

410. நிகழ்காலப் பெயரெச்சவிகுதி எது?

விடை. அ. (உ-ம்) உண்கிற மனிதன்.

411. எதிர்காலப் பெயரெச்சவிகுதி எது?

விடை. உம் - (உ-ம்) உண்ணும் மனிதன், இதுஇடைநிலைஇன்றித் தானே காலங்காட்டிவரும்.

412. இந்த உம் விகுதிபெற்று வரும் பெயரெச்சம் வேறெந்த காலத்தையும் உணர்த்தும்?

விடை. நிகழ்காலமும் உணர்த்தும், (உ-ம்) உண்ணும் மனிதன். இது உண்ணுகிறமனிதன் எனப்பொருள்படுதல் காண்க.

413. முக்காலப் பெயரெச்சங்களுக்கும் வழங்கும் வேறு பெயர்களெவை?

விடை. செய்த என்னும் வாய்பாட்டுப்பெயரெச்சம், செய்கின்ற என்னும் வாய்பாட்டுப்பெயரெச்சம், செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம்.

414. பெயரெச்சம் செய்பவன் முதலிய அறுவகைப் பெயருள் அடங்காத பிறபெயர்களைக்கொண்டு முடிவதற்குச் சில உதாரணங் காட்டுக.

விடை. உண்ட இளைப்பு. குடிபோன ஊர்-இவைகளில் இளைப்பு, ஊர் என்பன செய்பவன் முதலிய அறுவகைப் பெயர்களுள் அடங்காமையால் பிறபெயர் என்னப்பட்டன.

415. செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம் எவ்வாறு விகாரப்படும்?

விடை. ஈற்றுயிர் மெய்கெட்டும், உம் விகுதி உந்து எனத் திரிந்தும் வரும், (உ-ம்) ஆங்காலம், சாங்காலம், போம்போது, வாம்பரி-கூப்பெயர்க்குந்து நீர்க்கோழி. (சூ - 341.)

416. வினையெச்சவினைச் சொல்லாவதென்னை?

விடை. பால்காட்டும் முற்றுவிகுதி குறைந்து வினையைக்கொண்டு முடிவது வினையெச்சமாம். (சூ - 342.)

417. வினையெச்சம் எவ்வகை வினைகளைக்கொண்டு முடியும்?

விடை. வினைமுற்று, பெயரெச்சம்,வினையெச்சம், தொழிற்பெயர், வினையாலணையும் பெயர்களைக்கொண்டு முடியும். (சூ-342.)

418. இறந்தகால வினையெச்ச விகுதிகளெவை?

விடை. உ, பு, ஆ, ஊ, என, இ, ய், உம். (உ-ம்) உண்டு, உண்குபு, உண்ணா, உண்ணூ, உண்டென, ஒடி, ஆய், போய், கண்டாலும். உண்டுபோனான் என வினை முடித்துக்காண்க.

419. நிகழ்கால வினையெச்சவிகுதி எது?

விடை. அ (உ-ம்) உண்ண. வந்தான் எனவினை முடித்துக்காண்க.

420. எதிர்கால வினையெச்ச விகுதிகள் எவை?

விடை. இன், இய, இயர், வான், பான், பாக்கு, ஆல், கால், கடை, வழி, இடத்து - (உ-ம்) உண்ணின், உண்ணிய, உண்ணியர், உண்ணுவான், உண்பான், உண்பாக்கு,உண்டால் உண்டக்கால், உணற்கு, உண்டக்கடை, உண்டவழி, உண்டவிடத்து. உண்ணின்வருவான் என வினைமுடித்துக்காண்க.

421. இவ்வினை யெச்சங்களில்இடைநிலையால் காலங்காட்டுவதுளது? விகுதியால் காலங்காட்டுவன எவை?

விடை. உகரவிகுதி பெற்றுவரும் வினையெச்சம் ஒன்றும் இடைநிலையால் காலங்காட்டும். மற்ற வினையெச்சங்களில் விகுதியே காலங்காட்டும்.

422. முக்கால வினையெச்சங்களும் வேறு எவ்வெப்பெயர் பெற்று வழங்கும்?

விடை. தாம் ஏற்றவிகுதிகளினுல் இறந்தகால வினையெச்சம் செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென என்னும் வாய்பாட்டு வினையெச்சம் என்றும், நிகழ்கால வினையெச்சம் செய என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சமென்றும், எதிர்காலவினையெச்சம் செயின், செய்யிய, செய்யியர் என்னும் வாய்பாட்டு வினையெச்சமென்றும் வழங்கும். (சூ - 343.)

423. 1. எதிர்மறை வினையெச்ச விகுதிகளெவை?

விடை. மல், மை, மே, து-(உ-ம்.) உண்ணுமல், உண்ணுமை, உண்ணுமே, உண்ணுது.

2. குறிப்பு வினையெச்ச விகுதிகளெவை?

விடை. அ, றி, ஆல், மல் (உ-ம்) மெல்லச்செய்தான். விருந்தின்றி உண்டான், அறமல்லால் இல்லை. அறமல்லாமல் இல்லை.

424. செயவெனெச்சம் நிகழ்காலமன்றி வேறெந்தக் காலங்களிலும் வரும்?

விடை. இறந்தகால, எதிர்காலங்களிலும் வரும், ஆகையால் இது முக்காலத்துக்கும் பொதுவான வினையெச்சமென்றும் சொல்லப்படும்.

425. செயவெனெச்சம் எப்போது இறந்தகாலங்காட்டும்? உதாரணமென்னை?

விடை. காரணத்தைக் குறிக்கும்போது இறந்தகாலமாம் (உ - ம்.) 1. காற்றடிக்க மரம் சாய்ந்தது. 2. மழைபெய்ய நெல் விளைந்தது. 3. இடிவிழச் சுவர்விழுந்தது. 4. வெயில்காயப் பயிர்தீய்ந்தது. 5. உண்ணப் பசிதீர்ந்தது. மரம்சாய்தல், நெல்விளைதல், சுவர்விழுதல், பயிர்தீய்தல், பசிதீர்தல்களுக்கு அடிக்க முதலிய செயவெனெச்சங்கள் காரணமாதல் அறிக.

426. செயவெனெச்சம் எப்பொழுது எதிர்காலங்காட்டும்? உதாரணமென்னை?

விடை. காரியத்தைக் குறிக்கும்போது எதிர்காலங்காட்டும்-(உ-ம்) 1. மரம்சாயக்காற்றடித்தது. 2. நெல்விளைய மழைபெய்தது.

3. சுவர்விழ இடிவிழுந்தது. 4. பயிர்தீய வெயில்காய்ந்தது. 5. பசிதீர உண்டான். காற்றடித்தல், மழைபெய்தல், இடி விழுதல், வெயில்காயல், உண்ணல் முதலிய காரணங்களுக்கு சாய முதலிய செயவெனெச்சங்கள் காரியமாதல் அறிக.

427. செயவெனெச்சம் எப்பொழுது நிகழ்காலத்தில் வரும்?

விடை. காரிய காரணமின்றி வரும்போது நிகழ்காலங்காட்டும். (உ-ம்.) 1. சூரியனுதிக்கவந்தான். 2. விளக்குவைக்க வந்தான். 3. பொழுதுபோக அவ்வூரையடைந்தான்.

428. எந்த வினையெச்சங்கள் தொழிற்பெயர்ப் பொருளில்வரும்?

விடை. செயவெனெச்சமும், வான் - பான் - பாக்கு ஈற்றுவினையெச்சங்களும்தொழிற்பெயர்ப்பொருளில்வரும். (பக்கம்-211.)

429. தன் கர்த்தாவின் பயனிலையைக்கொண்டு முடியும் வினையெச்சங்களெவை?

விடை. (சூ - 344 - பக்கம் - 212)

430. தன்கர்த்தாவின் பயனிலையையும், பிறகர்த்தாவின் பயனிலையையும் கொண்டு முடியும் வினையெச்சங்களெவை?

விடை. (பக்கம் - 212.)

431. செயவென் எச்சம் எந்த எச்சங்களாகத் திரியும்?

விடை. செயவென் எச்சமே செய்து என்னுமெச்சமாகவும், வான் ஈற்று வினையெச்சமாகவும் திரியும். (சூ - 346.)

432. சினை வினையாகிய வினையெச்சங்கள் சினைவினையையும் முதல் வினையையும் கொண்டு முடிய உதாரணம் காட்டுக.

விடை:—(சூ - 345.)

433. சாத்தன் நல்லன் - இதில் நல்லன் என்பதை ஆக்கவினைக் குறிப்பாகக் கொள்ளின் என்னசொல் மறைந்துளது? அதனை விரித்

விடை. (சூ - 347.)

434. செய்யும் என் வாய்பாட்டு வினைமுற்றின் இலக்கணமென்னை?

விடை. உம் விகுதிபெற்று ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் பலவின்பால்களுக்குப் பொதுவாய் நிகழ்கால, எதிர்காலங்களை உணர்த்திவரும் படர்க்கை வினைமுற்றாம். (சூ-348.)

435. செய்யுமென் வாய்பாட்டு வினைமுற்று எவ்வாறு விகாரப்படும்?

விடை. ஈற்றிலுள்ள உயிராவது, உயிர்மெய்யாவது கெட்டுவரும்.

436. எவற்பன்மை வினைமுற்று உயிரும், உயிர்மெய்யுங் கெட்டு வருவதற்கு உதாரணங்காட்டுக.

விடை. நீர்போம், கேண்மோ - உயிர் கெட்டுவந்தன. உரைமோ, செய்மோ - உயிர்மெய் கெட்டுவந்தன.

437. செய்யும் மனிதன், மனிதன்செய்யும், நீர்செய்யும் - இவற்றுள் செய்யும் என்பன மூன்றும் என்னசொற்கள்?

விடை. முதலில்உள்ளதுபெயரெச்சம், இடையிலுள்ளதுஆண்பால் குறித்துவந்த வினைமுற்று, கடையிலுள்ளது எவற்பன்மை வினைமுற்று.

438. வினாவடியாகப்பிறந்த உயர்திணை மூன்றுபாலுக்கும் பொது வான குறிப்பு வினைமுற்று எது?

விடை. யார் (சூ-349.)

439. அஃறிணை யிருபாலுக்கும் பொதுவான குறிப்பு வினைமுற்று எது?

விடை. எவன் (சூ-350.)

440. யார், எவன் - இக்குறிப்பு வினைமுற்றுக்கள் எவ்வாறு திரிந்து வரும்.

விடை. (பக்கம் - 214 - 215.)

441. யார் என்னும் குறிப்புமுற்று அஃறிணை யிருபால்களிலும் தன மை முன்னிலைகளிலும் வருதற்கு உதாரணங்காட்டுக.

விடை. (சூ - 349)

442. யார் - எவன் என்னும் சொற்களைப் பெயர்ச் சொல்லாகவும், வினைமுற்றாகவும் வைத்து வாக்கியமெழுதுக.

விடை. யாருக்குக் கொடுத்தான், எவனைக் கூப்பிட்டான் பெய ர்ச்சொல். அதைச்செய்தவன் யார், செய்தவள்யார், செய்த வர்யார், அது எவன், அவை எவன்-குறிப்புவினைமுற்று. அது எத்தன்மையது, அவை எத்தன்மையன என்பன பொருள்.

443. தெரிநிலை வினைமுற்று வினையெச்சமாகி வருதற்குதாரணங் காட்டுக.

விடை. (பக்கம் 215 - சூ - 351.)

444. எந்தவினைமுற்று பெயரெச்சமாகவும் வினையெச்சமாகவும்வரும்?

விடை. குறிப்பு வினைமுற்று (பக்கம் 215 - சூ - 351.)

445. முதனிலைத்தனிவினை வினைமுற்றாய் வருதற்குதாரணங்காட்டுக (உ-ம்.) கொள்வாரும் கள்வரும் நேர். இதில் நேர் என்பது நோ வர் என வினைமுற்றாய்ப் பொருள்படுதலறிக.

446. முதனிலைத் தனிவினை வினையெச்சமாய் வருதற்குதாரணங் காட்டுக.

விடை. வரிபுனைபந்து, மண்மாண் புனைபாவை, செய்தக்கவல்ல என்பவைகளில் வரி, மாண், செய் என்னும் முதனிலைகள்வரி ந்து, மாட்சிமைப்பட, செய்யஎனப்பொருள்பட்டு, புனை, தக்க என்னும் வினைகளைக்கொண்டு முடிதலால் வினையெச்சங்கள் என்றறிக. பெயர்கொண்டு முடியாமையால். இவை வினைத் தொகைகள் ஆகா.

447. குறிப்புப்பெயரெச்சங்கள் சில எழுதுக.

விடை. மனத்த, அமர்முகத்த, புறத்த, கரிய, பெரிய, சிறிய, உள்ள, பல, சில, நுண்ணிய, செழிய, அணிய, வளவிய, வறிய, மெலிய, புல்லிய, உலிய, செவ்விய, தீய, வெவ்விய, புதிய, நல்ல மெலிய, பசிய, தண்ணிய, கடிய, நெடிய, மனத்தகறுப்பு எனப் பெயர்கொண்டு முடிந்தமை காண்க.

448. குறிப்புவினையெச்சம் சில எழுதுக.

விடை. நெடிது, பெரிது, சிறிது, வறிது, கடிது, மெல்ல, பைய, வலிது, அல்லாமல், இல்லாமல். நெடிதுசென்றான் எனவினைகொண்டு முடிந்துக் காண்க.

449. எதிர்மறை யொருமையேவல் சில எழுதுக.

விடை. ஈயேல், நரவேல், காவேல், நுகரேல், தரேல், போகேல்.

450. எதிர்மறைப் பன்மையேவல் சில எழுதுக.

விடை. நல்கூரன்மின், கொடன்மின், கொணரன்மின், வரன் மின், கூயன்மின், அருளன்மின்.

451. கீழ்வரும் பகுதிகளுக்கு உடன்பாடும் எதிர்மறையு மாகிய வியங்கோள்வினைகள் எழுதுக.

விடை. பகுதி.	உடன்பாடு.	எதிர்மறை.
உண்	உண்க	உண்ணற்க.
ஈ	ஈக	ஈயற்க
வாழ்	வாழிய	வாழற்க
செய்	செய்யிய	செய்யற்க
கல்	கற்க	கல்லற்க
உணர்	உணர்க	உணரற்க
வை	வைக	வையற்க
கூப்பு	கூப்புக	கூப்பற்க
ஓங்கு	ஓங்க	ஓங்கற்க.

452. கீழ்வரும்பகுதிகளுக்குஉடன்பாடும்எதிர்மறையுமாகிய பலவின்பால் வினைமுற்றுக்கள் எழுதுக.

விடை. பகுதி.		
துயில்	துயின்றன	துயிலா
புரள்	புரள்கின்றன	புரளா
அகழ்	அகழ்வன	அகழா
பற	பறந்தன	பறவா
நட	நடந்தன	நடவா
இற	இறந்தன	இறவா

453. கீழ்வரும் பகுதிகட்கு உடன்பாட்டுப் பெயரெச்சமும் எதிர்மறைப்பெயரெச்சமும் எழுதுக.

விடை. உடன்பாட்டுப்பெயரெச்சம். எதிர்மறைப்பெயரெச்சம்.

பகுதி	இ	நி	எ	காலம்பொது.
ஆ	ஆன	ஆகிற	ஆகும்	ஆகாத
ஈ	ஈந்த	ஈகிற	ஈயும்	ஈயாத
ஒ	ஒத்த	ஒக்கின்ற	ஒக்கும்	ஒவ்வாத
மூ	மூத்த	மூக்கிற	மூக்கும்	மூவாத
மோ	மோந்த	மோக்கிற	மோக்கும்	மோவாத
தா	தந்த	தருகிற	தரும்	தராத
தை	தைத்த	தைக்கிற	தைக்கும்	தையாத
பா	பாவின	பாவுகிற	பாவும்	பாவாத
பூ	பூத்த	பூக்கிற	பூக்கும்	பூவாத
போ	போன போயின	போகிற	போகும்	போகாத
நீ	நீத்த	நீக்கிற	நீவும்	நீவாத
நை	நைந்த	நைகிற	நையும்	நையாத
நொ நோ	நொந்த	நோகிற	நோகும்	நோகாத
கா	காத்த	காக்கிற	காக்கும்	காவாத
கூ	கூவின	கூவுகிற	கூவும்	கூவாத
கை	கைத்த	கைக்கிற	கைக்கும்	கையாத
கோ	கோத்த	கோக்கிற	கோக்கும்	கோவாத
வா	வந்த	வருகிற	வரும்	வராத
வீ	வீந்த	வீகிற	வீயும்	வீயாத
வை	வைத்த	வைக்கிற	வைக்கும்	வைக்காத
வை	வைத	வைகிற	வையும்	வையாத
வௌ	வௌவின	வௌவுகிற	வௌவும்	வௌவாத
சா	செத்த	சாகிற	சாகும்	சாகாத
சீ	சீத்த	சீக்கிற	சீக்கும்	சீக்காத
யா	யாத்த	யாக்கிற	யாக்கும்	யாக்காத
து	துத்த	துக்கிற	துக்கும்	துவ்வாத
தூ	தூவின	தூவுகிற	தூவும்	தூவாத
கௌ	கௌவின	கௌவுகிற	கௌவும்	கௌவாத
வே	வெந்த	வேகிற	வேகும்	வேகாத
பய	பயந்த	பயக்கிற	பயக்கும்	பயவாத
ஏமா	ஏமாந்த	ஏமாக்கிற	ஏமாக்கும்	ஏமாவாத

உடன்பாட்டு எதிர்மறை வினையெச்சமு மெழுதுக.

விடை.	உடன்பாட்டு வினையெச்சம்.		எதிர்மறை வினையெச்சம்.
இ	ஙி	எ	காலம்பொது.
ஆய	ஆக	ஆனால	ஆகாமல
ஈந்து	ஈய	ஈந்தால்	ஈயாமல்
ஒத்து	ஒக்க	ஒத்தால்	ஒவ்வாமல்
மூத்து	மூக்க	மூத்தால்	மூவாமல்
மோந்து	மோக்க	மோந்தால்	மோக்காமல்
தந்து	தர	தந்தால்	தராமல்
தைத்து	தைக்க	தைத்தால்	தையாமல்
பாவி	பாவ	பாவினால்	பாவாமல்
பூத்து	பூக்க	பூத்தால்	பூக்காமல்
போய்	போக	போனால்	போகாமல்
நீத்து	நீவ	நீத்தால்	நீவாமல்
நைந்து	நைய	நைந்தால்	நையாமல்
நொந்து	நோக	நொந்தால்	நோகாமல்
காத்து	காக்க	காத்தால்	காவாமல்
கூவி	கூவ	கூவினால்	கூவாமல்
கைத்து	கைக்க	கைத்தால்	கையாமல்
கோத்து	கோக்க	கோத்தால்	கோவாமல்
வந்து	வர	வந்தால்	வராமல்
வீந்து	வீய	வீந்தால்	வீயாமல்
வைத்து	வைக்க	வைத்தால்	வைக்காமல்
வைது	வைய	வைதால்	வையாமல்
வௌவி	வௌவ	வௌவினால்	வௌவாமல்
செத்து	சாக	செத்தால்	சாகாமல்
சீத்து	சீக்க	சீத்தால்	சீக்காமல்
யாத்து	யாக்க	யாத்தால்	யாக்காமல்
துத்து	துக்க	துத்தால்	துவ்வாமல்
தூவி	தூவ	தூவினால்	தூவாமல்
கௌவி	கௌவ	கௌவினால்	கௌவாமல்
வெந்து	வேக	வெந்தால்	வேகாமல்
பயந்து	பயக்க	பயந்தால்	பயவாமல்
ஏமாந்து	ஏமாக்க	ஏமாந்தால்	ஏமாக்காமல்

உடன்பாட்டுப்பெயரெச்சம்.				எதிர்மறைப்பெயரெச்சம்.
பகுதி	இ	நி	எ	காலம்பொது.
அங்கா	அங்காந்த	அங்காக்கிற	அங்காக்கும்	அங்காவாத
கொணா	கொணார்ந்த	கொணார்கின்ற	கொணாரும்	கொணாராத
கடி	கடிந்த	கடிக்கிற	கடிக்கும்	கடியாத
எடு	எடுத்த	எடுக்கிற	எடுக்கும்	எடுக்காத
நகு	நக்க	நகுகிற	நகும்	நகாத
அடு	அட்ட	அடுகிற	அடும்	அடாத
அடு	அடுத்த	அடுக்கிற	அடுக்கும்	அடுக்காத
நடு	நட்ட	நடுகிற	நடும்	நடாத
உறு	உற்ற	உறுகிற	உறும்	உறாத
தேடு	தேடின	தேடுகிற	தேடும்	தேடாத
அறை	அறைந்த	அறைகிற	அறையும்	அறையாத
உரிஞு	உரிஞின	உரிஞுகிற	உரிஞும்	உரிஞாத
காண	கண்ட	காண்கிற	காணும்	காணாத
மண்	மண்ணின	மண்ணுகிற	மண்ணும்	மண்ணாத
ஈன்	ஈன்ற	ஈனுகிற	ஈனும்	ஈனாத
தேய்	தேய்ந்த	தேய்கிற	தேயும்	தேயாத
தேய்	தேய்த்த	தேய்க்கிற	தேய்க்கும்	தேய்க்காத
ஆர்	ஆர்ந்த	ஆர்கிற	ஆரும்	ஆராத
ஆர்	ஆர்த்த	ஆர்க்கிற	ஆர்க்கும்	ஆர்க்காத
நல்கூர்	நல்கூர்ந்த	நல்கூர்கிற	நல்கூரும்	நல்கூராத
கல்	கற்ற	கற்கிற	கற்கும்	கற்காத
சொல்	சொல்லின / சொன்ன	சொல்கிற	சொல்லும்	சொல்லாத
நில்	நின்ற	நிற்கிற	நிற்கும்	நிற்காத
நால்	நான்ற	நால்கிற	நாலும்	நாலாத
தோல்	தோற்ற	தோற்கிற	தோற்கும்	தோற்காத
புகல்	புகன்ற	புகல்கிற	புகலும்	புகலாத
அகழ்	அகழ்ந்த	அகழ்கிற	அகழும்	அகழாத
தொள்	தொள்ளின	தொள்ளுகிற	தொள்ளும்	தொள்ளாத
புரள்	புரண்ட	புரள்கிற	புரளும்	புரளாத
அருள்	அருளின	அருளுகிற	அருளும்	அருளாத
ஆள்	ஆண்ட	ஆள்கிற	ஆளும்	ஆளாத
கேள்	கேட்ட	கேட்கிற	கேட்கும்	கேட்காத

உடன்பாட்டு வினையெச்சம். இ	நி	எ	எதிர்மறை வினையெச்சம். காலம்பொது.
அங்காந்து	அங்காக்க	அங்காந்தால்	அங்காவாமல்
கொணர்ந்து	கொணர	கொணர்ந்தால்	கொணராமல்
கடித்து	கடிக்க	கடித்தால்	கடிக்காமல்
எடுத்து	எடுக்க	எடுத்தால்	எடுக்காமல்
நக்கு	நக	நக்கால்	நகாமல்
அட்டு	அட	அட்டால்	அடாமல்
அடுத்து	அடுக்க	அடுத்தால்	அடுக்காமல்
நட்டு	நட	நட்டால்	நடாமல்
உற்று	உற	உற்றால்	உறாமல்
தேடி	தேட	தேடினால்	தேடாமல்
அறைந்து	அறைய	அறைந்தால்	அறையாமல்
உரிஞி	உரிஞ	உரிஞினால்	உரிஞாமல்
கண்டு	காண	கண்டால்	காணாமல்
மண்ணி	மண்ண	மண்ணினால்	மண்ணாமல்
ஈன்று	ஈன	ஈன்றால்	ஈனாமல்
தேய்ந்து	தேய	தேய்ந்தால்	தேயாமல்
தேய்த்து	தேய்க்க	தேய்த்தால்	தேய்க்காமல்
ஆர்ந்து	ஆர	ஆர்ந்தால்	ஆராமல்
ஆர்த்து	ஆர்க்க	ஆர்த்தால்	ஆர்க்காமல்
நல்கூர்ந்து	நல்கூர	நல்கூர்ந்தால்	நல்கூராமல்
கற்று	கற்க	கற்றால்	கல்லாமல் / கற்காமல்
சொல்லி	சொல்ல	சொன்னால்	சொல்லாமல்
நின்று	நிற்க	நின்றால்	நிற்காமல் / நில்லாமல்
நான்று	நால	நான்றால்	நாலாமல்
தோற்று	தோற்க	தோற்றால்	தோலாமல் / தோற்காமல்
புகன்று	புகல	புகன்றால்	புகலாமல்
அகழ்ந்து	அகழ	அகழ்ந்தால்	அகழாமல்
தொள்ளி	தொள்ள	தொள்ளினால்	தொள்ளாமல்
புரண்டு	புரள	புரண்டால்	புரளாமல்
அருளி	அருள	அருளினால்	அருளாமல்
ஆண்டு	ஆள	ஆண்டால்	ஆளாமல்
கேட்டு	கேட்க	கேட்டால்	கேளாமல்

பொதுவியல்.

454. பெயர் வினைகளில் எவைகளின் பின் உள்ள ஆகாரம் ஓகாரமாகத் திரியும் ?
விடை. (சூ - 353)
455. இடைப்பிறவரல் என்பதென்னை ?
விடை (சூ - 356)
456. தொகைநிலைத்தொடர் எத்தனை ? அவையாவை ?
விடை. வேற்றுமைத்தொகை முதலிய ஆறு. (சூ - 362)
457. வினைத்தொகைக்குப் பத்துதாரண மெழுதுக.
விடை. அடுகளிறு, கொல்யானை, உண்கலம், தின்பண்டம், செய்நன்றி, உழுபடை, அரிவாள், இறைகூடை, வருபுனல், நடந்திடு குதிரை. (சூ - 364)
458. வினைத்தொகை விரிந்துவரின் என்னதொடராம் ?
விடை. பெயரெச்சத்தொடராம் - (உ - ம்) கொல்யானை = கொன்ற, கொல்கிற, கொல்லும் யானை.
459. பண்புத்தொகையி னிலக்கணமென்னை ?
விடை. (சூ - 365)
460. பண்புத்தொகையின் உருபு என்னை? அதுவிரியின் என்ன தொடராம்?
விடை. ஆகிய இடைச்சொற்றொடர்.
461. வண்ணம், வடிவு, அளவு, சுவை என்னும் குணம் பற்றிவரும் [illegible]
விடை. (பக்கம் 226)
462. வண்ணமுதலிய நான்கினுளடங்காத பண்புத்தொகைக்குச் சில உதாரண மெழுதுக.
விடை. நல்வினை, தீவினை, தண்ணீர், வெந்நீர், நுண் அறிவு, அருமபொருள்.
463. பண்பி என்றுலென்னை ?
விடை. பண்பையுடையது பண்பி. கருங்குதிரை என்பதில் கருமை பண்பு அக்குணத்தையுடைய குதிரைபண்பி, வடநூலார் பண்பை விசேடணம் என்றும், பண்பியை விசேடியம் என்றும் கூறுவர்.
464. இருபெயரொட்டுப் பண்புத்தொகை யாவதென்னை ?
விடை. பொதுப்பெயரும் சிறப்புப்பெயருமாகிய பெயர்கள் ஒருபொருளைக்குறித்து வருவனவாம். (உ - ம்.) சாரைப்பாம்பு, ஆடித்திங்கள், பெயர்ச்சொல். வினைச்சொல்.
465. உவமைத்தொகை யென்பதென்னை ?
விடை. உவமானத்துக்கும் உவமேயத்துக்கு மிடையே உவம உருபு மறைந்து வருவது.
466. உவமை எத்தனை வகைப்படும் ? அவையாவை ?
விடை. நான்குவகை, அவை - வினை, பயன், மெய், உரு, மெய் என்பது பண்பி - உரு என்பது - பண்பு.

467. மேற்கூறிய வினைமுதலிய நான்குவகை உவமைத்தொகைகளுக்கு முதாரணமெழுதுக. விடை. (பக்கம் - 226.)

468. உவம உருபுகளெவை? விடை. (சூ - 367.)

469. உம்மைத்தொகை எத்தனைவகைப்படும்?

விடை. எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என நான்கு வகைப்படும். (சூ - 368.)

470. அன்மொழித்தொகை எவைகளின் புறத்தில் பிறக்கும்?

விடை. (சூ - 369.)

471. அன்மொழித் தொகைக்குப் பத்துதாரண மெழுதுக.

விடை. 1. பொற்றொடி வந்தாள், 2. பூங்குழல் சொன்னாள், 3. தாழ்குழல் சென்றாள், 4. ஆயிழைகூறினாள், 5. பெருந்தகைகொடுத்தான், 6. கருங்குழல் நின்றாள், 7. துடியிடைநடந்தாள், 8. பிறைநுதல் கொடுத்தாள். 9. உயிர்மெய் எழுதினான், 10. தகரஞாழல் அணிந்தாள்.

472. உயர்திணை உம்மைத்தொகை எந்த விகுதியை யுடையனவாய் முடியும்?

விடை. பலர்பால் விகுதியால் முடியும். (உ-ம்.) சேரசோழபாண்டியர்.

473. அஃறிணைப் பெயரில்வரும் உம்மைத்தொகையும், பொதுப்பெயரில்வரும் உம்மைத்தொகையும் எந்த ஈற்றால் முடியும்?

விடை. ஒருமையீற்றானுயினும், பன்மையீற்றானுயினும் முடியும் (உ - ம்) இராப்பகல், இராப்பகல்கள், தாய்தந்தை, தாய்தந்தையர்.

474. ஒருமையீற்றால் முடியும் உம்மைத்தொகைக்கும், செவ்வெண்ணுக்கும் பேதமென்னை?

விடை. பலமொழிகளையும் ஒன்றாய்த்திரட்டி ஒரு பிண்டமாக்கிக் கூறியபோது உம்மைத்தொகை என்றும், சேரன் சோழன் பாண்டியன் எனப் பிளவுபடக் கூறியபோது செவ்வெண் என்றும் கொள்க.

475. தொகைநிலைத்தொடர் ஒன்றே பலவகைத் தொகாநிலையாக விரிந்து வருவதற்குச் சில உதாரணமெழுதுக. விடை. (சூ - 373.)

476. தொகாநிலைத்தொடர்களெவை? விடை. (சூ - 374.)

477. வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை - இவ்வாறும் விரிந்துவரின் என்னதொடர்களாம்? விடை. (ப-337.)

478. எழுவாய்வேற்றுமையையும் விளிவேற்றுமையையும் அல்வழிப் புணர்ச்சியில் சேர்ப்பானேன்?

விடை. எழுவாய்க்கும் விளிக்கும் உருபு பெயரும் பெயரது விகாரமுமன்றி வேறு உருபு இல்லாமையால் அவை அல்வழிப் புணர்ச்சியில் சேர்க்கப்பட்டன.

479. அல்வழிப்புணர்ச்சி பதினான்கிற்கும், புறத்ததாகிய புணர்ச்சிக் குதாரணங்கூறுக. விடை. (உ - ம்) ஒவ்வொரு, இவ்விரண்டு.

480. எவை மயங்கியாின் வழுவாம்?

விடை. திணை, பால் இடம், காலம், வினா, விடை, மரபு, (சூ-375)

481. வழாநிலை யென்பதென்னை?

விடை. மேல்வினாவிடையிற்கூறிய திணைமுதலிய எழும் வழுவின்றி முடிவது.

482. வழுவமைதி யென்பதென்னை?

விடை. சிறப்பு முதலிய காரணங்களினாலும், இயல்பினாலும் திணை முதலிய எழும் செய்யுள் வழக்கிலும், உலகவழக்கிலும் மயங்கிவருவன. அவை அவவாறு மயங்கிவருதலால் வழுவும், சான்றோர் அவற்றை ஆண்டு வருதலால் அமைதியுமாய் வழுவமைதியெனப் பெயர் பெற்றன.

483. உயர்திணையைத் தொடர்ந்துவரும் அஃறிணைப்பெயர்உயர்திணை முடிபேற்று வருதற்குதாரணங் காட்டுக. விடை. (சூ - 377.)

484. அஃறிணைப்பெயரோடு அஃறிணைப்பெயர்சேர்ந்து ஒன்றன்பால் முடிபேற்றற்குதாரண மெழுதுக. விடை. (சூ - 377.)

485. சிறப்புமுதலிய காரணங்களால்வரும் திணைவழுவமைதிக்கும் பால் வழுவமைதிக்கும் உதாரணங்காட்டுக. விடை. (சூ - 378.)

486. வேறுவினைக்குரியபலபொருள்கலந்துஒருபொருளுக்குரியவினை கொண்டு முடிதற்குதாரணங் காட்டுக. விடை. (சூ - 378.)

487. உவப்புமுதலிய காரணங்களால்வரும் திணைபால் வழுவமைதிகளுக்கு உதாரணங்காட்டுக. விடை. (சூ - 379.)

488. (1) உயர்திணை ஒருமைப்பால் பன்மைப்பாலையும், பன்மைப்பால் ஒருமைப்பாலையும், அஃறிணை யொருமைப்பால் பன்மைப்பாலையும் பன்மைப்பால் ஒருமைப்பாலையும் கொண்டு முடிவதற்குதாரணங் கூறுக. (2) தன்மைமுன்னிலைகளில் படர்க்கை வருதற்குதாரணங்காட்டுக. (3) இடம் விரவி ஒரிடத்திற் பிறவிடம் வருதற் குதாரணங்காட்டுக. விடை. (சூ-380-பக்கம் 240-241.)

489. தரல், வரல் இரண்டும் எந்த இடங்களில் வரின் வழாநிலை?

விடை. தன்மை, முன்னிலை.

490. கொடை, செலவு இரண்டும் எந்த இடங்களில்வரின்வழாநிலை.

விடை. படர்க்கை.

491. இவை எவ்வாறுவரின் வழுவமைதியாம்?
விடை. இம்முறைமாறி, தரல், வரல் படர்க்கைக்கும், கொடை, செலல் தன்மை முன்னிலைகளுக்கும் வரின் வழுவமைதியாம் (உ - ம். பக்கம் 241)

492. முக்காலத்திலும் ஒருதன்மையாய் நடக்கும்பொருளை எந்தக்காலத்தாற் கூறுவர். விடை. (சூ - 383.)

493. விரைவுமுதலிய காரணங்களால் வரும் காலவழுவமைதிக்குதாரணமெழுதுக. விடை. (சூ - 384.)

494. எண்வகை விடைகளுக்குமுதாரணமெழுதுக. விடை. (சூ-386)

495. மரபு என்பதென்னை? விடை. (சூ - 388.)

496. பொதுவினை கொண்டுமுடியும் சொற்களெவை?
விடை. (சூ - 389)

497. பொருள் விளங்காத பலபொருள் ஒருசொல்லை எந்தச்சொல்லால் முடிக்கவேண்டும். விடை. (சூ - 390.)

498. ஒருபொருளைக் குறித்துக்கொண்டு பலபெயர்வரின், அவற்றை முடிக்குஞ்சொல் எவ்வாறுவரும்? விடை. (சூ - 392.)

499. 1. அசைநிலை, பொருணிலை, இசைநிறைகளில்ஒருசொல்எத்தனை தரம் அடுக்கிவரும் ? 2. பொருணிலையின் வகையிற் சில கூறுக.
விடை. (சூ - 395.)

500. இரட்டைக்கிளவிக்குச் சில உதாரணமெழுதுக.
விடை. சலசலவெனப் பெய்தது, கலகலவெனப் பேசினான், வற்றியவோலை கலகலக்கும், துடிதுடித்து வீழ்ந்தான். துடிதுடித்து என்பதில் பின்னையது பிரிந்திசைக்குமாயினும் முன்னையது பிரிந்திசையாமையால் இரட்டைக்கிளவியாயிற்று. கிளவி-சொல். (சூ - 396.)

501. ஒருபொருட் பன்மொழிக்குச் சில உதாரணமெழுதுக.
விடை. மீமிசைஞாயிறு, நாகிளங்கன்று, குழிந்தாழ்ந்தகண், உயர்ந்தோங்கு தடவரை. (சூ - 398.)

502. இத்தனையென்றுஅறியப்பட்டபொருளையும், உலகத்தில்இல்லாத பொருளையும் வினையோடுகூட்டிச் சொல்லும்போது எவ்வாறு கூறவேண்டும்? விடை. (சூ - 399.)

503. செயப்படுபொருளைக்கர்த்தாவைப்போல்வைத்து, அதற்கு வினைமுதல் வினையைக்கூட்டிக் கூறுவதற் குதாரணமெழுதுக.
விடை. இம்மாடு யான்கொண்டது. (சூ - 400)

504. பிறிதின் இயைபு நீக்கிய விசேடணம், தன்னொடியையின்மை நீக்கியவிசேடணம் இவற்றிற்கு உதாரணமெழுதுக.

விடை. நெய்க்குடம், உப்பளம். (சூ - 401)

505. ஈ, தா, கொடு இவை தம்முள்பேதமென்னை? விடை. (சூ-407)

506. கேட்டல், சொல்லல், நடத்தல், செய்தல் ஆகியதொழில்களைச் செய்யாத அஃறிணைப்பெயர்களை அவற்றைச் செய்வனபோலக் கூறும் மரபுவழுவமைதிக்குதாரண மெழுதுக. விடை. (சூ-409)

507. உருவக உவமைகளில் திணையும், சினையும், முதலும் பிறழ்ந்து வரும் மரபு வழுவமைதிக்குதாரணமெழுதுக. விடை. (சூ-410)

508. (1) யாற்று நீர்ப்பொருள்கோள், (2) மொழிமாற்றுப் பொருள்கோள், (3) நிரனிறைப் பொருள்கோள், (4) விற்பூட்டுப் பொருள்கோள், (5) தாப்பிசைப் பொருள்கோள், (6) அளைமறிபாப்புப் பொருள்கோள், (7) கொண்டுகூட்டுப் பொருள்கோள், (8) அடிமறிமாற்றுப் பொருள்கோள் - இவைகளின் இலக்கணமும் உதாரணமுமெழுதுக.

விடை. (சூ - 412, 413, 414, 415, 416, 417, 418, 419.)

509. நிரனிறைப் பொருள்கோள் எத்தனைவகைப்படும்?

விடை. முறை நிரனிறைப் பொருள்கோள், எதிர் நிரனிறைப் பொருள்கோள் என இருவகைப்படும். (பக்கம் - 261-262.)

இடையியல்.

510. (1) இடைச்சொல்லுக்குப் பொதுவிலக்கணமென்னை? (2) அது எத்தனைவகைப்படும்? (3) பெயர்வினைகளுக்கு எவ்விடங்களில் வரும்? (4) வேற்றுமையுருபு, வினையுருபு, சாரியை, உவமையுருபுகளாகிய இடைச்சொற்களுக் குதாரணமெழுதுக (5) இசைநிறைப்பொருள், அசைநிறைப்பொருள் என்றுலென்னை?

விடை. (பக்கம் - 266.)

511. தத்தம் பொருளனவாகிய இடைச்சொற்பொருள்கள் எவை?

விடை. (சூ - 421.)

512. "இன்னன" என்றதனால் வரும் இடைச்சொற் பொருள்களவை? விடை. (பக்கம் - 268.)

513. ஏகாரம் என்னென்ன பொருள்களில் வரும்?

விடை. (சூ - 422.)

514. ஒகார இடைச்சொல் என்னென்ன பொருளைத்தரும்?

விடை. (சூ - 423.)

515. சிறப்பு எத்தனை வகைப்படும்?

விடை. உயர்வு சிறப்பு, இழிவு சிறப்பு என இருவகைப்படும்.

516. என, என்று என்னு மிடைச்சொற்கள் என்னென்ன பொரு ளைத்தரும்? விடை. (சூ - 424.)
517. உம்மை இடைச்சொல் எத்தனை பொருளில் வரும்?
விடை. (சூ - 425.)
518. முற்றும்மை எச்சப்பொருள் தருவதற்கு உதாரணமெழுதுக.
விடை. எல்லாரும் இது செய்யார். (சூ - 426.)
519. (1) செவ்வெண்ணில் எச்சவும்மை எங்கே வரும்?
விடை. (சூ - 427.)
520. தொகை பெற்றுவரும் இடைச்சொற்களெவை?
விடை. பெயர்ச்செவ்வெண்ணும், எண்ணுப் பொருளில் வரும் ஏகா ரம், என்று, என என்னும் இடைச்சொற்களும் தொகைச சொல் பெற்று முடியும். (சூ - 428.)
521. தொகைச்சொல்பெறுதும்முடியும்எண்ணிடைச்சொற்களெவை?
விடை. எண்ணுப்பொருளில்வரும் உம், என்று, என, ஒடு என்னு மிடைச்சொற்கள். (பக்கம் - 273.)
522. எந்த எண்ணிடைச்சொற்கள் எண்ணப்படும் பொருள்களின் ஒரிடத்து நின்றும், எண்ணப்படும் பொருள்தோறும் போய்ப் பொருந்தும்? விடை. என்று, என, ஒடு - (சூ - 429.)
523. வினைச்செவ்வெண்ணுக் குதாரணங்காட்டுக.
விடை. மயிலாடக் குயில்பாட மாமுகில் எழுந்தது.
524. வினையெச்சஙகள் எண்ணிடைச்சொல் பெற்றுவருவதற் குதார ணங்காட்டுக.
விடை. கற்றும் கேட்டும் கற்பனை கடந்தார்.
525. வினையெச்சம் பிரிந்துகூடும் எண்ணிடைச்சொல் பெற்றுவருதற் குதாரணமெழுதுக. விடை. உண்ண உடுக்கவென வந்தான்.
526. பெயரெச்சங்கள் எண்ணிடைச்சொல் பெற்று அடுக்கிவருமா?
விடை. எண்ணிடைச்சொல் பெற்றுவரா.
527. மற்று என்ன பொருளில்வரும்? விடை. (சூ - 433.)
528. கொல் என்னபொருளில் வரும்? விடை. (சூ - 435.)
529. இசைநிறைப் பொருளில்வரும் இடைச்சொற்களெவை?
விடை. ஒடு, தெய்ய, (சூ - 436.)
530. அசைநிலை, இடப்பொருள்களைத் தரும்இடைச்சொற்களெவை
விடை. அந்தில் - ஆங்கு - (437.)
531. உரையசைப்பொருளையும், ஏவற்பொருளையும் தரும் இடைச சொல் எது? விடை. அம்ம - (சூ - 438.)
532. வியங்கோளில் வரும் அசை இடைச்சொல் எது?

விடை. மா-உப்பின்றுபுற்கையுண்கமாகொற்கையோனே. (சூ-439)

533. முன்னிலை அசைச்சொற்களெவை?

விடை. மியா, இக முதலியன - (சூ - 440.)

534. எல்லாவிடத்தும்வரும் அசைச்சொற்களெவை?

விடை. யா முதலிய இருபதுமாம். (சூ - 441.)

உரியியல்.

535. உரிச்சொல் எவைகளைச் சார்ந்து எங்கேவரும்?

விடை. ஒரு குணத்தையும், பல குணங்களையும் உணர்த்திப் பெயர் வினைகளில் ஒன்றைச்சார்ந்து செய்யுளில்வரும். (சூ 442.)

536. இசை, குறிப்பு, பண்பு என்னும் குணங்களுக்குள் பேதமென்னை?

விடை. (பக்கம் - 279.)

537. மிகல் என்னும் ஒருகுணந் தழுவிய உரிச்சொற்களெவை

விடை. சால, உறு, தவ, நனி, கூர், கழி. (சூ - 456.)

538. பலகுணம் தழுவிய உரிச்சொல் ஒன்றெழுதுக.

விடை. கடி - (சூ - 457.)

539. குணப்பண்புகளுக் குதாரணமெழுதுக. விடை. (சூ-452-454.)

540. தொழிற்பண்புகளுக் குதாரணமெழுதுக.

விடை. (சூ - 453 - 455.)

541. பழையன கழிதலுக் குதாரணமெழுதுக.

விடை. 98 - ஆம் சூத்திரத்தில் கூறியபடி எகர ஒகரங்களுக்குப் புள்ளியிட்டு எழுதவேண்டியதை அவ்வாறு எழுதாமையால் இறந்தது விலக்கல்.

542. புதியன புகுதலுக்கு உதாரணமெழுதுக?

விடை. 422 - ஆம் சூத்திரத்தில் ஏகாரவிடைச்சொல்லுக்குஎதிர் மறைப்பொருள் கூறுதல் புதியன புகுதல்.

543. அடியில் வருபவைகளில் ஒன்றற்கொன்றுள்ள இலக்கணவேறுபாடென்னை?

1. இன்னிசையளபெடை - சொல்லிசையளபெடை.
2. இயற்கையளபெடை - செயற்கையளபெடை.
3. முற்றாய்தம் - ஆய்தக்குறுக்கம்.
4. குற்றியலுகரம் - குற்றியலிகரம் - முற்றியலுகரம்.
5. நெடிற்றொடர்க்குற்றியலுகரம் - உயிர் - குற்றியலுகரம்.
6. பொதுநகரம் - சிறப்புநகரம்.

7. இடுகுறிப்பெயர் - காரணப்பெயர்.
8. இடுகுறிப்பொதுப்பெயர் - இடுகுறிச் சிறப்புப்பெயர்.
9. காரணப்பொதுப்பெயர் - காரணச்சிறப்புப்பெயர்.
10. காரணப்பெயர் - காரணவிடுகுறிப்பெயர்.
11. பகுபதம் - பகாப்பதம்.
12. முதனிலை - பகுதி.
13. சந்தி - விகாரம்.
14. விகுதி - பகுதிப்பொருள் விகுதி.
15. பெயரிடைநிலை - வினையிடைநிலை.
16. புணர்ச்சிவிகாரம் - செய்யுள்விகாரம்.
17. தொகுத்தல்விகாரம்முதற்குறைமுதலியமூன்றுவிகாரங்கள்.
18. விரித்தல்விகாரம் - எழுத்துப்பேறு.
19. தொழிற்பெயர் - தொழிலடியாகப் பிறந்தபெயர் - வினையாலணையும் பெயர்.
20. உடம்படுமெய் - உடம்படுமெய்யல்லாதமெய்.
21. பண்புச்சொல் - உரிச்சொல்.
22. இயற்சொல் - திரிசொல் - திசைச்சொல். வடசொல்.
23. இலக்கணமுடையது - இலக்கணப்போலி - மரூஉ.
24. தழுவுதொடர்-தழாத்தொடர்.
25. பொது விதி - சிறப்புவிதி.
26. விகற்பம் - உறழ்ச்சி.
27. மரபு - ஆக்கம்.
28. எழுவாய்க்கருத்தா - மூன்றும்வேற்றுமைக் கருத்தா.
29. முதற்கருவி - துணைக்கருவி.
30. உருபு - சொல்லுருபு.
31. காரணம் - காரியம்.
32. முதற்காரண காரியம் - துணைக்காரண காரியம்.
33. தொடர்மொழி - பொதுமொழி.
34. உருபுமயக்கம் - பொருள்மயக்கம்.
35. முதற்பெயர் - சினைப்பெயர்.
36. அண்மைவிளி - சேய்மைவிளி.
37. உருபும் பயனும் உடன்றொக்க தொகை - வேற்றுமைத தழாத்தொடர்.
38. தெரிநிலைவினை - குறிப்புவினை.
39. பெயரெச்சம் - வினையெச்சம்.
40. தனித்தன்மைப் பன்மை வினைமுற்று - உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று.

41. வியங்கோள் - ஏவல்.
42. ஏவல் வினைமுற்று - எதிர்கால முன்னிலை வினைமுற்று.
43. இயற்கை வினைக்குறிப்பு-ஆக்கவினைக்குறிப்பு.
44. செய்யுமென் வாய்பாட்டு வினைமுற்று-செய்யுமென் வாய்பாட்டுப் பெயரெச்சம்.
45. உடன்பாடு - எதிர்மறை.
46. தன்வினை - பிறவினை.
47. செய்வினை - செயப்பாட்டு வினை.
48. செயப்படுபொருள் குன்றிய வினை-செயப்படுபொருள் குன்றாவினை.
49. முதல்வினை - சினைவினை.
50. தொகைநிலை - தொகாநிலை.
51. குணப்பெயர் - குணிப்பெயர்.
52. வினைத்தொகை - பெயரெச்சத்தொடர்.
53. வழாநிலை - வழுவமைதி.
54. ஆகுபெயர் - அன்மொழித்தொகை.
55. இரட்டைக்கிளவி-அடுக்குத்தொடர்ஒருபொருட்பன்மொழி
56. பண்புத்தொகை - இருபெயரொட்டுப் பண்புத்தொகை.
57. உவமை - உருவகம்.
58. குணப்பண்பு - தொழிற்பண்பு.
59. பிறிதினியைபு நீக்கிய விசேடணம் - தன்னேடியையின்மை நீக்கிய விசேடணம்.
60. தற்பவம் - தற்சமம்.

விடை. மேற்கூறிய வினாவிடைகளிற் காண்க.

லக்கணங்கூறுமுறை.

1. அறஞ்செயவிரும்பு.

அறம் - பால்பகாவஃறிணைப் படர்க்கைப்பெயர், செயப்படுபொருளில்வந்த இரண்டாம் வேற்றுமைத்தொகை, செய என்னும் வினைப்பயனிலைகொண்டது. செய - தொழிற்பெயர்ப் பொருளில் வந்த செயவெனெச்சம், விரும்பு என்னும் தன் கர்த்தாவின் வினைகொண்டது. விரும்பு-உடன்பாட்டு ஏவலொருமை வினைமுற்று, நீ என்னும் தோன்றா எழுவாய்க்குப் பயனிலையாய் வந்தது.

2. அறிவுடை யொருவனை யரசனும் விரும்பும்.

அறிவு - தொழிற்கு பெயராகிய பால்பகாவஃறிணைப் படர்க்கைப்பெயர், செயப்படுபொருளில் வந்த இரண்டாம் வேற்றுமைத்

தொகை, உடைய என்னும் குறிப்புவினைப் பயனிலைகொண்டது. உடை - ஈறுகெட்ட உடன்பாட்டுச் செயப்படுபொருள் குன்றாத குறிப்புப்பெயரெச்சம், ஒருவன் என்னுஞ் செய்பவனாகிய பெயர்கொண்டது. ஒருவனை - எண்ணடியாகப்பிறந்த உயர்திணை ஆண்பாற் படர்க்கைப்பெயர், செயப்படுபொருளில்வந்த இரண்டாம்வேற்றுமை விரி, விரும்பும் என்னும் வினைப் பயனிலைகொண்டது. அரசன் - உயர்திணை ஆண்பாற்படர்க்கைப்பெயர். முதல்வேற்றுமை, விரும்பும் என்னும் வினைப்பயனிலைகொண்டது. உம்-உயர்வு சிறப்பில் வந்த இடைச்சொல், அரசன் என்னும் பெயரைச் சார்ந்து வந்தது. விரும்பும் - செய்யும் என்னும் வாய்பாட்டுப் படர்க்கை வினைமுற்று. இது இங்கு எதிர்காலத்தையும் ஆண்பாலையும் உணர்த்தி. அரசன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் வந்தது.

3. பிச்சை புகினும் கற்கை நன்றே.

பிச்சை - தற்பவமாகிய வடசொல், பால்பகாவஃறிணைப் படர்க்கைப்பெயர், இடப்பொருளில்வந்த ஏழாம்வேற்றுமைத் தொகை, புகின் என்னும் வினைப்பயனிலைகொண்டது. புகின்-செயின்என்னும் வாய்பாட்டு எதிர்காலவினையெச்சம், தன் கர்த்தாவின் வினையாகிய கற்கை என்னும் தொழிற்பெயர்கொண்டது. உம் - இழிவு சிறப்புப் பொருளில்வந்த இடைச்சொல், புகின் என்னும் வினையைச்சார்ந்து வந்தது, கற்கை - தொழிற்பெயர், முதல்வேற்றுமை நன்று என்னும் குறிப்புவினைப் பயனிலைகொண்டது. நன்று - நன்மை என்னும் பண்படியாகப்பிறந்த ஒன்றன்பாற் படர்க்கைக் குறிப்புவினைமுற்று, கற்கை என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் வந்தது.

4. தேசத்தோ டொத்துவாழ்.

தேசத்தோடு - ஆகுபெயராகிய பால்பகாவஃறிணைப் படர்க்கைப் பெயர், உடனிகழ்ச்சிப் பொருளில்வந்த மூன்றாம்வேற்றுமை விரி, ஒத்து என்னும் வினைப்பயனிலைகொண்டது. ஒத்து - இறந்தகாலத் தெரிநிலை வினையெச்சம், வாழ் என்னும் தன் கர்த்தாவின் வினைகொண்டது. வாழ் - உடன்பாட்டு ஏவல் ஒருமை வினைமுற்று. நீ என்னுந் தோன்றா எழுவாய்க்குப் பயனிலையாய் வந்தது.

5. புணைமீதல்லது நெடும்புனலேகேல்.

புணைமீது - முதனிலைத் தொழிலாகுபெயர். இடப்பொருளில் வந்த ஏழாம்வேற்றுமை விரி, அல்லது என்னும் வினைப்பயனிலைகொண்டது. அல்லது - அன்மை என்னும் பண்படியாகப்பிறந்த எதிர்மறைக் குறிப்பு வினையெச்சம், ஏகேல் என்னும் வினைகொண்டது

நெடு - மை ஈறுகெட்டுவந்த பண்புப்பெயர், புனல் என்னும் பெயரை விசேடித்துவந்தது. புனல் - பால்பகாவஃறிணைப் படர்க்கைப்பெயர், இடப்பொருளதாகிய ஏழாம்வேற்றுமைத்தொகை, ஏகேல் என்னும் வினைப் பயனிலைகொண்டது. ஏகேல் - எதிர்மறை ஒருமையேவல் வினைமுற்று, நீ என்னும் தோன்றா வெழுவாய்க்குப் பயனிலையாய் வந்தது.

6. சான்றோ ரில்லாத் தொல்பதி யிருத்தலின்
தேன்றோ ய்குரவர் தேயநன்றே.

சான்றோர் - சால் என்னும் உரிச்சொலடியாகப்பிறந்த பலர் பாற் படர்க்கைப்பெயர், எழுவாய் வேற்றுமை இல்லா என்னும் குறிப்பு வினைப்பயனிலைகொண்டது. இல்லா - இன்மையென்னும் பண்படியாகப் பிறந்த ஈறுகெட்ட எதிர்மறைக் குறிப்புப்பெயரெச்சம்,பதி என்னும் இடப்பெயர்கொண்டு முடிந்தது. தொல் மைஈறுகெட்டுவந்த பண்புப்பெயர், பதி என்னும் பெயரை விசேடித்துநின்றது. பதி- பால் பகாவஃறிணைப் படர்க்கைப்பெயர் இடப்பொருளில்வந்த ஏழாம்வேற்றுமைத்தொகை, இருத்தலின் என்னும்தொழிற்பெயர்ப்பயனிலைகொண்டது. இருத்தலின் - தொழிற்பெயர், எல்லைப்பொருளில்வந்த ஐந்தாம்வேற்றுமை விரி, குடியிருத்தல் என்னும் இசையெச்சமாகிய தொழிற்பெயர்ப் பயனிலைகொண்டது. தேன் - செயப்படுபொருளில்வந்த பால்பகாவஃறிணைப்படர்க்கைப்பெயர்,தோ் என்னும் வினைப்பயனிலை கொண்டது. தேர் வினைத்தொகை வினைச்சொல் குரவர் என்னும் செய்பவனாகிய பெயர்கொண்டு முடிந்தது. குரவர்-உயர்திணைப் பலர் பாற்படர்க்கைச் சாதிப்பெயர், இடப்பிறிதின் கிழமைப்பொருளில் வந்த ஆறும்வேற்றுமைத்தொகை, தேயம் என்னும் பெயர்ப் பயனிலை கொண்டது. தேயம் - பால்பகாவஃறிணைப் படர்க்கைப்பெயர் முதல் வேற்றுமை, நன்று என்னும் ஒன்றன்பாற் குறிப்பு வினைமுற்றுப் பயனிலைகொண்டது. நன்று - இதற்கு இலக்கணம் மேலே சொல்லப்பட்டது.

7. ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை.

ஆர்கலி - வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர், மூன்றும்வேற்றுமை யுருபும் பயனுமுடன்தொக்கதொகை. உலகத்து - பால்பகாவஃறிணைப் படர்க்கைப்பெயர், இடப்பொருளில்வந்த ஏழாம்வேற்றுமை உருபும் பயனுமுடன் தொக்க தொகை. மக்கட்கு-பன்மைக்கே உரிய உயர்திணைப் படர்க்கைப் பெ

யர், தகுதிப்பொருளில்வந்த நான்காம்வேற்றுமைவிரி, ஓதலின் என்னும் தொழிற்பெயர்ப் பயனிலைகொண்டது. எல்லாம் - மூன்றிடத்துக்கும் பொதுவானபெயர் மக்கள் என்பதைத் தழாத்தொடராய் விசேடித்து நின்றது, ஓதலின் - தொழிற்பெயர் எல்லைப்பொருளில் வந்த ஐந்தாம்வேற்றுமை விரி, சிறந்தன்று என்னும் வினைப்பயனிலை கொண்டது. சிறந்தன்று-இறந்தகால ஒன்றன்பாற் படர்க்கைத் தெரிநிலை வினைமுற்று, ஒழுக்கமுடைமை என்னும் எழுவாய்க்குப்பயனிலையாய் வந்தது, இதில் அன் - சாரியை, ஒழுக்கம் - தொழிற் பெயர் செயப்படு பொருளில்வந்த இரண்டாம் வேற்றுமைத்தொகை; உடைமை என்னும் குறிப்புத்தொழிற்பெயர்ப் பயனிலைகொண்டது. உடைமை - குறிப்புத்தொழிற்பெயர் சிறந்தன்று என்னும் வினைப்பயனிலை கொண்டது.

8. வாழிய நலனே வாழிய நலனே.

வாழிய இரண்டும் வியங்கோள் வினைமுற்றுக்கள், நலன் என்னும் எழுவாய்க்குப் பயனிலைகளாய் வந்தன. நலன் இரண்டும் மொழி பிறதிப்போலி பெற்றுவந்த பண்புப்பெயர்கள், எழுவாய் வேற்றுமை வாழிய என்னும் வினைப்பயனிலைகொண்டன.

சூத்திர வகராதி.

முதற்குறிப்பு	பக்கம்.
அ	
அஆஈற்ற	உ0க
அஆஉஊ	சஎ
அஆஎஒய	,,
அஇஉம்முதற்	௲௲
அஐமுதலிடை	ருச
அகமுனர்ச்	கஉக
அசைநிலை	உரு0
அடிநா	௲எ
அடைசினை	உருச
அடைமொழி	,,
அண்ணநுனிநாநனி	௲அ
அண்ணநுனிநாவருட	,,
அண்பல்லடி	௲எ
அண்பன்முதலு	௲அ
அண்மையி	கக0
அதுமுன்	க0உ
அதுவே, இயற்சொற்	கருஉ
அத்தினகர	க௲அ
அந்திலாங்	உஎகூ
அம்மவுரை	உஎஎ
அம்மாமென்	உ0௲
அம்முதலீரா	௲௲
அம்முனிகரம்	ருரு
அரிதிற்பெயக்	ககூ
அா ஆர் பவலு	உ00
அல்வழி இ ஐ	கூகூ
அல்வழி ஆமா	கூஎ
அவற்றுள், அஇஉ	௲௲
அவற்றுள், எழுவா	கஎ0
அவற்றுள், ஏழா	எஅ
அவற்றுள், ஒன்றே	ககூச
அவற்றுள், கிளையெ	கருகூ
அவற்றுள், முதலி	உகக
அவற்றுள், முயற்சி	௲எ
அவற்றுள், வினை	ரு

முதற்குறிப்பு	பக்கம்.
அவைதாம், முற்றும்	க[illegible]
அவ்வழி, ஆவி	[illegible]
அவ்வினையாள	[illegible]
அழலினீங்கா	[illegible]
அளக்கலாகா	[illegible]
அள் ஆளிறு	உ[illegible]
அறம்பொரு	[illegible]
அறிவருளாசை	உ[illegible]
அறிவறியாமை	உ[illegible]
அன் ஆன் அள்	[illegible]
அன்ஞெனிறு	[illegible]
அன் ஆன் இன்	[illegible]
அன்றியின்றி	[illegible]
அன்னமாவே	[illegible]
ஆ	
ஆஈஊஎ	[illegible]
ஆக்கவினைக்	உ[illegible]
ஆக்கியோன்	உ[illegible]
ஆசானுரைத்த	உ[illegible]
ஆண்பெண்பல	க[illegible]
ஆண்மைபெண்மை	[illegible]
ஆநின்றுகின்று	[illegible]
ஆமாகோனவ	க[illegible]
ஆமுன்பகரவீ	க0[illegible]
ஆயிரமுகத்தா	உ[illegible]
ஆய்தக்கிடந்தலை	[illegible]
ஆவிஞணநமன	[illegible]
ஆவியரழ	[illegible]
ஆவியுமொற்று	[illegible]
ஆறனுருபு	க[illegible]
ஆறனொருமைக்	கஅ
ஆற்றொழுங்	க[illegible]
இ	
இஈஎஏ	[illegible]
இஈஐவழி	[illegible]
இஉஊவோ	கஅ[illegible]

முதற்குறிப்பு	பக்கம்.
இசைகெடின்	ச0
இடுகுறிகாரணப்	௯உ
இடுகுறிகாரணமர	கரு௫
இடைச்சொல்	ககஉ
இடைத்தொட	க0௯
இடைநிலை	உ௯௯
இடையினம்	௯ச
இடையினன்கு	எஎ
இடையுரி	க௯0
இணைந்தியல்	அ0
இதற்கிதுசாரியை	க௲கூ
இதற்கிதுமுடிபெண்	கசஉ
இம்முப்பெயர்க்கண்	கஅகூ
இயல்பினும்விதி	கூ௲
இயல்பின்விகா	கச0
இயல்பெழு	சசா
இயற்கைப்பொ	உருரு
இரட்டைக்கிளவி	உருக
இரண்டாவதனுரு	கஎக
இரண்டுமுதலா	உ௨சா
இரண்டுமுன்வரிற்	சக0
இருதிணையாண்பெ	௨கசா
இருவர்நூற்கு	சா
இர்ஈரிற்ற	௨0ரு
இலக்கணமுடைய	கசஅ
இலக்கியங்கண்	எஉ
இலேலனின்மை	க௨எ
இறப்பெதிர்வு	௨சக
இனைத்தென்	உரு௨
இன்னதின்னுழி	உஅசா
ஈ.	
ஈதலியல்பே	உ0
ஈதாகொடு	உ௫எ
ஈமுங், கம்மு	க௨௨
ஈறுபோத	சா௨
ஈற்றியா	அ௯
உ.	
உஊஒஓஔ	௯எ
உஊஒஓவல	சஎ
உடன்மேலுயி	ககச
உணர்வியலா	உஅக
உயர்திணைதொடர்ந்த	உகூசா
உயர்திணையும்மைத்	உ௯க
உயிருமுடம்புமா	௲0
உயிருயிரல்லதா	௨எகூ
உயிர்மவிலா	ருஎ
உயிர்மெய்யாய்த	௯க
உயிர்மெய்யிரட்டு	௲க
உயிர்வரினுக்	கூஉ
உரத்தின்வளம்	கரு
உரிவரினழியி	கூகூ
உருபின்முடிபவை	க௲0
உருபுபல	உகஅ
உருபுமுற்றீ	உகஅ
உருபும்வினையு	உகஎ
உருவகவுவமையிற்	உருஅ
உவப்பினு	உ௲அ
உவமவுருபில	உ௨சா
எ.	
எகரவினாமுச்	கூக
எச்சப்பெயர்வினை	உககூ
எடுத்தல்படுத்தல்	௯அ
எட்டனுடம்பு	க0அ
எட்டனுருபே	கஅரு
எண்ணலெடுத்தன்	உஉஎ
எண்ணிறையளவு	க0சா
எண்பெயர்	உகூ
எண்மூவெழுத்தீற்	அரு
எதிர்மறைசிறப்	உஎ0
எப்பொரு	உ௬ச
எயாமுதனு	௲ச
எல்லாமென்ப	க௲ரு
எல்லாருமெல்	க௯சா
எல்லையின்னு	ககூச
எவனென்	௨கச
எழுத்தியநிரி	உசஎ
எழுத்தே	ருஎ
எழுவகை	
எழுவாயிறுதி	உசாஉ
எனவுமெனவு	உஎ௲
ஏ.	
ஏறுழுப்புகலன்	கஅ௨

முதற்குறிப்பு	பக்கம்.
ஏற்குமெய்வகைய்	க௬௬
ஏற்புழியெடு	உ௬௪
ஏற்றபொருளுக்	உ௬க
ஐ.	
ஐஔஇஉச்	௩ரு
ஐகான்யவவழி	ரு௪
ஐந்தனொற்	க0அ
ஐந்தாவதனுரு	கஎ௬
ஐந்தொகை	உ௨அ
ஐயந்திணைபா	உ௩௪
ஐயந்திரப்	கஎ
ஐயாயிகர	உ0௪
ஐயான்குச்செய்யுட்	க௬௩
ஐயிறுபொதுப்பெய	கஅ௬
ஐயீற்றுடைக்குற்	க0௪
ஒ.	
ஒடுவுந்தெய்யவு	உஎ௬
ஒருகுறிகேட்போ	உ௪
ஒருசார்னவ்வீற்	கஅஎ
ஒருநெறியின்றி	கஉ
ஒருபஃதா	க0௬
ஒருபுணர்க்கிரண்டு	அரு
ஒருபொருட்பல்	உருக
ஒருபொருட்பன்	,,
ஒருபொருண்	உ௪எ
ஒருபொருள்குறித்	கரு௩
ஒருமையிற்பன்மை	உ௩௬
ஒருமொழிதொடர்	க௪௪
ஒருமொழிமூவழி	அரு
ஒருமொழியொரு	க௪ரு
ஒருமொழியொழி	உஉ0
ஒருவரென்பது	க௬௬
ஒருவனொருத்திபல	க௩௩
ஒருவனொருத்திப்பெ	க௬௬
ஒருவன்முத	க௬௬
ஒழியிசைவினைச்	க௬௬
ஒரீ ஒமை	உஅக
ஒற்றுயிர்	க௩௩
ஒன்பதொழித்த	கக௪
ஒன்பானொடு	க0அ
ஒன்றன்புள்ளி	க0எ

முதற்குறிப்பு	பக்கம்
ஒன்றுமுதலீ	கக0
ஒன்றுமுதலெட்	க௩எ
ஒன்றேபலவென்	க௪௬
ஒன்றொழிபொது	கரு0
க.	
கஙவும்சஞவும்	௩எ
கசதபவொழி	௪௬
கடியென்கிளவி	உஅ௩
கண்கால்கடை	கஅ௩
கயவொடு	௨0௬
கருத்துப்பதப்	க[illegible]
களிமடிமானி	உ[illegible]
கா.	
காரணமுதலா	உரு[illegible]
காலநகரந்த	உஉ[illegible]
காலநகளனே	௨[illegible]
கி.	
கிளந்தகிளைமுத	க௬[illegible]
கிளைமுதலாகக்	கரு௬
கீ.	
கீழின்முன்	கஉ௩
கு.	
குடுதுறுவென்னு	உ0உ
குயினூன்வெற்	கக௬
குலனருடெ	கரு
குறியதனகீழா	௩௬
குறியதன்முன்னர்	௩௬
குறிலணைவில்லா	கக௬
குறில்செறியா	கஉ௪
குறில்வழிலள	,, 0
குற்றுயிரளபி	௪அஉ
குன்றக்கூறன்	௬௩
கே.	௪
கேட்குநபோ	உருஅ
கொ.	௪
கொல்லேயைய	உஎ௬எ
கோ.	அ
கோடன்மரபே	உஉ[illegible]
ஞ.	
ஞணநமன	௪௩
ஞம்முன்கவ	ரு௬

முதற்குறிப்பு	பக்கம்.
சா.	
சாதிகுழூஉப்	௧௭
சாலவுறுதவ	௨௮௩
சாவவென்மொழி	௯௬
சி.	
சிதலெறும்பாதி	௨௮௦
சிலவகையெழு	௧௨
சிறப்பினுமினத்	௩௬
சினைவினை	௨௧௨
சு.	
சுட்டியாவெகர	௪௮
சுட்டின்முன்னாய்த	௧௩௮
சுட்டுமறைநே	௨௪௩
சுட்டுவகரமூ	௧௨௮
சுருங்கச்சொல்	௮
சுவைப்புளி	௯௯
சூ.	
சூத்திரத்துட்	௧௪
செ.	
செந்தமிழாகித்	௧௫௨
செந்தமிழ்நிலஞ்	௧௫௪
செம்மைசிறுமை	௬௧
செயப்படுபொருளை	௨௫௨
செய்கெனொரு	௨௦௪
செய்தசெய்கின்ற	௨௦௭
செய்தசெய்பு	௨௧௦
செய்பவன்கருவி	௧௯௯
செய்யியவென்	௯௫
செய்யுமெனெச்ச	௨௦௮
செய்யுளிறுதி	௨௬௩
செய்யென்வினை	௬௫
செவ்வெண்ணீற்றதா	௨௭௨
சொ.	
சொற்றிரியினும்	௨௧௩
சொற்றொறுமிற்	௨௮௬
ஞ.	
ஞணநமலவளன	௧௪௫
ஞநமுன்றம்மினம்	௫௦
ட.	
டறமுன்கசப	௫௦

முதற்குறிப்பு	பக்கம்.
ண.	
ணனமுன்னினங்	௫௦
ணனமுன்னும்	௪௪
ணனவல்லினம்	௧௧௬
த.	
தடறவொற்றின	௭௨
தத்தம்-பகாப்ப	௬௧
தமிழவ்வுறவும்	௧௨௩
தம்பாலில்ல	௨௫௬
தம்பெயர்மொழி	௫௩
தரல்வரல	௨௪௦
தற்சுட்டளபொழி	௪௪
தனிக்குறின்	௧௧௪
தன்மகனாசான்	௨௦
தன்மைமுன்னிலைபட	௧௪௮
தன்மைமுன்னிலைவியங்	௨௦௨
தன்மையானொன்	௧௬௪
தன்னாசிரியன்	௨௭
தன்னொன்னென்	௧௧௯
தன்னொழி	௧௧௪
தா.	
தானமுயற்சி	௩௫
தானேதரக்	௧௯
தான்றாம்நாம்முதல்	௧௩௬
தான்யானென்	௧௯௬
தி.	
திசையொடுதிசை	௧௦௫
திணைநிலஞ்சசாதி	௨௪௮
திணைபால்பொருள்	௨௩௯
திணையேபாலிடம்	௨௩௪
து.	
தும்பிவண்டாதி	௨௮௦
துய்த்தறுஞ்ச	௨௮௨
துறுக்குற்றிய	௨௦௧
தெ.	
தெங்குநீண்டிற்	௧௦௫
தெரிநிலைதேற்ற	௨௪௭
தெரிவருமபெரு	௧௬
தெவ்வென்மொழி	௧௨௮
தே.	
தேன்மொழி	௧௧௮

முதற்குறிப்பு	பக்கம்.	முதற்குறிப்பு	பக்கம்.
தொ.		படாக்கைமுப்	௨௪௬
தொகுத்தல்விரி	௨௭	படர்க்கைவினைமுற்	௧௪௭
தொக்குழிமயங்கு	௨௩௧	பண்பைவிளக்கு	௨௨௫
தொல்லைவடிவின	௪௫	பதமுன்விகுதி	௧௩௪
தொழிலுங்கால	௨௦௬	பலசிலவெனுமிவை	௬௯
தோ.		பல்லோர்ப்படர்க்கை	௨௧௪
தோன்றறிரிதல்	௮௩	பல்வகைத்தாதுவி	௪௫௦
தோன்றன்மறை	௨௮	பல்வகைப்பண்பும்	௨௭௬
தோன்றுமேதாற்றித்	௨௭	பல்வகையுதவி	௧௬
ந.		பல்வகைவடிவிரு	௨௮
நடவாமடிசி	௯௩	பல்லவழிவிடத்	௭௩
நவ்விறுதொழிற்	௧௧௫	பல்விசீமி	௧௦௦
நா.		பழையனகழிதலும்	௨௮
நான்கன்மெய்யே	௧௦௭	பனைமுன்கொடி	௧௧
நான்காவதற்குரு	௧௭௯	பன்னீருயிரும்	௪
நி.		பா.	
நிறையயிர்	௩௯	பாடக்கருத்தே	௧
நின்றநெறி	௪௬	பாயிரம் பொதுக்	[illegible]
நீ.		பால்பகாவஃறிணை	௪௯
நீயிர்நீவிர்நா	௧௭௦	பி.	
நு.		பிண்டந்தொகைவகை	௧
நுதலிப்புகுத	௬	பிறநிலைவினையெண்	௨௯
நுந்தம், எம்நம்	௧௨௧	பு.	
நுவ்வொடுவி	௧௬௦	புள்ளியுமுயிரு	௧௪௮
நூ.		புள்ளிவிட்டவ்	௩௧
நூலினியல்பே	௫	புள்ளும்வள்ளும்	௧௨
நூலேநுவல்வோ	௪	புன்மரமுதலவற்	௨௮
நூல்பயிலியல்பே	௨௩	பூ.	
நூற்பொருள்வழ	௧௧	பூப்பெயர்முன்	௧௧
நெ.		பூமலியசோகின்	௨
நெடிலோடாய்த	௪௩	பெ.	
நொடியோடுயிர்த்	௧௦௩	பெண்மைவிட்	௧௪
நெல்லுஞ்செல்லுஞ்	௧௨௯	பெயரும்வினையும்	௨௯
நே.		பெயரேஜயால்	௧௯
நேரினமணியை	௧௧	பெயரொடுபெயரும்	௨௨
ப.		பெயர்ச்செவ்	௨௭
பகரப்பதமேழும்	௫௮	பெயர்வழித்தம்	௧௩
பகுதிவிகுதி	௯௦	பெயர்வினையிடத்து	௨௪
பகுப்பாற்	௫௮	பெயர்வினையுமை	௨௨
பஞ்சிதன்சொல்	௧௫	பெய்தமுறை	௪

முதற்குறிப்பு	பக்கம்
பொ.	
பாதுப்பெயருயா	அஎ
பாதுடபெயாவி	உ௨0
பாதுவியல்பாவை	ககூஅ
பாதவெழுத்	க௫௫
பாருண்முதலாரு	உ௫௯
பாருணமுதலாறி	ககூஎ
பாருண்முதலாரே	ககூ௬
பாருளிடங்காலஞ்	௫அ
போ.	
பாலப்புரைய	உ௨எ
ம.	
கரவிறுதி	௫௯
கூடேவர்	க௪௫
சலயாகி	கஎ
முன்பயவ	௫க
ம்பெயர்முன்ன	கூ௪
மெல்லெலின	கக அ
ர்சலையுலகின்	க
வீரெற்றழிந்	க௨0
றையதென்பது	உஎ௫
றையநோ	௯௬0
னுடைமன்றத	உஅ
ன்னேயசைநிலை	உஎ௪
மா.	
டக்குச்சித்திர	உஅ
வென்கிளவி	உஎஎ
ற்றுவநுவற்சி	உஅ௪
மி.	
ாயிகமோ	உஎஎ
ர பின்பன்கன்	ககக
மீ.	
ழிதழுறப்	௬எ
ர்றவ்வொடு	ககஅ
மு.	
வுரை	௯
காலத்தினு	உ௪க
காற்கேட்பின்	உ௪
சகிழற்று	க௪௪
விருநான்கா	க0கூ
விவைசினை	ககூக
முதலையயுறிற்	ககூக
முதல்வழி	௫
முதற்பெயர்நான்	க௬௨
முதனூல்கருத்த	உ௬
முரணந்தாதிநா	உஅ0
முழக்கிரட்டொலி	உஅ௫
முற்றீரச்ச	உ௯உ
முற்றும்மை	உஎக
முன்மொழி	உ௨கூ
முன்னத்தினுணரும்	உ௫அ
முன்னரவ்வொடு	க௬க
முன்னிலைகூடிய	உ0௪
முன்னிலைமுன்ன	உ0௫
முனறோர்நூலின்	௬
முன்றோர்மொழி	௬
மூ.	
மூன்றனுறுப்ப	௪0எ
மூன்றுவதனுரு	கஎ௯
மூன்றுறுபெண்	க0௪
மூன்றுயிரளபிரண்	௪௫
மெ.	
மெய்களகரமு	௫௫
மெய்ந்நாலூக்கு	உஎகூ
மெய்யுயிர்முதலி	அக
மெல்லினம்	௯௪
மென்றொடர்	க0௪
மே.	
மேற்பல்லிதழுற	௬அ
மொ.	
மொழிகுணமின்மையு	கஅ
மொழிமுதற்காரண	௯0
மொழியாய்த்தொட	௫௬
ய.	
யகரம்வரக்குற	௪உ
யரழமுன்னர்க்கசதப	க௨உ
யரழமுன்னர்மொழி	௫க
யரழவொற்றின்	௫உ
யாகாழிற்பிறக்	உஎஅ
யாதுளுருபிற்	ககூஉ

முதற்குறிப்பு	பக்கம்.	முதற்குறிப்பு	பக்.
யாப்படிபலவினுங்	௨௬௪	வினைவினுமிகவினு	௨
யாரென்வினாவினை	௨௧௪	விழைமேவகால	௨
யாற்றுநீர்மொழி	௨௫௬	விளம்பியபகுதி	
ர.		வினைச்சுட்டுடனும்	
ரவ்விற்கம்முத	௭௬	வினாவினுஞ்செப்பினு	௨
ரவ்வீற்றுயர்	௧௮௮	வினைசார்பின	௨௪
ரழவல்லனதம்முற்	௫௪	வினைபெயர்	௨௭
ல.		வினைமாற்றசை	௨௭
லகாரவீற்றுயர்	௧௮௬	வினைமுற்றே	௨௪
ளமுன்கசப	௫௧	வினையின்பெயரே	௧௬௫
ளமெய்திரிந்த	௫௨	வினையொடுவரி	௨௭௩
லனவிறுதொழிற்	௧௨௫	வே.	
ளவீற்றஃறிணை	௧௮௬	வேறில்லையுண்டு	௨௦௭
ளவீற்றியைபினு	௪௫	வேறுவினைப்பல்	௨௪௫
லளவேற்றுமையிற்	௧௨௩	வேற்றுமை	௪௨
வ.		வேற்றுமையாயி	௪௪
வலித்தன்மெலித்த	௮௪	வேற்றுமையைம்	௯
வல்லினங்கசடத	௩௪	வேற்றுமைவினைசா	௨
வல்லேதொழிற்	௧௨௯	வேற்றுமைவினைபண்	௨
வல்லொற்றுவரினே	௨௩௦	ள.	
வவ்விருசுட்டிற்	௧௩௮	ளஃகானுயர்	
வன்றொடரல்லன	௧௦௨	ற.	
வா.		றவ்வொடுஉகர	
வாழியவென்பத	௬௬	றனழஎஒவ்	
வானவர்மக்கள்	௨௮௦	ன.	
வி.		னஃகான்கிளைப்	
விகாரமனைத்து	௮௩	னலமுன்றனவும்	
விகுதிபதஞ்சா	௧௩௬	னவ்வீற்றுயர்	

சூத்திர வகராதி

முற்றிற்று.

விளம்பரம்.

தனிப்பாடலுரை ... ... 1—

பிள்ளைப் பெருமாளையங்கார் அஷ்டப்பிரபந்தவுரை 1—